# Tamil Nadu Legislative Assembly Debates,

SEVENTH SESSION OF THE FIFTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

*3rd, 5th, 6th and 7th March* 1973.

VOLUME XXXIII (Nos. 1 TO 4.)

TABLE OF CONTENTS.

*Saturday, 3rd March* 1973.


| | PAGES |
|---|---|
| Personnel of the Government of Tamil Nadu ... | i–vi |
| Principal Officers of the Tamil Nadu Legislative Assembly ... ... ... ... ... ... | vii |
| List of Members of Tamil Nadu Legislative Assembly with their Constituencies ... ... ... | **ix–xvi** |
| 1. Questions and Answers ... ... ... ... | **1–31** |
| 2. Point of Information— | |
| Statement in Parliament that Handloom Weavers were put to difficulties on account of Tamil Nadu Government's refusal to accept the yarn allotted to them ... ... ... | **32–33** |
| 3. Adjournment Motion— | |
| Scarcity of yarn and consequent difficulties experienced by Handloom Weavers ... ... | **33–48** |
| 4. Calling Attention— | |
| Hardships experienced by unemployed Weavers consequent on rise in price of yarn due to power cut ... ... ... ... ... | **48–50** |
| 5. General Discussion on the Budget for the year 1973–74—*cont.* ... ... ... ... | **50–73** **81–112** |

PAGES

*Saturday, 3rd March 1973—cont.*


6. Government Motions—
   (a) Suspension of Rules of Procedure and taking up the resolution of the Hon. Minister for Industries ... ... ... ... 73
   (b) Request to Government of India to supply immediately yarn needed for the looms of Tamil Nadu ... ... ... ... 74–79
7. Announcement—
   Business of the House ... ... ... ... 79
8. Statement by Ministers—
   (a) Regularisation, etc., of Graduate Teachers ... 80
   (b) Eviction of encroachment in Gudalur taluk 112–114
9. Papers laid on the Table ... ... ... 114–115


*Monday, 5th March 1973.*


1. Questions and Answers ... ... ... ... 117–145
2. Announcement—
   Removal of Demand No. XLIII—Capital Outlay on Public Health from the list ... ... 145–146
3. Motion—
   Leave of absence to Thiru M. Palanisamy, M.L.A. ... ... ... ... ... 146
4. General Discussion on the Budget for the year 1973–74—*cont.* ... ... ... ... 147–155, 160–220, 223–250
5. Statement by Minister
   Ryots of Paramibulam-Aliyar and Lower Bhavani Projects, concessions ... ... 155–160


PAGES

*Monday, 5th March 1973—cont.*


6. Point of Information—
   Situation in Gudalur, discussion between the Chief Minister and Kerala Revenue Minister 221–222
7. Papers laid on the Table ... ... ... ... 251–252


*Tuesday, 6th March 1973.*


1. Questions and Answers ... ... ... ... 253–293
2. Adjournment Motion—
   Strike by Nursing Assistants consequent on dismissal of some trainees at Coimbatore Medical College Hospital and its consequences 293–295
3. Calling Attention—
   (a) Use of Papanasam and Manimuthar Dam Waters in excess for advance Kar Irrigation ... ... ... ... ... 295–300
   (b) Agitation and hunger strike by Polytechnic students ... ... ... ... 300–308
4. Statement by Minister—
   Land assignment in Kanyakumari district for cultivation ... ... ... ... ... 308–309
5. General Discussion on the Budget for the year 1973–74—*cont.* ... ... ... ... ... 309–392
6. Papers laid on the Table ... ... ... 392–393


*Wednesday, 7th March 1973.*


1. Questions and Answers ... ... ... ... 399–420
2. Adjournment Motion—
   Procession by Graduate Teachers, arrests and consequent restlessness ... ... ... 420–435
3. General Discussion on the Budget for the year 1973–74—*cont.* ... ... ... ... 435–517
4. Papers laid on the Table ... ... ... ... 517

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்

தமிழ்நாடு ஆளுநர்.

மேதகு திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா

---

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுத் துறை, நிதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், காவல் துறை, தேர்தல்கள், செய்தி, விளம்பரம், திரைப்படச் சட்டம், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, தமிழ்நாடு கழிவுநீர்-குடிநீர் வாரியம், குடிசை மாற்று வாரியம், திரைப்படத் தொழில் நுட்பவியல், பால் பெருக்குத் திட்டம், தமிழ்நாடு பாற்பண்ணை வளர்ச்சிக் கழகம், இளைஞர் அணி.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சிமொழி, சட்ட மன்றம், நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள்.

3. மாண்புமிகு திரு. க. அன்பழகன் (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுச் சுகாதாரம், மருத்துவம், கால்நடை வளர்ப்பு.

4. மாண்புமிகு திரு. என். வி. நடராசன் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழிலாளர், எழுதுபொருள் அச்சுத் துறை, அரசு அச்சகம், சீரணி, எடைகள்-அளவைகள் குறித்த சட்டம், புள்ளி விவரம், பத்திரப் பதிவு.

5. மாண்புமிகு (திருமதி) சத்தியவாணிமுத்து (அரிசன நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—அரிசன நலம், மகளிர்-சிறுவர் நலம், மீனவம், இரவலர்கள் விடுதி, அனாதை இல்லங்கள், சீர்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள்.

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

### GOVERNOR OF TAMIL NADU

THIRU KODARDAS KALIDAS SHAH

### *Members of the Council of Ministers.*

1. THE HON. DR. M. KARUNANIDHI, (Chief Minister)-in-charge of Public, Finance, Planning, General Administration, matters relating to Indian Civil Service and Indian Administrative Service Officers, District Revenue Officers, Police, Elections, Information and Public Relations, Cinematograph Act, Newsprint control, Tamil Nadu Drainage and Water-supply Board, Slum Clearance Board, Film Technology, Operation Flood Project and Tamil Nadu Dairy Development Corporation and Youth Service Corps.

2. THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN, (Minister for Education and Local Administration)-in-charge of Education including Technical Education, Official Language, Legislature, Municipal Administration, Community Development, Panchayats and Panchayat Unions.

3. THE HON. THIRU K. ANBAZHAGAN, (Minister for Public Health)-in-charge of Public Health, Medicine and Animal Husbandry.

4. THE HON. THIRU N. V. NATARAJAN, (Minister for Labour)-in-charge of Labour, Stationery and Printing, Government Press, Prosperity Brigade, Legislation on Weights and Measures, Statistics and Registration.

5. THE HON. THIRUMATHI SATYAVANIMUTHU, (Minister for Harijan Welfare)-in-charge of Harijan Welfare, Women's and Children's Welfare, Fisheries, Beggars' Home, Orphanages, Approved Schools and Vigilance Service, Indians Overseas, Refugees and Evacuees.

6. THE HON. THIRU P. U. SHANMUGAM, (Minister for Revenue)-in-charge of Revenue, Board of Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Commercial Taxes, Prohibition and Excise.

7. THE HON. THIRU S. MADHAVAN, (Minister for Industries)-in-charge of Industries, Taxtiles, Yarn, Handloom, Mines and Minerals, Iron and Steel Control, employment and Training, Companies, Law, Courts and Prisons.

8. THE HON. THIRU S. J. SADIQ PASHA, (Minister for Public works)-in-charge of Public Works, Minor irrigation including special Minor Irrigation Programme Works, Highways and Waqfs.

9. THE HON. THIRU Si. Pa. ADITANAR, (Minister for Co-operation)-in-charge of Co-operation, Ports, Agricultural Refinance, Agricultural Engineering Wing of the Directorate of Agriculture except Soil Conservation Schemes, Passports and Prices and Supplies of Goods Act.

10. THE HON. THIRU A. P. DHARMALINGAM, (Minister for Agriculture)-in-charge of Agriculture.

**11. THE HON. THIRU MANNAI P. NARAYANASWAMY,** (Minister for Food)-in-charge of Food, Food Production, Khadi and Village Industries and Rural Industries Project.

12. THE HON. THIRU K. RAJARAM, (Minister for Backward classes)-in-charge of Backward Classes, Tourism, Housing and Accommodation Control.

13. THE HON. THIRU O. P. RAMAN, (Minister for Electricity)-in-charge of Electricity, Legislation on Money Lending, Rural Indebtedness, Legislation on Chits, Forests and Cinchona.

14. THE HON. THIRU S. RAMACHANDRAN, (Minister for Transport)-in-charge of Transport, Nationalised Transport and Motor Vehicles Tax.

15. THE HON. THIRU M. KANNAPPAN, (Minister for Religious Endowments)-in-charge of Religious Endowments, Ex Service-men, Bhoodan, Gramdan and Milk excluding Operation, Flood Project and Tamil Nadu Dairy Development Corporation.



## தமிழ் நாடு சட்டப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

### பேரவைத் துணைத் தலைவர்.

மாண்புமிகு திரு. பெ. சீனிவாசன், எம்.ஏ.,பி.எல்.

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

திரு. பழனிவேல் ராஜன்.

திரு. என். கணபதி.

திரு. நா. வீராசாமி.

திரு. கே. ஏ. வகாப்.

திரு. ஏ. சுவாமிதாஸ்.

திரு. நா. காசிராமன்.

### சட்டப் பேரவைச் செயலாளர்.

திரு. கா. து. நடராசன், எம்.ஏ., பி.எல்.

### கூட்டுச் செயலாளர்.

திரு. மா. சண்முகசுப்பிரமணியம், பி.ஏ., பி.எல்.

### துணைச் செயலாளர்.

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்

### உதவிச் செயலாளர்கள்.

திரு. த. இராதாகிருஷ்ணன் (எஸ்டேட் அதிகாரி).

திரு. கோ. இராகவன்.

திரு. பெஞ்சமின் நெல்சன், பி.ஏ.

திரு. கே. பாலகுரு, பி.ஏ.

### விவாதப் பதிப்பாளர்.

திரு. கே. சுந்தரராசன்.

**6. மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் (வருவாய்த் துறை அமைச்சர்)** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— வருவாய், வருவாய்த் துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள், வணிக வரிகள், மதுவிலக்கு, ஆயத்தீர்வை.

**7. மாண்புமிகு திரு செ. மாதவன் (தொழில் துறை அமைச்சர்)** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— தொழில்கள், ஆலைத்துணிகள், நூல், கைத்தறி, சுரங்கங்கள், கனிப் பொருள்கள், இரும்பு-உருக்குக் கட்டுப்பாடு, வேலை வாய்ப்பும்-பயிற்சியளித்தலும், கம்பெனிகள், சட்டம், நீதி மன்றங்கள், சிறைச் சாலைகள்.

**8. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (பொதுப் பணித் துறை அமைச்சர்)** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுப்பணிகள், சிறு பாசனச் சிறப்புத் திட்டங்கள் உள்பட சிறுபாசனம், நெடுஞ்சாலைகள், முகம்மதியர் அறக் கட்டளைகள்.

**9. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் (கூட்டுறவுத் துறை அமைச்சர்)** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— கூட்டுறவு, துறைமுகங்கள், வேளாண்மை மறுநிதி உதவி, மண்வளப் பாதுகாப்புத் திட்டங்கள் நீங்கலாக வேளாண்மை இயக்கத்தின் வேளாண்மைப் பொறியியற் பிரிவு, பயண அனுமதிச் சீட்டுகள், சரக்குகளின் விலைகள்-வழங்கல் குறித்த சட்டம்.

**10. மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் (வேளாண்மைத் துறை அமைச்சர்)** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—வேளாண்மை.

**11. மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி (உணவுத் துறை அமைச்சர்)** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—உணவு, உணவு உற்பத்தி, கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம்.

**12. மாண்புமிகு திரு. க. இராசாராம் (பின்தங்கிய வகுப்பினர் நலத் துறை அமைச்சர்)** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பின்தங்கிய வகுப்பினர் நலன், சுற்றுலா, வீட்டு வசதி-இட வசதிக் கட்டுப்பாடு.

**13. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் (மின்சாரத் துறை அமைச்சர்)** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— மின்சாரம், கடன் கொடுத்தல் (கிராமவாசிகள் கடன்பட்டிருத்தல்) குறித்த சட்டம், சீட்டுகள் குறித்த சட்டம், காடுகள், சின்கோனு.

**14. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்)** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்கு வரத்து, மோட்டார் வண்டிகள் வரி.

**15. மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் (அறநிலையத் துறை அமைச்சர்)** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— அறக்கட்டளைகள், பால்[illegible] துறை, முன்னாள் இராணுவ வீரர்கள், பூதான-கிராம தான இயக்கங்கள், பால் பெருக்குத் திட்டம், தமிழ்நாடு பாற்பண்ணை வளர்ச்சிக் கழகம் ஆகியவை நீங்கலாக பால் உற்பத்தி.

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி (2) |
|---|---|
| 29 இராமநாதன், திரு. சி. .. .. | அறந்தாங்கி. |
| 30 இராமலிங்கம், திரு. இரா. .. .. | நாத்துக்குடி. |
| 31 இராமலிங்கம், திரு. செ. .. .. | கடலாடி. (செ.வ.). |
| 32 இராமன், மாண்புமிகு திரு. ஓ. பி. (அமைச்சர்). | மேலூர் தெற்கு (செ.வ.). |
| 33 இராமன், திரு. மு. .. .. .. | கண்டமங்கலம் (செ.வ.). |
| 34 இராஜாங்கம், திரு. என். .. .. | குறிஞ்சிப்பாடி. (செ.வ.). |
| 35 இராஜாப்பிள்ளை, திரு. வீ. கே. .. .. | கன்னியாகுமரி. |
| 36 இளங்கோவன், திரு. கோ. .. .. | திருவையாறு. |
| 37 இளஞ்செழியன், திரு. வீ. சா. .. .. | விராலிமலை. |
| 38 எட்டியப்பன், திரு. பூ. .. .. .. | பெரணமல்லூர். |
| 39 எட்மண்ட், திரு. க. உரொ. .. .. | திருச்செந்தூர். |
| 40 கணபதி, திரு. என். .. .. .. | பாபநாசம். |
| 41 கணபதி, திரு. டி. .. .. .. | நாங்குனேரி. |
| 42 கணேசன், திரு. எல். .. .. | ஒரத்தநாடு. |
| 43 கணேசன், திரு. சி. .. .. .. | குற்றாலம். |
| 44 கண்ணப்பன், மாண்புமிகு திரு. மு. (அமைச்சர்). | இணைத்துக்கடவு. |
| 45 கண்ணன், திரு. எம். ஆர். .. .. | பேஸின் பிரிட்ஜ். |
| 46 கதிரவன், திரு. கா. மு. .. .. .. | தென்காசி. |
| 47 கந்தசாமி, திரு. கே. .. .. .. | உசிலம்பட்டி. |
| 48 கந்தசாமி, திரு. கே. பி. .. .. .. | சாத்தான்குளம். |
| 49 கந்தசாமி, திரு. எம். .. .. .. | குளித்தலை. |
| 50 கந்தப்பன், திரு. செ. .. .. .. | திருச்செங்கோடு. |
| 51 கரிவேங்கடம், திரு. மா. வெ. .. .. | பாலக்கோடு. |
| 52 கருணாநிதி, மாண்புமிகு டாக்டர் மு. (முதல் அமைச்சர்). | சைதாப்பேட்டை. |
| 53 கருணாநிதி, திரு. தாழை மு. .. .. | திருவாரூர் (செ.வ.) |
| 54 கருணைநாதன், திரு. சோ. .. .. | கூனூர். |
| 55 கருப்பையா, திரு. ஆ. .. .. .. | கங்கைகொண்டான் (செ.வ) |
| 56 காசிராமன், திரு. நா. .. .. .. | கும்பகோணம். |
| 57 காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி .. | முதுகளத்தூர். |
| 58 காமாட்சி, திரு. கு. .. .. .. | திருவரம்பூர். |
| 59 கார்த்திசன், திரு. வீ. .. .. .. | இராதாபுரம். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 60 காவேரிமணியம், திரு. சொ. .. .. | திருப்பரங்குன்றம். |
| 61 காளிமுத்து, திரு. கா. .. .. .. | சிவகாசி. |
| 62 இட்டப்பா, திரு. என். .. .. .. | மாயூரம். |
| 63 கிருட்டிணன், திரு. நா. .. .. .. | பேரணம்பட்டு (செ. வ.) |
| 64 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. .. .. | நெல்லிக்குப்பம். |
| 65 கிருஷ்ணமூர்த்தி, திரு. வ. .. .. | திருச்சிராப்பள்ளி-1. |
| 66 கிருஷ்ணன், திரு. கே. ஆர். .. .. | ஊத்தங்கரை. |
| 67 குப்பல் ராமகிருஷ்ணன், திரு. கே. எஸ். | மதுரை (கிழக்கு). |
| 68 குமாரசாமி, திரு. அ. சே. .. .. | திருக்கோயிலூர். |
| 69 குமாரசாமி, திரு. கே. என். .. .. | பல்லடம். |
| 70 குருசாமி, திரு. நா. வெ. .. .. | ஆண்டிப்பட்டி. |
| 71 கேசவலு, திரு. தே. .. .. .. | கள்ளக்குறிச்சி. |
| 72 கோதண்டராமய்யா, திரு. கே. எஸ். .. | உதனப்பள்ளி. |
| 73 கோபால், திரு. எம். .. .. .. | குன்னத்தூர் (செ. வ.) |
| 74 கோபால், திரு. கே. பி. .. .. .. | கம்பம். |
| 75 கோவிந்தசாமி, திரு. வி. செ. .. .. | காவேரிப்பட்டினம். |
| 76 கோவிந்தராசன், திரு. ஆர். .. .. | கடலூர். |
| 77 கோவிந்தராசன் துரை, திரு. .. .. | கந்தர்வகோட்டை. |
| 78 கோவிந்தன், புலவர் கா. .. .. | செய்யாறு. |
| 79 கோவை செழியன், திரு. .. .. | காங்கேயம். |
| 80 சகாதேவன், திரு. எஸ். .. .. | செஞ்சி. |
| 81 சங்குமுத்து தேவர், திரு. ச. .. .. | அம்பாசமுத்திரம். |
| 82 சதாசிவம், திரு. செ. .. .. .. | ஆண்டிமடம். |
| 83 சண்முகசுந்தரம், திரு. அ. ப. .. .. | பொள்ளாச்சி. |
| 84 சண்முகம், மாண்புமிகு திரு. ப. உ. (அமைச்சர்). | திருவண்ணாமலை. |
| 85 சண்முகம், திரு. பெரி. .. .. .. | திருவாடானை. |
| 86 சண்முகம், திரு. மு. .. .. .. | விழுப்புரம். |
| 87 சத்தியமூர்த்தி, திரு. மு. .. .. | புதுக்கோட்டை. |
| 88 சத்தியவாணிமுத்து, மாண்புமிகு திருமதி (அமைச்சர்). | பெரம்பூர் (செ.வ.) |
| 89 சத்தியேந்திரன், திரு. எம்.எஸ். கே. .. | இராமநாதபுரம். |
| 90 சம்பத், திரு. டி. வி. ... .. .. | செம்பனார் கோவில். |
| 91 சாதிக் பாட்சா, மாண்புமிகு திரு. எஸ்.ஜே. (அமைச்சர்). | உடுமலைப்பேட்டை. |

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ் நாடு சட்டப் பேரவை உறுப்பினர்களின் (அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 1 அண்ணுமலை, திரு. சி.வி. எம். .. .. | காஞ்சிபுரம். |
| 2 அபுசாலி, திரு. எம். எ. .. .. .. | புவனகிரி. |
| 3 அப்துல் ஜப்பார், திரு. வா. மை .. .. | அரவக்குறிச்சி. |
| 4 அரங்கண்ணல், திரு. இராம. .. .. | எழும்பூர். |
| 5 அழகமுத்து, திரு. நு. ப. (அரசாங்க தலைமைக் கொறடா). .. .. | உப்பிலியப்புரம். |
| 6 அழகர்சாமி, திரு. சோ. .. .. .. | கோவில்பட்டி. |
| 7 அழகுத் தேவர், திரு. எஸ். .. .. | சாத்தூர். |
| 8 அனந்தநாயகி, திருமதி த. ந. .. .. | மயிலாப்பூர். |
| 9 அன்பழகன், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்). | புரசைவாக்கம். |
| 10 அன்புச்செழியன், திரு. நீ. .. .. | பெரியகுளம். |
| 11 ஆண்டி என்ற குருசாமி, திரு. கு. .. | ஸ்ரீவில்லிபுத்தூர் (செ. வ.) |
| 12 ஆதித்தனர், மாண்புமிகு திரு. சி. பா. (அமைச்சர்). | ஸ்ரீவைகுண்டம். |
| 13 ஆலடி அருண, திரு. வி. .. .. | ஆலங்குளம். |
| 14 ஆல்டா எம். பௌலர், திருமதி .. | நியமன உறுப்பினர். |
| 15 ஆறுமுகம், திரு. அ. .. .. .. | எடப்பாடி. |
| 16 ஆறுமுகம், திரு. எஸ். .. .. | வீரபாண்டி. |
| 17 ஆறுமுகம், திரு. சி. .. .. .. | மதுராந்தகம். |
| 18 இரத்தினசபாபதி, திரு. மு. .. .. | விளாத்திக்குளம். |
| 19 இராசகோபால், திரு. க. மு. .. .. | உத்திரமேரூர். |
| 20 இராசகோபால், திரு. வீ. .. .. | வந்தவாசி. |
| 21 இராசமாணிக்கம், திரு. அ. .. .. | நாகப்பட்டினம். |
| 22 இராசமாணிக்கம், திரு. கு. .. .. | ஆடுதுறை. |
| 23 இராசரத்தினம், திரு. டி. .. .. | ஸ்ரீபெரும்புதூர். |
| 24 இராசாராம், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்). | சேலம்-2. |
| 25 இராசு, திரு. ஜே. எஸ். .. .. .. | பெரம்பலூர் (செ.வ.) |
| 26 இராதாகிருட்டிணன், திரு. எம். .. | தண்டராம்பட்டு. |
| 27 இராமச்சந்திரன், திரு. எம். ஜி. .. | பரங்கிமலை. |
| 28 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்). | பண்ருட்டி. |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 92 சாரதி, திரு. மா. பா. | வேலூர். |
| 93 சிதம்பரம், திரு. சித. | காரைக்குடி. |
| 94 சிவப்பிரகாசம், திரு. தி. சி. ஆ. | சேரன்மகாதேவி. |
| 95 சிவபெருமாள், திரு. கோ. | அரியலூர். |
| 96 சிறைமீட்டான், திரு. தொ. க. | பரமக்குடி (செ.வ.) |
| 97 சீனிவாசன், மாண்புமிகு திரு. பெ. (துணைத் தலைவர்). | விருதுநகர். |
| 98 சீனிவாசன், திரு. தொ. ப. | போளூர். |
| 99 சின்னசாமி, திரு. அ. | செயங்கொண்டம் (செ.வ.) |
| 100 சின்னசாமி, திரு. ஆர். | தர்மபுரி. |
| 101 சின்னசாமி திரு. மு. | மொடக்குறிச்சி. |
| 102 சின்னசாமி, திரு. வ. | ஏற்காடு (ஆ. வா.) |
| 103 சின்னராசு, டாக்டர் ச. அ. | ஹஞூர் (செ. வ.) |
| 104 சின்ன வெள்ளையன், திரு. சி. | சேந்தமங்கலம் (ஆ. வா.) |
| 105 சுந்தரம், திரு. ஒ. என். | திண்டுக்கல். |
| 106 சுப்பிரமணியம், திரு. எ. | சிங்கநல்லூர். |
| 107 சுப்பிரமணியம், திரு. எஸ். கே. | சத்தியமங்கலம். |
| 108 சுப்பிரமணியம், திரு. கே. எம். | தியாகராயநகர். |
| 109 சுப்பிரமணியன், திரு. மா. | ஈரோடு. |
| 110 சுப்பிரமணியன், திரு. வீ. | உளுந்தூர்பேட்டை. |
| 111 சுப்பு, திரு. க. | ராஜபாளையம். |
| 112 சுப்பையா, திரு. ஆ. கு. | கோட்டூர் (செ. வ.) |
| 113 சுப்பையா, திரு. கே. வி. | ஆலங்குடி. |
| 114 சுப்பையா, திரு. ச. | சங்கரன்கோயில் (செ. வ.) |
| 115 சுப்பையா, திரு. ஏ. ஆர். | கடயநல்லூர். |
| 116 சுருளிவேல், திரு. மு. | போதிநாயக்கனூர். |
| 117 சுரேந்திரன், திரு. எம். | மேட்டூர். |
| 118 சுவாமிதாஸ், திரு. எ. | பத்மநாபபுரம். |
| 119 செபமாலை, திரு. கோ. | மங்களூர் (செ. வ.) |
| 120 ஜெயராமன், திரு. இ. | சேலம்-1. |
| 121 செல்லத்துரை, திரு. வீ. | ஓமலூர்.(செ. வ.) |
| 122 செல்லையா, திரு. குழ. | பேராவூரணி. |
| 123 செல்வராஜ், திரு. எம். | விருத்தாசலம். |
| 124 சேதுராமன், திரு. சி. | சிவகங்கை. |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 125 சோனையா, திரு. த. | மானாமதுரை. |
| 126 சோமசுந்தரம், திரு. ந. | வலங்கைமான் (செ. வ.) |
| 127 சௌடி சுந்தரபாரதி, திரு. எஸ். | அருப்புக்கோட்டை. |
| 128 சௌந்தரபாண்டியன், திரு. பெ. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 129 டென்னிஸ், திரு. என். | கிள்ளியூர். |
| 130 தங்கமணி, திரு. கே. டி. கே. | மதுரை மேற்கு. |
| 131 தர்மலிங்கம், மாண்புமிகு திரு. அ. பெ. (அமைச்சர்). | திருச்சிராப்பள்ளி-2. |
| 132 தருமலிங்கம், திரு. ந. | ரிஷிவந்தியம் (செ.வ.) |
| 133 தவமணித்தேவர், திரு. வி. | சேடப்பட்டி. |
| 134 திம்மராயக் கவுண்டர், திரு. டி. சி. | நாட்றாம்பள்ளி. |
| 135 தியாகராசன், திரு. அ. | திருமயம். |
| 136 தியாகராசன், திரு. இ. எஸ். | திருத்தணி. |
| 137 திருப்பதி, திரு. கு. | மதுரை (சென்ட்ரல்). |
| 138 துரைசாமி திரு. எ. க. | குடியாத்தம். |
| 139 துரைசாமி, திரு. சு. | திருப்பூர். |
| 140 துரைமுருகன், திரு. | காட்பாடி. |
| 141 துரைராஜ், திரு. சு. ம. | திருவள்ளூர் (செ.வ.) |
| 142 தூயமணி, திரு. மே. சி. | மேட்டுப்பாளையம். |
| 143 தேவராசன், திரு. எம். | உதகமண்டலம். |
| 144 தேவேந்திரன், திரு. அ. | நன்னிலம் (செ. வ.) |
| 145 தோப்பூர் திருவேங்கடம், திரு. | கணியம்பாடி. |
| 146 நடராசன், திரு. ஈ. எம். | அந்தியூர். |
| 147 நடராசன், திரு. எஸ். | தஞ்சாவூர். |
| 148 நரசிம்மன், திரு. எ. சி. | ஆரணி. |
| 149 நல்லசாமி, திரு. எஸ். | கரூர். |
| 150 நாகராஜன், திரு. க. | வடமதுரை. |
| 151 நாகலிங்கம், திரு. பா. | பொன்னேரி (செ.வ.) |
| 152 நாச்சிமுத்து, திரு. நா. | ஒட்டன்சத்திரம். |
| 153 நாச்சியப்பன், திரு. எ. எம். டி. | ஆத்தூர். |
| 154 நாச்சியப்பன், திரு. ந. | சங்கராபுரம். |
| 155 நாராயணசாமி, திரு. மா. வே. | திருவொற்றியூர். |
| 156 நெடுஞ்செழியன், மாண்புமிகு டாக்டர் இரா. (அமைச்சர்). | திருவல்லிக்கேணி. |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 157 நைனுமலை, திரு. இரா. | இராசிபுரம். |
| 158 பத்மநாபன், திரு. பொ. | திருநெல்வேலி. |
| 159 பத்மாவதி, திருமதி. ஏ. கோ. | முகையூர். |
| 160 பரந்தாமன், திரு. ஆ. | கடம்பத்தூர். |
| 161 பரமசிவம், திரு. எம். | தாரமங்கலம். |
| 162 பலராமன், திரு. என். எஸ். | அரக்கோணம். |
| 163 பழனிசாமி, திரு. நா. | பொங்கலூர். |
| 164 பழனிசாமி, திரு. என். கே. | பெருந்துறை. |
| 165 பழனிசாமி, திரு. மு. | வெள்ளக்கோயில். |
| 166 பழனிச்சாமி, புலவர். சி. | பழனி (செ.வ.) |
| 167 பழனியப்பன், டாக்டர் ச. மு. | கோபிசெட்டிபாளையம். |
| 168 பழனியம்மாள், திருமதி வி. ப. | தாராபுரம். |
| 169 பழனிவேலன், திரு. க. | வரகூர். |
| 170 பழனிவேலன், திரு. மு. | நாமக்கல். |
| 171 பழனிவேலு, திரு. பி. | ஆத்தூர். |
| 172 பழனிவேல் ராஜன், திரு. | தேனி. |
| 173 பன்னீர் செல்வம், திரு. எம். | ஆம்பூர் (செ. வ.) |
| 174 பாண்டுரங்கம், திரு. சி. | செங்கம் (செ. வ.) |
| 175 பாலகிருட்டிணன், திரு. கு. | மன்னார்குடி. |
| 176 பாலசுந்தரம், திரு. வை. | அச்சரபாக்கம் (செ.வ.). |
| 177 பாலையா, திரு. ஏ. | கௌச்சல். |
| 178 பெரியசாமி, திரு. கு. | கொடவாசல். |
| 179 பெரியசாமி, திரு. தி. ஒ. | அவினாசி. |
| 180 பெருமாள், திரு. செ. | காட்டுமன்னார்கோயில். |
| 181 பெருமாள், திரு. ஏ. ஆர். | காரியப்பட்டி. |
| 182 பொம்மன், திரு. கு. அ. | கூடலூர் (செ. வ.) |
| 183 பொன் சொக்கலிங்கம், திரு. பி. | சிதம்பரம். |
| 184 பொன்னப்ப நாடார், திரு. ஆர். | விளவங்கோடு. |
| 185 பொன்னுமலை, திரு. தி. | பனைமரத்துப்பட்டி. |
| 186 பொன்னுரங்கம், திரு. ஏ. எம். | சோளிங்கபுரம். |
| 187 மணலி கந்தசாமி, திரு. சி. | திருத்துறைப்பூண்டி. |
| 188 மணியன், திரு. பி. எஸ். | சோழவந்தான். |
| 189 மதியழகன், திரு. கே.ஏ. | ஆயிரம் விளக்கு. |
| 190 மருதாசலம், திரு. என். | பேரூர் (செ. வ.). |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 191 மலைக்கண்ணன், திரு. வீ. | இளையாங்குடி. |
| 192 மலைச்சாமி, திரு. பெ. | மேலூர் வடக்கு. |
| 193 மன்னியப்பன், திரு. சி. | கிருஷ்ணகிரி. |
| 194 மாணிக்கம், திரு. என். | பெண்ணாகரம். |
| 195 மாணிக்கவாசகம், திரு. இரா. | தொண்டாமுத்தூர். |
| 196 மாதவன், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்). | திருப்பத்தூர். (இராமநாதபுரம் மாவட்டம்) |
| 197 மாரிமுத்து, திரு. ஏ. ஆர். | பட்டுக்கோட்டை. |
| 198 மாரிமுத்து, திரு. மூ. | தலைவாசல் (செ.வ.) |
| 199 மீனாட்சிசுந்தரம், திரு. மா. | வேதாரண்யம்.. |
| 200 முகமது கோதர் முகைதீன், திரு. எஸ். | மேலப்பாளையம். |
| 201 முத்தமிழ்ச் செல்வன், திரு. வெ. ந. | லால்குடி. |
| 202 முத்து, திரு. வ. | சங்கரி (செ. வ.) |
| 203 முத்துசாமி, திரு. ப. | வேடசந்தூர். |
| 204 முத்துச்செல்வன், திரு. பு. செ. | முசிறி. |
| 205 முத்துவேல், திரு. ந. | வானூர் (செ. வ.) |
| 206 முத்தையா, திரு. கே. கே. | கடலூர். |
| 207 முத்தையா, திரு. எம். | ஒட்டப்பிடாரம் (செ. வ.) |
| 208 முருகையன், திரு. எஸ். | கலசப்பாக்கம். |
| 209 முனியாண்டி, திரு. ஆ. | நிலக்கோட்டை (செ. வ.) |
| 210 முனு ஆதி, திரு. மு. | திருப்போரூர். |
| 211 முனுசாமி, திரு. ரா. ரா. | மேல்மலையனூர். |
| 212 மொய்தீன், திரு. திருப்பூர் ஏ. எம். | துறைமுகம் (சென்னை நகரம்). |
| 213 மோசஸ், திரு. ம. | நாகர்கோயில். |
| 214 ரங்கநாதன், திரு. கே. | கோயம்புத்தூர் (கிழக்கு). |
| 215 ராமசாமி, திரு. இ. | வால்பாறை. |
| 216 ராமசாமி, திரு. ஜி. | திருப்பத்தூர் (வட ஆர்க்காடு மாவட்டம்). |
| 217 ராமராசன், திரு. வ. க. | பவானிசாகர் (செ. வ.) |
| 218 ராஜா, திரு. ஏ. எம். | பவானி. |
| 219 ராஜாராம், திரு. ஜி. | திண்டிவனம். |
| 220 ரெத்தினசாமித் தேவர், திரு.மு. சி. ஆ. | திருமங்கலம். |
| 221 லத்தீப், திரு. எம். ஏ. | வாணியம்பாடி. |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
| --- | --- |
| 222 வகாப், திரு. கே. எ. .. .. | .. ராணிப்பேட்டை. |
| 223 வடிவேலு, திரு. சீ. க. .. | .. தொட்டியம். |
| 224 வடிவேல், திரு. எஸ். .. .. | .. சீர்காழி (செ. வ.) |
| 225 விசுவநாதன், திரு. செ. கோ. .. | .. செங்கல்பட்டு. |
| 226 வீராசாமி, திரு. நா. .. .. | .. ஆற்காடு. |
| 227 வெங்கடசாமி, திரு. பி. .. | .. ஹொசூர். |
| 228 வெள்ளத்துரை, திரு. அ. .. | .. வாசுதேவநல்லூர். |
| 229 வேதாசலம், திரு. மு. .. .. | .. வண்ணாரப்பேட்டை (சென்னை நகரம்). |
| 230 வேலப்பன், திரு. சி. வே. .. | .. கபிலமலை. |
| 231 வேழவேந்தன், திரு. கா. .. | .. கும்மிடிபூண்டி. |
| 232 ஜேம்ஸ், திரு. ஜே. .. .. | .. திருவட்டார். |
| 233 ஜோதி வெங்கடாசலம், திருமதி. .. | .. ஸ்ரீரங்கம் (செ. வ.) |
| 234 ஹாண்டே, டாக்டர், எச். வி. .. | .. பார்க் டவுன் (சென்னை நகரம்). |
| 235 வெற்றிடம் .. .. .. | .. கோயம்புத்தூர் (மேற்கு). |

# தமிழ்நாடு சட்டப் பேரவை

---

## சனிக்கிழமை, 1973 மார்ச் 3

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** முதலமைச்சாவர்களின் வேண்டுகோளுக்கிணங்க 221, 222 ஆகிய வினாக்கள் தள்ளிவைக்கப்படுகின்றன.

### கல்வி அதிகாரிகளாக உள்ள பெண்கள்

* 223 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரிகளாகவும், மாவட்ட கல்வி அதிகாரிகளாகவும் பெண்கள் எத்தனை பேர் தற்போது பணியாற்றுகிறார்கள் ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** முதன்மைக்கல்வி அலுவலர்கள் 3, மாவட்டக் கல்வி அலுவலர்கள் 16.

**டாக்டர் ச. மு. பழனியப்பன் :** இப்படி பெண்கள் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களாகவும் மாவட்டக் கல்வி அதிகாரிகளாகவும் பணியாற்றுகிற இடத்தில் ஆண்களைவிட நிர்வாகம் சிறப்பாக இருக்கிறதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இதிலே வேறுபாடு காட்டப்படவில்லை. இருபாலாருக்கும் ஒத்த நோக்கத்தின் அடிப்படையில் பதவிகள் வழங்கப்படுகின்றன.

**திரு. ஆ. பாந்தாமன் :** இந்தப் பெண்களில் பெரும்பாலானவர்கள் கன்யாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்கிறார்களே அது உண்மையா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றி விவரம் இல்லை.

திரு. என். கிட்டப்பா: இந்தக் கல்வி அதிகாரிகளில் ஆதித் திராவிட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் எத்தனை பேர் என்று அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தனிக் கேள்வி வேண்டும்.

## *Divisions of Madras Corporation*

* 224 Q.—THIRU N. DENNIS:
THIRU N. KITTAPPA: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the Madras Corporation have requested the Government to increase the number of divisions in the City;

(b) if so, the details thereof; and

(c) the action taken thereon?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) ஒவ்வொரு கோட்டத்திலும் பத்தாயிரத்திற்குட்பட்ட வாக்காளர்கள் இருக்கும்படியாக அதன் எல்லைகளை நிர்ணயித்து தற்போதுள்ள 120 கோட்டங்களுக்குப் பதிலாக 150 கோட்டங்கள் அமைப்பதற்கு சென்னை மாநகராட்சி சட்டத்தில் 45-வது பிரிவை திருத்தும்படி சென்னை மாநகராட்சி மன்றம் அரசைக் கேட்டிருந்தது.

(உ) சென்னை மாநகரத்தில் கோட்டங்களின் எண்ணிக்கையை உயர்த்துவதற்குத் தக்கவாறு சென்னை மாநகராட்சிச் சட்டம் திருத்தப்பெற்றுள்ளது.

THIRU N. DENNIS: Sir, may I know whether the work relating to the delimitation of divisions has been started?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, 150 கோட்டங்களாகப் பிரிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதுபற்றிய அறிக்கையைச் சமர்ப்பிக்கும்படி மாநகராட்சி ஆணையர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்.

திரு. என். கிட்டப்பா: சென்னை மாநகராட்சிக் கோட்டங்களை அதிகப்படுத்துகின்ற நேரத்தில் சென்னை மாநகராட்சிப் பகுதியில் அடங்கிய சட்டப் பேரவைத் தொகுதிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்ற கோரிக்கையை தமது அரசு மத்திய அரசுக்கு எடுத்து வலியுறுத்தி யுள்ளதா?





மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதற்கென்று ஒரு டீ-லிமிடேஷன் கமிஷன் மத்திய அரசு நியமிக்க இருக்கிறது. அந்த டீ-லிமிடேஷன் கமிஷன் நியமிக்கப்பட்டதற்குப் பிறகு அவர்கள் அதைப்பற்றி ஆலோசிப்பார்கள்.

THIRU K. S. KOTHANDARAMAIAH: Sir, may I know from the Hon. Minister for Education whether the present number of divisions are adequate as per the 1971 census the population of Madras has increased?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மக்களுடைய எண்ணிக்கை அதிகமாகியிருக்கிறது. ஆனால், மொத்தத்தில் எவ்வளவு தருகிறார்கள் என்பதைப் பொறுத்து தமிழகம் முழுவதையும் பிரிக்க வேண்டி வரும். ஒரு பாராளுமன்றத் தொகுதிக்கு எவ்வளவு சட்ட மன்றத் தொகுதிகள் என்பதைப் பொறுத்து அதன் எண்ணிக்கை கூடுவது அல்லது அதே நிலையில் இருப்பது முடிவு செய்யப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: இப்பொழுது அதிகரிக்கப்பட்டிருக்கின்ற 150 கோட்டங்களில் பெண்களுக்கு எத்தனை கோட்டங்கள், தாழ்த்தப்பட்டவர்களுக்கு எத்தனை கோட்டங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: சென்னை மாநகராட்சி சட்ட விதிகளின்படி பெண்களுக்கென்றோ தாழ்த்தப்பட்டவர்களுக்கென்றோ தனிக் கோட்டங்கள் பிரிக்கப்படவில்லை. சட்டமன்றத் தொகுதியின் அடிப்படையில் ஒரு சட்ட மன்றத் தொகுதிக்கு 12 மாநகராட்சி தொகுதிகள் என்று ஏற்கெனவே இருந்தன என்றால், 12 தாழ்த்தப்பட்டவர்கள் இருக்கலாம். எந்த எந்தத் தொகுதி என்று ரொடேஷனில் கோ-ஆப்ட் செய்துகொள்ளலாம். இப்பொழுது அது 16 ஆகவும், 8 ஆகவும் மாற்றப்பட்டிருக்கின்றது.

திரு. நா. வீராசாமி: சென்னை மாநகரத்தில் இருக்கக்கூடிய 120 கோட்டங்களை 150 கோட்டங்களாக ஆக்குவதால், அங்கே வட்டங்களைப் பிரிப்பதற்குக் கொஞ்சம் கால தாமதம் ஆகும் என்று சொல்லப்படுகிறதே, அப்படிக் கால தாமதம் ஆனால் நடைபெறவிருக்கும் தேர்தல் தள்ளிப் போடப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: கால தாமதம் ஆகாத அளவுக்குச் செய்ய வேண்டும் என்ற முறையில் ஒரு பக்கம் வாக்காளர் பதிவு நடைபெறுகிறது. மற்றொரு பக்கம் கோட்டங்களாகப் பிரிக்கும் முயற்சியும் நடைபெறுவதாகக் கூறப்பட்டிருக்கிறது. இதனுடைய பணிகள் எப்படிச் செல்லுகின்றன என்று பார்த்த பிறகு முடிவு செய்ய வேண்டும்.

**திரு. ஆ. பரந்தாமன் :** இப்பொழுது புதிதாக அமைக்கப்பட்டிருக்கிற இந்தக் கோட்டங்களுக்கு முன்பு இருந்ததைவிட வாக்காளர்களின் எண்ணிக்கை குறையுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இன்னும் கோட்டங்கள் அமையப் பெறவில்லை. அமைக்கப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன.

### கீழ்ப்பாக்கம் மனநோய் மருத்துவமனை

* 225 வினா—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கீழ்ப்பாக்கத்தில் உள்ள மனநோய் மருத்துவமனையை விஸ்தரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) ஆம்.

(இ) கடுமையான மனநோய் உள்ள மனநோயாளிகளுக்கென ரூ. 2.20 லட்சம் செலவில் 20 படுக்கைகள் கொண்ட பகுதியொன்றைக் கட்டுவதற்கான திட்டம் அரசினருடைய பரிசீலனையில் அண்மையில் இருந்தது. இப்பொழுது அது அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதற்கான அறிவிப்பு விரைவில் வரும். ஏற்கெனவே அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப் படுகிற கட்டத்திலே உள்ள திட்டங்களில் பல்கலைக்கழக மாணவர் மருத்துவக் கூடம் ரூ. 2.75 லட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டு அண்மையில் திறக்கப் பட இருக்கிறது. மகளிர் மருத்துவப் பகுதி 20 படுக்கைகளைக் கொண்டது. ரூ. 1.2 லட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டு இந்த வாரம் திறக்கப்பட இருக்கிறது. தொழில் வழி மருத்துவக்கூடம் (ஆக்குபேஷன் தெரபி ஸ்கீம் அண்டர் ராபின் ஸ்கீம்) ரூ. 1.5 லட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட இருக் கிறது. அது அண்மையில் திறக்கப்பட இருக்கிறது.

**திரு. கே. ஏ. வகாப் :** இந்த கீழ்ப்பாக்கம் மன நோய் மருத்துவ மனையில் அட்மிஷன் செய்வதில் மிகவும் கண்டிப்பு காட்டப்படுகிறது. அட்மிஷன் செய்யப்படுபவர்கள் போலிஸ் சர்ட்டிபிகேட்டும் மாஜிஸ்ட்ரேட் சர்ட்டிபி கேட்டும் வாங்கிக்கொண்டு வருவதற்குள் அவர்களுக்கு வியாதி அதிகமாகும் தன்மை ஏற்பட்டு விடுகிறது. அட்மிஷனுக்கு வருகிற வியாதியஸ்தர்களை அங்கேயே ஒன்றிரண்டு நாட்கள் வைத்திருந்து சோதித்து, உடனடியாக அட்மிஷன் செய்யவேண்டியதாக இருந்தால் உடனடியாக சேர்த்துக் கொள்ளவும், இல்லையென்றால், அட்மிஷன் செய்வதற்கில்லை என்னும் முடிவு



எடுக்கக்கூடிய ஏற்பாட்டை அரசு செய்ய முன்வருமா ? 'கீழ்ப்பாக்கம்' என்றாலே மன நோய் மருத்துவ மனையைக் குறிப்பிடுகிறது. ஆகவே, அந்த மனநோய் மனைக்கு, 'கீழ்ப்பாக்கம் மருத்துவ மனை' என்று சொல்லாமல், தனிப் பெயர் வைக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அது இருக்கிற இடத்தையொட்டி 'கீழ்ப்பாக்கம்' என்று சொல்லப்படுகிறது. இப்பொழுது மருத்துவக் கல்லூரி யும் கீழ்ப்பாக்கத்தில் இருக்கிறது. ஆகவே, 'கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி' என்று சொல்லுகிறார்கள். நானும் கீழ்ப்பாக்கத்திற்குப் பக்கத்திலே தான் குடியிருக்கிறேன். ஆகவே, எங்களைப் போன்றவர்களை வைத்து மற்றவர் களுக்குத் தெளிவு ஏற்படும் என்று நம்புகிறேன். மற்றொன்று. மன நோய் உள்ளவர்களைப் 'பைத்தியம்' என்றோ வேறு விதமாகவோ குறிப்பிட வேண்டி யதில்லை. மூன்றாவது, அங்கே வந்து சேர்க்கப்படுகிறவர்கள் மன நோய் உள்ள வர்கள் என்று கருதப்படுகிற ஒரு விதமான சூழ்நிலை வரும்போது, வேண்டு மென்றே கொடுமைப்படுத்துவதற்காகக் கொண்டுவந்து சேர்க்கப்படுபவர் களும் சிலர் இருக்கக்கூடும் என்ற ஐயம் பல நேரத்தில் ஏற்படுகிறது. வேண்டாத மனைவியை, வேண்டாத சகோதரர்களை இப்படிச் செய்துவிடலாம் என்ற அச்சம் இருக்கிறது. ஆகவே, அதற்குச் சான்றிதழ் தேவைப்படுகிறது. சான்றிதழ் இல்லையென்றால், தாங்கள் விரும்பாதவர்களை, தாங்கள் வெறுப் பவர்களைக் கொண்டுவந்து மனநோய் மருத்துவ மனையில் தள்ளிவிடக்கூடிய சூழ்நிலை சமுதாயத்தில் இருக்கிறது. சான்றிதழ் இல்லையென்றால், இப்படிப் பட்ட தவறுகளுக்கு இடம் தந்துவிடும். அதற்காகத்தான் இத்தகைய பாது காப்புகள் வைக்கப்பட்டிருக்கின்றன.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** தலைவர் அவர்களே, Lunacy Act ஐ மாற்றியமைப்பதற்கு அரசுக்கு ஏதாவது ஆலோசனை இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** முன்னாள் அமைச்சராக இருந்த அம்மையார் அவர்கள் அந்தச் சட்டத்தின் எல்லா விவரமும் தெரிந்து சொன்னால் அதைப் பரிசீலிக்கலாம்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவர் அவர்களே, இப்பொழுது கீழ்ப்பாக்கம் மென்டல் ஆஸ்பத்திரியில் எத்தனை பேஷன்ட்ஸ் இருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தனிக் கேள்வி போட்டால் விவரம் அளிக்கலாம். ஏறத்தாழ 1,700 பேர் உள் நோயாளிகளாக இருக்கிறார்கள் என்று நான் அறிகிறேன். நான் சொல்வதில் தவறு இருந்தால் திரு. ஜேம்ஸ்

[1973 மார்ச் 3

அவர்கள் இன்னொரு கேள்வி கேட்டுத் தெரிந்துகொள்ளவேண்டும். ஒரு நாளைக்கு 500 முதல் 700 வரை வெளி நோயாளிகள் அங்கு கவனிக்கப்படுகிறார்கள் என்று அறிகிறேன்.

டாக்டர் ச. மு. பழனியப்பன்: கோவை, மதுரை போன்ற இடங்களில் உள்ள ஆஸ்பத்திரிகளில் மன நோய்ப் பிரிவுகள் இருக்கின்றன. அங்கு மருத்துவக் கல்லூரி மாணவர்கள் அந்நோய் குறித்து பயிற்சி பெறவேண்டியுள்ளது. மன நோய் என்பதும் மருத்துவப் படிப்பின் ஒரு பகுதியாக இருப்பதைக் கருதி, எம்.பி.பி.எஸ். படிக்கும் மாணவர்களுக்கு உதவியாக இருக்கும் பொருட்டு மருத்துவக் கல்லூரிகள் இருக்கும் ஊர்களில் மன நோய் மருத்துவ மனைகளை ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: பெரிய மருத்துவ மனைகளில் சைகியாட்ரிக் டிபார்ட்மென்ட் என்று மனக் கோளாறு பற்றிய மருத்துவம் செய்வதற்கு ஒரு பகுதி ஏற்படுத்தப்பட்டு வருகிறது. அதற்கான தகுதியும் பயிற்சி பெற்று அல்லது சர்ட்டிபிகேட் அல்லது டிப்ளமா பெற்றவர்களைக் கொண்டு, அந்த மருத்துவ மனைகளில் மன நோயாளிகளுக்கு சிகிச்சை வழங்கப்படுகிறது. இன்னும் சொல்லப்போனால் ஒரு புதிய கருத்து என்னவென்றால், மனநோய் தொடங்கிய நிலையில் உள்ள ஒருவரைக் கொண்டுவந்து மனநோய் மருத்துவ மனையில் சேர்த்துவிடும்போது அவர்களுக்கு அதனால் ஏற்படுகிற கவலை காரணமாகவேகூட மன நோய் நீங்குவதில்லை என்ற ஐயம் இருக்கிறது. கடுமையான மன நோய் வராதவர்களை மனையில் சேர்த்துக் கொள்ளாமலேயே சிகிச்சை அளிக்க இன்றைக்கு முறை இருக்கிறது.

திரு. கே. ஏ. வகாப்: இந்த மனநோயாளிகளைச் சேர்ப்பதில் சிபார்சுகள் தேவைப்படுகிறது. அதாவது போலீஸ் அதிகாரிகள் அல்லது நீதிபதிகள் சிபார்சு தேவைப்படுகிறது என்று கூறினார்கள். டாக்டர்களை விட அவர்களுக்கு எப்படி அதுபற்றி முடிவு செய்யமுடியும் என்று எனக்குத் தெரியவில்லை. ஆகவே இரண்டொரு மாதம் அவர்களை ஆப்சர்வேஷனில் வைத்து பார்த்தால் டாக்டர்களுக்குத் தெரியும். இப்போது இப்படி சிபார்சு வேண்டுமென்று சொல்வதால் ஒரு மாதகாலம் பிடிக்கிறது. அதாவது போலீஸ் அதிகாரி அல்லது நீதிபதி சிபார்சு வாங்குவதற்கு. எனவே நான் கூறியமுறை பரிசீலிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: மனநோயினுடைய அளவு, வகை, தரம், ஏற்பட்ட சூழ்நிலை இவற்றை எல்லாம் ஒரு டாக்டர் பரிசோதித்தவுடன் சரியாக அறிந்து கொள்ளமுடியாது. சிலபேர்கள் கோபத்தில் பேசுகிறபோது



1973 மார்ச் 3]

மனநோய் உள்ளதுபோல் சந்தேகம் ஏற்படுவது உறுப்பினர் அவர்களுக்கும் தெரியுமென நம்புகிறேன். அப்படி மனநோய் அவரது சூழ்நிலையில் ஏற்பட்டிருக்கிறது என்பதை உள்ளபடியே இரண்டு அல்லது மூன்று மாதகாலம் மனநோய் காரணமாக அந்தக் குடும்பத்திற்கு தொல்லை தந்தார்கள், என்பதற்கு உள்ளூர் அதிகாரிகள் சான்றிதழ் கொடுத்தால் டாக்டர்களிடம் அழைத்துச் சென்று அவர்கள் சிகிச்சை செய்ய வசதியாக இருக்கும். தவறாக ஒருவரை மனநோயாளியாக ஆக்குவதைவிட ஒரு நோயாளியை சிறிது காலம் கழித்து சிகிச்சைக்கு அனுப்புவதில் தவறு இல்லை.

திரு. நா. வீராசாமி: மனநோயால் பாதிக்கப்பட்டிருப்பவர்களை மருத்துவ மனைக்கு சேர்க்கப்போகும்போது மனநோயாளியைச் சேர்க்கப் போகிறவனை மனநோயாளி என்று அவனைச் சேர்த்துவிட்டு மனநோய் உள்ளவனை வெளியே விட்டுவிடுகிறார்கள். இதைத் தடுப்பதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: மாண்புமிகு உறுப்பினர் வீராசாமி அவர்கள் யாரையும் அழைத்துக்கொண்டு போகவேண்டாம் என்று முன்கூட்டியே தெரிவித்துக்கொள்கிறேன். அதற்காகத்தான் திரு. வகாப் அவர்கள் கேட்டபோது யாராகயிருந்தாலும் சர்டிபிகேட் வாங்கிக்கொண்டுவர வேண்டும் என்று நான் தெரிவித்திருக்கிறேன்.

திரு. கே. கந்தசாமி: மருத்துவத் துறையில் நவீன முறைகள் பல கண்டு பிடிக்கப்படுகிற இந்தக் காலத்தில் மனநோய் சிகிச்சைக்கு நவீனமுறைகள் கையாளப்படுகின்றனவா? அப்படியானால் அதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் என்ன என்று அறியலாமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: நவீன முறையில் மருந்துகள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. மனநோய் முற்றியவர்களைக் குணப்படுத்துவதற்காக புதிய சிகிச்சை முறைகள் கையாளப்பட்டு வருகின்றன. சிகிச்சை மூலம் ஓரளவு குணமடைந்த பின்னர் இயல்பாகவே அவர்களுக்கு நடைமுறைப் பழக்கம் ஏற்படவேண்டுமென்பதற்காக இங்கு ஏற்கனவே சொன்னதுபோல் ஆக்குபேஷனல் தெரபி என்ற முறை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. நவீன காலத்தின் சூழ்நிலை காரணமாகவேகூட மக்களுக்கு மனநோய் உண்டாகிறது என்ற கருத்து இருக்கிறது. நகரத்திலுள்ள கடுமையான சத்தங்கள் கூட மக்களுக்கு மனக் குழப்பத்தை உண்டாக்குகிறது. சில பேர்களுக்கு வாழ்க்கையில் ஏற்படுகிற மோதல்கள், போட்டிகள், எதிர்ப்புகள் இன்னும் சொல்லப் போனால் பொறாமை உணர்ச்சிகள், காழ்ப்பு உணர்ச்சிகள் இவை காரணமாக, நவீன கால சூழ்நிலையில் இந்த மன நோய் மிகுதியாகிறது என்று சொல்லுதற்கும் காரணம் இருக்கிறது.

[1973 மார்ச் 3

**திருமதி த. ந. அனந்தநாயகி:** மனநோய் முற்றியவர்களுக்கு போலீஸ்காரர்களின் சர்டிபிகேட் வேண்டுமென்று சொல்லப்படுகிறது. அவர்கள் தொல்லைகொடுத்து முற்றிய பிறகு போலீஸ்காரர்களின் சர்டிபிகேட்டை வைத்துக்கொண்டு மருத்துவமனையில் கொண்டுபோய் சேர்க்க வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். போலீஸ்காரர்களின் கையெழுத்து இல்லாமல் அங்குள்ள ரெஸ்பான்சிபிள் பெர்சன்ஸ், சட்டசபை அல்லது பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்லது பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் இவர்கள் ஒரு கடிதம் கொடுத்து அதைக் கொண்டுபோய் ஆஸ்பத்திரியில் கொடுத்து டாக்டர்கள் பரிசோதித்து மனநோயாளிகளை ஏற்றுக்கொள்வது என்பது வசதியாக இருக்குமே. இல்லையென்றால் இப்படி போலீஸிடம் போனால் அதற்கு வேறு மாமூல் கேட்கப்படுகிறது என்று வதந்திகள் எல்லாம் வருகின்றன. அதற்கு இடம் கொடுக்காமல் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கேள்வி கேட்கும்போது சம்பந்தம் இல்லாமல் போலீஸ் அதிகாரிகள் மீது ஏன் அவதூறு சொல்லவேண்டும் ?

**திருமதி த. ந. அனந்தநாயகி:** சம்பந்தத்தோடுதான் சொல்கிறேன். அனுபவத்தில் சொல்கிறேன். போலீஸ்காரர்களின் கையெழுத்து தேவை இல்லை, ஒரு ரெஸ்பான்சிபிள் பெர்சன் கையெழுத்து இருந்தால் போதும் என்ற முறையில் எடுத்துக்கொள்ள அந்த முறையை மாற்றியமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** போலீஸ்காரர்கள்தான் கையெழுத்து போடவேண்டும் என்று கூட இல்லை. உறுப்பினர் அவர்கள் கூறியபடி அப்படி இருக்குமேயானால் அதை ஆராயத் தயாராயிருக்கிறேன். ஆனால் சமுதாயத்தில் பொறுப்புள்ளவர்கள் என்று உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். சில உறுப்பினர்கள் கூடச் சாதாரண சான்றிதழ் வழங்க தமக்கு ஏதாவது ஒரு முறையில் உதவி செய்யவேண்டுமென்று கேட்கிறார்கள் என்ற கருத்து ஒரு காலத்தில் நிலவியது. ஆகவே பொறுப்புள்ளவர்கள் யார் என்பதைச் சமுதாயம்தான் தீர்மானிக்கவேண்டும். ஆனால் ஒருவரை வேண்டுமென்றே மனநோயாளி என்று கொண்டுபோய் சேர்த்தால் சட்டப்படி அது ஒரு க்ரிமினல் குற்றமாகும். சில கணவன்மார்கள் தங்கள் மனைவி மன நோயாளி என்று கூறி இன்னொரு திருமணம் செய்துகொள்ளத் திட்டமிட்டு அப்படி முதல் மனைவியைத் தவறான முறையில் மனநோயாளி என்று சொல்லி இரண்டாவது திருமணம் செய்துகொள்வதும் சமுதாயத்தில் சில நேரங்களில் நடப்பதுண்டு. ஆகவேதான் போலீஸ் தொடர்பு இருப்பது, மாஜிஸ்ட்ரேட் அவ்விதத் சான்றிதழ் கொடுப்பதாக இருந்தாலும் அதை ஏற்கத் தடையில்லை என்றே கருதுகிறேன்.



1973 மார்ச் 3]

**திரு. எல். கணேசன் :** கடந்த அக்டோபர் மாதம் தமிழ்நாட்டில் மனநோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகம் என்று சொல்லப்படுகிறதே, அந்த மாதத்தில் கீழ்ப்பாக்கம் மருத்துவமனையில் நோயாளிகளின் எண்ணிக்கை பெருகியிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** உறுப்பினர் அவர்கள் தனியாகக் கேள்வி கேட்டால் சரியான விடை தரமுடியும்.

**திரு. கு. காமாட்சி :** அரசியலில் மன விரக்தி அடைந்து மனநோய் மருத்துவ மனையில் சமீபத்தில் யாரேனும் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அப்படி யாரும் அனுமதிக்கப்படவில்லை. ஆனால் அரசியலில் அளவு கடந்த நம்பிக்கை வைப்பது யாருக்கும் தவறு.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** மனநோயால் பாதிக்கப்பட்ட பலர் தெருவில் அலைந்து திரிகிறார்கள். அவர்களை ஆஸ்பத்திரியில் கொண்டுபோய் சேர்ப்பதற்கு ஆள் இல்லாமல் இருக்கிறது. ஆகவே அப்படிப்பட்டவர்களை அரசாங்கத்திலிருந்து ஏற்பாடு ஏதாவது செய்து ஆஸ்பத்திரிகளில் கொண்டுபோய் சேர்ப்பதற்கு வழிவகை செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** சிலபேர்கள் ஊரில் நினைத்தபடி திரிவதற்கு மனநோயாளிகள் போல் நடந்துகொள்கிறார்கள். சிலபேர் பிச்சை எடுக்க தொழுநோயாளிகள் போல் நடந்துகொள்கிறார்கள். இப்படி எவ்வளவோ காரணங்கள் இருக்கின்றன. இவை எல்லாம் சமுதாயத்தின் கூட்டு முயற்சி காரணமாகத்தான் தீர்க்கப்பட வேண்டும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** மனநோய் ஆஸ்பத்திரிகளில் இன்று 'மேல் நர்ஸ்கள்' குறைவாக இருக்கிறார்கள். ஆதலால் அவர்களை அதிகமாகப் போட வேண்டுமென்ற ஒரு கருத்திருக்கிறது. அதுசம்பந்தமாக அரசு தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** 'மேல் நர்ஸ்களைப்' போடுவதன் காரணத்தால் சில சிக்கல்கள் ஏற்படுகின்றன. அவர்கள், மனநோயாளிகள் உள்ள இடத்தில் அவர்கள் இயல்பாகவே சர்வாதிகாரிகளைப்போல் ஆகிவிடுகிறார்கள். எனவே சில நேரங்களில் நோயாளிகளின் பேரில் கொஞ்சம் கடுமையான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்கிறார்கள். ஆகவே ஆண்களே இருக்க வேண்டுமென்ற கருத்தை அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. முடிந்தால் பெண்கள் வர வாய்ப்பிருக்குமானால் குழப்பமான நிலையில் உள்ள மனநோயாளிகளிடம் அவர்கள் கடுமையாக நடக்காமல் இருப்பார்கள் என்ற எண்ணம் அரசாங்கத்திற்கு இருக்கிறது.

[1973 மார்ச் 3

**திரு. இரா. மாணிக்கவாசகம் :** மக்களை குழப்பும் வகையில் பேசித் திரியும் சிலர், மனநோய் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட வேண்டியவர்கள் சிலர் வெளியே திரிகிறார்கள். அவர்களை மருத்துவமனையில் அனுமதிக்க தீவிரத் திட்டம் ஏதாவது அரசினரிடம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** எதற்கும் சர்டிபிகேட் வேண்டும்.

**திரு. ஆ. பரந்தாமன் :** கீழ்ப்பாக்கத்தில் உள்ள மனநோய் மருத்துவமனையை விரிவுபடுத்தக் காரணம் மனநோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை பெருகிவிட்டதா? அல்லது நவினமுறையில் மாற்றி அமைக்க வேண்டுமென்று எண்ணுகிற காரணமா? என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தமிழ்நாட்டில் ஒரு இடத்தில் மிகச் சிறந்த நிபுணத்துவம் உள்ள பயிற்சி வழங்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் ஏற்கனவே பங்களூர் அல்லது மைசூரில் இருப்பதுபோல் தமிழ்நாட்டிலும் பயிற்சி வழங்குவதற்குரிய எல்லா வாய்ப்புகளும் இருக்க வேண்டும் என்று, நவின மருத்துவ முறைகள் எல்லாம் இடம் பெறவேண்டுமென்று விரும்புகிறோம்.

**திரு. என். எஸ். பலராமன் :** இப்போது ஆறு மாதமாக சிலர் மிகவும் மோசமாக பைத்தியம் பிடித்தவர்கள்போல் ஆகிவிட்டிருக்கிறார்கள். அவர்களை, பொதுமக்கள் ஆயிரம் பேர்கள் கையெழுத்து போட்டுக் கொடுத்தால் உடனடியாக மருத்துவமனையில் சேர்ப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** முன்னாலேயே பதில் அளிக்கப்பட்டு விட்டது.

**திரு. கே. என். குமாரசாமி :** மனநோய் மருத்துவத் துறையில் உயர்ந்த பயிற்சி பெற்ற டாக்டர்கள் எவ்வளவு பேர்கள் பணியாற்றுகிறார்கள்? அவர்கள் பயிற்சி பெறுவதற்கு நம் இந்திய நாட்டிலேயே அவர்களுக்கு பயிற்சி அளிக்க திட்டமிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அதற்கான மேல்பட்டப் பயிற்சி இப்போது இருக்கிறது. பயிற்சி கொடுக்கத் தக்க டாக்டர்கள் இருக்கிறார்கள். எண்ணிக்கை எவ்வளவு என்பதற்கு தனிக் கேள்வி போட்டால் சொல்கிறேன்.



1973 மார்ச் 3]

**திரு. நி. பொன்னுமலை :** தலைவரவர்களே, இந்த மன நோய் வியாதி ஆண்களுக்கு அதிகமாக வருகிறதா, பெண்களுக்கு அதிகமாக வருகிறதா என்ற புள்ளி விவரத்தை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அந்தப் புள்ளி விவரம் சொல்ல இயலவில்லை. ஆண்களாலே பெண்களுக்கு அதிகம் வருகிறது, பெண்களாலே ஆண்களுக்கும் அதிகம் வருகிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தலைவரவர்களே, சென்னையில் இருக்கும் கீழ்பாக்கம் ஹாஸ்பிடலில் உச்சக்கட்டமாக நெரிசல் இருக்கிறது. ஆகவே, இன்னொரு பைத்தியக்கார ஆஸ்பத்திரியை சென்னையின் தெற்குப்புறத்திலோ அல்லது வேறு இடத்திலோ ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் ஏதாவது திட்டம் வைத்திருக்கிறதா? போஸ்ட் கிராஜுவேட் கோர்ஸ்—டி.பி.எம். ஆல் இந்தியா மென்டல் இன்ஸ்டியூட் போல்—ஆரம்பிக்க விரும்புகிறோம் என்று சொன்னார்கள். அதற்கான நடவடிக்கை ஏதேனும் எடுக்கப்பட்டிருக்கிறதா? எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, எம்.பி.பி.எஸ். தேர்வு பெற்றவர்கள், மேற்கொண்டு பயிற்சி பெறுவதற்கான படிப்பு ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே அந்தத் துறையில் 3-4 ஆண்டுகள் அனுபவம் பெற்றவர்கள் அந்தப் பயிற்சிக்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். அம்மையார் அவர்கள் பைத்தியக்கார ஆஸ்பிடல் என்று சொன்னார்கள். இந்தச் சொல் இப்போது சொல்லவேண்டாம் என்றும் மனநோய் என்று தான் சொல்ல வேண்டுமென்றும் கருத்து உருவாகியிருக்கிறது. காரணம், அந்த நோய் உள்ளவர்களை அந்தச் சொல் மேலும் புண்படுத்தும் என்று கருதப்படுவதால் தான். அது ஒரு நல்ல கருத்து என்ற வகையில் வளர்ச்சிதான். தெற்குப் பகுதியில் ஆரம்பிக்கக்கூடாதா என்று கேட்டார்கள். சென்னைக்குத் தெற்கே போவதாக இருந்தால் தெற்கு மாவட்டத்தில் ஒன்றான மதுரைக்குத்தான் போக வேண்டும். அதைப் பற்றி எண்ணிப்பார்ப்போம்.

**திரு. மு. சண்முகம் :** தலைவரவர்களே, மன நோயால் பாதிக்கப்பட்டவர்கள் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு, சிகிச்சை பெற்று குணம் அடைந்து அவர்கள் மறுவாழ்வு பெற்று இருக்கிறார்களா என்று அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, புள்ளி விவரம் தனியாகத்தான் தர முடியும். ஆனால் குணம் அடைந்து வருகிறார்கள் என்பது உண்மை. குணம் அடைந்தவர்கள் ஒரு தொழிலில் ஈடுபடுவார்களானால்

வெளியில் இருந்துகொண்டு தொழிற்பயிற்சி பெறுவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆக்குபேஷன் தெரபி மூலமாக சில வேலைகளைச் செய்வதற்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, அங்கே எத்தனை சமூக நல ஊழியர்கள் வேலை செய்கிறார்கள்? அவர்களுடைய எண்ணிக்கையை விஸ்தரிப்பதற்கு அரசாங்கம் ஏதாவது திட்டம் வைத்திருக்கிறதா? சமூக நல ஊழியர்கள் சிறப்பாகப் பணியாற்றுகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** சமூக நல ஊழியர்கள் பணியாற்றுகிறார்கள். ஆனால் எவ்வளவு பேர் என்ற விவரம் தனியாகத்தான் தெரிவிக்க முடியும்.

**திரு. இரா. இராமலிங்கம் :** தலைவரவர்களே, மனநோய் நோயாளிகளை கீழ்ப்பாக்கம் மருத்துவமனையில் நேரடியாகச் சேர்ப்பதற்கு அனுமதிக்கப்படுவது இல்லை. போலீசார் மூலமாகத்தான் சேர்க்கக்கூடிய நிலைமை இருக்கிறது. நேரடியாக சேர்க்கச் சொல்வதற்கு அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** நேரடியாக யார் வேண்டுமானாலும், யாரைவேண்டுமானாலும் மன நோயாளி என்று சேர்த்து விட முடியாது. யாரிடத்தில் மனநோய் இருக்கிறது என்று கூறினாலும், அவருக்குள்ளது மன நோய்தான் என்ற கருத்துக்கு ஆதரவு வேண்டும். அப்படியே சான்றிதழ் இருந்தாலும், டாக்டர்கள் சரியான முறையில் பரிசோதனை செய்து தான் சேர்த்துக்கொள்வார்கள்.

**திரு. வி. கே. இராஜாப் பிள்ளை :** தலைவரவர்களே, மன நோய் என்றால் மனம் என்ற உறுப்பு இருக்கிறதா என்பதை டாக்டர்கள் கண்டுபிடித்து இருக்கிறார்களா, இல்லையென்றால் உடல்கோளாறால், மூளை கோளாறால் அந்த நோய் ஏற்படுகிறது என்றால் எந்த விதத்தில் அதற்குச் சிகிச்சை அளிக்கப்படுகிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** மனம் என்ற உறுப்பு இல்லை. மூளை என்ற உறுப்பு இருக்கிறது. மூளையின் தட்பவெட்ப நிலையைத்தான், உணர்ச்சி நிலையைத்தான் மனம் என்று சொல்வது உலக இயல்பு.

* 226 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there are proposals to revise the diet system of patients in the Kilpauk Government Mental Hospital: and

(b) if so, the details thereof?



**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

THIRU N. DENNIS : Sir, as regulation of diet in mental ailments paves the way for sure cure, may I know from the Hon. Minister whether the diet system will be altered according to the mental ailment of individual patients?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, மனநோயாளிகளுக்கு என்று இன்னவிதமான உணவு வேறுபாடு இருக்கிறது என்ற கருத்து மருத்துவத் துறையில் எடுத்துச் சொல்லப்படவில்லை. பெண்ணுக்கும், ஆணுக்கும் உணவு அளவில் சிறிதளவு வேற்றுமை இருக்கிறது. காசநோயாளிகளுக்குத் தனி உணவுத் தரம் இருக்கிறது. யாராக இருந்தாலும் ஒரே வகையான உணவு உண்பதால் அலுப்பும் வெறுப்பும் ஏற்படும் என்பதற்காக வழங்கப்பட்டு வருகிற உணவை சிலநாட்களில் மாற்றி வேறு வகையான உணவைத் தருவதற்கும் முறை இருக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, இந்த உணவு சப்ளை செய்வதற்கு கான்டிராக்ட் கொடுக்கப்பட்டிருக்கிறதா? கொடுத்து இருந்தால் யார் அந்தக் கான்டிராக்டர்? என்ன அடிப்படையில் அது கொடுக்கப்படுகிறது என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** கேள்வி கான்டிராக்டைப் பற்றி இருந்திருந்தால் அப்படி விடப்படும் விஜிடேரியன் எது நான்-விஜிடேரியன் எது என்று பதிலில் சொல்லப்பட்டிருக்கும். இறைச்சி, முட்டை ஆகியவற்றைக் கொண்டு வந்து தருவதற்கு ஒரு வேளை காண்ட்ராக்ட் கொடுக்கக்கூடும்.

### தாம்பரம் காசநோய் மருத்துவமனை

* 227 வினா—திரு .கே. ஏ. வகாப் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் காசநோய் மருத்துவ மனையில் தற்போது எத்தனை படுக்கைகள் உள்ளன?

(இ) அதை அதிகப்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(உ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) 620 படுக்கைகள்.

(இ) தற்பொழுது இல்லை.

(உ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. கே. ஏ. வகாப் :** தலைவரவர்களே, நம்முடைய நாட்டில் காசநோய் அகற்றுவதற்கு எவ்வளவு முயற்சி எடுத்தாலும், தாம்பரம் அதற்கு ஏற்ற இடமாக இருக்கிறது, நல்ல முறையில் அந்த இடம் அமைந்து இருக்கிறது என்று சொல்லப்படுவதால், அந்த இடத்திலேயே மேலும் விஸ்தரிப்பு செய்ய அரசாங்கம் திட்டங்களை மேற்கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, காசநோய் சிகிச்சைக்குத் தாம்பரம் தான் ஏற்ற இடம் என்ற கருத்து சொல்லப்படவில்லை. தஞ்சை மாவட்டத்தில் செங்கிப்பட்டி என்ற இடத்திலும், ஈரோடுக்கு அருகில் பெருந்துறையிலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு இடத்திலும், காரைக்குடிக்கு அருகில் ஒரு இடத்திலும் இப்படிப்பட்ட மருத்துவமனைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தாம்பரத்திலேயே அதிக படுக்கைகளை ஏற்படுத்தவேண்டுமென்று சொல்வது தவறு. அண்மைக் காலத்தில் மருத்துவர்கள் ஆராய்ச்சியினால் காசநோய்க்கு தொடர்ந்து ஒரு ஆண்டுகாலம் சிகிச்சை பெற்றால், வேலை செய்து கொண்டே கூட அவர்கள் அந்த நோயைத் தடுத்து நிறுத்திக்கொள்ள முடியும் என்று கண்டுபிடித்து இருக்கிறார்கள். ஒரு காலத்தில் காசநோயை குணப்படுத்தவேண்டுமென்றால் உடம்பில் ஊறும் பலத்தை வைத்துக்கொண்டு தான் அதைத் தடுக்க முடியும் என்ற நிலை இருக்கிறது. அதற்காக அவர்களுக்கு ஓய்வு கொடுக்கவேண்டும் என்ற முறையில் மருத்துவ மனையில் தங்கி இருக்க வேண்டுமென்று சொல்லப்பட்டது. இப்போது சரியான முறையில் மருந்து கண்டுபிடிக்கப்பட்டுவிட்டதால், வீட்டிலிருந்தே கூட அந்த மருந்தை 1, 2 ஆண்டுகள் சாப்பிட்டுக்கொண்டு வந்தால் அதைக் குணப்படுத்தமுடியும், அந்த நோயை எதிர்த்து நிற்க முடியும். தமிழ் நாட்டில் எல்லா ஆரம்ப சுகாதார நிலையங்களின் மூலமாகவும், மருத்துவமனைகள் மூலமாகவும் சிகிச்சை அளிப்பதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது ; சிகிச்சைபெற ஊக்குவிக்கப்படுகிறது.

**திரு. கு. காமாட்சி :** தலைவரவர்களே, தமிழ்நாட்டிலுள்ள காச நோய் மருத்துவமனைகளை அரசாங்கமே ஏற்று நடத்தும் உத்தேசம் உண்டா ? திருச்சியில் உள்ள தனியார் மருத்துவ மனையை . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் கேட்பது மூலக் கேள்விக்குச் சம்பந்தமில்லாத கேள்வி. சம்பந்தப்பட்ட கேள்வி ஒன்று





கேட்டால் போதாதா ? திருச்சியைப் பற்றியும் இந்த கேள்வியிலே கேட்க வேண்டுமா ? தனிக்கேள்வி போடவும் என்று தான் அமைச்சர் அவர்கள் பதில் கூற முடியும்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இது தனிக்கேள்விக்கு உரியது. எல்லா மருத்துவ மனைகளுக்கும் அரசு உதவி வழங்கி வருகிறது. அந்த உதவியின் அடிப்படையில்தான் தனியார் நிறுவனங்களும் அரசுக்கு உதவும் வகையில் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தாம்பரத்தில் 620 படுக்கைகள்தான் இருக்கின்றன என்று சொன்னார்கள். இது மிகக்குறைவானது. பல நோயாளிகள் மனு செய்து, அவர்கள் அடுத்த உலகத்திற்குப் போனதற்குப் பிறகு, இங்கே வந்து சேரலாம் என்று பதில் வருகிறது. நோய் துவக்கத்தில் இருந்தால் மருந்து கொடுத்து தீர்த்து விடலாம். முற்றிய நோய் உள்ளவர்கள்கூட இந்த ஹாஸ்பிடலில் இடம் கிடைக்காமல் திண்டாடிக்கொண்டிருக்கிறார்கள். இந்த நெருக்கடியைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் அவசர நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அம்மையாரைப் போன்றவர்களுக்கு எப்போதுமே நெருக்கடி தீராது. ஓட்டேரியில் உள்ள மருத்துவ மனையில் காசநோய்ப் படுக்கைகள் இருக்கின்றன. அதேபோல், பொது மருத்துவ மனைகளிலும் காசநோய்க்கென்றே படுக்கைகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு தாலூக்கா மருத்துவ மனையிலும் 10 படுக்கைகள் அதற்கென்றே ஒதுக்கப்படவேண்டுமென்று அரசு கருதியிருக்கிறது. இப்படி மருத்துவ வசதி பரவலாக அளிக்கப்பட்டு வருகிறது. ஒரேயடியாக ஒரு இடத்தில் வசதிகளைக் குவித்து வைப்பது என்பது அரசாங்கத்தின் கொள்கை அல்ல.

**திரு. கே. கந்தசாமி :** தலைவரவர்களே, இந்த நோயைக் குணப்படுத்த வைத்திய நிபுணர்கள் அதிகமாகத் தேவைப்படுகிற அளவுக்கு இல்லை என்று கூறுகிறார்கள். வைத்திய நிபுணர்களுக்கு ஊக்கம் அளித்து, அவர்கள் எண்ணிக்கையை அதிகப்படுத்த அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, மருத்துவத் துறையில் உள்ள ஒரு குறைபாடு, தொண்டு மனம் கொண்ட மருத்துவர்கள் பல பேர் முன் வருவது இல்லை. அந்தத் துறையைப் பொறுத்தவரையில் அது ஒரு குறைபாடு. காசநோய் நோயாளிகள் பெரும்பாலும் ஏழைகளாக இருக்கிறார்கள். ஏழைகள் சிகிச்சை செய்துகொள்ள போதிய வசதி இல்லாதவர்களாக இருக்கிறார்கள். இன்றைக்கு ஆராய்ச்சித் துறை வளர்ந்து விட்ட காரணத்தால்,

அறுவை சிகிச்சை மூலமாக இந்தக் காச நோயை முற்றிய நிலையிலும் குணப்படுத்த முடியும் என்று சொல்லப்படுகிறது. அறுவை சிகிச்சை மூலம் உண்மையிலேயே காற்றுப்பையிலே ஏற்படும் நோயை சிகிச்சை செய்யலாம் என்ற கருத்து இருக்கிறது. அதிலே சிறந்தவர்கள் மருத்துவ மனைகள் பலவற்றில் இருக்கிறார்கள். அறுவை சிகிச்சை மூலம் பூர்ண குணம் ஏற்படுத்த முடியும் என்று நம்பப்படுகிறது.

**திருமதி ஜோதி வெங்கடாசலம்:** தலைவர் அவர்களே, வீடுகளிலிருந்து கொண்டு டாமிஸிலரி டிரீட்மெண்ட் கொடுக்கப்படுகிறவர்களுக்கு உணவுக்கு ஒரு தொகை கொடுக்கப்படுகிறது. அது எவ்வளவு என்று அறியலாமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** ஏறத்தாழ 20 காசு அல்லது 25 காசு, அளவுக்கு சிறு உதவித் தொகை தரப்படுகிறது நான்கு நாட்களுக்கு ஒரு தரம் வந்து மருந்துகளைப் பெற்றுக்கொள்வதற்குத் தவறிவிடாமல் இருப்பதற்காக கொடுக்கப்படுகின்ற ஊக்குவிக்கின்ற தொகை ஆகும் இது.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** காச நோயாளிகளுக்கு மருந்து கொடுப்பதோடு சத்துணவு கொடுப்பது அந்த நோய் குணமாவதற்கு அவசியம் என்று கருதப்படுவதால் வீடுகளிலிருந்துகொண்டு சிகிச்சை பெறுகிறவர்களுக்கு, அப்படிப்பட்ட காசநோயாளிகள் பெரும்பாலும் ஏழைகளாக இருப்பதால், அவர்கள் சத்துணவு வாங்கிச் சாப்பிடுவதற்குப் பண உதவி கொடுப்பதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** இதிலே சிறு தொகை உதவி செய்யப்படுகிறது. ஏழைகள், அவர்களால் எந்தவிதத்திலும் சத்துணவுகூட பெற முடியாத நிலையிலிருப்பவர்களில் அதற்காக விண்ணப்பித்துக் கொண்டவர்களுக்கு மாதம் ரூ. 20 அளவுக்கு டி.பி. அசோசியேஷன் உதவி செய்வதற்கு ஒரு முறை இருக்கிறது. அம்முறைப்படி 100, 150 விண்ணப்பதாரர்களுக்கு மாதம்தோறும் ரூ. 20 வழங்கப்படுகிறது. வீடுகளிலிருந்து மருந்துகள் வாங்குவதற்காக வந்து போவதற்கு ஒரு ஊக்கத் தொகை கொடுப்பது என்ற ஒரு பழக்கமும் இருக்கிறது. 20, 25 காசு கொடுப்பது என்ற ஒரு முறை இருக்கிறது என்று நம்புகிறேன். ஒரு முட்டை வாங்கும் அளவுக்கு உதவி இருக்கும் சரியான விவரம் நான் இப்பொழுது தெரிவிக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மூலக் கேள்வியை ஒட்டி துணைக் கேள்வி கேட்கவேண்டும்.

**திரு. எஸ். வடிவேல்:** **காச நோயைத் தடுத்து நிறுத்த ஆங்கில வைத்திய முறை சரியானதா அல்லது சித்த வைத்திய முறை சரியானதா?**



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் இந்தக் கேள்வியை அனுமதிக்கவில்லை.

**டாக்டர் ச. மு. பழனியப்பன்:** தமிழகத்தில் மட்டும் 5 மிலியன் நோயாளிகளுக்கு மேல் இருப்பதாகத் தெரியவருகிறது. டாமிஸிலரி டிரீட்மெண்டு அவ்வளவு வெற்றிகரமாகத் தமிழ்நாட்டில் நடைபெறுவதாகச் சொல்ல முடியாது. காரணம், வீட்டுச் சூழ்நிலைகள் அதற்கேற்றவாறு இல்லை. காச நோயாளிகள் பெரும்பாலும் ஏழை மக்களாக இருக்கிறார்கள். நல்ல காற்றோட்டம் வேண்டும், சத்துள்ள உணவு சாப்பிடவேண்டும். . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்படி ஆரம்பித்தால் ஓரளவோடு நிற்காது துணைக்கேள்விகள். திரு. ஆ. பரந்தாமன்.

**திரு. ஆ. பரந்தாமன்:** சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் சிபார்சு செய்தால்கூட தாம்பரம் மருத்துவமனையில் நோயாளிகளை ஒரு வாரம் வரையில்தான் வைத்துக் கொள்கிறார்கள். அதை 15 நாட்களாக உயர்த்திக் கொடுக்க ஆவன செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் சிபார்சுக்கு அதிக மதிப்பு தேடக்கூடாது என்று முதலில் கேட்டுக்கொள்கிறேன். நோயாளியைப் பொறுத்தும், அங்கே தரப்படுகின்ற சிகிச்சையைப் பொறுத்தும், இருக்கிற இட வசதியைப் பொறுத்தும், யார் சொல்கின்ற நோயாளியாக இருந்தாலும் சரி, பொது நோக்கோடுதான் கருதப்பட வேண்டும். அமைச்சர் சொன்னாலும் ஒரு வாரத்திற்குள் அனுப்பிவிடப்பட்டவர்களும் உண்டு.

**திரு. த. சோலையா:** தாம்பரம் காசநோய் மருத்துவமனையில் நோயாளிகளாக இருப்பவர்களுக்கு தினம் உணவு, பால், முட்டை, மாமிசம் எந்த அளவுக்கு வழங்கப்படுகிறது என்பதை அரசு அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** அறிவிக்க இயலும் தனிக் கேள்வி போட்டால்.

### *Medical College for Kanyakumari district*

* 228 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of Government to open a Medical College in Kanyakumari district; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. என். டென்னிஸ் :** ஒரு அரசுக் கல்லூரியும் இல்லாத மாவட்டம், நாட்டின் தென்கோடியிலே இருக்கிற மாவட்டம், அங்கே ஒரு மருத்துவக் கல்லூரி அமைப்பது என்பது அவசியமாகிறது என்று கருதி, அங்கே ஒரு மருத்துவக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு க. அன்பழகன் :** அரசாங்க மருத்துவக் கல்லூரி ஏற்படுத்தப்படாத மாவட்டத்தில் ஒன்று திருச்சி, சேலம். மற்றொன்று. இராமநாதபுரம் இன்னொரு மாவட்டம். ஆகவே, ஏதோ ஒரு காரணத்திற்காக கன்னியாகுமரி மட்டும் கைவிடப்படவில்லை. இரண்டாவதாக, இன்றைக்கு உள்ள 8 அரசாங்க கல்லூரிகளில் 1,015 பேர் ஆண்டு தோறும் இடம் பெற முடிகிறது. 1,015 பேர் அளவு இடம் பெறுவது கூட சரியில்லை. சில காரணகாரியங்களுக்காக என்று மருத்துவக் குழுவே தெரிவித்திருக்கிறது. இருக்கிற கல்லூரிகளிலேயே திருநெல்வேலி, கோவை, செங்கை கல்லூரிகளில் இன்னும் பல ஏற்பாடுகள் அவற்றின வளர்ச்சிக்குச் செய்யவேண்டியிருக்கிறது. அவற்றை தரமுள்ள கல்லூரிகளாக ஆக்குவதற்கு இன்னும் மூன்று ஆண்டுகள் ஆகும். அதை அப்படி ஆக்கியதற்குப் பிறகுதான் புதிய கல்லூரி பற்றி அரசு சிந்திப்பது நியாயமாகும்.

**திரு. என். கிட்டப்பா :** தமிழகத்தில் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் புதிய ஒரு மருத்துவக் கல்லூரியை துவக்கவேண்டும் என்று மத்திய அரசினை நமது அரசு வலியுறுத்துமா என்பதனை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** ஒரு புதிய கல்லூரி ஏற்படுத்துவது என்று சொன்னால், ஏறத்தாழ 3 கோடி ரூபாய் ஒதுக்குவதற்கு தமிழக அரசோ அல்லது மத்திய அரசோ தயாராக இருக்கவேண்டும். அகில இந்தியாவிலும் மருத்துவப் பட்டம் பெற்றவர்கள் அதிகமாகத் தேவை என்று மத்திய அரசு கருதினால் தொடங்கலாம் தமிழ் நாட்டில் இப்பொழுது ஆண்டுதோறும் சேர்க்கப்படுபவர்களில் 100 பேர்களுக்கு இன்னொரு புதிய கல்லூரியில் பயிற்றுவிப்பது நியாயமாகும். ஒரு கல்லூரியில் 100 மாணவர்கள் அளவுதான் சேர்க்கப்படுவது நியாயம் என்ற கருத்து ஏற்கெனவே இருந்து வருகிறது. அந்த முறையில் ஒரு கல்லூரி புதிதாகத் தோன்றுவது என்றால், மிகப் பெரிய மருத்துவமனையாகவும், ஏராளமான நோயாளிகள் சிகிச்சைக்காக வந்து போகக் கூடிய மருத்துவமனையாகவும் இருந்தால், அந்த இடத்தில் கல்லூரி அமைக்கப்படும், அப்படி அமைப்பதற்கு வாய்ப்பு உள்ள இடம் ஒன்று சேலம்.





மற்றொன்று திருச்சி, அந்த இரண்டு இடங்களில் ஒன்றில் ஏற்படலாமென்றால் போதுமான நிதி வசதியை மத்திய அரசு தந்தால், தமிழக அரசு அதை ஏற்றுக்கொண்டு செய்ய முடியும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** மருத்துவக் கல்லூரியில் முன்னாலே மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைத்தார்கள். அப்படிக் குறைந்த எண்ணிக்கையை நீக்கிவிட்டு, அதிகமான மாணவர்களைச் சேர்ப்பதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** எண்ணிக்கையை குறைத்தோம் என்று மட்டும் சொல்லக்கூடாது. குறைந்த தரத்தை உயர்த்த வழி செய்தோம் என்று தாம் தெரிந்து அம்மையார் அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

**திரு. நா. வீராசாமி :** மத்திய அரசு பணம் கொடுத்தால் மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்கலாம் என்று சொன்னார்கள். ஐந்தாண்டுத் திட்டத்தில் 100 கோடி ரூபாய் கல்லூரிகள் துவக்குவதற்கு ஒதுக்கப்படும், 10 கல்லூரிகள் அகில இந்தியாவிலும் துவக்குவதற்கு மத்திய அரசு முன்வந்திருப்பதாகச் செய்தி வந்திருக்கிறதே ? அதன் தொடர்பாக தமிழக அரசு தமிழகத்தில் ஒரு மருத்துவக் கல்லூரியை நிச்சயம் துவக்குவதற்கு நிதி ஒதுக்கவேண்டும் என்று மத்திய அரசிடம் வற்புறுத்துமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** முழு நிதி உதவி கொடுத்து, அத்தனையை ஒரு கல்லூரியை ஏற்படுத்த மத்திய அரசு முன்வரவேண்டும் என்ற கருத்தை நாம் வலியுறுத்தியிருக்கிறோம். முழு நிதி உதவி கொடுத்தால்தான், அதைப் பெற்று அம்மாதிரி ஒரு கல்லூரியைத் துவக்கி மூன்று ஆண்டுகளுக்குள் ஆல் இந்தியா மெடிகல் கவுன்சில் விதித்துள்ள தரத்தின் அடிப்படையில் படுக்கை வசதிகள் பூராவும், சிகிச்சை வசதிகள் பூராவும் ஏற்படுத்த முடியும். புதிய கல்லூரியை ஆரம்பித்து தரம் குறைந்துவிட்டது என்ற குற்றச்சாட்டிற்கு ஆளாவதை விட, இருக்கிற கல்லூரிகளின் தரத்தை உயர்த்துவதில் அரசு முழு நாட்டம் செலுத்தும்.

சிரணிப் பணிகளுக்கான மானியம்

* 229. வினா—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வாலாஜாபேட்டை ஒன்றியம், ஆர்க்காடு ஒன்றியம், சோளிங்கர் ஒன்றியம், வந்தவாசி ஒன்றியம் இவைகளுக்கு முறையே அரசு 1971-72-ல் அளித்த சிரணி மானியத் தொகை எவ்வளவு ?

(இ) அவை அனைத்தும் செலவு செய்யப்பட்டதா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** (அ) (1) வாலாஜாபேட்டை ஊராட்சி ஒன்றியம் ரூ. 2,900.

(2) ஆற்காடு ஊராட்சி ஒன்றியம் ரூ. 6,057.

(3) சோளிங்கர் ஊராட்சி ஒன்றியம் ரூ. 2,000.

(4) வந்தவாசி ஊராட்சி ஒன்றியம் ரூ. 2,625.

(இ) ஆம். ஒதுக்கப்பட்ட தொகை முழுவதும் செலவு செய்யப்பட்டு விட்டது.

**திரு. கே. ஏ. வகாப்:** இதற்கு ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை மிகவும் குறைந்த அளவுக்கு இருப்பதால் சீரணிப் படை உறுப்பினர்கள் நல்ல காரியங்களைச் செய்ய முடியாத சூழ்நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, இந்தத் தொகையை அதிகப்படுத்தி சீரணிப்படையினர், எடுத்துக்காட்டும் வகையிலே நல்ல பணிகளைச் செய்வதற்கு, அதிகத் தொகை ஒதுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** அரசாங்கத்தினுடைய நிதிநிலை இன்னும் அபிவிருத்தியாகும்பொழுது உறுப்பினர் அவர்களுடைய யோசனையைப் பரிசீலனை செய்யலாம்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** சீரணிப் படையினருக்கு ஒதுக்குகிற பணம் எந்த முறையில் செலவு செய்யப்படுகிறது என்பதனை சூபர்வைஸ் செய்வதற்கு அரசாங்கம் என்ன ஏற்பாடு செய்திருக்கிறது என்பதனை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** மாவட்ட ஆட்சித் தலைவர்களும், அது போலவே மாவட்டத்தினுடைய தலைவர்களும் அந்தப் பணியை சரிபார்க்கின்றனர். ஏதாவது குறை இருந்தால் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் சரி செய்யப்படுகிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** சீரணிப் படையில் சேருவதற்கு என்னென்ன தகுதி தேவை? படிப்பு எவ்வளவு, வயது எவ்வளவு என்று ஏதாவது விதிகள் உண்டா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மூலக்கேள்விக்கும், இதற்கும் சம்பந்தம் இல்லை.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** சீரணிப் பணிகளுக்கு மான்யத்தொகை அளிப்பதற்கு எந்த அடிப்படை கையாளப்படுகிறது என்பதனை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?





**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** பெரும்பாலும் உழைப்பைத் தானமாகக் கொடுக்கவேண்டும் என்ற அடிப்படையில் சீரணிப்படை அமைக்கப்பட்டிருக்கிறது. அதற்கேற்ற வகையில் பின்தங்கிய சில இடங்களுக்கு அதிக மான்யமும், மற்ற இடங்களுக்கு சற்று குறைவாகவும் தரப்படும்.

(டாக்டர் ச. மு. பழனியப்பன் கையை உயர்த்தினார்.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் ச. மு. பழனியப்பன். வாலாஜாபாத்தைப்பற்றி என்ன கேட்கப்போகிறீர்கள்?

**டாக்டர் ச. மு. பழனியப்பன்:** சீரணி மானியமாக ஒதுக்கப்படும் தொகையை சில சமயங்களில் சம்பந்தப்பட்ட ஒன்றியத்தால் செலவு செய்ய முடியாமல், அதை அடுத்த ஒன்றியத்திற்கு மாற்றிவிடுகிறார்கள். ஒதுக்கப்பட்ட மானியத்தை அப்படி மாற்றிக்கொடுக்காமல், அந்த ஒன்றியமே முழுவதையும் செலவு செய்யவேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** அதைப்பற்றி தக்க ஆதாரத்துடன் உறுப்பினர் அவர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் அதுபற்றி பரிசீலனை செய்யப்படும்.

**திரு. கே. என். குமாரசாமி:** சீரணியினர் உழைப்பு தானம் செய்கின்றனர் என்பது உண்மை. இருந்தாலும் அவர்களுக்கு உழைகின்றபோது சாப்பாடு, டிபன் போன்றவைகளுக்கு, கூலியாகக் கொடுக்கப்படும் சிறு தொகை போதாமல் இருக்கின்றது. எனவே, கூலியை உயர்த்திக்கொடுக்கும் உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கூலி, சாப்பாடு, டிபன் என்று கேட்டால் அமைச்சரவர்கள் எப்படிப் பதில் சொல்ல முடியும்? மூலக் கேள்வியோடு தொடர்புள்ள கேள்விகளைக் கேட்கவேண்டும். இந்தக் கேள்வி மூலக் கேள்விக்கு சம்பந்தப்பட்டதல்ல. ஆகவே, பதில் இல்லை.

### பெரம்பலூரிலுள்ள அரிசன மாணவர் விடுதி

* 230. வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், பெரம்பலூரிலுள்ள தாழ்த்தப்பட்டோர் நலத்துறை விடுதியில் புதிதாக மாணவர்களைச் சேர்க்கும்போது ஒவ்வொரு மாணவரிடமும் முன் பணம் வசூலிக்கப்படுவது உண்மையா?

[1973 மார்ச் 3

(இ) ஆம் எனில், இதுவரை எவ்வளவு ரூபாய் வசூலிக்கப்பட்டது ?

(உ) 1972 ஏப்ரல் மாதம் இதுபற்றி விசாரணை ஏதேனும் நடைபெற்றதா ?

(எ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு டாக்டர் திருமதி சத்தியவாணிமுத்து :** (அ) இல்லை.

(இ), (உ), (எ) இவ்வினாக்களுக்கு இடமில்லை.

### சிக்கல்—பாலக்குறிச்சி சாலை

* 231. வினா—திரு. அ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிக்கல்-பாலக்குறிச்சி சாலையை நெடுஞ்சாலை துறையின் பராமரிப்பில் எடுத்துக்கொள்ளும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இச்சாலை பராமரிப்பை 1972–73-ம் ஆண்டு முதல் நெடுஞ்சாலைத்துறை மேற்கொள்ளுமாறு அரசு ஆணையிட்டுள்ளது.

**திரு. அ. இராசமாணிக்கம் :** தலைவரவர்களே, இந்தச் சாலையில் அதிகமாகப் பழுது இருப்பதால் பஸ் போக்குவரத்திற்கு அடிக்கடி தடை ஏற்படுகிறது. ஆகவே, அதிக நிதி ஒதுக்கி, உடனடியாக சாலை செப்பனிடப்படுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இந்தச் சாலை ஏற்கெனவே அரசுத் துறையால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. மேற்கொண்டு சாலை பராமரிப்பைச் செய்யவும், துரித நடவடிக்கை எடுக்கவும் தலைமைப் பொறியாளர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்.

### விளவன்கோடு பகுதியில் கடல் அரிப்பு

* 232. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டம், விளவன்கோட்டில் கடல் அரிப்பைத் தடுப்பதற்கான புதிய திட்டம் ஏதேனும் மாவட்ட ஆட்சியாளரால் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் யாவை ?



1973 மார்ச் 3]

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) இல்லை.

(இ) ஆயினும் தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்டத்தின் அரபிக்கடலோரப்பகுதிகளில் கடல் அரிப்பைத் தடுப்பதற்காக ரூ. 351 லட்சம் செலவில் நிரந்தரமான அரண் ஒன்று கட்டுவதற்கான மதிப்பீடு தலைமைப் பொறியாளரிடமிருந்து வரப்பெற்று, அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. என். கிட்டப்பா :** தலைவரவர்களே, நமது அமைச்சரவர்கள் குறிப்பிட்ட இந்தப் பணி இப்போது எந்த நிலையில் இருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இந்தத் திட்டம் தலைமைப் பொறியாளரால் பரிசீலிக்கப்பட்டு, அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதை நிறைவேற்றுவதற்காக மத்திய அரசாங்கத்தின் உதவியை நாடியிருக்கிறோம். மத்திய அரசாங்கத்திடமிருந்து அனுமதி கிடைத்தவுடன் வேலை தொடங்கப்படும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, பல கடலோரப் பகுதிகள் வெகுவாக இந்தக் கடலரிப்பினால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, உடனடியாக மத்திய அரசாங்கத்திடம் வற்புறுத்தி, அவர்களின் அனுமதியைப் பெற்று, துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** நீர்ப்பாசனத் துறை அமைச்சர்கள் மகாநாடு நடைபெற்றபோது, மத்திய நீர்ப்பாசன அமைச்சர் கே. எல். ராவ் அவர்கள் தெரிவித்த கருத்தின் அடிப்படையில், நம்முடைய தலைமைப் பொறியாளர் இந்தத் திட்டத்தைத் தயாரித்திருக்கிறார். அதற்கு ஆகும் செலவு 3½ கோடி ரூபாய். பணத்திற்காக மத்திய அரசின் உதவியை நாடியிருக்கிறோம். அவர்கள் அனுமதி அளித்தவுடன் பணி தொடங்கப்படும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தலைமைப் பொறியாளரிடம் இருந்து பரிந்துரை எப்போது வந்தது? அரசாங்கம் அதைப்பற்றிப் பரிசீலித்திருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இப்போதுதான் ஒரு மாதத்திற்கு முன்பு வந்தது. மாண்புமிகு முதலமைச்சரவர்களின் கையெழுத்திற்காக பைல் பெண்டிங்கில் இருக்கிறது.

**திரு. எம். சுரேந்திரன் :** சார், நமது மாநிலத்திலே எந்தெந்தப் பகுதிகளில் கடலரிப்பு இருக்கிறது ? அதைத் தடுப்பதற்குரிய திட்டத்தை நிறைவேற்ற எவ்வளவு செலவாகும் ? அதற்கு என்னென்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஏற்கெனவே இதைப்பற்றி சொல்லிவிட்டேன். டெக்னிக்கல் டீட்டேய்ல்ஸ் பற்றி எனக்குத் தெரியாது. இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு 3½ கோடி ரூபாய் ஆகும் என்று தலைமைப் பொறியாளர் தெரிவித்திருக்கிறார். அது எந்தெந்தப் பகுதிகளுக்கு என்று சரியாகத் தெரியவில்லை. அந்தத் திட்டத்தை மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறோம். குறிப்பாக அரபிக் கடலோரத்தில், விளவங்கோடு தாலுகாவில் ஆத்தூர், பூத்துறை, தேங்காப்பட்டினம், புத்தன்துறை, ராமன் துறை, எனயம், மிடாலம், குறும்பனை ஆகிய கிராமங்கள் இந்தத் திட்டத்தினால் பயன் பெறும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, இந்தப் பகுதியில் ஏற்கெனவே கட்டப்பட்ட சுவர் இடிந்து விழுந்து விட்டது. ஆகவே, மேற்கொண்டு சுவர் கட்டுவதற்குப் பதிலாக, கேரளக் கடற்கரையில் கட்டப்பட்டிருப்பது போன்று பெரிய பெரிய பாராங்கற்களை அடுக்கி, கடலரிப்பைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தப் பகுதியிலும் பெரிய பெரிய பாராங்கற்களை அடுக்கிக் கட்டுவதற்காகத்தான் தலைமைப் பொறியாளர் திட்டம் தயாரித்திருக்கிறார் என்று கருதுகிறேன்.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, இந்த கடலரிப்புப் பற்றி துரிதமான நடவடிக்கை எடுக்காமல் இருந்தால் சில கிராமங்களை கடலரிப்புக்குப் பலியாகிவிடும். ஆகையால் துரித நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கனம் உறுப்பினர் அவர்கள் கேள்வி துரித நடவடிக்கைக்குத் தூண்டுதலாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. கந்தசாமி : தலைவரவர்களே, திருச்செந்தூர் கோவிலின் ஒரு பகுதி கடல் அரிப்பால் அழியும் நிலையில் இருக்கிறது. அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : திருச்செந்தூர் கோவிலைப் பற்றி எனக்குத் தெரியாது.

திரு. எஸ். வடிவேல் : சார், சீர்காழி தாலுக்காவில் திருமுல்லைவாசலில் ஒவ்வொரு ஆண்டும் கடல் கொந்தளிப்பின் காரணமாக, அந்தப் பகுதியில் இருக்கின்ற முஸ்லீம் சமுதாயத்தினர் பெரும் துன்பத்திற்கு ஆளாகிறார்கள்.



அமைச்சரவர்கள் அங்கே வந்திருந்தபோது அதுபற்றி ஒரு மகஜர்கூட கொடுத்தார்கள். அது பற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதுபற்றி ஒரு திட்டத்தைத் தயாரிக்கும்படி தலைமைப் பொறியாளர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்.

(திரு. காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி எழுந்தார்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மூலக்கேள்வி கன்னியாகுமரி மாவட்டத்தில் கடலரிப்பைத் தடுப்பது பற்றி, அதுசம்பந்தப்பட்ட கேள்வியைக் கேளுங்கள்.

திரு. காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி : தலைவரவர்களே, இராமேஸ்வரம்-தனுஷ்கோடி கடலரிப்பைத் தடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளாதா ? அது எந்த நிலையில் இருக்கிறது ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நமது கடல்பகுதி ரொம்ப நீளம். அதனால் கடலைப்பற்றிக் கேட்டுக்கொண்டே போகலாம். இது மூலக்கேள்விக்கு சம்பந்தப்பட்ட கேள்வி அல்ல.

### செய்யாறுக்குத் தனி கூட்டுறவு துணைப்பதிவாளர்

* 233. வினா—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வட ஆர்க்காடு மாவட்டம், செய்யார் கோட்டத்திற்கு ஒரு தனி கூட்டுறவு துணைப்பதிவாளர் நியமிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : ஒரு கூட்டுறவு துணைப்பதிவாளர் வட்டம் செய்யாறுக்கு ஏற்கனவே அமைக்கப்பெற்றுள்ளது.

திரு. கே. ஏ. வகாப் : செய்யாற்றுக்கு புதிதாக ஒரு துணைப்பதிவாளர் நியமிக்கப்படுகின்ற அதேநேரத்தில் இராணிப்பேட்டையில் இருக்கும் கூட்டுறவுத் துணைப்பதிவாளரை மாற்றப்போவதாகச் சொல்லப்படுகிறது. அப்படி மாற்றாமல், இராணிப்பேட்டையில் துணைப்பதிவாளர் இருக்கும்படி ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : ஏற்கெனவே இராணிப்பேட்டையில் இருந்த துணைப்பதிவாளர் பதவி அப்படியே இருக்கிறது.

[1973 மார்ச் 3

## சிறப்புச் சிற்றங்காடிகள்

* 234. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழக முக்கிய கிராமங்களில் சிறிய அளவில் கூட்டுறவுத் துறையில் சூப்பர் மார்க்கெட்டுகளைத் துவக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : 1972-73-ல் 10 சிறப்புச் சிற்றங்காடிகள் துவக்க ரூ. 4.50 லட்சம் நிதியுதவி அளிக்க செயற்குறிப்பு உள்ளது.

1972-73-ல் 10 சிறப்புச் சிற்றங்காடிகள் மினி சூப்பர் மார்க்கெட்டுகள்—துவக்கப்படுவதோடு நான்காவது ஐந்தாண்டுத்திட்டத்தின் இறுதியில் மொத்தம் 100 சிறப்புச் சிற்றங்காடிகள் செயல்பட உள்ளன.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, பொதுவாக இந்த சிறப்புச் சிற்றங்காடிகளில் விற்கப்படும் பண்டங்கள் நல்ல தரமானவைகளாகவும், குறைந்த விலையிலும் இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, இந்த மினி சூப்பர் மார்க்கெட்டுகளை எல்லாக் கிராமப்புறங்களிலும் திறப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : எல்லாக் கிராமங்களிலும் சிறப்புச் சிற்றங்காடிகளைத் திறக்கும் திட்டம் இப்போது இல்லை. ஆனால் இன்றைக்கு நாள் ஒன்றுக்கு 2,000 ரூபாய்க்கு அதிகமாக விற்பனையாகக்கூடிய இடங்களில் சிறப்புச் சிற்றங்காடிகளைத் திறக்கும் திட்டம் இருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி : இப்போது நாளுக்கு நாள் அத்தியாவசியமான பொருள்களின் விலை திடீர் திடீர் என்று உயர்ந்துகொண்டிருக்கிறது. இந்த நேரத்தில் இப்படித் திறக்கப்பட்டிருக்கும் கூட்டுறவு சிறப்புச் சிற்றங்காடிகளில் ஒன்றிரண்டைத் தவிர மற்றவை எல்லாம் நஷ்டத்தில் செயல்படுவதாகத் தெரிகிறது. ஆகவே, இந்த நஷ்டம் ஏற்படுவதற்கு காரணம் என்ன என்பதை அமைச்சரவர்கள் ஆராய்ந்து சீர் செய்ய என்ன திட்டம் வைத்திருக்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. சி. பா ஆதித்தனார் : தலைவரவர்களே, இந்த மினி சூப்பர் மார்க்கெட்டுகளில்—எனக்குக் கிடைத்திருக்கிற தகவல் படி, 29 சிற்றங்காடிகளில் 28 லாபத்தில் இயங்கி வருகின்றன. ஒன்று மட்டும் நஷ்டத்தில் இயங்குகிறது. அதைக்கூட சரிசெய்து கொண்டுவருகிறார்கள்.



1973 மார்ச் 3]

திரு. ஜே. ஜேம்ஸ் : அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் 100 சிறப்புச் சிற்றங்காடிகள் இருக்கும் என்று சொன்னார்கள். அதில் இதுவரை எத்தனை திறக்கப்பட்டிருக்கின்றன ? இன்னும் ஓராண்டு காலத்தில் எத்தனை திறக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இதுவரை 45 அல்லது 46 சிறப்புச் சிற்றங்காடிகள் திறக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இந்த ஆண்டு முடிவில் 52 அல்லது 53 சிற்றங்காடிகள் திறக்கப்படும். இன்னும் கடைசி ஆண்டில் 40, 50 திறப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. நான் ஏற்கெனவே சொன்னதுபோல நாள் ஒன்றுக்கு 2,000 ரூபாய்க்கு மேல் விற்பனையாகக்கூடிய எல்லா இடங்களிலும் சிறப்புச் சிற்றங்காடிகள் திறக்கத் திட்டம் இருக்கிறது. அதற்குத் தாராளமாக பணவசதியும் இருக்கிறது.

திரு. சி. ஆறுமுகம் : சிறப்பங்காடிகள் மாவட்டங்கள்தோறும் எத்தனை என்று அறிவிப்பார்களா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : மாவட்டவாரியாக இப்போது என்னிடம் கணக்கு இல்லை. எல்லா மாவட்டங்களிலும் இருக்கிறது என்று நான் கருதுகிறேன்.

திரு. எ. க. துரைசாமி : இத்தகைய சிறப்பு அங்காடிகளை எல்லா தாலுக்கா தலைநகரத்திலும் உடனடியாக ஏற்படுத்த முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : வட்ட தலைநகரங்களில் அமைப்பது என்பதுதான் இப்போது திட்டமாக இருக்கிறது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மினி சூப்பர் மார்க்கெட்டுக்கு எவ்வளவு முதலீடு செய்யப்படுகிறது, நிர்வாக அமைப்பு எப்படி ஏற்படுத்தியிருக்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : சிறப்பு மூலதனமாக 30 ஆயிரமும், கடன் உதவியாக 15 ஆயிரமும், ஆக 45 ஆயிரம் அளிக்கிறோம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : சிறப்பங்காடிகளை முனிசிபல் நகரங்களில் திறப்பதற்கு முதலிடம் கொடுக்கப்படுமா ? 50 ஆயிரத்திற்குமேல் மக்கள் தொகை உள்ள இடங்களில் கவனம் செலுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : முனிசிபல் நகரங்களில் பேரங்காடிகளைத் திறக்கவே வாய்ப்பிருக்கிறது. வட்டத் தலைநகரங்களில்தான் சிற்றங்காடிகள் திறப்பது என்கிற திட்டம் இருக்கிறது.

[1973 மார்ச் 3

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** நன்றாக நடக்கிற பேரங்காடிகளில் இருந்துதான் இப்போதே வாங்கிக்கொண்டிருக்கிறார்கள்.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவர் அவர்களே, நாள் ஒன்றுக்கு ரூ. 2,000 விற்கக் கூடிய கூட்டுறவு பண்டகச் சாலைகள் இல்லாததால், இப்பொழுது அவர்கள் கையில் வைத்திருக்கிற 50 சிறப்பங்காடிகளை அமைக்க முடியவில்லை யென்று சொன்னார்கள். இப்பொழுது கூட்டுறவு பண்டகச் சாலைகள் எல்லா நகரங்களிலும் இருக்கின்றன. இவை சரியான முறையிலே செயல்பட போதிய நிதி வசதியோ, அரசாங்க உதவியோ இல்லாததால் நாளுக்கு நாள் விற்பனை குறைந்து விட்டது. ஆகவே, கூட்டுறவுதான் சரியான முறை என்று அனை வரும் ஒப்புக்கொள்ளக் கூடிய நேரத்தில், மேஜர் பஞ்சாயத்து நகரங்களிலே யிருக்கிற அத்தனை கூட்டுறவு பண்டகச் சாலைகளையாவது சரியான முறையில் நடத்த அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** இந்தப் பண்டகச் சாலைகளுக்கு அரசு எவ்வளவு உதவி செய்ய வேண்டுமோ, அந்த அளவு உதவி செய்கிறது. உறுப்பினர்களுக்குத் தெரியும், இந்த ஆண்டு பட்ஜெட்டில் ரூ. 5 லட்சம் அதற் கென்று ஒதுக்கியிருக்கிறோம், அதாவது பண்டகச் சாலைகளுக்கென்று சிற்றங் காடிகள் என்று மாற்றமுடியவில்லையென்றாலும், பிரைமரி ஸ்டோர்களாக நடத்திக்கொண்டு வருகிறார்கள். அவர்களே சிற்றங்காடிகள் நடத்த முன் வந்தால், அதற்கும் உதவி செய்கிறோம்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** தலைவர் அவர்களே, இந்த சிறப்பங்காடிகள் பொது மார்க்கெட்டில் பொருள்களின் விலைகளை நிர்ணயிப்பதில் எந்த அளவுக்கு வெற்றி அடைந்திருக்கிறது ? அதனால் பொருளாதார சீர் கேடுகளைப் போக்கு வதற்கு இந்த சிறப்பங்காடிகள் எந்த வகையில் உதவி புரிகின்றன ? அவர்கள் விற்பதற்காக வாங்கும் பொருள்களை யாரிடத்திலிருந்து கொள்முதல் செய் கிறார்கள் ? நேரடியாக உற்பத்தி செய்கிறவர்களிடத்திலிருந்து கொள்முதல் செய்கிறார்களா ? அல்லது ஏஜெண்டுகள் மூலம் கொள்முதல் செய்கிறார்களா ? ஏஜெண்டுகள் மூலம் கொள்முதல் செய்தால், அதை விட்டுவிட்டு நேரடியாக உற்பத்தி செய்கிறவர்களிடமிருந்தே கொள்முதல் செய்ய முயற்சி எடுத்துக் கொள்ளப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** பொருட்களின் விலைகளைக் குறைப் பது என்பது மட்டுமே இந்தக் கூட்டுறவுத் துறையின் நோக்கமோ, சிற்றங்காடி களின் நோக்கமோ, பேரங்காடிகளின் நோக்கமோ அல்ல. விலைகளைக் குறைப் பது என்பது மாநில அரசின் கையிலும் இல்லை. விலை என்பது உங்களுக்கு



1973 மார்ச் 3]

நன்றாகத் தெரியும். ' Price is equal to money divided by total production ' என்று சொல்லியிருக்கிறார்கள். இவ்வளவு தூரம் இந்த விலையை நாம் குறைப்பதற்கு இல்லையென்றாலும், யாராவது தனியார் எந்த நேரமும் தட்டுப்பாடு என்று கூறி, பொருட்களின் விலையை அதிகரிப்பதைத் தடுப்பதற்கு இந்த கூட்டுறவு அங்காடிகள் பயன்படுகின்றன.

*(திரு. எம். முத்தையா பேரவைத் துணைத் தலைவரைப் பார்த்துக் கையை நீட்டிக் குறுக்கிடு.)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவைத் துணைத் தலைவரைப் பார்த்து அப்படிக் கையை நீட்டிப் பேசக் கூடாது. திரு. முத்தையா அவர்கள் அதைத் தெரிந்துகொள்ளவேண்டும். 25 துணைக் கேள்விகளாகிவிட்டன. (திரு. எம். முத்தையா நின்றுகொண்டிருந்தார்.) நீங்கள் உட்காருங்கள். தனியாக என்னுடைய அறையில் பேசவேண்டும். இது முறையல்ல, பேரவை யில் அப்படி நடந்து கொள்வது முறையல்ல. தயவுசெய்து உறுப்பினர் அதைத் தெரிந்துகொள்ளவேண்டும்.

### வேலூர்—மேல்விஷாரம் வழித்தடம்.

* 235. **வினா—திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆர்க்காடு மாவட்டம், வேலூரில் இருந்து மேல்விஷாரம் ஹக்கீம் கல்லூரி வரை புதிய டவுன் பஸ் ரூட் ஒன்றுக்கு அனுமதி வழங்கப் பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், யாருக்கு அது வழங்கப்பட்டது ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) ஆம்.

(இ) வேலூரைச் சேர்ந்த திரு. எம். வேணுகோபால் முதலியாருக்கு மேற்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந் தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

**தமிழ்நாட்டுக்கு ஒதுக்கிய நூலைத் தமிழ்நாடு எடுத்துக் கொள்ளாததால் நெசவாளர்களுக்கு அல்லல் ஏற்பட்டிருக்கிறது எனப் பாராளுமன்றத்தில் கூறப்பட்டது குறித்து.**

**திரு. ஜே. ஜேம்ஸ் :** At this zero hour I would like to bring to the notice of the Deputy Speaker an important matter தலைவர் அவர்களே, நேற்றையதினம் பாராளுமன்றத்தில் அமைச்சர் அவர்கள் நமது தமிழ்நாட்டு அரசுக்கு ஒதுக்கிய நூலை தமிழ்நாடு அரசு எடுத்துக் கொள்ளவில்லை, அதனால் தமிழ்நாட்டில் நெசவுத் தொழிலாளர்களுக்குக் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று கூறி இருக்கிறார்கள். அது சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கம் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** ஒத்தி வைப்பு தீர்மானம் ஏற்கனவே இருக்கிறது. அதை எடுத்துக் கொண்டால் எல்லா தலைவர்களும் பேசுவதற்கு வாய்ப்பிருக்கும். பிறகு விளக்கம் கொடுக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இன்று கவன ஈர்ப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்ளுகிறேன். அதை இன்று எடுத்துக்கொண்டு ஒத்தி வைப்புத் தீர்மானத்தை நாளைக்கு எடுத்துக் கொள்கிறேன். திரு. ஜெயராமன் தன் பெயரில் இருக்கும் தீர்மானத்தைப் படிப்பார்.

(திரு. ஏ. சுப்பிரமணியம் எழுந்து நின்றார்.)

அது முடியட்டும். பிறகு பேசுங்கள். (திரு. ஏ. சுப்பிரமணியம் நின்று கொண்டே இருந்தார்) போலிஸ் அரெஸ்ட் விவகாரம் இருக்கிறது. அதனுடைய தகவல் இல்லாததால் அதை நாளைக்கு எடுத்துக்கொள்கிறேன்.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** நான் சொல்வதைக் கேட்டுவிட்டு பிறகு சொல்லுங்கள். மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள், ஒத்தி வைப்பு தீர்மானம் ஏற்கனவே இருக்கிறது என்று கூறினார்கள். தாங்கள் ரூல் 41-லே கொடுத்திருக்கிறதை முதலிலே முடித்துவிட்டு, பிறகு, நாளைக்கு ஒத்திவைப்பு தீர்மானத்தை எடுத்துக்கொள்ளலாம் என்று சொன்னீர்கள். ஆனால் ரூல் 41-லே கொடுத்ததை முதலிலே எடுத்துக்கொள்வதை விட, அதற்கு முன்னாலே இதை எடுத்துக் கொண்டால், நாங்கள் பேசுவதற்கு சுலபமாக இருக்கும். அமைச்சர் அவர்கள் பதில் சொல்வதற்குச் சுலபமாக இருக்கும்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** எனக்கு என்ன கஷ்டம்? எதனை வேண்டுமென்றாலும் நான் எடுத்துக்கொள்ளுகிறேன். முதலில் 42-வது விதியின் கீழ் திரு. சுரேந்திரன், திரு. அழகர்சாமி, திரு. பொன்னப்ப நாடார், திரு. ஜேம்ஸ் ஆகிய மாண்புமிகு உறுப்பினர்கள் ஒரு ஒத்திவைப்பு தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். தீர்மானத்திற்குத் தேவையான ஒரு தகவல் வந்திருக்காது என்ற காரணத்தால் நாளை எடுத்துக்கொள்ளலாம் என்று இருந்தேன். ஆனால் அது வந்திருப்பது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன்.

## 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### நூல் பற்றாக்குறையினால் நெசவாளர்களுக்கு ஏற்பட்டுள்ள அல்லல் குறித்து.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சேலத்தில் நடைபெறும் நெசவுத் தொழிலாளர்களின் போராட்டம் காரணமாக நூற்றுக்கணக்கானவர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாகவும், நகரம் முழுவதும் பூர்ணமாக அர்த்தால் நடந்திருப்பதாகவும் தகவல்கள் வந்திருக்கின்றன. நூல் பற்றாக் குறையும் விலை ஏற்றமும் காரணமாக நெசவாளர்களின் குடும்பங்கள் பட்டினியாக்கப்படுவதை எதிர்த்து மேற்படி போராட்டம் தொடங்கி இருக்கிறார்கள் என்றும் இது தொடர்ந்து நடைபெறுமென்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இது சேலம் நகரத்திலும் மாவட்டத்தின் இதர பகுதிகளிலும் மக்களிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது. ஆகவே, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பிரச்சினையை விவாதிக்க சபையின் இதர நடவடிக்கைகளை ஒத்திவைக்குமாறு கோருகிறேன் என்று திரு. சுரேந்திரன் அவர்கள் கொடுத்துள்ளார். அனேகமாக, மற்ற மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்திருப்பதும் இதேதான். இதைப் பற்றி ஒவ்வொருவரும் சுருக்கமாக இது எப்படி சபை நடவடிக்கைகளை ஒத்திவைத்து விவாதிக்கக்கூடிய அளவுக்கு 42-வது விதியின்கீழ் வரும் என்று விளக்கம் அளிக்கவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எம். சுரேந்திரன் :** உதவி சபாநாயகர் அவர்களே, இப்பொழுது சேலம் நகரத்திலே ஏற்பட்டிருக்கிற மறியல், உண்ணாவிரதம், [illegible] அர்த்தால் போன்ற நிகழ்ச்சிகள் எல்லாம் ஏதோ திடீரென்று ஏற்பட்டு விட்டவையல்ல. நீண்ட நாட்களாக இருந்து கொண்டிருக்கிற நிலைமைகளின் வெளிப்படையான தோற்றம்தான் அவை. நெசவுத் தொழிலாளர்களுக்கு நூல் சரியாகக் கிடைக்கவில்லையென்ற புகாரையும், அது சம்பந்தமான நடவடிக்கைகளும் தொடர்ந்து இருந்து கொண்டே வந்து, இது குறித்து

தொழில் அமைச்சர் அவர்களிடத்திலே பல நேரங்களிலே பேசி, அதற்கும் சரியான பரிகாரம் காணுததால் இம்மாதிரியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நெசவுத் தொழிலாளர்கள் தங்களுடைய தொழிலை மட்டும் நம்பிக்கொண்டு வேறு எவ்விதமான ஆதாரமும் இல்லாத நிலையிலே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அரசாங்கம்தான் நூல் விலை ஏற்றத்தை நிறுத்தி, அவர்களைப் பாது காக்கவேண்டிய நிலையிலே அவர்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள். அங்கே நூல் விலை ஏற்றம் ஏற்பட்டாலும், பற்றுக்குறை ஏற்பட்டாலும், நெய்த துணி விலை அதிகமாக ஏறிவிட்டாலும் அவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். தறியிலே நெய்கின்ற துணிகள் தேங்கினாலும் அந்த நேரத்திலேயும் அவர்கள் பாதிக்கப் படுகிறார்கள்.

இப்படியெல்லாம் பாதிக்கப்படுவதைத் தடுப்பதற்கு திரு. சந்தானம் என்பவரின் தலைமையில் ஒரு கமிட்டி நிறுவப்பட்டு அது ஆராய்ந்து அதன்மூலம் பரிகாரம் தரப்படும் என்று அரசு சொல்லியது. இருந்தாலும் முறையான பரிகாரம் தரப்படவில்லை, சரியாக நடைபெறவில்லை. நூல் விநியோகிக்கப்படவில்லை, என்பதுதான் அவர்களுடைய பிரச்சினையாகும். ஆகவே, உடனடியாக சம்பந்தப்பட்டவர்களை அழைத்துப் பேசி கார்டு முறையிலே, நூல் சரியாக விநியோகிக்கப்படுவதற்கு உத்தரவாதம் அளித்து அவர்களைப் பாதுகாப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் இப்படி செய்வதன்மூலம்தான் அந்தப் போராட்டங்கள் எல்லாம் நிறுத்தப்படுமே தவிர, அப்படியெல்லாம் செய்யாவிட்டால், அது மாநிலம் பூராவும் பரவும் என்றும் கூறி, அதனால் அதைப்பற்றி விவாதிக்க இந்த சபை நடவடிக்கைகளை ஒத்தி வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, இன்று நம்முடைய மாநிலத்தில் ஏறக்குறைய 30 லட்சம் மக்கள் இந்தக் கைத்தறித் தொழிலிலே ஈடுபட்டிருக்கிறார்கள். பெரும்பான்மையாக இந்தக் கைத்தறியிலே ஈடு பட்டிருக்கிற மக்கள் கடந்த காலத்திலே நியாயமாக, குறித்த காலத்தில் நூலைப் பெற்ற காலத்தில்கூட, அவர்களுக்கு நியாயமான விலையில் நூல் கிடைக்காமல், கட்டுபடியாகாத விலைக்குக் குறைந்த விலையில் துணிகளை விற்றால் பட்டினி, அரைப் பட்டினியாக இருந்து வந்தார்கள் என்பது நமக்குத் தெரியும். ஆனால் சமீபத்தில் நூலின் விலை ஒரு மடங்கு, இரண்டு மடங்கு ஏறியிருக்கிறது. 40-ம் நெம்பர் நூல் ரூ. 50 லிருந்து ரூ. 80, ரூ. 90 வரை உயர்ந்திருக்கிறது. வேறு நூல்கள், ரூ. 100 லிருந்து ரூ. 200 வரை உயர்ந்திருக்





காரணத்தால், அவர்கள் நூல் வாங்கமுடியாத நிலையில் நெசவுத் தொழிலைச் செய்யமுடியாத காரணத்தால், இன்று அவர்கள் கிளர்ச்சியிலே ஈடுபட வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

இன்று குறிப்பாக நம்முடைய தமிழகத்திலே அரசாங்கம் எடுத்துக் கொண்ட மில்கள் மூலமாகவும் கூட்டுறவு நூற்பாலைகள் மூலமாகவும் ஏறக்குறைய மாதம் 8,000 பேல்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. நமக்கு கைத்தறிக்குத் தேவையான அளவோ 16 ஆயிரம் பேல்கள் ஆகும். எனவே கூட்டுறவுத் துறையின் மூலமாகவும் அரசு எடுத்துக்கொண்ட நூற்பாலைகளின் மூலமாகவும் உற்பத்தி செய்கின்ற நூலையாவது கைத்தறியாளர்களுக்கு நியாயமான விலைக்குக் கொடுத்திருந்தால்கூட இப்படிப்பட்ட கொந்தளிப்பான நிலைமைகள் ஏற்படாமல் தடுத்திருக்கமுடியும். ஆனால் இன்றைக்கு ஆலை முதலாளிகள் கொடுக்கக்கூடிய நூலின் விலை ஒன்றிற்கு இரண்டு மடங்கு விலைவைத்துக் கொடுக்கப்படுகிறது. அது மட்டுமல்ல, சர்க்கார் எடுத்துக் கொண்ட மில்களிலிருந்தும், கூட்டுறவு நூற்பாலைகளிலிருந்தும் கொடுக்கப்படுகின்ற நூல்கூட அவர்களுக்கு நியாயமான விலைக்குக் கிடைக்கவில்லை. இந்த நிலையில் அரசாங்கம் எடுத்திருக்கின்ற மில்களிலேயும் கூட்டுறவுத் துறையிலேயும் உற்பத்தியாகின்ற நூலை அவர்களுக்கு நியாயமான விலைக்குக் கிடைக்கச் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும்.

தனியார் துறையிலிருந்தும் போதுமான அளவிற்கு நியாயமான விலைக்குப் பெற்றுத் தருவதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்கவேண்டும். மத்திய அரசாங்கம்கூட நூல் விலையைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப் போவதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று தெரியவில்லை. முன்பொரு தடவை கைத்தறியாளர்கள் எல்லாம் வாழ்வதற்கு வழியில்லை என்ற நிலையில் அவர்கள் பிச்சையெடுக்க வேண்டிய நிலைக்குப் போகக்கொண்டிருந்தார்களே, அப்படிப்பட்ட நிலைமைதான் இன்றைக்கும் தோன்றியிருக்கிறது. இந்த அரசாங்கம் பல நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம் என்று சொன்னாலும்கூட இப்பொழுது மிகப் பெரிய நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. அந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கின்றவர்கள் பசியாலே வாடிக்கொண்டிருக்கின்றார்கள் என்ற அவசரமான முக்கியமான விஷயத்தைப் பற்றி விவாதிப்பதற்கு இந்த அவையை ஒத்திவைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ஆர். பொன்னப் நாடார்] [1973 மார்ச் 3

ளர்ச்சிப் பாதையிலே சென்றுகொண்டிருக்கிறார்கள், என்ற துரதிருஷ்டமான நிலைமை எழுந்துள்ளது.

இந்தப் பிரச்னை எப்படி எழுந்தது என்ற முழு விவாதத்திற்குள் நான் போக விரும்பவில்லை. பஞ்சு விலை குறைந்திருக்கிறது, ஆனால் நூல் விலை அதிகமாகியிருக்கிறது என்ற நிலைமையை நாம் பார்க்கிறோம். இப்படிப்பட்ட நிலைமைகளுக்கு யார் பொறுப்பு என்று சொல்ல நான் முற்படவில்லை. நம்முடைய மாநில அரசாங்கம், மிகப் பெரிய பிரச்னையாக இது இருக்கின்ற காரணத்தினாலே, உடனடியாக வழிவகை காணவேண்டுமென்று வலியுறுத்த விரும்புகிறேன். போராட்டத்தை அடக்குவதற்கு கடுரமான நடவடிக்கைகளை எடுப்பதன்மூலமாக இந்தப்பிரச்சினைக்குப் பரிகாரம் காணமுடியாது.

நான் அங்கே சென்றிருந்தேன். பல நெசவாளர்கள் குடும்பங்களோடு தொடர்பு கொண்டேன். அங்கேயிருக்கின்ற நிலைமை என்னவென்றால், பலரும் சொஸைடிகளை வைத்துக்கொண்டு நூலை மொத்தமாக வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். உண்மையான நெசவாளர்களுக்குக் கிடைக்கவில்லை. கார்டு மூலமாக நூல் அவர்களுக்குக் கிடைக்கச் செய்வதுதான் சரியாக இருக்கும். இப்பொழுது இருக்கிற பிரச்சினையெல்லாம் அடக்குமுறையைக் கைவிட்டு, அவசரமான முக்கியமான இந்த விஷயத்திலே யுத்தகாலத்திலே நடவடிக்கை எவ்வளவு வேகமாகவும் முதலாவதாகவும் எடுப்போமோ, அதைப்போன்று அங்கே பசியாலும் பட்டினியாலும் வாடிக்கொண்டிருக்கின்ற மக்களுடைய துயரைப் போக்கக்கூடிய முறையிலே பரிகாரம் காணுவதற்கு இந்த அரசாங்கம் உடனடியாக நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டும்.

இதைத்தவிர ஒரு சில தாங்களை கைத்தறிக்கு ஒதுக்கவேண்டும். மத்திய அரசாங்கம் ஏதோ நாம் நூல் வாங்கவில்லை என்று சொல்கிறார்கள் கூட்டுறவுத் துறையிலே சில ஆலைகள் இருக்கின்றன. நலிந்த ஆலைகளை அரசாங்கம் எடுத்து நடத்திக்கொண்டிருக்கிறது. இவற்றின்மூலம் உற்பத்தியாகின்ற நூலை கூட்டுறவிலே இல்லாதவர்களுக்கும் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும். அது மட்டுமல்லாமல், இது சம்பந்தமாகப் போடப்பட்டு இருக்கிற கேஸ்களை எல்லாம் வாபஸ் வாங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏதோ ஒரு பஸ் எரிந்துவிட்டது என்பதற்காக சேலத்திலே ஒரு சிலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அங்கே நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது. பலரையும் அடித்துத் துன்புறுத்தியிருக்கிறார்கள், நான் நேரடியாகச் சென்று கண்கூடாகப் பார்த்தேன். அம்மாதிரியான நிலைமைக்கு விடக்கூடாது. இதை ஒரு சட்ட ஒழுங்குப் பிரச்சினையாகக் கருதாமல், இதற்கு உடனடித் தீர்வு காணவேண்டும்.



1973 மார்ச் 3] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

திரு. சட்டோபாத்தியாயா என்ற மத்திய அமைச்சர் அவர்கள் ஒரு விஷயத்தைக் கூறியிருக்கிறார்கள். தங்களின் அனுமதியோடு அதை நான் இங்கே படித்துக் காட்டவிரும்புகிறேன். தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்ட நூலை இன்னும் எடுத்துக்கொள்ளவில்லை, அதனால்தான் நெசவாளர்களுக்குக் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று அவர்கள் கூறியிருப்பதாக தினமணிப் பத்திகையிலே வந்திருக்கிறது. இம்மாதிரியான நிலைமைகளையெல்லாம் மத்திய அமைச்சர் அவர்கள் கூறிக்கொண்டிருக்கிறார்கள். மாநில அரசு என்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறது? இதற்கு மாநில-மத்திய அரசு போராட்டத்தைக் காட்டி மிகைப்படுத்தாமல் மக்களுடைய பிரச்சினையாகக் கருதி தீர்வு காணவேண்டுமென்று கூறி அதற்காக இந்த அவையை ஒற்றிவைத்து இதை விவாதிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, இங்கே கொண்டு வரப்பட்ட ஒத்திவைப்புத் தீர்மானத்திலே சேலத்திலே நடைபெற்ற கைது பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. சேலம் மாவட்டத்திலே உள்ள எல்லாக் கட்சித் தரப்பினரையும் அடிக்கடி அழைத்துப் பேசியிருக்கிறோம். நாட்டு நிலைமையை எடுத்துக் கூறியிருக்கிறோம். மாநில அரசு மத்திய அரசாங்கத்தினிடத்திலே வலியுறுத்த என்ன என்ன முயற்சிகளை எடுத்திருக்கிறது என்பதைக் கூறியிருக்கிறோம். அந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே நெசவாளர்கள் பிரச்சினைப்பற்றி அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்தவர்களையும் அழைத்துப்பேசி அவர்களுடைய ஒத்துழைப்போடுதான் எல்லோரும் அடங்கிய ஒரு குழு அமைக்கப்பட்டு அதன்மூலம் எங்கெங்கே தவறுகள் நடக்கிறதோ, அதற்குப் பரிகாரம் காணலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நிரந்தரமான பரிகாரம் என்றால், ஒவ்வொரு தறியாளருக்கும் ஒரு அடையாள கார்டு கொடுத்து நூல் தேவையைப் பூர்த்திசெய்யவேண்டுமென்று சொல்லப்பட்டது. அதை எல்லோரும் பாராட்டினார்கள். அதற்கும் அனைத்துக் கட்சி குழுவொன்று அமைக்கப்பட்டது.

சேலத்தைப் பொறுத்தவரையிலே இப்பொழுது நடைபெறுகிற போராட்டம் எந்த அடிப்படையிலே நடைபெறுகிறது என்பதை நான் விளக்க இப்பொழுது முற்படவில்லை. மற்ற மாவட்டங்களைவிட சேலம் மாவட்டத்திற்கு தனி அக்கறை எடுத்துக்கொண்டு பல கட்சிக்காரர்களையும் கூட்டிப் பேசி இருக்கிறோம். இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்தைப் பொறுத்த அளவில் அந்தப் போராட்டத் தலைவர்கள் எல்லாம் இந்த மாநில அரசுடைய நடவடிக்கைக்கு ஒத்துழைப்புத் தரவேண்டுமென்ற முறையிலே அந்தப் போராட்டத்தை

திரும்பப் பெறவேண்டும். பழி வாங்கவேண்டுமென்று இந்த அரசு எப்பொழுதும் எண்ணியதில்லை. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நெசவுத் தொழிலாளர்கள் பிரச்சினைப்பற்றி இங்கே குறிப்பிடுவது நியாயம் என்று கருதுகிறேன். எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்களும் இருக்கின்ற சிக்கலான நிலைமையை எடுத்துக் கூறி அதற்குக் கவலை தெரிவித்ததை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன்.

தமிழ்நாட்டினுடைய நெசவாளர்களின் நிலைமை துர்பாக்கியமாக இருக்கிறதே என்பதற்காக இந்த அரசினுடைய சார்பிலே நான் வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அரசு இதிலே ஒரு திட்டவட்டமான கொள்கையைப் பல மாதங்களுக்கு முன்னாலேயே அறிவித்து இருக்கிறது. முதலாவதாக நெசவாளர்களுக்குத் தேவையான நூல் அத்தனையையும் நியாயமான விலையிலே மாநில அரசே வாங்கி அதை அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய அதிகாரம் நமக்குத் தரப்படவேண்டும்.

ஆனால், இன்றைக்கிருக்கிற முறை இருக்கிறதே அதையும் நாம் தெளிவாக புரிந்துகொள்ளவேண்டும். மத்திய அரசாங்கம் "வாலன்ட்ரி ஸ்கீம்" என்ற ஒன்றை வைத்திருக்கிறது. அதாவது, ஆலை முதலாளிகள் தானே வலிய வந்து தியாக உள்ளத்தோடு அவர்கள் நூலை கொடுப்பார்கள், அதை வாங்கி நாம் கொடுக்கவேண்டும். இதுதான் மத்திய அரசாங்கத்தின் அந்தத் திட்டம். நாம் அதை மறுத்து, இது நடைமுறையிலே ஒத்து வராத ஒரு திட்டமாகும். இதனால் நெசவாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள்; ஆலை முதலாளிகளை நம்பாதீர்கள். இதை அரசாங்கமே எடுத்து விநியோகிக்க வேண்டும். எனவே, அந்தப் பொறுப்பை மாநில அரசாங்கத்திடம் ஒப்படைக்கவேண்டும் என்ற வகையிலே 11—8—1972 ஆம் தேதி நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பிரதம அமைச்சருக்கு நம்முடைய கோரிக்கையை வலியுறுத்தி கடிதம் எழுதினார்கள். அதிலே இந்தக் கொள்கையை விளக்கி இப்பொழுது வைத்திருக்கும் வாலன்டரி ஸ்கீம் ஒன்றுக்கும் உதவாத ஸகீம், அதனாலே நெசவாளர்களுக்கு எந்தவிதத்திலேயும் பயன் இல்லை என்று எழுதினார்கள்.

நம்முடைய இரண்டாவது கோரிக்கை; காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. பொன்னப்ப. நாடார் அவர்கள் சொன்னதைப் போல் நெசவாளர்களுடைய பிரச்சினையை நிரந்தரமாக தீர்க்கப்பட வேண்டுமானால், இன்னின்ன வகைகள் தான் இந்த நெசவுத் தொழிலுக்கு ஒதுக்கப்படுகிறது—அதாவது ரிசர்வேஷன் செய்யப்படுகிறது என்றிருக்க வேண்டும். இதிலேயும் தெளிவான ஒரு கொள்கை இருக்கவேண்டும். திரு. ராஜாஜி முதலமைச்சராக இருந்த





பொழுது இதிலே ஒரு தீர்மானம் போட்டதற்காக நாம் அவரைப் பாராட்டியிருக்கிறோம். ஆனால் இன்றைக்கு வரையில் மத்திய அரசாங்கம் அதில் திட்டவட்டமான ஒரு கொள்கையை அறிவிக்கத் தயங்குவதை என்னாலே புரிந்து கொள்ள முடியவில்லை. சட்டப்படி கைத்தறி நெசவாளர்களுக்கு இது, இது இந்தெந்த ரகம் என்று ஒதுக்கினால் ஒழிய இந்தப் பிரச்சினை தீராது. 11—8—1972 ஆம் தேதியிட்ட கடிதத்திலே நமது முதலமைச்சர் அவர்கள் பிரதம அமைச்சருக்கு இதை வலியுறுத்தி, அரசாங்கம் இதிலே ஒரு உத்தரவை பிறப்பித்து ஜி.ஓ. பிறப்பித்து அதை அமுலுக்கு கொண்டு வந்துவிடலாம்; அப்பொழுது விசைத் தறியாளர்களும் ஒத்துழைப்புத் தருவார்கள்; ஆலை அதிபர்களும் ஒத்துழைப்புத் தருவார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். சுதந்திரம் கிடைத்து 25 ஆண்டுகளுக்குப் பிறகும் இதைப் பற்றி பேசிக் கொண்டிருப்பதைக் காட்டிலும், சட்டப்படி இந்த ரிசர்வேஷன் உத்தரவு போட்டாலொழிய இந்தப் பிரச்சினைக்குப் பரிகாரம் கிடையாது என்று அந்தக் கடிதத்திலே விளக்கிக் கூறியிருக்கிறார்கள்.

இப்பொழுது 75 சதவிகிதம் மின்சக்தி வெட்டு வந்த காரணத்தினால் இந்தப் பிரச்சினை இன்னும் கொஞ்சம் அதிகமாகியிருக்கிறது. தமிழ் நாட்டிலே 200 ஆலைகள்—தனியார் துறை, கூட்டுறவுத் துறை (அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிற) நூற்பு ஆலைகள், இருக்கின்றன. இத்தனையிலுமிருந்து உற்பத்தி ஆகின்ற நூலை தமிழ் நாட்டிலே இருக்கிற நெசவாளர்களுக்குக் கொடுத்த பிறகு தான் மற்றெங்கும் அனுப்பவேண்டும். இதுதான் தமிழக அரசின் கொள்கை. இதை மத்திய அரசு ஏற்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். இதுபற்றியும் நம்முடைய பிரதம அமைச்சருக்கு ஒரு கடிதம் எழுதப்பட்டிருக்கிறது 24—2—1973 லே. மிக அண்மைக் காலத்திலே நம்முடைய பிரதம அமைச்சருக்கு அனுப்பிய கடிதத்திலே இந்த 75 சதவிகித மின் வெட்டு காரணமாக தமிழகத்திலே உற்பத்தி மோசமாக குறைந்திருக்கிறது. ஆகவே, நமக்குத் தேவையான நூலிலே மிகக் குறைந்த அளவு தான் உற்பத்தி ஆகிறது என்ற காரணத்தினாலே தமிழகத்திலே உற்பத்தி ஆகின்ற அத்தனையையும் கைத்தறி நெசவாளர்களுக்கே ஒதுக்க வேண்டும். 20,000 பேல்ஸ் அதாவது பொதிகள் நமக்குத் தேவைப்படுகிறது. மின் வெட்டிற்குப் பின்னாலே தமிழ் நாட்டிலே இருக்கும் எல்லா ஆலைகளிலும் உற்பத்தி ஆகின்ற நூல் 8,000 பேல்கள் பொதிகள். இது எங்களுடைய தேவையிலே மூன்றில் ஒரு பங்கு கூட இருக்காது. ஆகவே, இந்த 8,000 பேல்களை எங்களுக்கே தரவேண்டும்—இந்த தமிழகத்திலேயுள்ள ஆலைகளிலே உற்பத்தியாகும் இந்த 8,000 பேல்களை

நாங்களே எடுத்து தமிழகத்திலேயுள்ள 5 இலட்சம் கைத்தறி நெசவாளர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்று நாம் எழுதியிருக்கிறோம். இதுவரை அதற்கு பதில் இல்லை.

அதற்குப் பின்னாலே மத்திய அமைச்சரகத்திலே இருக்கிற திரு. சட்டோபாத்தியாயா என்ற அமைச்சர் அவர்கள் ஒரு மாநாடு கூட்டினார்கள். இந்த மாநாட்டிலே இந்தக் கருத்து எடுத்து வைக்கப்பட்டது. அப்பொழுது நம்முடைய முதலமைச்சர் எழுதிய கடிதமும் சேர்க்கப்பட்டது. அதற்கு அவர் ஒரு அறிக்கை தருகிறார். அகில இந்திய அடிப்படையிலே எடுத்துக் கொண்டால் மொத்த பற்றுக் குறை 20 சதவிகிதம் தான். ஆகவே, இதிலே பெரும் குழப்பம் தேவையில்லை என்று எழுத்து மூலமாக அங்கே பேசியிருக்கிறார். உடனே அது எல்லாம் பத்திரிகையிலே 26 ஆம் தேதி வருகிறது. அதைப் பார்த்துவிட்டு, உடனடியாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இதன் அடிப்படையிலே ஒரு கடிதத்தை பிரதம அமைச்சருக்கு 1—3—1973 அன்று எழுதுகிறார்கள். அதிலே அவர்கள் குறிப்பிடுகின்றார்கள், எங்களுக்குத் தேவையான நூலிலே 3 லே ஒரு பங்குதான் உற்பத்தி ஆகின்றது. அதிலே எல்லாவற்றையும் கொடுத்துவிட்டோம் என்று எழுதி இருக்கிறோம். ஆனால், உங்களுடைய அமைச்சர் அவையிலேயுள்ள திரு. சட்டோபாத்தியாயா அவர்கள் அகில இந்திய அளவிலேயே மொத்தமாக 20 சதவிகிதம் தான் பற்றுக் குறை என்று சொல்லியிருக்கிறார். இது எங்களுக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. ஆகவே, எங்களுக்குத் தேவையான 20,000 பேல்களிலே இங்கு உற்பத்தியாகும் 8,000 பேல்கள் அத்தனையும் தந்து விட்டு, மீதி இருக்கும் 12,000 பேல்களையும் உடனடியாக பெருந்தன்மையோடு, அமைச்சர் திரு. சட்டோபாத்தியாயா ஒத்துக் கொண்டிருப்பது போல், ஒப்படைத்துவிடுங்கள் என்று 1—3—1973 அன்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பிரதம அமைச்சருக்குக் கடிதம் எழுதி இருக்கிறார்கள்.

இத்தனையும் எழுதியதற்குப் பிறகு வார்த்தை கூட எழுதாத அந்த அமைச்சர் அவர்கள் நேற்று பாராளுமன்றத்திலே தி.மு. கழக பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் இந்தப் பிரச்சினையை எழுப்பிய பொழுது, ஒரு கருத்தை சொல்லி இருக்கிறார். தமிழ் நாட்டின் துர்ப்பாக்கியம் என்னவென்றால், மத்திய அமைச்சர் அவர்கள் ஏதாவது ஒரு கருத்தை சொல்லுவார்கள், அது மாநில அரசிற்கு எதிரான கருத்தாக இயற்கையாகவோ, செயற்கையாகவோ அமைந்து விடுகிறது. அதற்கு இந்தச் சட்ட சபையிலே விளக்கம் கூறுகின்ற வகையிலே அமைந்திருப்பது என்பது தான். இப்படித் தவறான கருத்துக்களை பொறுப்புள்ள அமைச்சர் பதிலளிக்கும்





பொழுது சொல்லுவதும், அதை நாம் சுட்டிக்காட்டி விளக்கம் கேட்கும் பொழுது அதற்கு பதில் இல்லாது அமைதி ஆகின்ற சரித்திரமும் தமிழ் நாட்டிலே அடிக்கடி நடக்கிறது.

அந்த நிலைமையிலே திரு. சட்டோபாத்தியாயா ஒரு சரித்திரத்தை புதிதாக இங்கே தொடங்கி இருக்கிறார். அவர் அப்படி பேசினாரா என்பது பற்றி அறிய நான் நாடாளு மன்ற உறுப்பினர்களுடன் தொலை பேசி மூலம் தொடர்பு கொண்டு கேட்டேன். அவர்களும் அவர் அப்படித் தான் பேசினார் என்று சொன்னார்கள். தமிழகத்திற்குத் தேவையான நூலை நாங்கள் ஒதுக்கி விட்டோம். மாநில அரசு தான் அதை எடுத்து கொடுக்கவில்லை. அதன் காரணமாகத் தமிழகத்திலேயுள்ள நெசவாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்று தெளிவாகச் சொல்லி இருக்கிறார்கள். இது மிகவும் வேடிக்கையாக இருக்கிறது. மத்திய அரசு ஒதுக்குவதும் இல்லை. மாநில அரசு எடுப்பதும் இல்லை. இதை எப்படி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் என்று புரியவில்லை எனக்கு.

இதிலே நடைபெறுவது என்னவென்றால், டெக்ஸ்டைல் கமிஷனர் என்ற மத்திய அமைச்சரகத்தில் அலுவலர் ஒருவர் பம்பாயிலே இருக்கிறார். அவர் நான் சொன்னேன் பாருங்கள் இந்த வாலன்ட்டரி ஸ்கீம் என்று அதன்படி ஒவ்வொரு மாநிலத்திலேயுள்ள நெசவாளர்களுக்கும் நூல் அலாட் செய்கிறார்கள். உடனடியாக நம்முடைய மாநில இயக்குநர் அவர்கள் அதை எல்லா நெசவாளர் சம்பந்தப்பட்ட மக்களுக்கும் அலாட் செய்கிறார்கள். இதை ஆலை அதிபர்கள் தியாக உள்ளத்தோடு கொடுத்தால் போச்சு, கொடுக்காவிட்டால் கூட மத்திய அமைச்சர் நம்மைத் தான் குறை சொல்லுவார் போல் இருக்கிறது. அதை என்னாலே இப்பொழுது தான் உணர முடிகிறது. அந்த அடிப்படையிலே ஆகஸ்ட் மாதம் நம்முடைய தேவை 1,646 பேல்ஸ், நம்மிடம் உடனடியாக கொடுத்தது 1,183. செப்டம்பர் மாதம் நம்முடைய தேவை 1,300 பேல்ஸ் உடனடியாக கொடுத்தது 1,250 பேல்ஸ். அக்டோபர் மாதம் நம்முடைய தேவை 1,563 பேல்ஸ்; உடனடியாக கொடுத்தது 1,557 பேல்ஸ். நவம்பர் மாதம் நம்முடைய தேவை 1,686 பேல்ஸ்; உடனடியாக கொடுத்தது 1,645 பேல்ஸ். டிசம்பர் மாதம் நம்முடைய தேவை 1,847 பேல்ஸ்; உடனடியாக கொடுத்தது 1,823 பேல்ஸ். ஜனவரி மாதம் நம்முடைய தேவை 1,926 பேல்ஸ்; உடனடியாக கொடுத்தது 1,925 பேல்ஸ். பிப்ரவரி மாதம் நம்முடைய தேவை 1,828 பேல்ஸ். உடனடியாக கொடுத்தது 1,828 பேல்ஸ் நமக்குத் தேவை 20,000 பேல்கள். அவர்கள் கொடுத்திருப்பது பிப்ரவரி மாதத்திலே 1,828 பேல்கள் தான். அதைப்பற்றி உடனடியாக நாம் உத்தரவு போட்டுவிட்டோம்.

ஆனால், அந்தத் தியாக உள்ளத்தோடு அந்த ஆலை அதிபர்கள் ஒப்படைத்தார்களா என்று பார்க்கக் கூடிய, கண்காணிக்கக் கூடிய அதிகாரமும் இந்த ஸ்டேட்மென்டை வைத்து டெல்லி அமைச்சருக்கே இருக்கிறது. அதை அவர் எப்படிச் சொன்னார் என்று தெரியவில்லை. ஆகவே, அவரே ஒப்புக் கொண்டிருக்கிற அலாட்மென்ட் 1,828 பேல்ஸ் தான் பிப்ரவரி மாதத்தில். நமக்குத் தேவை 20,000 பேல்ஸ். ஆகவே, எப்படி இந்த அமைச்சர் அந்த அறிக்கையை வைத்தார் என்பது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

திரு. சுரேந்திரன் அவர்கள் ஊக்கத்தோடு இங்கே பேசினார்கள். அவர்களிடத்திலே நான் இது பற்றி ஏராளமாக விவாதித்தேன். நான் அவரிடத்திலே ஒன்றைச் சொன்னேன், இது மத்திய மாநில அமைச்சர் போராட்டமாக மாறிவிடக் கூடாது. திரு. பொன்னப்ப நாடார் சொன்னதுபோல் இன்றைக்கு மத்திய அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் வருவதாகத் தெரிகிறது. நீங்கள் நேரடியாக அவரைச் சந்தியுங்கள். சேலத்திலே இருந்து வந்திருக்கக்கூடிய நெசவாளர்க் குழுவை அழைத்துச் செல்லுங்கள்; நாங்கள் எல்லாம் திட்டவட்டமாக ஒரு கொள்கையை சொல்லி இருக்கிறோமே, தமிழ் நாட்டிலேயுள்ள நெசவாளர்களுக்கு உதவி செய்யக் கூடாதா என்று கேளுங்கள். அவர் வேறு ஏதாவது கருத்துச் சொன்னால் என்னை தொலைபேசியிலே அழையுங்கள் நானே வருகிறேன், உட்கார்ந்து பேசுவோம். இது அரசியல் இல்லை. தமிழ் நாட்டிலே இருக்கிற 20 இலட்சம் கைத்தறி நெசவாளர்களின் வாழ்க்கைப் பிரச்சினை. அவர்களுடைய குடும்பப் பிரச்சினை என்று சொன்னேன். என் மீது இரக்கம் காட்டுவார் என்று நினைத்தேன் அவர் என் மீது இரக்கம் காட்டவில்லை.

இப்பொழுதும் சொல்லுகிறேன், இதை அரசியல் ஆக்க விரும்பவில்லை நாங்கள். தமிழ் நாட்டிலே இருக்கும் 20 இலட்சம் கைத்தறி நெசவாள குடும்பங்கள் பரிதவிக்கின்ற நிலைமையில் இதைக் கட்சி அரசியலாக ஆக்காதீர்கள். மத்திய அமைச்சர் இடத்திலே அவருக்குள்ள செல்வாக்கு அதிகம். எங்களுடைய செல்வாக்கைப்பார்த்தால் தவறான ஸ்டேட்மென்டாக வந்துகொண்டிருக்கிறது. எனவே, அந்த அவதிப்படும் மக்களுக்கு வாழ்வு அளிக்க நாம் அனைவரும் சேர்ந்து முயற்சி எடுக்கவேண்டும் என்பதுதான் இந்த அரசாங்கத்தின் கொள்கை ஆகும். இந்த அரசாங்கத்தின் திட்டமாகும்.

உறுப்பினர் திரு. அழகர்சாமி ஒரு கருத்தைச் சொன்னார். அதை நான் விளக்கி இருக்கிறேன். சம்பந்தப்பட்டவர்களிடம். நாம் இப்படி ஒரு கருத்தைச் சொல்லுவதன் மூலமாக, அதாவது கூட்டுறவு ஆலையிலே உற்பத்தியாகின்ற நூலைப் பூராவும் நெசவாளர்களுக்குக் கொடுக்கக் கூடாது என்ற ஒரு





சந்தேகத்தை கிளப்புவதால் தனியார் துறை ஆலைகளுக்கு மறைமுகமாக நாம் ஆதரவு கொடுக்கவேண்டிய நிலை ஏற்படுகிறது. நான் தெளிவாகச் சொல்லுகிறேன், நம் பணத்தைப்போட்டு நடத்தும் நம்முடைய ஆலைகள் 20-க்குக் குறைவு. ஆனால் தனியார் 200 ஆலைகள் வைத்திருக்கிறார்கள். நாம் சொல்லும் திட்டம், தமிழக நெசவாளர்களுக்குப் போதுமான நூலை 200 ஆலைகளிலிருந்தும் கட்டாயமாக, குறைந்த விலைக்கு, நியாயமான விலைக்கு வாங்க வேண்டுமென்பது கொள்கை. நீங்கள் உங்கள் ஆலைகளுக்கு மட்டும் எடுத்துக் கொள்ளுங்கள் என்று வாதாடினால் அது தனியார் துறை ஆலைகளுக்குத்தான் சாதகமாகும். அப்படி அவர்கள் நினைத்திருக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். ஆனால் அப்படிப்பட்ட நிலையை உண்டாக்கக்கூடாது.

கூட்டுறவுத் துறை ஆலைகளைப் பொறுத்தவரையில், சர்க்கார் ஆலைகளைப் பொறுத்தவரையில் ஏற்கனவே பல நாட்களுக்கு முன்பே சென்ற சட்டமன்றக் கூட்டத்தில் அறிவித்திருக்கிறேன் என்று நினைக்கிறேன். இந்த ஆலைகளைப் பொறுத்தவரையில் நாம் அத்தனையையும் நெசவாளர்களுக்குக் கொடுப்பது வெளியே விற்பதில்லை, ஏற்றுமதி செய்வதில்லை, வெளி மாநிலங்களுக்கு விற்பதில்லை என்று திட்டவட்டமாக முடிவு செய்திருக்கிறோம். அந்த முடிவோடு கூட தனியார் ஆலைகளிலிருந்தும் நூலை வாங்கினால்தான் பரிகாரம் காண முடியும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அவர்கள் சொன்னதை ஏற்றுக்கொண்டால் நடக்குமா என்று மு.ப. 10-30
பார்த்தால், கூட்டுறவு ஆலைகளிலே, அரசு ஆலைகளிலே, காண்ட் கட்டிற்கு முன்பு 8,000 பேல்கள்தான். ஆனால் நமக்குத் தேவை 20,000 பேல்கள். ஆகவே, தனியார் துறையில் கட்டாயமாக வாங்கினால்தான் முடியும். காண்ட் கட்டிற்குப் பிறகு 1,6000 பேல்கள்தான். ஆனால் நமக்குத் தேவை 20,000 பேல்கள். ஆகவே, தமிழக அரசு மிகுந்த அக்கறையோடு இந்தப் பிரச்சினை வந்ததிலிருந்து ஒவ்வொருநாளும் மத்திய அமைச்சர்களோடு தொடர்பு கொள்ளுகிறது.

நேற்றுகூட முதலமைச்சரவர்கள், நான் முன்பு கூறிய அத்தனை கடிதங்களின் நகல்களையும், ஆளுநர் அவர்கள் இன்றையதினம் டெல்லியில் இருப்பதால், அவர்களுக்குக் கடிதம் எழுதி, பிரதம அமைச்சருக்கும், சட்டோபாத்யாயா அவர்களுக்கும் எழுதிய கடிதங்களின் நகலை அனுப்பியிருக்கிறோம். அவரையும் சந்தித்து தமிழக நெசவாளர்களின் பிரச்னைகளைப்பற்றி நீங்களும் அவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்திவிட்டு வாருங்கள் என்று முதலமைச்சரவர்கள் ஆளுனர் அவர்களுக்குத் தகவல் அனுப்பியிருக்கிறார்கள். இந்த

அளவிற்கு இந்த அரசு முயற்சியெடுக்கும்பொழுது இதனை அரசியல் பிரச்னையாகக் கருதாமல், போராட்டத்தில் ஈடுபட்ட தலைவர்களின் உண்மையான எண்ணத்தை நாங்கள் ஒத்துக்கொள்வதால், இருக்கின்ற குறைகளை நாங்கள் உணர்வதால், அரசுக்கு ஒத்துழைப்புத் தந்து, இதைப் போராட்டத்தில் அல்லாமல் நாம் எடுக்கும் முயற்சிகளிலே, மத்திய அரசின் ஒத்துழைப்பிலே இதற்குப் பரிகாரம் காண வேண்டுமென்று அவர்களை யெல்லாம் இந்த மன்றத்தின்மூலம் கேட்டுக்கொண்டு, இதற்கு மேல் அவையை ஒத்திவைத்து விவாதிப்பதற்கு எதுவுமில்லை என்ற கருத்தைக் கூறிக்கொள்கிறேன்.

**திரு. என். கே. பழனிசாமி:** மத்திய அரசைப் பொறுத்தவரையில் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் இதிலே அறிவிப்பு கொடுக்கவில்லை, உங்கள் பெயரே இல்லை.

**திரு. எம். சுரேந்திரன்:** உதவி சபாநாயகரவர்களே, தொழிலமைச்சரவர்கள் அளித்த விளக்கத்திலே என்னுடைய பெயரையும் சேர்த்துச் சொன்னதால் இரண்டொரு விளக்கங்களைக் கொடுக்க ஆசைப்படுகிறேன்.

அன்றைக்குத் தொழிலமைச்சரிடத்திலே பேசும்பொழுது உறுதியாக ஒன்றைக் கூறினார்கள். கூட்டுறவுத்துறை ஆலைகளும், அரசாங்கம் எடுத்திருக்கும் ஆலைகளும் 50 சதவீதம் தான் அளிக்க முடியும், 50 சதவிகிதத்தை 'ஓபன் மார்க்கெட்'டிலே விற்க முடியும், அப்படியில்லையென்றால், எல்லாமே கொடுத்துவிட்டால் இந்தத் தொழிலை முடிவிட வேண்டியிருக்கும் என்று சொன்னார்கள். இன்னொன்றையும் கூறினார்கள், மத்திய சர்க்காரிடத்திலே சொல்ல வேண்டுமென்று கூறினார்கள். அது சொல்லப்பட்டது. அதற்குப் பிறகுதான் மாநாடு நடந்தது. அந்த மாநாட்டிலே அமைச்சர்கள் சென்று நிலைமைகளை வற்புறுத்தி இந்தக் கடிதங்களையெல்லாம் அளித்து சொல்லியிருக்கவேண்டும். அப்படிச் சொல்லவில்லை என்ற தகவல்தான் வந்திருக்கிறது.

அடுத்தபடியாக விநியோகிக்கப்பட்ட நூல்களைப்பற்றிய பட்டியலைக் கூறினார்கள். அந்தப் பட்டியலிலே விநியோகிக்கப்பட்ட முறை தவறு என்று மத்திய கமிஷன், அங்கிருந்து தகவல் வந்து மாற்றியாக வேண்டுமென்று . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் புதிதாகத் தகவல் சொல்ல வேண்டாம். கிளாரிபிகேஷன் வேண்டுமானால் கேளுங்கள்.

**திரு. எம். சுரேந்திரன்:** அந்த விநியோக முறைகள் சரியில்லை என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. அது சரியானதானு என்று அறிய விரும்புகிறேன். ஆகவே, புதிதாக மத்திய அரசுடன்



சேர்ந்து அதிக நூலை வாங்குவதைப்பற்றி ஆட்சேபணையில்லை. இந்த நூல் வராது என்று, ஏற்கனவே ஒரு மாநாடு கூட்டி, விலையை நிர்ணயித்து, அத்தியாவசியப்பொருள் என்ற முறையில் எடுத்துக்கொள்வது என்ற முறையில் பத்திரிகைகளில் செய்திகள் வந்திருப்பதைப் பார்த்தேன். அவர்களுடைய அபிவிருத்தி எப்படியிருக்கிறது என்றும், அங்கே நூல் விநியோகிக்கப்படுகிறதே இங்கே உரிமை வேண்டுமென்று சொல்வது, அது ஒரு தேசத்தின் ஒட்டுமொத்தமான கொள்கையாக இருப்பதால் அந்தக் கொள்கையை வகுப்பதிலே ஒருவேளை சிலநாட்கள் தாமதம் ஏற்படலாமே தவிர, இந்தக் காரியத்தில் யாருக்கும் அக்கறையில்லாமல் இல்லை, நிச்சயமாக இந்தப் பகுதி மக்களுக்கு நூல் வழங்க என்ன வேண்டுமானாலும் விலை கொடுக்கச் செய்ய வேண்டுமென்று உணர்ந்திருக்கிறோம்.

அமைச்சரவர்கள் இந்தப் போராட்டக்காரர்கள் மீது உள்ள எல்லா நடவடிக்கைகளையும் வாபஸ் வாங்கிக்கொண்டு, இப்பொழுது இருக்கும் முறையிலேயே விநியோகம் செய்ய ஏற்பாடுகளைச் செய்ய இந்தப் போராட்டத்திற்கு முடிவு வைக்க, ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கூறி, இம்மாதிரி நல்ல காரியங்களுக்கு மத்திய அரசின் பிரதிநிதியாக இருக்கின்ற எங்களுடைய ஒத்துழைப்பு நிச்சயமாக உங்களுக்கு இருக்கும் என்று கூறி அமர்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவரவர்களே, மத்திய அரசாங்கத்திற்கு நமது மாநில அரசாங்கத்திலிருந்து யாராவது பிரதிநிதிகள் சென்றார்களா? அவர்கள் இந்த அமைச்சர் சட்டோபாத்தியாயா அவர்களைச் சந்தித்தார்களா? அவர்களோடு நேரடியாகத் தொடர்பு கொண்டார்களா? நமது தேவையைப்பற்றி விவாதம் நடந்ததா என்பதை அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவரவர்களே கூட்டுறவு ஆலைகள் பற்றி எல்லாம் புள்ளி விவரங்கள் கூட கொடுத்தேன். அவர்கள் அதைக் கவனித்திருக்கலாம் என்று எண்ணுகிறேன். இப்பொழுது முடிவெடுத்திருப்பது அத்தனையையும் நெசவாளர்களுக்குக் கொடுப்பது என்று. ஆனால் அது மட்டும் போதாது என்று கூறினேன். அதையும் அவர்கள் கவனித்திருக்கலாம் என்று கருதுகிறேன். அண்மையில் நடைபெற்ற மாநாட்டிலே அரசாங்கத்தின் சார்பாக நான் இப்பொழுது சொன்ன தகவல்கள், பிரதம மந்திரிக்கு எழுதப்பட்ட கடிதம் அத்தனையும் சட்டோபாத்தியாயா அவர்களின் பரிசீலனைக்குத் தரப்பட்டது. நாமும் எடுத்துக் கூறினோம். அதற்குப் பிறகுதான் இந்த ஸ்டேட்மெண்ட் வைக்கப்பட்டிருக்கிறது. அதுதான் கவலையைத் தருகிறது. அந்தக் கடிதம் சேர்க்கப்பட்ட பிறகு, நமது அரசின் சார்பிலே இத்தனை தகவல்களும் வைக்கப்பட்ட பிறகும் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. 26-ஆம் தேதி

முதலமைச்சரவர்கள் பட்ஜெட் தயாரித்த காரணத்தால், இப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்படக்கூடாது என்பதற்காக முன்கூட்டியே அந்தத் தகவலைச் சேர்த்திருக்கிறார்கள். அந்தத் தகவல் சென்றதற்குப் பிறகு இந்தக் கருத்துச் சொல்லப்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

ஏதோ நூல் விநியோகத்தில் தவறு என்று சுரேந்திரன் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதை என்ன என்று அவர்கள் விளக்கவில்லை. 20,000 பேல்கள் தேவைப்படுகிறது. 1,828 பேல்கள்தான் கொடுத்திருக்கிறார்கள். இதிலிருந்து சிக்கல் இயற்கையாக ஏற்படும் என்பதை உணரவேண்டும். 1,828 பேல்களைக் கொடுத்துவிட்டு, விநியோகிப்பதிலே சிக்கல் என்று சொன்னால் விநியோகிக்கும் முறைகளையும் அவர்கள்தான் வகுத்திருக்கிறார்கள்.

அதில் வாலண்டரி ஸ்கீம் மாநில அரசுக்குக் கிடைத்திருக்கிறது. அகில இந்தியப் பிரச்னை என்று சொல்லப்பட்டது. நாங்கள் அகில இந்தியப் பிரச்னையில் தலையிடவில்லை. மகாராஷ்டிரத்திலே தலையிடவில்லை, குஜராத்திலே தலையிட விரும்பவில்லை. நாங்கள் தெரிவிப்பது இந்த மாநில நெசவாளர்களுக்கு எவ்வளவு என்று முடிவு கட்டுங்கள். அந்த நூலை எங்களிடத்திலே ஒப்படையுங்கள், எங்களை ஆலை அரசர்களின் தயவிலே நிற்க வைக்காதீர்கள் என்று சொல்கிறோம். இதில் அகில இந்தியக் கொள்கையில் என்ன முரண்பாடு இருக்கிறது? ஆகவே, மத்திய அரசு கொள்கையை வகுப்பதைப்பற்றிக் கவலையில்லை.

எங்களுடைய கவலையெல்லாம் தமிழக அரசுக்குத் தேவையான நூலை எங்களிடத்திலே ஒப்படையுங்கள் என்பதுதான். அதில் தவறு இல்லை என்று கருதுகிறேன். நம்முடைய மாநில அரசைப் பொறுத்தவரையிலே உடனுக்குடன் மத்திய அரசுடன் தொடர்பு கொண்டு இந்தத் தகவல்களைச் சேர்த்திருக்கிறோம். நாங்கள் செய்ய வேண்டிய கடமை நிறைவேறிவிட்டது. இதற்கு மேலும் உதவி செய்வார்கள் என்றுதான் நம்புகிறேன். எப்படியும் 3 மாதங்களுக்கு நெசவாளர்களின் பிரச்னைகளைச் சமாளிப்பதிலே அத்தனை நடவடிக்கைகளையும் எடுக்கும் என்றுதான் உறுதி கூறுகிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவரவர்களே, அமைச்சரவர்கள் கூறும்பொழுது மொத்தமாக நமது மாநிலத்திலேயிருக்கும் 30 இலட்சம் நெசவாளத் தொழிலாளர்களும் இந்த 200 ஆலை அதிபர்களுடைய தயவில் இருக்க வேண்டியிருக்கிறது என்றும், நமது தமிழக அரசுகூட இந்த அதிபர்களின் தயவிலே செயல்பட வேண்டிய நெருக்கடி இருப்பதாகக் கூறினார்கள். ஆகவே, இந்தப் பிரச்னையைத் தீர்க்க, 200 மில்களையும் நாட்டுடைமையாக்கிவிட்டால் இந்தப் பிரச்னைக்கு



முடிவு காண முடியும். அதற்கான நடவடிக்கையை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** காங்கிரஸ் கட்சியிலிருந்தே இப்படிப்பட்ட ஆலோசனை வருவது பாராட்டத் தகுந்ததுதான்.

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவரவர்களே, நான் பேசும்பொழுது கூட்டுறவு ஆலைகளிலும், சர்க்கார் எடுத்திருக்கும் ஆலைகளிலும் 8,000 பேல்கள் உற்பத்தியானால் அதைக் கொடுத்ததுபோக மீதி 8,000 பேல்கள் தேவையிருக்கும் என்று சொன்னேன். ஆகவே ஆலை முதலாளிகள் அதிகமாகக் கொள்ளை லாபம் அடிக்க அனுமதிக்க வேண்டுமென்று சொல்லவில்லை.

கள்ள லாபம் அடிக்கக்கூடியவர்களைத் தடுக்க இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். குறைந்த விலையில் பருத்தியை வாங்கிக் கொண்டு நூலுக்கு நெருக்கடியைக் கொண்டுவந்து அதிக விலைக்கு விற்பதைத் தடுக்க தீவிரமான ஏற்பாடுகள் செய்ய வேண்டும். இந்த நெருக்கடி காரணமாக நெசவாளர்கள் போராட்டத்தில் இறங்கிய நிலையில் எல்லாக் கட்சிகளையும் கூட்டிப் பேசி என்ன செய்ய வேண்டுமென்பது பற்றி கலந்து பேச அமைச்சர் அவர்கள் முயற்சித்திருக்கலாம். வரக்கூடிய நூல்கள் எப்படி விநியோகிக்கப்படுகின்றன என்பதைப் பற்றி அமைச்சர் அவாகள் தெரிவிக்கவில்லை. கார்டு முறையில் விநியோகிக்கப்படவில்லை. கூட்டுறவு மில்களிலிருந்தும், சர்க்கார் மில்களிலிருந்தும் 8,000 பேல்கள் கிடைக்கின்றன. பூராவும் கைத்தறிக்கு ஒதுக்குவதாகச் சொன்னார்கள். திரு. சுரேந்திரன் அவர்கள் 50 சதவிகிதம் தான் கைத்தறிக்கு நடைமுறையில் ஒதுக்கப்படுவதாகக் கூறுகிறார்கள். கொள்ளை லாபம் அடிக்காமல் ஆலை முதலாளிகளைக் கட்டுப்படுத்த, நியாயமான விலையில் நூலைப் பெற மத்திய சர்க்காராக இருந்தாலும், யாராக இருந்தாலும் எதிர்த்து நடவடிக்கை எடுக்க அனைவரும் சம்மதிப்பார்கள் என்று கருதுகிறேன். அதற்கு அமைச்சர் அவர்கள் வழி காண வேண்டும்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இவ்வளவு விளக்கமாகச் சொன்ன பிறகும் அதே கேள்வியைக் கேட்டுக் கொண்டிருப்பது ஆச்சரியமாக இருக்கிறது. ஆலையில் எப்படி உற்பத்தி இருக்கிறது என்று சொன்னேன். விநியோக முறை பற்றிச் சொன்னேன். மாவட்டங்களில் அனைத்துக் கட்சிக் குழுக்களின் மூலம் வகுக்கப்பட்ட கொள்கையின் அடிப்படையில் நூல் விநியோகிக்கப்படுகிறது. இருக்கின்ற நூலை அந்த அடிப்படையில் தறிகளுக்குப் 'ப்ரோ ரேட்டா' போட்டு கொடுப்பதைத் தவிர வேறு வழி இல்லை. நம்முடைய மாநில ஆலைகளின் உற்பத்தி முழுவதையும் மாநில அரசிடம்

ஒப்படைத்துவிட வேண்டுமென்ற கோரிக்கையை எல்லா ஆலைகளுக்கும் அனுப்பியிருக்கிறோம். மத்திய அரசாங்க உத்தரவு இல்லாமல் கொடுக்க முடியாது என்று சட்டத்திற்குப் பயந்தார்கள். மாநில மக்கள் நன்மைக்காக ஒப்படைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டோம். இப்போது ஒரு கடிதம் ஆலை அதிபர்களிடமிருந்து வந்திருக்கிறது.

'I assure you that the SIMA member-mills will extend their fullest co-operation in placing their current production of free yarn at the disposal of the Tamil Nadu Government for distribution to consumers'.

நம்மிடத்தில் எவ்வளவு கொடுக்க முடியுமோ அத்தனையையும் ஒப்படைக்கிறோம் என்று முடிவு சொல்லியிருக்கிறார்கள். மொத்த உற்பத்தியையும் நம்மிடம் ஒப்படைத்தால்தான் பரிகாரம் காண முடியும். அதற்கு மத்திய அரசாங்கந்தான் ஏற்பாடு செய்ய வேண்டும்.

**திரு. என். கே. பழனிசாமி:** இது பற்றி மத்திய சர்க்காரை வற்புறுத்தி ஒரு தீர்மானத்தை இந்த அவையிலேயே ஏகோபித்து நிறைவேற்றி அனுப்புவது பற்றி ஆலோசிப்பார்களா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** மத்திய அரசாங்கத்தின் கட்சியைச் சேர்ந்த சுரேந்திரன் அவர்கள் உட்பட எல்லாக் கட்சித் தலைவர்களும் இதற்கு உடனடியாகப் பரிகாரம் காண வேண்டுமென்று இருக்கின்ற சூழ்நிலையை வற்புறுத்திக் கூறியிருப்பதை மத்திய அரசாங்கம் கவனத்தில் கொள்ளும் என்று நம்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அவசியம் இல்லையென்று கருதி, இதற்கான அனுமதியை மறுக்கிறேன்.

### (4) கவன ஈர்ப்பு.

### நெசவாளர்களுக்கு மின்வெட்டின் காரணமாக பருத்தி நூல் கிடைக்காமல் இருக்கும் நெருக்கடி பற்றி மத்திய அரசுக்குத் தெரிவிப்பது குறித்து

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜெயராமன் அவர்கள் ஒத்திவைப்புத் தீர்மானத்தின் கருத்தின் அடிப்படையிலேயே அதே பொருள் குறித்து ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள் . . . . .

**திரு. கி. ஜெயராமன்:** சிறிது மாற்றம் இருக்கிறது . . . .



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அந்த மாற்றத்தை மட்டும் சுட்டிக் காட்டி கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வாருங்கள்.

**திரு. கி. ஜெயராமன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அண்மைக் காலத்தில் கைத்தறிக்கு வேண்டிய பருத்தி நூல் விலை அதிகமாகி மின்வெட்டின் காரணமாக மேலும் விலை உயர்ந்து நெசவாளப் பெருமக்கள் வேலைவாய்ப்பு இழந்து அவதிக்குள்ளாவதால், இந் நெருக்கடியைப் போக்க மாநில அரசு மத்திய அரசின் கவனத்திற்கு இதனைக் கொண்டுவர வேண்டிய அவசரப் பொது முக்கியமானக் காரியத்தை மாண்புமிகு தொழிலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** துணைத் தலைவர் அவர்களே, மின்சக்தி வெட்டுக்குப் பிறகு நூல் கிடைக்காததன் விளைவாக நமது மாநிலத்தில் கைத்தறி நெசவாளர்களின் அவல நிலையை இந்தியத் தலைமை அமைச்சரின் நாட்டத்திற்கு இம்மாநில முதலமைச்சர் அவர்கள் 24—2—1973 அன்று நேர்முகக் கடிதம் ஒன்றை இந்தியத் தலைமை அமைச்சருக்கு எழுதியுள்ளார்.

மின்வெட்டின் காரணமாக பருத்தி நூல் உற்பத்தி மிகவும் குறைந்துவிட்டது. நமது மாநில உற்பத்தி முழுவதும் இம்மாநிலத்தில் உள்ள நெசவாளர்களின் தேவைகளின் மூன்றில் ஒரு பங்கினை நிறைவு செய்யத்தான் போதுமானதாக தற்போதைய நிலை உள்ளது.

சாதாரணமான காலத்தில் சிட்ட நூல், கூம்புருளை நூல் (Cone yarn) மொத்த உற்பத்தி திங்கள் ஒன்றுக்கு முறையே 30,000, 45,000 பொதிகளாகும். நமது மாநிலத்தின் தேவை முறையே 20,000, 35,000 பொதிகளாகும். தற்போதைய மின்வெட்டின் காரணமாக நமது மாநிலத்தில் உள்ள ஆலைகள் அனைத்திலும் மேற்சொன்ன ஒவ்வொரு வகையிலும் மொத்தம் 6,000 பொதிகளே உற்பத்தியாகின்றன. இப்பற்றுக்குறையை நிறைவு செய்ய, இம்மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் இருவகை நூல் முழுவதையும் கைத்தறி, விசைத்தறி நெசவாளர்களுக்கு வழங்குவதற்காகக் கட்டுப்பாட்டு விலையில் கொள்முதல் செய்ய இம்மாநில அரசுக்கு அதிகாரமளிக்கவும் தேவையின் எஞ்சிய பகுதியை பிற இடங்களிலிருந்து பெற்று இம்மாநிலத்திற்கு ஒதுக்குமாறும் பஞ்சாலைக் கமிஷனருக்கு ஆணையிடுமாறும் இந்தியத் தலைமை அமைச்சர் கேட்டுக்கொள்ளப்பட்டார்.

நமது மாநிலத்தின் மின்வெட்டின் பயனாக, 20 லட்சம் கைத்தறி நெசவாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர்களுக்கு இத்தன்ய நாட்களில் துணை செய்யும் வகையில் வேறு எந்தவித வழிதுறையும் இல்லை

என்றும் எனவே அவர்கள் தேவைகளை நிறைவு செய்ய நூல் கொள்முதல் செய்வதும் நியாயமான விலையில் அவர்களுக்கு நூல் வழங்குவதும் அரசின் கடமையாகும் என்பதும் இந்தியத் தலைமை அமைச்சருக்கு வலியுறுத்தப் பட்டுள்ளது.

இதற்கிடையில் பருத்தி நூல் பங்கீடு குறித்து விவாதிப்பதற்காக, 1973 பிப்ரவரி 26-ல் மத்திய வாணிக அமைச்சர் கூட்டிய கூட்டத்தில், அனைத்திந்திய அளவில் பருத்தி நூல் உற்பத்தியில் 20 சதவீதம் மட்டுமே குறைந்துள்ளது என்றும், கிடைக்கும் பருத்தி நூல் சரி சமவீத அடிப்படையில் பங்கிடப்படும் என்றும் மத்திய அமைச்சர் கூறியுள்ளார். இதன்படி பார்த்தால் இம்மாநிலத்தின் தேவை 80 சதவீத அளவிற்கு நிறைவு செய்யப்படும். அதாவது, இம்மாநிலத்திற்கு 16,000 பொதிகள் சிட்ட நூலும், 28,000 பொதிகள் கூம்புருளை நூலையும், உள்ளாடைக்கான நூலும் ஒதுக்கப்படும். இக்கூட்டத்தின் நடவடிக்கைகளைத் தலைமை அமைச்சரின் நாட்டத்திற்கு கொண்டு வந்தும், நமது எஞ்சிய தேவையான 8,000 பொதிகள் சிட்ட நூலையும், 20,000 பொதிகள் கூம்புருளை நூலையும், உள்ளாடைக்கான நூலையும் ஒதுக்குமாறு வேண்டிக் கொண்டும் முதலமைச்சர், தலைமை அமைச்சருக்கு 28—2—1973 அன்று மீண்டும் எழுதியுள்ளார்.

மேலும் மின் உற்பத்தி இயந்திரங்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய விரைவான நடவடிக்கை எடுக்குமாறும் அந்த இறக்குமதிகளுக்கு சுங்க வரியினின்றும் விலக்களிக்குமாறும், இந்த மின் உற்பத்தி இயந்திரங்களில் பயன்படுத்தப்படும் எண்ணெய் மீதான ஆயத்தீர்வையை தள்ளுபடி செய்யுமாறும் வேண்டி, முதலமைச்சர் 22—2—1973 அன்று இந்தியத் தலைமை அமைச்சருக்கு எழுதிய கடிதம் மூலம் இந்திய அரசை வேண்டியுள்ளார். மேலும், இடர்தணிப்பிற்கான நடவடிக்கைகளை விவாதித்து, ஒருங்கிணைந்த ஓர் தேசிய திட்டத்தை வகுப்பதற்கென மாநில முதலமைச்சர்கள் மாநாடு ஒன்றைக் கூட்டுமாறும் தலைமை அமைச்சர் அக்கடிதத்தின் வாயிலாக வேண்டப்பட்டுள்ளார்.

## 5. 1973-74-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார். எங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் டிமாண்டு நோட்டீசில் டிமாண்ட் நம்பர் 48-ல் 'காபிடல் அவுட்லே ஆன் பப்ளிக் ஹெல்த்'தில் அதற்கான கோரிக்கைத்



தொகை அச்சடிக்கப்படவில்லை. அது இல்லாத காரணத்தால் கட் மோஷன் கொடுக்க வழி இல்லாத நிலை இருக்கிறது. அதற்குப் பரிகாரம் காண வேண்டும். The Demand amount has not been printed.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** I will look into it and take necessary action விசாரித்துச் சொல்லுகிறேன்.

**திரு. வி. கே. இராஜாப் பிள்ளை:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் நாட்டு வளத்தையும் மக்கள் நல்வாழ்வையும் கருதி இந்த அவையிலே சமர்ப்பித்திருக்கும் வரவு-செலவுத் திட்டத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்த வரவு செலவுத் திட்டத்தில் வரவுக் கணக்கில் 465.56 கோடி ரூபாயாகவும் செலவுக் கணக்கில் 465.07 கோடி ரூபாயாகவும்—49 லட்சம் ரூபாய் உபரிக் கணக்கில் இந்த வரவு-செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்திருக்கிறார்கள். அதுவும் குறிப்பாக, எந்த வித வரியும் நாட்டு மக்கள் மேல் சுமத்தாமல் சமர்ப்பித்திருக்கிறார்கள் என்றால் அதை யாரும் பாராட்டாமல் இருக்க முடியாது.

நமது வரவு செலவுத் திட்டத்தை பார்க்கும் அதே சமயத்தில் சமீபத்தில் மத்திய அரசால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் வரவு செலவுத் திட்டத்தைப் பற்றி விமர்சிக்க விரும்பவில்லை என்றாலும் அந்த ஆளும் கட்சியினர் கூறி இருக்கும் கருத்துக்களை இந்தச் சமயத்தில் எடுத்துக் கூறுவது உசிதமாக இருக்குமென்று கருதுகிறேன். அந்த ஆளும் கட்சியைச் சேர்ந்த திரு. சந்திர சேகரன் அவர்கள்—

It is just a hesitant and nervous doctor attempting a major operation,

என்று கூறியிருக்கிறார்கள். அது போலவே ஆளும் கட்சியைச் சேர்ந்த மாளவியா, கிரிதாரி பிரசாத் ஆகியவர்களும் அந்த வரவு செலவுத் திட்டத்தைப் பற்றிக் கண்டித்துப் பேசியிருக்கிறார்கள். அந்த வரவு செலவுத் திட்டத்தில் 292 கோடி ரூபாய்க்கு புதிய வரிகளை விதித்திருப்பது மக்களை எவ்வளவு வாட்டி வதைக்கிறது, அதே சமயத்தில் நமது வரவு செலவுத் திட்டம் எந்த வித வரியும் இல்லாமல் நாட்டுமக்களுக்குப் பல நன்மைகளை உள்ளடக்கிக் கொண்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது என்று பார்க்கும்போது எதிர்க்கட்சியின்

எல்லாம் இதை மனப்பூர்வமாக வரவேற்பதற்குப் பதிலாக எதிர்க்கின்ற நோக்கத்துடன் எதிர்க்கிறார்கள் என்று சொன்னால் அதற்காக வருந்தாமல் இருக்க முடியாது.

(திரு. நா. வீராசாமி தலைமை)

ஸ்தாபன காங்கிரஸைச் சார்ந்த மகாவீர் தியாகி கூட மத்திய அரசின் வரவு செலவுத் திட்டத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது Mr. Chavan has proved a talented pick pocket " என்று கூறியிருக்கிறார்கள்.

இதையெல்லாம் விட்டுவிட்டு இங்கு ஸ்தாபன காங்கிரஸில் உள்ள ஒருசில உறுப்பினர்கள் இந்த வரவு செலவுத் திட்டத்தை கண்டித்ததோடு கலைஞர் அவர்கள் இந்த அவையில் இந்த வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்திருக்கிறார்கள் என்று சொன்னால் அவர்களுக்கு எவ்வளவு நெஞ்சுரம் இருக்க வேண்டுமென்றும் கூடக் கேட்கிறார்கள். அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புவது கலைஞர் அவர்களுக்கு உண்மையிலேயே நெஞ்சுரம் இருக்கிறது. அது இந்த வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பிப்பதில் மட்டுமல்ல; அவர்கள் வாழ்க்கையிலேயே நெஞ்சுரத்துடன்தான் செயல்படுகிறார்கள் என்பதையும் அவர்கள் அறிந்துகொள்ளவேண்டும். சமீபத்தில் நடந்த திருமணத்தில் கூட அவர்களது நெஞ்சுரத்தைக் காட்டியிருக்கிறார்கள்.

அந்த முறையில் இப்படிப்பட்ட நல்லதொரு நிதிநிலை அறிக்கையை அளிக்க அவர்களுக்கு எந்தவிதமான நெஞ்சுரமும் தேவையில்லை. அதற்கு இங்கு எந்தவிதமான அவசியமும் இல்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். ஏழை எளியவர்கள், பாட்டாளி தொழிலாளி மக்கள், விவசாயிகள், நடுத்தர மக்கள், அரசு அலுவலர்கள் இப்படி எல்லோருக்கும் பயன்படும்படியான அளவிற்கு வேளாண்மைத் துறைக்கு மட்டும் 55 கோடி ரூபாய் இந்த வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல் விவசாயிகளுக்குக் கடனாக 1973-74-ம் ஆண்டுக்கு கொடுப்பதற்கு 100 கோடி ரூபாய் அளவிற்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் இந்த வரவு செலவுத் திட்டத்தில் கண் இழந்தவர்களுக்கு கண் ஒளி வழங்குவதற்காகவும், பிச்சைக்காரர்கள் மறுவாழ்வுத் திட்டத்திற்காகவும், வழிவகைகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. கைத்தறியாளர்கள் துயர் துடைக்கவும், தொழில் வளர்ச்சிக்காக ஸிட்கோ, ஸிப்காட், டான்ஸி மூலம் கடன் வழங்கவும் இந்த வரவு செலவுத் திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. கிராம முன்னேற்றம், சாலை இணைப்புகள் போன்றவற்றை அமல் நடத்தவும் ஊராட்சி ஒன்றியங்கள் முன்பு ஏ,பி,ஸி,டி, என்று இருந்ததை மாற்றி இப்போது ஆறு பகுதிகளாகப் பிரித்திருப்பதால்



ஊராட்சி ஒன்றியங்களுக்கு அதிக மானியம் கிடைக்கக்கூடிய வகையிலும் இந்த வரவு செலவுத் திட்டத்தில் வகை செய்யப்பட்டிருக்கிறது.

குடிசை மாற்று வாரியம், குடிநீர் வாரியம், குடியிருப்பு மனைச் சட்டம் முதலியவை நல்லமுறையில் அமல்படுத்தப்பட்டிருக்கின்றன.

அரசு அலுவலர்களுக்கு ஆயிரம் ரூபாய்க்குக் குறைவாக சம்பளம் வாங்குகிறவர்களுக்கு பத்து ரூபாய் அகவிலைப்படி கூடுதலாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. சென்னையில் வீட்டு வாடகைப்படி 15 சதவிகிதம் ஆகவும் மற்றபடி தகுந்த அளவிலும் உயர்த்தப்பட்டிருக்கிறது. இங்கு எடுத்துக் கூறினார்கள், அந்த பத்து ரூபாயை ப்ராவிடண்ட் பண்டில் சேர்ப்பதற்குப் பதிலாக அவர்கள் கையிலே கொடுத்துவிட வேண்டுமென்று கூறினார்கள். இதைப் பார்க்கும் போது அவர்கள் எண்ணுகிறார்கள், அரசாங்க அலுவலர்கள் அத்தனை பேர்களும் கையில் கிடைக்கிற சம்பளம் முழுவதையும் அந்தந்த மாதத்திலேயே அவர்கள் செலவழிப்பதுபோலவும் ஆக இந்த பத்து ரூபாயை அவர்கள் கையில் கொடுத்தால்தான் அவர்களுக்கு நன்மை கிடைக்கும் என்ற நிலையில் எண்ணுகிறார்கள். உண்மை அப்படி அல்ல. இப்போது கொடுக்கப்படும் இந்த பத்து ரூபாயையும் அவர்கள் கையில் கொடுத்துவிட்டால் அதிகமாகச் செலவு செய்து விடுவார்கள். எனவே அதை அவர்கள் க்ஷேம நல நிதிக் கணக்கில் வைத்து விட்டால் அது அரசாங்க அலுவலர்களுக்குத்தான் உதவியாக இருக்குமே தவிர உடனடியாக அவர்கள் கையில் இந்த பத்து ரூபாயைக் கொடுப்பதால் அவர்கள் பயனடைவார்கள் என்று சொல்லமுடியாது. அவர்களுக்கு இரண்டு முறைகளில் அரசாங்கம் உதவி செய்திருக்கிறது. தாழ்த்தப்பட்டோர் நலனுக்காகவும் இந்த நிதிநிலை அறிக்கையில் நல்ல முறையில் வகை செய்யப்பட்டிருக்கிறது. இதற்கெல்லாம் மேலாக உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்ற முறையில் குத்தகைக்கு உழுது பாடுபட்டு வருகிற உழவர்களுக்கு அந்த நிலமே சொந்தமாகும் முறையில் சட்டம் கொண்டுவரப்படுவதோடு, அவர்களுக்கு நிதி உதவி அளிக்கவும் குத்தகைதாரர் நிதி உதவிக் கழகம் என்று ஒன்று அமைக்கப்படுவது உலக வரலாற்றிலேயே இல்லாத ஒரு புரட்சிகரமான திட்டமாகும் என்பது நான் கூறாமல் விளங்கும். பூர்ஷ்வா கூட்டத்தை, பணக்கார ஆதிக்கத்தை ஒழித்து, 30 சதவிகிதம் உள்ள ஏழை எளியவர்கள், பாட்டாளிகள் இவர்களுக்கு நன்மை செய்கிற இந்த வரவு செலவுத் திட்டத்தை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். கடைசியாக (மணியடிக்கப்பட்டது.) குமரி மாவட்டத்திற்கு வருகிறேன். குமரி மாவட்டத்தை பொறுத்தவரையில் அங்கு ஒன்றுமே செய்யவில்லை என்ற

[திரு. வி. கே. இராஜாப்பிள்ளை] [1973 மார்ச் 3

தப்பான ஒரு கருத்து நிலவி வருகிறது. ஆனால் அப்படி அல்ல என்பதை எடுத்துக்காட்டுவதற்காக இங்கே டீட்டெயில்ட் பப்ளிக் வொர்க்ஸ் பட்ஜட் புத்தகத்தில் 226-ம் பக்கத்திலிருந்து 261-ம் பக்கம் வரை பார்த்தோமானால் பள்ளிக்கூடங்கள் கட்ட, விஞ்ஞான ஆய்வுக்கூடங்கள் கட்ட, கட்டி முடித்தது இவற்றிற்காக லட்சம் அல்ல கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. அதேபோல பாமிலி ப்ளானிங் சென்டேர்ஸ், சர்ஜிக்கல் வார்ட்ஸ் கட்டுவதற்கும் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி): இன்றையதினம் இருபது உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள். ஆளும் கட்சி உறுப்பினர்கள் ஏழு நிமிடங்களுக்குள்ளாக அவர்கள் பேச்சை முடித்துக்கொள்ளும்படிக் கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, திரு. கே. பி. கோபால்.

* திரு. கே. பி. கோபால்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே. 1973-74-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது ஒரு சில கருத்துக்களை கூற வாய்ப்பளித்தமைக்கு முதலில் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அண்ணா வழியில் அயராது பணி புரியும் அரசு என்று கூறிக்கொண்டும் அரசுத் திட்டங்களுக்கு அப்பாற்பட்ட செலவினங்களில் சிக்கனம் என்றும் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் இவர்களுக்கு ஊதிய உயர்வு ஏற்றமுடியாததற்கு நிதிப் பற்றாக்குறையைக் காரணம் காட்டி அதற்கு மாறாக அரசு விளம்பரங்களிலும் ஆடம்பர விழாக்களிலும் செலவு செய்வதைப்பற்றி முதலில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அண்ணா வழி செல்லும் அரசு என்று கூறினார்கள். அறிஞர் அண்ணா அவர்கள் முதல் அமைச்சராக இரண்டு ஆண்டுக் காலம் இருந்தபோது பத்திரிகைகளுக்கும், தினத்தாள்களுக்கும் கொடுத்த விளம்பரங்களுக்கான செலவு மொத்தம் ரூ. 2.18 லட்சம். அடுத்த நான்காண்டுகளில் இந்த பத்திரிகைகள், தினத்தாள்கள் இவற்றிற்கு கொடுத்த விளம்பரங்களுக்கான செலவு ரூ. 35.18 லட்சம். இதுதான் அண்ணா வழியா என்று முதலில் கேட்க விரும்புகிறேன்.

இரண்டாவதாக, இதுபோன்ற விளம்பரங்கள் கொடுப்பதில் ஒருசில வழிமுறைகள் உள்ளன. டிசம்பர் மாதம் நடந்த பரிசுச் சீட்டுக் குலுக்கலுக்கு, சனவரி மாதம் முரசொலியில் விளம்பரம் கொடுக்கப்படுகிறது. சனவரி மாதம் 10-ம் தேதி பரிசுச் சீட்டு குலுக்கல், 11-ம் தேதி தினத்தந்தி, தினமணி போன்ற முக்கியமான பத்திரிகைகளில் இலவசமாகவே செய்தி என்று அவர்கள் செய்தி தெரிவித்திருக்கிறார்கள். அப்படியிருந்தும் முரசொலியில் சனவரி 12-ம் தேதி அதுவும் ஒரு விளம்பரமாக வருகிறது. அண்ணா அவர்கள் முதல் அமைச்சராக



1973 மார்ச் 3] [திரு. கே. பி. கோபால்]

இருந்தபோது இரண்டு ஆண்டுகளில் முரசொலிக்குக் கொடுத்த விளம்பரச் செலவு ரூ. 8,800. அதற்கு அடுத்த நான்கு வருடங்களில் கொடுக்கப்பட்ட விளம்பரங்களின் செலவு ரூ. 1.22 லட்சம். இந்தத் தொகை யாருடைய பணம்? தரித்திர நாராயணர்கள் என்று நிதிநிலை அறிக்கையில் கூறியிருக்கிறீர்களே, அவர்கள் மறைமுகமாக கலால் வரி மூலம் கொடுத்த வரிப்பணம்தான் அது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இந்த பேரவையில் ஜூன் 1971-ல் ஒரு உறுதியைக் கொடுத்தார்கள். அதாவது அமைச்சர்கள் சுற்றுப்பயணம் செய்யும்போது கட்சிக் கூட்டங்களில் கலந்து கொண்டால், ஒரு கூட்டத்தில் கலந்து கொண்டால்கூட அவர்களுடைய கட்சியிலிருந்துதான் பயணப் படியைப் பெற்றுக் கொள்வார்கள் என்று. நான் குற்றம் சாட்ட விரும்புவது மக்களுடைய வரிப்பணத்தில் அமைச்சர்கள் சுற்றுப்பயணம் என்ற முறையில் தங்கள் கட்சிப் பணிகளில் ஈடுபடுகிறார்கள் என்பதாகும். 11-00 மு.ப.
இதற்காக, மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பில் 1971-72-ல் ரூ. 5.82 கோடியாக இருந்தது, 1973-74-ல் ரூ. 8.97 கோடி எனவும், பல்வகை என்ற தலைப்பின் கீழ் 1971-72-ல் ரூ. 18.45 கோடி என்றிருந்தது, 1973-74-ல் ரூ. 22.54 கோடியாகவும் உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். திட்டங்களுக்கு அப்பாற்பட்ட செலவினங்களில் சிக்கனம் என்று நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதுதான் சிக்கனமா? அசாங்க நிர்வாகத்தில் கவனக் குறைவாலும், காலதாமதத்தாலும் அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய வருமானம் குறைகிறது. அரசுக்கு இழப்பும் ஏற்படுகிறது. தமிழ் நாட்டில் வன இலாகா மூலம் தேக்கு, சந்தனம் போன்ற விலை உயர்ந்த மரங்கள் வளர்க்கப்படுகின்றன. முக்கியமாக மதுரை மாவட்டத்தில் குமரிக் காடு என்ற திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் தேக்கு பயிரிடப்படுகிறது. அப்படியிருந்தும் 1971-72-ல் காட்டு இலாகா மூலம் கிடைத்த வருமானம் ரூ. 4.56 கோடி. ஆனால் 1973-74-ல் அது ரூ. 3.67 கோடியாக குறைந்திருக்கிறது.

அரசாங்க நிர்வாகத்தில் கவனக்குறைவாலும், காலதாமதத்தாலும் வருமானம் குறைகின்றது. இதனால் அரசுக்கு நஷ்டமும் ஏற்படுகிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இது அட்மினிஸ்டிரேடிவ் ரீசன்ஸ் என்று குறிப்பிடப்பட்டிருந்தாலும், அவற்றைச் சுட்டிக்காட்டுவது என் கடமையாகும். ஜூன் மாதம் 1968-ம் ஆண்டு பொதுப் பணித்துறையில் பணியாற்றிய 7 அதிகாரிகள் தண்டிக்கப்பட்டார்கள். ஆனால் வேலைநீக்கம்

செய்யப்பட்டது 1969 டிசம்பர். 1969 டிசம்பர் மாதம் வரையில் அவர்களுக்கு சப்சிஸ்டென்ஸ் அலவன்ஸ் கொடுத்த வகையில் அரசுக்கு ரூ. 59,000 இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த அரசு பல குழுக்களை நியமித்தது. இராஜமன்னார் குழு அமைத்ததற்காக ரூ. 2.33 லட்சம் செலவாகியிருக்கிறது. இதிலிருந்தே ஒவ்வொரு குழு அமைப்பதற்கும் எவ்வளவு செலவாகும் என்பதை நாமே தெரிந்து கொள்ளலாம். இப்போது டாக்டர் எம். டி. பால் அவர்கள் தலைமையில் 'சர்வீஸ் கண்டிஷன் பார் டீச்சர்ஸ் ஆப் பிரைவேட் ஸ்கூல்ஸ்' என்பதைப் பற்றி ஆராய ஒரு குழு நியமிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் அளித்துள்ள பரிந்துரையில் சுட்டிக்காட்டியபடி தனியார் பள்ளி ஆசிரியர்கள், ஆசிரியர் அல்லாத பணியாளர்கள் சம்பந்தப்பட்ட குறைகளை நிவர்த்தி செய்ய இந்த நிதிநிலை அறிக்கை வழிவகை செய்யவில்லை என்று கூறிக்கொள்கிறேன்.

கைத்தறி நெசவாளர்கள், கோரிக்கைகள் தீர்க்கப்படுவதற்காக திரு. சந்தானம் அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. விவசாயத் தொழிலாளர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காக திரு. கார்த்திகேயன் அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த விவசாயிகளுக்குக் குறைந்த பட்சம் ஊதியம் நிர்ணயம் செய்யவேண்டுமென்பதற்காக அந்தக் குழு நான்கு மாவட்டங்களில் சுற்றுப்பயணம் செய்து இருக்கிறது. அவர்கள் நம்முடைய மாநிலம் முழுவதும் சுற்றிப்பார்த்து ஒரு அறிக்கை கொடுத்து, அரசு அதைப் பரிசீலித்து, அதன்மீது ஒரு முடிவு எடுப்பதற்கு காலதாமதமாகலாம். ஆகவே, தற்காலிகமாக அந்த அறிக்கை வருவதற்கு முன்னால் அந்த கைத்தறி நெசவாளர்களுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் ஒரு தற்காலிக கூலி நிர்ணயத்தை அரசு செய்யத் தவறி விட்டது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தற்போதுள்ள மின்சாரப் பற்றாக்குறைக்கும், மின்சார வெட்டிற்கும் இந்த அரசே முழுப் பொறுப்பும் ஏற்றுக்கொள்ளவேண்டும். அவர்களுடைய கவனம் மின்சார உற்பத்தியை எப்படிப் பெருக்குவது என்பதில் இல்லாமல், அதைப் பற்றிச் சிந்திக்காமல், கிராமங்களுக்கு மின்சார இணைப்புத் தருகிறோம் மின்சாரப் பூர்த்தி விழா கொண்டாடுகிறோம் என்பதில் தான் கவனம் செலுத்தினார்கள். மேலும், திட்டங்கள் நிறைவேற்றுவதில் காலதாமதம் ஏற்பட்டது. மதுரை மாவட்டத்தில் சுருளியாற்று நீர் மின்நிலைத் திட்டவேலை ஆரம்பித்து சுமார் 1½ ஆண்டுகாலமாக நடந்து வந்தபோதிலும், எந்த அளவுக்கு அந்த வேலை நடைபெற்று இருக்கிறது என்றால் அங்கே ஊழியர்களுக்கான



கட்டடங்கள் பேஸ்மெண்ட் வரையில் தான் வந்திருக்கின்றன. காங்கிரஸ் ஆட்சிகாலத்தில் அதே பகுதியில் பெரியார் நீர் மின்சாரத் திட்டம் செயல் படுத்தப்பட்டபோது குறிப்பிட்ட ஆண்டுக்கும் ஒரு ஆண்டு முன்னதாகவே நிறைவேற்றப்பட்டதோடு மட்டுமல்லாமல் அந்தத் திட்டத்திற்கு திட்டமிட்டதற்கும் குறைவான செலவில் அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டது. இதற்கான திறமை எங்களுடைய முன்னாள் அமைச்சர் வெங்கடராமன் அவர்களுக்கும், அன்று இருந்த மின்சாரப் பிரதம பொறியாளர் அவர்களுக்கும் தான் சாரும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். மின்சார நிறைவு விழா கொண்டாடுவதற்காக பிரதம மின் பொறியாளர் அவர்கள் ஒரு அறிக்கை அனுப்பியிருக்கிறார்கள். ரூ. 15,000 லிருந்து ரூ. 3,000, ரூ. 1,000 வரை செலவிடலாம் என்று அறிக்கை அனுப்பியிருக்கிறார்கள். ஆயிரம் ரூபாய் முதல் ரூ. 3,000 வரை விழா கொண்டாடுவதற்குப் போதாதா, ரூ. 15,000 வரை செலவிடலாம் என்று சொல்வது சாமானியர் அரசு, ஏழை எளிய மக்களின் அரசு என்பதற்கு எடுத்துக்காட்டா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நிலம் இல்லாதவர்களுக்கு நிலப்பட்டா என்று கூறப்படுகிறது. நம்முடைய தோழர் திரு. சுப்பையா அவர்கள் கூட 1,57,000 கொடுக்கப்பட்டது என்று அதிகாரிகள் கொடுத்திருக்கிற கணக்குத் தவறு என்று குறிப்பிட்டார்கள். என்னுடைய பகுதியான உத்தமபாளையம் தாலுக்கா கூடலூர் கிராமத்தில் நான் நேரடியாகக் கண்ட விஷயத்தைச் சொல்கிறேன். 8—10—1972 அன்று 183 பேர் மேலூருக்குச் சென்று பட்டா வாங்கினார்கள். அவர்களிடத்தில் பட்டா இருக்கிறதே தவிர அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடம் எது என்று தெரியவில்லை. அந்த அதிகாரிகள் என்ன நினைத்தார்கள் என்றால் இன்னொரு பகுதியில் இருக்கும் நத்தம் புறம்போக்கில் இருக்கிறவர்களை காலி செய்து விட்டு, அவர்களுக்கு அங்கே குடியிருப்புக்கொடுக்கலாம் என்று நினைத்தார்கள். அந்த இடத்தில் ஏற்கெனவே நிலம் இல்லாதவர்கள் ஏழை விவசாயிகள் இருக்கிறார்கள். எனவே அந்த 183 பேரும் என்ன செய்தார்கள் என்றால் கூடலூர் பஞ்சாயத்துக்குச் சொந்தமான உர டிப்போவின் இடத்தில் 'மதுரை முத்தண்ணு காலனி' என்று சொல்லி அங்கே போய் குடியேறிவிட்டார்கள். அங்கேயிருக்கும் அதிகாரிகளுக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. அவர்களுக்கு ஏற்கெனவே பட்டா கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கிராமத்தில் கடந்த 10 தினங்களாக தெருக்களிலும் வீடுகளிலும் சுத்தம் செய்ய முடியாத நிலை இருக்கிறது. தரித்திர நாராயணவர்களாக இருக்கும் அடித்தள மக்களின் பிரதிநிதி என்று அடிக்கடி கூறுகிறார்களே, அவர்களுக்கு என்ன

உடனடியாகத் தேவை என்பதை அரசு எண்ணிப் பார்க்கவேண்டும். அவர்களுக்கு உடனடியாகத் தேவை வேலைவாய்ப்புத்தான் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். பக்கிங்காம் கால்வாய் சீரமைப்பும், சென்னை பெருநகர் வளர்ச்சித் திட்டமும் அல்ல என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதற்காக அந்தத் திட்டங்களை நான் எதிர்க்கிறேன் என்பது அல்ல. அதற்கு முன் உரிமை கொடுக்கத் தேவையில்லை. அவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கக்கூடிய வகையில் தொழில் துறையில் அதிக கவனம் செலுத்தியிருக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

1965-66 காங்கிரஸ் ஆட்சியில் மொத்த வருமானம் சுமார் 172 கோடி. அதில் சுமார், 6,56 கோடி தொழிற் அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்டது. ஆனால் 1973-74 ஆண்டில் ரூ. 465 கோடிக்கு வருமானம் இருந்தாலும் ரூ. 4.48 கோடிதான் தொழில் அபிவிருத்திக்கான கோரிக்கையில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் வேலையில்லாத் திண்டாட்டத்தை நாம் எப்படிப் போக்க முடியும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டு அடுத்த உறுப்பினர் அழைக்கப்பட்டார்.)

**திரு. வீ. செல்லதுரை:** சட்டப் பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே. 1973-74 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தின் அடிப்படையில் தமிழகத்தின் முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களால் வாசித்தளிக்கப்பட்ட இந்தத் திட்டம் தமிழகத்திலுள்ள ஏழை, எளிய மக்களுக்கும் சமுதாய அடித்தட்டிலே இருக்கின்ற வறியவர்களுக்கு ஏகோபித்த எல்லா தமிழ் மக்களுக்கும் கலைஞர் அவர்கள் வாரி வழங்கிய திட்டம் "பஞ்சாமிர்த" திட்டமேயாகும். இவர்களால் சொல்லலங்காரமாக பேச முடியும், எழுதமுடியும், என்று எண்ணிக் கொண்டிருந்த மாற்றுக் கட்சியினர்க்கு மனமகிழத்தக்க வகையில் உண்மையான சமதர்ம பூங்காவை அமைக்கவும், பொது உடமைத் தத்துவம் பூத்துக் குலுங்கவும் தமிழக அரசு செய்து இருக்கிற சாதனை, மதராஸ் அலுமினியக் கம்பெனியை நமது அரசு பொது உடைமையாக ஏற்றுக் கொண்ட முதல் நடவடிக்கைக்கு என்னுடைய சார்பிலும், மேட்டூர் தொழிலாளர் சார்பிலும் என் இதயம் கனிந்த நன்றியை தெரிவித்துக் கொள்வதுடன், அதே போன்று இப்பொழுது தனியார் நடத்திவரும் ஐந்து ஸ்டேட் லாரிகளை முதல் முதலாக அரசு உடைமையாக்கி இனி தனியாருக்கு கொடுக்கும் ஐந்து ஸ்டேட்பர்மிட்டை அரசே ஏற்றுக்கொள்வதுடன், மற்றும் அதிக வருமானமுள்ள, தேயிலை, காப்பி போன்ற தனியார் நிறுவனங்களையும் அவசியம் அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, அரிசனங்களுக்கும், பின் தங்கிய வகுப்பினருக்கும் இத்திட்டத்தில் முன்னேற வாய்ப்பு அளித்த இந்த "பஞ்சாமிர்த" திட்டத்தை



என மனமார வரவேற்று முதல்வருக்கு நன்றி கூறி, மேலும் என் தொகுதியில் செய்ய வேண்டிய நல்ல காரியங்கள் பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

சேலம் மாவட்டத்தில், ஓமலூர் வட்டம் மிகவும் பின் தங்கிய பகுதியாகும். என் தொகுதியின் தலைமையிடம் ஓமலூர் நகரம். அங்கே அரசு ஊழியர்களின் குடும்பங்கள் சுமார் 500 பேர் பல்வேறு துறைகளில் பணிபுரிகிறார்கள். அவர்களுக்கு வீட்டு வசதி இல்லாமல் மிகவும் அவதிப்படுகிறார்கள். அங்குள்ள அரசு ஊழியர்களுக்கு வீட்டு வாரியம் வீடுகள் கட்டித் தர வேண்டுமாய் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஓமலூர் நகரத்தில் குடி தண்ணீர் பஞ்சம் இருந்து வருகிறது. இதனைப் போக்க, மேட்டூரிலிருந்து சேலத்திற்கு தாரமங்கலம் வழியாக காவேரித் தண்ணீர் சப்ளை செய்யப்படுகிறது. ஓமலூருக்கு அருகில் சுமார் 10 கிலோ மீட்டர் தூரத்திதில்தான் தாரமங்கலம் உள்ளது. ஆகவே தாரமங்கலத்திலிருந்து, ஓமலூர் நகருக்கு காவேரித் தண்ணீர் சப்ளை செய்யலாம் அல்லது ஓமலூர் நகருக்கு அண்மையில் உள்ள பொறியியற் கல்லூரிக்குக் காவேரி தண்ணீர் சப்ளை செய்யப்பட்டு வருகிறது. அங்கிருந்து ஓமலூர் நகருக்கு சுமார் 4 கிலோ மீட்ட தூரம்தான் உள்ளது. அங்கிருந்து ஓமலூர் நகருக்குத் தண்ணீர் சப்ளை செய்ய ஏதுவாயிருக்கும்.

40 கோடி ரூபாய் செலவில் 6 வருடத்தில் குடி நீர்ப் பிரச்சினையைத் தீர்க்க திட்டமிடப்பட்டுள்ளது. அத்திட்டத்தில் ஓமலூர் நகரில் குடிநீர் பிரச்சனையைத் தீர்க்க, முன்னேடித்திட்டமாக அத்திட்டத்தில் சேர்க்குமாறு அரசைப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஓமலூரில் உள்ள அரசு மருத்துவ மனையில் நோயாளிகளுக்குப் போதிய படுக்கை வசதிகள் இல்லை, ஆகவே கூடுதலாக 20 பேர்கொண்ட படுக்கைகளையும், அதற்கான கட்டிடத்தையும் கட்டித் தருவதோடு அங்கே ஒரு எக்ஸ்ரே பிரிவு அமைத்துத்தர வேண்டுமாய் அரசைப் பணிவுடன் கேட்டு வேண்டுகிறேன்.

ஓமலூர் வட்டம் டேனிஸ்பேட்டை கிராமம் கருவாட்டுப்பாறை நிலத்திற்குத் தெற்கேயுள்ள ரிசர்வ் பாரஸ்ட் நிலத்தை உடைத்து, அதற்கு அருகாமையிலிருக்கும் கருவேப்பிலைக் காட்டையும் உடைத்து, விவசாயம் செய்ய நிலமில்லாத ஏழை மலைசாதியினருக்கும், அரிசனங்களுக்கும், ராணுவத்தில் உயிர் நீத்த தியாகிகளின் குடும்பங்களுக்கும், பின்தங்கிய குடும்பங்களுக்கும், பகிர்ந்து அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அங்கு பாரஸ்ட் ஏரியாவாக இருப்பதால்

[திரு. வீ. செல்லதுரை] [1973 மார்ச் 3

ஆடுகள் வளர்ப்பதற்கு வசதியாக உள்ளது. ஆகவே அங்கே ஒரு ஆட்டுப் பண்ணை அமைத்துக் கொடுக்குமாறு அரசைப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நிலமுள்ள அரிசனங்களுக்கு மாடுகள் வாங்கவும், கிணறுகள் வெட்டவும் அரசு மானியமாகக் கொடுப்பதுபோல், பம்ப்செட் வைப்பதற்கு மானியமாக ஒரு தொகையும், நீண்டகாலத் தவணை முறை கடனுகவும் ஒரு தொகையும், கொடுத்து அரிசன விவசாயிகளை ஊக்குவிக்க வேண்டுமாய் பணிவன்புடன் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தொப்பையாறு அணைத்திட்டம் நீண்ட காலமாகவே பேசப்பட்டு வருகிறது. அது கட்டி முடிக்கப்பட்டால் தருமபுரி மாவட்டத்தில் ஒரு பகுதியும், சேலம் மாவட்டத்தில் ஒரு பகுதியும், விவசாயப் பெருமக்களுக்கு பயனளிக்கத் தக்க வகையில் அமையும். கழக அரசு ஏற்பட்ட பிறகு, அதற்குரிய ஆக்கப் பூர்வமான பணிகள் நடைபெறுவதாக அறிகிறேன். வரும் 1974–75-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலேனும் இதனைச் சேர்த்துக் கொடுக்க வேண்டுமென்று மன்றும் அரசை வேண்டிக்கொள்கிறேன்.

அடுத்து, எனது பகுதி வறண்ட பகுதியாகவும், மிக, மிக, பின்தங்கிய பகுதியாகவும் உள்ளது. விவசாயம் செய்வதற்குப் பல ஏரிகளை அமைத்துக் கொடுத்தால் சில குறிப்பிட்ட பகுதிகள் எல்லாம் வளர்ச்சி அடைவதற்கு ஏதுவாக இருக்குமென எண்ணிக் கீழே குறிப்பிடுகின்ற ஏரிகளை எடுத்துக் பொதுப் பணித் துறையின்மூலம் அமைத்துக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் :—

1. மோரூர் ஏரி.
2. காடையாம்பட்டியில் ஒரு புதிய ஏரி.
3. கருவாட்டுப்பாறை ஏரி.
4. உம்பிலிங்கப்பட்டி ஏரி.
5. கணவாய் பகார் ஏரி.
6. வணிசம் பட்டி ஏரி.
7. வேப்பிலை ஏரி.
8. மூக்கனூர் புதிய ஏரி.

இந்த ஏரிகளைப் பொதுப்பணித் துறை மூலம் அமைத்து விவசாய பாசனத்திற்கு ஆவன செய்யவேண்டுமென்று தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.



1973 மார்ச் 3] [திரு. வீ. செல்லதுரை]

அடுத்து, ஓமலூர் வட்டம் காமலாபுரம் ஏரியாவில் சுமார் 300 ஏக்கர் சமமான நிலமுள்ளது. அங்கு விமானத்தளம் கட்டுவதற்கான இடத்தை ஆய்வு செய்துள்ளார்கள். தருமபுரி, சேலம் ஆகிய மாவட்டங்களுக்கு இடையில் இந்த இடம் அமைகிறது. தவிரவும், பர்ன்அன்கோ, டால்மியா, சேலம் இரும்பு ஆலை, சேலம் வணிகத் துறை மக்களுக்கும், அண்மையிலுள்ள மேட்டூரில் தொழிற்சாலை விரிவடைந்து வருவதாலும் போக்குவரத்திற்கு, இந்த இடம் மேலே குறிப்பிட்ட இடங்களுக்கு மையமான பகுதியாக இருப்பதாலும் இந்த இடத்தை அரசு மத்திய அரசிற்கு எடுத்துக் கூறி அதே இடத்தில் விமானத் தளம் அமைக்க அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையிலிருந்து ஓமலூர், தாரமங்கலம், சங்கிரி வழியாக கோவை செல்லும் பாதையிலும், சேலத்திலிருந்து மேட்டூருக்குச் செல்லும் பாதையிலும் ஓமலூரில் இருக்கின்ற ரயில்வே கேட்டினால் வண்டி வருகின்ற நேரத்தில் பாதைகள் அடைக்கப்பட்டு பல மணிநேரங்களுக்குப் போக்குவரத்துக்குத் தடை செய்யப்படுகிறது. இதனால் பொது மக்களுக்கும், அவசர நிமித்தமாகச் செல்லுகின்ற துரிதகால வண்டிகளுக்கும், பெரும் தடையாக இருக்கின்றன. ஆகவே, ரயில்வே கேட் அருகில் ஒரு மேம்பாலம் கட்டிப் போக்குவரத்துக்கு ஆவன செய்ய வேண்டுமென அரசைக் கேட்டுக்கொண்டு கலைஞர் அவர்களின் பஞ்சாமிர்தத் திட்டத்தை முழுக்க ஆதரித்து இப்போவையில் பேசவாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

* திரு. ஆ. கருப்பையா : தலைவர் அவர்களே, முதல்வர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற நிதிநிலை அறிக்கையை ஆதரித்து என்னுடைய ஒரு சில கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன்.

உண்மையில் இந்த நிதிநிலை அறிக்கை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உழவர் பெருங்குடி மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்திருக்கிறது என்பது என்னுடைய கருத்து. ஆண்டுக்கு ஆண்டு ஒரு நிதிநிலை அறிக்கை வரும் பொழுதும் இந்த நாட்டிலுள்ள ஏழை எளிய மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் இவர்களைக் கருத்தில்கொண்டு தீட்டப்படுகின்ற நிதிநிலை அறிக்கையாகத்தான் கலைஞர் அவர்கள் காலத்தில் அமைந்திருக்கிறது. இதை நாம் எண்ணிப் பார்க்கும்பொழுது உண்மையிலேயே இந்தக் காலத்தைப் பட்டமரம் துளிர்க்கும் காலமாகத்தான் தாழ்த்தப்பட்ட மக்கள் கருதுகிறோம். காரணம், போன ஆண்டு குத்தகை பாக்கிகளையெல்லாம் தள்ளுபடி செய்வதற்கான சட்டம் தீட்டப்பெற்றது. அதனால் பல்லாயிரக்கணக்கான உழவர் பெருமக்கள் பயனடைந்தார்கள். இந்த ஆண்டில் ஏழை எளியோர்களுக்காக 10,000 வீடுகள் கட்ட

வேண்டும் என்ற திட்டம் நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல, உழுபவர்களுக்கே நிலம் சொந்தமாக்கப்பட வேண்டும் என்றும் இந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே கலைஞர் ஆட்சியில் தாழ்த்தப்பட்டோருக்கு அளிக்கப்பட்ட ஒரு வரப்பிரசாதம் என்று நான் இதைக் கருதுகிறேன். இந்தத் திட்டத்தை தீட்டியதற்காக முதல்வர் அவர்களுக்கு உழவர் பெருங்குடி மக்கள் சார்பாகவும், தாழ்த்தப்பட்ட மக்களின் சார்பாகவும் நன்றி சொல்ல நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம்.

அதுதவிர, என்னுடைய தொகுதியைப் பொறுத்து ஒரு சில காரியங்களை நான் பேச முற்படுகிறேன். மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதற்குத் தமிழக அரசு தான் காரணம் என்று சொல்கிறார்கள். திருநெல்வேலி மாவட்டத்தில் தாம்பிரபாணியில் சேர்வலாறு மின்இணைப்புத் திட்டத்திற்கு 1968-ம் ஆண்டிலேயே நாம் மத்திய அரசிடம் அனுமதி கோரினோம். இந்த ஆண்டு வரைக்கும் இதற்கு அனுமதிவரவில்லை என்பதைத்தான் நாம் பார்க்கிறோம். இதற்கு காலாகாலத்தில் நமக்கு அனுமதி கொடுத்திருந்தால், இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற மின்சக்திப் பற்றாக்குறையை ஒருவாறு குறைத்து இருக்க முடியும். அதோடு மட்டுமல்லாமல், பாசனத்திற்கு வசதியாக அந்தத் தண்ணீரைப் பயன்படுத்தியிருக்க முடியும். நெல்லை மாவட்டம் தாம்பிரபாணி பாசனத்தின்கீழ் இருக்கும் ஒரு போக சாகுபடி நிலங்களை அதன் மூலம் இரு போக சாகுபடிக்குக் கொண்டுவந்திருக்க முடியும். அதன் மூலம் அதிகமாக 20,000 ஏக்கர் நிலம் பயனடைவதற்கு வழி ஏற்பட்டிருக்கும். மத்திய அரசிடமிருந்து சரியான காலத்தில் இந்த அரசுக்கு சரியான ஒத்துழைப்பு இல்லாத காரணத்தினால் இம்மாதிரி உள்ள பற்றாக்குறையெல்லாம் ஏற்படுகிறது என்பது என்னுடைய கருத்து.

அடுத்தபடியாக, சேர்வலாறு திட்டம் இன்னும் அனுமதிக்கப்படவில்லை, அனுமதியை எதிர்பார்க்கலாம், 1977-78-ல் முடியும் என்று இதிலே போட்டிருக்கிறார்கள். அதற்கு முன்னாலேயே முடிப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தாம்பிரபாணியில் இரண்டு ஆண்டுக் காலமாக பாலம் வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறேன். திருநெல்வேலியில் சிந்துபூந்துறை பாலம், அதை விட்டால் வல்லநாடு பாலம், இதைத் தவிர வேறு பாலமே கிடையாது. மத்தியில் 14 மைல்தூரம் இருக்கிறது. இரு பக்கத்திலும் கரை ஓரத்திலுள்ள விவசாயிகள் அங்கும் இங்கும் செல்லவேண்டியிருக்கிறது, விவசாயப் பொருள்களைக் கொண்டு செல்வதற்கு அங்கே ஒரு பாலம் மிகவும் அவசியம். பொதுப்



பணித் துறை அமைச்சர் அவர்களை அந்தப் பாலத்தைக் கட்டித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கங்கைகொண்டான் பகுதியில் வடகரை என்ற ஊரில் 1966-ம் ஆண்டு மழையின் காரணமாக பாலம் இடிந்து போய்விட்டது. அந்தப் பாலம் இது வரையில் செப்பனிடப்படாமல் இருக்கிறது. வளர்ச்சி மன்றத்தில் கூட இதைப் பற்றிப் பலதடவை கேட்டிருக்கிறோம். எஸ்டிமேட் தயாரிக்கப்பட்டு அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அந்தப் பாலத்தை உடனே கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் நெல்லையில் ஆஸ்பத்திரியில் கூடுதலாக படுக்கைகள் சேர்க்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி உண்மையிலேயே நான் மிகவும் பெருமைப்படுகிறேன். அதோடு அங்கே ஆஸ்பத்திரியில் வழங்கப்படுகின்ற பால் போன்ற பொருள்களுக்கு டெண்டர் கோரப்பட்டு, அதன் மூலம் சப்ளை செய்யப்படுகிறது. டெண்டர் கோரப்படுவதன் காரணமாக, டெண்டர் எடுத்தவர்கள் சரியான பொருள்களை விநியோகிப்பது இல்லை என்று பொது மக்கள் மத்தியிலே ஒரு கெட்ட எண்ணம் உருவாகியிருக்கிறது. ஆகவே, இந்த அரசு நேரடியாகவே அந்தப் பொருள்களை வாங்கி விநியோகிக்க வேண்டும், அல்லது சூப்பர் மார்க்கெட், மற்றும் கூட்டுறவுத் துறை மூலம் விநியோகிப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதி மிக வறண்ட பகுதி. சங்கரன் கோவில் தாலுகா பற்றி எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். அங்கே எந்த விதமான தொழில்துறையும் கிடையாது. தொழில் அமைச்சர் அவர்கள் பல சிறு தொழிற்சாலைகள் இந்த ஆண்டு ஏற்படுவதற்கு சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அதிலே ஒன்றையாவது என்னுடைய தொகுதியில் தேவர்குளம்பக்கம் ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொண்டு எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, அமர்கிறேன். வணக்கம்.

* திரு. கே. என். குமாரசாமி: தலைவர் அவர்களே, 1973–74-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் பேரில் சில கருத்துக்களைச் சொல்ல நான் முற்படுகிறேன். ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் சிலர் பேசும்பொழுது நமது பட்ஜெட் அறிக்கைக்குப் பின்னாலே சமர்ப்பிக்கப்பட்ட மத்திய அரசு பட்ஜெட்டில் அதிக வரிகள் போடப்பட்டிருக்கின்றன என்று இங்கே குறைப்பட்டுக்கொண்டார்கள். இங்கே தமிழ் நாட்டில் ஏற்பட்டிருக்கிற நிலைமை

என்ன என்பதைப்பற்றி நாம் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். காரணம், மத்திய அரசு ஆடம்பரப் பொருள்கள் மீது தான் வரி போட்டிருக்கிறது. ஆடம்பரப் பொருள்களின் மீது வரி போடவேண்டும் என்பது இடது சாரியாக உள்ள கட்சியினர் பல ஆண்டுகளாகவே வற்புறுத்தி வந்த ஒரு கொள்கை தான் என்பதை யாரும் மறுக்க முடியாது. அந்த அடிப்படையில்தான் அங்கே ஆடம்பரப் பொருள்களின் மீது வரி விதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இப்பொழுது இடதுசாரித் தன்மை வாய்ந்த கட்சிகள் கூட அந்த வரிகளை எதிர்க்கின்ற அளவுக்கு இன்றைக்கு அரசியல் நிலைமை போய்க்கொண்டிருக்கிறது. இருந்தாலும் இந்த நேரத்திலே தமிழ்நாட்டிலே போடப்பட்டிருக்கின்ற பட்ஜெட் கிட்டத்தட்ட 465 கோடி ரூபாய்க்கு ஒரு வரவு-செலவுத் திட்டத்தை முதலமைச்சரவர்கள் அளித்திருக்கிறார்கள். இந்த வரவு-செலவுத் திட்டத்தைப் பார்க்கின்றபோது, தமிழ்நாட்டு மக்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படும் என்று நம்பிக்கொண்டிருந்த மக்களுக்கு ஏதாவது சொல்லப்பட்டிருக்கிறதா என்றால் ஒன்றும் இல்லை. இன்றைக்குத் தமிழ்நாட்டிலே இருக்கிற பெரிய பிரச்சனை வேலையில்லாத் திண்டாட்டம். கிட்டத்தட்ட 30 லட்சம் மக்களுக்கு மேல் வேலைவாய்ப்பில்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்த கஷ்ட நிலையைத் தீர்ப்பதற்கு இந்த பட்ஜெட்டில் பணம் ஒதுக்கி, ஏதாவது திட்டம் நிறைவேற்றப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. வேலையில்லாப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு, வேலைவாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு திட்டம் ஒன்றும் இந்த பட்ஜெட்டில் சொல்லப்படவில்லை.

விலைவாசிப் பிரச்சனையை எடுத்துக் கொண்டால் அதுவும் அப்படித்தான் இருக்கிறது. விலை உயர்வு இன்று உச்ச நிலைக்குப் போய்க்கொண்டிருக்கிறது. இதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொன்னால் மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கம் தான் இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்கிறது. அது ஓரளவு உண்மையானாலும் கூட, மாநில அரசாங்கம் விலைவாசி உயர்வைத் தடுப்பதற்கு சரியான திட்டம் வகுத்து, உற்பத்தியாகும் பண்டங்களின் விலையைக் கட்டுப்படுத்த, அல்லது குறைந்த விலையில் தாராளமாகப் பண்டங்கள் கிடைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய மாநில அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கலாம். அதை இந்த அரசாங்கம் செய்யவில்லை.

விலைவாசி விஷம் போல் ஏறிக்கொண்டிருக்கிறது. ஒரு புறத்தில் விவசாயிகள் உற்பத்தி செய்யும் பண்டங்களுக்கு நியாயமான விலை கிடைக்கவில்லை. ஆனால் அந்த பொருட்களை வாங்கக்கூடியவர்களுக்கு கட்டுப்படியான விலைக்கும் கிடைக்கவில்லை. இதற்குக் காரணம் இடையிலே உள்ள இடைத்தரகர்கள்தான்.





அந்த இடைத்தரகர்களை ஒழிப்பதற்கு இந்த பட்ஜெட்டிலே ஒன்றும் சொல்லப்படவில்லை. ஆனால் அரசாங்கம் இன்னொன்றைச் சொல்லியிருக்கிறது. அதாவது உணவு தானிய வர்த்தகத்தை அரசாங்கம் மேற்கொள்ளும் நிலையை உருவாக்கி வருவதாக பட்ஜெட்டில் சொல்லப்பட்டிருக்கிறது. அதை நடைமுறைக்குக் கொண்டுவரும் நிலைமையிலே துரித நடவடிக்கை எடுத்தால் அதற்கு ஒரு தீர்வு காணமுடியும். ஆனால் அதைப்பற்றி இப்போது சொல்லமுடியாது.

இன்றைக்கு இருக்கிற இந்த நிலைமையினால் நெசவாளர்கள் கிளர்ச்சி, அல்லது ஆசிரியர்கள் கிளர்ச்சி அல்லது விவசாயிகள் கிளர்ச்சி இப்படி எங்கு பார்த்தாலும் இன்றைக்கு பற்றாக்குறை காரணமாகக் கிளர்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆனால் அரசாங்கம் இத்தகைய கிளர்ச்சிகளுக்கு அரசியலைச் சம்பந்தப்படுத்திக்கொண்டிருக்கிறது. அரசாங்கத்தின் இந்தப் போக்கை நான் விரும்பவில்லை. பற்றாக்குறை ஏற்படுகிறது என்றால் அதற்குத் தீர்வுகாணும் வகையில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். அந்த வகையிலே அரசாங்கத்தின் கொள்கை வேரூன்றி இருக்கவேண்டும். அதிலே மக்களுக்கு நம்பிக்கை இருக்கவேண்டும். அதன் அடிப்படையாக இந்தப் பிரச்னைக்கு ஒரு முடிவு காணவேண்டும்.

இன்றைக்கு விவசாயிகளுக்கு அளிக்கப்படும் மின்சாரக் கட்டணச் சலுகை மூலம் அரசாங்கத்திற்கு 14 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது மின்சாரக் கட்டணம் ஒரு யூனிட்டுக்கு 11 பைசா, 12 பைசா என்று வசூலிக்கிறார்கள். ஆனால் தொழிற்சாலைகளுக்கு ஒரு யூனிட்டுக்கு 4½ பைசா, 5 பைசா என்று இருக்கிறது. இதனால் அரசாங்கத்திற்கு ஏற்படும் இழப்பைப்பற்றி இந்த பட்ஜெட்டிலே சொல்லப்படவில்லை. உணவு உற்பத்தியிலே ஈடுபட்டிருக்கிற விவசாயிகளுக்கு மின்சாரம் விநியோகம் செய்யப்படவேண்டுமானால் அவர்கள் முதலிலே டிபாசிட் கட்டவேண்டும். பத்து ஹார்ஸ் பவர் உள்ள பம்புசெட் வைத்திருக்கிறவர்கள் கிட்டத்தட்ட 750 ரூபாய் முன்பணமாகக் கட்டவேண்டும். அதற்குப் பிறகு செக்யூரிட்டி டிப்பாசிட், மினிமம் சார்ஜ் எல்லாம் கட்டவேண்டும். அதற்குப் பின்னால்தான் அவர்களுக்கு மின்சாரம் சப்ளை செய்யப்படுகிறது. இவ்வளவு செய்து உற்பத்தித் செய்கின்ற பண்டங்களின் விலைக்கு, அரசாங்கம் பாசன வசதியினால் பயன்பெற்ற உற்பத்திச் செய்யப்படுகின்ற பண்டங்களுக்கும் விலையில் வித்தியாசம் இருக்கிறதா என்றால் இல்லை. மின்சாரத்தைப் பயன்படுத்தி, பம்புசெட் மூலம் பாசனம் செய்து பயிரிடுவதை விட, அரசாங்க பாசன வசதி மூலம் பயிர் செய்வதில் செலவு மிகவும் குறைவு. அப்படி பம்புசெட் மூலம் பாசன வசதி பெறும், நிலங்களுக்கு—அந்த விவசாயிகளுக்கு

[திரு. கே. என். குமாரசாமி] [1973 மார்ச் 3

ஏதாவது உதவி செய்யும் திட்டம் இருக்கிறதா என்று பார்த்தால், அதுபற்றி இந்த பட்ஜெட்டிலே ஒன்றும் சொல்லப்படவில்லை.

அரசாங்கத்திற்கு புதிதாக வருமானம் வரக்கூடிய தொழில் ஏதாவது தொடங்கப்படுவதற்குத் திட்டம் இருக்கிறதா என்று பார்த்தால் அதுவும் இல்லை. காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் இட்டதட்ட 172 கோடி ரூபாயில் பெரிய பாசனத் திட்டங்கள், தொழிற்சாலைகளை அமைக்கும் திட்டங்கள் எல்லாம் போட்டார்கள். ஆனால் இன்றைக்கு 465 கோடி ரூபாய் பட்ஜெட்டிலே ஏதாவது பெரிய திட்டங்கள் போட்டிருக்கிறார்களா என்றால் இல்லை. மத்திய அரசாங்கம் உதவி செய்யவில்லை, அனுமதி கொடுக்கவில்லை ; எதிர்பார்க்கிறோம் என்றுதான் வரவு செலவுத் திட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. மாநிலத்திற்கு வருமானம் கிடைக்கக்கூடிய திட்டங்களை மாநில அரசாங்கமே திட்டி நிறைவேற்ற வேண்டும். அப்படி இல்லாமல் இந்தப் பிரச்னைக்கு ஒரு தீர்வு காண முடியாது. அதை அரசாங்கம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கவேண்டுமானால் பெரிய பெரிய தொழிற்சாலைகளைத் தொடங்கவேண்டும். அதைச் செய்வதற்குத் திட்டத்தில் ஒன்றும் சொல்லப்படவில்லை. ஆனால் 4.64 கோடி ரூபாய்க்கு ஒரு திட்டத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். மேலும் வேலைவாய்ப்பளிப்பதற்கு 15 கோடி ரூபாய் அளவில் ஒரு திட்டத்தை வகுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ரோடு போடுவது, மராமத்து செய்வது போன்ற காரியங்களுக்கு இது செலவு செய்யப்பட இருப்பதாகத் தெரிகிறது. அதனால் அரசாங்கத்திற்கு நிரந்தரமான வருமானம் கிடைக்காது. அது அவசியம்தான். இருந்தாலும் நிரந்தரமான வருமானம் வரக்கூடிய ஒரு திட்டத்தை வகுத்திருந்தால் இந்த பட்ஜெட்டை நாங்கள் வரவேற்றிருப்போம். அதற்கு பட்ஜெட்டிலே வகை செய்யப்படவில்லை.

இந்த வரவு செலவுத் திட்டத்தினால் கிராமப்புறங்களுக்கு ஏதாவது பயன் கிடைக்குமா என்று பார்த்தால், இல்லை என்றுதான் தெரிகிறது. கிராமப்புறங்கள் முழுக்க முழுக்கப் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு ஆளும் கட்சி உறுப்பினரும் கடைசியாகப் பேசும்போது அதைச் செய்யவில்லை, இதைச் செய்யவில்லை என்றுதான் சொன்னார்கள். அப்படியானால், இதிலே ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்களுக்கும் கருத்துவேறுபாடு இல்லை என்றுதான் அர்த்தம். அதனால் கிராமப்புறங்கள் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன என்பது தெளிவாகத் தெரிகிறது. ஆளும் கட்சிக்காரர்களின் பேச்சிலிருந்தே அது தெரிகிறது.



1973 மார்ச் 3] [திரு. கே. என். குமாரசாமி]

கிராமப்புற மக்களுக்கு 1967-க்கு முன்னாலே வீடு கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இன்றைக்கு அரசாங்கம் போட்டிருக்கிற திட்டங்களினால் நகர்ப்புற மக்களுக்குத்தான் வீடு கட்டிக்கொடுக்கப்படுகிறது. கிராமப்புற மக்கள் அதிலும் புறக்கணிக்கப்பட்டிருக்கிறார்கள். இன்றைக்குக் கிராமப்புற அரிசன மக்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கும் ஒரு திட்டத்தை அரசாங்கம் தெரிவித்திருக்கிறது. ஆனால் இதுவரை வீடு கட்டிக்கொடுத்ததாகத் தெரியவில்லை. அந்தத் திட்டத்தினால் மக்கள் பயனடைந்ததாகத் தெரியவில்லை.

1971-ம் ஆண்டில் குடிநீர் வாரியம் அமைத்து, குடிநீர் பிரச்சனைத் தீர்க்கப்படும்—1972-க்குள் தீர்க்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் வருகிறபோதுதான் இந்தப் பிரச்னையைத் தீர்க்க முடியும் என்று பட்ஜெட்டில் தெரிவித்திருக்கிறார்கள். அப்படியானால் 1972-ம் ஆண்டில் சொல்லப்பட்ட கோவை குடிநீர்த் திட்டம் விரைவில் முடிவடையும் என்று தெரியவில்லை. சிறுவாணித் திட்டத்திற்கு 1½ லட்சம் ரூபாய் செலவிடப்படுவதாக பட்ஜெட்டில் சொல்லப்படுகிறது. அந்தத் திட்டம் என்ன ஆயிற்று என்று இதுவரை தெரியவில்லை. அப்படியானால் குடிநீர் பிரச்சனை தீர இன்னும் ஐந்தாண்டுக் காலம் ஆகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சிறுதொழில்களை நிறைய ஏற்படுத்துவதற்கான திட்டம் அரசாங்க பட்ஜெட்டில் சொல்லப்படவில்லை. தமிழ்நாட்டில் இருக்கின்ற ஜனத்தொகைக்கு ஒப்ப சிறுதொழில்களுக்கு ஊக்கம் காட்ட வேண்டும். அப்படிச் செய்யாமல் யாரோ வந்து தொழில் நடத்துவார்கள், அவர்களுக்கு ஆலோசனைகள் சொல்லாம் என்று இருப்பது சரியல்ல. அரசாங்கமே ஏராளமான சிறு தொழில்களை ஏற்படுத்த வேண்டும். அப்படிச் செய்தால்தான் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியும்.

இந்த பட்ஜெட்டிலே பெரிய பாசனத் திட்டங்களுக்கும் இடமில்லை. கேரளத்திலே தண்ணீர் கேட்டோம். இல்லை என்று சொல்லிவிட்டார்கள். கேரளத்திலே மின்சாரம் கேட்டோம் இல்லை என்றாகிவிட்டது. மைசூரிலிருந்து தண்ணீர் கிடையாது என்று அவர்கள் சொல்லிவிட்டார்கள். அப்படியானால் தமிழ்நாட்டின் நிலை என்ன? இதை இந்த அரசாங்கம் சிந்தித்திருப்பதாகத் தெரியவில்லை. மத்திய அரசாங்கம் இதிலே தலையிட வேண்டும் என்று இப்போது சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அப்போதே மத்திய அரசாங்கத்திடம் இதைப்பற்றி வற்புறுத்தி இருக்கவேண்டும். நமது தேவையை எடுத்துச்சொல்லியிருக்க வேண்டும். அதைச் செய்யவில்லை. பாண்டியாறு புன்னம்புழாத் திட்டத்தைப்பற்றி இந்த பட்ஜெட்டில் சொல்லப்படவில்லை.

இடையூறுகள் இருந்தால் சம்பந்தப்பட்ட மாநிலங்களோடு சுமுகமாகப் பேசித் தீர்த்திருக்க வேண்டும். அல்லது மத்திய அரசாங்கத்தை உடனடியாக வற்புறுத்தியிருக்க வேண்டும். இரண்டையுமே இந்த அரசாங்கம் செய்ய வில்லை. இங்கேயும் பெரிய பாசனத் திட்டங்கள் புதிதாக எதுவும் இல்லை. இதனால் விவசாயிகளுக்குப் பாசன வசதியில்லாமல் விவசாய உற்பத்தி பெரிதும் குறையக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு நிலைமை தான் இன்றைக்குத் தமிழ்நாட்டிலே இருந்து கொண்டிருக்கிறது.

இரண்டாவதாக மின்சார வெட்டு வந்ததற்குக் காரணம் மத்திய அரசு தான் என்று சொல்லி மாநில அரசு மத்திய அரசுமீது குறை சொல்லுவது. மத்திய அமைச்சர்களான திரு. சி. சுப்பிரமணியமோ திரு. மோகன் குமாரமங்கலமோ வந்தால் தமிழகத்திற்கு ஏழை மக்கள் என்ன சொல்கிறார்களோ அதை வைத்து அப்படி இருக்கலாம் என்று பேசிவிட்டு போகிறார்களேதவிர ஏதோ வேண்டுமென்றே இந்த அரசைக் குற்றம் சாட்டுகின்றார்கள் என்று சொல்லிக் கொண்டிருப்பது சரியில்லை. இன்றைக்கு இருக்கும் இந்தப் பிரச்சினையிலே மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்துடன் கடிதத்தின் மூலமாகத் தொடர்பு கொண்டு பிரச்சினையைத் தீர்த்து விடமுடியாது. நேரடியாகத் தீர்க்கக் கூடிய பிரச்சினைகள் உண்டு. இங்கே மின்சாரத் தட்டுபாடு வருவதற்கும் , சமயநல்லூரிலே இருந்த அனல் மின் நிலையம் விற்கப்படுகிறது. அப்படி என்றால் தமிழ் நாட்டிலே இருக்கும் அரசாங்கம் இதிலே எவ்வளவு அக்கரையற்ற தன்மையோடு இருக்கிறது என்று தான் பார்க்க முடிகிறது நம்மால். இதற்கு முன்னால் இருந்த ஆட்சியாளர்கள் ஏராளமான திட்டங்களைப் போட்டு நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். இவர்கள் வந்தும் பல நீர் மின் நிலையங்கள் 1969, 1970-லே ஏற்படுத்த திட்டங்கள் போடப்பட்டன. அதிலே என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றது என்றால், ஒன்றுமே எடுக்கவில்லை என்றுதான் சொல்லுவேன். ஈரோட்டிலே நீலகிரி நடு வட்டம் மின்சாரத் திட்டம் என்ற ஒரு போர்டை போட்டுவிட்டு அந்த ஆட்சியினர் சும்மா இருந்துவிட்டார்கள். வேறு எந்த விதமான உருப்படியான காரியங்களும் அதற்காகச் செய்யப்படவில்லை. மொய்யார் நீர் மின் நிலையத் திட்டத்திற்காக கேரள அரசாங்கத்தோடு பேசி முடிவு செய்தோம் 1965-லே. அந்த ஸ்கீமிலே எந்த விதமான நடவடிக்கையும் இன்னமும் வரவில்லை. சோலையார், நீராறு, பாம்பலாறு திட்டத்தை நிறைவேற்றுவதற்கான போதிய தண்ணீர் இருக்கிறது. அந்தத் திட்டத்தை நாம் நிறைவேற்றி இருந்தால் 100 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்திருக்க முடியும் என்று சொல்லி இருக்கிறார்கள். அதை நிறைவேற்றி இருந்தால்,



அவ்வளவு மின் சக்தி நமக்கு கிடைத்திருக்கக்கூடும். இதற்கு முன்னால் மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் எண்ணூர் மின்சார நிலையத்திலே கடல் தண்ணீரில் மணல் வந்து புகுந்துவிட்டதால் அது சரியாக இயங்கவில்லை, பிறகு அதை சரி செய்து விட்டோம் என்றார்கள். இப்பொழுது எண்ணூரில் மறுபடியும் அப்படி கடல் தண்ணீரில் மணல் வந்து அதனால் மெஷின்கள் பாதிக்கப்பட்டு மின் சக்தி உற்பத்தி செய்ய முடியாமல் இருக்கிறது என்கிறார்கள். எனவே, இதிலே இருந்து எவ்வளவு கவனக் குறைவாக நமது அரசாங்கம் இருக்கிறது என்பதுதான் தெரிகிறது. அப்படியானால், மின்சாரத் தட்டுப்பாடு ஏற்படுவதற்கு காரணம் தமிழக அரசுதான். அதற்கு தமிழக அரசு பொறுப்பேற்க வேண்டும். அதற்கு நாங்கள் பொறுப்பில்லை, மத்திய அரசுதான் பொறுப்பு என்று சொல்லிவிடக் கூடாது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே ஒரு மின் நிலையத்தை ஏற்படுத்த அனுமதித்திருக்கிறார்கள் மத்திய அரசு என்றால், ஏன் அவர்கள் அதிலே குறுக்கிடப் போகிறார்கள்? நமக்குத் தேவையான திட்டத்தை நாம் போட்டுக்கொண்டு, மத்திய சர்க்காரிடம் சொல்லிவிட்டு, நாமே நிறைவேற்றிக்கொள்ள வேண்டியதுதானே. அப்படிச் செய்யத் தவறியதால், இன்றைக்கு பல நெருக்கடிகளைத் தோற்றுவிக்க இந்த மின் வெட்டு காரணமாக அமைந்திருக்கிறது. சேலத்திலே நடைபெறுவது எல்லாம் இதனால்தான். கூட்டுறவு மில்களிலே உற்பத்தியாகும் நூற்றுக்கு நூறு நூலையும் நெசவாளர்களே எடுத்துக்கொள்கிறோம் என்றால், பாக்கி தேவைப்படும் நூலை மத்திய சர்க்காரிடமிருந்து பெற்றுத் தருகிறோம் என்று நீங்கள் சொல்லி இருக்கலாம் அல்லவா. தனியார் துறை மில்களைப்போல் சர்க்கார்த் துறை மில்களும் லாபகரமாக இயங்கவேண்டும் என்பதற்காக இங்கே உற்பத்தியாகும் நூல்களிலே 50 சதவிகிதத்தை பாம்பே மார்க்கடிலே விற்போம் என்றால், நெசவாளர்கள் பிரச்சினை எப்படித் தீரும். நீங்கள் வெறுமனே மத்திய சர்க்கார்மீது குற்றம் சொல்வதிலே என்ன அர்த்தம் இருக்கிறது. எனவே, மக்கள் பிரச்சினையை தீர்க்கக் கூடிய உணர்வுகள் - இன்றைக்கு உங்களுக்கு இல்லை என்றுதான் நான் வருந்துகிறேன். இப்படிப்பட்ட நிலைமைகள் இந்த பட்ஜெட்டிலே இருக்கிறது. தமிழகத்திலே இருக்கிற மக்கள் எப்படி இந்த நெருக்கடியைச் சமாளிக்கப் போகிறார்களோ தெரியவில்லை. எனவே, இந்த அரசு மத்திய சர்க்காரைக் குறை கூறுவதை விடுத்து, தானே எல்லாவற்றிற்கும் பொறுப்பேற்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கோவையிலே இருக்கிற விவசாயிகள் நிலைமை மோசமாக இருக்கிறது. முன்பெல்லாம் அங்கே கிணற்றிலே தண்ணீர் இருக்காது. இப்பொழுது தண்ணீர் இருக்கிறது. ஆனால், மின்சாரம் கிடையாது. இந்த நிலைமையிலே அவர்கள் விவசாயம் செய்ய முடியாமல் இருக்கிறார்கள். நான்கு, ஐந்து ஆண்டுகளுக்கு முன்னால் வாங்கிய கடன்களையே அவர்கள் திருப்பிக்

கொடுக்கமுடியாமல் இருக்கிறார்கள். இந்த நேரத்திலே அந்தக் கடன்களை எல்லாம் கட்டவேண்டுமென்றால், எப்படி அவர்களால் கட்ட முடியும்? கட்ட முடியாது. எனவே, டி.எம்.சி. மீட்டிங்கிலே எல்லாம்கூட நாங்கள் சொல்லி இருக்கிறோம், அந்தக் கடன்களை சர்க்கார் வஜா செய்ய வேண்டுமென்று மின்சார இலாக்காவோடு விவசாயிகள் அகிரிமெண்ட் செய்திருக்கிறார்கள், கரண்ட் கிடைப்பதற்கான உத்தரவாதத்திற்கு. இன்றைக்கு மின்சாரம் அவர்களுக்கு இல்லை என்றால், அதற்கு மின்சார டிபார்ட்மெண்டுதான் பொறுப் பேற்க வேண்டும் அந்த வகையிலே விவசாயிகளின் கடன்களைத் தள்ளிவைத்து, அதற்கு ஒரு முடிவு காணலாம்.

அடுத்து உர விநியோகம். ஏதோ கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகவும், பஞ்சாயத்து ஒன்றியங்களின் மூலமாகவும் விநியோகம் செய்கிறோம் என்கிறார்கள். பஞ்சாயத்து யூனியன்களுக்கு "ஜெனரல் பண்ட்" என்பது கிடையாது. எனவே, அவர்களால் உரம் வாங்கி அதை விநியோகிக்க முடிவதில்லை. இந்த "ஜெனரல் பண்ட்டிற்கு" ஏதாவது தொகை இந்த பட்ஜெட்டிலே ஒதுக்கி இருக்கிறார்களா என்றால், இல்லை. ஒரு யூனியனிலே 5 டன் உரம் மட்டும் வாங்கக் கூடிய ஜெனரல் பண்ட் இருந்தால், அதை மட்டும் வாங்கி விநியோகிக்கக் கூடும். ஆனால், அந்த யூனியனிலே 10, 20 டன்கள் வாங்கி விவசாயிகளின் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்றால், அது முடியாத ஒன்றாகும். அதனால் விவசாயிகள் பிளாக் மார்க்கட்டிலே யூரியா, சல்பேட் போன்றவைகளை வாங்க வேண்டிய நிலைமை இருக்கிறது. இந்த நிலைமை போக்கவேண்டுமானால், சர்க்கார் பஞ்சாயத்து யூனியன்களுக்குப் போதுமான பணத்தைக் கொடுத்து உதவி இருக்கவேண்டும். அந்த நிலைமை இந்த பட்ஜெட்டிலே காணப்படவில்லை. எனவே, இதைக் கவனமாக பரிசீலனை செய்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டு, எனது பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

திரு. மு. சுருளிவேல்: மாண்புமிகு சட்டப்பேரவை துணைத்தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் சமர்ப்பித்திருக்கின்ற இந்த நிதி நிலை அறிக்கையின்மீது பேசுவதற்கு முன்பாக, இந்த மாமன்றத்திலே எனக்குள்ள ஒரு சிறு குறையை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருவதற்கு கடமைப்பட்டிருக்கிறேன். ஒலிபெருக்கிக்கு முன்னால் அதிகமாகக் குனிந்து கொண்டுதான் பேசவேண்டிய நிலைமை இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்களுக்கு அனுமதிக்கப் பட்டிருக்கும் நேரமே 7 நிமிடங்கள்தான். இதிலே வீணாக இரண்டு நிமிடத்தைக் கழிக்காதீர்கள்.





திரு. மு. சுருளிவேல்: தலைவரவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சமர்ப்பித்திருக்கக்கூடிய இந்த நிதி நிலை அறிக்கையில், மேட்டூரில் இருக்கக் கூடிய தனியாருக்குச் சொந்தமான அலுமினிய தொழிற்சாலையைச் தேசிய மயம் ஆக்கியது குறித்து முதலிலேயே என்னுடைய மகிழ்ச்சியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தியத் துணைக் கண்டத்திலே மட்டுமில்லை, உலகத்திலேயே சோஷலிசம் வரவேண்டும் என்றால் அதற்கு ஆலோசனை பெறுவதற்கு டெல்லிக்குத் தான் வரவேண்டும் என்ற ஒரு அரசியல் கட்சி கூறிக்கொண்டிருக்கும் சூழ்நிலையில் மிகக் குறைந்த அதிகாரங்களை கொண்ட நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் சமதர்ம நிதி நிலை அறிக்கையை இங்கே சமர்ப்பித்திருக்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டு நிதிநிலை அறிக்கையிலேயும் முதல்வர் அவர்கள் மத்திய அரசு எந்தெந்த வகையில் எல்லாம் மாநில அரசினுடைய தேவைகளையும், கோரிக்கைகளையும் புறக்கணித்திருக்கிறது, எந்த அளவிற்கு மத்திய அரசு மாற்றாந் தாய் மனப்பான்மையுடன் செயல்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்டத் தவறியதே இல்லை. அதைப் போலவே இந்த நிதி நிலை அறிக்கையிலேயும் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான உதவி நிதி அமைப்புகளும், கோரிக்கைகளும் நமக்கு எப்படி மறுக்கப்பட்டிருக்கின்றன என்பதைப் புள்ளிவிவரத்தோடு எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நம்முடைய மக்கள் தொகைக் கணக்கு 7.5 சதவிகிதம். ஆனால் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே நமக்கு 4.7 சதவிகித நிதியைத் தான் ஒதுக்கி இருக்கிறார்கள். நமது முதல்வர் அவர்கள் இந்த மாற்றாந்தாய் மனப்பான்மையை சரியாகக் கண்டித்திருக்கிறார்கள். இது இன்று மட்டும் எழுப்பக் கூடிய பிரச்சினை இல்லை. 1957-ல் நம்முடைய மறைந்த மாபெரும் மேதை அண்ணா அவர்கள், தி.மு. கழகம் 15 சட்ட மன்ற உறுப்பினர்களைப் பெற்று எதிர்க்கட்சி வரிசையிலே அமர்ந்திருந்தபொழுது, இதை எழுப்பி இருக்கிறார்கள். வாஷிங்டன் டெய்லி மிர்ரர் என்ற பத்திரிகைக்கு அளித்த பேட்டியிலே அவர் சொல்லி இருக்கிறார்கள், "இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே தமிழகத்திற்கு 11 சதவிகிதம்தான் ஒதுக்கி இருக்கிறது. இது கண்டிக்கத் தக்கது" என்று கூறி 1957-லேயே குரல் எழுப்பி இருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து தமிழகத்து மக்களைப் புறக்கணிக்கின்ற விதத்திலே நம்முடைய நியாயமான கோரிக்கைகளை எல்லாம் அலட்சியப்படுத்துகிற அளவிலே மத்திய அரசு திட்ட நிதி ஒதுக்கீடுகளைச் செய்து வருகிறது.

அது மட்டுமல்லாமல், தொழில் வளர்ச்சியைப்பற்றிக் குறிப்பிடும் பொழுது நம்முடைய தொழில் வளர்ச்சி எந்த அளவிற்கு இருக்கவேண்டும், அதை எல்லாம் எப்படி மத்தியசர்க்கார் கவனிக்காமல் இருக்கிறது என்பது எல்லாம் இந்த பட்ஜெட்டிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டிலே மத்திய அரசு எந்தத் திட்டத்தை ஏற்கனவே தமிழ்நாட்டிலே மேற்[illegible]

என்று முதல்வர் அவர்கள் இங்கே சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். ஆனால், இந்தியத் துணைக் கண்டத்தினுடைய தொழில் துறை முன்னேற்றத்தைப் பற்றி "கோத்தாரி கமிட்டி" ஒரு ரிப்போர்ட்டை மத்திய அரசாங்கத்திடம் கொடுத்திருக்கிறது. இந்தியத் துணைக் கண்டம் பூராவும் தொழிற்துறை வளர்ச்சி பலவீனம் அடைந்திருக்கிறதா அல்லது தமிழ் நாட்டிலே மாத்திரம் பலவீனம் அடைந்திருக்கிறதா, அதற்கான காரணங்கள் என்னென்ன என்றெல்லாம் சொல்லி இருக்கிறது. அது சொல்கிறது, மத்திய அரசைப் பயன்படுத்தி வட நாட்டிலே இருக்கிற தொழில் நிறுவனங்கள் இன்றைய தினம் ஏகபோக நிறுவனங்களாக மாறி இருக்கிறது. இதை கோத்தாரி கமிட்டி தன்னுடைய அறிக்கையிலே சொல்லி இருக்கிறது. அதன்படி 20 வடநாட்டைச் சேர்ந்த நிறுவனங்கள்—அதிலே தென்னிந்திய நிறுவனங்கள் எதுவுமில்லை—அதாவது ஜே. கே, ஸ்ரீராம், சாருஜெயின், பான்குர், சோமணி, மாபத்லால், சேஷசாயி, பஜோசா ஜலான்; மோடி, கோயங்கா, ஜெய்பூரியா, வால்சந்து சாராபாய்; கஸ்தூரிபாய்; மகேந்திரா, தாபர், சின்னை பட்நாயக், கிரிலோஸ்கர், வாய்தா சாபர்ஜி, போன்ற 20 தொழில் அதிபர்கள் மத்திய அரசின் தொழில் கொள்கையைப் பயன்படுத்தி இன்றைய தினம் ஏகபோக நிறுவனங்களாக மாறி இருக்கின்றன. தென்னிந்தியாவைச் சேர்ந்தவர்கள், தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் யாருமே இல்லை என்ற அளவுக்கு அவர்கள் கொடுத்திருக்கிற அறிக்கையில் இருந்து தெரிகிறது. மேலும் மார்வாடிகள், குஜராத்திகள், வங்காளிகள், பார்சிகள் என்பதாக இன அடிப்படையில் பார்க்கிறபோதும் 7-வது இடத்தைத்தான் தென்னிந்தியர்கள் பெற்றிருக்கிறார்கள் என்பதையும் அவர்களே எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். இப்படித் தமிழகம் எல்லாவகையிலும் புறக்கணிக்கப்படுகிறது. இது விஷயமாக நமது முதல்வர் அவர்கள் சிறிது தனிக் கவனத்தைக் காட்டியாகவேண்டும். தமிழகத்தில் உள்ள எல்லாக் கட்சிகளுமே தங்களுக்கிடையே இருக்கும் மாச்சரியங்களை மறந்து தமிழினம் வாழ, தமிழகம் செழிக்க, தொடர்ந்து எல்லா வகையிலும் தமிழகம் புறக்கணிக்கப்பட்டு வருவதை எதிர்த்தாக வேண்டிய காலகட்டம் வந்துவிட்டது. கைப்புண்ணைப் பார்க்கக் கண்ணாடி தேவையில்லை. அதுபோல மத்திய அரசாங்கத்தினால் அமைக்கப்படுகிற கமிட்டி அறிக்கைகளே போதும், தமிழகம் எவ்வாறு புறக்கணிக்கப்பட்டு வருகிறது என்பதை நாம் உணர்ந்துகொள்ள. நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் பெரும் அளவுக்கு உருவாகியிருக்கிறது. காவேரி நீர்ப் பிரச்சினை சம்பந்தமாக எப்படி தீவிரமான ஒரு நடவடிக்கையை நமது முதல்வர் அவர்கள் எடுத்தார்களோ அதுபோன்ற ஒரு தீவிரமான நிலையை மேற்கொள்ள ஆலோசித்தாகவேண்டும்.

அடுத்தபடியாக நம் நாட்டில் இருக்கிற பத்திரிகைகளைப்பற்றி நாம் கவலை கொள்ளாமல் இருக்க முடியாது. பத்திரிகைக்கு என்று தர்மம் இருக்கிறது.





சில உரிமைகள் இருக்கின்றன. பத்திரிகைகளுக்குள்ள உரிமைகளில் தமிழக அரசு தலையிட விரும்பவில்லை. ஆனால் அதற்காக அவர்கள் இன்றைக்கு எதையும் வெளியிடலாம், எப்படியும் அரசியலில் ஈடுபட்டவர்களைப்பற்றி விமர்சனம் செய்யலாம் என்கிற போக்கைக் கைக்கொண்டால் இதை வன்மையாகக் கண்டித்தாகவேண்டும். மத்திய அரசே இதற்கு ஒரு சட்டம் கொண்டு வந்தால் நல்லது. அவர்கள் கொண்டு வரவில்லை என்றாலும் நம்முடைய நாகரீகத்தை, நம்முடைய பண்பாட்டை, நம்முடைய கலாசாரத்தை பாதுகாக்க—அரசியல் வாழ்வில், பொதுவாழ்வில் ஈடுபட்டுள்ளவர்களைப்பற்றி கண்டபடி விமர்சிக்கும் ஒரு நிலைமையை மாற்ற நமது முதல்வர் அவர்கள் ஒரு தனி சட்டத்தையே இங்கே கொண்டுவர முடியுமா என்பதைப்பற்றியும் ஆலோசிக்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்று, அறிஞர் அண்ணா அவர்கள் இந்த மன்றத்தில் பேசும்போது "கடல் நீர் ஏன் உப்பு கரிக்கிறது தெரியுமா?" என்கிற ஒரு கேள்வியைப் போட்டு "கடல் கடந்து வாழ்கிற நமது தமிழர்கள் அடிமைகளாக, ஊமைகளாக அங்கே படுகிற வேதனைகளினால் விடுகிற கண்ணீர் கடலில் கலந்திருப்பதனால்தான் உப்புக் கரிக்கிறது" என்றார்கள். இன்றைக்கும் தமிழர்கள் வெளிநாடுகளில் படுகிற அவதி சொல்ல முடியாது. ஆனால் வடநாட்டைச் சேர்ந்தவர்கள் உகாண்டாவில் துன்பத்திற்கு ஆளாகி இருக்கிறார்கள் என்றவுடன் மத்திய அரசு காட்டுகிற அக்கறை—ஜனாதிபதி அவர்களே தம் உரையில் குறிப்பிடுகிற தன்மை பர்மா தமிழர்கள் அவதிப்பட்டபோது ஏன் இல்லை? ஆக இப்படி ஒரு மாநிலம் என்றால் அடிமைகள்போலக் கருதி, மத்திய அரசு தங்களை ஒரு எஜமானர்களைப்போலக் கருதி செயல்படுகிற தன்மையை நான் வெகுவாகக் கண்டிக்க விரும்புகிறேன் . . . . . (மணி அடிக்கப்பட்டது)

6. அரசினர் தீர்மானங்கள்.

(அ) போவை அலுவலை நிறுத்திவைத்து, தொழிலமைச்சரது தீர்மானத்தை எடுத்துக்கொள்வது குறித்து.

THE HON. DR. V. R. NEDUNCHEZHIAN : Mr. Deputy Speaker, Sir, Under Rule 244 of the Tamil Nadu Legislative Assembly Rules, I move :

" That the relevant rules of procedure be suspended and the House do now proceed to take up the resolution of the Hon. Minister for Industries in regard to yarn situation ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

## (ஆ) தமிழகத்திற்குத் தேவையான பருத்தி நூலை ஒதுக்கித் தருமாறு மத்திய அரசினைக் கோரும் தீர்மானம்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ள 5 லட்சம் தறிகளை நம்பி 20 லட்சம் மக்கள் வாழ்கின்றார்கள். நமது மாநிலத்திற்குத் தேவையான 20,000 பேல் சிட்டா நூலையும், 35,000 பேல் கோன் நூலையும் மத்திய அரசு உடனடியாகத் தமிழகத்திற்கு வழங்க ஏற்பாடு செய்யுமாறு இந்த மன்றம் கேட்டுக் கொள்கிறது" என்கிற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** மதிப்பிற்குரிய உதவித் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழகத்தில் உள்ள கைத்தறி நெசவாளர்கள் நிலைமைபற்றி இந்த மன்றத்தில் அடிக்கடி விவாதித்திருக்கிறோம். அதுவும் கடந்த சில மாதங்களாக அவர்கள் நூல் கிடைக்காமல் வேலையில்லாது போய்க் கொண்டிருக்கிற அவல நிலை வளர்ந்திருக்கிறது. அதன் காரணமாக எங்கு பார்த்தாலும் நெசவாளர்கள் போராட்டத்தில் இறங்கியிருக்கிறார்கள். இந்த நிலையைத் தவிர்க்க நமக்கு வேண்டிய நூல் நம் கையில் இல்லை என்று தமிழக அரசு கருதுகிறது. இதைப் போக்குவதற்கு மத்திய அரசுதான் உடனடியாக நமக்குப் போதுமான நூலை அளித்தாக வேண்டும், தமிழக நெசவாளர்களுடைய துன்பத்தைப் போக்க உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டாக வேண்டும். ஆகவே அத்தகைய நடவடிக்கை எடுக்க மத்திய அரசைக் கோரும் இந்தத் தீர்மானத்தை நான் மனப்பூர்வமாக ஆதரித்து வழிமொழிகிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, என் கட்சியின் சார்பாகவும் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இதேத் தீர்மானத்தை முழுமனதோடு ஆதரிக்கின்றேன் என்று சொல்லிக் கொள்கிறேன். தற்போது குறிப்பாக சேலத்தில் ஏற்பட்டிருக்கிற பிரச்னை குறித்து ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்தபோது அமைச்சர் அவர்கள் சில குறிப்புகளைத் தந்தார்கள். அந்தக் குறிப்புகளின் அடிப்படையில் நாம் பல பணிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது என்றும் தெரிவித்தார்கள். மத்திய அரசாங்கம் நமது மாநில கைத்தறிகளுக்குத் தேவையான நூலை உடனடியாகத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்வதுதான் இந்தத் தீர்மானம். குறிப்பாக மத்திய சர்க்காரின் அமைச்சர் சட்டோபாத்யாயா நாட்டில் 80 சதவிகிதம் நூல் இருக்கிறது. நமக்குப் பற்றுக்குறை 20 சதவிகிதம்தான் என்பதாகத் தெரிவித்துள்ளார் என்கிற கருத்தையும் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். நமக்கு இன்றைய தினம் 80 சதவிகிதம் பற்றுக்குறை இருக்கிறது. ஆனால் மத்திய அமைச்சர் குறிப்பிட்டுள்ளபடி 20 சதவிகிதம் தான் நாடு முழுவதற்கும்



பற்றுக்குறை என்றால் குஜராத், மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களில் நூல் உபரியாகக்கூட இருக்கலாம். ஆகவே உபரியாக இருக்கக்கூடிய மாநிலங்களில் இருந்து நூலைப் பெற்று நமக்கு உடனடியாக சப்ளை செய்தாக வேண்டும் என்பதாக நாம் அனைவரும் மத்திய அரசை வற்புறுத்திக் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறோம். அதே நேரத்தில் வாலண்டரி ஸ்கீம் பற்றியும் சொன்னார்கள். அதன்படியும் நாம் இன்னும் கொஞ்சம் நெசவாளர்களுடைய துயரத்தைத் துடைக்க உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொண்டாக வேண்டும்.

இது நல்ல தீர்மானம். இதிலே நான் எடுத்துக் காட்டுவது என்னவென்றால் முக்கியமாக தமிழகத்திலே மக்களை பாதிக்கிற எந்தப் பிரச்சினையாக இருந்தாலும், அதிலே கட்சி வேறுபாடின்றி, மத்திய அரசிடத்திலே வலியுறுத்த நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதற்காக இதைச் சொல்கிறேன். நான் முதலமைச்சரைக் கேட்டுக் கொள்வது, இந்த தீர்மானத்திற்குப் பிறகு, சேலத்திலே ஒரு சுமுகமான நிலை ஏற்படலாம், ஏற்படும் என்று கருதுகிறேன். அந்த சுமுகமான சூழ்நிலையினுடைய அடிப்படையிலே மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள், அந்த கிளர்ச்சியிலே ஈடுபட்டிருக்கக் கூடியவர்கள் வறுமையினாலே ஈடுபட்டிருக்கிறார்கள் என்று எடுத்து அவர்களுடைய உணர்வுகளை அரசாங்கம் மதிக்கும் என்று நம்புகிறேன்.

எல்லாக் கட்சிகளும் நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற சூழ்நிலையிலே, அங்கு ஒரு சுமுகமான சூழ்நிலை ஏற்படும் என்று கருதுகிறேன். ஆகவே, அந்தச் சூழ்நிலையிலே மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் உடனடியாக, சேலம் மாவட்டத்திலே கிளர்ச்சியிலே ஈடுபட்டிருக்கக்கூடிய தலைவர்களை, பிரதிநிதிகளை அழைத்து, நம்மால் முடிந்த அளவுக்கு எல்லோரும் சேர்ந்து உங்களுடைய பிரச்சினைகளை அணுகுகிறோம் என்று அவர்களுக்கு ஆறுதல் சொல்கின்ற ஒரு ஏற்பாட்டை செய்வார்கள் என்று நம்புகிறேன். இந்த நேரத்திலே வழக்குகள் எல்லாம் போட்டிருக்கலாம். சுமுகமான நிலை ஏற்படும் இந்த நேரத்தில், அந்த வழக்குகளை வாபஸ் பெற்று, அங்கு அமைதியை ஏற்படுத்தினால் நன்றாக இருக்கும் என்று முதலமைச்சர் அவர்களை வற்புறுத்தி கேட்டு, எங்கள் கட்சியின் சார்பாக இந்தத் தீர்மானத்தை முழு மனதுடன் வரவேற்று அமர்கிறேன். வணக்கம்.

* **திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன்:** அன்புள்ள தலைவர் அவர்களே, 20 லட்சம் மக்கள் நம் நாட்டினுடைய நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள். அவர்களுடைய நிலையை இங்குள்ள சர்வ கட்சிகளும் உணர்ந்து அதற்கான ஒரு நல்ல முறையைப் பின்பற்றியதற்காக நான் மகிழ்ச்சி அடை

கிறேன். சேலத்தில் மட்டும் இந்தப் பிரச்சினை இல்லை. இந்த தொழில் செய்கிற மேலப்பாளையம், கடையநல்லூர் போன்ற இடங்கள் இன்னும் மற்ற இடங்களிலும் இந்த தொல்லை இருக்கத்தான் செய்கிறது. இந்த சூழ்நிலைதான் சேலத்தில் பெரிதுபடுத்தப்பட்டு அங்கு ஒரு போராட்டமும் தொடங்குகின்ற நிலையில் தொடங்கி அது நடந்துகொண்டிருக்கிற இந்த நேரத்தில், அதிலுள்ள சிரமங்களை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாக விளக்கி முன்பே கூறினார்கள். இப்பொழுது ஒரு தீர்மான வடிவில் எல்லா கட்சிகளும் மத்திய சர்க்கார்—மத்திய சர்க்கார் என்றால் அது ஒரு கூட்டுக் குடும்பம். அந்தக் கூட்டுக் குடும்பத்திற்கு இந்த மாநிலத்திற்கு ஏற்பட்டிருக்கிற நிலையை விளக்கும் முறையில் இந்த தீர்மானம் அமைந்திருக்கிறது என்று கூறி என் கட்சியின் சார்பில் இந்தத் தீர்மானத்தை நான் வரவேற்கிறேன் என்று கூறி அமர்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் அவையில் வைத்திருக்கிற தீர்மானத்தை எங்கள் கட்சியின் சார்பில் மனப்பூர்வமாக ஆதரித்து ஒருசில கருத்துக்களை கூற விரும்புகிறேன்.

உண்மையிலே இப்பொழுது இந்தப் பிரச்சினை மிகவும் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. அந்த பிரச்சினையின் காரணமாக இன்று சேலத்தில் இருக்கிற நிலை மிகவும் மோசமான நிலை என்பதனை அரசு நன்றாக அறிகிறது. ஆக, இந்தப் பிரச்சினைக்கு வழி காணுகிற வகையில் இந்தத் தீர்மானத்தை இங்கே முன்மொழிந்திருக்கிறார்கள். அதுபோல் சேலத்தில் இன்றிருக்கிற நிலையை மாற்றிக் கொள்ளுவதற்காக அரசாங்கம் முன் வந்து அங்கு இந்த போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிற சர்வ கட்சித் தலைவர்களையும் அழைத்து அதற்கு ஒரு பரிகாரம் காண வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு அந்தத் தீர்மானத்தை மத்திய அரசாங்கம் பார்க்கும்பொழுது, மத்திய அரசைப் பொறுத்தமட்டில் எந்த அளவுக்கு இந்த பிரச்சினைக்குத் தீர்வு காணக் கடமைப்பட்டிருக்கிறார்களோ அந்த அளவுக்கு செய்ய முன் வருவார்கள் என்று எதிர்பார்க்கிறோம். நூல் பற்றாக்குறையினால் மட்டும் அல்ல, ஒருவேளை நூல் விநியோகிப்பதிலும் இந்த சீர்கேடான நிலைமைகள் இருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்களுக்கு கூற விரும்புகிறேன். ஆக, மத்திய அரசாங்கம் இந்த தீர்மானத்தின் அடிப்படையில் அதிக நூல் விநியோகம் செய்யும்போது, இங்கு விநியோகம் செய்யும் முறையிலே, பல நண்பர்கள் கூறியதுபோல், பல சீர்கேடுகள் இருக்கின்றன என்பதை அறிந்து அவைகளை மாற்றுவதற்கு நமது அரசும் வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இதை ஆதரித்து முடித்துக் கொள்கிறேன்.





**திரு. என். கே. பழனிசாமி:** இந்தத் தீர்மானத்தை முழு மனதோடு ஆதரிக்கிறேன். இந்தத் தீர்மானத்தை ஒரு கட்சினுடைய தீர்மானமாக இல்லாமல், சகல கட்சிகளைச் சேர்ந்தவர்களும், சகல பகுதி மக்களும் ஏகோபித்து கூறியிருக்கிறார்கள் என்று மத்திய சர்க்கார் ஏற்றுக் கொண்டு இதற்கு உடனடியாக நிவாரணம் கொடுக்க வேண்டும். ஏற்கனவே அறிஞர் அண்ணா காலத்தில் நாம் கிளர்ச்சி நடத்தி, சகல கட்சிகளும் கேட்டுக் கொண்டதற்கு இணங்க சேலம் உருக்காலையையும், அதே மாதிரி சகல கட்சிகளும் சேர்ந்து வற்புறுத்தியதன் காரணமாக பஞ்ச நிவாரணத்திற்கு உதவியையும் பெற்றோம். அதேமாதிரி, இந்தப் புயலின் காரணமாக சேதம் ஏற்பட்டதற்கு சகல கட்சிகளும் கேட்டுக் கொண்டதற்கிணங்க பணம் கிடைத்தது. அதேமாதிரி, இந்த பிரச்சினையைப்பற்றி அங்கேயிருக்கிற மோகன் குமாரமங்கலம் அவர்களும், சுப்பிரமணியம் அவர்களும் கணக்கில் எடுத்து, தீர்மானத்தையும், மக்களுடைய அபிலாஷைகளையும் நேரடியாக எடுத்துச் சொல்லி, உடனடியாக கைத்தறிக்கு நிவாரணம் பெறவேண்டுமென்று சொல்லி, வரவேற்று முடித்துக் கொள்கிறேன்.

**திரு. எம். முத்தையா:** மாண்புமிகு தலைவர் அவர்களே, நமது தொழில் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த இந்த தீர்மானத்தை, எங்கள் கட்சியின் சார்பாக, ஆதரித்து, நெசவாளர்களுடைய் துயர் துடைக்க எல்லா கட்சிகளும் ஒருங்கிணைந்ததற்காக பாராட்டி, எனது கட்சியின் சார்பாக நான் வரவேற்று அமர்கிறேன்.

**திரு. துரை கோவிந்தராசன்:** தலைவர் அவர்களே, தொழில் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்த இந்தத் தீர்மானத்தை, நெசவாளர்களுடைய பிரச்சினையைத் தீர்க்கின்ற இந்த நல்ல தீர்மானத்தை, எங்களுடைய கட்சியின் சார்பாக முழுமனதோடு ஆதரித்து முடிக்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள மிக முக்கியமான தீர்மானத்தை அனைத்துக் கட்சிகளுடைய சார்பிலே அவைகளுடைய தலைவர்களும் மாண்புமிகு உறுப்பினர்களும் வரவேற்று, மத்திய அரசினுடைய கவனத்தை இந்தப் பெரிய பிரச்சினையிலே திருப்புவதற்கு உதவிகரமாக இருந்ததற்காக என்னுடைய நன்றியையும் பாராட்டுதலையும் அவர்கள் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இது 30 இலட்சம் நெசவாளர் பெருமக்களுடைய மிகப் பெரிய பிரச்சினையை உள்ளடக்கிய தீர்மானமாகும். இந்தத் தீர்மானத்தை நம்முடைய மாநிலச் சட்டப் பேரவையிலே நாம் நிறைவேற்றி விடுவதன்மூலம் சுமையை வேறு

[டாக்டர் மு. கருணாநிதி] [1973 மார்ச் 3

யாரிடத்திலேயோ மாற்றிவிடுகிறோம் என்று பொருள் அல்ல. இந்தப் பெரிய சங்கடத்தைப் பகிர்ந்து கொண்டு முழு ஒத்துழைப்புத் தரவேண்டிய மத்திய அரசு முன்வந்து உடனடியாக ஒத்துழைப்பு வழங்குமேயானால் அரசு தனக்குள்ள பொறுப்புகளைத் தன்னுடைய சக்திக்கு மீறிய வகையிலே கூட நிறைவேற்றத் தயாராக இருக்கிறது என்பதற்கான பல சான்றுகள் இந்த மாமன்றத்திலே எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. ஆகவே, அந்த வகையில் இது பொறுப்பை வேறு யார்மீதோ கட்டிக் கழிக்கிறோம் என்று இல்லாமல் இருக்கிற பொறுப்பினையும் அதிகாரத்தினையும் நாம் சுட்டிக்காட்டுகிறோம் என்கின்ற வகையிலே மத்திய அரசு உடனடியாக கருத்திலே கொண்டு ஆவன செய்யும் என்று நான் எதிர்பார்க்கிறேன். இந்த மாமன்றத்திலே எல்லாக் கட்சிகள் சார்பிலேயும் ஒருமுகமாக இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படுவது ஒன்றே இந்தப் பிரச்சினை எந்த ஒரு தனிப்பட்ட கட்சிக்கும் உரிய பிரச்சினையாக இல்லாமல், தமிழ் நாட்டிலே வாழ்கின்ற 20 இலட்சம் கைத்தறி நெசவாளர்களுடைய பிரச்சினை என்பது தெளிவாக விளங்குகின்றது.

நம்முடைய டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசும்பொழுது மற்றவர்களும் சுட்டிக்காட்டினார்கள், நடைபெறுகின்ற கிளர்ச்சிகள் உடனடியாக நிறுத்தப்படுவதற்கும் அதிலே ஈடுபட்டிருப்பவர்களை அழைத்துப் பேசுவதற்கும் போடப்பட்டுள்ள வழக்குகளைத் திரும்பப் பெறுவதற்கும் அரசு ஆவன செய்ய வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். எப்போதுமே இதுபோன்ற பிரச்சினைகளை யாரிடத்திலும் பேசித் தீர்க்கக்கூடாது என்கின்ற பிடிவாத எண்ணம் கொண்டது அல்ல இந்த அரசு என்பதை இந்த மாமன்றத்திலே உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களும் நாட்டு மக்களும் நன்றாக உணர்வார்கள். ஆகவே, இதுபோன்ற பிரச்சினைகள் உருவாகின்ற நேரத்தில் ஒரு அரசினுடைய கவனத்தைத் தீவிரமாக அந்தப் பக்கம் திருப்புவதற்கு ஒரு பக்கத்திலேயிருந்து போர்க்குரல் கொடுக்க வேண்டுமென்பதை நான் மறுக்கவில்லை.

12-00
ந. ப. கிளர்ச்சிகள் நடைபெறும், அல்லது போராட்டங்கள் நடைபெறும், ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும் என்று கூறுகிற நேரத்திலே ஜனநாயகத்தில் ஒரு அரசினுடைய கவனம் தீவிரமாக அந்தப் பக்கத்திலே திரும்புவதற்கு அவைகள் எல்லாம் நல்ல தூண்டுகோல்களாகப் பயன்படுகின்றன. ஆனால், அவைகள் கொஞ்சம் முற்றிவிடுகிற நிலையில் எது முக்கியமான பிரச்சினையோ அதை அரசு கவனிப்பதற்கு பதிலாகச் சட்டம், ஒழுங்கு, அமைதி இவற்றைக் கவனிக்கிற நிலைமை ஏற்பட்டு அரசாங்க இலாக்காக்கள் அவற்றைக் கவனிக்க வேண்டிய சூழ்நிலைக்குப் போய் முக்கியமான பிரச்சினை அடிப்பட்டுபோய் வேறு பிரச்சினைக்கு போய்விடாமல் மாற்றுக் கட்சிக்காரர்கள் மிகுந்த கவனமாக



1973 மார்ச் 3] [டாக்டர் மு. கருணாநிதி]

இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். யாரையும் அழைத்துப் பேசுவதற்குத் தயக்கம் கிடையாது. இந்தத் தீர்மானத்தின்மீது எல்லாக் கட்சியினைச் சார்ந்தவர்களும் தங்கள் கருத்தைத் தெரிவித்திருப்பதன் தொடர்பாக பேசுவதற்கு அவர்களுக்கு எந்தவிதமான தடையும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இந்தத் தீர்மானத்திற்கு எல்லாக் கட்சியினரும் தங்கள் ஏகோபித்த ஆதரவினைத் தந்ததற்காக அவர்களுக்கெல்லாம் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு இந்தத் தீர்மானத்தை இந்த அவை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப் பட்டது.

## 7. அறிவிப்பு

### பேரவை அலுவல் குறித்து

MR. DEPUTY SPEAKER : I have to announce to the House the following change in the order in which Demands are to be taken up for discussion in the House :—

Demand No. 15—' Police ' will be taken up on 15th March 1973 instead of on 10th March 1973, and the following Demands put up on 15th March 1973 will be taken on 10th March 1973 :—

8—Elections.

9—Head of State, Ministers and Headquarters staff.

36—Famine Relief.

37—Pensions.

38—Miscellaneous.

41—Other Miscellaneous Compensations and Assignments.

42—Compensation to Zamindars.

50—Commuted Value of Pensions.

52—Loans and Advances by the State Government.

8. அமைச்சர்களின் அறிக்கைகள்

(அ) பட்டதாரி ஆசிரியர்களை வரன்முறைப்படுத்துவதும், தேர்வு நிலைக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதும் குறித்த கல்வி அமைச்சரின் அறிக்கை.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்* : தலைவர் அவர்களே, விதி 82-ன் கீழ் இந்தப் பேரவைக்கு நான் ஒரு அறிவிப்பைச் செய்ய விரும்புகிறேன். ஏற்கனவே இந்த மன்றத்திலே 82-வது விதியின்கீழ் பட்டதாரி ஆசிரியர்களை வரன்முறைப்படுத்துவதுபற்றியும் தேர்வு நிலைக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதுபற்றியும் முடிவெடுத்து அறிவிப்பதாக நான் கூறியிருந்தேன். அதனையொட்டி இந்த அறிவிப்பை இப்பேரவைக்குத் தெரிவிக்கிறேன். இந்த அரசு தான் வெளியிட இருக்கிற முறையிலே ஆணையிட இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

The District Board High Schools have been taken over with effect from 1st April 1966. The teaching and non-teaching staff of these schools have further been taken over into government service with effect from 1st April 1970 and they have been constituted into a separate wing known as 'B wing' in the Tamil Nadu Educational Subordinate Service and Ministerial Service. Pending the issue of service rules of this 'B. Wing', rules applicable to the former district board schools have been followed in making appointments and several hundreds of B.T. assistants have been appointed by the Chief Educational Officers in a temporary capacity. Representations have been received by Government that servicves of these teachers should be regularised in view of the service they have already put in and also in view of the special circumstances in which they have been appointed by the Chief Educational Officers. As service rules applicable to these teachers have not yet been framed, Government as a special case, order that all B.Ts. appointed in the 'B wing' from 1st April 1970 up to the date of these orders will be regularised.

பட்டதாரி ஆசிரியர்கள் தேர்வுநிலைப் பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவது பற்றியும் முடிவெடுத்துக் கூறுவதாக அறிவித்திருந்தேன். அவர்களது பத்தாண்டுக்கால பணியின் அடிப்படையிலே விதிகள் திருத்தியமைக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.



5. 1973-74-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம் (தொடர்ச்சி).

*திரு. வ. முத்து* : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட 1973-74-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையைப் பாராட்டி இரண்டொரு வார்த்தைகள் பேச விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கை ஏழை எளிய பாட்டாளி மக்களின் நன்மைக்குப் போடப்பட்டிருக்கிற நல்ல திட்டமாக அமைந்திருக்கிறது. இந்த நல்ல திட்டத்தைப்பற்றி மாற்றுக் கட்சி நண்பர்கள் பேசாமல் அவர்கள் வெளியிலே மேடையிலே பேசி அரசியலை வளர்க்க விரும்புகிறார்கள். ஆனால் நம்முடைய கலைஞர் அவர்கள் செய்துகாட்டி வருகிறார்கள்.

இதிலே உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்ற திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதைப் பார்த்து கம்யூனிஸ்ட் கட்சியினர் என்ன இனி செய்வது என்று எண்ணி வெளியேறுகிற அளவுக்கு இருக்கிறார்கள்.

அரிசன மக்களுக்காக வீடு கட்டிக்கொடுக்கின்ற திட்டம் இதிலே கூறப்பட்டிருப்பதை பார்த்து உள்ளபடியே எல்லா அரிசன மக்களும் பூரிப்பு அடைகிறார்கள்.

பக்கிங்ஹாம் கால்வாய் சீரமைப்புத் திட்டம் செயல்பட இருக்கிறது. இதற்கு முன்னாலே கூவம் நதி சீரமைப்புத் திட்டம் என்று கொண்டுவரப்பட்ட நேரத்திலே எதிர்க் கட்சிக்காரர்கள் கேலியும் கிண்டலும் செய்தார்கள். அவர்கள் அந்தத் திட்டத்தைப்பற்றி சட்டமன்றத்திலே மேடையிலே பாராட்டிப் பேசாவிட்டாலும் அவர்களுக்குள்ளேயே பாராட்டிக் கொள்கிற நிலைமையைப் பார்க்கிறோம்.

அரசு ஊழியர்களுக்கு அரசு சலுகைகளை அறிவித்திருக்கிறது. மேட்டூர் மால்கோ தொழிற்சாலையை அரசுடைமையாக்க இருக்கின்ற திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட புரட்சிகரமான திட்டங்களை நிறைவேற்றுகின்ற இந்த அரசை இனி என்ன செய்ய முடியும் என்று எதிர்க் கட்சிக்காரர்கள் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய தொகுதியைப்பற்றி சில கருத்துக்களைக் கூறவிரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியாகிய சங்ககிரி தொகுதி விவசாயிகள் நிறைந்த பகுதி. அங்கே திருமணிமுத்தாற்றிலிருந்து மல்லசமுத்திரம் ஏரிக்கு ஒரு கால்வாய் போடுகிற திட்டம் மூன்று வருடமாகியும்கூட இன்னும் பூர்த்தி ஆகாமல் இருக்கிறது. இதைப்பற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டால்,

பி.டபிள்யூ.டி. அதிகாரிகளைக் கேட்டால் ரெவின்யூ அதிகாரிகளைக் கேளுங்கள் என்றும் ரெவின்யூ அதிகாரிகளைக் கேட்டால் பி.டபிள்யூ.டி. அதிகாரிகளைக் கேளுங்கள் என்றும் மாற்றி மாற்றிச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதை உடனடியாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மூன்றாண்டுகளுக்கு முன்பு சங்ககிரியிலே ஒரு மருத்துவ மனை கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டு இன்னும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதையும் உடனடியாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மல்லசமுத்திரத்திலிருந்து 4 மைல் தொலைவில் உள்ள பாலமேடு, படுத்திப் பாளையம் ஆகிய இடங்களுக்கு ஒரு கால்வாய் செல்கிறது. அதைச் செப்பனிட்டு இருந்தால் சில மாதங்களுக்கு முன்னால் ஏற்பட்ட வெள்ளத்தின்போது வந்த தண்ணீரை அந்தப் பகுதி மக்கள் பெற்று பயன் அடைந்திருப்பார்கள். அதையும் செப்பனிட்டுத் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்குப் பேச வாய்ப்புத் தந்தமைக்காக நன்றியைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. குழ. செல்லையா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வரால் அளிக்கப்பட்டிருக்கிற நிதிநிலை அறிக்கையை பற்றி அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எந்த அளவிற்கு இந்த அரசு சாதனைகளை வழங்கியிருக்கிறதோ அந்த அளவிற்கு வேதனைகளையும் அளித்திருக்கிறது என்பதைச் சொல்லாமல் இருக்க முடியாது. ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கையில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மக்கள் வாக்கை அளித்தார்கள். ஆனால் ஒளிமயமான எதிர்காலத்திற்குப் பதிலாக இன்றைக்கு ஒளியிழந்த தமிழகத்தைத்தான் நாம் கண்டுகொண்டிருக்கிறோம். மின்சாரப் பற்றாக்குறை அந்த அளவிற்கு கிராமப்புறங்களிலும் நகர்ப்புறங்களிலும் ஏற்பட்டு இருள் கப்பிக்கொண்டிருக்கிறது. கிராமப்புறங்களிலே மண்ணெண்ணெய் கிடைக்காமல் இருள் கப்பிக் கொண்டிருக்கிறது. இருள் கப்பிக் கொண்டிருக்கின்ற தமிழகத்தைத்தான் பார்க்கிறோமே தவிர ஒளிபொருந்திய தமிழகத்தைக் காண முடியவில்லை.

அதுமட்டுமல்லாமல், இங்கே நாட்டு மக்களுடைய நிலைமைகளைப் பார்க்கும் பொழுது மக்களெல்லாம் இன்றைக்கு எந்த அளவிற்கு வேதனைக்கு உள்ளாகியிருக்கிறார்கள், மனம் புண்பட்டிருக்கிறார்கள், மிகுந்த வேதனைக்கு ஆளாக்கப்



பட்டிருக்கிறார்கள் என்பதைப்பற்றி அதிகம் சொல்ல முடியவில்லை என்று சொன்னாலும் ஒன்றிரண்டை மட்டும் சொல்லிக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக இன்றைக்கு அமைச்சர் பெருமக்கள், குறிப்பாக மாண்புமிகு முதல்வரவர்கள் மக்களைக்கூடச் சந்திக்க மனமில்லாத நிலையில் இருக்கிறார்கள் என்பதற்கு ஒன்றை மட்டும் கூற விரும்புகிறேன். கடந்த 17-ஆம் நாள் மாண்புமிகு முதல்வரவர்கள் பட்டுக்கோட்டைக்கு வருகை தந்தார்கள், அப்பொழுது ஜனநாயக ரீதியில், அற வழியில் கறுப்புக் கொடி காட்டுவதற்காக நாங்கள் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே கேட்டு இடமும் நிர்ணயித்து அதன்மூலம் கறுப்புக்கொடி காட்டுவதற்காக அங்கே தயாராக இருந்தோம். அங்கே மாண்புமிகு முதல்வரவர்கள் ஒரு மணி அளவிலே பக்கத்திலேயிருக்கும் ஒரத்தநாட்டு நிகழ்ச்சியிலே கலந்துகொண்டுவிட்டு 2 மணி, 3 மணிக்கெல்லாம் பட்டுக்கோட்டைக்கு வரவிருந்தார்கள். ஆனால் என்ன காரணத்தினாலோ வர முடியாத நிலையில் இருந்துகொண்டார்கள். பல லாரிகளின் மூலமும், பல டிராக்டர்களின் மூலமும் 30, 32 லாரிகளின் மூலம் கையிலே மூட்டுக் கம்புகளையும், வேல் கம்புகளையும் கொண்டு வந்தார்கள். இன்னும் சுளுக்கிகளையும் கொண்டு வந்தார்கள், அரிவாள்களைக் கொண்டு வந்தார்கள். கற்களை லாரிகளிலே ஏற்றிக் கொண்டு வந்தார்கள். நாங்கள் எங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்திலே நின்று கொண்டிருந்தபொழுது அந்த நண்பர்கள் ஈட்டிகளைத் தூக்கிக் காட்டினார்கள். அப்படிப்பட்ட அராஜகமான சூழ்நிலையில், கறுப்புக் கொடி காட்டுவதற்காக வந்த தோழர்கள் காலை 10 மணியிலிருந்து மாலை 4 மணி வரையிலும் அமைதியாக, எந்தவிதமான ஆர்ப்பாட்டமும் இல்லாமல், சுமார் 50,000-க்கும் மேற்பட்ட தோழர்கள் வரிசையாக நின்றுகொண்டிருந்தார்கள். ஆனால் இவர்கள் அறந்தாங்கி பகுதி, திருத்துறைப்பூண்டி பகுதியாக வர வேண்டிய வழிகளைவிட்டு விட்டு ஒரத்தநாடு பகுதிக்குச் சென்று அங்கேயிருந்து ரௌடிக் கும்பல்களை, குறிப்பாக மதுரை மாவட்டத்திலிருந்து அவர்கள் வந்தவர்கள் என்று சொல்லப்படுகிறது, 200-க்கு மேற்பட்டவர்கள் தலையிலே ஐந்தாறு முழத் துண்டுகளை மூன்றுமுறை முறுக்கிக் கட்டிக்கொண்டு, ஏதோ அடையாளம் காட்டுவதுபோல் அவ்வாறு செய்யப்பட்டு, அவர்கள் கலவரம் விளைவித்தார்கள். சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்களும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தோழர்களும் மருத்துவ மனையிலே சேர்க்கப்பட்ட காட்சியை நாம் அறிவோம். இப்படிப்பட்ட நிலைமைகளில் முதல்வரவர்களே அங்கே அராஜகத்தைத் தூண்டிவிடும் அளவிற்கு அங்கே கழகத்திலே உள்ளவர்களை லாரிகளில் அனுப்பி அதன்மூலம் கலகம் விளைவிக்கும் நிலைமையை உருவாக்கி, மண்டைகளை உடைத்து, கைகால்களை இழக்கின்ற அளவிற்கு கொடு

மைகளையும், இடையூறுகளையும் எந்த அளவிற்குச் செய்ய முடியுமோ அதை விளைவித்துவிட்டுத்தான் வரவேண்டுமென்ற எண்ணத்தில் இருந்தார்கள் என்று கருதுகிறேன். ஏனென்றால், அவர்கள் குறிப்பிட்ட நேரத்தில் வந்திருந்தால் எந்தவிதமான ஆரம்பாவிதமும் இல்லாமல், அற வழியில், அன்று பாதையில், ஜனநாயக ரீதியில் கறுப்புக்கொடி காட்டுகின்ற நிகழ்ச்சி நடைபெற்றிருக்கும்.

அதுமட்டுமல்ல, அங்கே இரவு 10½ மணிக்கு வருகை தந்தார்கள். அதற்கு முன் அங்கே சாலையிலே யாராக இருந்தாலும், பொதுமக்களாக இருந்தாலும், பட்டுக்கோட்டையிலே 13-வது வார்டிலே சரோஜா என்ற அம்மையாரை மிரட்டி காவல் துறையினரே அடித்து மண்டையை உடைத்தனர். இன்னொருவர், ரெத்தினத்தம்மாள் என்ற அம்மையாரை, அவர்கள் வேலையிலிருந்து ஓய்வு பெற்றவர்கள், அவர்கள் 13-வது வார்டிலே குடியிருப்பவர்கள், அவர்களை வீட்டில் நுழைந்து அடித்து நொறுக்கியிருக்கிறார்கள். இப்படி முதலமைச்சர் வரும் நேரத்தில் பொது மக்கள் யாருமே இருக்கக்கூடாது என்ற நிலைமையை உருவாக்கிவிட்ட பிறகுதான் முதலமைச்சரவர்கள் அங்கே வருகை தந்திருக்கிறார்கள் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அங்கே இந்த அளவிற்கு அராஜகம், இந்த அளவிற்குக் கொடுமைகள், கொடுமைப்படுத்தும் காரியங்கள் செய்யப்பட்டு வருகிறதே தவிர வேறல்ல. அதுமட்டுமல்லாமல், அடிபட்டு நிற்கக்கூடிய அப்படிப்பட்டவர்களின்மீது தவறான முறையில், உண்மைக்கு மாறான வழியில், பொய்யான வழக்குகளைப் போட்டிருக்கிறார்கள். அங்கே காவல் துறையினர் அடித்திருந்தாலும் கூட அங்கேயிருக்கும் வளைவுகளை அறுத்ததாக இப்படி ஏதேதோ செக்ஷன்களில் போட்டு அவர்கள் மீது வழக்கு போட்டிருக்கிறார்கள். பல ஊராட்சி மன்றத் தலைவர்கள், அமைப்பாளர்கள், இன்னும் நிகழ்ச்சிக்கே வராதவர்கள்மேல்கூடத் தவறாக வழக்குகளைப் போட்டிருக்கிறார்கள் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எந்தவிதமான ஆயுதமும் இல்லாமல், அறிக்கையின்படி கையிலே கறுப்புத்துணியோடு, காகிதத்தோடு, குச்சிகூட கொண்டுவராமல் இருந்த அவர்களை அடித்து நொறுக்கிவிட்டு அவர்கள் மேலேயே கேஸ் போட்டிருப்பது எந்தவகையிலே நியாயமிருக்கிறது என்று கேட்க ஆசைப்படுகிறேன். ஆனால் இந்த சுளுக்கிகளைக் கொண்டுவந்தவர்களின் மேல், ஈட்டிகளைக் கொண்டு வந்தவர்களின் மேல், இப்படிப்பட்ட பயங்கரமான ஆயுதங்களைக் கொண்டு வந்தவர்களின் மேல், எப்படி லாரிகள் மூலம் கொண்டுவந்தார்களோ அவர்களின்மீது ஏனோ இந்த வழக்குகள் போடப்படவில்லை. அவர்களை அரெஸ்ட் செய்யவில்லை. எனவே இந்த அளவிற்கு ஒரு சார்பாக, நேர்மையற்ற முறையிலே நிர்வாகம் நடைபெற்று வருகிறது என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.



அதுமட்டுமல்லாமல், மறுநாள் காவல் துறை அதிகாரிகள், 13-வது வார்டுக்குப் பக்கத்திலுள்ள அண்ணா சிலைக்குப் பக்கத்தில் வேன் மூலம் காவல் துறையினரை அழைத்து வந்து வண்டியிலிருந்த கற்களை வெளியிலே கொட்டி அவரவர்களே கொடிகளை அறுத்துப் போட்டு, கம்புகளை எடுத்துக்கொண்டு பக்கத்திலே போட்டு படம் எடுத்திருக்கிறார்கள் என்ற தகவல் வந்திருக்கிறது. இன்னொரு தகவல்கூட வந்திருக்கிறது, காவல் துறையைச் சேர்ந்தவரையே படுக்க வைத்து அடிப்பட்டதைப்போல் படம் எடுத்திருப்பதாகவும் தகவல் வந்திருக்கிறது. இப்படி உண்மைக்கு மாறான வழிகளிலே வழக்குகளை ஜோடிக்கின்ற முறை இருக்கிறதே தவிர, உண்மையான ஜனநாயக முறையிலே மக்களைக் காப்பாற்றுவதற்கு எந்தவிதமான நடவடிக்கைகளையும், எந்தவிதமான பொறுப்பையும், எந்தவிதமான நிலைமையையும் இந்த அரசு மேற்கொள்ளவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே முறையில் உண்மைக்கு மாறான வழக்குகள், உண்மைக்குப் புறம்பான வழக்குகள் அங்கே போடப்பட்டிருக்கின்றன. கடந்த மாதம், ஜனவரி மாதம் 6-ஆம் தேதி மாண்புமிகு நாவலர் அவர்கள் ஆலங்குடியில் பேசியிருக்கிறார்கள். அவர்கள் பேசிய கூட்டத்தில் அவர்கள் தாக்குறைவாகப் பேசிய நேரத்தில் மக்கள் கூச்சல் போட்டிருக்கிறார்கள். அமைச்சரவர்கள், கழகத் தோழர்கள் ஒருபுறமாக ஒதுங்கியிருங்கள், காவல் துறையினர் கவனித்துக் கொள்வார்கள், காவல் துறையினர் கவனித்துக் கொள்வார்கள் என்று மூன்றுமுறை சொன்னதால், கண்ணீர்ப்புகைக் குண்டும், தடியடிப் பிரயோகமும் செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதுமட்டுமல்ல, இரவு 11 மணிக்குமேல் கூட்டம் முடிந்து புதுக்கோட்டைக்குப் போனபிறகு, புதுக்கோட்டைக்குச் சென்று அமைச்சர்களைக் கலந்து கொண்டு வந்து இரவு இரண்டு மணி அளவில் வட்டச் செயலாளரும், மற்றவர்களும் எம்.எஸ்.எம். 7914 என்னும் எண்ணுள்ள அம்பாசிடர் காரில் பயங்கரமான ஆயுதங்களைக் கொண்டுவந்து, இரவு இரண்டு மணிக்கு அங்கேயுள்ள இராமச்சந்திரன் போன்ற ஊராட்சி மன்றத் தலைவரின் மனைவியையும், பாட்சா என்ற வலது கம்யூனிஸ்ட் கட்சித் தோழரையும், அங்கேயிருக்கும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ரத்தினம் என்பவரையும், சுந்தரம் ஐயர் என்பவரையும் அடித்திருக்கிறார்கள். அமைச்சர்களைக் கலந்துகொண்டு தான் செயலாளர்கள் இதுபோன்ற வன்முறைகளைச் செய்கிறார்களோ அவர்களுக்குத் தான் தெரியும். அரசாங்கம் நல்ல காரியங்களுக்காகப் பயன்படுத்த வேண்டுமென்று மக்கள் வரிப்பணத்தின் மூலம் வாங்கப்படும் அந்தக் கார்கள்கூட இப்படிப்பட்ட கொடுமையான காரியங்களுக்கு, எந்த மக்கள் வாங்கித் தந்தார்களோ அந்த மக்களையே அடிப்பதற்காக, உதைப்பதற்காக

அரசாங்க கார்கள் பயன்படுத்தப்படுகிறது என்பதை இந்த நேரத்தில் வருத்தத்தோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதேபோல் எந்த நிகழ்ச்சியை எடுத்துக்கொண்டாலும் அங்கே வன்முறைகளைத் தூண்டிவிட்டு தவறான முறைகளிலே காரியங்கள் நடைபெறுவதைக் காண்கிறோம். இதற்கு முன்னாலெல்லாம் உர மூட்டை, சீனி மூட்டை போன்றவைகளைத்தான் கடத்துவார்கள். இப்படிப்பட்ட பொருள்களைத்தான் கடத்திக்கொண்டு செல்வார்கள். ஆனால் திண்டுக்கல்லிலே தங்கவேல் என்பவரையே கையையும், காலையும் கட்டிக் கடத்திச் சென்று பிறகு அனுப்பிய நிலைமையைக் காண முடிகிறது. அங்கே இருக்கும் நகராட்சித் தலைவர் அங்கே செய்திருக்கிறார்கள். ஏன் அப்படிச் செய்கிறார்கள் என்றால் அமைச்சர் பெருமக்களும் அங்கே மிகவும் ஈடுபட்டிருக்கிறார்கள். மதுரை மேயர் அவர்கள் முகாமிட்டுத் திட்டம் போட்டிருக்கிறார்கள். ஆகவே, . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இந்த அவையிலே இல்லாதவர்களைப்பற்றிக் குற்றம் சாட்டக்கூடாது. மதுரை மேயரைப்பற்றிச் சொல்கிறீர்கள், அவருக்கு மறுப்பதற்கு வாய்ப்பில்லை.

**திரு. குழ. செல்லையா :** எனக்குக் கிடைத்த தகவலைச் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நிரூபிக்க வேண்டும்.

**திரு. குழ. செல்லையா :** ஆகவே இதுபோன்ற காரியங்கள் அங்கே செய்தாலும் அமைச்சர் பெருமக்களின் தூண்டுதலின் காரணமாக நடைபெறுகிறது என்பதை ஆதாரத்தோடு சொல்ல முடியும். அதேபோல் கடந்த 26-ஆம் நாள் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தஞ்சைக்கும், புதுக்கோட்டை பகுதிக்கும் வருகை தரும்பொழுது லாரிகளை ரோடுகளில் கொண்டுவந்து தாக்குவதற்குப் பல முயற்சிகளிலே ஈடுபட்டிருக்கிறார்கள். கொண்டு வரப்பட்ட லாரி எம்.டி.எ. 2706, மாயாண்டி என்பவர் தலைமை தாங்கி இதுபோன்ற காரியங்களைச் செய்திருக்கிறார்.

இந்த நாட்டில் நடைபெறுகின்ற அராஜகங்களுக்கும், கொடுமைகளுக்கும் அமைச்சர்கள்தான் காரணமாக இருக்கிறார்கள், அவர்கள்தான் தூண்டிவிடுகிறார்கள் என்பதை இந்த நேரத்தில் அழுத்தந்திருத்தமாகச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அமைச்சர் பெருமக்கள் போய்விட்டு வந்த பிறகுதான் இதுபோன்ற காரியங்கள் நடைபெறுகின்றன. பட்டுக்கோட்டையில் இருந்து மறுநாள் கும்பகோணத்திற்கு வரும்போது கறுப்புக் கொடி காட்டுவதற்காகத் திட்டமிட்டிருந்த நிலையில் அந்தத் தோழர்களை அந்த ஊரில் மட்டுமல்லாது, கும்பகோணத்திலிருந்து 20, 30 மைல் தூரத்திலுள்ள





ஊர்களிலே பேருந்து நிலையங்களிலும், பஸ் ஸ்டாப்புகளிலும் கைது செய்து உண்மைக்கு மாறாக, பொதுமக்கள் அருவருக்கத்தக்க வகையில் 75-வது செக்ஷனில் சார்ஜ் ஷீட் கொடுத்திருக்கிறார்கள். இப்படி வழக்கமாக காவல் துறையினர் வழக்குகளைச் சோடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

கூட்டத்திற்கு வந்துவிட்டு திரும்ப ஊருக்குப் போய்க் கொண்டிருக்கும் போது மாவட்ட அமைப்பாளர் கோவி. நாராயணசாமியை வழிமறித்து அடித்து மண்டையை உடைத்திருக்கிறார்கள். இன்றைக்கு அவர்கள் மருத்துவமனையிலே இருக்கிறார்கள். தொழிற்சங்கத் தலைவர் ராதா அவர்களையும் தாக்கி மண்டையை உடைத்திருக்கிறார்கள். சிறுபாலக்காடு ஊராட்சி மன்றத்தைச் சார்ந்த திரு. கோ. சீனிவாசனையும் அடித்து காயப்படுத்தியிருக்கிறார்கள். இப்படி அடிப்பட்ட, காயப்பட்ட தோழர்களுக்கு மருத்துவமனையில் எந்தவிதமான சிகிச்சையும் அளிக்கப்படவில்லை. நாங்கள் சிகிச்சை அளித்தால் எங்களை அடிப்பார்கள் என்று டாக்டர்கள் பயப்படுகிறார்கள். ஆகவே, அவர்களை டிஸ்சார்ஜ் செய்து தனிப்பட்டவர்களிடம் சிகிச்சை செய்யும் அளவுக்கு நிலைமை இருக்கிறது என்பதை இந்த மன்றத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நாட்டில் மக்கள் மகிழ்ச்சியோடு வாழமுடியாத சூழ்நிலை ஏற்பட்டு விட்டது. மீனவர்களானாலும் சரி, விவசாயிகளானாலும் சரி, வேறு எந்தத் துறையில் உள்ளவர்களானாலும் சரி நெருக்கடியான நிலைமை உருவாகி இருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தவரை மீனவர்கள் நாட்டுப் படகு, விசைப்படகு என்ற இரண்டுக்குமிடையே சிக்கிக் கொண்டிருக்கிறார்கள். என்னுடைய பேராவூரணி தொகுதியில் உண்மைக்கு மாறாகத்தான் சிலோன் அகதி என்று சொல்லிக் கொண்டு விசைப்படகுகளை வாங்கி வைத்துக்கொண்டு நாட்டுப் படகுக்காரர்களின் வலைகளை அறுப்பது, மற்றச் சேதங்கள் உண்டாக்குவது போன்ற செயல்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதனால் அங்கு கொந்தளிப்பான நிலைமை இருக்கிறது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

விவசாயத்திற்குத் தேவையான உரமானாலும் சரி, பூச்சி மருந்தானாலும் சரி திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கும் பொறுப்பாளரின் அனுமதி பெற்றுத்தான் வாங்க வேண்டிய நிலைமை இருக்கிறதே தவிர உண்மையான பொதுமக்கள் வாங்கமுடியாது. மண்ணெண்ணெய் வேண்டுமென்றாலும் திராவிட முன்னேற்றக் கழகப் பொறுப்பாளரின் சிபாரிசு வேண்டியிருக்கிறது. அன்றாட வாழ்க்கையில் மக்கள் எல்லாம் துயரமான கட்டத்தில் தமிழகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மக்களுடைய நல்வாழ்வுக்கு வழிவகைகளைக் காணாது மக்களை உருட்டி, மிரட்டி, அடித்து அராஜகத்தை உருவாக்குவது

நியாயமா, தர்மமா, நீதியா என்று கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இது போன்ற அராஜகங்கள் நடத்துவது, அட்டூழியங்கள் நடத்துவது, தரக் குறைவான முறையில் பொய்யான வழக்குகளை ஜோடித்துப் போடுவது எல்லாம் ஜனநாயக முறை அல்ல என்று சொல்லிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

'இடுக்கண் வருங்கால் நகுக' என்று முதல்வர் அவர்கள் ஆரம்பித்திருப்பதைப் பார்க்கின்றபோது இந்த அரசுக்கு இடுக்கண் வந்திருக்கிறது என்பதை உணர்ந்திருக்கிறார்கள் என்பது தெரிகிறது. இடுக்கண் என்பது—'தீதும் நன்மையும் பிறர் தர வாரா' என்பதிலிருந்து தங்களுடைய நடவடிக்கையின் காரணமாகத்தான் இவை எல்லாம் வந்திருக்கின்றன.

நாட்டில் அராஜகம் மேலும் மேலும் தூண்டிவிடப்படுகிறது. குறிப்பிட்டு இன்னார் இன்னார், இன்ன காரில், இன்ன லாரியில் வந்து அராஜகம் செய்தார்கள், மக்களை அடித்தார்கள், அண்ணா கழகத் தொண்டர்களைத் தாக்கினார்கள் என்று கார் நம்பர், லாரி நம்பர்களுடன் எல்லாம் அதிகாரப்பூர்வமான தகவலைக் கொடுத்தால் கூட நடவடிக்கை எடுத்துக் கொள்வதில்லை என்று கூறி, இந்த மாதிரி அராஜகங்களுக்கெல்லாம் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்தான், குறிப்பாக மாண்புமிகு முதல்வர் அவர்கள்தான் காரணம் என்று சொல்லி விடைபெறுகிறேன்.

* திரு. எஸ். நடராசன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் அவர்கள் சமர்ப்பித்துள்ள வரவு-செலவுத் திட்டத்தின்மீது என்னுடைய கருத்தைச் சொல்ல முற்படுகிறேன்.

நம்முடைய அரசு பொறுப்பேற்றதிலிருந்து ஏழை மக்களுக்காகவும், குறிப்பாக விவசாய மக்களுக்காகவும் செய்து வருகின்ற சாதனைகளை மிக அழகாக நம்முடைய நிதிநிலை அறிக்கையில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த நிலையைக் கண்டு பொறுக்காதவர்கள்தான் தங்களுக்குள்ள வேதனையை நாட்டு மக்கள் வேதனையாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இன்றைக்கு ஒரு சர்க்கார் பொதுவுடைமைத் தத்துவத்தையும், சமுதாயத்தில் சோஷலிசத்தையும் படிப்படியாகக் கொண்டு வருவதற்கு என்னென்ன திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமோ அந்தத் திட்டங்களை முறையாக, செம்மையாக நம்முடைய அரசு நிறைவேற்றி வருகிறது என்பதை மக்கள் அனைவரும் உணர்ந்து நன்றாகப் பாராட்டி வருகிறார்கள்.



தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரை விவசாயத் துறையில் அடைந்திருக்கின்ற முன்னேற்றமானது நம்முடைய சர்க்கார் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு விவசாயிகள் சர்க்காரோடு ஒத்துழைக்கின்ற முறையும், விவசாயிகளுக்குச் சர்க்கார் அளிக்கின்ற சலுகைகளையும் பார்க்கின்றபோது இன்றைக்கும் தஞ்சை மாவட்டத்து மக்கள் எல்லாம் நம்முடைய முதல்வர் அவர்களைத் தங்களுடைய கடவுளாகவும், தெய்வமாகவும் வணங்குகிறார்கள்.

எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் கடந்த 17-ம் தேதி முதல்வர் அவர்கள் பட்டுக்கோட்டைக்கு வந்ததைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். முதல்வர் அவர்கள் பட்டுக்கோட்டைக்கு வருவதாக இரண்டு முறை அறிவித்து வர முடியாத சூழ்நிலையில் மூன்றாவது முறையாக வர ஏற்பாடு செய்து கழகச் செயல் வீரர்கள் கூட்டத்தைக் கூட்டினார்கள். தானைத் தலைவனின் உரையைக் கேட்பதற்காகவும், அவரைப் பார்ப்பதற்காகவும் அவருடைய அறிவுரைகளைக் கேட்பதற்காகவும் கழகத்தின் சார்பில் ஏறத்தாழ இருபதாயிரம், முப்பதாயிரம் தொண்டர்கள் அணிவகுத்தார்கள். இதைக் கண்டு பொறுக்க முடியாதவர்கள் அவருக்குக் கறுப்புக்கொடி காட்டுவது என்று தீர்மானித்தார்கள். காவல் துறையினர் அவர்களுக்கு கறுப்புக் கொடி காட்டுவதற்காக ஒதுக்கிய இடத்திலேதான் பிடிப்போம் என்று அவர்களே ஒப்புக் கொண்டிருந்தும் அந்த இடத்தினை விட்டு நகரின் எல்லை ஆரம்பத்திலிருந்து அண்ணா சிலை இருக்கும் நகரின் நடு மையம் வரை சாலையின் இரு மருங்கிலும் கறுப்புக் கொடி என்ற பெயரால் கையில் அவர் சொன்ன ஆயுதங்களை எல்லாம் வைத்துகொண்டு, போக்குவரத்துக்கு இடைஞ்சல் தரும் வகையில் நீர்த் தொட்டிகளை எல்லாம் வழியிலே போட்டு முதல்வர் அவர்களும், அவருடைய உரையைக் கேட்பதற்காகச் செல்ல வேண்டிய தொண்டர்களும் செல்ல முடியாமல் தடுத்து முதல்வர் வந்தால் அராஜகத்தை நடத்துவது என்று கங்கணம் கட்டிக் கொண்டிருந்தார்கள். அந்த நேரத்தில்தான் எங்களைப் போன்ற கழகத் தோழர்கள் எல்லாம் இப்படி ஒரு அராஜகமான நிலைமை நாட்டில் நடப்பது நல்லதல்ல, அவர்களே வலிய வந்தாலும் நாம் அந்த நிலைமையை உருவாக்கக்கூடாது என்று பொறுத்துப் பார்த்து காவல் துறை அதிகாரிகளிடமும் மாவட்ட ஆட்சித் தலைவரிடமும் நிலைமையை எடுத்துச் சொன்னோம்.

ஆனால் எங்களை நகரத்திற்குள்ளே விட மனம் இல்லை, வழிமறித்தார்கள். அன்று நடந்த கலவரத்தில் காவல் துறை அதிகாரியும் மாவட்ட ஆட்சித் தலைவரும் கூட காயம் பட்டார்கள். இப்படியெல்லாம் நடைபெற்றிருக்கிறபோது ஏதோ திராவிட முன்னேற்றக் கழகக்காரர்கள் அராஜகத்தில் ஈடுபட்டார்கள் என்று சொல்வது உண்மைக்குப் புறம்பானதாகும். அன்று நடைபெற வேண்டும் என்று அவர்கள் திட்டமிட்டிருந்தது நடைபெறவில்லை என்ப[illegible]

அவர்கள் எண்ணம் கைகூடவில்லை என்பதற்காக இன்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது பழி போடுகிறார்கள். முதல்வர் அவர்கள் வந்து, அந்தக் கூட்டத்தை அமைதிப்படுத்திய பிறகு, ஏறத்தாழ ஒரு மணி நேரம் 50,000 மக்கள் மத்தியில் எந்தவிதமான குழப்பமும் இல்லாமல் சப்தமும் இல்லாமல் நிம்மதியாக பேசி வந்திருக்கிறார்கள். அங்கு பொதுமக்களிடத்தில் எந்தவிதமான பரபரப்பும் இல்லை. ஏதோ அவர்கள் கட்சிக்காரர்கள் அவர்கள் வயிற்றெரிச்சலைக் காட்டிக்கொள்வதற்காக ஏற்படுத்திய, கலகம் ஏற்படவேண்டுமென்ற எண்ணமே தவிர அங்கு பொதுமக்களிடையே, பட்டுக்கோட்டை தொகுதி மக்களிடையே எந்தவிதமான குழப்பமும் இல்லை. அங்கு நடைபெற்ற கலவரங்கள் எல்லாம் கறுப்புக்கொடி என்ற பெயரால் ஏற்பட்ட கலவரங்களே தவிர திராவிட முன்னேற்றக் கழகக்காரர்கள் அண்ணா வழியில்தான் செல்கிறார்கள், அவர்கள் அண்ணா வழியில்தான் அன்று அமைதியைக் கடைப்பிடித்தார்கள் என்பதை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் விவசாயத்துறையில் அம்மாவட்டம் முன்னேறியிருப்பதற்குக் காரணம் அரசு அளிக்கின்ற ஊக்கமேதான். புதுப்புது ஆராய்ச்சிகளைச் செய்து புது புது நெல் வகைகளைக் கண்டுபிடித்து அவைகளை எப்படி எப்படி விவசாயம் செய்யவேண்டுமென்று சொல்லி ஊக்கம் அளிக்கிறது அரசு. ஏ. டி. டி. 27 கருணை, ஐ. ஆர். 8, ஐ. ஆர். 20, ஜெயா, பத்மா என்றெல்லாம் புது புது நெல் வகைகளைக் கண்டுபிடித்து, ஆராய்ச்சி செய்து, விவசாயிகள் பரீட்சை செய்து பார்ப்பதில் அரசுடன் ஒத்துழைத்து இன்று உணவில் தன்னிறைவு பெற்றிருக்கிறது தஞ்சை மாவட்டம். அது நம்முடைய ஆட்சியால் கிடைத்த பலனாகும். அதற்காக ஆட்சியாளர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். இன்று தஞ்சை மாவட்டத்தில் ஏறத்தாழ 1,57,000 மக்களுக்கு இலவச வீட்டு மனைப் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. ஒரு லட்சம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், 57,000 பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும் வீட்டு மனைப் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. குத்தகைதாரர்களுக்கு குத்தகை பாக்கிக்காக சட்டம் கொண்டு வந்து அதை தள்ளுபடி செய்திருக்கிறார்கள். கடன் நிவாரணச் சட்டமும் கொண்டுவந்திருக்கிறார்கள். இன்று நில உடைமையாளர்களிடமிருந்து நிலத்தை குத்தகைதாரர்களுக்கு வாங்கிக் கொடுப்பதற்கு சட்டம் கொண்டு வர இருக்கிறார்கள். இப்படிப்பட்ட சீர்திருத்தங்கள் செய்யவேண்டும் என்பதற்காகத்தான் பல விவசாயப் போராட்டங்கள் தஞ்சையில் நடைபெற்றிருக்கின்றன. இன்று எந்தவிதப் போராட்டமும் இல்லாமல், எந்தவிதமான ஆர்பாட்டமும் இல்லாமல், துப்பாக்கிச் சூடு இல்லாமல் இன்றைக்கு அந்தச்



சலுகைகளை நம் கலைஞர் அவர்கள் ஆட்சி செய்து கொடுத்திருப்பது கண்டு விவசாயிகள் உண்மையிலேயே பூரிப்படைந்திருக்கிறார்கள்.

இந்த ஆட்சிக்கு அவர்கள் மிகவும் கடமைப்பட்டிருக்கிறார்கள். இத்தகைய விவசாயப் போராட்டங்களில் ஈடுபட்டிருக்கிற தஞ்சை மாவட்ட பெரியவர் இங்கு இருக்கிறார்கள், மணலி கந்தசாமி அவர்கள். விவசாயிகளுக்கு கூலி உயர்வு, விவசாயிகளுக்கு உழுவதற்கு நிலம், வீட்டு மனை வழங்கல் என்று எவற்றிற்காகப் போராடி எதற்காகத் தலைமறைவாக இருந்து போராடினார் களோ, அதற்காக அவர்கள் கொடுத்த உயிர்த் தியாகம் கொஞ்சநஞ்சமல்ல. சிவராமன், இரணியன், களப்பால் குப்பு போன்றவர்கள் உயிர்த் தியாகம் செய்தார்கள். அப்படியிருந்தும் அவர்கள் முன்பிருந்த ஆட்சியில் அடைய முடியாத அந்த பாக்கியத்தை இன்று ஆர்பாட்டம் எதுவும் இல்லாமல் நம் ஆட்சியில் அவர்கள் அடைகிறார்கள் என்றால் இந்த ஆட்சி அவர் களுக்கு செய்திருக்கிற சேவையை அவர்கள் மனமார வெளியிலே பாராட்ட முடியாவிட்டாலும்கூட—கட்சிக் கட்டுப்பாடு காரணமாகப் பாராட்ட முடியா விட்டாலும்கூட—எங்களைப் போன்றவர்களைப் பார்க்கும்போது அவற்றைப் பாராட்டத்தான் செய்கிறார்கள். நேற்று கூட தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த வடிவேலு அவர்கள் பேசுகிறபோது யார் யாரோ இறக்கிற நேரத்தில் அவர் களுக்கு உதவிப்பணம் கிடைக்கிறது, பூச்சி மருந்து காரணமாக விவசாயிகள் இறந்தால் அவர்களுக்கு இந்தப் பணம் இல்லையா என்று கேட்டபோது முதல் அமைச்சர் அவர்கள் உடனே பூச்சி மருந்து தெளிப்பதன் காரணமாக விவசாயிகள் இறந்தால் அவர்கள் குடும்பத்திற்கு ரூபாய் ஆயிரம் தருகிறேன் என்று சொன்னார்கள். அதற்காகத் தஞ்சை மாவட்டத்தின் சார்பில் முதல் அமைச்சர் அவர்களுக்கு நன்றி செலுத்திக்கொள்கிறேன்.

இன்று இந்த ஆட்சியில் தமிழ்நாடு தன்னிறைவு பெற்றிருக்கிறது உணவுத் துறையில். இவற்றையெல்லாம் பார்க்கும்போது இந்த ஆட்சி இன்னும் பல ஆண்டுகள் தொடர்ந்து இருக்கும், இவர்கள் மேலும்மேலும் வலுப்பெறுவார்கள், என்பதைக் கண்டுகொண்டு எதிர்கட்சியினர் அராஜகம் மூலம் இந்த ஆட்சியை ஒழித்துவிடலாம், எங்கேயாவது இரண்டு பிணங்கள் விழாதா அதன் மூலம் இந்த ஆட்சியை ஒழித்துவிடமுடியாதா என்று இன்றையதினம் கறுப்புக்கொடி போன்ற போராட்டங்களில் ஈடுபட்டுவருகிறார்கள். என்தொகுதி பற்றி ஒன்று கூறி முடித்துவிடுகிறேன்.

எங்கள் மாவட்டத்தில் உள்ள நெடுநாளைய கோரிக்கை அங்கு ஒரு விவசாயக் கல்லூரி ஏற்படுத்தப்படவேண்டும் என்பதுதான். யார் பேசினாலும் இதைத் தான் சொல்வார்கள். எனவே எங்கள் மாவட்டத்தில் ஒரு [illegible]

கல்லூரியை ஏற்படுத்தித்தரவேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் ஊரில் ஒரு சிறிய இடம் கூட., தஞ்சை நகரில், காலியாக இல்லை. எங்கும் குடிசைகள். அங்கு சுகாதார முறைப்படி வசதிகள் செய்துகொடுக்க முடியாத நிலை. ரோடு வசதி இல்லை. குடிநீர் வசதி இல்லை. இவர்களை அப்புறப் படுத்துவது என்பது மனிதாபிமானம் அதற்கு இடம் கொடுக்காது. எனவே அங்கு ஒரு குடிசை மாற்று வாரியம் அமைத்து அங்குள்ள குடிசைவாழ் மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கவேண்டும்.

குடிநீர் பற்றிச்சொல்லும்போது, கொள்ளிடத்தில் இருந்து குடிநீர் கொண்டு வரும் திட்டம் என்பது தேர்தல் காலங்களில் சொல்லப்படும் ஒரு திட்டம். 1967-க்கு முன்பு, இரண்டு முறை அடிக்கல்கள் நாட்டப்பட்டும் கொள்ளிடம் பாலம் வரவில்லை. நம் கலைஞர் அவர்கள் ஆட்சியில் கொள்ளிடம் பாலம் முடிவடைந்து இன்னும் ஒரு மாதத்தில் திறக்கப்பட இருக்கிறது. கொள்ளிடம் குடிநீர் திட்டத்தையும் விரைவுபடுத்த வேண்டுமென்று முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். நகர எல்லையை விஸ்தரிப்பதுபற்றி, புதிதாக ஏற்பட்டிருக்கிற விரிவடைந்த பகுதிகள் நகரத்திற்கு வெளியே இருப்பதால் அவைகளையும் நகர எல்லைக்குள் கொண்டுவந்து நகராட்சியை விரிவுபடுத்தவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. என். எஸ். பலராமன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்துள்ள நிதிநிலை அறிக்கையை வரவேற்று ஒரு சில வார்த்தைகள்கூற விரும்புகிறேன்.

நமது முதல்வர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையை வைக்கிற நேரத்தில் இந்தியாவிலுள்ள எல்லா மாநிலங்களின் நிதிநிலை அறிக்கைகளையும் நமது மாநில நிதிநிலை அறிக்கையையும் பார்க்கிறபோது தமிழக அரசுக்கு மத்திய அரசு கொடுக்கவேண்டிய அந்த சரியான திட்ட உதவி நிதியைக் கொடுக்கவில்லை என்றாலும் கூட நமது முதல்வர் அவர்கள் நல்லமுறையில் இங்கு நமக்கு நிதிநிலை அறிக்கையை அளித்திருக்கிறார்கள் என்றால் இதைக்கண்டு பொச்சரிப்பும் பொறாமையும் உள்ளவர்கள் என்ன பேசுகிறோம் என்று தெரியாமல், நாட்டுமக்கள் என்ன பேசுகிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ளாமல் இங்கு சட்டமன்றத்தில் சிலர் பேசுகிறார்கள். அவர்கள் தலைவர் எங்கு இருக்கிறார் என்று தெரியவில்லை. அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்றால், நாட்டில் அராஜகம் நடந்துவிட்டது என்று பேசுகிறார்கள்.





ஆனால் இன்றைய தமிழக அரசு, திராவிட முன்னேற்றக்கழக அரசு, கலைஞர் தலைமையில் இயங்கக் கூடிய அரசு இங்கு அராஜகம் ஏற்படாமல் இருப்பதற்காக எந்த அளவிற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமோ அந்த அளவிற்கு உடனடியாக நடவடிக்கைகள் எடுத்துவருகிறார்கள். ஆனால் கழக அரசுக்கு களங்கம் கற்பிக்க வேண்டுமென்ற காரணத்தால் ரசிகர்கள் என்ற ஒரு கும்பலை வைத்துக் கொண்டு, அதன்மீது ஒரு கட்சியை அமைத்துக்கொண்டு, சட்டமன்றத்திற்கு வராமல் வெளியே அவர்கள் பல சூதுகள் நடத்தி, பல திட்டங்கள் போட்டு, பல சதித்திட்டங்கள் உருவாக்கிக்கொண்டு இங்கே சில நண்பர்களை அனுப்பி எங்களை அவர்கள் அடித்தார்கள் என்று பேசி மக்களை ஏமாற்றலாம் என்று பார்க்கிறார்கள். அது முடியாது.

இன்று நாட்டில் அரசு அதிகாரிகள் அடிபடுகிறார்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் அடிபடுகிறார். போலீஸ் சூப்பரின்டென்ட்டென்ட் அடிபடுகிறார். எம். ஜி. ஆர். ரசிகர்கள் என்று ஒரு கும்பலை வைத்துக்கொண்டு, தடி, கத்தி இவற்றை வைத்துக்கொண்டு நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தி வருகிறார்கள். ஆனால் அவர்களுடைய தலைவர் சட்டமன்றத்தில் பேசுவதற்கு வராமல் அவர்கள் வீட்டிலேயே இருந்துகொண்டு சதித்திட்டங்களை உருவாக்கிவிட்டு ஆவடியில் பல கொலைகள் நடப்பதற்கு உறுதுணையாக இருந்தார்கள். ஆனால் நமது முதல் அமைச்சர் அவர்களும், சட்டமன்ற உறுப்பினர் திரு. ராஜமாணிக்கம் அவர்களும் கழகத் தோழர்களை வேண்டிக் கேட்டுக்கொண்டதற்கிணங்கவும், போலீஸ் இருந்த காரணத்தாலும் அவர்கள் ஒன்றும் செய்ய முடியாதபடி, அராஜகம் நடைபெறாமல் முடிந்தது. நாட்டில் அராஜகம் நடக்க வேண்டும் என்பதற்காக அவர்களுக்கு உறுதுணையாக வலதுசாரி கம்யூனிஸ்ட்கள் பல திட்டங்களை உருவாக்கியும் கூட—வலது கம்யூனிஸ்டுகள் மனமார ஏற்றுக்கொள்ளும் திட்டம் குடியிருப்பு மனைகள் வழங்குவது. ஒன்றரை லட்சம் மக்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. கந்தசாமி அவர்களும் மற்ற பல உறுப்பினர்களும் அடிக்கடி கேட்டு வந்திருக்கிறார்கள், வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கவேண்டுமென்று. இன்று ஏழை மக்களுக்கு ஒன்றரை லட்சம் வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. அது மட்டுமல்ல. இந்த நிதிநிலை அறிக்கையில் அவர்கள் அதற்கு பணம் கொடுக்காது அரசே கொடுக்கக்கூடிய முறையில் நல்ல திட்டத்தினைக் கொடுத்திருக்கிறார்கள். அதுபோல் உழுபவனுக்கே நிலம்சொந்தம் என்ற திட்டத்தினையும் கொண்டுவந்திருக்கிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கையில் இதையெல்லாம் அவர்கள் பாராட்டுவார்கள் என்று நினைத்தேன். அவர்கள் பாராட்ட முடியாத நிலையில் இருப்பதால் சில தவறுகளைச் சொல்கிறார்களே தவிர முதல் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்த நிதிநிலை அறிக்கையை எதிர்த்து பேசுகிறார்கள் என்று சொல்லமுடியாது.

பேருந்துகளை தேசியமயமாக்கவேண்டுமென்று கம்யூனிஸ்டுகள் சொன்ன நேரத்தில், பேரறிஞர் அண்ணா அவர்கள் கம்யூனிஸ்டுகளின் தத்துவம் எதுவோ அதுதான் திராவிடமுன்னேற்றக் கழகத்தின் கொள்கை என்று சொன்னார்கள். சட்டமன்றத்தில் சொன்னார்கள். அவர்களுடைய வழியில் தமிழகத்தின் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இன்று தமிழகம் பூராவும் ஓடுகிற பேருந்துகளை பல பேருடைய பணத்தை கொள்ளை அடித்துக்கொண்டிருக்கிற, 200 குடும்பங்கள் வாழ பல லட்சம் குடும்பங்கள் வாட, முதலாளித்துவத்தின் முதுகெலும்பாக இருக்கும் ஒரு தொழிலை தேசியமயமாக்கியிருக்கிறார்கள். நான் இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டுவதற்குக் காரணம், தொழிலாளர்களுக்கு போனஸ் கொடுப்பதற்கு அரசு முன் வந்திருக்கிறது. 24 சதவிகிதம் கொடுப்பதற்கு அரசு முன் வந்திருக்கிறது. இதையெல்லாம் எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் பாராட்டுவார்கள் என்று பார்த்தால், அதை விட்டு விட்டு கொள்கையில்லாத ஒரு தலைவருடன், ஒரு ரசிகனின் தலைவரை வைத்துக்கொண்டு மக்களிடத்திலே ஒரு பீதியை உண்டாக்கி, திராவிட முன்னேற்றக் கழகத்தை அழித்து ஒழித்து விடலாம் என்று மனப்பால் குடிக்கிறார்கள். அவர்கள் ஏமாறுவார்கள் என்று சொல்லிக்கொள்கிறேன்.

இப்போது நாட்டிலே உள்ள முக்கியமான நெருக்கடி என்ன? மின்சார நெருக்கடி. அப்படியிருந்தபோதிலும் எங்கெங்கே அவற்றை தவிர்க்கலாம் என்று அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. விவசாயத்திற்காக நல்ல முறையில் மின்சாரம் தர வழிவகை செய்திருக்கிறது. இந்த மின்சார நெருக்கடியை வைத்துக்கொண்டு சில பேர் தவறான பிரசாரங்களைச் செய்து வருகிறார்கள். அரசு எடுத்திருக்கிற பல்வேறு நடவடிக்கைகளின் பயனாக இந்த நெருக்கடி விரைவில் தீர்ந்து விடும் என்று நம்புகிறேன்.

இந்த அறிக்கையின் மூலம் மாண்புமிகு கலைஞர் அவர்கள் மெட்ராஸ் அலுமனியம் பாக்டரியை அரசு ஏற்றுக்கொள்கிறது என்று அறிவித்து இருக்கிறார்கள். அவரைப் பாராட்டுகிறேன். மால்கோவை எப்படி தமிழக அரசு எடுத்துக்கொள்ளலாம் என்று மத்திய அரசில் பேசிக்கொண்டிருக்கிறார்கள். நான் முதலமைச்சரைக் கேட்டுக்கொள்வதெல்லாம் நாம் 1½ பைசாவுக்கு மின்சாரம் கொடுத்த காரணத்தினால்தான் அந்தத் தொழிற்சாலை நல்ல லாபத்தை சம்பாதிக்க முடிந்தது, ஆகவே அதை ஏற்றுக்கொண்டது சரியானதுதான், அதை எக்காரணத்தைக்கொண்டும் மத்திய அரசாங்கம் கூடாது என்று சொன்னாலும் சரி, வெங்கடசாமி உரிமையாளர் கேட்டாலும் சரி, அதைக் கண்டிப்பாக அரசே ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய மின்சார இலாகாதான் 1½ பைசாவிற்கு தொழிற்சாலைகளுக்கு





மின்சாரம் சப்ளை செய்கிறது, வேறு எங்கேயும் இந்த விகிதத்தில் கொடுக்கப்படவில்லை. இந்த அலுமனியம் நாட்டுக்குத்தேவை, ஆகவே அது நாட்டுடைமையாக இருப்பதுதான் நல்லது. அதை எடுப்பதற்கு எந்த எதிர்ப்பு வந்தாலும் அதைச் சமாளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், தனியார் துறை மின்சாரக் கம்பெனிகளை அரசுடைமையாக ஆக்குவது என்ற முடிவை நான் வரவேற்கிறேன். அதைப் பாராட்டுகிறேன்.

மத்திய அரசு இன்றைக்குப் போட்டிருக்கிற வரி 292 கோடியாகும். இந்த வரிகள் ஏழை எளிய பாட்டாளி மக்களை பாதிக்கக்கூடியதாக இருக்கிறது. விவசாயிகள் போராட்டம் நடத்தினார்கள், விவசாய வருமான வரி கூடாது என்று நம்முடைய அரசும் தீர்மானம் போட்டது. ஆனால் மத்திய அரசு விவசாய வருமானத்தை எல்லா வருமானத்தோடும் சேர்க்கவேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். இதைப் பார்க்கிறபோது, மத்திய அரசு விவசாயிகளுக்கு கொடுமையைச் செய்கிறது, மத்திய அரசின் கொள்கையால் ஏழைகளுக்குப் பலன் அளிக்கவில்லை என்று கூறிக்கொள்கிறேன். இதைப்பார்க்கிறபோது, நம்முடைய அரசு வரியே போடாமல் ஏழை மக்களுக்கு நன்மை செய்யும் அளவுக்கு நல்ல திட்டங்களைப் போட்டு இருக்கிறது என்று சொல்லிக்கொண்டு, அதே நேரத்தில் என்னுடைய தொகுதியில் ஒரு கல்லூரி வேண்டுமென்று நான் பல ஆண்டுகளாக கேட்டுக்கொண்டு வருகிறேன்.

அரக்கோணம் வட்டத்தில் ஒரு கல்லூரி கூட இல்லை. இதை நம்முடைய கல்வியமைச்சர் அவர்கள் கவனத்தில் கொண்டு நிறைவேற்றித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்று தமிழகத்தில் கல்விக்காக ரூ. 108 கோடி அளவுக்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் 1967-க்கு முன்னால் கல்விக்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 40 கோடி அளவுக்குத்தான் ஒதுக்கப்பட்டது. இப்படி மொத்த வருவாய்க்கணக்கில் கல்விச் செலவின் சதவிகிதம் 24-க்கு மேல் இருந்தபோதிலும், என்னகாரணமோ தெரியவில்லை, மாணவர்களை எதிர்க்கட்சிக்காரர்கள் திசை திருப்புகிறார்கள். இருந்தபோதிலும் நம்முடைய நோக்கமெல்லாம் இந்த நாட்டில் கல்வி வளர்ச்சி பெற வேண்டும், கல்வி வளர்ச்சியால் தான் தொழில் வளர்ச்சி ஏற்படும் என்ற முறையில் நாம் இந்த அளவுக்கு தொகை ஒதுக்கியிருக்கிறோம், இப்போது ஒதுக்கப்பட்டிருக்கும் இந்த ரூ. 108 கோடியிலே எங்கள் தொகுதியில் ஒரு கல்லூரி கட்டவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் எங்கள் தொகுதியில் ரூ. 8 கோடி மூலதனத்தில் ஒரு உருக்காலையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், தொழில் அமைச்சர் அவர்களும் ஆரம்பித்து வைத்தார்கள். இருந்தபோதிலும் அங்கே 500 பேர்களுக்

[திரு. என். எஸ். பலராமன்] [1973 மார்ச் 3

குத்தான் வேலை செய்யும் அளவுக்கு நிலைமையிருக்கிறது. வேலை வாய்ப்பைப் பெருக்கும் வகையில் அந்த உருக்காலையிலிருந்து வரும் பொருள்களைக் கொண்டு தயார் செய்யும் சிறிய தொழிற்சாலைகளை அருகாமையிலேயே ஏற்படுத்த வேண்டும், குறிப்பாக ரோலிங் மில்ஸ் வைப்பதற்கு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரக்கோணம் பகுதியில் ஒரு சர்க்கரை ஆலை வேண்டுமென்று நீண்ட நெடுங்காலமாக கேட்டுக்கொண்டு வருகிறேன். அந்தப் பகுதியில் கரும்பு அதிகமாக பயிரிடப்பட்டு வருகிறது. அந்தக் கரும்பை எடுத்துக்கொண்டு ஆம்பூருக்கோ அல்லது செங்கற்பட்டுக்கோ தான் செல்லவேண்டியிருக்கிறது. ஆகவே, அரக்கோணம் தாலுக்காவிலேயே ஒரு சர்க்கரை ஆலையை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையில் நம்முடைய மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் 61 மருத்துவ நிலையங்களை அரசு எடுத்துக்கொள்வதாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். என்னுடைய வட்டத்தில் உள்ள பனப்பாக்கம், தக்கோலம் லோக்கல் மருத்துவ மனைகளையும் அரசு ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அரக்கோணம் பகுதியில் சுமார் 10,000 ரயில்வே தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு மத்திய அரசு கொடுத்த ஈட்டுப்படி கிடைக்கவில்லை. செங்கற்பட்டில் இருக்கும் தொழிலாளர்களுக்குக் கிடைத்து இருக்கிறது. அங்கே ஆயிரம் தொழிலாளர்கள் தான் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் திரு. ஓ. வி. அளகேசன் அவர்கள் வாங்கிக்கொடுத்ததாகச் சொல்கிறார்கள். அரக்கோணத்தில் இருக்கும் மத்திய அரசு ஊழியர்களுக்கும், அந்த 10,000 ஊழியர்களுக்கும் அந்தத்தொகை வழங்கப்படவேண்டுமென்று மத்திய அரசுக்கு நம்முடைய அரசு பரிந்துரை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் நெமிலி-சேந்தமங்கலம் பாதையில் ஒரு பாலம் தேவையாய் இருக்கிறது. அதை ஒரு சிறிய பாலமாக, ஒரு தரைப்பாலமாக கட்டித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கூட இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அதைப் பார்வையிட்டு, அதைக் கட்டித் தருகிறேன் என்று சொன்னார்கள். அதை இந்த ஆண்டுத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரக்கோணம்—காவனூரில் ஒரு ஏரியிருக்கிறது. அந்த ஏரியைச் சுற்றி ஒரு 15 கிராமங்கள் இருக்கின்றன. அந்த ஏரியின் கரை சிறியதாக இருப்பதால் மக்கள் அதில் வண்டியில் செல்ல முடியாது. ஆகவே, அந்த ஏரியின் கரை



1973 மார்ச் 3]

யைப் பெரிதுபடுத்திப் போக்குவரத்துக்கு நன்றாக இருக்கும்படி செய்து தர வேண்டுமென்று, தலைவரவர்களே, உங்கள் மூலமாகக் கேட்டுக்கொண்டு, இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. க. சுப்பு : பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1973-74-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கை சில அறிவிப்புகளைக் கொண்டதாக இருக்கிறது. அந்த அறிவிப்புகளை முதலமைச்சரின் வாசகங்களோடு படித்துப் பார்க்கிற போது, முற்போக்கான கருத்துக்களுக்கும், பிற்போக்கான கருத்துக்களுக்கும் இடையே தத்தளித்துக்கொண்டு இருக்கிற பரிதாபத்தைத்தான் எங்களால் பார்க்க முடிகிறது. நிலச்சீர்திருத்தத்தைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். ஒரிசாவில் நிலச்சீர்திருத்தம் கொண்டு வருகிறார்கள் என்று சொன்னால், அங்கே இருக்கும் அரசாங்கம் கவிழ்க்கப்படுகிறது. ஆனால் தமிழகத்தில் அந்த நிலைமை யில்லை. பஸ் தேசியமயம் கொண்டு வருகிறோம் என்று சொன்னவுடனே எதிர்க்கட்சிகள் எல்லாம் ஆதரவு கொடுத்தன. கைத்தறி நெசவாளர்களுக்கு நூல் கொடுப்பதற்காக மத்திய அரசைக் கேட்கவேண்டுமென்ற தீர்மானத்தை எந்த வித எதிர்ப்பும் இல்லாமல் நிறைவேற்றித் தந்திருக்கிறோம். இப்படிப்பட்ட நிலைமை தமிழக அரசில் இருக்கிறபோது, எதிர்க்கட்சிகள் அரசுக்கு முற்போக்குத் திட்டங்களை நிறைவேற்றுகிறபோது முழுமனதாக ஆதரவு தருகிற நிலை இருக்கிறபோது, அதை எந்த அளவுக்குப் பயன்படுத்தி முற்போக்குத் திட்டங்களை இந்த அரசு செயல்படுத்தியிருக்கிறது என்று புரிய வில்லை.

நிலச்சீர்திருத்தத்தில் உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்பது எங்கள் கொள்கை என்று சொல்லியிருக்கிறார்கள். அதை அமல் நடத்த என்ன செய்திருக்கிறார்கள்? நிலவுடைமையாளர்களிடமிருந்து குத்தகைதாரர்கள் நிலத்தை வாங்குவதற்கு நிதி உதவி செய்வதற்காக குத்தகைதாரர் நிதி உதவிக் கழகம் என்று அமைத்து இருக்கிறார்கள். இதற்குத் தலைவராக தங்களுக்கு வேண்டியவர் யாரையாவது போட்டுக்கொள்ளலாம். நிலவுடைமையாளருக்கு பணத்தைக் கொடுத்து விட்டு குத்தகைதாரர் நிலத்தை எடுத்துக்கொள்ள என்ன வழி செய்திருக்கிறது? கேரளாவில் நிலச்சட்டத்தைப் பார்த்தால் தெரியும். திரு. ப. உ. சண்முகம், அமைச்சர் அவர்கள், அதை அடிக்கடி படித்துக்கொண்டு இருக்கிறார்கள். அவர் இப்போது இங்கு இல்லை. அவர்கள் அந்தச் சட்டத்தை நன்றாகப்படித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே எப்படியிருக்கிறது என்றால் நிலவுடைமையாளர் என்ற வார்த்தை

தையே இல்லாமல் போய் விட்டது. குத்தகைக்கு பயிர் செய்து வந்தவர்கள் அத்தனைபேரும் நிலச்சொந்தக்காரர்கள் ஆகியிருக்கிறார்கள். 18 ஆண்டு காலம், 15 ஆண்டுகாலம் அவர்கள் அரசுக்கு குத்தகை அளந்து விட்டால் அந்த நிலம் அவர்களுக்கு உடைமையாகிவிடும். அது கோவில்கள், மடங்கள் நிலங்களாக இருந்தாலும் சரி, எல்லாவற்றிற்கும் ஒன்று தான். குத்தகைதாரர் நிலம், நிலவுடையாளர் நிலம் என்று கிடையாது. அவர்கள் மத்திய அரசாங்கத்திடமிருந்து புதியதாக அதிகாரம் எதையும் பெற்று விடவில்லை. தங்களுக்கு இருக்கிற அதிகாரத்தை வைத்துக்கொண்டே தான் அவர்கள் இந்தச் சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். தமிழகத்தில் அப்படிப்பட்ட ஒரு சட்டம் நிறைவேற்றப்படவில்லை. அப்படிப்பட்ட ஒரு சட்டம் இயற்றப்பட வேண்டும் என்று போராடிக் கொண்டிருந்தும், இது சம்பந்தமாக அரசு எடுத்துக்கொள்கின்ற நடவடிக்கைகளுக்கு எல்லோரும் ஆதரவு கொடுக்கக்கூடிய சூழ்நிலை இருந்தாலும், நிலச் சொந்தக்காரரிடமிருந்து நிலத்தை வாங்கிக்கொள்வதற்கு கடன் கொடுப்பதற்கு, குத்தகைதாரர் நிதி உதவிக் கழகம் ஒன்று அமைக்கப்படும் என்ற முறையில், இடையிலே ஏதாவது செய்யலாம் என்ற முறையில் தான் அறிவிப்பு வந்திருக்கிறதே தவிர, வேறு ஒன்றுமில்லை. உழுபவர்களுக்கு நிலம் சொந்தம் என்ற கொள்கை இருக்கிறதே தவிர, நடைமுறையில் அது செயல்படுத்தப்படவில்லை.

தொழில்துறையை எடுத்துக்கொண்டால், தொழில்துறை அமைச்சர் அவர்கள் சில திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். அலுமினியத் தொழிற்சாலை தேசியமயமாக்கப்படுவது வரவேற்கக்கூடிய ஒன்று தான். ஆனால் அதை தேசியமயமாக்கின்ற நேரத்தில், தூத்துக்குடி உரத் தொழிற்சாலையை கூட்டுத் துறையில் விடவேண்டிய அவசியம் என்ன? ராமசுப்பிரமணிய ராஜா அவர்களை வெளிநாட்டிற்கு அனுப்பி, அரசாங்கப் பணத்தைக்கொடுத்து, அவர்களைக் கொண்டு கூட்டுத்துறையில் இந்த உரத் தொழிற்சாலையை ஆரம்பிப்பது எந்த சோஷலிசம் என்பது என்றால் புரிந்துகொள்ள முடியவில்லை. சமதர்மம் என்றால், முதலாளிகளுக்கும் சம அந்தஸ்து என்று அவர்கள் ஒருவேளை கருதுகிறார்களோ என்னவோ எனக்குப் புரியவில்லை. அலுமினியத் தொழிற்சாலையை தேசியமயமாக்கும் அதே நேரத்தில் தூத்துக்குடி உரத் தொழிற்சாலையை ஏன் தேசியமயமாக்கக்கூடாது? அதைக் கூட்டுத்துறையில் நடத்துவதற்கு ஊக்கமும், ஆக்கமும் கொடுப்பது எந்த அளவுக்கு சரியானது. எந்த சோஷலிசக் கொள்கையின்பாற்பட்டது என்று எனக்குப் புரியவில்லை. அதே போலத் தான் சர்க்கரை ஆலைகள் தேசியமயமாக்கப்படவேண்டுமென்று சொன்னால், எங்களுக்கு சீனி விலையைக் குறைப்பதற்கு அதிகாரமில்லை என்று கூறிக்கொண்





டிருக்கிறார்கள். மாநிலத்திற்கு இருக்கிற அதிகாரத்தை வைத்துக் கொண்டே சர்க்கரை ஆலைகளை அரசாங்கம் மேற்கொள்ளலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. உத்திரப்பிரதேசத்தில் இந்தப் பிரச்னை எழுந்தபொழுது, சர்க்கரை ஆலைகளை மாநில அரசு தேசியமாக்குவதில் தவறு இல்லை என்று சொலிஸிடர் ஜெனரலும், அட்வகேட் ஜெனரலும் சொல்லியிருக்கிறார்கள். அதிகாரம் இருக்கிறது என்ற நிலைமை இருந்தால் கூட, அந்த நிலைமையை நாம் பயன்படுத்திக் கொள்வதில்லை. மேலும், மேலும் மத்திய அரசைக் கேட்க வேண்டும் என்று கூறிக்கொண்டிருப்பதில் பலன் இல்லை. நம்மைவிட்டு வாலைப் பிடிப்பதில் என்ன பயன்? நம்மிடத்திலே இருக்கிற அதிகாரத்தை வைத்துக்கொண்டு, மக்களையும் கூட வைத்துக்கொண்டு, இவைகளையெல்லாம் செய்ய முன்வர வேண்டுமே தவிர, அதற்குப் பதிலாக அதிகாரம் இல்லை என்று பேசிக்கொண்டிருப்பதில் மக்களுக்கு எந்த நன்மையும் செய்துவிட முடியாது.

கைத்தறி நெசவாளர்கள் பிரச்னையை எடுத்துக்கொண்டாலும் சரி, நூற்பு ஆலைகளை அரசாங்கம் மேற்கொள்ள அதிகாரம் இல்லை என்றுதான் கூறப்படுகிறது. இங்கே ஒரு தீர்மானத்தைப் போட்டு மத்திய அரசிடம் அனுப்பிவிட்டால் மட்டும் போதாது. நடைமுறையில் அவர்களுக்கு ஏதாவது உடனடிப் பரிகாரம் காணப்படவேண்டும். இல்லையெனில் நாம் வழங்கிய வாக்குறுதிகளை எந்தவிதத்திலும் நிறைவேற்ற முடியாது.

நில சீர்திருத்தச் சட்டத்திலுள்ள விதிவிலக்குகளை ஆராய்வதற்கு லாண்டு போர்டு அமைக்கப்பட்டிருக்கிறது. உழுபவர்களுக்கு நிலம் சொந்தமாக்கப்பட வேண்டும் என்ற கொள்கை இன்னும் நடைமுறைக்கு வந்தபாடில்லை. ரூ. 250 சம்பளத்தில் பார்ட் டைம் சேர்மனாக இருந்த டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ் திரு. அனவரதம் பிள்ளையை 1,500 ரூபாய் சம்பளத்தில் முழு நேர சேர்மனாகப் போட்டிருக்கிறார்கள். நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் தலைவிரித்தாடும் பொழுது, ரிடையரானவர்களை இரண்டு வருடங்களுக்கு வேறு வேலையில் அமர்த்திக்கொள்வது என்ற கொள்கையை இந்த அரசாங்கம் கடைப்பிடிக்கிறது. சோஷலிஸத்தில் அதிக நம்பிக்கை கொண்டவர்கள் நம்முடைய ஆட்சியினர் என்று கருதுகிறேன். அப்படியிருந்தும் அவர்கள் ஏன் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்யவேண்டும் என்பது எனக்குப் புலப்படவில்லை. திரு. எம். எம். முத்தையா செட்டியார், திரு. எம். எல். பி. ராஜேஷ் போன்றவர்கள் மிகப்பரம ஏழைகள். இப்படிப்பட்ட மிகப் பெரிய முதலாளிகளெல்லாம் நிலச்சீர்திருத்தத்தில் உள்ள விதிவிலக்குகளைப்பற்றி ஆராய்வதற்கான லாண்டு போர்டில் உறுப்பினர்களாக அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். திரு. அனவரதம் பிள்ளை அவர்களைப் போல

ருக்கிறார்கள். 'ப்யூரோகிராட்டை'ப் போட்டிருக்கிறார்கள். சமதர்மக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தி வருவதாக பறைசாற்றிக்கொண்டிருக்கிறார்கள். மகாலிங்கம் அவர்களை, ஒரு பெரிய தொழில் அதிபரை திட்டக் கமிஷன் மெம்பராகப் போட்டிருக்கிறார்கள். அங்கேயும் முதலாளிகளுக்கும் நல்ல பிள்ளையாக நடந்துகொள்ளவேண்டும், இங்கேயும் நல்ல பிள்ளையாக நடந்து கொள்ளவேண்டும், இரண்டையும் சமாளிக்கவேண்டும் என்ற ரீதியில் போய்க் கொண்டிருந்தால், எந்த சோஷலிஸக் கொள்கையையும் நிறைவேற்ற முடியாது. நிலச் சீர்திருத்தத்தினால் எவ்வளவு நிலம் மிச்சமாயிற்று? ஏராளமான நிலம் மிச்சப்படும் என்று கூறப்பட்டதே ஒழிய, சரிவர அமல் நடத்தப்படவில்லை, நிலமும் மிச்சமில்லை. நிலம் உழுபவர்களுக்குச் சொந்தம் என்று வாயளவில் சொல்லப்படுகிறதே, அது தான் மிச்சம்.

உர விநியோகத்தில் ஊழல் இல்லை என்று சொல்லப்படுகிறது. நிலத்தைச் சொந்தமாக்குவதற்கு சட்டமில்லை என்று கூறப்படுகிறது. இருக்கிற சட்டத்தை எடுத்துச்சொல்வதற்கு ஆள் கிடையாது. நான் சொல்லுகிற நேரத்தில் அமைச்சர் இங்கே கிடையாது. இப்படி சோஷலிஸத் திட்டங்கள் சரிவர அமுலாக்கப்படுவதில்லை. இப்படி பல அமைப்புகளை உருவாக்கிவிட்டால் மட்டும் போதாது. போடுகின்ற சட்டத்தை சரியான முறையில் தீவிரமாக அமல்படுத்தவேண்டும். சமதர்மக் கொள்கைகளை உண்மையிலே அரசாங்கம் நிறைவேற்றுவதற்கு தீவிர நடவடிக்கை எடுத்துவருகிறது என்ற நம்பிக்கை மக்களிடையே ஏற்படவேண்டும். இல்லாவிட்டால் சமதர்ம கோஷத்தை எப்படி மக்கள் நம்புவார்கள்?

அதைப்போலத்தான் இப்பொழுது சட்டமன்றத்தில் கைத்தறி நெசவாளர் சம்பந்தமாக ஒரு தீர்மானம் நிறைவேற்றினோம். நாங்களும் தீர்மானத்தை ஆதரித்தோம். எதிர்க்கவில்லை. தீர்மானத்தில் என்ன கூறப்பட்டிருக்கிறது? ஒரு வேண்டுகோள் தான். உடனடியாக இந்தத் தீர்மானத்தின் மூலம் ஏதாவது நெசவாளர்களுக்கு நம்பிக்கை பிறக்கக்கூடுமா என்பதுதான் கேள்வி. அந்த ரீதியில் இந்தத் தீர்மானம் அமைந்திருக்கவேண்டும். இந்தத் தீர்மானத்தினால் உடனடியாக நெசவாளர்களுக்கு எந்த நம்பிக்கையும் ஏற்பட்டுவிடுவதற்கு வழி இல்லை. மாநில சுயாட்சிக் கோரிக்கைக்கு, இருக்கின்ற சூழ்நிலைகளை இப்படி சாதகமாக எவ்வளவு திறமையோடு பயன்படுத்திக்கொள்ளலாம் என்ற ஒரு நோக்கத்தில்தான் முதல்வர் அவர்களுடைய அறிக்கை அமைக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசு ஒரு பெடரேஷன், அதற்குப் பெரும்பாலும் அதிகாரம் இருக்கக்கூடாது, மாநிலங்கள் சுயாட்சியாக இயங்கவேண்டும் என்ற கருத்தை வலுப்படுத்தக்கூடிய முறையில் இருக்கக்கூடிய சூழ்நிலையை வைத்து, மத்திய



அரசுக்கும், மாநில அரசுக்கும் இடையே மோதல் ஏற்படக்கூடிய வகையில், பிரச்சினைகளை எப்படி திசைதிருப்பிவிடலாம் என்கிற அளவுக்குத்தான் நிதிநிலை அறிக்கை அமைந்திருக்கிறதே தவிர, இன்னென்ன அதிகாரங்கள் இன்னென்ன வகைகளில் மாநில அரசுக்குத் தேவைப்படுகின்றன, இவற்றிலெல்லாம் குற்றங் குறைகள் இருக்கின்றன என்று சொல்லும் வழியில் அமையவில்லை. பஸ்களை தேசியமயமாக்குவதற்கு தடையில்லை என்றால் உடனடியாக தேசியமயமாக் காமல் இருப்பது ஏன்? உழுபவர்களுக்கே நிலம் சொந்தமாக்கப்படுவதில் எந்தவிதமான தடையும் இல்லை என்றால், அதை ஏன் உடனடியாக நிறைவேற் றக்கூடாது? இப்படி ஒன்றிரண்டு காரியங்கள் கொண்டுவரப்பட்டிருந்தும், உடனடியாக நிறைவேற்றப்படக்கூடிய நிலையில் இல்லை.

கல்வித் துறையை எடுத்துக்கொண்டால் பட்டதாரி ஆசிரியர்கள் போராட்டம் அறிவிப்பு, அதைப்பற்றி அறிக்கை வெளியிட்டார்கள். ஆனால் பாலிடெக்னிக் மாணவர்கள் போராட்டம் அறிவிப்பு கொடுக்கப்பட்டு மதுரையிலும், கோவை [illegible] பாவம் யிலும் போராட்டம் நடந்துகொண்டிருக்கிறது. அவ[illegible] செய்தார்களோ, அதைப்பற்றி ஒரு அறிக்கையும் [illegible]

அனல்மின்சார, அணு மின்சார நிலைய[illegible] பொறுத்தவரையில் [illegible] அரசு மத்திய அரசின் மீது பழி போட்ட[illegible] இங்கே அதைப்பற்றி வி[illegible] ளும்போது பலரும் பேசினார்கள், பல கார[illegible]ச் சொன்னார்கள். அத[illegible] பிறகு தான் அது உண்மை அல்ல என்ற [illegible] தெரியவந்தது. நல்ல[illegible] யாக தொழில்துறை அமைச்சர் அவர்கள் [illegible] ராமநாதபுரத்தில் [illegible] போவதாக அறிவி[illegible] குடியில் ஒரு அனல் மின்சார நிலையம் ஏற்ப[illegible] செ[illegible] திருக்கிறது. அதை வரவேற்கிறேன். அதை [illegible] நிலையம் வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். அதுவும் [illegible] போக்குவதற்கு போல் ஆகிவிடக்கூடாது. மின்சாரப் பற்றாக்குறையைப்

ஏதாவது தெளிவான திட்டங்கள் இந்த அறிக்கையிலே இருக்கிறதா என்றால், ஒன்றையும் காணோம். முற்போக்கான தொழில்களைக் கொண்டுவரவேண்டும் என்ற விருப்பம் ஒரு புறம் இருக்கிறது. மறுபுறம் அந்தக் கொள்கைக்கு முட் டுக் கட்டையாக இருப்பவர்களை ஒதுக்கித் தள்ளிவிட்டு, அப்படிப்பட்ட தொழில்களைக் கொண்டுவரக்கூடிய நெஞ்சு உரம் இல்லை. (மணி அடிக்கப் பட்டது) பாம்புக்கும் தலை, மீனுக்கும் தலை என்ற ரீதியில் தான் இந்த அறிக்கை அமைந்திருக்கிறது என்று கூறி, என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

61598
V211,31 N73

4–50 பி.ப. மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி: அலுமினியம் தொழிற்சாலையை இப்பொழுது சர்க்கார் எடுத்துக்கொண்டது சோஷலிஸக் கொள்கை இல்லையா? அல்லது சர்க்கரை ஆலைகளை எடுத்துக்கொண்டால் தான் சோஷலிஸக் கொள்கையா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. க. சுப்பு: அப்படி எடுத்துக்கொண்டதை நான் வரவேற்கிறேன் என்று முதலிலே சொல்லிவிட்டுத் தான் பிறகு கூறினேன். சர்க்கரை ஆலைகளையும் தேசியமயமாக்கவேண்டும். இப்பொழுது அலுமினியம் தொழிற்சாலையை தேசியமயமாக்கினால் அதிலிருந்து வருகிற வருமானம் தேசத்திற்குப் பயன்படும். அந்த முறையில் அதை நான் வரவேற்கிறேன். இருந்தாலும் அதை மட்டும் தேசியமயமாக்கிவிட்டால் போதாது. சோஷலிஸக் கொள்கை என்றால் இன்னும் பல தொழில்களையும் சர்க்கார் மேற்கொள்ளவேண்டும்.

* திரு. கே. ரங்கநாதன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, 1973-74-ம் ஆண்டுக்கான நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த மாமன்றத்தில் அளித்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று, ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே இந்த நாட்டிற்குத் தேவையான பல நல்ல திட்டங்களையெல்லாம் உருவாக்கி, பேரறிஞர் அண்ணா அவர்கள் கண்ட கனவை நினைவாக்கும் வகையில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையை ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள். குறிப்பாக கல்விக்கு 1966-67-ம் ஆண்டில் ரூ. 43.86 கோடி ரூபாயாக இருந்ததை 1972-73-ல் ரூ. 95.82 கோடியாக மாற்றி, 1973-74-ல் 97.23 கோடி ரூபாயாக அதிகமாக்கி இன்றைக்குக் கல்வித் துறையிலே எவ்வளவு முன்னணியில் நிற்கிறோம் என்பதை எடுத்துக் காட்டுகின்ற வகையில் இந்தத் திட்டத்தை இன்றைக்கு சிறந்த முறையில் நம்முடைய முதல்வர் அவர்கள் இங்கே அறிவித்திருக்கிறார்கள். அதே போல் 1966-67-ல் நாட்டில் இருந்த கல்லூரிகள் 105 தான். ஆனால், 1972-73-ல் 176 கல்லூரிகளாக மாற்றி இருக்கிற அந்தப் பெருமை மிகுந்த இந்தத் திட்டத்தை நாம் இங்கே காண்கிறோம். அதே போல் 35,000 கண் இழந்தவர்களுக்கு கண் ஒளி வழங்கி, அவர்களுக்கெல்லாம் கண்ணாடியும் வழங்குகின்ற ஒரு திட்டத்தை அகில இந்தியாவிலும் நாம் இங்கே தான் பார்க்கிறோம். இப்படிப்பட்ட நல்ல திட்டங்களை வழங்கிய நம்முடைய அரசை இந்த நாட்டிலே இருக்கிற ஏழை மக்களெல்லாம் வரவேற்கிறார்கள். அதைப்போல மறுவாழ்வு இல்லங்களை அமைத்து 5,000 தொழுநோய் பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் திட்டத்தை இங்கே அறிவித்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட திட்டங்களையெல்லாம் வரவேற்பதற்குப் பதிலாக இங்கே அமர்ந்திருக்கிற எதிர்க்கட்சியைச்



சார்ந்தவர்கள் ஏதாவது ஒன்றைச் சொல்லி இந்த அரசின் மீது குற்றத்தைச் சுமத்தவேண்டும் என்பதற்காக, அவைகளையெல்லாம் விட்டுவிட்டு ஏதேதோ சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

கைத்தறி நெசவாளர்களின் இன்னல்களைப் போக்குகின்ற வகையில் அதற்
கென ஒரு கமிட்டி அமைத்து பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். வேலைவாய்ப்
புக்காக 10 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதையும், படித்தவர்களுக்கு வேலை
வாய்ப்பளிக்க 15 கோடி ரூபாயில் அமைந்திருக்கின்ற திட்டத்தையும் தொழி
லாளர்களுக்கு பயனளிக்கின்ற வகையில் இலவசமாக சட்ட ஆலோசனைகள்
வழங்கி, சங்கங்களை நடத்திச் செல்ல இருக்கின்றத் திட்டத்தையும், தாழ்த்தப்
பட்ட மக்களுக்கும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் பல்வேறு நலத் திட்டங்
களைத் தீட்டியிருப்பதையும் இந்த நிதிநிலை அறிக்கையின் மூலமாக நமது
முதலமைச்சரவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஆனால் எதிர்க்கட்சிக்காரர்கள்
இந்த நல்ல திட்டங்களையெல்லாம் பார்க்காமல் குறைசொல்லிக் கொண்டிருக்கி
றார்கள். ஒன்றுமே பட்ஜெட்டில் இல்லை என்று சொல்கிறார்கள். கல்விக்காக
மட்டும் இந்த நிதிநிலை அறிக்கையில் எவ்வளவு ஒதுக்கியிருக்கிறது என்பதை
பல உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். தொழிலாளர் நலன்கருதி,
மேட்டூர் அலுமினியத் தொழிற்சாலையை நாட்டுடைமையாக்குவதாக அரசாங்கம்
அறிவித்திருக்கிறது. ஆனால் நமது கம்யூனிஸ்ட் கட்சி நண்பர் திரு. சுப்பு
அவர்கள் அதைப்பற்றி குறை கூறினார்கள். ஆனால் அவர்கள் கட்சியினர்
ஆண்டுகொண்டிருக்கிற கேரளத்தில் இப்படிப்பட்ட ஒரு புரட்சிகரமான
திட்டத்தை செய்திருக்கிறார்களா என்று பார்த்தால் இல்லை என்றுதான் சொல்ல
வேண்டும். இங்கே போட்டிருக்கின்ற திட்டங்களை பற்றி அவர்கள் பாராட்
டாமல் இருந்தாலும் அவைகளைப்பற்றி பேசாமல் இருந்தாலே போதும்.

முன்னேற்றக் கழக அரசாங்கம் வந்தபின்னால்தான் கோவை மாவட்டத்
திற்கு நல்ல பல காரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றன, என்பதை நான் சுட்டிக்
காட்ட விரும்புகிறேன். கோவை நகரிலே மூடிக்கிடந்த ஐந்து பஞ்சாலைகளை
அரசாங்கம் ஏற்று நடத்த முன்வந்துள்ளது. இதில் இரண்டு பஞ்சாலைகள் ஆறு
ஆண்டு காலமாக மூடிக்கிடந்தன. பஞ்சாலைகள் மூடப்பட்டிருந்ததால், அங்கே
பணியாற்றிய தொழிலாளர்கள் தவித்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள்
குடும்பங்கள் எல்லாம் பட்டினியால் வாடின. அரசாங்கம் அந்த பஞ்சாலைகளைத்
திறந்து, தவித்துக்கொண்டிருந்த அந்த தொழிலாளர்களுக்கு வாழ்வளித்ததன்
மூலம் அவர்கள் குடும்பங்களிலே அணைந்திருந்த விளக்கை ஒளிபெறச் செய்தது.
அந்தக் குடும்பங்கள் எல்லாம் இன்றைக்கு நம்முடைய அரசாங்கத்தைப்

பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள். அதற்காக நான் என் தொகுதி மக்களின் சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, கோவை நகரத்தில் இருக்கிற மருத்துவ மனையில் படுக்கை வசதிகள் இல்லாமல் இருந்தன. இன்றைக்கு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் படுக்கை வசதிகளை ஏற்படுத்தி—100 படுக்கைகளை அதிகமாக்கி தருகிற ஒரு திட்டத்தை இந்த நிதிநிலை அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்கள். அதற்காக அவர்களுக்கும் நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு கோவை நகரம் வளர்ந்து வருகிற ஒரு பெரிய நகரமாக இருக்கிறது. அங்கே 4 லட்சம் முதல் 5 லட்சம் வரை மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட இடத்தில் ஒரேஒரு கல்லூரிதான் இருக்கிறது. அங்கே இன்னொரு கல்லூரி தேவை என்று வலியுறுத்திக்கொண்டிருக்கிறார்கள். கோவை நகராட்சியின் சார்பிலே ஒரு கல்லூரியை நடத்த வேண்டுமென்று ஏற்கெனவே நகராட்சி அரசாங்கத்தை அனுமதி கேட்டுக்கொண்டிருக்கிறது. ஆகவே, அந்த கல்லூரியை நடத்துவதற்கு அரசாங்கம் விரைவில் அனுமதி அளிக்க வேண்டுமென்று மிகப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இன்றைக்கு கோவை நகரத்தில் தண்ணீர் பிரச்சனை கடுமையாகிக் கொண்டு வருகிறது. தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டது நம்முடைய அரசு வந்த பிறகு அல்ல. ஏறத்தாழ 20 ஆண்டு காலமாக கோவையில் தண்ணீர் பற்றாக்குறை இருந்துவருகிறது. இதைப் போக்க வேண்டுமென்று நாங்கள் வற்புறுத்திச் சொல்லியும் நிலைமைகளை எடுத்துச் சொல்லியும், இன்னும் நிறைவேறாமல் இருப்பதற்குக் காரணம் கேரள அரசுதான் என்று கருதுகிறேன். பலமுறை நமது பொதுப்பணித் துறை அமைச்சரவர்கள் கேரளத்திற்குச் சென்று, இதைப்பற்றி வலியுறுத்திக் கேட்டிருக்கிறார்கள். ஆனால் இன்னும் கோவை நகருக்குப் பயன்படும் சிறுவாணித் திட்டம் முடிவுபெறாமல் இருந்து கொண்டிருக்கிறது. நான் இந்த நேரத்தில் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்வதெல்லாம், எப்படியாவது சிறுவாணித் திட்டத்தை முடித்துத்தரவேண்டும், அல்லது நெல்லித்துறைத் திட்டத்தை முடித்துத் தரவேண்டும், அல்லது நகராட்சி மன்றம் தெரிவித்திருக்கிற ஆனையாறு திட்டத்தை முடித்துத் தரவேண்டும் என்பதுதான்.

அடுத்து, சங்கனூர்ப்பள்ளத்தில் ஒரு மேம்பாலம் கட்டப்படாததால் பாப்பநாயக்கன்பாளையம், கணபதி, கிருஷ்ணாராயபுரம் கிராம மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். மழைக் காலங்களில் அந்தப் பள்ளத்தில் தண்ணீர்



பெருகி, பெருமளவில் வழிந்தோடுவதால் மக்கள் அதைக் கடந்து செல்ல முடியவில்லை. ஆகவே, அந்த மேம்பாலம் மிக மிக அவசியப்படுவதால், அதை உடனடியாகக் கட்டித்தர வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். அதைப்போலவே, அவினாசி ரோட்டில் இருக்கிற பாலம் மிகச் சிறியதாக இருக்கிறது. மழைக்காலங்களில் தண்ணீர் தடுக்கப்பட்டு அந்தப் பாலத்திற்கு மேலே பாய்கிறது. அதுமட்டுமல்லாமல் பக்கத்தில் இருக்கின்ற வீடுகளைப் பாழாக்கிச் செல்கிறது. அதனால் அந்த மக்களுக்கு நாம் அடிக்கடி நஷ்டயீடு கொடுத்து வருகிறோம். ஆகவே, அந்தப் பாலத்தை விரிவுபடுத்தித் தரும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

கோவை நகராட்சி மின்சார ஊழியர்களுக்கு மின்சார வாரியத்தில் பணி புரியும் ஊழியர்களுக்குக் கொடுக்கப்படுவதுபோல் சம்பளம் கொடுக்கப்படுகிறது. ஆனால் ஒரு குறிப்பிட்ட பத்து பேர்களுக்கு மட்டும் அந்த அளவு சம்பளம் கிடைக்கவில்லை. அதற்கு காரணம் என்ன என்று புரியவில்லை. அதை அரசாங்கம் கவனித்து ஆவனச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நகராட்சியில் பணிபுரிகிற மீட்டர் ரீடர்களுக்கு 120 ரூபாய்தான் கொடுக்கிறார்கள். அவர்கள் அதை 140 ரூபாயாக ஆக்கவேண்டுமென்று நீண்ட நாட்களாகக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையையும் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசாங்கம் தீட்டியிருக்கிற மற்றத் திட்டங்களையும் நாட்டு மக்கள் வரவேற்கிறார்கள். மேட்டூர் அலுமினியத் தொழிற்சாலையை தேசியமயமாக்குதல், தனியார் மின் நிறுவனங்களை எல்லாம் அரசாங்கமே மேற்கொள்வது ஆகியத் திட்டங்களை மக்கள் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் இதையெல்லாம் விட்டுவிட்டு இந்த அரசாங்கத்தைக் குறைக் கூறிக்கொண்டிருக்கிறார்கள் நம்முடைய எதிர்க்கட்சி நண்பர்கள். எனக்கு முன்னாலே பேசிய நண்பர் ஒருவர் சொன்னார். இந்த அரசாங்கத்தில் அராஜகம்தான் அதிகமாயிருக்கிறது என்று முன்னேற்றக் கழகத்தை தாக்கிப் பேசினார்கள். குறைகூறுகிறவர்களுக்கு—அராஜகம் நடக்கிறது என்று சொல்கிறவர்களுக்கு ஒருசில சம்பவங்களை விளக்கிக்கூற விரும்புகிறேன்.

எங்கள் மாவட்டத்திலே அண்மையில் நடைபெற்ற ஒரு கொலையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் அறிந்திருப்பார்கள். கொலையுண்டவர் வேறு யாருமல்ல. திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர். முன்னேற்றக் கழகத்தின் வட்டச் செயலாளர்களில் ஒருவர். அவருடைய பெயர் லத்தீப். அவரைத்தான் கொலை செய்தார்கள். அந்தச் செய்தி பத்திரி

கையிலும் வந்திருக்கிறது. ஆகவே அராஜகத்தை நடத்துவது யார் என்று எண்ணிப் பார்க்க வேண்டும். முன்னேற்றக் கழகம் அராஜகத்தில் ஈடுபட்டிருக்கிறதா அல்லது முன்னேற்றக் கழகத்தை எதிர்க்கின்றவர்கள் அராஜகத்தில் ஈடுபட்டிருக்கிறார்களா என்பதை மக்கள் புரிந்துகொண்டிருக்கிறார்கள். முன்னேற்றக் கழகம் இன்று ஆட்சிப்பொறுப்பிலே இருந்தாலும், அடிபடுகின்றவர்களும், உதை படுகின்றவர்களும், கொலைக்கு ஆளாகின்றவர்களும் முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நாங்கள்தான். ஆனால் அடித்தவர்கள் தான், முன்னேற்றக் கழகத்தினரை உதைத்தவர்கள்தான் இங்கே வந்து 'எங்களை அடிக்கிறார்கள், அராஜகம் நடக்கிறது' என்று சொல்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அப்படிப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுத்து, எங்களுக்குப் பாதுகாப்புத் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த நிதிநிலை அறிக்கையிலே பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி தெரிவித்து, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. எம். ஏ. அபுசாலி:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1973-74-ம் ஆண்டுக்கான இந்த நிதிநிலை அறிக்கையை ஆதரித்து, எனக்குத் தெரிந்த இரண்டொரு கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

1973-74-ம் ஆண்டுக்கான பட்ஜெட் வருவதற்கு முன்னதாக மிகக் குறைந்த வருமானத்தைப் பெறுகிறவர்களிலிருந்து அதிகமான வருமானத்தைப் பெறுகிறவர்கள் வரையில் எல்லாத் தரப்பினரும் பற்றாக்குறை பற்றாக்குறை என்று சொல்லக்கூடிய ஒரு நிலையை நாம் பார்த்திருக்கிறோம். அதே நேரத்தில் பல கோடிக் கணக்கான ரூபாய்களை நமது முதலமைச்சரவர்கள் ஏழை எளிய மக்களுக்காக செலவிட்டு, அரை கோடி ரூபாய் உபரியாக வரக்கூடிய ஒரு பட்ஜெட்டை தயாரித்திருப்பதைப் பார்க்கும்போது நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

அதேநேரத்தில் அவர்களை நாங்கள் பாராட்டிப் பேசினால், 'முஸ்லீம்கள் சோப்புப் போடுகிறார்கள், வீணை வாசிக்கிறார்கள்' என்று எதிர்க்கட்சி நண்பர்கள் பேசுகிறார்கள். உண்மையிலேயே முஸ்லீம்களைப் பொறுத்தவரையில் சோப்பு போடுவது என்றால் அது தூய்மையைக் குறிக்கிறது; தூய்மையாக ஒரு துணியை வெளுப்பவர்கள் என்றாகிறது. வீணை வாசிப்பது என்றால் நாதசுரத்திற்கு துணையாக இருப்பவர்கள் என்றாகிறது. அந்த நிலையிலேதான் நாங்கள் இன்றைக்கு இருந்துகொண்டிருக்கிறோம். எங்களைப் பொறுத்தவரையில், நாங்கள் ஆளும் கட்சியிலே இருக்கின்ற டாக்டர் கலைஞர் அவர்களுக்கு உறுதுணையாக இருந்து, அழுக்குப் படியாத முறையில் பார்த்துக்கொண்டிருக்கிறோம். அவர்களுக்கு என்ன கைமாறு செய்வது என்று எங்களுக்குத் தெரியவில்லை. இப்போது அவர்களுக்கு எங்களுடைய அன்பு உள்ளங்களைத்தான் கொடுக்கமுடியும் என்பதைத் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.



அடுத்து, எங்களுடையத் தேவைகளைப் பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். லால்பேட்டையிலே ஒரு மருத்துவமனை வேண்டுமென்று நீண்ட நாட்களாக வலியுறுத்தி வருகிறோம். அது என்ன காரணத்தாலோ இன்னும் நிறைவேற்றப்படவில்லை. எங்கள் ஊர் பக்கத்தில் காட்டுமன்னார்குடி ஒரு பெரிய டவுன் ஆக இருக்கிறது. இரண்டு மைல் தூரம் என்று அடிக்கடிச் சொல்கிறார்கள். லால்பேட்டையைப் பொறுத்த வரையில், அது குமாராட்சியிலிருந்து தனியாகப் பிரிந்திருக்கிறது. சுமார் 5 மைல் தூரம் இருக்கும். அந்த அடிப்படையில் இதைப் பார்க்க வேண்டும். அங்கே 20,000 முஸ்லீம்கள் ஒரே இடத்தில் இருக்கிறார்கள். அதன் பக்கத்து ஊரில் கூட சுமார் 15,000 முஸ்லீம்கள் இருப்பார்கள். அவர்கள் எல்லாம் முஸ்லீம் கோஷா முறையைக் கையாள்பவர்கள். ஆகவே, அங்கே தனியாக ஒரு மருத்துவ மனையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதிலே கூட நான் அமைச்சர் அவர்களிடத்திலே முன் தினம் மகஜர் ஒன்றை கொடுத்திருக்கிறோம். என்றால் இயன்ற அளவிலே செய்து கொடுப்போம் என்று உறுதி கொடுத்திருக்கிறார். எனவே, அமைச்சர் அவர்கள் அதை செய்து கொடுப்பார் என்று நினைக்கிறேன்.

அடுத்து, வெள்ளியாம்பூர் ஓடை என்ற ஓடை ஒன்று எங்கள் பகுதியிலே இருக்கிறது. அந்த ஓடையிலே ½ அடி தண்ணீர் வந்துவிட்டால் கூட, லால்பேட்டையிலே இருந்து காட்டுமன்னார்குடிக்கு செல்ல முடியாமல் போய்விடுகிறது. எனவே அந்த பாலத்தை கொஞ்சம் உயர்த்தினால், எங்கள் ஊர் மக்கள் காட்டுமன்னார்குடியிலே இருக்கும் போலீஸ் ஸ்டேஷன், ரெவின்யூ ஆபீஸ் போன்றவற்றிற்கு போய் வருவதற்கு சுலபமாக இருக்கும். வெள்ளம் அதிலே வந்துவிட்டால், திருநரையூரிலே இருந்து குமாராட்சி வரையுள்ள 10,000 ஏக்கர் நிலம் பாழாகி விடுகிறது. எனவே, உடையூர் வழியாக பாலம் கட்டிவிட்டால், அது உபயோகமாக இருக்கும் என்று கருதுகிறேன். புவனகிரியிலே இந்த ஆண்டு வெள்ளத்தின் காரணமாக பலத்த சேதம் ஏற்பட்டிருக்கிறது. அதை எல்லாம் இந்த மன்றத்திலே எடுத்துச் சொல்லி இருக்கிறேன். உடையூரிலே ஒரு அணை கட்ட வேண்டும் என்று இந்த மன்றத்திலே கேட்டிருக்கிறேன் இந்த பட்ஜெட்டிலே கூட அது பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை. வெள்ளத்தின் காரணமாக அங்கே 20,000 ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன எனவே, அந்த பாலத்தை கொஞ்சம் உயர்த்தினால்

மக்களுக்கு சௌகரியமாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன். அதே நேரத்திலே புவனகிரி தொகுதியை பொறுத்தவரை அரசாங்க கடன்களை ஒரு வருஷத்திற்கு தள்ளி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பரங்கிப்பேட்டைக்கும் கிள்ளைக்கும் இடையே ஒரு வெள்ளாறு இருக்கிறது. அதிலே ஒரு பாலம் கட்டி தந்தால் பரங்கிப்பேட்டையிலே இருந்தும், புதுச்சத்திரத்திலே இருந்தும் வந்து படிக்கின்ற மாணவர்களுக்கு மிகச் சௌகரியமாக இருக்கும். அவர்கள் மிகச் சுலபமாக அண்ணாமலை சர்வகலாசாலைக்கு சென்று படிக்க முடியும். அதைவிட்டு அவர்கள் சுற்றி வந்தால் 18 மைல் சுற்றி போகக் கூடிய நிலைமை இருக்கிறது. பாலம் கட்டினால் 2 மைல் தான் அவர்கள் நடக்க வேண்டியிருக்கும். அதை என்னுடைய பீரியடிலே கட்ட முயற்சி எடுத்தால், முஸ்லீம் லீக் உறுப்பினராக நான் பதவி ஏற்றதற்கு பலனாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்து, குறியாமங்கலம் புவனகிரிக்கு செல்லக் கூடிய ஒரு ரோடு இருக்கிறது. அது 1½ மைல் நீளம் தான் இருக்கும். அது ஏற்கனவே சாதாரண வண்டி போகக் கூடிய பாதையாகத்தான் இருந்தது. அதிலே இருக்கும் ஒரு பாலம் உடைந்து விட்டதால், அந்த ரோடு சரியாக செப்பனிட முடியாமல் இருக்கிறது. எனவே, அந்த பாலத்தை கட்டித் தந்தால், 10 மைல் சுற்றி மக்கள் போகும் நிலை மாறி 1½ மைலிலே போகக் கூடிய நிலைமை வரும். எனவே, அதைச் செய்யவேண்டும்.

அடுத்து, புவனகிரியிலிருந்து குறிஞ்சிப்பாடி வரை போகும் ரோடிலே ஒரு பெரிய பாலம் கட்டி வைத்திருக்கிறார்கள். இன்னும் ஒரு சின்ன பாலம் அங்கே கட்ட வேண்டிய நிலைமை இருக்கிறது. அதை கட்டினால், 3 மைல் கடந்து குறிஞ்சிப்பாடிக்கு செல்லக் கூடிய நிலைமை ஏற்படும்; இல்லை என்றால் மக்கள் எல்லாம் 15 மைல் சுற்றிக்கொண்டு போகும் நிலைமை நீடிக்கக் கூடும். எனவே, இதையும் செய்யவேண்டும்.

அடுத்து, புவனகிரியிலே ஒரு மருத்துவ மனை இருக்கிறது. அது மருத்துவ மனையாக எனக்குத் தெரியவில்லை. ஏதோ ஒரு சாதாரண வீடு மாதிரி அது இருக்கிறது. எனவே, அதை கொஞ்சம் விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டு, எனது பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. ஏ. பாலையா :** தலைவரவர்களே, இந்த மாமன்றத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட 1973-74-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய சில கருத்தினை சொல்ல விரும்புகிறேன்.





மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த மன்றத்திலே சமர்ப்பித்திருக்கின்ற நிதி நிலை அறிக்கையானது ஒளி இழந்த தமிழகத்தின் இருள் அகற்றும் நிதி நிலை அறிக்கையாக இல்லை என்பதனை இந்த சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். முதல்வர் அவர்கள் இந்த நிதி நிலை அறிக்கையிலே படிப்படியாக சமதர்ம சமுதாயத்தை நிச்சயமாக இங்கே அமைப்போம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இன்றைய தமிழகத்தைப் பார்க்கின்ற நேரத்தில், தி.மு. கழக அரசு தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றதற்கு பின்னால் தமிழகத்திலே எத்தகைய சமதர்ம சமுதாய திட்டங்கள் வகுத்திருக்கிறது, இந்த நாட்டிலே இருக்கிற ஏழை எளிய மக்கள் எத்தகைய பலன்களை அதனால் பெற்றிருக்கிறார்கள் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க கடமைப்பட்டவர்களாக இருக்கிறோம், தமிழகத்திலே இன்று இருக்கக் கூடிய ஏழை எளிய மக்கள் வாழ்க்கையிலே எந்தவித முன்னேற்றமும் காணப்படவில்லை. தமிழகத்திலே வேலையில்லாமல் திண்டாடுபவர்கள் ஏராளமாக இருந்து கொண்டிருக்கிறார்கள். கடுமையான மின் வெட்டுக் காரணமாக இன்று தமிழகத்திலே இருக்கிற தொழிற்சாலைகள் அனைத்தும் கதவடைப்பு செய்கின்ற நிலையிலே தான் இருக்கின்றன. அப்படி கதவடைப்பு செய்து அதனால் வெளியேற்றப்பட்ட தொழிலாளர்கள் வாழ வழியில்லாமல் தவிக்கின்ற ஒரு சூழ்நிலை இன்றைக்கு தமிழகத்திலே இருந்து கொண்டிருக்கிறது. இதைப் போல் விலைவாசி ஏற்றம் தமிழகத்தில் இருப்பதைப் போல் வேறு எந்த மாநிலத்திலேயும் இல்லை என்று நிச்சயமாகச் சொல்லலாம். இன்று ஏழை எளிய மக்கள் எட்டிப்பிடிக்க முடியாத அளவிற்கு விலைவாசி உயர்ந்திருக்கிறது. எந்தப் பண்டங்களின் விலையை எடுத்துக் கொண்டாலும் 1967-க்குப் பின்னாலே ஆனாலும் சரி, 1971-க்குப் பிறகு ஆனாலும் சரி, இந்த விலைவாசி ஏற்றம் இந்த தமிழகத்திலே மிக அதிகமாக உயர்ந்திருக்கிறது, என்பதனை இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சமதர்ம சமுதாயத்தை அமைக்கும் பணியிலே நாங்கள் ஈடுபட்டிருக்கிறோம் என்று சொல்லுகிற இந்த அரசாங்கம் இந்த நாட்டிலே இருக்கிற ஏழை எளிய மக்களுடைய வாழ்க்கையிலே ஒளிமயமான சமதர்மத்தை உருவாக்க பாடுபடவேண்டும். இன்று ஏழையாக இருப்பவன், ஏழையாகவே இருந்து கொண்டிருக்கிறான். வண்டி ஓட்டுபவன் வண்டி ஓட்டிக்கொண்டே இருக்கிறான்; கூலி வேலை செய்பவன் கூலி வேலை செய்பவனாகவே இருக்கிறான். ஆனால் பணம் சேர்ப்பவன், இன்றைக்குப் பணம் சேர்த்துக்கொண்டே இருக்கிறான். முதலாளிகள் எல்லாம் இன்றைக்குப் பெரிய முதலாளிகளாக ஆகிக்கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிலை இருக்கும் வரை தி.மு. கழக அரசு சொல்லுகிற சமதர்ம சமுதாய திட்டம் நிச்சயமாக அமுலுக்கு வராது என்பதனை இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். சமதர்ம சமுதாயத்தை அமைப்பதிலே யாருக்கும் அபிப்பிராய பேதம் இருக்க முடியாது. ஆகவே, இந்த சர்க்கார் ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதற்காகவும், அவர்கள் வாழ்வு மேம்பாடு அடைவதற்காகவும் நல்ல பல திட்டங்களை உருவாக்க முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, குடியிருப்பு மனை வழங்குகின்ற சட்டத்தின் கீழ் இன்று தமிழகத்திலே ஏராளமானவர்களுக்கு குடியிருப்பு மனைப்பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. எங்களுடைய மாவட்டத்திலே குடியிருப்பு மனை வழங்குகின்ற சட்டம் விஸ்தரிக்கப்பட்டு, அங்கே செயல்பட்டு கொண்டிருக்கிறது. அங்கே இன்றைக்கு என்ன நடந்து கொண்டிருக்கிறது என்றால், நில உடமையாளர்கள் அவர்களுடைய நிலங்களிலே குடி இருக்கிறவர்களைப் பலாத்காரமாக வெளியேற்றுகின்ற நிர்ப்பந்த நிலை இருந்து கொண்டிருக்கிறது. தமிழக அரசு கொண்டு வந்திருக்கிற இந்தச் சட்டம் வரவேற்கக் கூடியதாக இருந்தாலும், இந்தச்சட்டத்தை நிலச் சொந்தக்காரர்கள் தவறான முறையிலே பயன்படுத்த முனைந்திருக்கிறார்கள். அவர்களை அந்த முனைப்பிலே இருந்து தடுக்கவும், ஏழை எளிய குடியானவர்களுக்கு இந்தச் சட்டத்தினால் பாதுகாப்பு அளிக்கும் வகையிலே காரியங்களை இந்த அரசு ஆற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். மேலும், குடியிருப்புக்காரர்கள், ஏழை எளியவர்கள் ஒன்றுமே தெரியாதவர்கள். அதை வைத்து, நிலச் சொந்தக்காரர்கள் போலீசாரின் உதவியைக் கொண்டு அவர்களை வெளியேற்றுகின்ற முயற்சி நடந்துகொண்டிருக்கிறது. குறிப்பாக மணவாளக்குறிச்சி கிராமத்தில் உள்ள போலீஸ் அதிகாரி அங்குள்ள நிலச்சுவான்தார்களுக்கு உடந்தையாக இருந்துகொண்டு நிலத்தில் இருந்த குடியானவர்களை எல்லாம் சட்டத்தையும் மீறி வெளியேற்றுவதிலே முனைந்துள்ளார். இந்த போலீஸ் அதிகாரி நியாயமாக குடியானவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்குப் பதிலாக நிலச்சுவான்தார்களுக்குப் பாதுகாப்பு அளித்து வருகிறார். இதுபோல போலீஸ் அதிகாரிகள் நிலச்சுவான்தார்களோடு சேர்ந்துகொண்டு குடியானவர்களை நிலத்தில் இருந்து வெளியேற்றுவதைத் தடுக்க வேண்டும்.

மேலும், உழுபவனுக்கே நிலம் என்பது நீண்ட காலமாக இருந்து வருகிறது. அதற்கான சட்டத்தை இந்த அரசு இந்தத் தொடர் கூட்டத்திலேயே கொண்டுவரவேண்டும். சாகுபடி செய்பவர்கள் நிலத்தை வாங்கிக்கொள்ளலாம்



என்பதற்குப் பதிலாக கொண்டுவர இருக்கிற சட்டத்தில் அந்த நிலம் அவர்களுக்கே சொந்தமானது என்பதாகச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கல்விக்காக பல கோடி ரூபாய்களை இந்த அரசு ஒதுக்கி செயல்படுவதாகச் சொல்கிறார்கள். என்னுடைய தொகுதியில் கணபதிபுரத்தில் அன்ன விநாயகர் தேவஸ்தான கல்லூரியும், ஸ்ரீதர் கல்லூரி ஒன்றும் ஆக இரண்டு கல்லூரிகள் நிர்வாகக் கோளாறினால் அடைக்கப்பட்டன. அவை இன்னும் திறக்கப்படவில்லை. உடனடியாக அந்த இரண்டு கல்லூரிகளையுமே அரசினர் கல்லூரியாக எடுத்துக்கொள்ள அரசு முன்வரவேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியில் குளச்சலில் ஒரு மருத்துவ மனை இருக்கிறது. கடலோர மீனவர்களால் அதிகமாகப் பயன்படுத்தப்படுகிற மருத்துவ மனை அது, அங்கே எந்தவிதமான படுக்கை வசதியோ, மருந்து வசதியோ கிடையாது. பேருக்கு அரசாங்க மருத்துவமனையாக இருந்துகொண்டிருக்கிறது. அதனை மேம்படுத்த இந்த வரவு செலவுத் திட்டத்திலாவது பணம் ஒதுக்கப்படும் என்று நினைத்தேன். அதற்கு இந்த வர செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கபடவில்லை என்பதை மிக வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரணியல் முட்டம் ரோட்டில் வள்ளி ஆற்றின் குறுக்கே பள்ளம் பாலம் பழுதடைந்து இருக்கிறது. பார வண்டிகள் செல்லக்கூடாது என்பதாக போர்டு கூட போடப்பட்டிருக்கிறது. இந்த வரவு செலவுத் திட்டத்தில் அந்தப் பாலத்தை பழுதுபார்க்க பணம் ஒதுக்கப்படவில்லை என்பதனையும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் குளச்சலை ஒரு மீன்பிடித் துறைமுகமாக அமைத்துத் தரவேண்டுமென்று நீண்டகாலமாகக் கேட்டு வருகிறோம். அது இயற்கையாக அமைந்த துறைமுகம். சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த துறைமுகம். அதை அபிவிருத்திசெய்து தந்தால் அங்குள்ள மீனவ சமுதாய மக்கள் வாழ்வில் முன்னேற்றம் ஏற்பட உதவியாக இருக்கும்.

(பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

வள்ளியாற்றில் இருந்து லிப்ட் மூலம் தண்ணீர் எடுத்து இரணியல் முட்டம் சானலில் விட்டால் விவசாயத்திற்கு மிகவும் உதவியாக இருக்கும். இப்படி என்னுடைய தொகுதி சம்பந்தப்பட்ட பல பிரச்சினைகளை நானும் தொடர்ந்து

சொல்லிக்கொண்டு வருகிறேன். இந்த அரசு இதுவரையிலும் கவனித்ததாகத் தெரியவில்லை. இந்த அரசை எப்படிக் கவனிக்க வைப்பது என்பதும் புரியவில்லை. எனது தொகுதியில் உள்ள குறைகளை இந்த அரசு போக்குவதற்கு முன்வரவில்லை என்றால், அந்தத் திட்டங்களை எடுத்து நிறைவேற்றும் வரையில் நான் இந்தச் சட்டமன்றத்தின் முன்னால் உண்ணாவிரதம் இருக்கத் தயாராய் இருக்கிறேன் என்பதை இந்த அரசுக்குத் தெரிவித்து என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

## (8) அமைச்சர்களின் அறிக்கைகள் (தொடர்ச்சி)

## (ஆ) நீலகிரி மாவட்டம், கூடலூர் தாலுக்காவில் ஏற்பட்டுள்ள நில ஆக்கிரமிப்புக் குறித்த முதலமைச்சரின் அறிக்கை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தப் பேரவைக்கு விதி 82-ன் கீழ் ஒரு அறிக்கையை இப்போது அளிப்பார்கள்.

THE HON. DR. M. KARUNANIDHI: Sir, a total extent of 11,352 acres had been under encroachment in Gudalur Taluk, Nilgiris district. Owing to its proximity to Kerala, there has been a tendency for Keralites to encroach on Government lands in Gudalur Taluk which was noticed as early as 1952. The Government of Tamil Nadu have treated this problem with great sympathy and have been liberal in dealing with the encroachments in this area. The result of this policy will be reflected in the following figures:—

| | Total extent of encroachments and families involved. | Pattas issued so far. | Pattas under issue. | Evicted. |
|---|---|---|---|---|
| Area in acres | 11352 | 9060 | 737 | 1555 |
| Number of families | 7902 | 5573 | 806 | 1523 |

This matter was considered in great detail by me in September 1971, a sympathetic view was taken and decided that all encroachments in existence as on 30th June 1971 would be regularised subject to the usual conditions and further encroachments on Government land prevented. In implementing this policy, we have issued pattas for 90 per cent of the extent under encroachments as would be seen from the figures read out just now. The defini-





tion of family was liberalised in December 1972 so that the remaining extent of 737 acres could also be assigned to the encroachers. In effect we have only evicted 1,523 families from an extent of 1,555 acres.

An unexpected development took place with the formation of Gudalur Karshaka Samrakshana Sangham by the first week of December 1972. The active membership of this sangham was confined to two border villagers, Moonannad and Erumad. It is reported that another association called Gudalur Samara Sahaya Samithi, was formed in Sultan's Battery of Kerala State with the object of extending support to the Gudalur Karashaka Samrakshana Sangham. They held a series of meetings in which inflamatory speeches were made. Their object was to reoccupy not only the lands from which the encroachers were evicted but also to occupy revenue lands on which the Forest Department had raised plantations at a cost of Rs. 4,000 per acre. On 14th February 1973, the Gudalur Sangham organised a meeting at Ambalamoola in our State which is close to the State border. After the meeting then the Police and the Forest Officials returned under the impression that the crowd had dispersed peacefully the agitators numbering 5,000 became violent and set fire to plantations covering an extent of 1,685 acres causing loss of Rs. 5.29 lakhs. Ninety-three separate plantation blocks have been destroyed. Out of 1,685 acres planted by the Forests Department, only 118.47 acres would represent the evicted area. As a consequence of this incident, the Police had necessary to take action to arrest the persons responsible for such destruction and national waste of Government property in Gudalur taluk. Some 300 men fearing arrest for what they did seem to have gone across the border of Ambalavayal. As a result of the prompt action by the local authorities, large scale destruction and insecurity in the minds of the people have been prevented and normalcy restored.

It is a great pity that while these are the facts, it is seen as reported from the newspapers, the Government of Kerala have given the impression that whatever action has been taken in Gudalur Taluk has been discriminatory on the ground that they were Malayalees. I would like to assure that in Tamil Nadu no dis-

crimination is made on the mere ground of language. Whatever laws and rules are applicable to the people of Tamil Nadu would apply equally to those from other states who seek to reside here.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைகின்றன. பேரவை மீண்டும் 5—3—1973 திங்கட்கிழமை காலை 9-30 மணியளவில் கூடும். வணக்கம்.

*பின்னர் பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது.*

### (9) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

56. Notification issued with G.O. Ms. No. 6, Rural Development and Local Administration, dated the 2nd January 1973, in regard to an amendment to the Tamil Nadu Khadi and Village Industries Board Rules, 1966. [Laid on the table of the House under section 29 (3) of the Tamil Nadu Khadi and Village Industries Board Act, 1959 (Tamil Nadu Act 18 of 1959).]

57. Notification issued with G.O. Ms. No. 7, Rural Development and Local Administration, dated the 2nd January 1973, in regard to extension of term of office of the members of the Tamil Nadu Khadi and Village Industries Board, for a further period of one month from the 3rd January 1973. [Laid on the table of the House under section 29 (3) of the Tamil Nadu Khadi and Village Industries Board Act, 1959 (Tamil Nadu Act 18 of 1959).]

58. Notification issued with G.O. R. No. 81, Revenue, dated the 9th January 1973, in regard to exemption from liability to entertainments tax, show tax and additional surcharge to the benefit film show organised by the Y.W.C. Association, Madras, on 20th January 1973 at Devi Theatre, Madras. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

59. Notification issued with G.O. R. No. 2713, Revenue, dated the 22nd December 1972, in regard to exemption from liability to entertainments tax, show tax and additional surcharge to the





benefit film show organised by the Rotary Club, Pudukkottai. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

### B. *Reports, Notifications and Other Papers.*

50. Notification issued with G.O. Ms. No. 1334, Labour and Employment, dated the 7th November 1972, in regard to an amendment to the Tamil Nadu Plantations Labour Rules, 1955.

51. Notification issued with G.O. Ms. No. 3478, Revenue, dated the 27th December 1972, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 in respect of the mortgage deed to be executed by Bala Mandir (Foundling Hospital) Madras, in favour of the Life Insurance Corporation of India.

## தமிழ்நாடு சட்டப் பேரவை.

### திங்கட்கிழமை, 1973 மார்ச் 5.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் விடையளிக்கவேண்டிய வினாக்கள் பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

*Bonus for workers in Plantations*

* 238 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether it is a fact that bonus is to be paid to the workers in plantations in this State; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** (அ) ஆம்.

(இ) 1947-ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12(3) பிரிவின் கீழ் சேர்வராயன் மலை நீங்கலாக இம்மாநிலத்தில் உள்ள மலைத் தோட்டங்களின் நிர்வாகத்தினருக்கும், தொழிலாளர்களுக்கும் இடையில் 5—5—1972 அன்று ஏற்பட்ட உடன்படிக்கைக்கு இணங்க, தேயிலைத் தோட்டங்களில் கிடைக்கும் மொத்த வருவாய் 10.5 சதவீதமும் காப்பித் தோட்டங்களில் கிடைக்கும் மொத்த வருவாயில் 9.5 சதவீதமும் 1971-ஆம் ஆண்டுக்கான ஊதியக்கொடையாகக் கொடுக்கப்படவேண்டும். தொழில் தகராறுகள் சட்டத்தின் 18(1) பிரிவின் கீழ் 10—6—1972 அன்று ஏற்பட்ட உடன்படிக்கையின்படி, சேர்வராயன் மலையில் 1971-72-ஆம் ஆண்டுக்கு 5.25 சதவீதமும் 1972-73, 1973-74-ஆம் ஆண்டுகளுக்கு 5 சதவீதமும் ஊதியக்கொடையாக வழங்கப்படும்.

**திரு. என். டென்னிஸ் :** தோட்டத் தொழிலாளர்கள் அதிகமாக மலைப் பிரதேசத்தில் வேலை செய்கின்ற காரணத்தால், அவர்கள் அதிக சிரமமான வேலையில் ஈடுபட்டிருக்கின்றனர். ஆதலால், அவர்களுக்கு ப்ராஃபிட்-கம்-போனஸ் வேஜ் கொடுக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து அதற்கான நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** இப்பொழுது அது போன்ற ஒரு திட்டம் இல்லை. ஆனாலும், கனம் உறுப்பினருடைய யோசனை சமயம் வாய்க்கும்போது நினைவில் கொள்ளப்படும்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் கூறும்போது, காபி, தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்குப் போனஸ் கொடுப்பதற்கு ஏற்பாடுகள் இருக்கின்றன என்று சொன்னார்கள். அதுபோன்று, அரசாங்க ரப்பர் தோட்டங்களில் வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கும் போனஸ் வழங்க அரசு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** 1965-ஆம் ஆண்டு, ஊதியக் கொடை வழங்கும் சட்டத்தின் 32-ஆவது பிரிவின்படி, இச்சட்டத்தில் கண்டுள்ள, ஒரு மாநில அரசு அல்லது ஒரு உள்ளாட்சி மன்றத்தில் ஏதேனும் ஒரு துறையைச் சார்ந்த அதிகார மன்றத்தினர் அல்லது அதிகார மன்றத்தின்கீழ் நடத்தப்படுகிற தொழிலில் ஈடுபட்டுப் பணிபுரிகின்ற எஸ்டேட்டுகளுக்கு இது பொருந்தாது. இதன்படி அரசு ரப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஊதியக் கொடை வழங்கும் வினாவுக்கு இடம் இல்லை. அரசாங்க ரப்பர்த் தோட்டத்தில் பணி புரிகின்றவர்களுக்கு ஊதியக் கொடை வழங்கப்படுவது இல்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** ட்ரான்ஸ்போர்ட் தொழிலாளர்களுக்கு எக்ஸ்-க்ரேஷியா பேமெண்ட் கொடுக்கிறார்கள். அது மாதிரியே அரசாங்க ரப்பர் தோட்டத்தில் வேலை செய்கிறவர்களுக்கும் எக்ஸ்-கிரேஷியா பேமெண்ட் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** இதைப்பற்றி யோசிக்கவேண்டிய சந்தர்ப்பம் வரும்போது கனம் உறுப்பினர் பொன்னப்ப நாடார் அவர்களின் கருத்து நினைவில் கொள்ளப்படும்.



**திரு. ஜே. ஜேம்ஸ் :** மத்திய அரசாங்கம் இரயில்வே தொழிலாளர்களுக்குக்கூட போனஸ் வழங்குவதற்கான சட்டங்களை வகுப்பதற்கு ஆலோசித்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, மாநில அரசாங்கத்தின்கீழ் வேலை செய்யக்கூடிய ரப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்கும் போனஸ் வழங்க அரசு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** இப்போதுள்ள சட்டப்படி முடியாது. சந்தர்ப்பம் ஏற்படும்போது மாண்புமிகு உறுப்பினரின் யோசனையை அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

**திரு. எஸ். வடிவேல் :** எத்தனை தொழிலாளிகள் வேலை செய்கிறார்கள், எவ்வளவு போனஸ் பணம் இதுவரை கொடுக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவிக்க முடியுமா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தனிக் கேள்வி போட்டால் விவரம் தெரிவிக்கப்படும்.

### சலூன் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம்.

* 239 வினா.—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ்நாட்டிலுள்ள சலூன் தொழிலாளர்க்குக் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** இல்லை.

**திரு. மே. சி. தூயமணி :** பேரவைத் தலைவர் அவர்களே, * *

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உட்காருங்கள்.

THIRU R. PONNAPPA NADAR : It is not in good taste.

MR. DEPUTY SPEAKER : I expunge all the words.

**திரு. நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம் இப்பொழுது ஷேவிங் கிரீமுக்கு அதிக வரி போட்டிருப்பதால்

---

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

சலூன் தொழிலில் ஈடுபட்டிருக்கிற தொழிலாளிகளெல்லாம் தங்களுக்கு இப்பொழுது கிடைக்கின்ற பணம் போதாது என்றும், எனவே கட்டணத்தை உயர்த்தவேண்டும் என்றும் கோரி எல்லா சங்கங்களில் இருப்பவர்களும் அமைச்சரைச் சந்திக்கவேண்டும் என்று இருக்கிறார்கள். மத்திய அரசு செய்திருக்கிற அந்த அநீதியைக் கொஞ்சம் மனத்திலே கொண்டு அந்தக் கட்டணத்தை உயர்த்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** கேள்வி, சலூன் தொழிலாளர்கள் பிரச்சினையைப் பற்றியது. நண்பர் சலவைத் தொழிலாளர் பற்றிச் சொல்கிறார். குறுக்கிடு இந்த அரசுக்கு அதில் ஏதும் ஆட்சேபணை இல்லை. சந்தர்ப்பம் வரும்போது யோசிக்கப்படும்.

**திரு. த. சோனையா :** சலூன்களில் வேலை செய்யும் தொழிலாளிகளுக்கு அம்மாதிரி இல்லாதுபோனாலுங்கூட, இனிமேலாவது தமிழகத்தின் முதல்வர் கலைஞர் டாக்டர் அவர்கள் பிறந்த தினத்திலே—முதலாண்டு பிச்சைக்காரர் மறு வாழ்வு, இரண்டாவது ஆண்டு கண் அற்றோர்க்குக் கண் ஒளி வழங்குதல், என்ற முறையில், இந்த மூன்றாவது ஆண்டில் சலவைத் தொழிலாளர், சலூன் தொழிலாளர், கைவண்டித் தொழிலாளர் ஆகியோர்களுடைய வாழ்வு நலம் பெற அதை எடுத்துக்கொள்வதற்குத் தொழிலாளர் நல அமைச்சரவர்கள் ஒத்துழைப்பு தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** ஏற்கெனவே நமது முதல்வர் அவர்கள், இந்தக் கொள்கை குறித்து நடந்த விவாதத்தின்போது அவர் வெளியிட்ட கருத்துக்களை இந்த நேரத்தில் நினைவிற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதாவது கிராமப் புறங்களில் சிறிய ஹோட்டல்கள், இடம் பெயர்கின்ற திரைப் படக் கொட்டகைகள், சிறு அச்சகங்கள், முடி திருத்தகங்கள் முதலியவற்றில் வேலை செய்கிறவர்களுக்குக் குறைந்த அளவு ஊதியம் வரையறுக்கப்படுவது விரும்பத்தக்கதா என்ற ஐயப்பாட்டைத் தெரிவித்தார். இந்தத் தொழிலில் உள்ளவர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் வரையறுக்கப்படுவதால் இடர்ப்பாடு ஏற்படலாம், உரிமையாளர்கள் தங்கள் கடைகளை



மூடிவிடக்கூடிய நிலை ஏற்படும், ஆகவே, இதை ஒத்திவைக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்தையும் நினைவில் வைத்து ஆவன செய்யப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**Thiru K. S. KOTHANDARAMIAH :** Sir, there is a general demand for up-to-date hair-dressing saloons even in rural areas. As the hair dressers are very poor, may I know whether help will be given to them by means of loans and bonus?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** இப்பொழுது அந்த யோசனை ஏதும் இல்லை.

**திரு. வீ. மலைக்கண்ணன் :** அவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திலும் சலூன் தொழிலாளர்கள் கூட்டுறவு சங்கம் அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தச் சங்கங்கள் மத்திய கூட்டுறவு வங்கியில் கடன் பெறுவதற்கு விண்ணப்பித் திருக்கிறார்கள். மத்திய கூட்டுறவு வங்கி அவர்களுக்குக் கடன் கொடுக்க அரசாங்கத்திடம் காரண்டி கேட்கிறது. அந்த காரண்டியைக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** அதைப்பற்றியும் யோசிக்க வேண்டியிருக்கிறது.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** தலைவர் அவர்களே, S.T.C. கோவிலில் எடுக்கும் முடியை எடுத்துக் கொள்ளும் காரணத்தால், இப்போது கோயில்களுக்கு முடி எடுக்க பிரார்த்தனை செய்து கொள்கிறவர்களுக்கு முடியிறக்கக்கூடியவர்கள் எல்லாம் ஒரு குறிப்பிட்ட இடத்திலே தான் முடியிறக்க வேண்டும் என்ற முறையிலே குறிப்பிட்ட முடி திருத்தம் செய்கிறவர்களை வைத்து இருக்கிறார்கள். அதனால் பெருமளவிற்கு முடி திருத்தம் செய் கிறவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். எனவே அவர்கள் பிரச்சினையைப் பற்றி அரசு என்ன செய்ய உத்தேசித்து இருக்கிறது ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டியவர்கள் அறநிலையப் பாதுகாப்புத் துறை அமைச்சர் என்று நினைக்கிறேன். தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

திரு. அ. தேவேந்திரன் : இப்பொழுது வளரக்கூடிய புதிய நாகரிகத்தின் காரணமாக முடிவெட்டிக்கொள்ளாமல் இருப்பதால் சலூன் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தனிப்பட்டவருடைய எண்ணத்தையோ நடவடிக்கையையோ நாம் கட்டுப்படுத்த முடியாது.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, இப்பொழுதே அந்தத் தொழிலாளர்களுக்குக் கூலி குறைவாகத்தான் கிடைக்கிறது. இந்த நேரத்திலே ஹிப்பி நாகரிகம் வேகமாக வளர்ந்து வருகிறது. அதனால் அவர்களுடைய தொழில் அதிகமாக பாதிக்கப்படுகிறது. எனவே ஹிப்பிகள் போன்று வளர்க்கப்படுகிற நாகரிகத்தை வளர விடாமல் தடுக்க அரசாங்கம் முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : நான் முன்பே சொன்னது போல் யாருடைய தனிப்பட்ட நடவடிக்கையும் நாம் கட்டுப்படுத்த முடியாது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய எண்ணத்தை நான் முழுக்க முழுக்க வரவேற்கிறேன். ஆனால் இதுபோன்ற பிரச்சினைகளில் தனிப்பட்ட முறையில் நாம் கட்டுப்படுத்துவதற்கில்லை.

திரு. த. சோனையா : தலைவர் அவர்களே, இந்த சலூன் தொழிலாளர்களுக்கு ஏற்கனவே அரசு கடன் உதவிசெய்து வந்திருக்கிறது. மீண்டும் அந்தத் தொழிலில் ஈடுபட்டு இருக்கிற ஏழை எளிய தொழிலாளர்களுக்குக் கடன் உதவி செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : இந்த அரசு எப்பொழுதுமே தொழிலாளர்களுடைய பிரச்சினையிலே அக்கறை காட்டிவருவதை அனைவரும் அறிவார்கள். மாண்புமிகு உறுப்பினருடைய யோசனையைப் பற்றி ஆலோசிக்கப்படும்.

*Chennasandiram Inam village*

* 242 Q.—THIRU K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

**(a) whether it is a fact that the Government have decided to take over the Inam village of Chennasandiram with its hamlets in Hosur taluk;**



(b) whether arrangements to survey these villages have been made; and

(c) the details thereof?

THE HON. THIRU P. U. SHANMUGAM : (a) to (c) : There are two Chennasandiram Villages in Hosur taluk of Dharmapuri district. One Chennasandiram inam estate lies in between Hosur and Bagalur. It belongs to Marasandiram survey group. This estate was notified on 12th March 1965 and finally taken over by Government on 29th June 1972. In respect of this estate the High Court, Madras in their order, dated 21st July 1972 granted stay of operations under the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act 26 of 1963. Ryotwari settlement will be introduced in this estate after the High Court vacates the stay. The other Chennasandiram village (i.e.) Chennasandiram 'B' inam estate forms part of 177. Selavandoddi survey group. Ryotwari settlement was introduced in this village under the provisions of the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 on 15th June 1972 and fair accounts have been handed over to the Revenue Department.

THIRU K. S. KOTHANDARAMIAH : I am referring only to Chennasandiram village that is lying between Hosur and Bagalur. That village has not been taken over and surveyed yet. So the people there are not able to get democratic facilities like loans for agricultural operations, etc. The inamdars are giving them lot of trouble. Will the Hon. Minister see to it that the village is taken over and survey conducted soon?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இதைப்பற்றி நீண்ட ஒரு சரித்திரமே இருக்கிறது. இந்த எஸ்டேட் குறித்து 1965 ஆம் ஆண்டு நாம் நோடிபிகேஷன் செய்திருக்கிறோம். அப்படி நோட்டிபிகேஷன் செய்ததற்குப் பிறகு உயர்நீதி மன்றத்திலே ரிட் மனு தாக்கல் செய்திருக்கிறார்கள். என்ன ஆயிற்று என்று தெரியாமலே இனாம்தார் நிலத்தை திருப்பிக் கொடுத்துவிட்டார்கள். அதற்குப் பிறகு இனாம்தார் செட்டில்மெண்ட் ஆபீஸரிடத்திலே அதை மைனர் இனாமாக அறிவிக்கவேண்டுமென்று மனுப்போட்டார்கள். அப்படி அறிவிக்கப்பட்டவுடனே அப்பீல் செய்யப்பட்டது. அதற்குப் பிறகு அதுவும் தள்ளுபடி செய்யப்பட்டது. அதற்குப் பிறகு இந்தச் சட்டம் செயல்படுவதை உயர்நீதி மன்றம் தடை

செய்தது. அவர்கள் உயர்நீதிமன்றத்திற்குச் சென்று தடை வாங்கியிருக்கிறார்கள். இது இன்ப்ரக்சுவஸ் ஆகாதா என்று நாம் அரசாங்க வக்கீலிடம் கேட்டோம். அவர்களும் இன்ப்ரக்சுவஸ் தான். இருந்தாலும் நடவடிக்கை எடுக்கவேண்டாம் என்று தகவல் தந்திருக்கிறார்கள். எனவே அந்தத் தடை நீங்குவதற்காகக் காத்திருக்கிறோம். அதற்குப் பிறகு தான் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**திரு. ச. சங்குமுத்து தேவர் :** தலைவர் அவர்களே, இம்மாதிரி தாமதம் ஏற்படுவதாலே பஞ்சாயத்திலே பல அபிவிருத்தி வேலைகள் செய்யப்பட முடியவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** இது எல்லோருக்கும் தெரிந்ததுதான். செட்டில்மெண்ட் நடந்தால்தான் எல்லாம் நடக்கும். நீதிமன்றத்திலே தடை வாங்கினால் நாம் ஒன்றும் செய்ய முடியாது.

**திரு. த. சோனையா : இந்தச் செட்டில்மெண்ட் நடவடிக்கைகள்** நீண்டு கொண்டே போகின்றன. சில கிராமங்களில் மிக கால தாமதம் ஏற்படுகிறது. இந்தப் பணி தமிழ்நாட்டிலே எப்பொழுது முடிவடையும் என்று அரசு அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அப்படித் திட்டவட்டமாக அறிவிக்க இயலாது.

## பொன்னேரி வட்டம்

* 243 **வினா—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னைக்கு அருகே வடக்கில் இருக்கும் பொன்னேரி வட்டத்தைச் சென்னை மாவட்ட எல்லைக்குள் கொண்டு வரும் திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பொன்னேரி வட்டத்தைச் சென்னை மாவட்டத்துடன் இணைக்கும் செயற்குறிப்பு அரசினிடம் தற்சமயம் இல்லை.



**திரு. கா. வேழவேந்தன் :** தலைவர் அவர்களே, பொன்னேரி வட்டத்திலே இருக்கிறவர்களும், கும்முடிப்பூண்டி துணை வட்டத்திலே இருக்கின்றவர்களும் செங்கற்பட்டு மாவட்டத்தின் தலைநகராகிய காஞ்சிபுரம் செல்ல வேண்டுமானால் 80 மைல் தூரம் செல்ல வேண்டியிருக்கிறது. செங்கற்பட்டு மாவட்ட கலெக்டர் அவர்களால் இவைபற்றி முழுமையான கவனம் செலுத்த முடியவில்லை. ஆகவே அதை சென்னையோடு சேர்க்கவோ அல்லது தனிக் கோட்டமாக அமைக்கவோ அமைச்சர் அவர்கள் மாவட்ட சீரமைப்பு செய்கின்ற நேரத்தில் கவனிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** நிர்வாக சீர்திருத்தக் குழுவின் அறிக்கை இன்னும் கிடைக்கவில்லை. சென்னையோடு சைதாப்பேட்டை டிவிஷனையே சேர்க்கலாமா என்று யோசனை இருக்கிறது.

## ஓடக்காட்டுப்புதூர் உண்டுறைவிடப்பள்ளிக் கட்டடங்கள்

* 240 **வினா—திரு. மூ. மாரிமுத்து :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேப்படி, ஓடக்காட்டுப்புதூரில் உள்ள மலைவாழ் மாணவர்கள் உண்டுறைவிடப்பள்ளிகளுக்குக் கட்டடங்கள் கட்டுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது கட்டடங்கள் கட்டித் தரப்படும்?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** (அ) வேப்படி உண்டுறைவிடப்பள்ளி கட்டடத்திற்கான திருத்திய ரூ. 36,800-க்கு மதிப்பீட்டை அரசின் ஒப்புதலுக்காக 22—1—1973-ல் அரிசன நல இயக்குநர் அனுப்பியுள்ளார். இது அரசின் பரிசீலனையில் உள்ளது. ஓடக்காட்டுப்புதூர் உண்டுறைவிடப்பள்ளி—விடுதி கட்டிடத்திற்கு ஏற்கனவே அரசு ரூ. 40,000 நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

(இ) கூடிய விரைவில் கட்டித் தரப்படும்.

[1973 மார்ச் 5

**திரு. வி. பழனிவேல் :** தலைவர் அவர்களே, இந்த ஓடக்காட்டுப் புதூர் மலை வாழ் மக்களுக்காகக் கட்டடம் கட்டுவதற்கு வேண்டிய செங்கல் கம்பி, சிமிண்ட் இவற்றையெல்லாம் கொண்டு செல்வதற்கு வண்டிப்பாதை அங்கே இல்லாமல் இருக்கிறது. எனவே முதலிலே அங்கே வண்டிப் பாதை அமைக்க அரசு முன் வருமா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** அதுபற்றிப் பிரச்சினை இப்பொழுது இல்லை எப்படியும் கட்டடம் கட்டி முடிக்கப்படும்

குன்னூர் அரிசன நலப் பள்ளிக்கட்டடம்

* 241 வினா—திரு. நா. வெ. குருசாமி : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், குன்னூரில் 26—3—1972-ம் நாளன்று அரிசன நலப் பள்ளிக்கு அடிக்கல் நாட்டப்பட்டதா?

(இ) ஆம் எனில், அதில் யார் யார் கலந்து கொண்டார்கள்?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** (அ) ஆம்.

(இ) அவ்விழாவில் மத்திய அமைச்சர் திரு. சி. சுப்ரமணியம், மதுரை மாவட்ட ஆட்சியாளர், மதுரை மாவட்ட நல அதிகாரி, ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தலைவர், ஆணையர் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

வைகை அணைப் பகுதியில் மிருகக்காட்சி சாலை

* 246 வினா—திரு. நா. வெ. குருசாமி : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், வைகை அணைப் பகுதியில் மிருகக் காட்சிசாலை ஒன்றை ஏற்படுத்த அரசு முடிவு செய்துள்ளதா?

(இ) ஆம் எனில், எப்பொழுது முதல் ஆரம்பிக்கப்படும்?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.



1973 மார்ச் 5]

**திரு. த. சோனையா :** தலைவர் அவர்களே, இந்த வைகை அணைக் கட்டுப் பகுதிக்குப் பல்லாயிரக்கணக்கானவர்கள் யாத்திரிகர்கள் வந்து பார்த்துவிட்டு அதன் பெருமையையும் அழகையும் சிறப்பையும் பற்றிப் பேசிச் செல்கிறார்களே, அப்படிப்பட்ட இடத்திலே தமிழகத்திலே இருந்து வரும் அனைவரும் கண்டு களிக்கக் கூடிய வகையில் இனியாவது அங்கே ஒரு மிருகக் காட்சி சாலை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** பொதுப்பணித் துறையின் மூலம் சில குறிப்பிட்ட மிருகங்கள் அங்கே வைக்கப்பட்டிருக் கின்றன. வனத்துறையின் மூலமாக அங்கே மிருகக் காட்சி சாலை வைப்பதற்கு யோசனை இல்லை.

**திரு. கே. கந்தசாமி :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சோனையா அவர்கள் குறிப்பிட்டதைப்போன்று, தமிழகத்தின் தென் பகுதியில் சிறப்பாக அமைந்திருக்கின்ற வைகை அணைக்கட்டில் பல்லாயிரக்கணக்கான மக்கள், வருஷ நாடு போன்ற பகுதிகளிலிருந்தெல்லாம் வருகின்ற மக்கள் மிருகக் காட்சி சாலையைக் கண்டு களிக்கின்ற வாய்ப்பு ஏற்படுமே. அந்த வசதியைச் செய்து கொடுப்பதற்கு அரசாங்கம் தயக்கம் காட்டுவது ஏன் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, இப்பொழுது மாநிலத்திலே இருக்கின்ற ஒரேயொரு மிருகக்காட்சி சாலை சென்னையிலே இருக்கிறது. அதைச் சென்னைக்கு அருகில் எங்கேயாவது மாற்ற வேண்டுமென்ற ஆலோசனை நடந்துகொண்டு இருக்கிறது. அது முடிந்தபிறகு பிறிதொரு மிருகக்காட்சி சாலையைப்பற்றி யோசிக்கலாம்.

**திரு. கா. வேழவேந்தன் :** துணைத் தலைவரவர்களே, இந்த வைகை அணைப் பகுதியில் காட்டிலாக்காவின் சார்பில் நல்ல பறவைகளைப் பதனப்படுத்தி அழகான காட்சியாக அமைக்கப் பட்டிருக்கிறது. அதை ஏராளமான மக்கள் பார்க்கிறார்களா என்பது ஐயப்பாடாக இருக்கிறது. அது தலைநகரத்தில் அமைக்கப் பட்டால் ஏராளமானவர்கள் பார்த்து மகிழ முடியும். ஆகவே, அண்ணா சமாதிக்குப் பக்கத்தில் அம்மாதிரியான காட்சியைப்

[1973 மார்ச் 5

அமைக்க உரிய நடவடிக்கையை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, தென் மாவட்டங்களிலே, ஒரு வனப்பயிற்சிப் பள்ளி இருக்கிறது. அந்தப் பயிற்சியாளர்களுக்குப் பொருள்கள் தேவைப்படுவதால் அதையொட்டி ஒரு சிறிய பொருட்காட்சி சாலை வைக்கப்பட்டிருக்கிறது. அதனைப் பார்க்க வருகின்றவர்கள் எந்தக் கட்டணமும் இல்லாமல் அதைப் பார்ப்பதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள். பிறிதொரு பொருட்காட்சியைப்பற்றி இப்பொழுது குறிப்புகள் இல்லை.

**திரு. த. சோணையா :** தலைவரவர்களே, அந்த வைகை அணைக்கட்டில் பெரிய மிருகக் காட்சி சாலையை வைக்காவிட்டாலும், ஒரு சில மிருகங்களைக் கொண்டு, சிறிய சிறிய மிருகங்கள் இருக்கின்றன, அதையெல்லாம் வைத்து சிறிய மிருகக்காட்சி சாலையாவது அமைப்பதற்கு அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, சிறிய மிருகக்காட்சி சாலை என்றால் என்னென்ன என்பதற்குப் பட்டியல் தரட்டும். அதற்குப் பிறகு யோசிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சிறிய மிருகக்காட்சி சாலை என்றால் சிறிய சிங்கம், சிறிய புலியைக் கொண்டா அமைப்பது ?

### *Madras-Tirupathy buses*

* 247 *Q.*—Thiru S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to introduce smaller buses in Madras–Tirupathy route; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன் :** (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.



1973 மார்ச் 5]

**திரு. த. சோணையா :** தலைவரவர்களே, சென்னைக்கும் திருப்பதிக்கும் துரித வண்டிகளை விடுவது இப்பொழுது இல்லை என்றாலும், சென்னைக்கும் திருப்பதிக்கும் ஏராளமான பக்தர்கள். பல்லாயிரக்கணக்கான பக்தர்கள், ஏன் லட்சோப லட்சம் மக்கள் சென்று வருவதால் அங்கே துரித வண்டிகளை விடுவதன் மூலம் வருவாயும் கிடைக்கும், வசதிகளும் ஏற்படும். ஆகவே இந்த இரண்டையும் மனத்திற்கொண்டு அந்த வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, இந்தக் கேள்வி சென்னையிலேயிருந்து கீழ் திருப்பதி வரையிலேயும் செல்லுகின்ற பஸ்கள் திருப்பதி மலைமேலும் செல்லக்கூடிய அளவில் சிறிய பேருந்துகளாக விடப்படுமா என்பது மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவித்ததைப்போல், பல்லாயிரக்கணக்கான மக்கள், ஏன் லட்சக்கணக்கான மக்கள் செல்ல நம்முடைய அரசின் சார்பிலே 6 பஸ்களும், ஆந்திர அரசின் சார்பிலே 6 பஸ்களும் ஆக 12 பஸ்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன.

**திரு. கே. கந்தசாமி :** தலைவரவர்களே, திருப்பதி கோயிலுக்கு யாத்திரை செல்லக்கூடியவர்கள் இன்னும் அதிகமாக ஆக வேண்டும். அப்படிச் செல்லுகின்றவர்கள் போதிய போக்குவரத்து வசதியின்மையால் கஷ்டப்படுகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? அப்படித் தெரிந்த பிறகும் சிறிய பஸ்களை விடுவதில் என்ன கஷ்டம் இருக்கிறது? ஏன் அதை விரைவில் விடக்கூடாது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, சிறிய பஸ்கள் விடுவதாலே போதுமான பயணிகள் செல்வதற்கு வாய்ப்பு ஏற்படுவதில்லை. ஆகவே, சாதாரணமாக பெரிய பேருந்துகளே திருப்பதிக்குச் செல்ல வேண்டுமென்று ஏற்பாடு செய்திருக்கிறோம். திருப்பதி தேவஸ்தானத்தைப் பொறுத்தவரையில் மலையிலே அவர்கள் ஏற்றிச் செல்கிறார்கள். ஆனால் ஆந்திரப் பிரதேசத்தின் போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் இந்த பஸ்கள் நேராகச் செல்வதற்கு ஏற்பாடு செய்து வருவதாக என்னிடத்திலே கொஞ்ச நாட்களுக்கு முன்னால், அதாவது முல்கி போராட்டம் நடப்பதற்கு முன்னால் சொன்னார்கள். இன்னொரு வழிப்பாதை தயாராக இருப்பதால் ஒருவழிப்பாதைக்கு ஏற்பாடு

செய்தால், இந்தப் பெரிய பேருந்துகள் திருப்பதி திருமலை வரையில் செல்வதற்கு வாய்ப்பு வசதிகள் ஏற்படும். அந்த வகையில் அரசு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, may I know whether the proposal to introduce a bus route from Thirupathi to Bangalore via Hosur will be expedited?

THE HON. THIRU S. RAMACHANDRAN : As such I have no information; but I think there is such a proposal with the Government.

**திரு. எஸ். வடிவேல் :** தலைவரவர்களே, இப்பொழுது 6 பஸ்கள் ஓடுகின்றன என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். ஒரு பஸ்ஸுக்கு சராசரி வருவாய் எவ்வளவு என்பதை அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, அந்த விவரங்கள் என்னிடத்திலே இல்லை. ஆனால் இலாபத்திலே ஓடுகிறது.

### நகரப் பேருந்துகளில் குறட்பாக்கள்

* 248 வினா—**புலவர் சி. பழனிச்சாமி :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகரப் பேருந்துகள் சிலவற்றில் எழுதப்பட்டுள்ள திருக்குறட்பாக்கள் பிழையாக எழுதப்பட்டுள்ளன என்பது அரசுக்குத் தெரியுமா?

(இ) ஆம் எனில், அவைகளைத் திருத்துவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) & (இ) சில அச்சுப் பிழைகள் துறையின் நாட்டத்திற்குக் கொண்டு வரப்பட்டன. இப்பிழைகள் திருத்தப் பட்டு குறட்பாக்கள் மீண்டும் அச்சிடப்பட்டன.

**புலவர் சி. பழனிச்சாமி :** தலைவரவர்களே, வண்ணாரப்பேட்டை பணிமனையைச் சேர்ந்த நகரப்பேருந்து ஒன்றில், “ இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல் ” என்ற





குறட்பாவில், ‘ நன்னயம் ’ என்ற சொல்லிற்குப் பதிலாக ‘ தன்னயம் ’ என்று எழுதியிருக்கிறார்கள். இது மட்டுமல்லாமல், வேறு சில பேருந்துகளிலேயும் இப்படிப்பட்ட குறட்பாக்கள் பிழைபட எழுதப்பட்டிருப்பதைப் நான் கண்டேன். ஆகவே, நாட்டிலே நம்முடைய அரசுக்குச் சொந்தமான எல்லாப் பேருந்துகளிலேயும் இருக்கின்ற குறட்பாக்களைச் சரி செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களைப் போன்ற புலவர்கள் இத்தகைய எழுத்துப் பிழைகளைப் பார்க்கும் பொழுது அரசின் கவனத்திற்குக் கொண்டுவருவது மிகுந்த உதவி செய்வதாகும். இந்த வகையிலே ஓரிரு எழுத்துப் பிழைகள் ஆங்காங்கு இருக்கின்றன. அவைகள் கவனத்திற்கு வந்தவுடனே அவைகளெல்லாம் திருத்தியமைக்கப்படுகின்றன. அதோடு மட்டுமல்லாமல். திருக்குறளை சரி பார்க்கின்ற வகையிலே அவர்களுக்கு உத்தரவும் இடப்பட்டிருக்கிறது.

**திரு. கா. வேழவேந்தன் :** துணைத் தலைவரவர்களே, திருக்குறளைப் பேருந்துகளில் எழுதியதன் வாயிலாக பள்ளிக் கூடங்களின் பக்கம் திரும்பாதவர்கள் கூட திருக்குறளைப் படிப்பதற்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. அதைப்போல, பயணிகளுக்கு அளிக்கப்படுகின்ற டிக்கெட்டுகளின் பின்புறத்தில் பல்வேறு குறள்களை அச்சிட்டுக் கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, அத்தகைய உத்தேசம் எதுவும் இப்பொழுது இல்லை.

**திரு. கே. ஏ. வகாப் :** தலைவரவர்களே, அரசுப் பேருந்துகளிலே எழுதப்பட்டிருக்கின்ற இந்தத் திருக்குறளுக்கு மேலாக சுவாமி படங்களைக் கண்ணாடி போட்டு திருப்பதி வெங்கடாசலபதி படங்களைக் கண்ணாடி போட்டு அதன் மேல் மாட்டி, காலையிலே அரசுப் பஸ்களை எடுக்கும்பொழுது பூசை போட்டு எடுக்கிறார்கள். பூசை போட்டு எடுப்பதற்குப் பதிலாக காலையிலே எடுக்கும் பொழுது பஸ்களைச் சுத்தம் செய்து எடுக்க வேண்டுமென்று ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1973 மார்ச் 5

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் திருக்குறள் நல்லமுறையிலே எழுதியிருக்க வேண்டுமென்று, அது பயணிகளுக்கும், அதைப் போலவே ஓட்டுநர்களுக்கும் தெரிகிற வகையில் அமைய வேண்டுமென்று எடுத்துச் சொல்லியிருக்கிறோம். ஆனால் அதற்குமேல் தனிப்பட்ட முறையிலே சிலபேர் படங்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றால், அது பணியாற்றுகின்ற தொழிலாளர்களிலே இன்னும் சிலபேர் அந்த நம்பிக்கையிலே தங்களை ஆட்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதைக் காட்டுகிறது. ஆனால் அதுவும் கூடாது என்பதுதான் அரசின் கொள்கை. இந்த இருபதாம் நூற்றாண்டுக் காலத்திலும்கூட இன்னும் சுவாமி படங்களை வைத்துப் பூசைபோட்டுக் கொண்டிருப்பது எந்தவிதத்திலே உகந்தது என்பதை பகுத்தறிவோடு தொழிலாளர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று இந்தச் சமயத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. மே. சி. தூயமணி :** தலைவரவர்களே, அரசாங்கப் பேருந்துகளில் ஒருபுறத்தில் திருக்குறள் எழுதப்பட்டிருப்பதைப் போன்று மீதமிருக்கும் மூன்று புறங்களிலேயும் அண்ணாவின் பொன் மொழிகளையும், காந்தியாரின் பொன் மொழிகளையும் பொறிக்கின்ற உத்தேசம் அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே. அண்ணாவின் பொன்மொழிகளையும், காந்தியடிகளின் பொன் மொழிகளையும் இப்பொழுது பஸ்களிலே பொறிப்பதாக உத்தேசம் இல்லை. ஆனால் உறுப்பினர்கள் அதை பஸ்களிலே பொறிக்க வேண்டுமென்று சொல்வதைவிட, இதயங்களிலே தாங்கிக் கொள்வது மேலானது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** சார், பஸ்களிலே திருக்குறளை எழுதுவதற்கு எவ்வளவு செலவாயிற்று? அதைச் சரிபார்ப்பதற்கு எவ்வளவு செலவாகும் என்பதை அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, அறிவுப் பணியைச் செய்வதற்கு வரவு-செலவுக் கணக்குப் பார்ப்பது கிடையாது.



1973 மார்ச் 5]

**திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் :** தலைவரவர்களே, இந்த அரசுப் பஸ்களில் திருக்குறள் எழுதியிருப்பதைப்போன்று, பி.ஆர்.சி., சேரன் போக்குவரத்து, சோழன் போக்குவரத்துக் கழகங்களைச் சேர்ந்த பஸ்களிலும் இப்படிப்பட்ட திருக்குறளை எழுதுவதற்கு அரசு ஆணை பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன யோசனை அந்தப் போக்குவரத்துக் கழகங்களுக்கும் அனுப்பி வைக்கப்படும். மு.ப 9–30

**திரு. ஆர். கோவிந்தராசன் :** சோழா, பல்லவா போக்குவரத்து பேருந்துகளில் ஓட்டுநர் பின்னால் ஒரு பலகையை வைத்து ஓட்டுநர் ஒருவரின் பெயரை எழுதி வைத்திருக்கிறார்கள். சில நேரங்களில் ஓட்டுநர் மாற்றப்படும் போது பெயரும் மாற்றப்படுகிறதா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** ஓட்டுநர் மாறும் போது பெயரும் மாறும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் என்னைவிட நன்றாக அறிவார்கள்.

**திரு. நா. வீராசாமி :** பஸ்களில் எழுதப்பட்டிருக்கும் திருக்குறளுக்குப் பொருள் தெரியாத பலபேர் வெளியே மேடைகளில் நாம் செய்யும் செலவைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்தக் குறளின் பொருளை எழுத அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இதிலே 'பொருள்' என்பது இருவகையிலும் பொருத்தமாக இருக்கிறது. இதிலே பொருட் செலவைப் பற்றிக் கவலைப்படுவதை விட திருக்குறள் எழுதுவதைச் சிறந்த பெரும் பொருளாகக் கொள்ளுவதுதான் சாலச் சிறந்தது.

**திரு. எஸ். வடிவேல் :** பேருந்துகளில் திருக்குறள் பொறிக்கப்பட்டிருப்பது போல் பாரதியார், பாரதிதாசன் பாக்களையும் பொறிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பேருந்தில் உலகப் பொது மறையாகிய திருக்குறளை எடுத்து எழுதுவதன் மூலம் அதிலே எல்லாக் கருத்துக்களும் அடங்கியிருக்கின்றன என்ற

அடிப்படைக் கொள்கையை ஏற்றுக் கொள்ள வேண்டும். அதற்கு மேல் பாரதியார், பாரதிதாசன், மற்றப் புலவர்கள் கவிதைகளை எழுதுவோமானால் பஸ்கள் பஸ்களாக இருக்காது, பள்ளிக்கூட அறைகளாக மாறிவிடும் என்பதை மறந்துவிடக் கூடாது.

திரு. கோ. இளங்கோவன் : பேருந்துகளில் எழுதப்படுகின்ற குறட்பாக்கள் தெரிந்தெடுக்கப்படுகின்றனவா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** ஒவ்வொரு குறளும் மணியான குறள்கள். அதிலே தெரிந்தெடுக்க அவசியமில்லை.

திரு. த. சோலையா : நகர பஸ்களில் திருக்குறள் எழுதியதால் ஆன செலவு அதிகமா அல்லது அதைப் படித்துப் பயன் பெற்ற மக்கள் பலன் அதிகமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இந்தக் கேள்வி பஸ் பயணிகளைப் பொறுத்தது. அவர்கள் எவ்வளவு அதிகமாக இருக்கிறார்களோ அதைப் பொறுத்தது.

திரு. ஆ. பரந்தாமன் : இரவு நேரங்களில் இந்தக் குறள்கள் சரியாகத் தெரிவதில்லை, இதற்காக விளக்குப் போட அரசு முயற்சிக்குமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பகல் நேரங்களில் படித்துப் பயன் பெற்றாலே போதுமானது.

திரு. எம். சுரேந்திரன் : திருக்குறள் எழுதுகின்ற கணக்குப் பார்ப்பது நல்லதல்ல என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அரசாங்கம் செய்கின்ற ஒவ்வொரு காரியத்தையும் கணக்குப் பார்த்துச் செய்வதுதான் சரியானது. செய்யப்பட்ட காரியத்திற்கு எவ்வளவு பலன் வந்திருக்கிறது. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கேள்வியாகப் போடுங்கள்.

திரு. எம். சுரேந்திரன் : அதை மறுபடியும் விரிவுபடுத்துவது பற்றி யோசிக்கப்பட்டிருக்கிறதா ? எந்த முறையில் இது மக்களுக்கு எவ்வளவு தூரம் பயன்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் பரிசீலித்தார்களா ? அந்த இடத்தில்





சாமிகளின் படத்தை வைத்திருப்பது தனியாருடைய உணர்வு என்றாலும் அது பகுத்தறிவற்ற செயல் என்று கூறினார்கள். கோவிலில். . . (மணியடிக்கப்பட்டது)

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பேருந்துகளில் திருக்குறளை எழுதியுள்ளதன் மூலம் பலன் கிடைத்திருக்கிறதா இல்லையா என்பதை என்னைவிட அதிலே பயணம் செய்வதற்கு அதிக வாய்ப்புப் பெற்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும். செலவு செய்வதற்கு எல்லாம் நிச்சயமாகக் கணக்கு உண்டு. கல்வித் துறையில் நாம் 100 கோடி ரூபாய் செலவு செய்கிறோம், அதனால் என்ன வருமானம் என்று கணக்குப் பார்ப்பதில்லை. இவை எல்லாம் சமூக நன்மைக்காக சமுதாயத்திற்குச் செய்ய வேண்டிய அறிவுப் பணிகள் ஆகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதை விரிவுபடுத்த வேண்டுமென்ற கருத்தை எடுத்துச் சொன்னதற்காக வரவேற்கிறேன். தனிப்பட்ட முறையில் ஆண்டவனுடைய படங்கள் அரசாங்கப் பேருந்துகளில் இருப்பது சரியல்ல என்ற வகையில் அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்கும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, Tirukurral has been translated in the Telugu language also. So in addition to Tamil couplets, if Telugu couplets are also written, thousands of non-Tamils who do not know the Tamil language can understand the greatness of Tirukurral. So, may I know whether orders will be issued in that regard?

THE HON. THIRU S. RAMACHANDRAN : Sir, I entirely agree with the suggestion of the hon. Member. Such of those buses which are used predominantly by the people of the other mother-tongue, will really have a translation of Tirukural in their own mother-tongue.

திரு. ஜே. ஜேம்ஸ் : அரசாங்க அலுவலகங்களில் சாமி படங்களை மாற்றியது போல் அமைச்சர்களின் படங்களையும் மாற்றி அந்த இடத்தில் திருக்குறளை எழுதி வைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இப்போதெல்லாம் அவர்களுக்கு மத்திய சர்க்கார், மாநில சர்க்காரில் இருக்கிற

அமைச்சர்கள் பட்டத்தை மாற்ற வேண்டுமென்பதிலே அவசியமான அக்கறை ஏற்பட்டிருக்கிறது என்பதை உணருகிறேன். அதை மாற்ற வேண்டுமென்ற அவசியம் எழவில்லை.

**திரு. நா. வீராசாமி :** பஸ்களில் எழுதப்பட்டிருக்கும் திருக்குறளில் அறம் இருக்கிறது, பொருள் இருக்கிறது. ஆனால் இன்பம் இல்லை. அதை அமைச்சர் அவர்கள் சேர்ப்பார்களா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இன்பம் இல்லையென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எப்படிச் சொல்லுகிறார்கள் என்று தெரியவில்லை. ஒருவேளை பஸ்ஸில் போவதில் அந்த இன்பம் இருக்கலாம்.

### *Advocates for State Transport Department*

* 249 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether any panel of Advocates have been appointed for the Transport Department;

(*b*) if so, the details thereof; and

(*c*) the basis of making the selection?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) ஆம்.

(ஆ) & (இ) அரசு விருப்பத்தின் பேரில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறைக்குச் சட்ட ஆலோசகர்களாக கீழ்க் காணும் வழக்குரைஞர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் :—

1. திரு. எஸ். கே. ராஜவேலு
2. திரு. எஸ். அமீர் அலிஜின்னு
3. திரு. அப்துல் ரஹிமான் கான்
4. திரு. ராபர்ட் செல்லையா
5. திரு. ஆர். பாலசுப்பிரமணியன்
6. திரு. வி. பி. ஸ்ரீக்காராமன்
7. திரு. ஜே. ஜே. ஜேசுதாசன்.

**திரு. ச. சங்குமுத்து தேவர் :** இதிலே இருப்பவர்களுக்கு ஊதியம் கொடுக்கப்படுகிறதா ?



**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாதம் ஒன்றுக்கு 250 ரூபாய் வீதம் அவர்களுக்கு ஊதியம் தரப்படுகிறது. ஓராண்டுக் காலத்திற்கு அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** இத்தனை வழக்கறிஞர்களும் எப்போது நியமிக்கப்பட்டார்கள் ? இதற்கு முன்னதாக எத்தனை வழக்கறிஞர்கள் இருந்தார்கள் ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பொதுவாக, நாம் பஸ்களைத் தேசியமயமாக்கியபோது, ஏற்கனவே கொண்டு வந்த போது, ஏராளமான வழக்குகள் உயர்நீதி மன்றத்திலும், எஸ்.டி.ஏ. விலும் தொடர்ந்த காரணத்தால் ஒரு வழக்கறிஞர் போதாது என்ற அடிப்படையில் கடந்த ஆண்டு பேனல் ஆப் அட்வகேட்ஸ் ஆக ஐந்தாறு பேரை நியமிக்கலாம் என்ற கருத்துக்கேற்ப வழக்கறிஞர்கள் நியமனம் செய்யப்பட்டார்கள். டிசம்பர் 12, 1971-ல் இருந்து நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த ஓராண்டு இதோடு முடிகிறது. இப்போது எல்லா பஸ்களையும் தேசிய மயமாக்குகின்ற வேறு சட்டம் கொண்டு வந்திருப்பதால் இனிமேல் இவ்வளவு வழக்கறிஞர்கள் தேவைப்படமாட்டார்கள் என்று இந்த ஆண்டோடு இந்தப் பட்டியல் தேவையில்லை என்ற கருத்தில் அரசாங்கம் விரைவில் முடிவு செய்யும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இவர்களுக்கு மாதம் ரூ. 250 என்பதைத் தவிர தனியாக பப்ளிக் ப்ராசிக்யூட்டருக்குக் கொடுப்பது போல் வழக்குகளுக்கு என்று தனியான தொகை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா ? அப்படி இருந்தால் விவரங்களை அமைச்சர் அவர்கள் கொடுப்பார்களா ? இந்த ஆறு வழக்கறிஞர்களுக்கும் என்ன செலவாகியிருக்கிறது ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** ஆறு அல்ல ; இந்த ஏழு வழக்கறிஞர்களுக்கும் மாதம் 250 ரூபாய் வீதம் 21,000 ரூபாய் ஓர் ஆண்டுக்குச் செலவாகியிருக்கும். அதோடு மட்டுமல்லாமல் அவர்கள் வழக்குகளுக்கு ஆஜராவார்களானால் அதைப் பொறுத்தும் ஊதியத் தொகை கொடுக்கிறார்கள்.

**திரு. சோ. அழகர்சாமி :** அரசுப் போக்குவரத்துத் துறைக்கு வழக்கறிஞர்கள் நியமிக்கப்படுவதாகச் சொன்னார்கள். அதே போல் பாண்டியா போக்குவரத்து, பல்லவா, சேரா, சோழ

[1973 மார்ச் 5

போக்குவரத்துகளிலும் தனித் தனியாக வழக்கறிஞர்கள் நியமிக்கப்படுவார்களா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இதைப் பற்றி மிகத் தீவிரமாகப் பரிசீலித்து முழுநேர வழக்கறிஞர்கள் யாரும் போக்குவரத்துத் துறைக்குத் தேவையில்லை என்று முடிவு எடுக்கப்படுகிறது. ஆகவே, இந்தப் போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்தவரை வழக்குகளுக்கு ஏற்ப அவ்வப்போது வழக்கறிஞர்களை நியமித்துக் கொள்ளலாம். ஆகவே, சேரன், சோழன், பாண்டியன், பல்லவன், ஆகிய போக்குவரத்துக் கழகங்களில் நிரந்தரமாக யாரையும் வைத்துக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. அரசாங்கப் போக்குவரத்துத் துறையைப் பொறுத்தவரை இந்த ஓராண்டுக்கு இருப்பார்கள் என்று உத்தரவு போட்டுவிட்ட காரணத்தால் அந்தக் காலம் முடியும்வரை வைத்துக் கொள்ளப்படுவார்கள். அதற்குப் பிறகு இங்கும் அதே முறைதான் பின்பற்றப்படும்.

**திரு. கே. ஏ. வகாப் :** அரசு பஸ்களில் பிரயாணம் செய்யும்போது எங்கேயாவது விபத்து ஏற்படும்போது பிரயாணிகள் இறந்துவிட்டால் அல்லது கை, கால்கள் இழந்துவிட்டால் அவர்களுக்கு அரசுச் சார்பில் இழப்பீடு ஏதாவது கொடுக்கப்படுகிறதா ? அப்படியானுல் எந்த அடிப்படையில் கொடுக்கப்படுகிறது ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** அவர்களுக்கு நஷ்டஈடு தரவேண்டுமென்ற அடிப்படையில் நஷ்டஈடு தரப்படுகிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** சேர, சோழ, பாண்டிய கார்ப்பரேஷன்களில் எல்லாம் அவரவர்கள் போதுமான வக்கீல்களை வைத்துக்கொள்ளலாம் என்று சொல்லப்படுகிறதே, அதிலும் ஏதாவது ஒரு பானல் ஆஃப் அட்வொக்கேட்ஸ் என்று தயார் செய்து கொடுத்துவிட்டு அதிலிருந்து வைக்கவேண்டுமென்று சொல்கிருர்களா அல்லது அவர்கள் விருப்பப்படி வக்கீல்களை வைத்துக்கொள்ள அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** அவர்கள் விருப்பப்படி வழக்குகளினுடைய நிலைமை, தரத்திற்கேற்ப வழக்குரைஞர்களை நியமித்துக் கொள்ளலாம். தனிப்பட்டியல் எதுவும் கிடையாது.



1973 மார்ச் 5]

**திரு. அ. தேவேந்திரன் :** நாட்டுடைமையாக்குகிற சட்டம் கொண்டுவந்ததற்குப் பின்னுல் எஸ்.டி.ஏ. ட்ரிப்யூனல் இப்போது செயல்படுகிறதா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** நாட்டுடைமையாக்குகிற சட்டம் இன்னும் உயர்நீதிமன்றத்தில் இருக்கிற காரணத்தால் இப்போது எந்தவிதமான மாற்றத்தையும் நாம் மேற்கொள்ளவில்லை. ஆனுல் நாட்டுடைமையாக்கப்பட்ட சட்டம் செல்லும் என்ற நிலைமை வந்துவிட்ட பிறகு எஸ்.டி.ஏ.டி-க்கு நிச்சயமாக வேலை இல்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இந்த எம்.ஏ.ஸி.பி. கேஸ்கள், க்ளெய்ம்ஸ் ட்ரிப்யூனலுக்கு ஆஜராகும் வக்கீல்களுக்கு பீஸ் நிர்ணயம் செய்து அரசாங்கத்திலிருந்து இந்த வழக்குரைஞர்களுக்கு எவ்வளவு பீஸ் கொடுக்க வேண்டுமென்று ஏதாவது நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறதா? அப்படி இருந்தால் அதன் விவரத்தை வெளியிடுவார்களா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** அத்தகைய வழக்குகளை அவர்கள் எடுத்து நடத்தவேண்டுமென்று விதி இருக்கிறது. ஆனுல் எவ்வளவு தொகை தரப்படுகிறது என்ற விவரம் என்னிடத்தில் இல்லை.

**திரு. எம். சுரேந்திரன் :** பஸ் விபத்து ஏற்படுகின்ற பிரயாணிகளுக்கு அவர்கள் நஷ்டஈடு பெறுவதற்கு உதவி செய்வதற்கு இந்த வழக்குரைஞர்கள் உதவுவார்களா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** அவர்கள் உதவி பெறப்படுகிறது.

**திரு. த. சோணையா :** அரசுப் போக்குவரத்துத் துறைக்கு வழக்குரைஞர்கள் குழு இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள். அந்த வழக்குரைஞர்களின் பெயர்களை வாசித்ததில் அவ்வளவும் ஆண்கள் பெயர்களாக இருந்தது, இப்போது பெண்கள் எல்லாம் வழக்குரைஞர்களாக வந்திருக்கிருர்கள். அப்படி பெண்கள் யாராவது மனு செய்தால் அவர்களை இந்த வழக்குரைஞர்கள் குழுவில் சேர்த்துக் கொள்ள அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1973 மார்ச் 5

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** வழக்குகள் கூடியிருக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அதனால் வழக்குரைஞர்கள் கூடியிருக்கிறார்கள். மேலும் வழக்குகள் கூடி வேண்டிய பெண் வழக்குரைஞர்களை நியமிக்க வேண்டும் என்ற கருத்து அரசாங்கத்திற்கு இல்லை.

### பணியின் போது இயற்கையெய்தும் அரசு ஊழியர்கள்

* 250 வினா—**திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) என்.ஜி.ஓக்கள் காலமானால் அவர்கள் உடலை குடும்பத்தார் விரும்பும் ஊருக்கு அரசாங்க செலவிலேயே அனுப்ப அரசு உத்தரவிட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) ஆம்.

(ஆ) பணியிலிருக்கும் அரசு ஊழியர் காலமானால் அவரது உடலை அவரது குடும்பத்தார் விருப்பப்படி அவர் வசித்த இடத்திற்கோ, இடுகாட்டிற்கோ அல்லது சொந்த ஊருக்கோ அரசு செலவில் எடுத்துச் செல்லவும், இதற்காக அரசு வாகனங்களைப் பயன்படுத்தவும், அரசு வாகனங்கள் கிடைக்காத நேரத்தில், அரசு செலவில் வாடகை வண்டி அமர்த்திக் கொள்ளவும் ஆணையிடப் பட்டுள்ளது.

**திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் :** இதன்படி 1972-73-ம் ஆண்டில் எவ்வளவு நபர்களுக்கு இப்படிப்பட்ட உதவி செய்யப்பட்டது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** நல்லவேளையாக இது வரையில் அத்தகைய உதவி ஒன்றும் செய்வதற்கு ஏற்ற வாய்ப்பு வரவில்லை.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** சில நேரங்களில் பயணிகள் வெளியூர் சென்றிருக்கும்போது அகால மரணம் அடைந்து



1973 மார்ச் 5]

விடுகிறார்கள். அவர்களது சடலங்களை சொந்த ஊருக்கு எடுத்துச் செல்ல வேண்டியிருக்கிறது. இதற்காக மாவட்டந்தோறும் பயணிகள் விடுதிகளில் அரசாங்க வான்களை, சவங்களை எடுத்துச் செல்வதற்குத் தகுதியான வான்களை தயாராக வைத்திருக்கும் முறை ஏற்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இந்தக் கேள்வி அரசாங்கச் சிப்பந்திகள் பற்றியது. அவர்களது பணிக் காலத்தில் அவர்கள் இறந்து விடுவார்களேயானால் அந்தச் சவத்தை எடுத்துச் செல்வதற்கு அவர்கள் குடும்பத்தினர் மிகவும் கஷ்டப்படவேண்டியிருக்கிறது என்ற காரணத்தினால் அரசாங்கம் தனது சொந்தச் செலவில் அந்தச் சவத்தை குடும்பத்தாரிடத்தில் கொண்டுபோய் கொடுக்கவேண்டும் என்ற கொள்கை அடிப்படையில் எடுக்கப் பட்டது. மற்றபடி மற்றயிடங்களில் உறுப்பினர்கள் அவர்கள் கூறியபடி நிலைமைகள் இருக்குமானால் அதை மக்கள் நல்வாழ்வுத் துறை கவனிக்கவேண்டியிருக்கும், போக்குவரத்துத் துறை சம்பந்தப்பட்டதல்ல.

**திரு. கே. கந்தசாமி :** அரசு ஊழியர்கள் உத்தியோகம் பார்க்கிறபோது இறந்துவிட்டால் எடுத்துச் செல்வதற்கான வசதி பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். போலீஸ் டிப்பார்ட்மென்டைப் பொறுத்தவரையில் எனக்குத் தெரிந்தவரையில், இறந்தவரை எடுத்துச் செல்வது மாத்திரமல்லாமல் அவர்களது இறுதிச் சடங்குக்கு செலவு செய்வதற்கும் ஏறக்குறைய ரூ. 200, ரூ. 300 என்ற அளவிற்கு அந்த டிபார்ட்மென்ட் மூலம் அரசு உதவுகிறது. அதேபோல் ஏனைய அரசு ஊழியர்களுக்கும் அப்படி இலவச இறுதிச் சடங்குச் செலவிற்கு அரசாங்கமே கொடுத்து உதவுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இந்தக் கேள்வி போக்குவரத்துத் துறையில் இருந்து—உடலைக் கொண்டுபோய் கொடுப்பதற்கு போக்குவரத்துத் துறையில் இந்தச் செலவை ஈடு கட்டிக் கொள்கிறோம். இதர துறைகளில் என்னென்ன செய்கிறார்கள் என்ற விவரம் என்னிடம் இல்லை.

*[1973 மார்ச் 5*

**மணிமுத்தார் நீர்த்தேக்கத்திலிருந்து கார் பயிருக்கு நீர் வழங்கல்**

* 244 **வினா—திரு. ச. சங்குமுத்து தேவர்:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1972-ம் வருடம், ஏப்ரல் மாதம் அட்வான்ஸ் கார் பயிருக்கு மணிமுத்தார் நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீர் விடப் பட்டதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) ஆம்.

(இ) 1972-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 131 மில்லியன் கனஅடி தண்ணீரும், மே மாதம் 248 மில்லியன் கனஅடித் தண்ணீரும் அட்வான்ஸ் கார் பயிருக்காக மணிமுத்தார் நீர்த் தேக்கத்திலிருந்து விடப்பட்டது.

**திரு. ச. சங்குமுத்து தேவர் :** 1972-ம் ஆண்டு சென்ற கார் போகத்தில் மணிமுத்தாறு நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீர் விட்டதன் காரணமாக மேற்கத்திய பாசனமாகிய பெருங்கால், கன்னடியன்கால் பாசனங்கள் எல்லாம், அந்தப் பாசனங்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லாமல் அங்குள்ள விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டு பெரும் நஷ்டத்திற்கு உள்ளாகியிருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? இந்த ஆண்டில் இந்தமாதிரி நிலை ஏற்படாமல் இருப்பதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அட்வான்ஸ் கார் பயிருக்கு ஆயிரம் மில்லியன் கன அடி தண்ணீர் எடுத்துக் கொள்ளலாம் என்ற அனுமதி கொடுத்திருந்தது. அந்த அளவு தண்ணீர் தேவை இல்லை என்றும், 379 மில்லியன் கன அடி அட்வான்ஸ் கார்க்கு விடப்பட்டிருக்கிறது. உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல் எந்தவிதமான குற்றச்சாட்டும், புகாரும் வரவில்லை.

**திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் :** மணிமுத்தார் அணையில் ஐம்பது அடி தண்ணீர் ரிசர்வ் எப்போதும் இருக்க வேண்டு மென்று அரசாங்க ஜீ.ஓ. ஏதாவது உள்ளதா? அதன்படி கடைப் பிடிக்கப்பட்டுள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.



*1973 மார்ச் 5]*

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** ஜீ.ஓ.க்கள் எல்லாம் பரிசீலித்துத்தான் அந்த உத்தரவு போடப்பட்டிருக்கிறது.

**மதுரையிலுள்ள வக்பு போர்டு கல்லூரி**

* 245 **வினா—திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையில் நடைபெறும் வக்பு கல்லூரி எந்த ஆண்டு துவக்கப்பட்டது?

(இ) இக்கல்லூரி சென்னை பல்கலைக்கழகத்தின் அங்கீகாரம் பெற்றுள்ளதா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) மதுரையில் நடைபெறும் வக்பு கல்லூரி 25—7—1968 முதல் துவக்கப் பட்டது.

(இ) இக்கல்லூரி மதுரைப் பல்கலைக்கழகத்தின் அங்கீகாரம் பெற்றுள்ளது.

**திரு. கே. ஏ. வகாப் :** மதுரையில் நடைபெறும் இந்த வக்ப் கல்லூரி போதிய இடவசதியில்லாமல், கட்டட வசதியில்லாமல் இருப்பதாகச் சொல்லப்படுகிறதே, அதை விரிவுபடுத்தி மேலும் நல்லமுறையில் அமைக்க அரசாங்கம் அதிகத் தொகை ஒதுக்கி உதவி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இது அரசாங்கக் கல்லூரி அல்ல, வக்ப் போர்ட் கல்லூரி. இடவசதி இருக்கிறது. தமிழ்நாடு அரசு சுமார் இருபது ஏக்கர் நிலம் கொடுத்திருக் கிறார்கள். கட்டடம் கட்ட நன்கொடை எதிர்பார்க்கிறார்கள். உறுப்பினர்களைப் போன்றவர்கள் நன்கொடை வசூல் செய்து கொடுத்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். பாங்க் ஆஃப் மதுரை மூலம் ஐந்து லட்சம் ரூபாய் பெற்று மாணவர்கள் தங்கும் விடுதி கட்ட நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருக் கின்றன.

[1973 மார்ச் 5

**புலவர் சி. பழனிச்சாமி :** இந்த வக்ப் போர்ட் கல்லூரியில் பணியாற்றும் பேராசிரியர்களுக்கு ஊதியம் மாதாமாதம் பட்டுவாடா செய்யப்படவில்லை என்ற புகார்கள் வந்துள்ளனவா? இப்போது அது சரி செய்யப்பட்டுவிட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அப்படி ஒரு தவருன பிரசாரம் செய்து வருகிருர்கள். திரு. வகாப் அவர்கள் கேட்டுள்ள கேள்விக்கு பதில் அளிக்கப்பட்டுள்ளது, 1—7—1972 முடிய சம்பளம் கொடுக்கப்பட்டிருக்கிறது. தொடர்ந்து சம்பளம் கொடுக்கப்பட்டு வருகிறது. இந்தக் கல்லூரிபற்றி அதன் மீது ஏதாவது சொல்ல வேண்டுமென்ற முறையில் இதுபோன்ற ஒரு பிரசாரம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** இந்த வக்ப் போர்ட் நடத்தும் கல்லூரியில் எவ்வளவு முஸ்லீம் மாணவர்கள் சேர்க்கப்படவேண்டும், எவ்வளவு இந்துக்கள் எடுக்கப்படவேண்டும் என்று ஏதாவது விகிதாசாரம் வைக்கப்பட்டிருக்கிறதா? அல்லது ப்ரையாரிட்டி ஃபார் முஸ்லீம் அப்ளிகேஷன்ஸ், பின்பு இந்துக்களை எடுக்கவேண்டுமென்று ஏதாவது பாதுகாப்பு இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** விகிதாசாரம் கொடுக்கப்படவில்லை. உண்மையைச் சொல்ல வேண்டுமென்ருல் 25 சதவிகிதம் கூட முஸ்லீம் மாணவர்கள் இல்லை.

**திரு. நா. வீராசாமி :** மதுரையில் உள்ள இந்தக் கல்லூரியில் படிக்கிற மாணவர்கள் கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டு வெளியே வந்தவுடன் அவர்களுக்கு வேலை கொடுப்பதற்கு இந்த வக்ப் போர்டிலிருந்து ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இது ஒரு நல்ல கேள்விதான். ஆனல் அந்த போர்ட் மூலம் வருகிற வருமானம் அதன் செலவிற்கே தற்போது போதாமல் இருக்கிறது. அதன் சொத்துக்கள் மீது நடவடிக்கைகள் எடுத்திருக்கிருர்கள். அவை நல்லமுறையில் முடியுமானல் உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல் நடவடிக்கைகள் எடுக்க இயலும்.



1973 மார்ச் 5]

**திரு. த. சோலையா :** தலைவரவர்களே, மதுரையில் உள்ள வக்பு போர்டு கல்லூரி ஜாதி மத வேறுபாடு இன்றி அனைவருக்கும் சமத்துவம் கொடுத்து மாணவர்களைச் சேர்த்துக் கொள்கிறது. அது ஒரு நல்ல கல்லூரி என்று மதுரை மக்களாலே கருதப்படுகிற அளவுக்கு பேரும் புகழும் பெற்று இருக்கிற காரணத்தால், அரசாங்கம் விசேஷ சலுகை கொடுத்து உதவ முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு உறுப்பினரின் கேள்வி நல்ல கேள்விதான். மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் நல்ல ஒத்துழைப்பு தந்து ஆங்காங்கு நன்கொடை வசூலித்துக் கொடுத்தால் நல்ல முறையில் கட்டடங்கள் கட்டி நல்ல முறையில் அமைக்க வாய்ப்பாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கேள்வி கேட்டதற்கு நல்ல பரிசு.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க வினாக்கள் 236 & 237 இரண்டும் தள்ளி வைக்கப் படுகின்றன. வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்]

## 2. அறிவிப்பு.

### (அ) கோரிக்கை எண் 43—பொதுச் சுகாதார மூலதனச் செலவு என்பது பட்டியலில் இருந்து நீக்கப்பட்டது குறித்து.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** 3—3—1973 சனிக் கிழமையன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்கள் மானியக் கோரிக்கைகள் அறிவிப்பு பற்றி ஒரு விளக்கம் கேட்டார்கள். மானியக் கோரிக்கை எண். 43—பொதுச்சுகாதார மூலதனச் செலவு என்னும் தலைப்பிற்கு நிதி ஒதுக்கம் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றும் அதனல் அந்த மானியக் கோரிக்கைக்கு வெட்டுத் தீர்மானம் கொடுக்க இயலவில்லை என்றும் குறிப்பிட்டார். நிதித் துறைக்கு இது குறித்து எழுதி விளக்கம் கேட்டுப் பதில் கொடுப்பதாக அன்று நான் கூறினேன்.

நிதித்துறையிலிருந்து வந்துள்ள விளக்கத்தைப் பேரவைக்கு அறிவிக்கிறேன்.

மானியக் கோரிக்கை எண். 43—பொதுச் சுகாதார மூலதனச் செலவு என்னும் தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட வேண்டிய தொகை தமிழ்நாடு குடி நீர் வாரியத்திற்கு மாற்றப்பட்டுவிட்டபடியால் இந்தத் தலைப்பின்கீழ் நிதி எதும் ஒதுக்கப்படவில்லை. மானியக் கோரிக்கை எண். 43 வாக்கெடுப்பிற்கு வைக்கப்படும் பட்டியலிலிருந்து நீக்கப்படும்.

### 3. தீர்மானம்

### பேரவை உறுப்பினர் திரு. மு. பழனிச்சாமி அவர்களுக்கு விடுப்பு அளிப்பது குறித்து

**திரு. து. ப. அழகமுத்து :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, "இப்பேரவையின் வெள்ளக்கோயில் உறுப்பினர் திரு. மு. பழனிச்சாமி பேரவைக்கு வராத நாளிலிருந்து, அதாவது 1973-ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 2-ம் நாளிலிருந்து 1973-ம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31-ம் நாள் முடிய விடுப்பு அளிக்க வேண்டும்." இத்தீர்மானத்தை பேரவையின் 15-வது விதியின் கீழ் முன்மொழிகிறேன்.

**திரு. செ. கந்தப்பன் :** நான் அதை வழிமொழிகிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : It would be better if the reason is also given. Otherwise, it may become a bad precedent and other members also may take undue advantage."

**திரு. து. ப. அழகமுத்து :** விபத்துக்கு ஆளாகி அவர் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இந்த விடுப்பு பேரவையின் 15-வது விதியின் கீழ் என்று சொல்லியிருக்கிறார்கள். "அதில் such motion shall be voted upon without amendment or debate' என்று இருக்கிறது. ஆகவே, அதை நாம் விவாதிக்காமல் இருப்பது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.



### 4. 1973-74-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

**திரு. என். கே. பழனிசாமி :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த அறிக்கை இந்தச் சர்க்கார் சமர்ப்பிக்கக்கூடிய 7-வது பட்ஜெட். போன வருடம் ரூ. 441 கோடியாக இருந்த வருமானம் இந்த ஆண்டு ரூ. 465 கோடியாக இருக்கிறது. இந்த ஆண்டு 24 கோடி ரூபாய் உபரியாக வருமானம் வருகிறது. சர்க்கார் வரி போடவில்லை. எந்த விதத்தில் இந்த 24 கோடி ரூபாயை மக்கள் அதிகமாகக் கொடுத்து இருக்கிறார்கள் என்றால் அது சர்க்கார் திறமையால் வாங்கக்கூடிய பணம் என்றுதான் சொல்ல முடியும். 1973-74 வருஷத்தில் வருமானம் ரூ. 465 கோடி என்று சொன்னால், அதில் மத்திய சர்க்காரிலிருந்து வரும் பணம், ஜனங்களிடத்தில் வாங்கிய கடன் ரூ. 23 கோடி, நேஷனலைசுடு பாங்கிலிருந்து வாங்கிய கடன் ரூ. 18 கோடி, யூ.என்.ஓ. விடத்திலிருந்து வாங்கிய ரூ. 48 கோடி கடன், இவைகளெல்லாம் அதில் சேர்க்கப்படவில்லை. அப்படிச் சேர்த்தால் இந்த வருடத்தில் வருமானம் ரூ. 600 கோடிக்கு மேல் இருக்கும். 1966-67-ல் ரூ. 224 கோடியாக இருந்த வருமானம் இன்றைக்குக் கிட்டத்தட்ட மூன்று மடங்கு அதிகரித்து இருக்கிறது.

இவ்வளவு வருமானம் அதிகரித்து இருக்கிற நேரத்தில், இந்தச் சர்க்கார் பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதி, கண்ணொளி வழங்கும் நிதி போன்ற மிஸ்ஸலேனியஸ் ஆக்டிவிடீஸ் போன்றவற்றிற்கும் நிதி வசூலித்து நல்ல முறையில் செயலாற்றி வருகிறது. அதை நான் வரவேற்கிறேன். மற்றும் பங்கிங்காம் கால்வாய்ச் சீரமைப்புத் திட்டத்தையும் நான் வரவேற்றபோதிலும், மக்களை ஆகர்ஷிக்கக்கூடிய, உற்பத்தியைப் பெருக்கும் பெரிய தொழிற்சாலைகளையோ, அணைக்கட்டுத் திட்டங்களையோ இந்த அரசு ஏற்படுத்தவில்லை, இவ்வளவு பணம் வந்தும் செய்யப்படவில்லை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். உதாரணமாகச் சொல்லவேண்டுமானால், இந்த அரசு கேரளாவிலுள்ள சர்க்காரோடு கலந்து பேசி, அணுகி, மேற்குத் தொடர்ச்சி மலையில் இருக்கும் இர்ரிகேஷன் சோர்ஸ், பாசன வசதியை உபயோகித்துக் கொண்டிருக்க முடியும். அதே போன்று இன்னும் பரம்பிக்குளம்-ஆழியாறு-லோயர் பவானி போன்ற திட்டங்களையும் பூர்த்தி செய்யவில்லை. அதற்குப் பதிலாக இதுவரையில் திட்டமே

[திரு. என். கே. பழனிசாமி] [1973 மார்ச் 5

உருவாக்கப்படாத ஒரு திட்டத்தை, சென்னைக்குப் பக்கத்திலே ஒரு துணை நகரை உருவாக்குகிறேன் என்று சொல்லி அதற்காக ரூ. 2 லட்சம் ஒதுக்கி, அதற்கு 'மறைமலைநகர்' என்னும் பெயர் வைத்தாகிவிட்டது.

1966-67-ம் ஆண்டில் கைத்தறித் துணிகள் 3¼ கோடி தான் கொள்முதல் செய்யப்பட்டது என்றும், இன்றைக்கு ரூ. 8 கோடி வரை கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது என்றும் ஒப்பிட்டுக் காட்டப்பட்டிருக்கிறது. இன்று இருக்கும் நிலைமைக்கும், அன்று இருந்த நிலைமைக்கும் கணக்கிட்டுப் பார்த்தால் நிலைமைகளில் மாற்றம் அதிகம் இல்லை, பணம்தான் அதிகமாகி இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மத்திய அரசாங்கம் தமிழ் நாட்டிற்கு ஐந்தாண்டுத் திட்டத்தில் பங்கு அளித்தது, முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் 10.8 சத விகிதமாகத் தொடங்கி, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 9 சத விகிதமாக மாறி, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 7.4 சத விகிதமாகக் குறைந்து, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 4.7 சதவிகிதமாகத் தேய்ந்து விட்ட நிலை, மத்திய அரசின் மாற்றாந் தாய் மனப்போக்கைக் காட்டுகிறது என்று கூறப்பட்டிருக்கிறது. இது சரியானது தானா என்று இந்தச் சர்க்காரைக் கேட்கிறேன். உதாரணமாக, இந்த பர்சன்டேஜ்க்கு பதிலாக பணமாகப் போட்டிருந்தால் எவ்வளவு கிடைத்து இருக்கும்? முதல் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு முதலீடு குறைவாகப் போடப்பட்டது. அன்று நமக்கு அதிகமாகக் கொடுக்கப்பட்டது. இரண்டாம் திட்டத்திற்கு கொஞ்சம் அதிகமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்திற்கும் அதிகமாக ஒதுக்கி யிருக்கிறார்கள். இந்தச் சர்க்கார் கணக்குப்படி பார்த்தால் இந்த 4.7 சதவிகிதம் என்பது முதல் ஐந்தாண்டு திட்டத்திற்கு ஒதுக்கப் பட்ட தொகையைவிட அதிகமாக இருக்கும் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த மாதிரி சொல்லிவிட்டு மத்திய அரசின் மாற்றாந்தாய் மனப்பான்மை என்று சொல்வதில் அர்த்தம் இல்லை.

மத்திய சர்க்கார் எதற்கு வேண்டுமென்று கேட்டாலும் கொடுக்கிறார்கள். பஞ்ச நிவாரணம், வெள்ளத் தடுப்பு நிவாரணம் என்று 10 கோடி, 15 கோடி என்று ஒதுக்கியிருக்கிறார்கள். அதற்கு



1973 மார்ச் 5] [திரு. என். கே. பழனிசாமி]

நன்றி தெரிவித்து விட்டு, இதற்கு மாற்றாந்தாய் மனப்பான்மை என்று சொல்வது கூடாது. நாம் அதிகமாகக் கேட்டோம், அவர்கள் ஒதுக்கவில்லை, இருப்பினும் நாம் அதிகமாகச் செலவழிக்கிறோம் என்று காட்டி, மத்திய சர்க்கார் மாநில வளர்ச்சிக்குத் தடங்கலாக இருக்கிறது என்று காண்பிப்பது, அதுவும் ஒன்றுக்கு ஒன்று கம்பேர் செய்வது என்பது இந்த அரசின் அடிப்படை நோக்கமாக இருக்கிறது.

என்.ஜி.ஓக்களுக்கு ரூ. 10 கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே விலைவாசி ஏறி இருக்கக்கூடிய நேரத்தில் இந்த ரூ. 10 கையில் கொடுக்காமல் அந்தப் பணத்தை பி.எப்.பில் சேர்த்து இருக்கிறார்கள் என்றால், என்.ஜி.ஓக்கள் மாதாமாதம் அந்தப் பணத்தை பாங்கில் போடுகிறார்கள் என்று அர்த்தம். இந்தச் சபையில் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது, மத்திய சர்க்கார் சிப்பந்திகளுக்கு எந்த அளவுக்குப் பஞ்சப்படி கொடுக்கப் படுகிறதோ அந்த அளவுக்கு மாநில அரசு சிப்பந்திகளுக்கும் கொடுக்கப்படும் என்று. அந்த அடிப்படையில் இது என்ன இடைக்கால நிவாரணமா அல்லது இவ்வளவுதானா என்பது சொல்லப்படவில்லை.

வீட்டு வாடகைப்படி ஏற்கனவே சர்க்கார் 12 சதவிகிதம் கொடுத்து வருகிறார்கள். இப்போது 3 சதவிகிதம் தான் அதிகரித்து இருக்கிறார்கள். இன்றையதினம் வீட்டு வாடகை அதிகமாக இருக்கும் நேரத்தில்,—மற்ற மாவட்டங்களில் எடுத்துக் கொண்டாலும் அங்கேயும் அதிகமாக இருக்கிறது—சென்னை நகருக்கு மட்டும் இந்த நிலைமையில்லாமல் மற்ற வட்டாங்களுக்கும் இந்த வசதி தரப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குடியிருப்பு மனைகள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வாங்கித் தருவதற்காகப் பணம் ஒதுக்கியிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்த மனைகளில் இருப்பவர்கள் 30-35 வருடம் இருக்கிறார்கள். நிலப்பிரபுக்கள் போய் ஒன்றும் செய்ய முடியாது. இந்த நிலையில் சர்க்கார் தனியாக அவர்களுக்குப் பணம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நிலச்சீர்திருத்தச் சட்டம் ஒன்று கொண்டுவரப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. குத்தகைதாரர்களுக்கு பர்சேசிங் ரைட்தான் இருக்கிறது, ஆக்குபென்ஸிரைட்ஸ் கிடையாது என்று

முறையில் இருக்கிறது. பர்சேபில் ரைட் என்று சொன்னால், குத்தகைதாரர்கள் விற்கவேண்டுமென்று இருக்கிறதே தவிர மற்றவர்களுக்கு விற்கக்கூடாது என்பது சாராம்சம்.

மு.ப. 10-00 **மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** ஆக்குபன்ட்ஸ் ரைட்டுக்கும், டெனன்ட்ஸ் ரைட்டுக்கும் உள்ள வித்தியாசத்தைத் தெரிந்துதான் வைத்து இருக்கிறோம். குத்தகைதாரர்களுக்கு நிலத்தை வாங்கும் உரிமையைக் கொடுத்திருக்கிறோம். அதற்குத் தடை இல்லை. அதோடு குத்தகைதாரர்களைக் காலி செய்யும் உரிமை யாருக்கும் கிடையாது. நண்பர் பழனிசாமி அவர்கள் இதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

**திரு. என். கே. பழனிசாமி :** நிலப் பிரபுக்கள் விலைக்கு விற்க முடியாது. . .

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** நான் நண்பர் பழனிசாமி அவர்களுக்குக் கூறிக்கொள்ள விரும்புவது, கொஞ்சம் பொறுத் திருங்கள், அதற்கு எல்லாம் சட்டம் வர இருக்கிறது. அந்தச் சட்டத்தில் எல்லாப் பாதுகாப்பும் செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. என். கே. பழனிசாமி :** மேட்டூர் அலுமினியத் தொழிற் சாலையை சர்க்கார் எடுக்கப் போகிறார்கள். அதுபற்றி மத்திய அரசிடம் அனுமதி கேட்டிருக்கிறார்கள். அனுமதி வந்தபிறகு அந்த நிறுவனத்தை எடுத்துக்கொள்வதாகச் சொல்லியிருக் கிறார்கள். சமீபத்தில் மத்திய அரசாங்கம் நிலக்கரி சுரங்கங்களை எல்லாம் திடீரென்று ஒரு அவசரச் சட்டத்தின் மூலம் எடுத்துக் கொண்டார்கள். அப்படி இருந்தும் அவசரச் சட்டம் வருவதாகத் தெரிந்து, நிலக்கரி சுரங்க சொந்தக்காரர்கள் பாங்கில் இருந்த பணத்தை எல்லாம் எடுத்துவிட்டார்கள். தொழிலாளர்களுக்குச் சரியாகச் சம்பளம் கொடுக்கவில்லை. அதைப் பார்க்கும்போது, தமிழ்நாடு அரசாங்கத்தின் இந்தத் திட்டத்தினால் பயன் ஏற்படாது என்றுதான் தெரிகிறது. மத்திய அரசாங்கத்தின் அனுமதி வருவதற்குள் அந்த அலுமினியத் தொழிற்சாலையில் மிஷினரி கூட இருக்காது. 1954 ஆம் ஆண்டில் இன்டஸ்டிரியல் பாலிசி ரெசலூஷன் ஒன்று போட்டார்கள். அதுமாதிரியான ஒரு ரெசலூஷனைப் போட்டு, ஒரு அவசரச் சட்டத்தைப் பிறப்பித்து





உடனடியாக மேட்டூர் அலுமினியத் தொழிற்சாலையை எடுத்துக் கொள்ள வேண்டும்.

இந்த ஒரு தொழிற்சாலையை மட்டும் எடுத்துக்கொள்வதை நாங்கள் வரவேற்கவில்லை. இதைப்போல இன்னும் ஏழு தொழிற் சாலைகள் இருக்கின்றன. அவைகளையும் எடுத்துக்கொள்வதாக இருந்தால் எதிர்பார்க்கும் பலன் கிடைக்கும். அவைகளையும் எடுத்துக்கொண்டு, இது சம்பந்தமாக ஒரு 'டாமினன்ட் பொசிஷனை' அரசாங்கமே தன் கையில் வைத்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான் பிரயோஜனம் ஏற்படும். இந்த ஒரு தொழிற்சாலையை மட்டும் எடுத்துக்கொள்வதால் டாமினன்ட் பொசிஷன் அரசாங்கத்திற்கு இருக்காது ; தனிப்பட்டவர்களிடம் தான் இருக்கும்.

கொஞ்ச நாளைக்கு முன்னால் சக்தி பைப்ஸ் நிறுவனத்தை அரசாங்கம் எடுத்துக்கொண்டது. அது லாபகரமாக இல்லை ; ரிப்பேர் சார்ஜ் அதிகமாகிறது என்று சொல்லி, இரண்டு வருடம் கழித்து ரிப்பேர் செய்து ஒரு முதலாளிக்கே திரும்பக் கொடுத்து விட்டார்கள். அதிலே அரசாங்கத்திற்கு நஷ்டம் தான் ஏற்பட்டது. அதைப்போலதான் மேட்டூர் அலுமினியத் தொழிற்சாலையும் இருக்கும். அங்கே இன்னும் கட்டிட வேலையே சரியாகப் பூர்த்தி யாகவில்லை. இந்த நிலையில் சர்க்கார் அதை எடுத்தால், ரிப்பேர் செய்து, வேலைகளைப் பூர்த்தி செய்து பின்னால் தனிப்பட்டவர் களுக்குக் கொடுக்கவேண்டிய நிலைமை ஏற்படலாம்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** நண்பர் பழனிசாமி அவர்களிடம் இருந்து நான் ஒன்றைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். மேட்டூர் அலுமினியத் தொழிற்சாலையை தேசியமயமாக்குவதை நீங்கள் வரவேற்கிறீர்களா, இல்லையா ? நேரடியாக அதற்கு பதில் சொல்லிவிட்டால் , உங்கள் கருத்தை நாங்கள் தெரிந்து கொள்ளலாம். எங்களுக்கு மன திருப்தி இருக்கும். ஒரு ஆறுதல் இருக்கும்.

**திரு. என். கே. பழனிசாமி :** மேட்டூர் அலுமினியத் தொழிற் சாலையை மட்டும் தேசியமயமாக்கியதை நாங்கள் வரவேற்க வில்லை. இதைப்போன்ற மற்ற அலுமினிய நிறுவனங்களையும் எடுத்துக்கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** இந்தத் தொழிற்சாலையை தேசியமயமாக்கியதை நீங்கள் வரவேற்கிறீர்களா, இல்லையா என்பதைத் தெளிவாகச் சொல்லிவிடுங்கள். நீங்கள் அனுபவம் வாய்ந்த ஒரு உறுப்பினர். எங்களுக்கு ஒரு மன திருப்தி ஏற்படுவதற்காக, ஒரு ஆறுதல் கிடைப்பதற்காகக் கேட்கிறேன். நீங்கள் தேசியமயமாக்கும் கொள்கையை ஆதரிக்கிறீர்களா, இல்லையா?

**திரு. என். கே. பழனிசாமி :** தேசியமயமாக்கும் கொள்கையை நாங்கள் ஆதரிக்கிறோம் ; வரவேற்கிறோம்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பிர்லா இன்டால் கம்பெனி-இந்துஸ்தான் அலுமினியக் கம்பெனியை தேசியமயமாக்க வேண்டுமென்று அங்கே உள்ள வலதுசாரி கம்யூனிஸ்டுகள் கிளர்ச்சி செய்து வருவது மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்களுக்குத் தெரியுமா?

**திரு. க. சுப்பு :** சார், ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர். அமைச்சரவர்கள் வலதுசாரி கம்யூனிஸ்டு கட்சி என்று கூறுகிறார்கள். வலதுசாரி கம்யூனிஸ்டு கட்சி என்று ஒரு கட்சி இல்லை. எங்கள் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி என்று ஏற்கெனவே தெரிவித்திருக்கிறோம். எனவே இதுபற்றி தாங்கள் ஒரு ரூலிங் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இந்திய கம்யூனிஸ்ட் கட்சி என்று அல்ல ; உலக கம்யூனிஸ்ட் கட்சி என்றுகூட சொல்ல நான் தயார்.

**திரு. என். கே. பழனிசாமி :** மின்சார வெட்டைப்பற்றி ஏற்கெனவே இந்த சபையில் பேசியாகிவிட்டது. இந்த ஆட்சி வந்தபிறகு புதிதாக மின்சார உற்பத்திக்கு எந்தவித திட்டமும் போடப்படவில்லை. இந்த 5, 6 வருஷங்களில் மின்சார டிஸ்டிரிபியூஷனை மட்டும் அதிகமாக்கியிருக்கிறார்கள். அதனால் தான் இன்றைக்கு இந்த மின்சார நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. இன்னும் நான்கு மாதங்களுக்குள் மழை வந்தால்தான் நிலைமை சீராகும் என்று தெரிகிறது. இல்லை என்றால் இன்னும் அதிகமாகும். இப்போதே கூட இன்னும் 3 லட்சம் பம்புசெட்டுகளுக்கு



கரண்டு கொடுக்கப்படாமல இருக்கிறது. இப்போது 1,400 மெகா வாட் பற்றுக்குறை என்று சொல்லப்படுகிறது. அவர்களே இன்னும் பத்தாண்டுகளில் 3,000 மெகாவாட் அளவுக்கு பற்றுக்குறை இருக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். தூத்துக்குடியில அனல் மின்சாரத் திட்டம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டம் எப்போது முடியும் என்று தெரியவில்லை. அது சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பது தெரியவில்லை.

இன்றையதினம் உடனடியாக மின்சார நெருக்கடி தீரவேண்டுமானால் வட மாநிலங்களில்—ஜம்மு—காஷ்மீர் போன்ற இடங்களில் வட மண்டல க்ரிட் அதாவது மின் இணைப்பு செய்திருப்பதைப் போல உடனடியாக இங்கேயும் தென்மண்டல க்ரிட் ஒன்றை அமைத்துக்கொள்ள வேண்டும். அது ஒன்று தான் இப்போதைக்கு சாத்தியக்கூறாக இருக்கும். கோதையாறு திட்டத்தில் கரண்டு இல்லை. காரணம் என்னவென்றால் அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான மிஷினரி, ஸ்பேர் பார்ட்ஸ் இங்கே கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். பிரான்ஸ்க்கு போய் வந்தாகிவிட்டது. இருந்தும் வேலை நடைபெறுவதற்கான வழிவகைகள் என்ன செய்யப்பட்டிருக்கின்றன என்று தெரியவில்லை.

இப்போது மேற்கு வங்காளத்திலிருந்து நிலக்கரி 80,000 டன் வருவதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் அந்த நிலக்கரி பேசின் பிரிட்ஜ் தெர்மல் ஸ்டேஷனுக்குத்தான் பொருந்தும் என்று தெரிகிறது. எண்ணூர் அனல் மின்நிலையத்திற்கு சிங்கரேணி நிலக்கரிதான் பொருந்தும். ஆகவே வரக்கூடிய நிலக்கரியை பார்த்துக்கொண்டிருக்காமல், தொழிற்சாலைகளை நடத்துவதற்கு ஜெனரேட்டர்களை வாங்கவேண்டும். ஜெனரேட்டர்கள் வாங்க அனுமதி அளித்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதிலேயும் கொள்ளையடிப்பவர்கள் இருக்கிறார்கள். ஆகவே, தனிப்பட்டவர்களை நேரடியாக வாங்க அனுமதிக்காமல் அரசாங்கமோ அல்லது மின்சார வாரியமோ வாங்கி, அவர்களுக்கு சப்ளை செய்ய வேண்டும்.

மின்வெட்டினால் தொழிற்சாலைகள் மூடப்பட்டு, தொழிலாளர்கள் வேலையில்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் குடும்பங்கள் எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதைவிட

[திரு. என். கே. பழனிசாமி] [1973 மார்ச் 5

பெரிய அளவில் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். விவசாயத்திற்கு குறைந்தது ஒரு நாளைக்கு ஆறு மணி நேரமாவது மின்சாரம் வழங்கப்பட வேண்டும். இல்லையென்றால் உற்பத்தி பெரிதும் குறைந்துவிடும். அதனால் பெரும் பஞ்சம் ஏற்படும்.

இன்றைக்கு இருக்கக்கூடிய நிலையில் அத்தியாவசியப் பொருட்கள் உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்கும் விவசாயத்திற்கும் போதுமான அளவில் மின்சாரம் வழங்கப்படுவதற்கு வகை செய்ய வேண்டும். ஆடம்பரப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கு மின்சார விநியோகத்தையே நிறுத்தி விட்டாலும் பரவாயில்லை. மேட்டுப்பாளையத்தில் இன்டோ—ஜெர்மன் சிந்தடிக் டைமன் பாக்டரி இருக்கிறது. அங்கே தயாரிக்கப்படுவது ஆடம்பரப் பொருள்கள்தான். அதைப்போல ரெபிரிஜிரேட்டர் தயாரிக்கும் நிறுவனங்களுக்கும் மின்சாரத்தை நிறுத்தி விடலாம். அதற்காக இடைக்காலத்தில் தொழிலாளர்களுக்கு நஷ்டயீடு கொடுத்துவிட வேண்டும்.

அடுத்து கல்வி. இன்றையதினம் கல்விக்காக திட்டத்தட்ட 97 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். சென்ற ஆண்டு 84 கோடி ரூபாய் ஒதுக்கியிருந்தபோதே, நிபுணர்கள் பரிசிலனை செய்து அதனால் என்ன பிரயோஜனம் என்று கருத்து தெரிவித்திருந்தார்கள். அவ்வளவும் விரயம்தான் என்று சொன்னார்கள். ஆனால் இன்றையதினம் எல்லாக் கல்விக்குமாக 108 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதனால் என்ன பலன் கிடைக்கப் போகிறது என்று தெரியவில்லை; 105 கல்லூரிகளாக இருந்தது இன்றைக்கு 176 ஆக உயர்ந்திருக்கிறது. அதுவும் ஜாதிகளை ஒழிக்கவேண்டுமென்று சொல்லிக்கொண்டிருக்கிற இந்தக் காலத்தில் ஜாதிகளின் பெயரால் பல காலேஜ்கள் நடத்தப்படுகின்றன. அவையெல்லாம் தடுக்கப்பட வேண்டும்.

அதுமட்டுமல்ல. இன்றையதினம் சர்க்கார் 300 ஜாதிகளை சேர்த்து அவையெல்லாம் 'பாக்வேர்டு கிளாஸ்' என்று அறிவித்திருக்கிறது. அவர்கள் வசதிபடைத்தவர்களாக இருந்தாலும் கல்வித் துறையிலும் இன்னும் பல விஷயங்களிலும் அவர்களுக்கு சலுகைகள் அளிக்கப்படுகின்றன. ஆனால் அந்த அளவுக்கு பொருளாதார வசதியற்ற மற்ற ஜாதிக்காரர்களுக்கு சலுகைகள்



1973 மார்ச் 5] [திரு. என். கே. பழனிசாமி]

இல்லை. எனவே, ஜாதியைப்பற்றி பார்க்காமல் பொருளாதார அடிப்படையில், மெரிட்டைப் பார்த்து சலுகைகள் அளிக்க வேண்டும். வேண்டுமானால் அரிசனங்களுக்கு மத்திய அரசாங்கம் 18 சதவிகிதம் வேலைவாய்ப்புகளில் ஒதுக்கீடு செய்துவருவதுபோல் ஏதாவது சலுகைகள் செய்யப்படலாமே தவிர மற்றவைகள் எல்லாம் பொருளாதாரத்தின் அடிப்படையிலும், மெரிட்டின் அடிப்படையிலும்தான் இருக்கவேண்டும். ஜாதி முறையில் கொடுக்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும். ஆகவே, இந்த பட்ஜெட்டை நாங்கள் வரவேற்கவில்லை; இது ஒரு காகிதப்பூ பட்ஜெட் என்று தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

## 5. அமைச்சரின் அறிக்கை.

### பரம்பிக்குளம்—ஆளியாறு, கீழ் பவானித் திட்டப் பகுதி விவசாயிகளது கோரிக்கைகள்பற்றி பொதுப்பணித் துறை அமைச்சர் அளித்த அறிக்கை.

பரம்பிக்குளம்-ஆளியாறு, கீழ் பவானித் திட்டப் பகுதி விவசாயிகளது கோரிக்கைகள் பற்றி பொதுப்பணித் துறை அமைச்சர் அளித்த அறிக்கை.

THE HON. THIRU S. J. SADIQ PASHA: Sir, several representations were received by the Government from the M.L.As. and ryots in the Parambikulam-Aliyar Project area against the levy of penal water cess for the removal of crop restrictions, for inclusion of seepage affected lands in the Project ayacut, etc. These representations were discussed at length at the High Level Conference held at Coimbatore on 22nd January 1973 presided over by Minister (Revenue) and attended by Minister (Works) and Minister (Religious Endowment) besides all the concerned officials and the local M.Ps. and Legislators. The concessions afforded as a result of the decisions taken at the conference are briefly as follows:

*Representation No. 1.*

To cancel the penalty levied for irrigation from a sluice other than the one recognised for the lands on the ground that the ryots were not aware of the authorised sluice.

1973 மார்ச் 5] [Thiru S. J. Sadiq Pasha]

It was decided that all penalties levied for the above irregular irrigation up to 1st January 1973 be waived, that a warning notice be issued to ryots that such irregular irrigation in future will be heavily penalised and that water permits be distributed in all the cases where they have not so far been distributed, before the end of the current fasli i.e., 30th June 1973. It was also decided that the advance payment of the permit fee of Rs. 15 need not be insisted upon but be collected with the land revenue.

The total extent of lands penalised under this category is 6,158 acres and 21 cents during the faslis 1376–1380 and the amount of penalty remitted works out to 2.03 lakhs.

*Representation No. 2.*

To cancel the penalty levied on wet cultivation in the ayacut lands affected by seepage and not capable of being raised with dry crops.

It was decided that these cases be examined critically, that the penalty levied on genuinely seepage affected cases be waived and the lands included in the wet ayacut.

The extent so far localised under this category is 421.37 acres and the amount of penalty levied is about Rs. 23,000 during faslis 1379–80.

*Representation No. 3.*

To cancel penalty levied on lands not included in the ayacut but are commandable. It was decided that all penalties during fasli 1381 and earlier Faslis be waived, that for Fasli 1382, two times the normal water cess be levied and that from Fasli 1383 onwards five times the normal water cess be levied. It was also decided that the ryots be warned of the above orders well in time to dissuade them from resorting to this type of irregular irrigation in future.

The extent of non-ayacut lands so irregularly irrigated during Faslis 1376–80 is 10262 acres and the amount of penalty levied is about Rs. 3.11 lakhs which will stand fully waived.



1973 மார்ச் 5] [Thiru S. J. Sadiq Pasha]

*Representation No. 4.*

That the levy of twice the normal water cess on lands grown with two crops in a season be cancelled and that only one rate be levied in such cases.

The total extent of lands so levied with two rates is 508.42 acres and the amount of water cess levied for 2nd crop is Rs. 3,806 during Faslis 1378–80. Supply in the canal is normally allowed for 4½ months in a year and no one can raise even two short duration crops during this period. But the ryots start raising crops availing of the rain water well ahead of the opening of the canal and irrigate the crops with canal water when supply is allowed and also raise a 2nd crop. In view of the fact that the ryots should be encouraged to raise dry crops only, it was decided that the following be the liberalisation :—

(1) If the land is localised for Dry Irrigation and the farmer had raised two irrigated dry crops, water rate would be charged only for one dry crop.

(2) If the land is localised for dry irrigation and the farmer raises one irrigated dry crop and one irrigated wet crop the irrigated dry crop will be exempted from the levy of water charge and the wet crop will be charged appropriately with the penalties according to the rules.

(3) If the land is localised for dry irrigation and the farmer raises two wet crops, both the wet crops will be charged appropriate water rate and with penalties according to rules.

(4) If the land is registered as wet or registered for wet cultivation the farmer raises one wet crop and one dry crop only the wet crop will be charged with the appropriate water cess and the dry crop will be exempted from the water rate.

*Representation No. 5.*

To cancel the penalty levied on paddy crops in Parambikulam-Aliyar Project ayacut in Pollachi and Udamalpet taluks.

The total extent of lands so irregularly irrigated is about 35851 acres during faslis 1376–80 and the amount of penalty levied is of the order of Rs. 41 lakhs.

It was decided that genuinely seepage affected lands be considered for inclusion in the wet ayacut, that the remaining lands should continue to be dry crop area and that as a matter of grace, past penalties be waived or reduced on the same line as indicated under representation No. 3 and that from F. 1383 (1st July 1973) onwards penalty be levied as in the case of lands under representation No. 3.

*Representation No. 6.*

To include the non-ayacut lands lying interspersed amidst ayacut lands in the ayacut and to cancel the penalty levied on them.

The total extent of lands falling under this category during Faslis 1376–80 is 2802 acres, and the amount of penalty levied is about Rs. 50,000.

It was decided that genuine cases be included in the ayacut (wet or dry) and that in the matter of waiver and levy of penalty the same treatment accorded to the lands under representation No. 3 be adopted in these cases also.

*Representation No. 7.*

To cancel the penalty levied on coconut plantations in lands not localised for wet.

The total extent of lands falling under this category during Faslis 1378–80 is 2587 acres and the amount of penalty is Rs. 1.53 lakhs.

It was decided that all coconut plantations as on 1st January 1973 be included in the wet ayacut, that no new area will be permitted to be registered for coconut, that the penalty levied on plantations that existed as on 1st January 1973 be waived and that the position be reviewed after the lapse of a period 5 years.

*Representation No. 8.*

To levy only one-third of the normal water cess for the special release of water made for the short spell from 28th December 1968 to 27th January 1969 for coconut plantations and topes in Pollachi and Udamalpet Taluks.



It was decided to comply with the request as a special case.

The total extent of lands benefited by the special release was 4,107 acres and the amount of water cess that will be remitted by charging 1/3rd rate is nearly Rs. 83,000.

*Representation No. 9.*

To waive completely the water cess levied for the special release of water for 5 days, i.e., from 27th January 1969 to 31st January 1969 for dry crops in Pollachi and Udumalpet taluks.

It was considered that in view of the fact that the special release of water was only for 5 days and that it was also intended to relieve drinking water scarcity no water cess need be levied and that the water cess and penalty if levied be waived in full.

The total extent of lands benefited by the special release is 2,822 acres and the water cess and penalty that will be foregone will be of the order of Rs. 49,000.

It was also decided that in order to ensure speedier collection of the arrears, the benefit of the concessions mentioned above would be available only to such of those ryots who pay the entire dues on or before 30th June 1973. It was also decided that the excess collections that may accrue to ryots consequent on the waiver of penalities be adjusted towards the land revenue payable by such farmers in the current fasli and future faslis. The various amounts of penalties that will be waived as a result of these decisions during Faslis 1376–80 alone aggregate to nearly Rs. 49.44 lakhs.

*Lower Bhavani Project.*

*Representation No. 1.*

To waive the penalty levied on natural seepage affected lands during Fasli 1381 and also in other cases of irregular irrigation.

It was explained by the Collector that various types of irregular irrigation have been resorted to like lock-breaking, irrigation of non-ayacut lands, irrigation of out-of-turn fields. Seepage affected lands, etc. It was decided that cases of irregular irrigation by lock breaking, cutting open the canal bank, across bunding the channel, etc., and cases of irrigation of poramboke

lands within the prohibited distance of main, branch or supply channel be dealt with deterrently and that other cases be examined by the Collector on merits and decision taken regarding the quantum of penalty to be retained and the balance remitted.

*Representation No. 2.*

To waive the penalty levied on encroachments on small bits of poramboke lands which have been there quite for some years and also to take steps to assign them (Representation by Thiru P. A. Swaminathan, M.P).

It was decided that the maximum levy of penalty in such cases be restricted to five times the normal water cess (inclusive of 4 rates towards penalty).

*Representation No. 3.*

To excavate field bothies by the P.W.D. for blocks of ayacut lands of 25 acres and less in extent to ensure adequate supply for irrigation to the last field.

It was considered that Government should take the responsibility of acquiring necessary land and excavate field bothies and the cost thereof be recovered from the beneficiaries. It was also decided that the above general principle be made applicable to all projects.

The Government have approved of the above decisions and suggestions of the High Level Conference.

## 4. 1973-74-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஆளுங்கட்சி உறுப்பினர்கள் 7 நிமிடத்திற்குள் தங்கள் பேச்சை முடித்துக் கொள்ள வேண்டும். உங்கள் கோறடா அவர்கள் இதற்கு ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.



**திரு. பெரி. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களால் கொண்டுவரப்பட்ட 73–74 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையினைப் பாராட்டி நானும் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்கு 73–74 ஆம் ஆண்டு பத்தாயிரம் வீடுகள் கட்டுவதற்கும், தாழ்த்தப்பட்டோர், பிற்பட்டோர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் கல்லூரிகளில் படிக்கிறபோது அவர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டத்தினையும் ஏற்பாடு செய்து, இதன் மூலம் மற்ற வகுப்பு மாணவர்களுக்கு நாங்கள் எந்த வகையிலும் மட்டமானவர்கள் அல்ல என்பதை நிரூபித்துக் காட்டக்கூடிய நல்ல திட்டத்தினை உருவாக்கித் தந்திருப்பதற்காக பின்தங்கிய வகுப்பு மாணவர்கள் சார்பில் இந்த அமைச்சரவையை வாழ்த்தி, இதனைப் பாராட்டுகிறேன்.

வீட்டு வசதி திட்டத்திற்காக ரூ. 7.08 கோடி ஒதுக்கீடு செய்து நடுத்தர வகுப்பினர்கள் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்குப் பயன்படக்கூடிய வகையில் இந்தத் திட்டத்தில் இராமநாதபுரம் நடுத்தர வகுப்பினர்கள், குறைந்த வருமானம் உள்ளவர்கள் பயன்படக்கூடிய வகையில், இந்தத் திட்டம் இராமநாதபுரம் மாவட்டத்தையும் சேர்த்துக் கொண்டிருப்பதற்கு நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். அதோடு மிகவும் பின்தங்கிய பகுதியாகிய திருவாடானைப் பகுதிக்கும் இதனால் வசதி ஏற்படக் கூடிய வாய்ப்பை ஏற்படுத்தித்தர வேண்டும் என்பதாக இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் படித்த இளைஞர்களுக்கும், மற்றவர்களுக்கும் ஒரு திட்டத்தினை உருவாக்கித் தந்திருப்பதை நான் பாராட்டுகிறேன்.

நீண்ட நாட்களாக புதுக்கோட்டையை, தனி மாவட்டமாக ஆக்கவேண்டும் என்று கோரி வந்த அந்தப் பகுதி வாழ் மக்களின் கருத்தை ஏற்று அதனைத் தனி மாவட்டமாக ஆக்க நடவடிக்கை எடுத்திருப்பதை பாராட்டாமல் இருக்க முடியாது. உழைப்பவர்களுக்கே நிலம் சொந்தம் எனச் சட்டமியற்ற தமிழக அரசு முன்வந்திருப்பதை இந்த மாநிலத்தில் உள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் அனைவரும் பாராட்டுவார்கள் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் திருவாடானையில் பெரிய மருத்துவ மனை கட்ட நிலங்கள் அனைத்தும் பெற்று, மக்கள் பங்குத் தொகை கட்ட வசதி இல்லாத நிலையில் அந்த வேலை தடைபட்டு இருக்கிறது. எப்படியாவது அரசு பெருமுயற்சி செய்து அங்கே அந்த மருத்துவ மனை ஏற்பட அனைத்துதவிகளையும் செய்துதர வேண்டுமாய் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

தேவகோட்டையில் இருக்கிற 40 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனையில் எக்ஸ்ரே யூனிட் அமைத்துத் தரும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

கண்ணங்குடி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த முத்து நாடு, சிறுவாச்சி, ஆண்டாவூரணி ஆகிய கிராமங்கள் இருக்கின்றன. ஒவ்வொன்றும் 1,600-க்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட இடம். அங்கே மருத்துவ மனை இல்லாத காரணத்தினால் அவர்கள் ஏறத்தாழ 10 மைல்களுக்கு அப்பாலுள்ள தேவகோட்டைக்கு வர வேண்டியதாக இருக்கிறது. ஆகவே கண்ணங்குடி ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாக ரூரல் டிஸ்பென்சரி ஒன்றை மேற்படி கிராமங்களுக்கு அமைத்துத் தரும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன் வெள்ளையபுரத்தில் பெரும்பாலும் முஸ்லிம் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் வாழ்கிறார்கள். தற்போதுள்ள யூனியன் ரூரல் மருத்துவ மனையை அரசு மருத்துவ மனையாக ஆக்கித்தர வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்டத்தையும், தஞ்சை மாவட்டத்தையும் அறந்தாங்கி வட்டத்தின் கடற்கரையோரமாக உள்ள திருப்பள வாசல் மூலம் அங்கே ஒரு பாலத்தைக் கட்டி இணைத்துத் தரும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன். இதனால் கடற்கரை வாழ் மக்கள் பெரிதும் பயன் அடைவார்கள்.

உஞ்சனை கிராமப் பகுதியிலிருந்து தேவகோட்டைக்குச் செல்ல வேண்டுமென்றால் இடையிலுள்ள தேனாற்றில் ஒரு பாலம் அமைத்துக் கொடுத்தால் உதவியாக இருக்கும். மழைக் காலங்களில் இரண்டு மூன்று வாரங்கள் மற்றப் பகுதிகளோடு எவ்விதத் தொடர்புமின்றி அவர்கள் தவிக்கிறார்கள்.





திருவாடானைத் தொகுதி நீண்ட கடற்கரைப் பகுதியை உடையது. பெரும்பாலோர் மீனவர்கள். அவர்களது தொழிலுக்கு உதவிகரமாக அங்கே ஒரு குளிர்சாதன கட்டிட வசதியை ஏற்படுத்திக்கொடுத்தால் அவர்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

தொண்டி பல்லாண்டுகளுக்கு முன்பு சரித்திரப் புகழ்பெற்ற துறைமுகமாக இருந்திருக்கிறது. இலங்கை, பர்மாவில் இருந்து தேக்குமரங்கள் வந்து இறங்கியிருக்கின்றன. இப்படி ஏற்றுமதி இறக்குமதி சிறப்பாக நடைபெற்ற துறைமுகம் அது. அந்தத் தொண்டியை சிறு துறைமுகமாக நல்லமுறையில் அபிவிருத்தி செய்து கொடுத்தால் அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்க உதவியாக இருக்கும் என்பதாக இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் தொண்டியில் சுற்றுலா வாரியத்தின் சார்பில் ஒரு சுற்றுலா மாளிகை கட்டித்தரவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். சுற்றுலா வாரியத்தின் அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதிக்கு வருகை வந்தபோது அங்குள்ள வாய்ப்பு வசதிகளை எல்லாம் பார்த்துவிட்டு அதைச் செய்து தருகிறேன் என்று சொல்லி வந்திருக்கிறார்.

எனது தொகுதியில் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்காக விடுதி ஒன்றையும் அமைத்துத்தரும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அரசு சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு இலவச மருத்துவ வசதி அளிக்கிறது. பதவிக்காலம் முடிந்த பிறகும் கூட இவர்களுக்கு தொடர்ந்து அந்தச் சலுகை, ஸ்பெஷல் வார்டு போன்ற வசதிகள் கொடுக்கக்கூடிய உதவியினை இந்த அரசு நிரந்தரமாகச் செய்வதற்கான ஒரு ஏற்பாட்டினைச் செய்துதரவேண்டும் என்று கேட்டு எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

**திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 1973-74-ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையினை சமர்ப்பித்திருப்பதை வரவேற்று என்னுடைய ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையில் நாட்டிலுள்ள விவசாய மக்கள், கைத்தறி நெச

[திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்] [1973 மார்ச் 5

வாளர்கள், நடுத்தர வர்க்கத்தினரைச் சேர்ந்தவர்கள், அவர்களது சமூக முன்னேற்றத்திற்கு பல திட்டங்களை வகுத்திருப்பதை வரவேற்று இந்த நேரத்தில் கைத்தறி நெசவுத் தொழிலாளர்களைப் பற்றி ஒருசில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

கைத்தறி நெசவுத் தொழிலாளர்களைப் பொறுத்தமட்டில், கைத்தறி தொழிலுக்கு வேஷ்டி, புடவை, துண்டு போன்ற
10-30 மு.ப. ரகங்களை ஒதுக்கவேண்டுமென்று அமைச்சரவர்கள் அறிவித்தார்கள். இதை மனமார நான் பாராட்டுகிறேன். இதை மத்திய சர்க்கார் ஏற்றுக்கொள்ளவேண்டும். இந்த நேரத்தில் கைத்தறி நெசவுத் தொழிலுக்கு நூலும் செயற்கை பட்டும் கிடைக்காமல் அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். இதையெல்லாம் பற்றி இம்மா மன்றத்தில் எல்லாக் கட்சியினரும் ஏகோபித்து, வேண்டிய நூலை மத்திய சர்க்கார் ஒதுக்கித் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கு நான் நன்றி செலுத்த கடமைப்பட்டிருக்கிறேன். அதோடு கைத்தறி நெசவுத் தொழிலுக்கு செயற்கை பட்டு நூலையும் அடையாளச் சீட்டு மூலம் வினியோகிக்க ஏற்பாடு செய்து கொண்டிருப்பதை நான் பாராட்டுகிறேன்.

கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள், தனிப்பட்ட முறையிலே வேலை செய்யக் கூடிய தொழிலாளர்கள் கஷ்டப்படுகிறார்கள், இன்னல் படுகிறார்கள். அவர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டுமென்று நமது டாக்டர் கலைஞர் அவர்கள், ஊதியக்குழு அமைத்து, தமிழ் நாடு முழுவதும் பரிசிலனை செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள விரும்புவது, ஏழை கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் சராசரியாக மாதம் ரூ. 75 தான் பெறுகிறார்கள். அதுவும் வேலை கிடைத்தால் உண்டு. இல்லையென்றால் இல்லை. ஆகவே, குறைந்தபட்சம் இந்த தொழிலாளர்களுக்கு ரூ. 150 வருமானம் கிடைக்கக்கூடிய வழிவகையை அரசு செய்து கொடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக அரசு, தமிழக அரசு கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்காக பல நல்ல திட்டங்கள் தீட்டி செயல்படுத்திக்கொண்டு வருகிற இந்த நேரத்தில்



1973 மார்ச் 5] [திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்]

(திரு. கே. ஏ. வகாப் தலைமை)

செயற்கை நூலுக்கும் வரி விதிக்கப்படுகிறது மத்திய அரசினால். இப்படி வரி விதிக்கப்படுவதன் காரணமாக துணி விலை உயர்வும், அதனால் வாங்கக்கூடிய மக்கள் கஷ்டமும் அடையவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இதையெல்லாம் மத்திய ஆட்சியை ஆதரிக்கக் கூடிய காங்கிரஸ் நண்பர்கள், மத்திய ஆட்சியிலே உள்ளவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இந்தத் தமிழக அரசைப்பற்றி, பல மாற்றுக் கட்சி நண்பர்கள் குறை கூறிப் பேசினார்கள். ஆனால் குறை சொல்வதில் ஏதாவது உண்மை இருக்கிறதா? இல்லையென்றுதான் நாம் சொல்ல வேண்டிய நிலைமை இருக்கிறது. வெளியிலே பேசும் பொழுது அந்த நண்பர்கள் இந்த நாட்டிலேயுள்ள தொழில்களையெல்லாம் தேசியமயமாக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். முதலாளித்துவத்தை ஒழிக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். இன்றையதினம் டாக்டர் கலைஞர் அவர்கள் உண்மையான சோஷலிச திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். பஸ்களை தேசியமயமாக்கவேண்டும், அலுமினியம் தொழிற்சாலையை தேசியமயமாக்கவேண்டும், மின் உற்பத்தி நிறுவனங்களை தேசியமயமாக்க வேண்டும் என்று திட்டங்களையெல்லாம் கொண்டு வந்திருக்கிறார்கள். இவற்றையெல்லாம் அவர்கள் பாராட்டவில்லை அதற்கு மாறாக எதிர்த்துப் பேசுகிறார்கள் என்பதை நினைக்கும்போது வேதனை அடையவேண்டிய நிலைதான் இருக்கிறது.

இன்னொன்றும் சொல்கிறார்கள் விலைவாசி ஏற்றம் என்றெல்லாம் சொல்கிறார்கள். இன்றையதினம் தமிழக அரசு வரி விதிக்கவில்லை. இந்த நிலைமை இங்கு இருக்கும்போது, மத்திய அரசு ஆட்சியில் இருக்கக்கூடிய இந்திரா காங்கிரஸ் கட்சியினர் ரூ. 292 கோடிக்கு வரி விதித்திருக்கிறார்கள். அதன் காரணமாக, பல பொருள்களின் விலை ஏறியிருக்கின்றன. மக்கள் வாங்கமுடியாத நிலைமையில் இருக்கிறார்கள். இதையெல்லாம் அந்தக் கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் எடுத்துச்சொல்ல வேண்டும். கலைஞர் ஆட்சியில் வரி விதிக்கவில்லை. ஆகவே, இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டி என்னுடைய தொகுதியைப்பற்றி ஒருசில சொல்ல விரும்புகிறேன்.

[திரு. எ. எம். டி. நாச்சியப்பன்] [1973 மார்ச் 5

குறிப்பாக, செட்டியார்சத்திர ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பகுதி வறட்சியான பகுதிப் பன்றிமலைப் பகுதியில் பெய்கிற மழை நீர் குடவனாற்றில் கலந்து வீணாகி, சமுத்திரத்திலே சேருகிறது. அந்தப் பகுதியிலே சில அணைக்கட்டு திட்டங்களைச் செயல்படுத்தித் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பெரியகோம்பையாறு, சின்னகோம்பையாறு, சங்கன்குளம் வாய்க்கால், நாயோடை சிறு பாசன திட்டம், கதிரயன்குளம் வாய்க்கால் திட்டம் இப்படிப்பட்ட திட்டங்களையெல்லாம் செயல் படுத்திக் கொடுக்கவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

ஆத்தூரில் ஒரு உயர்நிலைப்பள்ளி இருக்கிறது. அந்த உயர் நிலைப்பள்ளிக்கு அரிசன மாணவர் இல்லம் ஒன்று ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக ஆத்தூர் தொகுதியில், மலைவாழ்மக்கள் 20,000 பேர் இருக்கிறார்கள். அவர்கள் மருத்துவமனை வசதியில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, மணலூர் பகுதியிலே மருத்துவமனை கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முடிவாக, மின்சாரத்தைப் பற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். இன்றையதினம் கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் வேஷ்டி தயார் செய்ய வேண்டுமென்றால், அதற்காக சின்னாளப்பட்டி, அருப்புக்கோட்டை, காரைக்குடி போன்ற பகுதிகளில் ஒரு மிஷின் வைத்திருக்கிறார்கள். அந்த மிஷினில் 4 பெண்கள் வேலை செய்வார்கள். அந்த ஒரு மிஷின் வேலை செய்தால் 75 நெசவாளர் களுக்குப் பாவு கிடைக்கும். இன்றையதினம் மின்சார வெட்டின் காரணமாக, 75 சதவிகிதம் வெட்டு காரணமாக அந்த மிஷின் ஒரு வாரம்தான் வேலை செய்கிறது. மீதி மூன்று வாரத்திற்கு நெசவாளர்களுக்கு பாவு தயார் செய்து கொடுக்க முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அமைச்சரவர்கள் அதைப்பற்றி பரிசீலனை செய்து பெரிய மனதுடன் ஏழை கைத்தறி நெசவாளத் தொழிலாளர்களுடைய வாழ்க்கை முன்னேற்றம் அடைய, அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க, மின்சார வெட்டை ரத்து செய்ய ஆவன செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த வரவு-செலவுத் திட்டத்தை நான் மனமாற பாராட்டுகிறேன். இந்தத் திட்டத்திலே உள்ள கருத்துக்களெல்லாம் இந்த நாட்டிலே



1973 மார்ச் 5] [திரு. எ. எம். டி. நாச்சியப்பன்]

பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன கருத்துக்கள். அவர் கனவை, நனவாக்க இருக்கிறார்கள் கலைஞர் அவர்கள் என்று சொல்லி, இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. வீ. சா. இளஞ்செழியன்** : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கலைஞர் அவர்கள் 1973-74-ம் ஆண்டிற்கு கொடுத்திருக்கிற இந்த நிதிநிலை அறிக்கையை நான் உளமார, மனமார பாராட்டி வரவேற்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையில் எங்களுடைய புதுக்கோட்டை பகுதியை தனி மாவட்டமாக்கித் தரவேண்டுமென்று நீண்ட நெடுங்காலமாக அங்கே இருக்கிற அனைத்து பொதுமக்களும் கேட்டு வந்த அந்தக் கோரிக்கையை அந்த மக்களுடைய எண்ண உணர்ச்சிக்கு மதிப்பளிக்கின்ற வகையிலே இன்றையதினம் தனி மாவட்டமாக ஆக்கித் தந்த தற்காக நான் தலைவணக்கத்தை புதுக்கோட்டைப் பகுதி மக்களுடைய சார்பிலேயும் என்னுடைய சார்பிலேயும் கலைஞர் அவர்களுக்கும் இந்த அரசுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன். புதுக்கோட்டைப் பகுதி தனி மாவட்டமாக ஆகும்பொழுது, அது பின்தங்கிய மாவட்டம் என்கின்ற காரணத்தாலே, இராமநாதபுரம் மாவட்டம் பின் தங்கிய மாவட்டமாக டெல்லி அரசுக்கு எவ்வாறு சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறதோ அதைப்போல் இதையும் பின் தங்கிய மாவட்டமாக அறிவித்து, அந்தப் பெரும் காரியத்தை தனி மாவட்டமாக செய்து தந்த கலைஞர் அவர்கள் செய்து தரவேண்டு மென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையிலே நாட்டிலே யிருக்கிற சாதாரண மக்களுக்கு, விவசாயிகளுக்கு, சாதாரண நிலையிலே இருக்கிறவர்களுக்கு சிறப்பு செய்கிற வகையிலே இருந்தும் நம்முடைய எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள் எல்லாம் குறை கூறிக்கொண்டிருக்கிறார்கள். எனக்குத் தோன்றுகிற எண்ணம் அவர்கள் யார் யாருக்காகவோ குறை காண்கிறார்கள் என்பதுதான். சாதாரண மக்களுக்கு, விவசாயிகளுக்கு, கிராமத்து மக்களுக்கு நல்லபல காரியங்களை, திட்டங்களை அரசு செய்து கொண்டிருக்கிறது. 1971-லேகூட குறை கண்டார்கள், பத்திரிகைகள் எல்லாம் குறை கண்டன. எதிர்க்கட்சியிலே உள்ளவர்கள் எல்லாம் பக்கம் பக்கமாக குறைகளை அடுக்கிக்

[திரு. வி. சா. இளஞ்செழியன்] [1973 மார்ச் 5

கொண்டே போனார்கள். ஆனால் அவற்றைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல், கிராமத்து மக்களுக்காக படிப்படியாக காரியங்களைச் செய்யும்பொழுது அவர்கள் நமக்குப் பேராதரவினைத் தந்தார்கள். அதே வகையில் இன்றையதினம், அன்றையதினமே அண்ணா அவர்கள் நாட்டிலே இருக்கிற ஏழை விவசாயிகளுடைய புஞ்சைக்கு வரி இல்லையென்று சொல்லி வசதி அளித்ததன் அடிப்படையிலே, கலைஞர் அவர்கள் உழுகின்றவர்களுக்கெல்லாம் நிலம் சொந்தம் என்று நிதிநிலை அறிக்கையிலே அறிவிப்பு தந்திருக்கிறார்கள். அதற்காக அவர்களை மனமார, உளமார பாராட்டுகிறேன்.

அதே நேரத்தில், இன்னும் வருகின்ற காலங்களிலே, அவர்கள் அந்த குறைகளை எல்லாம் சொல்லிக்கொண்டிருந்தாலும் இப்படிப் பட்ட தப்புப் பிரச்சாரங்களைச் செய்து கொண்டிருந்தாலும் நாட்டிலே இருக்கிற மக்கள் அவை பற்றியெல்லாம் எண்ணிப் பார்க்காமல், இந்த அரசு என்ன செய்கிறது, அரசு தரப்பிலே இருக்கிறவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை உன்னிப்பாக கவனிக்கிறார்கள். ஒரு காலத்திலே பெரிய மனிதர்களுக்காக வாக்களிப்பதும் அவர்களுக்காக நிர்வாகம் அமைப்பதும் இந்த நாட்டிலே சர்வ சாதாரணமாக இருந்தது. பெரிய மனிதர்களும், அவர்களைச் சார்ந்தவர்களும் பத்திரிகைகளும் எப்படி திரித்துச் சொன்னார்கள்? இருந்தாலும் நாட்டிலேயுள்ள பொது மக்கள் அன்றாட நடப்புகளை அவர்களாக எடுத்துச் செய்கிற காரியங்களை மிக உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அந்த வகையிலே பேரறிஞர் அண்ணா அவர்கள் காட்டிய வழியிலே, வகுத்த வழியிலே இந்த நிதிநிலை அறிக்கையிலே விவசாயிகளுக்கு நடுத்தர மக்களுக்கு—டெல்லிப் பேரரசு வரியைப் போட்டிருக்கின்ற நேரத்திலும்கூட—உபரி நிதிநிலை அறிக்கையை சாதாரண மக்களது உள்ளத்தைத் தொடுகின்ற நிதிநிலை அறிக்கையை சோஷலிச சமதர்ம சமுதாயப் பாதையில் அடியெடுத்து வைக்கின்ற நிதிநிலை அறிக்கையை, பஸ் தேசிய மயம், அலுமினிய பாக்டரி தேசிய மயம் என்று ஆக்கி சோஷலிஸ தத்துவத்தின் அடிப்படையிலே பல்வேறு சிறந்த அம்சங்களைக் கொண்டதாக இந்த நிதிநிலை அறிக்கை அழகுற அமைந்திருக்



1973 மார்ச் 5] [திரு. வி. சா. இளஞ்செழியன்]

கிறது. இதனை நான் உளமார மனமாரப் பாராட்டி வரவேற்று, என்னுடைய தொகுதியைப்பற்றி ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன.

என்னுடைய தொகுதியிலே—நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரியும்—துவரங்குறிச்சியிலிருந்து அக்கரைபசுகுறிச்சி, இக்கரைபசுகுறிச்சி வழியாக மதுரைக்குப் போவதற்கு மங்கம்மா சாலை போடுகின்ற திட்டம் நீண்ட பல நாட்களாகக சொல்லப்பட்டு வருகின்ற திட்டமாகும். நம்முடைய ஆட்சி வந்ததற்குப் பிறகு பல நல்ல திட்டங்களை அந்தத் தொகுதியிலே செய்திருக்கிறோம். அதோடு இதையும் சேர்த்து நிறைவேற்றித் தந்தால் உண்மையிலே அந்தத் தொகுதி மக்கள் நன்றியுடையவர்களாக இருப்பார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றையதினம் மாற்றார்கள் எதைப் பேசினாலும் சரி, மக்கள் அன்றாட நிகழ்ச்சிகளை கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆட்சி, அமைச்சர்கள், சட்ட மன்ற உறுப்பினர்கள் இவர்களையெல்லாம் பார்க்கமுடியாது, எதுவுமே செய்யமுடியாது என்ற நிலைமை மாறி இப்பொழுது தேவையான காரியங்களை, ரோடுகள் போடுவது, பள்ளிக்கூடங்கள் கட்டுவது, குடிநீர்ப் பிரச்னை இவற்றையெல்லாம் தீர்த்துவைப்பதை அனுகி அவர்கள் தீர்த்துக்கொள்வதைப் பார்த்துக்கொண்டிருக்கின்றார்கள். அரசியல் மாச்சரியங்களை, எதிர்க்கட்சிக்காரர்கள் எப்படிச் சொன்னாலும்—எதிர்க்கட்சிகள் நம்முடைய கொள்கையிலே குறைசொல்ல முடியவில்லை, புஞ்சைக்கு வரி நீக்கினோம். அதைக் குறைசொல்ல முடியவில்லை அவர்களால். உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்று கூறினோம், அவர்களாலே அதைக் குறைசொல்லமுடியவில்லை. கல்லூரிப் படிப்பை இனமாக்கினோம், அதை அவர்களாலே குறை சொல்லமுடியவில்லை. இப்படி நாம் எடுத்து நிறைவேற்றுகிற எந்தத் திட்டங்களையும் குறை சொல்ல அவர்களாலே முடியாத நேரத்திலே தனிப்பட்ட முறையிலே எதையெதையோ கூறுகிறார்கள், அதை மக்கள் நம்பத் தயாராக இல்லை. மக்கள் விழிப்போடு இருக்கிறார்கள் ஆகவே நம்முடைய அரசு அந்தத் திட்டத்தையும் செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

[1973 மார்ச் 5

* **திருமதி ஜோதி வெங்கடாசலம்:** தலைவர் அவர்களே, இந்த வரவு-செலவுத் திட்டத்தின்மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இந்த வரவு-செலவுத் திட்டம் திட்டமிட்டு சமர்ப்பிக்கப் பட்டிருந்தபோதிலும் திட்ட நிதியுதவி, மத்திய அரசாங்கத்திலிருந்து மாநில அரசுக்குக் கொடுக்கப்படுவது குறிப்பாக குறைவாக இருக்கிறது, அதுவும் நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 250 கோடி ரூபாய் கொடுக்கவேண்டுமென்று சொல்லியும் அது 202 கோடி ரூபாயாகக் குறைந்திருக்கிறது. அதிலே 48 கோடி ரூபாய் வெட்டு இருக்கிறது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலே 10.8 சதவிதமாகத் தொடங்கி இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலே 9 சதவிதமாக ஆகி, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலே 7.4 சதவிதமாக ஆகி, இன்றைக்கு அது மாறி நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலே 4.7 சதவிகித அளவுக்குக் குறைந்திருக்கிறது. இப்படிக் குறைவிற்குக் காரணம் என்ன என்பதை இந்த அறிக்கையிலே குறிப்பிடவில்லை.

இப்படி மாநிலத்திற்குக் கொடுக்கவேண்டிய பணம் தேய்பிறை போல் குறைந்து வருவதைச் சுட்டிக்காட்டி மாநில அரசு அதனால் தான் திட்டங்களை உருவாக்க முடியவில்லை என்று கூறுவதை நாங்கள் ஒப்புக்கொள்வதற்கு இல்லை. காங்கிரஸ் ஆட்சி இருந்த காலத்திலே அன்று எதிர்க்கட்சியில் சட்டசபையிலே இருந்தவர்களில் குறிப்பாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் இருந்திருக்கிறார்கள். டெல்லிக்குக் காவடி தூக்கிச் செல்கிறார்கள், அமைச்சர்கள், யாசிக்கச் செல்கிறார்கள் இவர்களைத் தட்டிக் கேட்காமல் இருக்கிற இந்த அரசு இருப்பதே தவறு என்று சொன்னவர்கள்தான் இப்படி குறைந்து போகக்கூடிய நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக் காட்டாமல் இருக்க முடியவில்லை.

மாற்றாந்தாய் மனப்பான்மையைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். மாற்றாந்தாய் போக்கு வரவேண்டிய காரணம் என்ன? அன்று இருந்த காங்கிரஸ் ஆட்சிக்கும் மத்திய அரசாங்கத்திற்கும் இருந்த உறவு வேறு. இன்று உள்ள மத்திய ஆட்சிக்கும் இந்த அரசுக்கும் உள்ள நிலைமை வேறு. இந்த நல்ல உறவை எடுத்துக் காட்டி இப்படிக் குறைத்திருப்பதால், மாநிலத்திற்குப் பல



1973 மார்ச் 5] [திருமதி ஜோதிவெங்கடாசலம்]

காரியங்களைச் செய்ய முடியவில்லை என்பதை இவர்கள் எடுத்துக் கூறவேண்டும். காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே இருந்ததைவிட இன்றைக்கு விலைவாசி 12 சதவிகிதத்துக்கு மேல் உயர்ந்திருக்கிறது.

முன்பிருந்த சபாநாயகர் மதிப்பிற்குரிய மதியழகன் அவர்கள் அன்றைக்கு எதிர்க்கட்சியிலிருந்தபொழுது இளைத்த இட்லியைக் கொண்டுவந்து காட்டியதை இந்த சபையில் இருக்கும் பலர் மறந்திருக்கமாட்டார்கள். இன்றைக்கு விலைவாசி அதிகமாகி விட்டது. சாதாரண மக்கள் பயன்படுத்துகின்ற அரிசி, புளி, மிளகாய், சீயக்காய், எண்ணெய் இவற்றின் விலையெல்லாம் விஷம் போல் ஏறிக்கொண்டே போனால் என்ன நிலைமை ஏற்படும் என்பதைப் பார்க்கவேண்டும். மத்திய அரசாங்கம் புட்கிரய்ன்ஸ் ஹோல்சேல் Trade ஆக எடுத்து நடத்தலாம் என்று கூறியிருக்கிறார்கள். மாண்புமிகு ஜனாதிபதி அவர்கள் உரையிலே என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால் பர்ஸ்ட் பிரிபரன்ஸ் கோதுமைக்குத்தான் கொடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதன்பிறகு அரிசியை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று யோசிப்பதாகத் தெரிகிறது. நம்முடைய தென் நாட்டிலே விளையக்கூடிய அரிசியை மற்ற நாடுகளுக்கு விநியோகம் செய்யாவிட்டாலும் நாமே நமக்கு விநியோகம் நல்லமுறையிலே செய்யக் கூடிய அளவிலே இந்த அரசு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியாகிய ஸ்ரீரங்கத்திலே தினசரி மார்க்கெட் ஒன்று தேவை என்று 1970-ஆம் ஆண்டிலே ரெப்ரசன்டேஷன் கொடுக்கப்பட்டது. அதற்கு 1 லட்சத்து 64 ஆயிரம் ரூபாய் செலவில் மதிப்பீடு போடப்பட்டு அதிலே 1 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் அரசாங்கம் கொடுப்பதாக ஒப்புக்கொண்டு அதிலே 50 ஆயிரம் ரூபாய்தான் கொடுத்திருக்கிறார்கள். இன்னும் 1 லட்சம் ரூபாய் கொடுக்கவேண்டுமென்று பல ரிமைண்டர்கள் கொடுத்தும் இன்றுவரையில் அந்த மார்க்கெட் உருவாவதற்கு இல்லாமல் அதன் காரணமாக பலர் கஷ்டப்படுகிறார்கள். தெருவிலே கடைகள் வைக்கப்பட்டிருப்பதால் போக்குவரத்துக்குத் தடையாக இருக்கிறது. ஆகையால் இந்தத் தொகையை அரசு விரைவில் கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராம முன்னேற்றத்திற்கு பல லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. என்னுடைய தொகுதியான சமயபுரத்தில் எஸ். கண்ணனூர் என்ற ஒரு சிறிய கிராமம் இருக்கிறது. அங்கே தண்ணீர் வந்துவிட்டால் மக்கள் ரோடுக்கு வருவதற்கு அந்தக் கிராமத்தைச் சுற்றிக்கொண்டு 5 மைல் தூரம் செல்லவேண்டியிருக்கிறது. பெருவழி வாய்க்காலில் ஒரு வண்டிப்பாலம் கட்டவேண்டுமென்று அரசுக்கு ரெப்ரசன்டேஷன் கொடுக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகியும்கூட இன்னும் கவனிக்கப்படவில்லை. அதைச் செய்வதற்கு அந்தப் பஞ்சாயத்திலே பணம் இல்லை. அரசாங்கமே ஏற்றுக்கொண்டு அதை நிறைவேற்றித் தரவேண்டும். ஏழைகள் வாழ வேண்டும்.

அரசு ஊழியர்களுக்கு, ஆசிரியர்களுக்கு எல்லாம் 1,000 ரூபாய்க்குக் குறைவாக சம்பளம் இருந்தால் 10 ரூபாய் அதிகப்படியாகக் கொடுக்க முன்வந்திருப்பதை ஒருபுறம் பாராட்டினாலும், கவர்ன்மெண்ட் ஆப் இந்தியாவிலே சம்பத்தில் கொண்டுவந்த போனஸ் ஆக்ட்டில் இருப்பதைபோல் ஒரு பங்கை பிராவிடன்ட் பண்டிலே கொடுத்துவிடவேண்டுமென்று செய்ததைப்போல் இன்றைக்கு இந்த பத்து ரூபாயையும் Provident Fund ல் சேர்த்துவிடவேண்டுமென்று சொன்னால் அதைக் கொடுத்தும் கொடுக்காமலே இருப்பதுபோல் இருக்கிறது. கொடுத்தும் அது அவர்களுக்குப் பயனில்லாமல் போய்விடும்.

புதிதாக அரிசன் டெவலப்மெண்ட் அன்ட் ஹவுஸிங் கார்ப்பரேஷன் என்று அரசு ஏற்படுத்தியிருக்கிறது. அதற்கு என்ன அவசியம் இது யாருடைய Brain Wave என்று எனக்குப் புரியவில்லை. ஏற்கனவே ஹவுஸிங் போர்டு, ஏற்கனவே ஸ்லம் கிளியரன்ஸ் போர்டு என்று இருக்கின்றபொழுது தனிப்பட்ட முறையிலே இதற்காக அரிசன் டெவலப்மெண்ட் அண்டு ஹவுஸிங் கார்ப்பரேஷன் எதற்காக ஏற்படுத்தவேண்டுமென்று தெரியவில்லை.

என்னுடைய யோசனை என்னவென்றால், ஒரு சிறிய விங் Housing Board -ல் அமைந்தால் பாங்கிலிருந்து கடன் வாங்க வாய்ப்பு ஏற்படும். 80,000 வீடுகள் கட்டவேண்டும், இந்த ஆண்டு 10,000 வீடுகள் கட்டப்படும் என்று கூறியிருக்கிறார்கள். எத்தனையோ ஆயிரக்கணக்கான வீடுகள் ஹவுசிங் போர்டின் மூலம் கட்டிக் கொடுத்திருக்கிறோம். இப்பொழுது ஸ்லம் க்ளியரன்ஸ்





போர்டு மூலமாகக் கட்டிக்கொடுக்கிறோம் என்று பெருமையாகச் சொல்லிக்கொண்டு குடிசைவாழ் மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கின்றீர்கள். ஆகவே, இந்தத் தனிப்பட்ட Housing Corporation கண்டிப்பாக அவசியமில்லை, இதை அரசு கண்டிப்பாகக் கைவிட வேண்டுமென்ற யோசனையைக் கூற விரும்புகிறேன். Otherwise it will create duplication of work with the existing Housing Board and Slum Clearance Board.

அடுத்தபடியாக, ஹேண்ட்லூம் வீவர்ஸ் பற்றி, நெசவாளத் தொழிலாளர்களைப்பற்றி இந்தச் சபையிலே ஏற்கனவே விவாதம நடந்திருக்கிறது. ஆனால் இந்த அறிக்கையிலே கூறியிருக்கிறார்கள், நியாயமான விலையில் கோவாப்பரேட்டிவ் ஸ்பின்னிங் Mills மூலமாகக் கொடுக்கிறார்கள் என்று. ஆனால் அறிக்கையிலே இப்படியிருக்கிறதே தவிர நடைமுறையிலே அப்படியில்லை. கோவாப்பரேட்டிவ் ஸ்பின்னிங் மில்லிலே ஒரு பேல் 76 ரூபாய் என்று சொன்னால் 102 ரூபாயிலிருந்து 106 ரூபாய் வரையிலே வெளியே கொடுத்து வாங்க வேண்டிய நிலையிருக்கிறது. அப்படியிருக்க இந்த உரையிலே கூறப்பட்டிருப்பது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதில் கூறியது சரியாக இருக்க வேண்டுமென்றால் நியாயமான விலையில் கொடுப்பதற்கு அரசு Co-operative Spinning Mills-களுக்கு கடுமையான உத்தரவு பிறப்பிக்க வேண்டும். அவர்கள் நூலை வைத்துக் கொண்டு நியாயமான விலைக்குக் கொடுக்க மறுப்பது தவறு.

அடுத்து, கால்நடைகளை எடுத்துக்கொண்டால், பாவம், அவைகள் வாயில்லாத ஜீவன்கள். பல அங்கத்தினர்கள் பேசும் பொழுது அவர்களுக்கு எப்படி இது ஞாபகமில்லாமல் போய் விட்டது என்று தெரியவில்லை. கால்நடை மருந்தகங்கள் ஏற்படுவது பற்றியும், 1973-74 ஆம் ஆண்டிலே 6 இலட்சம் ரூபாய் செலவிலே 25 மருந்தகங்கள் புதிதாக அமைக்கப்பட போவதாகக் கூறப்பட்டிருக்கிறது. நாம் 6 இலட்சம் ரூபாய்களைச் செலவு செய்து 25 புதிய மருந்தகங்களைத் திறப்பது பெரிதல்ல. ஆரம்பிப்பது பெரிதல்ல, ஆனால் ஏற்கனவேயிருக்கும் மருந்தகங்களில் இந்த பிளாக் டெவலப்மெண்ட் லெவலில் பார்க்கும் பொழுது மருந்துகள் சரியாகக் கொடுக்கப்படவில்லை, சரியான முறையிலே மிருகங்கள் பாதுகாக்கப்படவில்லை என்பதைச் சுட்டிக்

காட்ட விரும்புகிறேன். நம்முடைய சென்னையிலே ஒரு வெட்டர்னரி ஆஸ்பத்திரி இருக்கிறது. அதை விரிவுப்படுத்தவும் பல 'இம்ப்ருவ்மென்ட்கள் செய்ய வேண்டுமென்றும் எஸ்டிமேட் கமிட்டியிலேகூட அந்த சிபாரிசு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைப் பற்றி ஒரு வார்த்தைகூட இந்த நிதிநிலை அறிக்கையிலே கூறப்பட வில்லை. அவைகள் வாயில்லாத ஜீவன்கள். மருத்துவ வசதிகளைப் பற்றியோ அல்லது குற்றம் சொல்லவோ குறை சொல்லவோ அவைகளுடைய பிரதிநிதிகளிடம் முறையிட்டுக் கொள்ள இயலாத நிலைமையிலிருக்கும் அந்த மிருகங்களுக்கு நாம் நம்முடைய கடமையை முடிந்த அளவில் நல்லமுறையிலே செய்வதற்கு அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே நம்முடைய அரிசன வகுப்பைச் சேர்ந்த ஒருவருக்கு நீதிபதி பதவி கிடைத்ததைப்பற்றி சில அங்கத்தினர்கள் பெருமையாகக் குறிப்பிட்டு அரசைப் பாராட்டினார்கள். அரசுக்கு நான் நன்றி சொல்லும் அளவிலே, மற்றொன்றையும் கூற விரும்புகிறேன். ஏதோ பல decade 'களுக்குப் பிறகு, அரிசன வகுப்பைச் சேர்ந்தவருக்கு நீதிபதி பதவி கிடைத்தது என்பதைப் பாராட்டி, வரவேற்று நன்றி கூறினாலும்கூட இன்னும் பலபேர்களுக்கு அந்தச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு நிலை இல்லை. இன்னும் சில பேர் நீதிபதிகளாக வரக்கூடிய தகுதி வாய்ந்தவர்களாகவும் இருக்கிறார்கள். எனவே, குறைந்தபட்சம் 4 போஸ்டுகளாவது ஒதுக்கி அந்தந்த போஸ்டுகள் காலியாகும்பொழுது அந்த இடத்தில் தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கொடுக்கவேண்டும். தற்பொழுது ஒன்று கொடுத்துவிட்டோம் என்ற பெருமையோடு இல்லாமல் இன்னும் ஒன்றாவது தற்சமயம் கொடுக்க இவர்கள் முன்வரவேண்டும். ஏதோ ஒன்று கொடுக்க வேண்டுமென்றால், நான் யாரையும் மனத்தில் வைத்துக் கொண்டு சொல்வதாக நினைக்க வேண்டாம். பொதுவாகச் சொல்கிறேன், இரண்டு பேர்களுக்காவது கொடுக்க வேண்டும்.

அதேபோல் ஷெரீப் போஸ்ட். இத்தனை ஆண்டுக்காலமாகியும், இன்னும் தாழ்த்தப்பட்ட பிரதிநிதி யாருக்கும் கொடுக்கப்பட வில்லை. இப்பொழுதெல்லாம் முன்மாதிரி இளமர் ஷெரீப் போஸ்ட்டுக்கு இல்லாவிட்டாலும்கூட அந்த போஸ்டை வைத்திருக்கிறோம். அதைக் கொடுக்கும் நேரத்தில், எப்படி





ரொட்டேஷனைக் கொடுக்க வேண்டுமோ அதில், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவருக்குக் கொடுக்கத் தவறி இருக்கிறது என்பதையும் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, மின்சார வெட்டின் காரணமாக முக்கியமான ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். ஆஸ்பத்திரிகளில் கொடுக்கப் படும் பிராண வாயு ஆக்சிஜன் சிலிண்டர்கள், மின்சார வெட்டின் காரணமாக, 'ஏஷியாடிக் ஆக்சிஜன் கம்பெனி'யும் மற்றொரு கம்பெனியும் மூடப்பட்டிருக்கின்றன. ஆக்சிஜன் சிலிண்டர்கள் நோய்வாய்ப்பட்டிருக்கின்றவர்களுக்கு உயிர் கொடுக்கும் சாதனமாக இருப்பதால் உடனடியாக அவர்களுக்கு மின்சார வெட்டினால் பாதிக்காமல் இருக்கின்ற அளவிலே வசதிகள் அளிக்கின்ற முறையிலே ஆவன செய்ய வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அரிசன காலனிகளுக்கெல்லாம் தொடர்ந்து ரோடுகள் போடுவதைப் பற்றி இதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவைகளுக்கெல்லாம் ரோடுகள் போடும்பொழுது நல்லமுறையிலே அரிசனக் காலனிகளிலேயிருந்து வரும் ரோடுகள் அந்த மெயின் ரோடுகளுக்கு வருவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வேளாண்மை வளர்ச்சி, மற்றும் பல வளர்ச்சி பற்றிக் கூறப் பட்டிருக்கிறது. குறிப்பாகக் கூற விரும்பியதைக் கூறி, மற்றும் டிமாண்டுகள் வரும்பொழுது கூறிக்கொள்ளலாம் என்று கூறிக் கொண்டு, தங்களுக்கு நன்றி கூறி முடித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. எம். முத்தையா:** தலைவரவர்களே, 1973-74 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை வரவேற்று நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

இந்த ஆண்டிலே வெள்ளத்தாலும், புயலாலும் ஏற்பட்ட பெரும் நஷ்டத்திற்குப் பிறகும்கூட உபரியாக 49 இலட்சம் ரூபாய் அளிக்கப்பட்டிருக்கிறது என்றால் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய திறமையை நான் பாராட்டுவதற்குக் கடமைப் பட்டிருக்கிறேன்.

வேளாண்மை வளர்ச்சிக்காக இந்த ஆண்டு 22.36 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பது பாராட்டுதற்குரியது. ஆனால் கடந்த ஆண்டில் பொதுவாக நெல்லை மாவட்டத்திலே, கோவில்பட்டி

[திரு. எம். முத்தையா] [ 1973 மார்ச் 5

தாலுக்காவிலே உர விநியோகத்திலே பெரும் ஊழல் நடந்திருக்கிறது. அதுவும்போக, தீவிரப் பருத்திச் சாகுபடித் திட்டம் ஒன்று கோவில்பட்டி வட்டாரத்திலே நடக்கிறது. அதிலும் உர விநியோகம் செய்யும்பொழுது பெரும் ஊழல் நடந்திருக்கிறது. இதுபற்றி நான் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலும், மாண்புமிகு விவசாய அமைச்சரவர்களிடத்திலும், இயக்குநரிடத்திலும் இன்னின்னார் செய்திருக்கிறார்கள், இன்னின்ன தேதியில் நடந்திருக்கிறது என்ற புள்ளி விவரத்தோடு, அந்த அதிகாரிகளின் பெயரையும், கூட்டு சேர்ந்தவர்களின் பெயர்களையும், வாங்கிய வியாபாரிகளின் பெயர்களையும் குறிப்பிட்டு கடந்த 6–2–1973 இல் அமைச்சருக்கும், இயக்குநர் அவர்களுக்கும் கொடுத்திருக்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் கொடுத்திருக்கிறேன். ஆனால் இதுபற்றி இதுவரையிலும் எந்த நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை.

ஏன் இதைக் கூறுகிறேன் என்றால் இம்மாதிரி ஊழல் செய்தவர்களின்மீது நடவடிக்கை எடுக்காமல் இருந்தால் அடுத்த ஆண்டிலும் இதேமாதிரி செய்வதற்குத் துணிந்துவிடுவார்கள் என்று சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு அதிகாரி இம்மாதிரி செய்கிறார், இன்னின்ன தேதியில், இன்னின்ன இடத்தில், இன்னின்ன வியாபாரிகள், இத்தனை மூட்டைகள் என்று அதிகார பூர்வமாக, சாட்சியாகக் கொடுத்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் இதைவிட என்ன செய்ய முடியும் என்பதுதான் என்னுடைய பணிவன்பான வேண்டுகோள். ஆகவே, அமைச்சரவர்கள் தயவுசெய்து உடனடியாக இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக, கல்விக்காக ரூ. 97.23 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதைப் பெருமையோடு பாராட்டுகிறேன். ஆனால் படிப்பிலே சில மாணவர்கள் அக்கறையில்லாமல் அரசியலிலேயும், வேறு அனாவசியமான பிரச்னைகளிலேயும் தலையிட்டிருந்தாலும்கூட இப்படி 97.23 கோடி ரூபாய் அளவிற்கு உயர்த்தி இருப்பது வரவேற்கத்தக்க அம்சமாகும்.



1973 மார்ச் 5] [திரு. எம். முத்தையா]

மு.ப. 11-00

மேலும் தாழ்த்தப்பட்டோர் நல மேம்பாட்டு வீட்டு வசதிக் கழகம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அது நல்ல திட்டம், வரவேற்கத்தக்கது. நம்முடைய கழகத்தினர் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில 'வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது' என்று சொல்லி வந்தார்கள். அதைப் போல் இன்று இந்த மாதிரித் திட்டங்கள் எல்லாம் சென்னை, செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென்னாற்காட்டோடு நின்று விடுகின்றன. தென் ஜில்லாக்களான மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களுக்கு இந்தத் திட்டங்கள் எல்லாம் வருவதே இல்லை. ஆகவே, இங்கே வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்று சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

விவசாயத்திற்காக மின்சாரம் ஒரு நாளைக்கு நான்கு மணி நேரம் கொடுக்கப்படுவதாகச் சொல்லுகிறார்கள். அதை வைத்து என்ன செய்ய முடியும்? அப்படிக் கொடுப்பதை பகல் நேரத்தில் கொடுத்தாலாவது ஏதோ அரை ஏக்கர், ஒரு ஏக்கருக்குத் தண்ணீர் பாய்ச்ச முடியும். இரவிலே கொடுத்தால் உழைத்துக் களைத்த விவசாயி எப்படிப் பயன்படுத்த முடியும்?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தற்போது விவசாயிகளுக்கு பகலில்தான் 4 மணி நேரம் மின்சாரம் கொடுக்கப்படுகிறது. பிரித்து பிரித்து எந்தெந்தப் பகுதிக்கு எப்போது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய பகுதியில் அப்படிக் கொடுக்கப்படவில்லை என்று சொன்னால் அதுபற்றித் தெரிவித்தால் உடனடியாக அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படும்.

**திரு. எம். முத்தையா:** அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு நன்றி. கோவில்பட்டி தாலுகாவில் இரவில் மூன்று மணி நேரந்தான் கொடுக்கிறார்கள். ஒரு வாரத்தில் பகலில் 3 மணி நேரமும் ஒரு வாரத்தில் இரவில் 3 மணி நேரமும் கொடுக்கிறார்கள். இதுபற்றி அந்தப் பகுதி அதிகாரிகளிடத்திலே கேட்டாலே தெரியும். மதுரை, திண்டுக்கல்லில் எந்த நேரமும் கரண்ட் கொடுக்கப்படுவதாக வதந்தி வருகிறது. எப்படியோ, எனக்குத் தெரியாது. திருநெல்வேலி மாவட்டத்தில் குறிப்பாக கோவில்பட்டி தாலுகாவில் இரவில்தான் கொடுக்கிறார்கள். இனிமேலாவது பகலில் கொடுக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டும்.

அமைச்சர்கள் சுற்றுப் பயணம் வரும்போது கட்சிக் கூட்டங்களுக்கு வந்தால் அந்தப் பகுதி எம்.எல்.ஏ.க்களுக்குத் தெரிவிக்க வேண்டியதில்லை. ஆனால் பொது நிகழ்ச்சிகளுக்கு வந்தால் அந்தத் தொகுதி எம்.எல்.ஏக்களுக்குத் தெரிவிக்க வேண்டும், கலந்து கொள்ள வேண்டும். கடந்த மாதம் 17-ம் தேதி மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதிக்கு வந்தார்கள். அவர்கள் மாதம் இரண்டு மூன்று முறை திருநெல்வேலிக்கு வருகிறார்கள்! அழைப்புக் கொடுக்கிறார். என்னுடைய தொகுதியில் ஓட்டப்பிடாரத்தில் நிலவள வங்கியைத் திறந்தார்கள். எனக்கு அழைப்பு கிடையாது. யார் அந்தச் சதியைச் செய்கிறார்கள் என்று தெரியவில்லை. என்னுடைய தொகுதியிலே நடந்த பொது நிகழ்ச்சிக்கு எனக்கு அழைப்புக் கிடையாது.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அழைப்பு இல்லாமல் இருக்குமானால் அது மிகுந்த தவறு என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

**திரு. எம். முத்தையா:** அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு நன்றி. நிலவள வங்கியைத் திறந்தபோது 'எங்கே தொகுதி எம்.எல்.ஏ.?', என்று கேட்டார்களா? கோவில்பட்டிக்குச் சம்பந்தப்படாத பெயர்கள் எல்லாம் அழைப்பிதழில் இருக்கின்றன. என்னுடைய பெயர் கிடையாது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

ஏன் அமைச்சர் அவர்கள் இதைப்பற்றிக் கேட்டிருக்கக் கூடாது? கூட்டுக் கட்சி என்று வேறு எங்களுக்குப் பெயர். ஆனால், ஒரு அரிஜன எம்.எல்.ஏ., என்று கருதினார்களா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** இப்படிப்பட்ட காரணங்களை கற்பிக்க வேண்டாம். அரிசன எம்.எல்.ஏ. என்பதற்காகப் புறக்கணிக்கப்பட்டதாகச் சொல்லுவது மிகுந்த தவறு. தாங்கள் அழைக்கப்படாமல் இருந்திருப்பீர்களேயானால் அது தவறு என்று நானே ஒப்புகொள்கிறேன். கோவில்பட்டியில் நடந்த நிகழ்ச்சிகளுக்கு திரு. அழகர்சாமி அவர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களே தலைமை கூடத் தாங்கி





யிருக்கிறார்கள். உங்கள் தொகுதியில் தவறாக விட்டுப் போயிருக்கலாம். அதற்காக நோக்கம் கற்பிக்கவேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. எம். முத்தையா:** அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு நன்றி. அதைப் பற்றி நான் மேலும் பேச விரும்பவில்லை. இனி மேலாவது இந்த மாதிரி நிகழ்ச்சிகள் நடக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களிடம் ஒரு பெட்டிஷன் கொடுத்திருக்கிறேன். உரம் சம்பந்தமாக புள்ளி விவரத்தோடு கொடுத்திருக்கிறேன். அதன் மீது இதுவரை எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அந்த அதிகாரிகள் கூட என்னை ஏளனம் செய்கிறார்கள். அதன் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு சந்தர்ப்பத்தை அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

**திரு. கு. திருப்பதி:** மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 1973-74 ஆம் ஆண்டுக்காக சமர்ப்பித்திருக்கும் பட்ஜெட்டை வரவேற்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். அதிலும் மத்திய சர்க்காருடைய பட்ஜெட்டின் வெக்கை தாங்க முடியாமல் தமிழக மக்கள் தவித்துக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் 49 லட்சத்திற்கு உபரியாக உள்ள பட்ஜெட்டை அளித்த தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றி சொல்லுவதோடு இன்றைக்கு இருக்கும் மத்திய சர்க்கார் பட்ஜெட்டின் சூழ்நிலையில் தமிழகத்தின் பட்ஜெட் தமிழக மக்களுக்கு ஒரு குளிர் பூஞ்சோலையாக இருக்கிறது என்பதைச் சொல்லுவதில் பெருமைப் படுகிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஜோதி வெங்கடாசலம் அவர்கள் தாழ்த்தப்பட்டவர்களுக்காக ஒரு நீதிபதி நியமித்ததற்காக நன்றி சொல்லுகிற அதே நேரத்தில் இன்னும் பல நீதிபதிகள் நியமிக்கப்பட வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் இந்த பட்ஜட்டைப் படித்துப் பார்க்கும்போது தாழ்த்தப்பட்ட மக்களுக்காகவும், பின்தங்கிய மக்களுக்காகவும் இந்தச் சர்க்கார்

எவ்வளவு திட்டங்களைத் தீட்டியிருக்கிறது, எவ்வளவு பணம் ஒதுக்கி இருக்கிறது என்பதை எல்லாம் பார்த்தால் மாண்புமிகு அம்மையார் அவர்கள் மகிழ்ச்சியடைவார்கள் என்று கருதுகிறேன். தாழ்த்தப்பட்ட மக்களுக்காக இதிலே ஏறக்குறைய 9¼ கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பின்தங்கியவர்களுக்காக 6½ கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல; மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போல் குடியிருப்பு மனை பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. அதிலே வீடு கட்டுவதற்காக தாழ்த்தப்பட்ட மக்களுக்காக குடியிருப்போர் நிதிக் கழகம் என்று நிறுவி அவர்களுக்காக வசதி செய்யப்பட்டிருக்கிறது. பின் தங்கியவர்களுக்குப் பல நன்மைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. இதை எல்லாம் பார்க்கும்போது முழுக்க முழுக்க இந்த பட்ஜட் தாழ்த்தப்பட்டவர்களுக்காகவும், பின்தங்கியவர்களுக்காகவும் அள்ளி அள்ளி வழங்கப்பட்டிருப்பதில் இது ஒரு அட்சயப் பாத்திரமாகத் திகழ்கிறது என்று குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழகத்தில் இருக்கும் எல்லா மக்களின் நன்மைகளையும் கருத்தில் கொண்டு நம்முடைய மாண்புமிகு கலைஞர் அவர்கள் இந்த பட்ஜட்டை அளித்திருக்கிறார்கள். ஆனால் இந்த நேரத்தில் ஸ்தாபன காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் பேசும்போது சொன்னார்கள்—இந்த பட்ஜட் திண்டுக்கல் பாராளுமன்றத் தேர்தலை மனதில் வைத்துத் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்று குற்றம் சாட்டினார்கள். பொதுவாக, எந்த ஆண்டிலும் பட்ஜட் தயாரிக்கும்போது நாட்டினுடைய நன்மையைக் கருதித்தான் பட்ஜட் தயாரிப்பார்கள்.

ஆனால், இருபது ஆண்டுக் காலம் ஆண்டு வந்த காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த திரு. ஜேம்ஸ் அவர்கள் ஒரு தொகுதிக்காகவே ஒரு பட்ஜட் தயாரிக்கப்படுகிறது என்று அவர்கள் சொல்வார்களே யானால் அவர்கள் இருபது ஆண்டுக் காலம் ஆட்சி செய்துவந்த காங்கிரஸ் கட்சியில் உறுப்பினராக இருப்பதிலிருந்து காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள ஆண்டு வந்த காலத்தில் ஒவ்வொரு தொகுதிக்காக ஒவ்வொரு பட்ஜட் தயாரித்திருப்பார்களோ என்று நான் சந்தேகப்படுகிறேன். அவர்கள் இருபது ஆண்டுகள் ஆண்ட பிறகும் கூட இந்த நாட்டு மக்கள் நன்மை அடையவில்லை என்றால்





அதன் முழு உண்மை என்ன என்பதை இப்போது அவர்கள் மறைமுகமாக சுட்டிக்காட்டியதற்காக திரு ஜேம்ஸ் அவர்களுக்கு நான் நன்றி செலுத்துகிறேன்.

மற்றொன்றும் நினைக்கிறேன். ஜேம்ஸ் அவர்கள் இதைக் குறிப்பிடக் காரணம் நம் மாண்புமிகு கலைஞர் அவர்கள் பட்ஜட்டை சமர்பிக்கிற நேரத்தில் எதிர்கட்சிகளில் இருப்பவர்கள் இங்கு இல்லாமல் வெளி நடப்பு செய்த காரணத்தால் எதிர்கட்சியில் இருந்தவர்கள் அந்த பட்ஜட்டினுடைய அம்சங்களைத் தெரிந்து கொள்ளாமல் போயிற்றோ என்றுகூட நான் சந்தேகப்படுகிறேன். அதேநேரத்தில் மற்ற எதிர்கட்சிகள் வெளிநடப்பு செய்தால் அதைப்பற்றிக் கவலை இல்லை. ஆனால் மத்தியில் அரசாள்கிற இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் வெளிநடப்பு செய்கிறார்கள் என்றால் உண்மையிலேயே அதற்காக நான் வருத்தப் படுகிறேன். இந்திரா காங்கிரஸில் இருப்பவர்கள் நாட்டின் நிலைமையை நன்றாக தெரிந்திருப்பவர்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி**: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார். இந்திரா காங்கிரஸ், இந்திரா காங்கிரஸ் என்று சொல்லக் கூடாது. இந்திய தேசிய காங்கிரஸ் என்று சொல்லவேண்டும்.

**திரு. கு. திருப்பதி**: இந்திரா மீது இவ்வளவு கோபம் அம்மையாருக்கு இருக்கும் என்று எனக்கு இப்போதுதான் தெரிகிறது. இந்திய தேசியக் காங்கிரஸைச் சேர்ந்தவர்கள் தயவுசெய்து சிறிது நிதானமாக நடந்துகொள்ளவேண்டுமென்று அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். (ஹியர், ஹியர்.) ஏனெனில் எதிர்கட்சியில் உள்ள மற்றக் கட்சிக்காரர்கள் நடந்துகொள்வதில் அரசியல் சூட்சமங்கள் இருப்பதை நான் உணருகிறேன். ஆனால் இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள் அப்படி நடந்துகொள்ளக் காரணம் என்ன என்று பார்க்கும்போது ஒருவேளை அவர்கள் நேரடியாக கட்சிச் சின்னத்தில் நின்று வராமல் இடைச் செருகல்களாக இருப்பதுதான் இதற்கு ஒரு காரணமோ என்று கூட நான் அஞ்சுகிறேன். இனிமேலாவது அவர்கள் கட்சி கொள்கைப் பிடிப்போடு நடந்துகொள்ளவேண்டும் என்று ஜனநாயகத்தின் பேரில் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்கள் சொன்னார்கள் மத்திய மாநில உறவுபற்றி. இங்கிருக்கிறவர்கள் காவடி எடுத்துப் போய் மத்திய சர்க்காரிடம் கேட்க வேண்டும், அவர்கள் ஒன்றும் நிறைவேற்றாமல் இருக்கிறார்கள் என்று சூசகமாகச் சுட்டிக்காட்டினார்கள். அதற்காகத்தான் தமிழக அரசு மாநில சுயாட்சி கேட்கிறது. அம்மையார் அவர்கள், இங்கிருந்து மத்திய சர்க்காரைத் தட்டிக் கேட்கமுடியாத ஒரு ஆட்சி எதற்காக இருக்கவேண்டும் என்று கேட்டார்கள்.

**திருமதி ஜோதிவெங்கடாசலம் :** உறுப்பினர் அவர்கள் பேசுகையில் இந்த சர்க்கார் காவடி எடுத்துச் செல்லவேண்டும் மத்திய சர்க்காரிடம், ஏன் அவர்களைத் தட்டிக் கேட்கவில்லை என்று நான் சொன்னதாகச் சொன்னார்கள். அவர்கள் சரியாகக் கேட்டிருப்பார்களேயானால் தெரிந்திருக்கும். இன்று ஆட்சியில் இருப்பவர்கள் அன்று ஆட்சியில் இருந்த காங்கிரஸ்காரர்களைப் பார்த்து காவடி எடுத்துக்கொண்டு பிச்சை எடுக்கச் செல்கிறார்கள், அவர்களை ஏன் தட்டிக் கேட்கக் கூடாது என்றெல்லாம் கேட்டவர்கள். இன்றைக்கு ஏன் அந்தத் தைரியத்தைப் பிரயோகப்படுத்தவில்லை என்றுதான் கேட்டேனே தவிர இந்த அரசாங்கம் காவடி தூக்கிப் போகவேண்டுமென்று நான் கூற மாட்டேன்.

எனக்கு நன்கு ஞாபகம் இருக்கிறது. மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். நாங்கள் யாசகத்திற்கு மத்திய அரசிடம் போகமாட்டோம், யாசகம் கேட்கிறோம் என்று நினைக்க வேண்டாம், என்று. அந்தமாதிரியான தரக்குறைவான வார்த்தைகளை நான் எப்போதும் இங்கு பயன்படுத்தமாட்டேன் என்று பலமுறை கூறியிருக்கிறேன். தவறாகக் கூற வேண்டாமென்று தங்கள் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கு. திருப்பதி :** அம்மையார் அவர்கள் தரக்குறைவாகப் பேசினார்கள் என்று நான் சொல்லவில்லை. அவர்கள் சொன்னதைத் தான் நானும் சொல்கிறேன். முன்னால் இங்கிருந்து காவடி எடுத்துப் போனவர்கள் என்று திராவிட முன்னேற்றக் கழகம் சுட்டிக் காட்டியதாக அம்மையார் அவர்கள் சொன்னார்கள். அதையேதான் நானும் சொல்கிறேன்.





இந்த ஆட்சி இன்னும் ஒரு ஐம்பது ஆண்டுக்காலத்திற்கு இருக்கவேண்டிய ஆட்சி என்பதற்காகத்தான் சொல்கிறேன். இன்றைய ஆட்சி என்ன சொல்கிறது? தொழில்கள் அமைப்பது போன்றவற்றில் மத்திய சர்க்கார் அனுமதி வழங்குவதில் கூட காலதாமதம் செய்யப்படுகிறது. அந்த அனுமதி விரைவாக வழங்கப்படவேண்டும். அதற்காகத்தான் மாநில சுயாட்சி கேட்கிறோம் என்று இங்கிருக்கும் ஆட்சி கூறுகிறது. இந்த ஆட்சி மத்திய சர்க்காரைத் தட்டிக் கேட்கும் ஆட்சியாக இருப்பதினால் தான் குறைந்தது இருபத்தைந்து ஆண்டுகளாவது இந்த ஆட்சி இருக்கவேண்டும் என்று கூறுகிறோம்.

தொழில் துறையில் தமிழக அரசு பல திட்டங்களைத் தீட்டி அதற்கான அனுமதியைப் பெற மத்திய சர்க்காரை அணுகும்போது அனுமதி வழங்குவதில்கூட மத்திய அரசுக்குப் பஞ்சம் ஏற்பட்டிருப்பதற்குக் காரணம், மாநில சுயாட்சியை இன்றைய தமிழக அரசு கேட்கிறது. ஒருவேளை மாநில சுயாட்சி என்றால் தமிழகத்தைத் தனியாகப் பிரித்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் கையில் கொடுத்து ஒரு ஐம்பது ஆண்டுகள் நீங்களே இருங்கள் என்று எங்கே டெல்லியில் இருப்பவர்கள் சொல்லி விடுவார்களோ என்று பயந்துதான் மாநில சுயாட்சியை அவர்கள் வேண்டாம் என்று சொல்கிறார்கள் என்று நான் கருதுகிறேன்.

மாநில சுயாட்சி என்பது இருக்கிற பல அதிகாரங்களைப் பிரித்து ஒவ்வொரு மாநிலத்திற்கும் வழங்குவதுதான் என்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். உறவுக்கு கை கொடுப்போம் உரிமைக்கு குரல் கொடுப்போம் என்று முதல்வர் அவர்கள் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். முதலில் உறவுக்கு கை கொடுத்துவிட்டு பின்னால்தான் நம் உரிமை பற்றிப் பேசுகிறோம். ஆகவே மாநில சுயாட்சி தருவதில் எந்தவிதமான சிரமம் இருக்கக்கூடாது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பொதுவாக மாநில அரசுக்கு தக்க அதிகாரங்கள் இருந்தால்தான் ஆங்காங்கு தொழிற்சாலைகளை பரவலாக அமைக்க முடியும். தொழிற்சாலைகள் அமைப்பதற்கு ஒன்று மத்திய அரசு பண உதவி தரவேண்டும் அல்லது அனுமதியாவது தரவேண்டும். சாதாரணமாக மாநில அரசு தீட்டுகிற திட்டங்களுக்குகூட அனுமதி கொடுப்பதற்கு மத்திய அரசு மறுக்கிறார்கள் என்றால் மத்திய

[திரு. கு. திருப்பதி] [1973 மார்ச் 5

மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்கள் சொன்னார்கள் மத்திய மாநில உறவுபற்றி. இங்கிருக்கிறவர்கள் காவடி எடுத்துப் போய் மத்திய சர்க்காரிடம் கேட்க வேண்டும், அவர்கள் ஒன்றும் நிறைவேற்றாமல் இருக்கிறார்கள் என்று சூசகமாகச் சுட்டிக்காட்டினார்கள். அதற்காகத்தான் தமிழக அரசு மாநில சுயாட்சி கேட்கிறது. அம்மையார் அவர்கள், இங்கிருந்து மத்திய சர்க்காரைத் தட்டிக் கேட்கமுடியாத ஒரு ஆட்சி எதற்காக இருக்கவேண்டும் என்று கேட்டார்கள்.

**திருமதி ஜோதிவெங்கடாசலம் :** உறுப்பினர் அவர்கள் பேசுகையில் இந்த சர்க்கார் காவடி எடுத்துச் செல்லவேண்டும் மத்திய சர்க்காரிடம், ஏன் அவர்களைத் தட்டிக் கேட்கவில்லை என்று நான் சொன்னதாகச் சொன்னார்கள். அவர்கள் சரியாகக் கேட்டிருப்பார்களேயானால் தெரிந்திருக்கும். இன்று ஆட்சியில் இருப்பவர்கள் அன்று ஆட்சியில் இருந்த காங்கிரஸ்காரர்களைப் பார்த்து காவடி எடுத்துக்கொண்டு பிச்சை எடுக்கச் செல்கிறார்கள், அவர்களை ஏன் தட்டிக் கேட்கக் கூடாது என்றெல்லாம் கேட்டவர்கள். இன்றைக்கு ஏன் அந்தத் தைரியத்தைப் பிரயோகப்படுத்தவில்லை என்றுதான் கேட்டேனே தவிர இந்த அரசாங்கம் காவடி தூக்கிப் போகவேண்டுமென்று நான் கூற மாட்டேன்.

எனக்கு நன்கு ஞாபகம் இருக்கிறது. மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். நாங்கள் யாசகத்திற்கு மத்திய அரசிடம் போகமாட்டோம், யாசகம் கேட்கிறோம் என்று நினைக்க வேண்டாம், என்று. அந்தமாதிரியான தரக்குறைவான வார்த்தைகளை நான் எப்போதும் இங்கு பயன்படுத்தமாட்டேன் என்று பலமுறை கூறியிருக்கிறேன். தவறாகக் கூற வேண்டாமென்று தங்கள் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கு. திருப்பதி :** அம்மையார் அவர்கள் தரக்குறைவாகப் பேசினார்கள் என்று நான் சொல்லவில்லை. அவர்கள் சொன்னதைத் தான் நானும் சொல்கிறேன். முன்னால் இங்கிருந்து காவடி எடுத்துப் போனவர்கள் என்று திராவிட முன்னேற்றக் கழகம் சுட்டிக் காட்டியதாக அம்மையார் அவர்கள் சொன்னார்கள். அதையேதான் நானும் சொல்கிறேன்.



1973 மார்ச் 5] [திரு. கு. திருப்பதி]

இந்த ஆட்சி இன்னும் ஒரு ஐம்பது ஆண்டுக்காலத்திற்கு இருக்கவேண்டிய ஆட்சி என்பதற்காகத்தான் சொல்கிறேன். இன்றைய ஆட்சி என்ன சொல்கிறது? தொழில்கள் அமைப்பது போன்றவற்றில் மத்திய சர்க்கார் அனுமதி வழங்குவதில் கூட காலதாமதம் செய்யப்படுகிறது. அந்த அனுமதி விரைவாக வழங்கப்படவேண்டும். அதற்காகத்தான் மாநில சுயாட்சி கேட்கிறோம் என்று இங்கிருக்கும் ஆட்சி கூறுகிறது. இந்த ஆட்சி மத்திய சர்க்காரைத் தட்டிக் கேட்கும் ஆட்சியாக இருப்பதினால் தான் குறைந்தது இருபத்தைந்து ஆண்டுகளாவது இந்த ஆட்சி இருக்கவேண்டும் என்று கூறுகிறோம்.

தொழில் துறையில் தமிழக அரசு பல திட்டங்களைத் தீட்டி அதற்கான அனுமதியைப் பெற மத்திய சர்க்காரை அணுகும்போது அனுமதி வழங்குவதில்கூட மத்திய அரசுக்குப் பஞ்சம் ஏற்பட்டிருப்பதற்குக் காரணம், மாநில சுயாட்சியை இன்றைய தமிழக அரசு கேட்கிறது. ஒருவேளை மாநில சுயாட்சி என்றால் தமிழகத்தைத் தனியாகப் பிரித்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் கையில் கொடுத்து ஒரு ஐம்பது ஆண்டுகள் நீங்களே இருங்கள் என்று எங்கே டெல்லியில் இருப்பவர்கள் சொல்லி விடுவார்களோ என்று பயந்துதான் மாநில சுயாட்சியை அவர்கள் வேண்டாம் என்று சொல்கிறார்கள் என்று நான் கருதுகிறேன்.

மாநில சுயாட்சி என்பது இருக்கிற பல அதிகாரங்களைப் பிரித்து ஒவ்வொரு மாநிலத்திற்கும் வழங்குவதுதான் என்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். உறவுக்கு கை கொடுப்போம் உரிமைக்கு குரல் கொடுப்போம் என்று முதல்வர் அவர்கள் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். முதலில் உறவுக்கு கை கொடுத்துவிட்டு பின்னால்தான் நம் உரிமை பற்றிப் பேசுகிறோம். ஆகவே மாநில சுயாட்சி தருவதில் எந்தவிதமான சிரமும் இருக்கக்கூடாது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பொதுவாக மாநில அரசுக்கு தக்க அதிகாரங்கள் இருந்தால்தான் ஆங்காங்கு தொழிற்சாலைகளை பரவலாக அமைக்க முடியும். தொழிற்சாலைகள் அமைப்பதற்கு ஒன்று மத்திய அரசு பண உதவி தரவேண்டும் அல்லது அனுமதியாவது தரவேண்டும். சாதாரணமாக மாநில அரசு தீட்டுகிற திட்டங்களுக்குகூட அனுமதி கொடுப்பதற்கு மத்திய அரசு மறுக்கிறார்கள் என்றால் மத்திய

சர்க்கார் எப்படி ஒரு சமதர்ம சமுதாயத்தை நிறுவப் போகிறார்கள் என்று எனக்குப் புரியவில்லை. நாட்டின் பொது நன்மை கருதி திட்டங்களுக்கு அனுமதி கேட்கும்போது அந்த அனுமதியைக்கூட அவர்கள் தர மறுக்கிறார்கள் என்றால் அத்தகைய மத்திய சர்க்காருக்கு நான் சொல்லிக்கொள்வேன் தமிழகத்தில் உள்ள பொதுமக்களின் நன்மை கருதி போடுகிற திட்டங்களுக்கு தயவுசெய்து நீங்கள் நந்திபோல் குறுக்கே நிற்காதீர்கள் என்று.

இந்த நாட்டின் பொதுநலன் கருதித்தான் திட்டங்கள் போடப் படுகின்றன. விவசாயத்திற்காக பல கோடிக்கணக்கான ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது இந்த அரசினால். கல்விக்காக பல கோடிக் கணக்கான ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்படி ஒவ்வொரு அம்சத்தை எடுத்துப்பார்த்தாலும் நாட்டுமக்களின் நன்மை கருதித்தான் பணம் ஒதுக்கப்பட்டு செலவு செய்யப்பட்டு வருகிறது என்று தெரிவித்துக்கொண்டு மதுரையில் இரண்டு பெரிய தொழிற்சாலைகள் நிறுவப்படவேண்டும். அங்கு தென் பகுதியில் ஒரு பெரிய ஆஸ்பத்திரி கட்ட ஏற்பாடு செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டு இந்த பட்ஜட்டை வரவேற்று என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. வீ. மலைக்கண்ணன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் 1973-74-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை இங்கு தாக்கல் செய்து இருப்பதை நான் வரவேற் கிறேன். எத்தகைய தடங்கல்கள் வந்தாலும் அவைகளை எல்லாம் சந்தித்து, கடந்து, நாட்டுவளம், மக்கள் நலன்கள் இவற்றைக் குறிக்கோளாகக் கொண்டு சமதர்ம மணங்கமழும் வரவு-செலவுத் திட்டத்தை இங்கு தாக்கல் செய்திருக்கிறார்கள். வரவு-செலவுத் திட்டத்தின் ஒவ்வொரு வரியிலும் நல்ல முற்போக்கான திட்டங்களை நாம் காண்கிறோம்.

எடுத்துக்காட்டாக நாட்டிலே படித்து வேலையற்றிருப்பவர் களுக்கு ஆண்டு ஒன்றுக்கு 15 கோடி ரூபாய் செலவில் அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கிற ஒரு திட்டத்தை தயாரித்து அது மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இந்த நேரத்தில் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள் மத்திய அரசிடம் நிற்கிற இந்தத் திட்டத்தை அவர்களிடமிருந்து பெற்றுத்



தருவதற்கான ஏற்பாட்டினை அவர்கள் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆனால் அந்த நம்பிக்கை நமக்கில்லை. காரணம், டெல்லியில் இருப்பவர்கள் 'கரிய ஹடோ', ஏழ்மையை ஒழிப்போம் என்று கூறிக்கொண்டிருப்பவர்கள் நாம் வறுமையை ஒழிப்பதற்காக நல்லபல திட்டங்களைக் கொண்டுவரும்போது, பஸ்களை எல்லாம் தேசியமயமாக்கவேண்டுமென்று நாம் திட்டம் கொண்டுவரும்போது இந்திய தேசியக் காங்கிரஸைச் சார்ந்த வர்கள் அந்தத் திட்டங்களை அனுமதிக்கக்கூடாது என்று சொல் வதிலிருந்து அவர்களுக்கு உண்மையில் இந்த நாட்டின்மீது அக்கறை இருக்கிறதா என்றுதான் நான் கேட்கவிரும்புகிறேன்.

எனவே, இப்படிப்பட்ட மனோபாவத்தை மாற்றிக்கொண்டு நாட்டின் மொத்த நன்மைக்காக கொண்டுவரப்படுகிற திட்டங்களை—இருக்கிற குறைகளை எடுத்துச்சொல்லுங்கள், வேண்டாமென்று சொல்லவில்லை—ஆதரிக்க அவர்கள் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதே கருத்தை நாடாளு மன்றத்தில் மாண்புமிகு இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள்,

'We are not in Parliament to play a political game. We are here to build the nation. And let us not fail the people.'

என்று அவற்றை மனதில் கொண்டு இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் மத்திய அரசோடு போராடி அதிக உதவியைப் பெற்றுத்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

3 கோடி ரூபாய் செலவில் கிராமப்புற வேலை வாய்ப்பு விரைவுத் திட்டம், 3 கோடி ரூபாய் செலவில் கிராமப்புறச் சாலை அமைப்புத் திட்டம் முதலிய திட்டங்கள் பயன் உள்ள திட்டங்களாகும். 1,500 மக்களும் அதற்கு மேற்பட்டவர்களும் வாழ்கின்ற ஊர்களையும், இடையே உள்ள ஊர்களையும் முக்கிய சாலைகளுடன் சேர்க்கும் இணைப்புச்சாலைகள் அமைக்கும் திட்டத்தின்கீழ் 1972-73 ஆம் ஆண்டில் 3 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டுள்ளது. 1973-74 ஆம் ஆண்டில் 3 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. இத்திட்டத்தால் பல கிராமங்கள் பயனடையும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

[திரு. வீ. மல்லக்கண்ணன்] [1973 மார்ச் 5

தாழ்த்தப்பட்டோர் நலனுக்காக ரூ. 9.16 கோடியும், பிற்படுத்தப்பட்டோர் நலனுக்காக ரூ. 6.56 கோடியும் செலவிடப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் பரமக்குடியில் ஹரிஜன மாணவர்களுக்கு ஹாஸ்டல் இருக்கிறது. பிற்பட்ட மாணவர்களுக்கு ஹாஸ்டல் இல்லை. ஆகவே, அங்கே பிற்பட்ட மாணவர்களுக்கான ஹாஸ்டல் ஒன்று தனியாகக் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்டோர் நல மேம்பாடு, வீட்டுவசதிக்கழகம் போன்றவற்றைத் துவக்கி, வங்கிகளிலிருந்து ஏனைய நிதி நிறுவனங்களிடமிருந்தும் நிதி உதவி பெற்று 80,000 மனைகளில் வீடுகள் கட்டுவதற்கு அரசு திட்டம் தீட்டியுள்ளது. அதை நான் வரவேற்கிறேன். இத்திட்டத்தில் 1973-74-ல் 10,000 வீடுகள் கட்டப்படும் என்பதைக் கண்டு பாராட்டுகிறேன். இந்தத் திட்டத்தை இராமநாதபுரம் மாவட்டத்திலும் தொடங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முன்னேற்றக்கழக ஆட்சி வந்தால் பள்ளிக்கூடங்கள் இடிக்கப்படும், தகர்க்கப்படும் என்று சொல்லப்பட்டது. 6 ஆண்டுகால ஆட்சியில் நாம் ஏறக்குறைய 75 கல்லூரிகள் ஆரம்பித்து இருக்கிறோம். 1966-67-ல் கல்விக்காக ரூ. 43.86 கோடி செலவழிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு திட்டத்தட்ட ரூ 100 கோடிக்கு—இரண்டு கோடி குறைவாக—செலவழிக்க பணம் ஒதுக்கப்பட்டுள்ளது. இப்படி திராவிட முன்னேற்றக்கழக அரசு உயர் கல்விக்காக எந்த அளவுக்கு செலவழிக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நம்முடைய மாநிலத்தில் உணவு உற்பத்தி மற்ற மாநிலங்களில் இருப்பதைவிட அதிகமாகச் செய்கிறோம். அப்படியிருந்தும் கூட நமக்கு வரவேண்டிய உரத்தை மத்திய அரசு அனுப்பவில்லை நமக்குத்தேவைப்படும் உரம் நைட்ரஜன் கணக்கில் 2.74 இலட்சம் டன்ஞக இருந்தாலும் இது வரையில் 1.30 லட்சம் டன்னுக்குத்தான் மத்திய அரசின் ஒதுக்கீடு கிடைத்திருக்கிறது. இதனல் இந்த ஆண்டு உரத்தட்டுப்பாடு ஏற்பட்டது. வரும் ஆண்டில் உரத்தட்டுப்பாடு ஏற்படாதபடி பார்த்துக்கொள்ளவேண்டுமென்று நமது அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.



1973 மார்ச் 5] [திரு. வீ. மல்லக்கண்ணன்]

இவ்வாறு பல்வேறு துறைகளில் நாம் விரைந்து முன்னேற்றம் செய்வதற்காக பல திட்டங்களை மத்திய அரசுக்கு அனுப்பி, அவர்களின் அனுமதியை எதிர்பார்த்து இருக்கிறோம். அவர்களுடைய அனுமதி கையெழுத்துக்காக நாம் காத்து இருப்பதைப் பற்றி திருப்பதி அவர்களும் சொன்னார்கள். அப்படிக் காத்திருக்க வேண்டிய காரணத்தால் நமக்குத் தேவையான அவசியமான திட்டங்களை நாம் நிறைவேற்ற முடியாமல் இருக்கிறோம். இதன் காரணமாகத்தான் மாநிலங்கள் சுயாட்சித் தன்மையுடன் பணியாற்ற மாநிலச் சுயாட்சி வரவேண்டுமென்று நம்முடைய அரசு வற்புறுத்துவதை நான் வரவேற்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்டம் பின் தங்கிய மாவட்டம். ஜீவ நதிகள் இல்லாத மாவட்டம் என்பதை அனைவரும் அறிவார்கள். அந்தப் பகுதியில் சிறுநீர்ப்பாசனத்திட்டங்களை விரைவுபடுத்திச் செயல்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தூர்வாரப்படாத கண்மாய்கள் ஏராளமாக இருக்கின்றன. அவைகளைத் தூர்வாருவதற்கும் அரசு விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களும் அந்த மாவட்டத்திற்கு வந்திருந்தபோது அந்த இடங்களைப் பார்வையிட்டு இருக்கிறார்கள். அந்த மாவட்டத்தில் மிகப்பெரிய கண்மாய் இராசசிங்கமங்கலம் கண்மாய். அது பல ஆண்டுகாலமாக தூர் வாரப்படாமல் இருக்கிறது. மழைகாலத்தில் அந்தக் கண்மாய் நிரம்பிவிட்டால், மக்கள் படகில் தான் செல்ல வேண்டும். அப்படி படகில் செல்லவேண்டிய நிலைமையில்லாமல், கண்மாயின் குறுக்கே பாலம் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தக்கோரிக்கையை 6—7 ஆண்டுகளாக சொல்லி வருகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் கூட கூறியிருக்கிறேன். அந்தக் கண்மாயை தூர் எடுத்து, அதன் மேல் ஜீப், கார் போவதற்கான முறையில் வசதி செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சுக்கிரப்பட்டி-ஆனந்தூர் சாலை என்று ஒரு சாலை இருக்கிறது. இந்தச் சாலை 12 ஆண்டுகளுக்கு முன்னால் ஹைவேஸில் எடுக்கப்பட்டது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட அந்தக் கிராமத்திற்கு வந்திருக்கிறார்கள். அந்தச் சாலையில் பஸ் கூட போக முடியாது. ஒரு பாலம் அந்தச் சாலையில் கட்டவேண்டும்.

[திரு. வீ. மலைக்கண்ணன்] [1973 மார்ச் 5

அதற்கான மதிப்பீடு ரூ. 3.75 லட்சம் என்று போடப்பட்டு அமைச்சர் வந்திருந்தபோது கொடுக்கப்பட்டது. அதை விரைவிலேயே நிறைவேற்றித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றிய மருத்துவ மனைகளை அரசு எடுத்துக்கொள்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். இராஜசிங்கமங்கலம் ஒன்றியத்தில் ஆனந்தூர், திருப்பாலைக்குடி ஆகிய ஊர்களில் உள்ள ஒன்றிய மருத்துவ மனைகளையும் அரசு எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1,500 மக்களும், அதற்கு மேற்பட்டவர்களும் வாழ்கின்ற ஊர்களை இணைக்கும் சாலைகளை அமைக்க ரூ. 3 கோடிக்கு திட்டம் வகுத்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்தின் கீழ் சூராணம்—புலிக்குட்டி (வழி வளனை) சாலையை சேர்த்துக்கொள்ளவேண்டும். அந்தச் சாலையில் வண்டி கூட போக முடியாதபடி இருக்கிறது. அதேபோல், அறுநூற்றுமங்கலம்-கொட்டக்குடி சாலையையும் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பகுதியில் 1,500 மக்களுக்கு மேல் வசிக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மற்றும், இளையான்குடி-பாமக்குடி சாலையிலிருந்து முனைவேந்திக்கு ஒரு சாலை செல்கிறது. அந்தச் சாலை 30 ஆண்டுகாலமாக இருந்தாலும் மாட்டு வண்டிகூட போக முடியாத அளவுக்கு இருக்கிறது. அதையும் இந்த 3 கோடி திட்டத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை இத்தோடு முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. எம். ஏ. லத்திப் :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிற இந்த நிதி நிலை அறிக்கைதொடர்பாக நடைபெற்று வரும் விவாதத்தில் நானும் கலந்து கொண்டு என்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பு அளித்ததற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து, ஒரு சில கருத்துக்களைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த நிதி நிலை அறிக்கையின் மீது இங்கே பேசிய பல்வேறு உறுப்பினர்கள், பல்வேறு வகையிலே விளக்கங்களைத் தந்திருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில், இந்த நிதி நிலை



1973 மார்ச் 5] [திரு. எம். ஏ. லத்திப்]

அறிக்கை இன்றைக்கு எல்லா நாடுகளிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிற சமதர்மத்தை, பொருளாதார சமத்துவத்தை அடிப்படையாகக்கொண்ட சோசலிசம் என்ற தத்துவத்தைக் காண்பதற்கான ஒரு திட்டமேயாகும் என்று கருதுகிறேன். ஆதலால், இந்த நிதி நிலை அறிக்கை சாதாரணமாக இன்றைக்கு நாட்டிலே ஏற்பட்டு இருக்கின்ற பொருளாதாரச் சிக்கலுக்கு, பொருளாதாரப் பிரச்னைக்கு ஒரு வழி காணுவதோடு நின்றுவிடாமல், பொருளாதாரச் சிக்கலை நாம் மேலும் ஏற்படுத்தாது இருக்கிற வகையில் என்னென்ன திட்டங்களைக் காணவேண்டுமோ அவைகளையெல்லாம் நாம் இந்த நிதி நிலை அறிக்கையில் பார்க்கிறோம். நாட்டுடைமையாக்கப்பட வேண்டுமென்ற ஒரு நிலை இன்றைக்கு நாடு முழுவதுமே இருந்து வருகிறது. அந்த நிலையை ஒட்டி, நம்முடைய நாட்டிலே இருக்கின்ற சில தனியார்களின் நிறுவனங்களைக் குறிப்பாக தனிப்பட்டவர்கள் நடத்துகின்ற பஸ் கழகங்களையெல்லாம் இன்றைக்கு நாட்டுடைமையாக்குவது என்று ஒரு அறிவிப்பை முதலமைச்சர் அவர்கள் இங்கே தந்திருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன்.

நேற்றையதினம் எதிர்க்கட்சியில் வரிசையில் வீற்று இருக்கும் நண்பர் ஒருவர் இங்கே சொன்னார். இந்த நிதி நிலை அறிக்கையிலே திராவிட முன்னேற்றக் கழகம் சாதனைகளை மட்டும் தந்து விடாமல் வேதனைகளையும் தந்து இருக்கிறது என்று அவர்கள் சொன்னார்கள். நான் அதை ஏற்றுக்கொள்கிறேன். திராவிட முன்னேற்றக்கழகம் சாதனைகளை மட்டும் தந்துவிடவில்லை. ஏனென்றால் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, திராவிட முன்னேற்றக் கழகத்தின் உழைப்பால் இந்த மன்றத்திற்கு வந்து ஒரு சிலர் இன்றைக்கு வேதனை சின்னங்களாக மாறி இருப்பதை எங்களாலே அறிய முடிகிறது. அந்த வேதனைச் சின்னங்களாக மாறியிருப்பவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சாதனைகளையும் நமக்குச் சொல்லுகிறார்கள். வேதனைகளையும் நமக்குச் சொல்கிறார்கள். அந்த உண்மையை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதை நான் மறுக்க விரும்பவில்லை. ஆனால் என்னைப்பொறுத்தவரையில் சொல்லிக்கொள்வேன். இந்த நிதிநிலை அறிக்கையை சாதாரணமாக எந்தச் சர்க்கார் வந்தாலும் சில பட்ஜெட்டரி ப்ரொவிஷன்ஸ் தருவது வழக்கம். அதை ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் பாராட்டுவார்கள். எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் துருவித்

துருவிப் பார்த்து எங்கேயாவது இடம் கிடைக்காதா என்று பார்த்து, அந்த இடத்தைப் பிடித்துக்கொண்டு இது குறை உள்ள அறிக்கை, மக்களை திருப்திப்படுத்தாத அறிக்கை என்று பேசுவது வழக்கமாக இருந்து கொண்டு வருகிறது.

மு.ப. 11-30

ஆனால் எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள் ஆளும் கட்சியினர் போட்ட நிதி நிலை அறிக்கையிலே ஏதாவது குறைகள் இருக்குமானால் அவைகளை எடுத்துச் சொல்லலாம். அதோடு அவைகளை நிவர்த்திப்பதற்கான மாற்று யோசனைகளையும் அவர்கள் தெரிவிக்க வேண்டும். அது அல்லாமல் ஆளும் கட்சியினர் போட்ட பட்ஜெட்டை துருவித் துருவிப் பார்த்து, குற்றங்களை எங்கே கண்டு பிடிக்கலாம் என்று பார்த்து பேசுவது வரவேற்கத்தக்கதல்ல. குற்றங்களைக் கூறுவதோடு, எதிர்க்கட்சியிலே இருக்கின்ற நண்பர்கள் அவைகளுக்குரிய ஆக்கப் பூர்வமான மாற்று யோசனைகளையும் சொல்லியிருந்தால் நான் வரவேற்றிருப்பேன். இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் தந்திருக்கிற இந்த நிதி நிலை அறிக்கையைப்பற்றி நான் விரிவாக விவாதிக்காமல், என்னுடைய தொகுதியைப்பற்றி குறிப்பிட்டு, சில கோரிக்கைகளை அவைமுன் வைக்க விரும்புகிறேன்.

பொதுப்பணித்துறை அமைச்சரவர்கள் இங்கே அமர்ந்திருக்கிறார்கள், அவர்களுடைய கவனத்தை தயவுசெய்து என்னுடைய பேச்சின்பால் சிறிதுநேரம் திருப்பவேண்டுமென்று மெத்த பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். வாணியம்பாடி அமைச்சரவர்களுக்கு அதிகமாகத் தெரிந்த பகுதிதான். அண்மையிலே கூட அவர்கள் அங்கே வந்திருக்கிறார்கள். வாணியம்பாடி பாலாற்றினால் எப்படிப் பிரிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் அமைச்சரவர்கள் நன்றாக அறிவார்கள். வாணியம்பாடியின் மேற்குப்பகுதி பாலாற்றினால் பிரிக்கப்பட்டிருக்கிறது. அங்கே பல்வேறு கிராமங்களிலே சுமார் இரண்டு லட்சம் மக்கள் வாழ்கின்றனர். அந்தப் பகுதியில் ஒரு பாலம் இல்லாமல் அவர்கள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். பாலாறுதானே, அதில் தண்ணீர் கிடையாதே, என்று சொல்லலாம். தண்ணீர் இல்லமால் போனாலும் மணல் இருக்கிறது. வண்டிகளும் வாகனங்களும் செல்லமுடியாமல் புதையுண்டு போவதனால், நாங்கள் அடிக்கடி அவைகளை அந்த மணல் வழியாகத் தள்ளிச்செல்ல வேண்டிய நிலை ஏற்படுகிறது.



கலெக்டர் கூட ஒரு சமயம் வண்டியைத் தள்ளிச் சென்றிருக்கிறார்கள். ஆனால் நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சரவர்கள் அந்த வழியாக வரும்போது டிரைவர் ஜீப்பை வேகமாக ஓட்டிச்சென்றுவிட்டார். அதனால் எனக்கு கொஞ்சம் கோபம் கூட ஏற்பட்டது. அமைச்சரவர்களின் ஜீப் கூட அங்கே தடைப்பட்டு நிற்கக்கூடாதா, எங்களுடைய கஷ்டங்களைத் தெரிந்துகொள்ள மாட்டார்களா என்று நான் நினைத்ததுண்டு. அமைச்சரவர்கள் தள்ளி இருந்தால் நன்றாக இருந்திருக்கும். எங்கள் கோரிக்கையும் விரைவில் நிறைவேறியிருக்கும். நான் ஏன் இவ்வாறு குறிப்பிடுகிறேன் என்றால், அந்தப் பாலம் இல்லாததால் மேற்குப் பகுதி மக்களும் கஷ்டப்படுகிறார்கள்; அதோடு அண்டை மாநிலங்களாகிய மைசூர், ஆந்திரப்பிரதேசம் இவைகளின் பகுதிகளாகிய ஆரிமணிபெட்டா, பாகர்குண்டா, ராமாபுரம் போன்ற ஊர்களோடு தொடர்பு கொள்ள முடியவில்லை.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** கனம் உறுப்பினர் அவர்கள் இந்தப் பிரச்சனையில் அதிகக் கவனம் செலுத்தாமல் வேறு விஷயங்களைப் பற்றி பேசலாம். ஏனென்றால் நான் ஏற்கெனவே இதைப்பற்றிச் சொல்லியிருக்கிறேன். இந்தத் திட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருக்கிறது.

**திரு. எம். ஏ. லத்தீப் :** மாண்புமிகு அமைச்சரவர்கள் சூசமாக இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்று தெரிவித்தமைக்கு என் தொகுதி மக்களின் சார்பில் என்னுடைய பாராட்டுக்களையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். வாணியம்பாடியில் பாலாற்றின் மேல் அமைக்கப்படும் பாலம் தான் அந்தப்பகுதியின் பொருளாதார வளர்ச்சிக்கு, கல்வி வளர்ச்சிக்கு, தொழில் வளர்ச்சிக்கு சமூக வளர்ச்சிக்கு அமைக்கப்படும் பாலமாக இருக்கும் என்று தெரிவித்து அமைச்சரவர்களுக்கு மீண்டும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இதுதான் திராவிட முன்னேற்றக் கழக அரசு நம்முடைய நாட்டிலே செய்துவருகின்ற சாதனை. இதைக்கண்டு தான் நம்முடைய மாற்றுக்கட்சி நண்பர்கள் வேதனைப்படுகிறார்கள்.

அதுமட்டுமல்ல. வாணியம்பாடியில் ஒரு மருத்துவமனை வேண்டுமென்று நீண்டநாட்களாக கோரி வந்திருக்கிறோம். அந்தக் கோரிக்கையை நம்முடைய மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர

வர்கள் பரிவுடன் கவனித்து வாணியம்பாடியில் ஒரு மருத்துவ மனையை ஏற்படுத்துவது பற்றி இந்த நிதிநிலை அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்கள். அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் பொதுப்பணித் துறை அமைச்சரவர்களிடம் இன்னொரு கோரிக்கையையும் வலியுறுத்த விரும்புகிறேன். பாலாற்றிலே இன்றைக்கு 'அப்பர் கிரவுண்ட் வாட்டர்' இல்லா விட்டாலும் 'அண்டர் கிரவுண்ட் வாட்டர்' நிறைய இருக்கிறது. பூமிக்கு அடியில் நீர்வளம் இருக்கின்ற காரணத்தால் தான் வடாற்காடு மாவட்டத்தில் கிணறுகள் தோண்டினால் நிறைய நீர் ஊறுகிறது. நிபுணர்களும் அந்த நீர் வளம் தாராளமாக இருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். இன்றைக்கு நிலைமை எப்படி இருக்கிறது என்றால், பாலாற்றின் கரையிலே இருக்கும் திருப்பத்தூர் நீர் திட்டம், ஜோலார்பேட்டை ரயில் நிலையத்திற்கு தண்ணீர் சப்ளை—இவைகள் நிறைவேற்றப்படுகின்றன. பாலாற்றின் அண்டர் கிரவுண்ட் வாட்டரை தான் மேல் விஷாரம், ராணிப்பேட்டை, ஆம்பூர் சர்க்கரை ஆலை, மற்றும் பல இடங் களுக்குப் பயன்படுத்துகிறார்கள். ஆகையால் அங்கே அண்டர் கிரவுண்ட் வாட்டர் இன்றைக்கு பெருமளவில் குறைந்திருக்கிறது. அதனால் அந்தப் பகுதி நீர்ப்பாசன வசதி இல்லாமல் ஒரு வறண்ட பிரதேசமாக ஆகிவிடுமோ என்ற அச்சம் மக்களுக்கு ஏற்பட்டிருக் கிறது. அந்தப் பகுதி வறண்டுவிடாமல் இருப்பதற்கு 1952-ல் இருந்தே ஒரு யோசனைத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதாவது பாலாறு தமிழ்நாட்டில் நுழையும் பகுதியில் கட்டப்பட வேண்டிய புல்லூர் அணையைத் துரிதமாகக் கட்டிமுடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். நமது அரசாங்கம் அதை முனைப்புடன் ஏற்றுக் கொண்டு, அந்தத் திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. ஜவ்வாது மலைப்பகுதியைச் சுற்றியுள்ள பகுதிகள் நீர்ப்பாசன வசதியில்லாமல் இருக்கின்றன. அங்கே கிணறு தோண்டவேண்டுமென்றால் அந்த மலைஜாதி மக்களுக்குப் பணவசதி இல்லை. மலைப்பாங்காக இருப்பதால் கிணறு தோண்டுவதும் கஷ்டமாக இருக்கிறது. பாம்பாறுத் திட்டத்தை நிறைவேற்றினால் அந்தப்பகுதி நீர்வளம் பெறும். எனவே





அமைச்சர் அவர்கள் அந்தத் திட்டத்தை பரிசீலித்து உடனடியாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று தாழ்மை யுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில், இந்த ஜவ்வாது மலைப்பகுதியில் நம்முடைய மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களின் கவனம் கொஞ்சம் திரும்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஜவ்வாது மலையில் வனத்துறையினரால் ஒரு உயர்தொடக்கப்பள்ளி நடத்தப்பட்டு வருகிறது. புதூர்நாடு என்ற இடத்தில் அந்தப் பள்ளி இருக்கிறது. ஜவ்வாது மலைப்பகுதியில் 40 மைல் சுற்றளவுக்கு பெருமளவில் மக்கள் வாழ்கிறார்கள். அவர்கள் கல்வி கற்க வசதி இல்லாமல் இருக்கிறது. அதைப்போலவே மற்ற வசதிகளும் அவர்களுக்கு கிடைக்கவில்லை. அவர்களும் இந்த நாட்டு மக்கள்தான். எனவே, அவர்களுக்கும் நமது அரசாங்கம் அளிக்கின்ற சலுகைகள் கிடைக்க வேண்டும். புதூர் நாட்டில் வனத்துறையினரால் நடத்தப்படும் உயர் தொடக்கப் பள்ளியை ஹைஸ்கூலாக உயர்த்தவேண்டுமென்று அவர்கள் நீண்டநாட்களாக கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஜமுனாமுத்தூரில் ஒரு ஹைஸ்கூல் இருக்கிறது. இருந்தாலும் மேற்குப் பகுதியில் ஒரு ஹைஸ்கூல் இருந்தால் அந்தப் பகுதி மக்களுக்கு வசதியாக இருக்கும். ஆகவே அந்த கோரிக்கையை நிறைவேற்றித்தரும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், ஆண்டியப்பனூரில் ஒரு உயர்நிலைப் பள்ளியை ஏற்படுத்த வேண்டுமென்று மனு கொடுத்திருக்கிறார்கள். அதையும் பரிசீலனை செய்து, உயர்நிலைப்பள்ளி தொடக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எங்கள் சமுதாயத்தின் சார்பாக ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இப்பொழுது உருது பேசுகின்ற மாணவர்களுக்கு பள்ளிக்கூடங்களில் தமிழ் கற்றுக் கொள்வதற்கு வசதி இல்லை. தமிழ் கற்றுக்கொடுக்க வசதி செய்து கொடுத்தால் 'த்ரீ லாங்வேஜ் பார்முலா'வை அடாப்ட் செய்வதாக அரசாங்கம் கருதுகிறது. அப்படி கருதுவது சரியல்ல. இங்கே நம்முடைய மாநிலத்தில் 'லிங்க்விஸ்டிக் மைனாரிட்டி' இருக்கிறது. Three language formula is only with reference to some other language

[திரு. எம். ஏ. லத்தீப்] [1973 மார்ச் 5

ஒரு மொழி திணிக்கப்படுகிறது என்றால் அதை நாம் எதிர்க்கிறோம். அரசாங்கத்தின் அந்தக் கொள்கையை நாங்கள் முழுக்க முழுக்க ஆதரிக்கிறோம். அதேநேரத்தில் இந்த மாநிலத்திலே லிங்க்விஸ்டிக் மைனாரிட்டியாக இருக்கக்கூடியவர்களின் நலன் கருதி, தெலுங்கு, உருது பேசுகிற மாணவர்களுக்கு தமிழ் கற்றுக்கொடுக்க வசதி ஏற்படுத்திக் கொடுப்பதில் தவறு இல்லை. ஆகவே, உருது பேசுகின்ற மாணவர்களுக்கு தமிழ் கற்றுக்கொடுக்க வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நான் எப்போதும் சொல்லுகின்ற ஒரு குறை. இன்றைக்கு தமிழ்நாட்டில் சுமார் 40 லட்சம் முஸ்லீம்கள் வாழ்கிறார்கள். அவர்களிலே உருது பேசுகிறவர்கள் 3 லட்சத்திற்கும் அதிகமாக இல்லை. அவர்கள் சமுதாயத்தின் பின்தங்கிய நிலையில்தான் இருக்கிறார்கள். நாம் எங்கே சென்று பார்த்தாலும் சிறு கடைகள் வைத்து நடத்துபவர்கள், குதிரை வண்டி ஓட்டுபவர்கள். ரிக்ஷாவாலாக்களாக இருப்பவர்கள் இந்த உருது பேசுகின்ற முஸ்லிம்களாகத்தான் இருப்பார்கள். பலர் ரயில்வே ஸ்டேஷன்களில் கூலிகளாகக்கூட இருக்கிறார்கள். அவர்களைப் பொறுத்தவரையில் தென்னாற்காடு மாவட்டத்தில் திண்டிவனம், செஞ்சி பகுதிகளில் அதிகமாக இருக்கிறார்கள். ஆனால் எங்கள் மாவட்டத்தில் ஒருசில பகுதிகளில் தான் குறைந்த அளவில் இருக்கிறார்கள்.

கோயம்பத்தூர் மாவட்டத்திலே ஐம்பை போன்ற பகுதிகளிலும், உடுமலைப் பேட்டையில் சில இடங்களிலும் முஸ்லீம்கள் இருக்கிறார்கள். திருச்சியில் இருக்கிறார்கள். இவர்கள் மூன்று லட்சத்திற்கு அதிகமாக இருக்கமாட்டார்கள். இவர்களை மற்ற முஸ்லீம்களிலிருந்து பிரிப்பது எங்களுடைய மதத்தின் அடிப்படையில், ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்கிற எங்கள் கொள்கைக்கே வேட்டு வைக்கின்ற வகையில் இருக்கிறது. பொருளாதார அடிப்படையில் என்றால் ஆட்சேபணை இல்லை. சென்ற காலத்தில் அப்படி இருந்தது.

The fictitious division of a community. It is a division which is quite alien to the genius of Islam.

அந்த மாதிரியாக திட்டத்தை தீட்டியிருந்தவர்கள் அப்படிச் செய்துவிட்டார்கள். உருது பேசுகின்ற முஸ்லீம்களைப் பொறுத்தவரையில், அவர்களை 'பேபார்வார்ட்'



1973 மார்ச் 5] [திரு. எம். ஏ. லத்தீப்]

என்று சொல்லி ஒரு வசதியும் செய்யப்படாமல் மிகவும் இழிவான நிலையில் இருக்கிறார்கள். நான் இந்தச் சட்டமன்றத்துக்கு வந்து இரண்டு ஆண்டு காலமாக பல முறை திரும்பத் திரும்ப வலியுறுத்திச் சொல்லிக்கொண்டிருக்கிறேன். எங்களுடைய எண்ணங்களைப் பிரதிபலிக்கின்ற, எங்களுடைய எண்ணங்களைப் புரிந்து கொண்டிருக்கின்ற இந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு இருக்கின்றபோது இது நடைபெறவேண்டும் என்று விரும்புகிறேன். இருபது ஆண்டுகாலமாகச் சொல்லிக்கொண்டிருக்கிறோம். ஆனால் அப்போது இருந்த அரசு கேட்கவில்லை. எனவே, இப்போது வலியுறுத்திச் சொல்கிறோம். இந்த அரசாவது நிச்சயமாக இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றிட வேண்டுமென்று கோருகிறோம் என்றால் அதில் அர்த்தம் இருக்கிறது. எனவே, தயவு செய்து இந்த அரசு உடனடியாக இதைச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் மிகவும் வலியுறுத்தி, மீண்டும் வலியுறுத்தி, அதையும் இந்த ஆண்டே உருவாக்க வேண்டுமென்று வலியுறுத்தி கேட்டுக் கொண்டு, இந்த நிதிநிலை அறிக்கையை மனதார வரவேற்று என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

*** திரு. துரைமுருகன்** : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, 1973-74 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை இந்த மாநிலத்தின் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த அவையின் முன்னால் வைத்திருக்கிறார்கள். அதை வரவேற்று நான் எனது கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கை, திராவிட முன்னேற்றக் கழக அரசு தான் இதுவரையில் சாதித்த சாதனைகளையெல்லாம் தொகுத்துச் சொல்லி, மீண்டும் தான் சாதிக்கப்போகின்ற சாதனைகளின் பட்டியலையும் தொகுத்து வைத்திருக்கிற சாதனைப் பட்டியல் என்றே தென்படுகிறது.

ஒரு சிங்கம் நடக்கிறபோது, ஒரு இடத்தில் நின்று, கம்பீரமாகத் திரும்பிப் பார்த்து, தான் எவ்வளவு தூரம் நடந்து வந்தோம் என்பதை ஒரு முறை கம்பீரமாகப் பார்த்து, பிறகு தான் எவ்வளவு தூரம் செல்ல வேண்டும் என்று ஒரு பார்வை பார்க்கும். அதற்கு அரிமா நோக்கு என்று பெயர். அப்படி இந்த நிதிநிலை அறிக்கையை தமிழக அரசின் அரிமா நோக்கு என்று கூறி

பெருமைப்படுகிறேன். இந்த வரவு செலவுத் திட்டத்தைப் படிக்கின்ற போது, இந்த மாமன்றத்திலுள்ளவர்கள் ஒன்றைப் பார்க்கவேண்டும். ஒரு திருக்குறளில் ஆரம்பித்து இன்னொரு குறளில் முடித்திருக்கிறார்கள் இந்த இரண்டு திருக்குறள்களுக் கிடையே இந்த ஆட்சியின் வரவு செலவு திட்டத்தை கலைஞர் அவர்கள் அமைத்திருக்கிறார்கள். ஏன் அப்படி அமைத்தார்கள் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். முதலில், "இடுக்கண் வருங்கால் நகுக—அதனை அடுத்தூர்வதஃதொப்பதில்" என்று ஆரம்பித்து "செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன் —கவிகைக்கீழ்த் தங்குலகு" என்று முடித்திருக்கிறார். திருக் குறளில் எத்தனையோ குறள்கள் இருக்கின்றன என்றாலும் அவற்றையெல்லாம் விட்டுவிட்டு இந்த இரு குறள்களை மட்டும் ஏன் தேர்ந்தெடுத்தார் என்பதை யோசிக்க வேண்டும். காரணம், மற்ற குறள்களுக்கும் இந்தக் குறளுக்கும் நிறைய வேறுபாடுகள் இருக்கின்றன. இந்த "இடுக்கண் வருங்கால் நகுக..." என்ற குறள் இடுக்கண் அழியாமை என்ற அதிகாரத்தில் வருகிறது. துன்பம் வரும்போது சிரித்தால் துன்பம் போய்விடும் என்பது சாதாரண ஒரு பொருள்.

இங்கே கூட ஒரு உறுப்பினர் பேசியதாக நினைவு. 'இடுக்கண்' என்று ஆரம்பித்திருக்கிறார், எனவே, அரசுக்கு இடுக்கண் வந்திருக்கிறது போலும் என்ற பொருள்படப் பேசினார். இது நுனிப்புல் மேய்வதாகும். ஆனால் திருக்குறளை எடுத்துப் பார்க்கிற போதுதான் அதற்கான உண்மையான பொருள் புலப்படுகிறது. பரிமேலழகர் உரைதான் திருக்குறளுக்கான உரைகளிலேயே உச்சி மேல் வைத்துப் போற்றப்படுகின்ற உரை. அதில் அவர் கூறுகிறார், "இடுக்கண் வருங்கால் நகுக—ஒருவன் வினையால் தனக் இடுக்கண் வருமிடத்து அதற்கழியாது உண் மகிழ்க ; அதனை அடுத்து ஊர்வது அஃது ஒப்பது இல்—அவ்விடுக்கணை மேன்மேல் அடரவல்லது அம் மகிழ்ச்சி போல்வது பிறிதில்லை யாகலான்" என்று கூறி, அதற்கு மேலும் விளக்கம் கொடுக்கிறார் : "வினை இனிது முடிந்தவழி நிகழற்பாலதாய மகிழ்ச்சியை அதற்கிடையே இடுக்கண் வருவழிச் செய்யவே, அவன் அழிவின்றி மனவெழுச்சியால் அதனைத் தள்ளி அக்குறைமுடிக்குமாற்றலுடையனாகலின், அதனை, யடுத்தூர் வதஃதொப்பதில் லென்றார்" என்று கூறியிருக்கிறார்.



அந்த உரைக்கு மேலும் ஒரு விளக்கத்தை சொல்ல வேண்டியிருக்கிறது. ஒருவர் ஒரு வினையைச் செய்கிறார்—ஒரு நல்ல காரியத்தை ஏற்றியிருக்கிறார், அந்தக் காரியத்தை ஆற்றுகிற போது அதற்கு எதிர்ப்பு வருகிறது. அதைக் கண்டு அஞ்சாது சிரிப்பது—அதன் மூலம் அது வெற்றியைத் தரும் என்று சொல் கிறார்கள். அப்படியானால், கலைஞர் ஆட்சிக்கு அப்படி ஒரு இடுக்கண்—ஒரு எதிர்ப்பு வந்திருக்கிறதா, அது எப்படிப்பட்ட எதிர்ப்பு என்பதை டாக்டர் கலைஞர் அவர்கள் அழகாகச் சொல்லி யிருக்கிறார்கள் : "ஆண்டு அனுபவித்த ஆதிக்கபுரியினரிடமிருந்து வரும் கடுமையான எதிர்ப்புக்கள்" இது ஒன்று.

இரண்டாவது, "இத்திட்டங்களையும் சட்டங்களையும் ஆதரிப்பர் என எதிர்பார்க்கும் இடங்களிலிருந்தும் நாம் வியப்படையும் வண்ணம் விரோதக் கணைகள் கிளம்புவதையும் வேதனையுடன் சமாளித்தவாறு நமது இலட்சியப் பயணம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது" என்று கூறுகிறார். ஆண்டு அனுபவித்துக் கொண்டிருந்தவர்கள், இந்த அரசு இந்தச் சட்டங்களை எல்லாம் கொண்டு வருமா என்று கேட்டுக்கொண்டிருந்தவர்கள், இப்படிப் பட்டச் சட்டங்கள் எல்லாம் வராது என்று எண்ணிக்கொண்டிருந் தவர்கள், இப்படிப்பட்ட சட்ட திட்டங்கள் எல்லாம் வந்தவுடனே, தாங்கள் அனுபவித்துக் கொண்டிருந்தவைகளெல்லாம் போய் விடுகின்றதே என்ற எண்ணத்தில் அந்த ஆண்டு அனுபவித்துக் கொண்டிருந்தவர்கள் இந்த சட்ட திட்டங்களையெல்லாம் கண்டு அவர்களுக்கு ஒரு அருவருப்பு, கடுப்பு ஏற்படுகிறது. எனவே, எதிர்க்கிறார்கள். அது ஒரு எதிர்ப்பு. இரண்டாவது எதிர்ப்பு, நாம் பாலூற்றி சீராட்டி வளர்த்து நமது இயக்கத்தில் காவல் தெய்வங்களாக வைத்திருந்த ஏகபோகங்களை எல்லாம் எதிர்க் கிறார்களே, அந்த ஏகபோகங்களின் எலும்பை எல்லாம் எண்ணுகிறார்களே என்று எண்ணும்போது எதிர்க்கிறார்கள்.

மூன்றாவதாக, எவரிடமிருந்து எதிர்ப்பு கிளம்புகிறது என்றால், இன்றைக்கு எதிர்க் கட்சியாக இருக்கிறவர்கள், தப்பித் தவறி நாளைக்கு ஆட்சிக்கு வந்து விட்டால், இவர்கள் இப்படி எல்லாம் முற்போக்கான சட்டங்களைப் போட்டுவிட்டார்களே, விவசாயி களுக்கு, ஏழை எளிய பாட்டாளிகளுக்கு, தொழிலாளர்களுக்கு உகந்த சட்டங்களைப் போட்டு விட்டார்களே, நாம் மீண்டும்

[திரு. துரைமுருகன்] [1973 மார்ச் 5

ஆட்சிக்கு வந்தால் இவற்றில் கைவைக்கக்கூட அனுமதிக்க மாட்டார்களே, அப்படிச் செய்தால் விட்டுக்குப் போ என்று சொல்லி விடுவார்களே என்று பயம்.

இந்த மூன்று காரணங்களால் அந்த ஆண்டு அனுபவித்த ஆதிக்கக் காரர்களிடமிருந்து எதிர்ப்பு வருகிறது. இந்தச் சட்டங்களை ஆதரிப்பர் என எதிர்பார்க்கும் இடங்களிலிருந்தும் எதிர்ப்பு வருகிறது. என்ன காரணம் என்றால், இன்றைக்கு இருக்கிற இந்த முன்னேற்றக் கழக அரசு விவசாயிகளுக்கு சட்டம் இயற்றுகிறார்கள். நிலமற்ற ஏழை எளியவர்களுக்கு பட்டா வாங்கித் தருகிறார்கள். குடிசைவாழ் மக்களுக்கு வீடுகள் கட்டித் தருகிறார்கள். வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்குகிறார்கள். தொழிலாளர்களுக்குச் சட்டங்கள் இயற்றுகிறார்கள். இப்படிப்பட்ட சட்டங்கள் எல்லாம் இந்த ஆட்சி கொண்டு வராது என்று சொல்லிக் கொண்டிருந்தவர்களுக்கு—அவர்களின் இயக்கத்தின் தத்துவத்திற்கே சாவு மணி அடித்திருக்கிறது இந்த வரவு-செலவுத் திட்டம். ஆகவே அவர்கள் எதிர்க்கிறார்கள்.

குத்தகைதாரர்களுக்கு சட்டம் வராது என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். குத்தகைதாரர்களுக்கு சட்டம் வந்து விட்டது. இன்னும் பல சட்டங்கள். கல்விக்காக பல சட்டங்கள். பஸ்கள் தேசியமயச் சட்டம், குடிசைமாற்று வாரியத் திட்டம், கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம், நிலச் சீர்திருத்தச் சட்டம் ஆகிய இந்த இவ்வளவு திட்டங்களையும் போட்டு விட்டது இந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு. அவர்களுடைய தத்துவங்கள் எல்லாம் வேரோடு வேரடி மண்ணோடு மண்ணாகப் போய்விட்ட காரணத்தால் நம்மீது வெறுப்பு வருகிறது. கொதிக்கிறார்கள், குமுறுகிறார்கள். கலைஞருக்கு அவர்களுடைய கோபம் புரிகிறது. புன்னகை பூக்கிறார். அப்போது தெரிகிறது "இடுக்கண் வருங்கால் நகுக . . ." என்ற குறளை என் தேர்ந்தெடுத்துப் போட்டிருக்கிறார் என்று.

தலைவரவர்களே, இரண்டு நாளைக்கு முன்னால் சுதேசமித்திரன் பத்திரிக்கையில், 'ஆண்டு அனுபவித்த'வர்களின் கதாநாயகர்களில் ஒருவர் பெரியவர் திரு. பக்தவத்சலம், முன்னாள் முதல்வர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி எழுதுகிறார். ஒரு கட்டுரையில். அந்தக் கட்டுரையே ஆண்டு அனுபவித்தவர்கள் நம்மீது எவ்வளவு



1973 மார்ச் 5] [திரு. துரைமுருகன்]

காழ்ப்புணர்வை காட்டுகிறார்கள் என்பதற்கு ஒரு உதாரணம். அந்தக் கட்டுரையில் அவர் எழுதுகிறார், "இந்த அரசு, இந்த வரவு செலவுத் திட்டத்தை, ஏதோ வரி ஏதும் போடாத வரவு-செலவுத் திட்டம் என்று கூறுகிறது. என்ன காரணம் என்று எனக்குத் தெரியும். மதுவிலக்கில் பணம் வந்து விட்டது" என்று அவர் சொல்கிறார். நான் கேட்கிறேன். மதுவிலக்கு வராத ஆண்டுகளில் திட்டங்கள் வரி இல்லாமலேயே போட்டிருக்கிறோமே, அதைப் பாராட்டுகிற எண்ணம் வந்திருக்கிறதா ?

இரண்டாவதாக சொல்கிறார், "மின்வெட்டு குறித்து ஒன்றுமே சொல்லப்படவில்லை" என்று. அதற்கு பல திட்டங்களை நமது மாண்புமிகு கலைஞர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஒரு திட்டத்தை, 1971 ஆம் ஆண்டில் மத்திய சர்க்காருக்கு இந்த மாநில அரசு அனுப்பியும், 1972 இறுதிவரை எந்தவிதமான பதிலும் வரவில்லை என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

மூன்றாவதாக சொல்கிறார், மதுக்கடையை அரசே ஏற்று நடத்தலாம் என்று சொல்கிறார். இது எப்படி இருக்கிறது? குதிரைக்கு குர்ரம் என்றால் யானைக்கு அர்ரம் என்பதுபோல் இருக்கிறது. அந்தப் பெரியவருக்கு நான் கூறிக்கொள்வேன், நாட்டிலிருக்கிற தனியார் எலெக்டிரிக் கார்ப்பரேஷன்களையெல்லாம் தேசிய மயம் ஆக்கியிருக்கிறோம், அதைப் பாராட்டுகிற எண்ணம் ஏற்படவில்லை இவருக்கு மத்திய அரசு வரிபோடவில்லை, மத்திய நிதி மந்திரி சவான் "has proved that he is a typical pock pocket man". என்பதாக நான் சொல்லவில்லை. சொன்னவர் மகாவீர் தியாகி. அப்படி வரி போட்டவர்கள் இருக்கிறார்கள். அப்படி இருக்க இந்த அரசு வரிபோடாதிருப்பதற்கு இந்த இடத்தில் இதனைப் பாராட்டியாக வேண்டும்.

அடுத்து, உணவு தானிய மொத்த விற்பனையை மாநில அரசு முழுமையாக எடுத்துக்கொள்ளவேண்டும் என்று மத்திய அரசு சொல்கிறது. அப்படி மாநில அரசு செய்யுமா என்று திரு. பக்தவத்சலம் கேட்கிறார். அப்படி மாநில அரசு ஏற்று நடத்தத் தயாராக இருக்கிறது என்பதை இந்த பட்ஜெட்டிலேயே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அடுத்து மத்திய அரசு அகதிகள் வரி என்பதாகப் போட்டிருந்ததை எடுத்திருப்பது பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். மாற்று வரிகள் ஏராளமாகப் போட்டுவிட்டு, ஒட்டகத்தின் மீது

[திரு. துரைமுருகன்] [1973 மார்ச் 5

பாரத்தை ஏற்றிவிட்டு, ஒரு சிறு மூட்டையைத் தள்ளிவிடுவது போல அகதிகள் வரியை நீக்கியிருப்பதை உணர்ந்துகொள்ளாமல் இப்படிப் பேசுகிறாரா என்று தெரியவில்லை.

அடுத்து அவர் சொல்கிறார். நான் முதன்மந்திரியாக இருந்த போது வருமான வரியையும், விவசாய வரியையும் இணைக்க வேண்டும் என்று மத்திய அரசு சொன்னபோது எதிர்த்தேன். இன்றைக்கு மத்திய அரசு சேர்க்கிறார்கள், இவர்கள் எதிர்ப்பார்களா என்று கேட்கிறார். இதுபற்றி அறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில் இருந்தே எதிர்ப்புக் கடிதம் எழுதப்பட்டு வந்திருக்கிறது. நமது முதல் அமைச்சர் அவர்களும், வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும் இதற்கு பலமாக ஆட்சேபம் தெரிவித்திருக்கிறார்கள். இங்கேயும் இதற்கு முதல் அமைச்சர் அவர்கள் தமது முடிவுரையில் பதில் தெரிவிப்பார்கள் என்று நினைக்கிறேன். (மணி அடிக்கப்பட்டது.) நேரம் இல்லாத காரணத்தினால் இந்த வரவு-செலவு திட்டத்தினை வரவேற்று முடிக்கிறேன். வணக்கம்.

* திரு. கா. மு. கதிரவன் : பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, 1973-74-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையினை ஆதரித்து ஒருசில வார்த்தைகளை நான் பேச முற்படுகிறேன்.

சமீப காலங்கள் வரையில் தமிழகத்தில் பட்ஜெட் கூட்டம் நடைபெறப்போகிறது என்றால் மக்கள் எல்லாம் 'என்ன புதிய வரிகள் வரப்போகின்றனவோ' என்பதாகப் பேசிக்கொள்வார்கள். எந்தப் பொருள்கள்மீது வரியைப்போடுவார்களோ என்று அஞ்சிப் பயந்து பேசப்பட்டு வந்ததை நாம் அறிவோம். ஆனால் அவற்றுக்கு எல்லாம் நேர்மாறாக வரியே இல்லாத நிதிநிலை அறிக்கை ஒன்றினை நமது மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் இங்கே சமர்ப்பித்திருக்கிறார்கள். அதற்காக அவர்களுக்கு இந்த நாட்டு மக்கள் சார்பாக நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நாட்டு மக்களுக்கு சமதர்ம வாழ்வை ஏற்படுத்தித் தந்தாக வேண்டும் என்கிற அவர்களது உள்ளக் கிடக்கினை டாக்டர் கலைஞர் அளித்துள்ள நிதிநிலை அறிக்கையில் நாம் பார்க்கிறோம். ஆகவேதான் இந்த நிதி நிலை அறிக்கை ஒரு சமதர்மப் பூங்கா என்று கூறினாலும் தவறு இல்லை என்று நான் கருதுகிறேன்.



1973 மார்ச் 5] [திரு. கா. மு. கதிரவன்]

அதுமட்டுமல்ல இந்த அறிக்கையில் ஏழை எளியவர்களுக்கு, பிச்சைக்காரர்களுக்கு, குடிசையில் வாழ்கின்றவர்களுக்கு, வீட்டு மனை இல்லாதவர்களுக்கு, விவசாயத் தொழிலாளர்களுக்கு இந்த அரசால் முடிந்த அளவுக்கு, இயன்ற அளவுக்கு முழு உதவியினையும் அளித்து அவர்களது கண்ணீரைத் துடைக்க டாக்டர் கலைஞர் அவர்கள் முற்பட்டிருக்கிறார்கள் என்பதனை நாம் பார்க்கிறபோது இதனை மனப்பூர்வமாகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். இவ்வளவு வசதி வாய்ப்புகள் எத்தனையோ இயற்கையின் இன்னல்களுக்கு இடையில்தான் செய்யப்பட்டிருக்கிறது.

சமீபத்தில் வெள்ளத்தால் தமிழகத்தில் முக்கியபணி பகுதிகள் எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டன என்பதை எல்லோரும் அறிவார்கள். இன்றையதினம் நமது அரசு மத்திய அமைச்சர்களை பலவகையில் குறைக் கூறிக்கொண்டிருந்தாலும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்த அரசு எவ்வளவு விரிவான முறையில் நல்லமுறையில்—அந்த மக்களும், அந்தப் பகுதியும் காப்பாற்றப்படுகிற வகையில் நிவாரணப் பணிகளை நல்லமுறையில் செய்திருக்கிறார்கள் என்பதை மத்திய அரசாங்கத்தில் இருந்து வந்த குழுவினர் பாராட்டி இருப்பதைக் கண்டு நாம் இந்த அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அடுத்து கண்ணொளி வழங்கும் திட்டத்தினை நாம்தான் கொண்டுவந்திருக்கிறோம். இது வேறு யாரும் நினைத்துப்பார்க்காத திட்டமாகும். இந்தத் திட்டத்தின் மூலம் ஏறத்தாழ 35 ஆயிரம் பேர்கள் கண்ணொளி திரும்பப்பெற்றிருக்கிறார்கள் என்பதை நாம் பார்க்கிறபோது நமக்கெலாம் பெரு மகிழ்ச்சி உண்டாகும்.

அடுத்து இந்த ஆண்டில் மறுவாழ்வு இல்லங்கள் திறக்கப்பட இருக்கின்றன, ஏறத்தாழ 5 ஆயிரம் தொழுநோய்க்காரர்கள் இவற்றில் சிகிச்சை அளிக்கப்பட இருக்கிறார்கள் என்கிறபோது அந்தத் தொழுநோய்காரர்களது உள்ளம் எல்லாம் கலைஞர் அவர்களையும், தமிழக அரசையும் எந்த அளவுக்குப் போற்றிப் புகழ்வார்கள் என்பதனை நினைந்து நானும் இந்த அரசை வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இந்த அரசு எவ்வளவு சலுகைகளை அளித்து வருகிறது என்பதனை எண்ணும்போது அதற்காக இந்த அரசுக்கு நன்றி செலுத்தக் கடமைப்

[திரு. கா. மு. கதிரவன்] [1973 மார்ச் 5

பட்டிருக்கிறேன். ஹரிஜனங்களுக்காக 1967-ம் ஆண்டு அறிக்கையில் ஒதுக்கப்பட்டது ஏறக்தாழ 3½ கோடி என்றால் 73–74 இல் 9½ கோடி அளவுக்கு அது உயர்ந்திருக்கிறது என்பதனைப் பார்க்கிற போதும், அதேபோல பிற்பட்ட சமூகத்தவர்களுக்கு 67 இல் ஒதுக்கப்பட்டது 1 கோடி என்றால் இன்றைக்கு 73–74 இல் 6½ கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்கிறபோதும் நான் இந்த அரசுக்கு தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட சமூகத்தவர்கள் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்பட்ட வீட்டு மனைகளில் அவர்கள் சொந்தமாக வீடு கட்டிக்கொள்ள முடியாதிருக்கிற நிலைமையைக் கண்ணுற்ற கலைஞர் தாழ்த்தப் பட்டோர் நல வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகம் என்பதாக ஒன்றினை அமைத்து அவர்களுக்கு வீடு கட்டித்தர ஒரு திட்டத்தினை இந்த அறிக்கையில் கண்டு மகிழ்கிறேன். இந்த திட்டம் எல்லா மாவட்டங்களுக்கும் பங்கிட்டு வீடுகள் அமையும் திட்டத்தினை ஏற்படுத்த வேண்டும் என்பது என் வேண்டுகோள்.

அடுத்து என் தொகுதியின் சார்பாக எங்கள் கோரிக்கைகள் சிலவற்றை ஏற்று செயல்படுத்தித் தந்தமைக்கு நான் நன்றி தெரிவிக்கிறேன்.

குறிப்பாக, இரண்டாண்டுக் காலமாக மூடிக் கிடந்த செங்கோட்டை பாலவர்மா நூற்பாலையை அரசே ஏற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்ட எங்கள் வேண்டுகோள் இன்றையதினம் ஏற்கப்பட்டு, 600 குடும்பங்களின் கண்ணீரைத் துடைக்கின்ற வகையில் அந்த நூற்பாலையை கார்ப்பரேஷன் மூலமாக எடுத்துக்கொண்டு அது இன்றையதினம் செயல்படுகிறது. அதற்காக அந்தத் தொழிலாளர்கள் சார்பாக நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து செங்கோட்டை பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் இட நெருக்கடி இருப்பதனால் புதிய கட்டிடம் கட்டித்தர வேண்டும் என்பதாக வேண்டுகோள் விடுத்தோம். இவ்வாண்டு அதற்கும் அனுமதி அளிக்கப்பட்டிருப்பதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1973 மார்ச் 5] [திரு. கா. மு. கதிரவன்]

அடுத்து தென்காசி அரசு மருத்துவ மனைக்கு அதிகப்படியான படுக்கைகள் அனுமதிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தோம். அதற்கும் அனுமதி அளிக்கப்பட்டிருப்பதற்கு நன்றி.

அடுத்து தென்காசி நகரில் தீ அணைக்கும் அணைப் படைப் பிரிவு ஒன்றை ஏற்படுத்தித் தர வேண்டும் என்ற வேண்டுகோளை விடுத்தோம். அதற்கும் அனுமதி அளிக்கப்பட்டு அரசு ஆவன செய்திருப்பதற்கு நன்றி.

என்றாலும் எங்கள் பகுதியின் தலையாய திட்டமாகிய கண்ணப்புள்ளி அணைக்கட்டுத் திட்டத்தை—அது ஆய்வில் இருப்பதாக அறிகிறேன்—உடனடியாக எடுத்து நிறைவேற்றித் தர வேண்டும். டாக்டர் கலைஞர் அவர்கள் அதனை எடுத்துக் கட்டிக் கொடுப்பார்கள் என்கிற ஆர்வத்தோடு மக்கள் இருக்கிறார்கள். அதுபோல அனுமன் நதி—குண்டார் திட்டத்தையும் நிறைவேற்றித் தர வேண்டும் என்று டாக்டர் கலைஞர் முதல்வர் அவர்களை நான் வேண்டிக்கொள்கிறேன்.

இணைப்புச் சாலைகளைப் பொறுத்தவரையிலே எனது பகுதியிலே புளியரை—தென்மேடு, கட்டளை குடியிருப்பு புதூர் பஞ்சாயத்தில் உள்ள மக்கள் திருமலைக் கோவில் செல்ல லாலா குடியிருப்பு வழியாக ஒரு இணைப்புச் சாலை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்று சுந்தரபாண்டியபுரம்—சுரண்டை இந்த இரண்டு ஊர்களை இணைக்கின்ற இணைப்புச் சாலைகளை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்று, செங்கோட்டை நகரத்திலேயுள்ள மருத்துவ மனை பழைய மருத்துவ மனையாக இருக்கிறது. அதை விரிவு படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு நெல்லை மாவட்டத்தில் ஒரு இன்ஜினியரிங் கல்லூரி அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** கனம் மாற்றுத் தலைவர் அவர்களே, இன்று இந்த வரவு-செலவு திட்டத்தைக் குறித்து ஒருசில வார்த்தைகள் பேச நான் ஆசைப்படுகிறேன்.

இந்தத் திட்டம் உண்மையிலேயே வரவையும் செலவையும் கணித்து தயாரிக்கப்பட்டதா அல்லது இந்தியாவினுடைய ஒற்றுமைக்கு உலை வைக்கவேண்டுமென்ற மூலநோக்கத்தோடு, மத்திய சர்க்காரோடு மோதிப் பார்க்க வேண்டுமென்று எண்ணத்தோடு தயாரிக்கப்பட்டதா, என்று படித்துப் பார்த்தால் தெரிகிறது. 'இடுக்கண் வருங்கால் நகுக' என்ற துவக்கத்துடன் இந்த நிதிநிலை அறிக்கை இருக்கிறது, ஆமாம், மக்கள் இன்று இடுக்கண்ணிலே சிக்கித் தவித்து, அதனால் இந்த அரசைப் பார்த்து சிரித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று புரிந்துகொண்டு தானே என்னவோ 'இடுக்கண் வருங்கால் நகுக' என்று சொல்லியிருக்கிறார்களோ என்னவோ எனக்குப் புரியவில்லை.

சென்ற ஆண்டு அவர்கள் எதிர்பார்த்த வருவாய் ரூ. 397 கோடி. ஆனால் வந்த வருவாய் எவ்வளவு? ரூ. 441 கோடி வந்திருக்கிறது. அவர்களுக்கும் தெரியாமல் சற்றேறக்குறைய ரூ. 44 கோடி வந்திருக்கிறது என்றால் அவர்கள் என்ன வரவு-செலவு திட்டம் தீட்டுகிறார்கள் என்று எங்களுக்குப் புரியவில்லை. செலவு எவ்வளவு ஆகும் என்று கணக்கிட்டிருக்கிறார்கள் என்றால் ரூ. 394 கோடி என்று கணக்கிட்டிருக்கிறார்கள். ஆனால் செலவழித்தது ரூ. 439 கோடி. ஆகவே, ரூ. 45 கோடி அவர்களுக்கும் தெரியாமல் செலவழித்திருக்கிறார்கள். இப்படி வரவு-செலவு நடத்துவது ஒன்று, சட்டமன்றத்திலே திட்டம் சமர்ப்பிப்பது ஒன்று. Budgetary fluctuations, இப்படிப்பட்ட வேறுபாடுகளோடு இந்த அரசாங்கம் இன்று திட்டம் தீட்டுகிறது.

இந்த வரவு-செலவு திட்டத்தின் மூலமாக அவர்களுக்கு என்ன கிடைக்க இருக்கிறது. There is under—estimation of revenues எவ்வளவு வரும் என்று அவர்களுக்கே புரியவில்லை. வட்டித் தொகையிலே எவ்வளவு வரும் என்று கூடப் புரியாத அளவிற்கு அவர்கள் திட்டம் தீட்டுகிறார்கள். வட்டித் தொகை வர வேண்டியதில் எக்கச்சக்கமாக ஏறி இருக்கிறது. வரவையும், செலவையும் சற்று திறமையாக, நுணுக்கமாக எந்த அளவுக்கு வருகிறது, எந்த அளவுக்கு செலவிடப்படுகிறது, எந்த அளவுக்கு வரும், எந்த அளவுக்கு செலவிடப்படும் என்று திட்டமிடாமல் ஏதோ சட்டசபைக்கு மார்ச் மாதத்திலே பட்ஜெட் வைக்க





வேண்டுமென்ற காரணத்திற்காக, பட்ஜெட்டரி பிளக்சுவேஷன்ஸ், ரூ. 44 கோடியும், ரூ. 45 கோடியும், இந்த அளவுக்கு வருகிறது என்றால், அதைப் பார்த்து மக்கள் நகைக்கத்தான் செய்வார்கள்.

இதற்கடுத்து, மத்திய அரசு அதைச் செய்யவில்லை, இதைச் செய்யவில்லை, அதைக் குறைத்து விட்டது, இதைக் குறைத்து விட்டது என்று சொல்கிறார்கள். இன்றைக்கு மத்திய அரசு எவ்வளவு பங்கு தருகிறது என்று சற்று கணக்கு போட்டுப் பாருங்கள். இன்கம் டாக்ஸ் ஷேரிலே ரூ. 50 கோடி, ஆயத் தீர்வையிலே ரூ. 44 கோடி, கிராண்ட்ஸ்-இன்-எய்டிலே ரூ. 50 கோடி ஏறத்தாழ ரூ. 145 கோடி, ரூ. 465 கோடி பட்ஜெட்டிலே பங்காக இருந்து கொண்டிருக்கிறது. அது மாத்திரமல்லாமல், மத்திய அரசு எந்த அளவுக்கு அவர்களுக்கு ஒத்தாசையாக இருந்திருக்கிறது என்பதற்கு கிராண்ட்ஸ்-இன்-எய்ட், உதவித் தொகையைப் பாருங்கள். 1966–67-லே மத்திய அரசு இவர்களுக்கு கொடுத்தது ரூ. 23 கோடி. இப்பொழுது, 1972–73-லே அது ரூ. 54 கோடியாக உயர்ந்திருக்கிறது. ரூ. 23 கோடியை ரூ. 54 கோடியாக, சற்றேறக்குறைய ரூ. 31 கோடி ரூபாய் உயர்த்திக் கொடுக்கிறார்கள். அப்பொழுது, நாங்கள் ஆட்சியிலிருந்த சமயத்தில், ரூ. 3 கோடிக்கு அதிகமாக உதவித் தொகை அவர்கள் கொடுப்பதே கஷ்டம். இன்றைக்கு உங்களுடைய புள்ளி விவரத்தைப் பார்த்தாலே, தெரியும், 1964-க்கும் 1966-க்கும் ரூ. 3 கோடிதான் மத்திய அரசாங்க உதவியிலே அதிகப்பட்டிருக்கிறது. ஆனால் இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், மாற்றாந்தாய் மனப்பான்மை என்று மத்திய அரசை குறை கூறுகிறார்களே. இந்த ஆட்சியைப் பார்க்கும்போது, மத்திய அரசாங்கம், ரூ. 23 கோடியிலிருந்து ரூ. 54 கோடி வரை உயர்த்திக் கொடுத்திருந்தும் இவர்கள் குறை கூறுவது மத்திய அரசாங்கத்தின் மீது ஒரு வெறுப்பு உணர்ச்சியையும், ஒரு பழியையும் தூக்கிப் போட வேண்டுமென்ற நிலையிலே, வரவு செலவு திட்டத்தை தீட்டியிருக்கிறீர்களே தவிர, உண்மையான கருத்தை எடுத்துச் சொல்லி, இன்னமும் அதிகமாக வேண்டும், இங்கே தேவை இருக்கிறது என்று சொல்லியிருந்தால், அது வரவேற்கத்தக்கது.

அடுத்து, மனைப்பட்டா வழங்குவதற்கு environmental improvement of slums அதே போன்று குடும்ப நலத் திட்டம், இத்தனை திட்டங்களுக்கும் அவர்கள் உதவித் தொகை தருகிறார்களே, அதை என்றைக்காவது மக்கள் மத்தியிலே சொன்னதுண்டா? கண்களைக் கவரும் விளக்குபோட்டு மனைப் பட்டா விழா நடத்துகிறீர்களே, அந்த விழாக்களிலே பெரிய மனதோடு அவர்கள் உதவித் தொகை தருகிறார்கள் என்று சொன்னதுண்டா? ஒருகாலும் கிடையாது. அதே போல, மற்ற விழாக்களிலே, குடிசை மாற்று வாரிய விழா, குடும்ப நலத் திட்ட விழா, நடத்துகிற நீங்கள் என்றைக்காவது இதைப் பற்றி சொல்லியிருந்தால் பரவாயில்லை. அத்தனையையும் இருட்டடிப்பு செய்துவிட்டு, செய்யாததைச் சொல்லி, அப்படி தவறு நடந்து விட்டது, இப்படி தவறு நடந்து விட்டது என்று சொல்வது உண்மையிலேயே வருத்தமாக இருக்கிறது. இந்த வரவு செலவு திட்டத்தைப் பார்க்கும்போது, நீங்கள் பிரிவினை மனப்பான்மையைக் கைவிடவில்லை, ஒத்தித்தான் போட்டிருக்கிறீர்கள் என்று திட்டவட்டமாகத் தெரிகிறது என்றுதான் நான் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அடுத்து, ஐந்தாண்டு திட்டத்திலே எங்களுக்கு உதவி குறைந்திருக்கிறது என்று புள்ளி விவரங்களிலே கூறியிருக்கிறார்கள். 10 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாக குறைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லும்போது அது ஏன் குறைக்கப்பட்டிருக்கிறது என்ற காரணத்தையும் சொல்லியிருக்க வேண்டும். 6-வது நிதிக் குழுவுக்கு நீங்கள் கொடுத்திருக்கிற அறிக்கையை பார்க்கும்போது, state per Capita income is more than National average of per capita income If in any State, the per என்று கூறியிருக்கிறீர்கள்.

If in any State, the per capita average of a State is more than the National average,

அதைவிட எங்காவது உயர்ந்திருந்தால், அந்த மாநிலங்களுக்கு ஒத்தாசையைச் சற்றுக் குறைத்துக்கொண்டு, மற்ற பகுதிகளுக்கு ஒத்தாசை செய்யவேண்டுமென்று குறிப்பிட்ட அந்த எண்ணத்திலே தான் நான்காவது ஐந்தாண்டிலே 4.7 சதவிகிதம் தந்திருக்கிறது மத்திய அரசு. அப்படி வேறு எந்த மாநிலத்திலேயாவது





பெர் காபிட்டா இன்கம் இம்மாநிலத்தைவிட அதிகமாயிருந்து, அந்த மாநிலத்திற்கு இந்த மாநிலத்திற்கு கொடுத்த சலுகையை விட கூட்டிக் கொடுத்திருக்கிறார்கள் என்று சுட்டிக் காட்டியிருந்தால், இதை ஏற்றுக்கொள்ளலாமேயொழிய, இல்லையென்றால், இதை எப்படி நாம் ஒத்துக்கொள்ளலாம் என்று எனக்குப் புரியவில்லை.

அடுத்து, இந்த வரவு செலவு திட்டத்திலே மின் வெட்டுக்கு முக்கியமான இடத்தைக் கொடுத்திருக்க வேண்டும். எப்போதுமே மத்திய அரசாங்கத்தை, அங்கேயே பார்த்து குறை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதற்கென்றே 41-வது விதியிலே 'கால் அட்டென்ஷன்' கொண்டு வந்து, மோகன் குமாரமங்கலம் ஏன் அப்படிப் பேசினார் என்று அறிக்கையே கொடுத்தார் முதலமைச்சர். அவர் என்ன சொன்னார்? 10—2—1973 அன்று எனக்கு நேரடியாக கடிதம் எழுதினார்கள். அந்தக் கடிதத்தை முதலிலேயே எழுதியிருந்தால் நான் விவரமாக ஆராய்ந்திருக்க முடியும் என்று சொன்னார். முதலமைச்சர் என்ன சொன்னார், இந்த மின்சார இலாகாவினுடைய தலைவர் அங்கே, டெல்லிக்குச் சென்றிருந்த பொழுது அங்குள்ள பல பேர் கவனத்திற்குக் கொண்டு வந்தார் என்றும் பிறகு 10—2—1973 அன்றுதான் நான் ஒரு கடிதம் எழுதினேன் என்றும் அவர் அவருடைய அறிக்கையிலே தெரிவித்தார். 10—2—1973 அன்று நேரடியாக எழுதிய கடிதத்தை 26—5—1972-லேயே நேரடியாக எழுதி இருக்கலாமே? அவர் என்ன சொன்னார்? என்னுடைய நேரடி கவனத்திற்கு பின்தான் வந்திருக்கிறது, 1973-ல் எழுதிய கடிதத்தை முன்னரே எழுதியிருந்தால் இன்னும் துரிதமாக நடவடிக்கைகள் எடுத்திருப்பேன். அதன் மூலமாக மத்திய மாநில அரசுக்கு மோதல்கள் வருகிறது என்று சொல்வது உங்களுக்கு வாடிக்கையாக இருக்கிறது.

இங்குள்ள தெர்மல் பிளாண்டுகளின் கப்பாசிட்டி 947 மெகாவாட்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, நான் பத்திரிகையைப் பார்த்தேன், தமிழ் நாட்டிற்கு நிலக்கரி தேவைப்படுவதாக அறிந்து கொண்டேன் என்று மோகன் அவர்கள் சொல்லியிருக்கிறார். அது பத்திரிகையிலே வந்திருக்கிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி**: மோகன் பேசிய அந்த மேடையிலே நான் இருந்தேன். பேசும்பொழுது, 10–2–1973 அன்று தான் கடிதம் வந்தது. 10–2–1973-ல் எழுதிய கடிதத்தை ஜூன் மாதத்திலேயே எழுதியிருக்கலாம். நான் நேரடியாக கவனம் செலுத்தியிருப்பேன் என்று சொன்னார். ஜூன் மாதத்திலிருந்தே நாம் அதிகாரிகளை அனுப்பி கேட்டிருந்தோம். அவர்கள் எடுத்துச் சொன்னார்கள் என்று சொல்கிறார்கள். நீங்களே காலதாமதமாகச் செய்து விட்டு, நாங்கள் ஆலோசனை அனுப்பிவிட்டோம், அதிகாரிகள் போனார்கள் என்று சொன்னால், இந்தக் குறையை எதிர்பார்த்து நீக்கத்தானே மக்கள் பிரதிநிதிகளாகிய நீங்கள் உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்கள்? அதை விட்டுவிட்டு மத்திய அரசையும் அதிகாரிகளையும் காண்பித்து மறைக்கிறீர்கள் என்று நான் குற்றம் சாட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி**: ஒரு இலாகாவுக்கு, தமிழ் நாட்டிலிருந்தோ, அல்லது வேறு மாநிலத்திலிருந்தோ அனுப்பப் படுகிற ஒரு விஷயத்தைப் பற்றி அந்த இலாகா அமைச்சருக்குத் தெரியாமல் இருப்பது தான் விசித்திரமாக இருக்கிறது என்றுதான் குறிப்பிட்டேன். எனக்கு எந்தத் தகவலும் தரப்படவில்லை, 10 நாட்களுக்கு முன்புதான் தெரிந்து கொண்டேன், அதுவும் பத்திரிகையிலே பார்த்து தெரிந்துகொண்டேன் என்று அவர் சொல்லியிருக்கிறார். இந்த விஷயத்தை மத்திய சர்க்காருக்கு இங்கிருக்கிற அரசோ அல்லது இந்த அரசு இலாகாவோ, அந்த அரசிடமோ, இலாகாவிடமோ தெரியப்படுத்தவில்லை என்ற தவறான கருத்து மக்கள் மத்தியிலே பரப்பப்படுகிற வகையிலே அந்த அமைச்சர், பொறுப்பிலுள்ள அமைச்சர், எனக்கு அப்பொழுதே நேரடியாக கடிதம் எழுதியிருக்கலாமே என்று கூறுகிறாரே என்று சொன்னேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி**: பொறுப்புள்ள முதலமைச்சர், நீங்களே அன்றைக்கே எழுதியிருந்தால், இன்னும் சிறப்புடையதாக இருந்திருக்குமே? நீங்கள் ஏன் அன்றைக்கே எழுதவில்லை.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி**: இன்னொன்றையும் புரிந்து கொள்ள வேண்டும். நிலக்கரி இல்லாமல் எண்ணூர் வேலை என்றைக்கும் நின்றுவிடவில்லை. நிலக்கரி எதிர்காலத்திலே



தேவைப்படும் என்பதற்காக எடுத்துக்கொள்ளப்பட்ட முயற்சிகளே யல்லாமல், நிலக்கரி இல்லாமல் ஒரு நாளும் எண்ணூர் வேலை நின்றுவிடவில்லை என்று தெரிந்துகொள்ள வேண்டும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி**: நின்றதோ நிற்கவில்லையோ நீங்களே சொன்னீர்கள், சிங்கரேணியிலிருந்து நிலக்கரி வருவதில் தாமதம் ஆகிவிட்டது என்று சட்டசபையிலே சொன்னீர்கள். இப்பொழுது நீங்களே நிலக்கரியில்லாமல் நிற்கவில்லை என்று சொல்கிறீர்கள். நிலக்கரி தேவையில்லையென்றால் . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி**: சொல்லாததையெல்லாம் சொல்லியதாக நினைத்துக்கொண்டு அதற்கு ஒரு விமர்சனம் செய்வது ஒரு பழக்கமாகிவிடக் கூடாது. நிலக்கரி தேவையில்லை என்று எப்பொழுதும் சொல்லவில்லை, தயவுசெய்து நீங்கள் அப்படி சிபாரிசு செய்துவிடாதீர்கள். தேவையில்லை என்று யாரும் எப்பொழுதும் சொல்லவில்லை. டாக்டர் ஹாண்டே அவர்கள் அன்றைக்கே அதைப்பற்றி ஒரு கேள்வியை எழுப்பி முன்ஜாக்கிரதையாக இருக்கவில்லை என்று சொன்னார்கள். அன்றைக்கே அதற்கு விளக்கம் அளிக்கிற வகையில் ஆந்திராவிலிருந்து இரயில்கள் வந்து சேரவில்லை என்று டாக்டர் ஹாண்டே அவர்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. நிலக்கரி யில்லாமல் நின்றுவிடவில்லை என்று தான் குறிப்பிட்டேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி**: எண்ணூரிலே கை கால் மாத்திரமல்ல, இயந்திரமே சரியாக வேலை செய்யவில்லை. அங்கே . . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி**: பதினைந்து நாட்களுக்கு முன்பு அதை நான் பார்த்துவிட்டு வந்தேன். தண்ணீர் இறைப்பதற்காக இருக்கின்ற குழாய் மண்ணை இறைக்கிறது என்று சொன்னீர்கள். மண்ணை இறைப்பதற்குப் போடப்பட்ட குழாய் தான் அது என்பதை அறிந்தேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி**: யார் எப்படிச் சொன்னாலும் அதை திரு. ஓ.பி.ஆர். போய் பார்த்திருக்கலாம், அதற்காக நேரத்தை வீணாக்கிக் கொண்டு முதலமைச்சர் போய்ப் பார்த்திருக்க வேண்டியதில்லை. எனக்கும் தெரியாது.

அவர்களுக்கும் தெரியாது, இது ஒரு டெக்னிக்கல் மேட்டர். இதற்காக முதலமைச்சர் அங்கே போய் இருக்கவேண்டாம். அதைச் சீரமைப்பதற்கு என்ன செய்தீர்கள்? . . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** எண்ணூரில் இருக்கின்ற மணல் வாரி இறைக்கின்ற குழாய் சீர்படுத்தப்பட்டு இப்பொழுது வேலை செய்துகொண்டிருக்கிறது. இருந்தாலும் முன் ஏற்பாடாக ஹாலந்திலிருந்து வேறு ஒரு டிரெட்ஜர் கப்பல் மூலம் வரவழைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** அது மட்டும் போதாது, வாட்டர் கூலர்ஸ் கட்டுவதற்கு அங்கே ஏற்பாடு செய்திருப்பீர்களானால் அது பாராட்டுக்குரியது . . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** ஒன்றைத் தவறாக ஆளும் காங்கிரஸ் கட்சியினர் புரிந்து கொண்டிருக்கிறார்கள். நான் திரு ஏ. சுப்பிரமணியம் அவர்கள் பேசிய பேச்சை படித்துப் பார்த்தேன். அவரும் அப்படித்தான் பேசியிருக்கிறார். இப்பொழுது அம்மையார் அவர்களும் அப்படித்தான் பேசிக் கொண்டிருக்கிறார்கள். திரு. கே. என். குமாரசாமி அவர்களும் அப்படித்தான் பேசியிருக்கிறார்கள். அவர்கள் அன்றைக்குப் பேசிய பொழுது எண்ணூர் மின்சார நிலையத்திலே கடல் தண்ணீர் நுழைகிறது, அதனால் இயந்திரங்கள் பழுதடைந்துவிட்டன, அதைத் தடுக்க முடியவில்லை என்று பேசியிருக்கிறார்கள். நம்முடைய ஆசையே கடல் தண்ணீர் உள்ளே வர வேண்டும் என்பதுதான். குசஸ்தலையாறு வழியாக கடல் தண்ணீர் உள்ளே வந்தாக வேண்டும். அங்கே மணல் மேடிட்டு விட்ட காரணத்தினாலே தண்ணீர் வரவில்லை. தண்ணீர் வந்தால் மின்சாரத்தை உற்பத்தி செய்கின்ற இயந்திரங்கள் குளிர்பட்டு விடும்.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** ஆன் எ பாயின்ட் ஆப் பர்ஸனல் எக்ஸ்ப்ளநேஷன் சார், மணலுக்குப் பதிலாக தண்ணீர் வந்து கொண்டு இருக்கிறது என்று நான் பேசவில்லை. தண்ணீருக்குப் பதிலாக மணல் வந்ததாகச் சொன்னேன்.





**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** திரு. குமாரசாமி அவர்கள் அப்படிப் பேசியிருக்கிறார்கள். சில நேரங்களிலே நான் இந்த அவைக்கு வரமுடியாது போய்விடுகிறது. அவர்கள் பேசியதை நான் படித்துப் பார்த்தேன், கடல் தண்ணீர் உள்ளே நுழைந்திருக்கிறது, தடுக்க முடியவில்லை என்றுதான் பேசியிருக்கிறார்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** ஞாயிற்றுக் கிழமை பார்த்து விட்டு சொன்னதற்காக நன்றி. இவ்வளவு காலதாமதமாகச் சென்று பார்த்துவிட்டு சொன்னதற்காக நன்றி. அந்த அனல் மின்சார நிலையத்தில் எபிஷியன்ஸி குறைவாக இருக்கிறது. அதற்குக் காரணம் என்ன என்பதைப் பார்க்க வேண்டும். எஸ்.இ. (ஆப்பரேஷன்ஸ்) என்று ஒரு பதவி இருக்கிறது அதிலே பணியாற்றக்கூடியவர் எலக்டிரிக்கல் எஞ்சினியராகத்தான் இருப்பார். ஆனால் அதிலே மெக்கானிக்கல் எஞ்சினியரைப் போட்டிருக்கிறார்கள். காரணம் என்ன? அவர்களுக்குச் செல்வாக்கு இருக்கிறது இந்த அரசாங்கத்திலே . . . .

**மாண்புமிகு திரு ஓ. பி. இராமன் :** அவர்கள் தெரிந்து பேசினால் நல்லது. இயந்திரங்கள் சம்பந்தப்பட்டவரை மெக்கானிக்கல் எஞ்சினியர்தான் போடப்படுகிறார். எலக்ட்ரிக்கல் பொறுத்த வரையிலும் எலக்ட்ரிக்கல் எஞ்சினியர்தான் போடப்படுகிறது. ஆகவே, இதிலே சிபாரிசு எதுவும் தேவையில்லை. எனவே, மெக்கானிக்கல் எஞ்சினியர் போடப்பட வேண்டிய நிலையில் மெக்கானிக்கல் எஞ்சினியர்தான் போடப்பட்டிருக்கிறது.

**திரு. நா. வீராசாமி :** எஸ்.இ.க்கள் போடும்பொழுது சீனியாரிடி பார்த்து புரமோஷன் கொடுக்கப்பட வேண்டும். மெக்கானிக்கல் எஞ்சினியர்ஸ் எலக்ட்ரிக்கல் எஞ்சினியர்ஸ் இவர்கள் எல்லாம் சீனியாரிடி பார்த்துத்தான் போடப்படுகிறார்கள். அம்மையார் அவர்கள் தெரியாமல் பேசுகிறார்கள் என்று நினைக்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** எனக்குத் தெரியாமல் இருக்கலாம். ஆனால் நியாயமாக இருக்க வேண்டும். S.E. Operation was an Electrical Engineer previously, but today, it is being occupied by a Mechanical Engineer. Why?

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1973 மார்ச் 5

அப்படி இருந்தால்தான் வேலைகளைச் சரிவரச் செய்ய முடியும். எலக்ட்ரிக்கல் எஞ்சினியருக்குப் பதிலாக மெக்கானிக்கல் எஞ்சினியரைப் போட்டு புரமோஷன் கொடுப்பது நியாயமல்ல, அதிலே திறமையும் இருக்காது. நீங்கள் நெய்வேலியிலே முழு அளவிற்கு உற்பத்தி செய்ய முயற்சிகள் எடுத்துக் கொள்ளாமல் கேரளாவிலிருந்தும், மைசூரிலிருந்தும் மலிவான விலையிலே மின்சாரம் கிடைக்கிறது என்ற காரணத்தினால் இங்கே உற்பத்தித் திறனைப் பெருக்குவதற்கு ஊக்கத்தைத் தரவில்லை. அங்கே தொழிலாளர் மத்தியிலே சிப்பந்திகள் மத்தியிலே எப்படி எப்படியெல்லாம் எந்த எந்தப் பிரச்சினைகளை எல்லாமோ கிளப்பினீர்கள். முதலமைச்சர் அங்கே சென்றார் என்ன பேசினார். ஜூனியர் எஞ்சினியராக ஐந்தாண்டுக் காலம் பணியாற்றினால் அசிஸ்டெண்ட் எஞ்சினியராக பதவி உயர்வு கொடுக்கப்படும். அசிஸ்டெண்ட் எஞ்சினியராக 5 ஆண்டுக் காலம் பணியாற்றியிருந்தால் இ. இ. பதவிக்கு வரலாம் என்று எல்லாம் அறிவித்துவிட்டு வந்தார்கள். ஆனால் இன்றைக்கு தமிழகத்தின் மற்ற இடங்களிலே பார்த்தால் ஜே.இ. யாக 10 ஆண்டுக் காலம் பணியாற்றியும் கூட அவர்களுக்கு ஒன்றும் கிடைக்கவில்லை. அசிஸ்டெண்ட் எஞ்சினியராக பதவி உயர்வு கிடைக்கவில்லை. ஏ. இ. க்கள் புரமோஷனுக்கு சான்ஸே கிடையாது, அவர்கள் அப்படியே ரிடையர் ஆகக்கூடிய நிலைமைதான் இருக்கிறது.

**திரு. செ. கந்தப்பன்** : அம்மையார் அவர்கள் ஒரு தவறான தகவலைச் சொல்கிறார்கள். மூன்று வருடம் இளநிலைப் பொறியாளராக பணியாற்றியிருந்தால் கூட அவர்கள் உதவிப் பொறியாளராக வருவதற்கு இடம் இருக்கிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி** : அது உங்கள் சாக்கடை வாரியத்திலே. மூன்று வருடம் என்ன? முதல் வருடத்திலேயே அங்கே ஆகிவிடுகிறார்கள். ஆனால் பி.டபிள்யூ.டி.யில் 10 ஆண்டு காலம் ஆகியும் கூட அவர்களுக்குக் கிடைப்பதில்லை.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : சாக்கடை வாரியம் என்று எதுவும் அமைக்கப்படவில்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி** : அந்த தமிழ் வார்த்தைதான் நல்லதாக இருக்கும் என்று நினைக்கிறேன்.



மார்ச் 5, 1973]

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : அவரவர்களுக்கு எது பிடிக்கிறதோ அதைப் பயன்படுத்தலாம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி** : நாம் செய்கிற வேலையை ஒத்துக்கொள்வதிலே ஒன்றும் அவமானம் கிடையாது. என்ன செய்கிறோமோ அந்த வேலைக்குப் பெயர்தான் அது. சுய தேவையைப் பூர்த்தி செய்வதற்கு முயற்சிகள் செய்யாமல் கேரளாவிலிருந்தும் மைசூரிலிருந்தும் கிடைக்கும் என்று நினைத்ததால்தான் இன்றைக்கு இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டது. மத்திய அரசாங்கம் என்று பழிபோடுவது சரியல்ல. நெய்வேலியும், கல்பாக்கமும்தான் மத்திய அரசாங்கத்தின் நேரடிப் பொறுப்பில் இருக்கிறது. தமிழகத்திலே உற்பத்தித் திறனை முழுமையாகப் பெருக்க வேண்டும் அப்படியும் பற்றாக்குறை என்ற நிலைமையில்தான் கேரளாவிற்குப் போவேன், மைசூருக்குப் போவேன் என்ற முறையிலே நீங்கள் அனல் மின்சாரத் திட்டத்திற்கு ஊக்கம் கொடுத்திருந்தால் . . . .

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்** : நெய்வேலி மின்சாரத் திட்டத்தைப் பொறுத்தவரையில் என்ன ஊக்கம் கொடுக்க வேண்டுமென்று தெரியவில்லை. ஆறு மாதங்களுக்கு முன்னாலேயே நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் கடிதம் எழுதியிருக்கிறார்கள். நானும் எழுதியிருக்கிறேன். உங்களுடைய அமைச்சர் மோகன் குமாரமங்கலம் அவர்களுக்கும் எழுதியிருக்கிறோம். அதனுடைய உற்பத்தித் திறனை உயர்த்த வேண்டுமென்று கேட்டு இருக்கிறோம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி** : ஆறு மாதத்திற்கு முன்னாலே எழுதியதை 6 வருஷத்திற்கு முன்னாலேயே ஏன் செய்யவில்லை என்றுதான் நான் கேட்கிறேன். 1967 ஆம் ஆண்டு முதல் 1973 வரையில் உங்கள் ஆட்சிதானே, நீங்கள்தானே இருந்திருக்கிறீர்கள், நீங்கள் அப்பொழுதே செய்திருக்க வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : இதே மாமன்றம் கல்பாக்கம், எண்ணூர், நெய்வேலி இரண்டாவது கட்டம் ஆகியவை பற்றியெல்லாம் 1969 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் என்று கருதுகிறேன், எல்லாக் கட்சித் தலைவர்களும் ஏகமனதாக ஏற்றுக்

கொண்டு ஒரு தீர்மானம் நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. தேசிய வளர்ச்சி மாநாடு நடைபெறுகின்ற பொழுதும் இதைப்பற்றி எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. பிரதமரைச் சந்தித்துப் பேசுகின்றபொழுதும் இதைப்பற்றி எடுத்துச் சொல்லி இருக்கிறோம். திரு. மோகன் குமாரமங்கலம் அவர்கள் பதவிக்கு வந்த பிறகும் பலமுறை வலியுறுத்தப்பட்டிருக்கிறது. எழுதிய கடிதத்தைப் படித்துக்கூடக் காட்டியிருக்கிறேன். பொருளாதார நிபுணர்கள் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள் என்ற கருத்துதான் கூறப்பட்டது. திரு. பக்தவச்சலம் அவர்கள்கூட லால்பகதூர் சாஸ்திரி காலத்தில் எழுதினார்கள். இப்பொழுது இயலாது என்றுதான் எழுதிவிட்டார்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** எழுதினார்கள், எழுதினார்கள் என்று சொல்வதிலே பிரயோசனம் கிடையாது. அதைத் திருத்துவதற்கு என்ன செய்ய வேண்டுமென்று ஆராய்ந்திருக்க வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அம்மையார் அவர்கள் கடற்கரைக் கூட்டத்திலே சொன்னார்கள், மத்திய அரசை அலட்சியப்படுத்திவிட்டு நீங்களே இந்தக் காரியங்களைச் செய்யுங்கள், பிறகு மத்திய அரசு 'ரேட்டிபிகேஷன்' கொடுத்துவிடும் என்று சொல்லியிருக்கிறார்கள். செய்யலாம், ஆனால் அதை, தமிழ்நாடு தனியாக ஆகிவிட்டது என்று பிரகடனம் செய்துவிட்டுத்தான் செய்ய வேண்டும். இப்பொழுது இயலாது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** எந்த அளவிற்கு மத்திய சர்க்காரிடமிருந்து பெற வேண்டுமோ அவற்றிற்காக அவர்களைக் கேளுங்கள். ஆனால் சாதாரணமாக உங்களுடைய வரவு-செலவுத் திட்டத்திலே உருவாக்க முடியும் என்றால், நீங்களே செய்யலாமே. டெக்னிகல் சேங்ஷனுக்கு இந்த சென்ட்ரல் பி.டபிள்யூ டி.க்கு அனுப்பப்படுவதை நீங்களே செய்யலாமே? குடகனாறு திட்டத்திற்கு வேலை செய்ய ஒதுக்கீடு செய்யவில்லையா? அதைப் போல் இதற்கும் செய்திருக்கலாமே. எதற்கு மத்திய சர்க்காரின் பணம் தேவையோ அவைகளுக்காக மட்டும் காத்திருக்க வேண்டியதுதான். ஆனால் சாதாரணமாக நீங்களே செய்யக்கூடிய





சிறுசிறு திட்டங்களையாவது முடித்திருக்கலாமே. மின்சார வெட்டை எடுத்துக்கொண்டால் ஏதோ மத்திய சர்க்கார், மத்திய சர்க்கார் என்று சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் சேர்க்க வேண்டுமென்று சொல்லியிருக்கும் திட்டங்களைக்கூட, குருவியாறு, நெல்லித்துறை, காடம்பாறை திட்டங்களைக்கூட ஐந்தாண்டுத் திட்டங்களிலே சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அது 74 இல் ஆரம்பித்து 80 இல் முடியும். நீங்கள் முன்பிருந்தே துரிதமாக வேலை செய்து அனல் மின்சாரத்தை எப்படி அதிகரிப்பது, இருக்கின்ற அனல் மின்சார நிலையங்களை முழு அளவிற்கும் எப்படிப் பயன்படுத்துவது, எப்படி 'எஃபிசியன்ஸி அண்ட் ஆப்பரேஷன்' மூலம் நஷ்டத்தைக் குறைப்பது என்பதைப் பற்றியெல்லாம் சிந்தித்திருக்க வேண்டும். அப்படிச் சிந்திக்காமல் இருந்துவிட்டு இன்றையதினம் 75 சதவிகிதம் மின்சார வெட்டு என்று சொல்வதனால் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இத்தனையையும் செய்துவிட்டு நாங்கள் புரட்சிகரமான பட்ஜெட்டைக் கொண்டு வந்திருக்கிறோம், புதிதாக வரியே இல்லாத பட்ஜெட் என்று சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள்.

397 கோடி ரூபாய்க்கு வரும் என்று சென்ற ஆண்டில் எதிர்பார்த்தார்கள். ஆனால் 465 கோடி ரூபாய் வரையில் வருமானம் வந்திருக்கிறது. இந்த 68 கோடி ரூபாய் அதிக வருமானம் எப்படி வந்தது? இப்படி ஒரு ஆண்டிலே 68 கோடி ரூபாயை அதிகமாகப் பெறக்கூடிய அரசாங்கம் இன்னும் வரி போடவில்லை என்று வருத்தப்படுவதைப் பார்க்கும்பொழுது சிரிப்புத்தான் வருகிறது. 68 கோடி ரூபாய் அதிகமாகப் பெற்றிருக்க முடிகிறது என்றால் நீங்கள் வரி விதி விலக்கு அல்லவா கொடுத்திருக்க வேண்டும். பங்களா தேஷ் நெருக்கடிக்காகப் போடப்பட்ட வரிகளை நீங்கள் ஏன் வாபஸ் வாங்கவில்லை? மத்திய சர்க்கார் வாபஸ் வாங்கிக் கொண்டிருக்கிறது. ஏப்ரல் 1 ஆம் தேதி முதல் வாபஸ் வாங்கிக் கொள்ளப்படும் என்று மத்திய அரசாங்கம் தெரிவித்திருக்கிறதே, ஏன் மாநில அரசாங்கமும் அப்படிச் செய்யவில்லை. கேளிக்கை வரி, ஸ்டாம்ப் வரியைக் கூட்டினார்கள். இதை ஏன் விதிவிலக்கு செய்யக்கூடாது? நீங்கள் எதிர்க்கட்சியிலே இருக்கும்பொழுது, நாங்கள் வந்தால் நகர்ப்புறச் சொத்துக்களுக்கு வரியே போட

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1973 மார்ச் 5

மாட்டோம் என்று கூறினீர்களே. அந்த வரி இப்பொழுது 1½ கோடி ரூபாய் வரையில் போடப்பட்டிருக்கிறது. அதை விதி விலக்கு கொடுக்கிறோம் என்று ஏன் சொல்லக்கூடாது?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் பேச ஆரம்பித்து 24 நிமிடங்கள் ஆகிவிட்டன. சீக்கிரம் முடித்து விடுங்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** அதிலே 12 நிமிஷங்கள் குறுக்கிடுகள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சரி, இன்னும் இரண்டு நிமிஷங்களிலே முடித்து விடுங்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** அந்த வகையிலே இன்றைக்கு நீங்கள் புது வரிகளைப் போடவில்லையே என்று வருத்தப்படுவதைக் காட்டிலும் வரி விலக்கு செய்கிறோம் என்று சொல்லியிருந்தால் சிறந்ததாக இருந்திருக்கும்.

சமதர்ம சமுதாயத்தைப் படைப்பதற்காகக் கொண்டு வந்திருக்கிறோம் என்று சொல்லிக்கொள்கிறீர்கள். உங்களுடைய சமதர்மம் உள்நோக்கத்தோடு செய்யப்படக்கூடிய சமதர்மமே தவிர, சமதர்மப் புரட்சியில் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தோடு கொண்டு வந்திருக்கிறீர்களா என்றால் கிடையாது. ஏனென்றால், பஸ்களைத் தேசிய மயமாக்கினோம் என்று பெருமையோடு சொல்லிக் கொள்ளுகின்றீர்கள். அதிலும் பணக்கார பஸ் முதலாளிகளுக்கு ஒரு சட்டம், 50 பஸ்களுக்கு மேல் வைத்திருக்கும் பணக்கார முதலாளிகளுக்கு ஒரு சட்டம் தனியாக இருக்கும். சிறிய சிறிய முதலாளிகளுக்கு ஒரு சட்டம் இருக்கும். இப்படி இரண்டிலும் சமதர்ம வேறுபாட்டை இப்பொழுதே கண்டுகொண்டிருக்கிறோம். மால்கோ தொழிற்சாலையைத் தேசிய மயமாக்கப் போகிறோம் என்று சொல்கிறீர்கள். அந்தத் திட்டமும் உள்நோக்கத்தோடுதான் அமைந்திருக்கிறது.

காரணம் என்னவென்றால், கும்மிடிப்பூண்டியிலே உள்ள சக்தி பைப் கம்பெனி, நாம் கொடுத்த பணத்திற்கே பைப்புகளைக் கொடுக்க முடியாத நிலைமையில் திறமையில்லாமல் இருக்கிறதே, அதற்கு 1½ கோடி ரூபாய் கடன் கொடுக்க முன் வந்தீர்களே தவிர



1973 மார்ச் 5] [திருமதி த. ந. அனந்தநாயகி]

அதை ஏன் தேசிய மயமாக்க முன்வரவில்லை. அதில் மட்டும் முதலாளியை ஏன் தூக்கி நிறுத்துகிறீர்கள்? ஆனால் இங்கே மத்திய சர்க்காருக்கும், மாநில சர்க்காருக்கும் மோதல் ஏற்பட வேண்டுமென்ற அளவில் மால்கோ கம்பெனியை தேசிய மயமாக்கப் போகிறோம் என்று சொல்கிறீர்கள். முன்கூட்டியே அனுமதியை வாங்கிக் கொண்டு தேசிய மயமாக்கி இருக்க வேண்டும். தவறான முறையில் நடக்கும் தொழிற்சாலைகளை எடுப்பது என்றால் இதோ இருக்கிறதே சக்தி பைப்ஸ் தொழிற்சாலை, அதற்கு ஏன் நீங்கள் போகவில்லை?

இன்றைக்கு மால்கோ கம்பெனியைப் பற்றிச் சொல்லிக் கொண்டு சமதர்மத்தைப் பார்த்தீர்களா என்று சொன்னால் அதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. இன்னும் ஊரிலே பேசிக் கொள்கிறார்கள், இன்னும் கொஞ்ச நாட்களிலே சினிமாக் கொட்டகைகளையெல்லாம் தேசிய மயமாக்கி விடுவார்கள், ஏனென்றால் இவர்கள் கட்சியில் இருந்த ஒரு நடிகர் வெளியே வந்திருக்கிறார், அவர் நடித்த படங்களை எந்தக் கொட்டகையிலேயும் காட்டக்கூடாது, அப்படிக் காட்டும் கொட்டகைகளை நடத்த விடக்கூடாது என்று தவறான முயற்சியிலே இறங்கியிருக்கிறார்கள் என்று ஊர் மக்கள் பேசிக் கொள்கிறார்கள். சட்டசபையிலேயும் சிலர் சொன்னார்கள்.

இந்த அளவில் தேசிய மயமாக்குகின்ற உங்கள் கொள்கை பயங்கரமாக இருக்கிறது. முதலமைச்சரின் திருமகனார் நடித்த படங்களே காட்டப்படும் என்ற நிலை வந்தாலும் வரலாம். தேசிய மயமாக்குவது என்றால் அதை ஒரு கொள்கையின் அடிப்படையில் செய்தால் பரவாயில்லை. ஆனால் விருப்பு வெறுப்போடு, கட்சிக் கண்ணோட்டத்தோடு, யார் வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்று பார்த்து தேசிய மயமாக்குவதைப் பார்க்கும்பொழுது சிரிப்புதான் வருகிறது. இதைப் பார்த்து, 'இடுக்கண் வருங்கால் நகுக' என்று கூறியிருப்பதைப்போல் நகைப்பதைத் தவிர வேறொன்றும் சொல்ல முடியவில்லை.

கைத்தறி நெசவாளர்கள் பிரச்சினைகளை எடுத்துக் கொண்டால் அவர்களுக்கு அதைச் செய்ய வேண்டும், இதைச் செய்ய வேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். ஆனால் நீங்கள்

எடுக்கவில்லை என்று மத்திய அரசாங்கத்திலே சொல்கிறார்கள். இங்கேயுள்ள சட்ட மந்திரி நுணுக்கம் தெரிந்தவர், மத்திய சர்க்கார் நேரடியாகக் கொடுக்காது, நாங்களும் நேரடியாக வாங்க மாட்டோம் என்று சொல்கிறார். அவர்கள் நேரடியாகக் கொடுக்கமாட்டார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். பம்பாய் ஜவுளி கமிஷனர் அவர்கள்தான் கொடுப்பார்கள். அவர்கள் கொடுத்த நூலை நீங்கள் வாங்கினீர்களா என்று கேட்டால் அதற்குப் பதில் இல்லை. மத்திய சர்க்கார் நேரடியாகக் கொடுப்பதுமில்லை, நாங்கள் நேரிடையாக வாங்குவதுமில்லை என்று சொல்கிறார். நீங்கள் வாங்க வேண்டியதில்லை, டைரக்டர் வாங்க வேண்டும். அங்கேயுள்ள ஜவுளி கமிஷனர் கொடுத்ததை இங்கேயுள்ள டைரக்டர் வாங்கினாரா என்று கேட்பதற்குப் பதில் சொல்லாமல், சட்டத்தின் உள்ளே புகுந்துகொண்டு பேசுவதாகத்தான் இருக்கிறது.

கைத்தறி நெசவாளர்களுக்கு நூலைக் கொடுப்பதிலே சங்கடங்கள் இருக்கின்றன. இன்றைக்கு நூல் விலை எக்கச்சக்கமாக ஏறி இருக்கின்றது. அப்படியே நூல் கிடைத்தாலும் சந்தையில்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையில் கைத்தறி நெசவாளர்களின் பிரச்சினையிலே உண்மையிலேயே இந்த அரசுக்கு அக்கறை இருக்குமானால், ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டிலே உள்ள சிப்பந்திகள் கைத்தறி துணியிலான யூனிபார்ம்களை அணிய வேண்டும் என்று சொல்லக் கூடாதா? எனக்குக் கிடைத்திருக்கிற தகவல் என்னவென்றால், சக்தி டெக்ஸ்டைல்ஸிலே உள்ள மில் துணிகளை வாங்கிக் கொடுக்கப் போவதாகத் தகவல் வந்திருக்கிறது.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** நம்மைவிட அந்தத் தொழிலாளர்கள் கைத்தறித் தொழிலாளர்களிடம் மிகுந்த அக்கறை காட்டுகிறார்கள். ஆகவே, இந்தத் துறையிலே கைத்தறி ஆடைகளை வாங்க வேண்டுமென்பதற்காக அவர்களே வட்டியில்லாத கடனுக்குப் பணம் கேட்டு, அரசு வழங்கியிருக்கிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** கடன் கொடுப்பதைப்பற்றிச் சொல்லவில்லை. யூனிபார்மைப்பற்றிச் சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** யூனிபார்மைப் பொறுத்துத்தான் சொல்கிறேன்.



**திருமதி த. ந. அனந்தநாயகி :** அப்படி வாங்கினால் பரவாயில்லை. எனக்குக் கிடைத்த தகவலைச் சொல்கிறேன்.

கடைசியாக, வாரியங்கள் என்று பார்க்கும்பொழுது அரிசனங்களுக்கு வீடு கட்டும் வாரியம் அமைக்கப் போகிறார்கள். எதற்காக இப்படி வாரியங்கள் அமைக்கப்படுகின்றன என்று புரியவில்லை. ஒருவேளை அமைச்சர்களின் திறமை போதாது என்று கருதுகிறார்களா? அல்லது அமைச்சர்களின் பளுவைக் குறைக்க வேண்டுமென்பதற்காக இவ்வாறு செய்கிறார்களா? ஏனென்றால் ஒவ்வொரு அமைச்சருக்கும் இலாக்காக்களைக் கொடுத்துவிட்டு பிறகு வாரியம், வாரியம் என்று ஏற்படுத்திக்கொண்டே சென்றால் பிறகு அமைச்சர்களுக்கு என்ன வேலை இருக்கும், என்ன அதிகாரம் இருக்கும்? அரிசன நல அமைச்சர் என்று ஒருவர் இருக்கும்பொழுது தனியாக வாரியம் என்று போட்டு, அதற்குத் தலைவரைப் போட்டு, அவர் பணத்தை வாரி எடுப்பதற்கு வழி தேடினால் அதற்கு உள்நோக்கம் என்ன? ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், வாரியத்தின் மூலம் என்சினியர்களை எடுக்கும்பொழுது பிட்பிள்யூ.டி.-யில் இருப்பவர்களை சீனியாரிட்டிபடி எடுப்பது என்றால் பரவாயில்லை. ஆனால் அவரவர்கள் இஷ்டப்படி எஞ்சினியர்களைப் போட்டுக்கொண்டு, புரமோஷன் கொடுத்துக்கொண்டு இருக்கின்ற நிலைமை இருக்கிறது.

**திரு. செ. கந்தப்பன் :** தலைவரவர்களே, வேண்டுமென்றே அவர்கள் சில தவறான கருத்துக்களைத் தொடர்ந்து சொல்லிக் கொண்டு வருகிறார்கள். பல வாரியங்களைப்பற்றி அவதூறு சொல்வது மட்டுமல்லாமல், பொதுப் பணித் துறையில் உள்ளவர்களைப்பற்றியும் சரியாகத் தெரிந்துகொள்ளாமல் பேசுகிறார்கள். சமீபத்தில் பொறியியல் துறையில் அவர்கள் சொல்கிற ஸ்டேக்னேஷன் இல்லை. நல்ல முறையில் ப்ரமோஷன் இருக்கிறது. இந்த நிலையில் அவர்களுடைய பேச்சு பொறியாளர்களைத் தூண்டிவிடுகின்ற முறையில் இருக்கிறது. வாரியத்தில் தலைவர்கள் விரும்பியபடி ப்யூனைக்கூடப் போட முடியாத நிலைமை நடைமுறையில் இருக்கிறது. எனவே விவரங்கள் தெரியாமல் பேச வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** அது தனியான நடைமுறை. வேண்டிய எஞ்சினியர்களைத்தான் போட்டுக் கொள்கிறார்கள் என்று சொன்னேனே தவிர, வக்கீல்களையா போடுகிறீர்கள் என்று சொல்கிறேன் ? பி. டபிள்யூ. டி. யிலே ஒரு கல்யாண
5-20 பி.ப. பத்திரிகை அடித்து ஒட்டியிருந்தார்கள். மாமனார் வ. இ. மருமகன் இ.இ. மருமகனுக்கு என்ன வயதாகிறது மாமனாருக்கு என்ன வயதாகிறது? இது ஏன் என்பதை விளக்கமாக ஒட்டியிருந்தார்கள். கனம் உறுப்பினர் அவர்கள் அதைப் பார்க்காமல் பேசுகிறாரா அல்லது பார்த்து விட்டுத்தான் அரசாங்கத்திற்குச் சப்பை கட்ட வேண்டுமென்று பேசுகிறாரா என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. பி. டபிள்யூ. டி.-யில் சீனியாரிடி படி ஒழுங்கான முறையில் பதவி உயர்வு கொடுக்கப்படுகிறதா ? மற்ற வாரியங்களுக்குத் தேர்ந்தெடுக்கும்போது இங்கிருக்கும் சீனியாரிடி கடைப்பிடிக்கப்படுகிறதா ?

கடைசியாக . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.** எத்தனை முறை 'கடைசியாக' என்று சொல்வது? ஆரம்பத்திலிருந்து 'கடைசியாக, கடைசியாக' என்று சொல்லிக் கொண்டே வருகிறீர்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** அடுத்தபடியாக, பக்கிங்ஹாம் கால்வாய்த் திட்டத்தைத் தீட்டியிருக்கிறார்கள். அதற்காக 50 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். கூவம் திட்டத்தை 1967-ல் ஆரம்பித்தார்கள். நீளம் 6 மைல் 3 பர்லாங். இன்றைக்கு எத்தனை தூரத்திற்குப் படகு விடுகிறார்கள் ? மவுண்ட் ரோட்டிலிருந்து அயர்ன் பிரிட்ஜ் வரை 3 பர்லாங் தூரத்திற்குப் படகு விடுகிறார்கள். ஆறு வருஷமாகச் சுத்தப்படுத்த ஆரம்பித்து கடைசியில் விளம்பரத்திற்காக 3 பர்லாங் தூரத்திற்குப் படகை விடுகிறார்கள். இதைப் பார்க்கும்போது பக்கிங்ஹாம் கால்வாய்த் திட்டம் துரிதமாக நடக்குமா என்பது கவலைக்குரியதாக இருக்கிறது. நீங்கள் ஒதுக்கிய பணத்தைக்கூடச் செலவழிக்கவில்லை. பொதுச் சுகாதாரத்திற்காக வரவு செலவுத் திட்டத்தில் கொடுத்தது 12 கோடி ரூபாய், செலவழித்தது 10 கோடி ரூபாய். (மணி அடிக்கப்பட்டது.) பொதுவாக இந்த வரவு செலவுத் திட்டம் மத்திய அரசை எதிர்க்க வேண்டுமென்ற நோக்கத்துடனேயே தீட்டப்பட்ட திட்டம் என்று கூறி முடித்துக் கொள்கிறேன்.



## 6. தகவல் கோரல்

கூடலூர் பகுதி நில ஆக்கிரமிப்பு நிலைமைகுறித்து, கேரள மாநில வருவாய்த்துறை அமைச்சருடன், தமிழக அமைச்சரவை நடத்திய பேச்சுவார்த்தைபற்றிப் பேரவைக்கு அறிக்கை அளிக்க வேண்டுமென்பது குறித்து.

DR. H. V. HANDE : Sir, on a point of order. Normally under rule 82 of the Assembly Rules, whenever an important discussion takes place in the meeting of the Cabinet or other Ministers of States, the Hon. Chief Minister makes a statement. To-day discussion is taking place with regard to the situation in Gudalur between our Minister for Revenue and the Minister for Revenue of the Kerala Government. One of the Members of our Party, Thiru Bomman, is the M.L.A. of this constituency. We would like to know the nature of the discussion that is taking place and whether any decision has been arrived at. Instead of knowing it through the Press, whether the Hon. Chief Minister will take this House into his confidence and give us a gist of what has transpired in that meeting. He can give the details now or before the conclusion of the discussion on the Budget to-day.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** துணைத் தலைவர் அவர்களே, தங்களுடைய அனுமதியின்பேரில், டாக்டர் ஹாண்டே அவர்கள் இங்கு கேட்டதற்கிணங்க இன்று கேரள அமைச்சரைச் சந்தித்ததுபற்றி விளக்கிட விரும்புகிறேன்.

கூடலூரில் ஏற்பட்டுள்ள சில சூழ்நிலைகளைப்பற்றி இங்குள்ள ஏடுகளிலும், கேரளத்திலே உள்ள ஏடுகளிலும் வெளியிட்டிருக்கிறார்கள். அங்கு உண்மை நிலை என்ன என்பதை விளக்கி இந்த மன்றத்தில் நான் ஒரு அறிக்கையை ஏற்கனவே தந்திருக்கிறேன். வேறு கட்சியைச் சேர்ந்த, கேரள மாநிலத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்தபோதும் அதுபற்றி விளக்கங்களை அளித்திருக்கிறேன்.

இன்று நானும் வருவாய்த் துறை அமைச்சரும் கேரள அமைச்சர் திரு. பேபி ஜான் அவர்கள் இங்கு வந்து எங்களைச் சந்தித்தபோது கூடலூரில் 30—6—71 வரையில் அங்குள்ள மக்களால் ஆக்கிரமித்துக் கொள்ளப்பட்டிருக்கும் இடங்களில் ஒவ்வொரு குடும்பத்தாருக்கும் மூன்று ஏக்கர் என்றும், சில

இடங்களில் ஏக்கர்களைப் பிரிக்க முடியாத சூழ்நிலையிலும் விதிகள் தளர்த்தப்பட்டு, தமிழ் நாட்டில் மற்ற இடங்களில் எந்த வகையில் இந்தப் பட்டாக்கள் அளிக்கப்படுகின்றனவோ அந்த வகையில் அந்த இடத்திலும் பட்டாக்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன என்ற விவரங்கள் அவரிடத்திலே நம்முடைய அரசின் சார்பில் எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது.

வேறு பகுதிகளில் இருந்து புதிது புதிதாக வந்து குடியேறுவதும் 1971-ம் ஆண்டுக்குப் பிறகு சில இடங்களை ஆக்கிரமித்துக் கொண்டு பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்பதும் இன்று கூடலூர் விவகாரத்தில் தலையாய இடத்தைப் பெற்றிருக்கிறது. ஏதோ குடிசைகளைப் போட்டுக்கொண்டு 'தங்க இடம் வேண்டும், ஆகவே, பட்டா செய்து கொடுங்கள்' என்று கேட்டால் அதிலே நியாய உணர்வைக் காண முடியும். அதை விட்டு விட்டு நாம் ஒரு வரையறை வைத்து ஆண்டுக் கணக்கு, மாதக் கணக்கு, தேதிக் கணக்கு என்று வரையறை வைத்து அதுவரையில் ஆக்கிரமித்துக் கொண்டவர்களுக்கெல்லாம் இடத்தை ஒழுங்குபடுத்திக் கொடுத்துவிட்ட பிறகும், அந்த இடம் வளமான இடமாக இருக்கும் காரணத்தால் தொடர்ந்து ஆக்கிரமித்துக் கொண்டே இருப்பது, நல்ல விளைபொருள்கள் உற்பத்தி செய்யும் இடத்தை அவரவர்கள் ஆக்கிரமித்துக் கொண்டு பட்டா செய்து கொடு என்று தொடரக் கூடாது என்பதற்காகத் தான் கால வரையறை வைத்தோம் என்று கேரள அமைச்சரிடத்தில் எடுத்து விளக்கப்பட்டிருக்கிறது.

அதற்கு மேலும் அங்கு ஏற்பட்டுள்ள நிலைமைகள்பற்றி வேறு வேறு செய்திகள் வருகின்ற காரணத்தால் நேரில் சென்று அறிய வருவாய்த் துறை வாரிய உறுப்பினர், அந்தப் பொறுப்பைக் கவனித்து வருகிற வாரிய உறுப்பினர் திரு. நம்பியார் அவர்கள் அங்கு செல்ல இருக்கிறார்கள் என்று இதே கேரள அமைச்சரிடத்தில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அவர் சென்று வந்து தகவல் தந்த பிறகு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்று இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



## 4. 1973-74-ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் மீது பொதுவிவாதம் (தொடர்ச்சி).

**திரு. எஸ். ஆறுமுகம்:** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1973-74-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை இந்த மன்றத்தில் வைத்து தமிழகத்தின் நாலரைக் கோடி மக்களின் நன்மதிப்பை ஓர் மனதாக இன்றையதினம் பெற்றுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையை அரசின்மீது காழ்ப் புணர்ச்சி கொண்டவர்கள் பார்த்து ஏமாற்றம் அடைந்திருக்கிறார்கள் என்பதைத் தெளிவாக உணரலாம். ஏறத்தாழ 49 லட்சம் ரூபாய் உபரி நிதிநிலை அறிக்கையை நம்முடைய முதல்வர் அவர்கள் இந்த மன்றத்தில் வைத்திருக்கிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கையில் நல்ல முற்போக்கான கொள்கைகளைக் கொண்ட கருத்துக்களை வடிவமாக்கித் தாழ்த்தப்பட்டவர்களுக்கு வீட்டு வசதிகளும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆணித்தரமான கொள்கையான உழுபவனுக்கு நிலத்தைச் சொந்தமாக்கும் சட்டத்தையும், அந்த நிலம் சொந்தமாக்கப்பட வேண்டுமென்று நினைக்கிற நேரத்தில் உழும் தொழிலாளிக்குப் பொருளாதார வசதி ஏற்படுத்திக் கொள்ளுவதற்காக அதற்கென்று தனிக் கார்ப்பரேஷனை நிறுவியும், அதே போல் தனியாருடைய மின்சாரக் கம்பெனிகளை எல்லாம் நாட்டின் பொதுவுடைமையாக்கும் திட்டத்தையும், மேட்டூரில் மால்கோ தொழிற்சாலையை அரசுடைமையாக்கும் திட்டத்தையும் அதே போல் படித்து வேலையற்று இருக்கும் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு தரக்கூடிய வகையில் சிறப்புத் திட்டத்திற்கு 15 கோடி ரூபாய் அளித்து மத்திய அரசின் அனுமதியைப் பெறுவதற்காக இந்த நிதிநிலை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றன. இந்த நல்ல நிதிநிலை அறிக்கையை, சமதர்ம நிதிநிலை அறிக்கையை இந்த மன்றத்திலே தந்திருக்கிறார்கள். இந்த நல்ல அறிக்கையை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏதோ ஆட்டம் கண்டு கொண்டிருக்கிறது; திராவிட முன்னேற்றக் கழக முதலமைச்சர், அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் இன்றோ, நாளையோ பதவியை விட்டுப் போகப் போகிறார்கள் என்று கனவு கண்டு கொண்டிருந்தவர்கள், இன்று நாம் இந்த நிதிநிலை அறிக்கையை

[திரு. பி. எஸ். ஆறுமுகம்] [1973 மார்ச் 5

ஆதரித்தால் நாம் நினைத்துக் கொண்டிருப்பதற்கு மாறாக இது ஒரு நிலையான ஆட்சி, ஜனநாயக ஆட்சி, இந்த ஆட்சி தொடர்ந்து தமிழக மக்களுக்கு நல்வாழ்வைத் தரும் ஆட்சி என்பதை உறுதிப் படுத்திவிடும் என்பதற்காக இதை எதிர்க்கிறார்கள், இன்றைய தினம் அராஜக வழியில் இந்த நாட்டு மக்களைத் தூண்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கு தெளிவாக எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

இதே மன்றத்தில் 1969-ம் ஆண்டு பொதுமக்களுடைய பிரதிநிதிகள் நாட்டு மக்களுடைய நன்மதிப்பைப் பெற்றவர்களாக இருக்க வேண்டுமென்று கருதி சொத்துக் கணக்கைக் காட்ட வேண்டும் என்பதற்காக ஒரு சட்டத்தை எதிர்க்கட்சிகள் உட்பட, ஆளும் கட்சி உட்பட, நாம் நிறைவேற்றினோம். அப்படி நிறைவேற்றப்பட்ட சட்டத்தை மதிக்கின்ற வகையில் சிலர் இந்தச் சட்டமன்றத்தில் உண்மையான கணக்குகளை வைக்காமல் இந்தச் சட்ட மன்றத்தை ஏமாற்றிக்கொண்டு, ஜனநாயகத்தை ஏமாற்றி அரசியல் லாபம் அடையலாம் என்று கருதி ஆளும் கட்சியிலிருந்து சென்று சுய நலத்திற்காக, தான் ஒரு தலைவராகிவிடலாம், நாட்டு மக்களை ஏமாற்றி அரசியல் வாழ்வை நடத்தலாம் என்று காட்டிக் கொடுக்கும் வகையில் வெளியேறிய ஒரு நடிகருடைய சொத்துக் கணக்கு இந்த மன்றத்தில் ஒழுங்காக வைக்கப்பட்டிருக்கிறதா? தலைவர் அவர்களே உங்கள்மூலம் சொல்லிக் கொள்கிறேன்—அவர் சொல்லியிருக்கிறார் 'லாண்ட்ஸ் அட் ராமாவரம் கார்டன்'. ராமாவரம் தோட்டத்தில் நிலம் இல்லாமல் வேறு என்ன இருக்கும்? எத்தனை ஏக்கர் விஸ்தீரணம் என்று குறிப்பிடவில்லை. 'லாண்ட் அட் சத்தியா கார்டன்', விஸ்தீரணம் குறிக்கப்படவில்லை. 'பில்டிங் சைட் அட் கோடம்பாக்கம்' எத்தனை கிரவுண்டு என்று குறிப்பிடவில்லை.

அதேபோல் 'லாண்ட் அட் மதுரை' என்று சொல்கிறார்கள். 'லான்ட் அட் மதுரை' என்றால் மதுரையில் நிலம் இல்லாது வேறென்ன தண்ணீரா இருக்கும்? என்று கேட்க விரும்புகிறேன். இப்படித் தவறான கணக்குகளைக் கொடுத்திருக்கிறார்கள்.

அதேபோல் அவர்களுக்காக வக்காலத்து வாங்கிக்கொண்டு அரசியல் லாபத்தை எதிர்பார்த்துக்கொண்டு சென்று கொண்டிருக்கிற இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியையும், இந்திரா



1973 மார்ச் 5] [திரு. பி. எஸ். ஆறுமுகம்]

காங்கிரஸ் கட்சியையும் நான் கேட்க விரும்புகிறேன், அவர்களுக்கு ஒரு முகவரியைக் கொடுத்திருக்கிறார் அந்த ஏழைப் பங்காளன். இந்தியன் பாங்க், ராயப்பேட்டை, மதராஸ்-14 என்று கொடுத்திருக்கிறார், அவர்கள் அங்கே போகட்டும். அடுத்த ஒரு கணக்கு இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்க், மைலாப்பூர். அங்கு ஒரு முகவரி தந்திருக்கிறார்கள். இன்னொரு முகவரி ஸிண்டிகேட் பாங்க், ப்ராட்வே, என்று ஒரு முகவரி கொடுத்திருக்கிறார். இப்படி உண்மையான கணக்கைக் காட்டாமல் முகவரி கொடுத்துக் கொண்டிருக்கும் ஒரு அரசியல்வாதியை நம்பி இந்த நாட்டு மக்கள் சென்றுவிடுவார்களா? இவர்கள் நாட்டிலே பெரிய ஒரு கலவரத்தை, வன்முறைச்செயலைத் தூண்டிப் பார்த்தார்கள். ஆனால் அந்த வன்முறைச் செயல்கள் . . . .

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, ஏதோ விவரங்கள் எல்லாம் முழுமையாகக் கொடுக்கப்படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கு தகவல்களைத் தந்து கொண்டிருக்கிறார்கள். அப்படிக்கூறும்போது, சத்தியா ஸ்டுடியோஸ்க்காக வேண்டி பல க்ரவுண்ட்ஸ் கொடுத்ததாக இந்த மன்றத்தில் பேசப்பட்டிருக்கிறது, அதைத் தாங்கள் ஒத்துக்கொள்கிறீர்களா ? அதை நல்ல செய்கை என்று உறுப்பினர் அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. எஸ். ஆறுமுகம் :** கணக்குகள் ஒழுங்காக, நேர்மையாக இந்த மன்றத்தில் வைத்திருக்கப்படவேண்டும் என்பதுதான் என் வாதமே தவிர வேறல்ல. இந்தச் சட்டமன்றத்தில் நாம் சட்டம் நிறைவேற்றியும் அது பயன்தரவில்லை என்றால் அவர்கள்மீது நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் மத்திய அரசு விவசாய வருமான வரி போட்டிருக்கிறார்கள். மாநில அரசுகளின் உரிமையில் மத்திய அரசு தலையிட்டு இந்த வரி விதிக்கப்பட்டிருப்பதைக் கடுமையாக எதிர்க்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம். இவை எல்லாம் மாநில அரசுகளைக் கலந்து செய்யப்படுகிறதா என்பது ஐயப்பாட்டுக்குரிய விஷயமாக அமைந்துள்ளது. நம்முடைய மாநிலத்தை ஆளும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்குத் தான் மத்திய அரசைப் பார்த்து தைரியமாக இந்த [illegible]

[திரு. பி. எஸ். ஆறுமுகம்] [1973 மார்ச் 5

விதிக்க உங்களுக்குத் தகுதி இல்லை. மாநில அரசுகள் இதை விதிக்கவேண்டும், அது எங்களது வரி இனத்தில் சேர்க்கப்பட வேண்டும் என்று கேட்கக் கூடிய ஆற்றல், திறமை இருக்கிறது. அப்படிக் கேட்க தைரியமுள்ள ஆட்சி இந்த நாட்டில் வேறு எதுவும் இல்லை என்பதை தெளிவுபடுத்த நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் இன்று நாட்டில் கட்சி விட்டுக் கட்சி மாறி அரசியல் நடத்தலாம் என்று சொல்லக்கூடியவர்கள், கட்சி விட்டுக் கட்சி மாறும் பச்சோந்திக் கும்பலைக் கட்டுப்படுத்த மத்திய அரசு அந்தச் சட்டத்தை உடனடியாகக் கொண்டுவர வேண்டும் என்பதை நம் முதல்வர் அவர்கள் மத்திய அரசிடம் வலியுறுத்த வேண்டும். அது கட்டாயமாக சட்டமாக்கப்படவேண்டும். அப்படிச் செய்தால்தான் ஜனநாயகத்திற்குப் பாதுகாப்பு இருக்கும். அப்படி கட்சி விட்டுக் கட்சி மாறுபவர்கள் அந்தக் கட்சியிலிருந்து வெளியேறும்போது உடனே தங்கள் பதவியை ராஜிநாமா செய்துவிட்டுத்தான் அவர்களை வேறு கட்சியில் அறிமுகப்படுத்தவேண்டுமேதவிர, ஒரு கட்சியில் நின்று வெற்றி பெற்றுவிட்டு அவர்கள் சுயநலத்திற்காக வேறு கட்சிக்கு மாறக் கூடிய கும்பலை வன்மையாகத் தமிழகம் கண்டிக்கிறது.

அதேபோல், இந்த மன்றத்தில் புதிதாக அமர்ந்துள்ள ஒரு கட்சி கொள்கை உள்ள ஒரு கட்சியா என்று கேட்க விரும்புகிறேன். அது கொள்கை உள்ள ஒரு கட்சியாக இருக்குமானால் இன்றைக்குத் தமிழ்நாட்டில் நமது முதல்வர் அவர்கள் சமர்பித்துள்ள நிதிநிலை அறிக்கைமீது அந்தக் கட்சித் தலைவர் இங்கு வந்து பேசியிருக்கவேண்டும். கொள்கைகளை விமர்சித்திருக்க வேண்டும். தன் கட்சிக் கொள்கையினைப் பிரகடனப்படுத்தியிருக்கவேண்டும். அதில்லாமல் எங்கேயோ ஓடி ஒளிந்துகொண்டு சட்டமன்றத்தில் போய் நாம் ஏதாவது பேசி முதல் அமைச்சர் அவர்களிடம் சிக்கிக்கொண்டு நாவலரிடம் சிக்கிக்கொண்டு, திராவிட முன்னேற்றக் கழகத்தினிடம் சிக்கிக் கொண்டு விட்டால் தப்ப முடியாது, நமக்கோ பேசத் தெரியாது, நமக்கு அந்த ஆற்றல் இல்லை, ஆகவே சட்டமன்றத்திற்குப் போகாமல் இருப்பதுதான் நியாயம் என்று கருதி இன்றைக்கு அந்தத் தலைவர் வெளியே இருந்து கொண்டு அரசியலை நடத்தப் பார்க்கிறார் என்று



1973 மார்ச் 5] [திரு. பி. எஸ். ஆறுமுகம்]

சொன்னால் நாட்டு மக்கள் அதை ஏற்றுக்கொள்ளப் போகிறார்களா? அவர்கள் பின்னால்தான் தமிழகம் செல்லப்போகிறதா? என்று கேட்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

உதவி சபாநாயகர் அவர்களே, தங்கள்மூலம் ஒன்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஒரு கொள்கை இல்லாத கட்சியை அந்தக் கட்சிக்கு என்று ஒரு பெயரிட்டு நீங்கள் அழைக்கலாமா? உலகத்திலே நாம் பார்க்கிறோம், இப்படிப்பட்டதொரு கட்சி, கொள்கை இல்லாத கட்சி, ஒரு பெயரை வைத்துக் கொண்டு, எங்கள் அண்ணாவின் பெயரை வைத்துக்கொண்டு இயங்கக்கூடிய வாய்ப்பும் வசதியும் தமிழகத்தில்தான் இருக்கிறது. வேறு எந்த மாநிலத்திலும் இப்படி இல்லை. வேறு எந்த மாநிலத்திலாவது இப்படி ஒரு கொள்கை இல்லாத கட்சி இயங்குமானால் அது அவர்கள் குடியிருக்கக்கூடிய குடியிருப்பு இடத்திலிருந்து தெருவிற்கு வரமுடியாது. தமிழ்நாட்டில்தான் அது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதற்கு நீங்கள் இங்கு அனுமதி கொடுக்கிறீர்கள். நியாயம்தானா என்று உங்களை நான் கேட்க விரும்புகிறேன்.

இப்படிப்பட்ட ஒரு கட்சி இன்று நாட்டில் வன்முறையைத் தூண்டிவிட்டுக்கொண்டிருக்கிறது. அவர்கள் சொல்கிறார்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் வன்முறைச் செயல்களைத் தூண்டிவிடுகிறார்கள் என்று. அவர்கள் எங்கள் முதல் அமைச்சர், அமைச்சர் பெருமக்கள், இவர்களைப்பற்றிப் பேசிய ஏளனப் பேச்சுக்கள் எவ்வளவு, எடுத்தெறிந்த கற்கள் எவ்வளவு என்று பார்த்தால் ஆளும் கட்சியைச் சார்ந்த நாங்கள்தான் அடிவாங்குபவர்களாக இருக்கிறோம், எங்கள் தோழர்கள்தான் கல் அடி படுகிறார்கள். எங்கள் தோழர்கள்தான் ரத்தம் சிந்திக்கொண்டிருக்கிறார்கள், ரத்தம் சிந்திக் கொண்டிருப்பது எதிர்க்கட்சிகள் அல்ல, அவர்கள் எறிந்த கற்களைப் பொறுக்கிப் போடுகிறவர்களாகத்தான் நாங்கள் இருக்கிறோம். அந்த நடிகர் பின்னால் சென்றுகொண்டிருக்கும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திரா காங்கிரஸ் கட்சி இவர்களுக்கு நான் நினைவுபடுத்த விரும்புகிறேன், அதைத் திராவிட முன்னேற்றக் கழகம் இது வரையில் பொறுத்துக் கொண்டிருந்தது, இனிமேல் பொறுத்துக் கொள்ள மாட்டோம் என்பதைத் தெளிவாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. எஸ். ஆறுமுகம்] [1973 மார்ச் 5

ஆக, தமிழ்நாட்டில் நிலையானதொரு ஆட்சியைத் தரக்கூடிய, ஒரு சோஷலிஸ ஆட்சியை, சமதர்மக் கொள்கையை வடிவாக்கும் ஆட்சியைத் தரக்கூடிய, மத்திய அரசை எதிர்த்துப் போராடக் கூடிய, மக்களுக்கு நல்வாழ்வு தரக்கூடிய, ஒரு மொழி உணர்வு, ஒரு இன உணர்வு கொண்ட கட்சி திராவிட முன்னேற்றக் கழகம் தான் என்று கூறி கடைசியாக ஒரு வார்த்தை மட்டும் கூறி முடித்துக்கொள்கிறேன். நெடுஞ்சாலைத் துறையில் முப்பது ஆண்டுக்காலமாக ஒரு 12,000 காங் கூலிகள் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை எல்லாம், குறைந்தது அவர்கள் பத்தாண்டுகள் வேலை பார்த்தவர்களாக இருந்தால் அவர்கள் எல்லாம் நிரந்தரமாக்கப்படவேண்டும் என்பது எனது வேண்டு கோள். அதை நம் முதல் அமைச்சர் அவர்கள் செய்யவேண்டு மென்று கேட்டு இந்த அளவோடு சமதர்ம சமுதாயத்தை வடிவாக்கும் இந்த நிதிநிலை அறிக்கையினை ஆதரித்து முடிக்கிறேன், நன்றி, வணக்கம்.

**திரு. எம். சுரேந்திரன் :** உறுப்பினர் அவர்கள் கூறும்போது வேறு கட்சிகளுக்கு வருகிறபோது, அதற்கு எதிராக சட்டம் கொண்டு வரவேண்டும் என்று சொன்னார்கள். அம்மாதிரி ஒரு கட்சியிலிருந்து மாறுகிறவர்களை உற்சாகப்படுத்துகிற விதத்தில் ஒரிஸாவில், அப்படி வருகிறவர்களிடத்தில் அரசாங்கப் பொறுப்பை, அதிகாரத்தைத் தரவேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகம் சொல்கிறதே, அதற்கு என்ன சொல்கிறீர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** முற்பகல் செய்தால் பிற்பகல் விளையும். அவ்வளவுதான்.

**திரு. எம். சுரேந்திரன் :** அப்போது அவர்கள் சொன்ன வாதம் எடுபடவில்லை. தங்கள் இஷ்டம்போல் மாற்றிக்கொள்வது என்பது தானே பொருள்.

*** திரு. நா. வெ. குருசாமி :** தலைவர் அவர்களே, 1973-74-ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் மீது சில வார்த்தைகள் கூறலா மென்று ஆசைப்படுகிறேன்.



1973 மார்ச் 5] [திரு. நா. வெ. குருசாமி]

மின்சாரப் பற்றாக்குறை பற்றித்தான் அதிகமாகப் பேசப் படுகிறது. மின்சாரம் இல்லாத காரணத்தால் எங்கள் பகுதியில் விவசாயத்திற்கும், தொழிலுக்கும் மிகவும் பற்றாக்குறையாக இருந்துவருகிறது. இங்கு பேசிய எதிர்க்கட்சி வரிசையில் உள்ள வர்கள் கூறினார்கள், மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் மின்சாரம் சரியாகக் கொடுக்காத காரணத்தினால் ராஜிநாமா செய்யவேண்டுமென்று குறிப்பிட்டார்கள். அவர் எங்களுடைய மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர் என்ற முறையில் ராஜிநாமா செய்யவேண்டுமென்று நான் கூறவில்லை.

இந்த மின்சாரப் பற்றாக்குறையை உடனடியாகத் தீர்ப்பதற்கு அவர்கள் கவனம் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஆசிரியர்கள் விஷயத்தை எடுத்துக்கொண்டாலும் அவர்கள் போராட வேண்டிய சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. இன்று கூட அவர்கள் கோட்டைக்கு முன்பாக போராட்டம் செய்ய உத்தேசித்துக் கொண்டிருந்தார்கள். இப்போது அவர்கள் எந்த நிலையில் இருக்கிறார்கள் என்று தெரியவில்லை. கல்வி அமைச்சர் அவர்களும், முதல் அமைச்சர் அவர்களும் அவர்களுடைய பிரச்னைகளைத் தீர்ப்பதில் முழு முயற்சியும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** ஆசிரியர்கள் பிரச்னை பற்றிச் சொன்னார்கள். அவர்கள் காலையில் என்னையும், கல்வி யமைச்சர் அவர்களையும் என்னுடைய இல்லத்திலே சந்தித்துப் பேசியிருக்கிறார்கள். கல்வியமைச்சர் அவர்கள் இந்த அவையிலும் மேலவையிலும் வைத்த அறிக்கை பற்றிய விவரங்களும் அவர் களுக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கையிலே சில சந்தேகங்கள் அவர்கள் கேட்டார்கள். அந்தச் சந்தேகங்கள் போக்கப்பட்டிருக்கின்றன. அவர்களோடு மேலவை உறுப்பினர்கள் சிலரும், ஆசிரியர்கள் பிரதிநிதிகளும் வந்து இருந்தார்கள். அதற்குப் பிறகு அவர்கள் போராட்டத்தைக் கைவிடுவதாகச் சொல்லிச் சென்றார்கள்; என்ன முடிவு எடுத்தார்களோ தெரியாது.

**திரு. நா. வெ. குருசாமி :** சென்ற ஆண்டு கொடுத்த வாக் குறுதியை நிறைவேற்றியிருந்தால் இந்தமாதிரி போராட்டத்தில் அவர்கள் ஈடுபட்டு இருக்கமாட்டார்கள் என்று கூறிக்கொள் கிறேன்.

நெசவாளர்கள் பிரச்னையை எடுத்துக்கொண்டால் சேலம் மாவட்டத்தில் அவர்களுடைய பிரச்னையை தீர்க்க முடியாத சூழ் நிலை இருப்பதால் தினம் தினம் ஆண்களும், பெண்களும் சிறைக் குள்ளே தள்ளப்படவேண்டிய சூழ்நிலையில் இருக்கிறார்கள். அவர் களுடைய கோரிக்கைகளை ஏற்று அவர்களுக்கு இந்த அரசு உடனடியாக ஒரு ஏற்பாட்டை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய ஆண்டிப்பட்டித் தொகுதியில் ஐக்கம்பட்டியில் சுமார் 5,000 நெசவாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் 2,500 தறிகள் வைத்து இருக்கிறார்கள். அங்கே ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் தான் கூட்டுறவு மூலமாக சில சங்கங்களை ஆரம்பித்து இருக்கிறார்கள். அவர்களுக்குத்தான் உதவி கொடுக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக 6 சங்கங்கள் இருக்கின்றன. திருவள்ளுவர் சங்கம், அண்ணா சங்கம், மாதவன் சங்கம், நாவலர் சங்கம், கலைஞர் சங்கம், கடைசியாக சாலியர் நெசவாளர் சங்கம் என்று ஆரம்பித்து இருக்கிறார்கள். மேலும் அங்கே இன்னும் 4, 5 சங்கங்கள் ஆரம்பித்தால் தான் அவர்களுடைய பிரச்னை தீரும். ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் தவிர மற்றவர்கள் சங்கங்கள் ஆரம்பிக்க வேண்டுமென்றால் அவர்களுக்கு அனுமதி கொடுப்பது கிடையாது. ஆகவே, நெசவாளர் பிரச்னையைத் தீர்க்க அரசு முழு முயற்சி எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் மாவட்டத்தில் வறட்சிப் பிரதேசம் என்று சில இடங்களை அறிவித்தார்கள். ஆனால் என்னுடைய ஆண்டிப்பட்டித் தொகுதியில் பெரியகுளம் தாலுக்காவை அதில் சேர்க்காமல் விட்டுவிட்டார்கள். அந்தப்பகுதி மிகவும் வறட்சியான பகுதி என்பது முதலமைச்சர் அவர்களுக்கும் தெரியும். அந்தப் பகுதியை அறிவிக்காமல் மற்றப் பகுதிகளை—உசிலம்பட்டி, திருமங்கலம் போன்ற பகுதிகளை மட்டும் அறிவித்து இருக்கிறார்கள். ஆண்டிப் பட்டியையும் வறட்சிப்பகுதியாக அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சர்க்கரை, கிரோசின் முதலியவை விநியோகிப்பதில் இந்த அரசு போதிய கவனம் செலுத்தாமல் இருக்கிறது. கிராமப் புறங்களில் கடை வைத்திருப்பவர்களுக்கு பர்மிட் கொடுப்பது இல்லை. நகர்புறங்களில் கடை வைத்திருப்பவர்களுக்குத்தான் பர்மிட் கொடுக்கப்படுகிறது. இதை ஆதாரத்தோடு சென்ற





கூட்டத்தில் கூறினேன். ஆனால் அது குறித்து எந்தவிதமான நடவடிக்கையும் இது வரையில் எடுக்கப்படவில்லை. இன்னும் அதே நிலைமை தான் இருக்கிறது. கிராமப்புறங்களில் கடைவைத் திருப்பவர்களுக்கும் பர்மிட் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒரே நபருக்கு 3 பர்மிட்டுகள் கொடுக்கப்பட்டிருக் கின்றன. தகப்பன், தாய், மகன், மனைவி பேரில் எல்லாம் பர்மிட்டுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் ஒழுங்கான முறையில் அதை விநியோகிப்பது இல்லை. வெளியார்களுக்கு அதை விற்று விடுகிறார்கள்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** இப்போது தனிப்பட்டவர்களுக்கு கொடுப்பது இல்லை. கூட்டுறவுச் சங்கங் களுக்குக் கொடுப்பதற்கு ஏற்பாடாகிவருகிறது. அப்படி யாராவது தகப்பன், தாயார், பேரன் பேரில் பர்மிட் வாங்கியிருந்தால், அப்படிக் கொடுத்திருந்தால், அதை அரசுக்குத் தெரிவித்தால், நடவடிக்கை எடுக்கலாம்.

**திரு. நா. வெ. குருசாமி :** அமைச்சர் அவர்கள் விளக்கத்திற்கு நன்றி. என்னுடைய தொகுதி ஆண்டிப்பட்டியில். கூட்டுறவு மூலமாக கொடுக்கப்பட்டு வந்தது, இப்போது தனியாருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் மூலமாகவே தான் கிரோசினும் கொடுக்கப்படுகிறது. இதுவரைக்கும் ஜீனி 10 மூட்டை கொடுத்தால் 1 மூட்டையை விநியோகித்து விட்டு மற்ற 9 மூட்டைகளை வெளியில் அதிகமான விலைக்கு விற்றுவிடுவார்கள். இனியாகிலும் அப்படி நேராதபடி பார்த்துக்கொள்ளவேண்டும்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** இப்போது கிரோசின் கூட கூட்டுறவுத் துறை மூலமாகவும் கொடுக்கப் படுகிறது.

**திரு. நா. வெ. குருசாமி :** மதுரை மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் கூட இது பற்றி விவாதிக்கப்பட்டது. எந்தவிதமான முடிவும் எடுக்கப்படவில்லை. கூட்டுறவுத் துறையில் கொடுப்பதா, பஞ்சாயத்துத் தலைவர்கள் மூலமாக கொடுப்பதா என்பது பற்றி முடிவு எடுக்காததால், பழைய ஜீனி பர்மிட்காரர்கள் மூலமாகத் தான் கிரோசின் விநியோகிக்கப்படுகிறது. சிறிது நேரத்திற்கு முன்பாக மாண்புமிகு உறுப்பினர் மூத்தையா அவர்கள்

[திரு. நா. வெ. குருசாமி] ]1973 மார்ச் 5

கூறினார்கள். அமைச்சர் அவர்கள் சுற்றுப்பயணம் வருகிறபோது தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சரியான தகவல் கொடுப்பதில்லை என்று. அதை நான் முழுமனதோடு ஆமோதிக்கிறேன். சென்ற மாதம் 20-ம் தேதி போடி தொகுதிக்கு அமைச்சர் இராசாராம் அவர்கள் வருவதாக இருந்தது. எனக்கு வந்த அழைப்பில் போடி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சுருளி வேல் ஏற்பாடு செய்கிற நிகழ்ச்சிகளில் இரண்டு நாட்கள் கலந்து கொள்வார் என்று இருந்தது. மற்றும் முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களுக்கு ஒரு தனி அறிக்கை வந்தது. அதிலே ஆண்டிப்பட்டியில் ஒரு பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்வார் என்று இருந்தது. என் அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினருக்கு அனுப்பப்பட்ட அறிக்கையில் ஆண்டிப்பட்டியில் ஒரு பொதுக் கூட்டம் இருக்கிறது என்று குறிப்பிடப்படவில்லை. ஆகவே. இம்மாதிரி அமைச்சர்கள் வரும்போது எந்தெந்த இடத்தில் என்னென்ன நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வார்கள் என்று இருந்தால் நல்லது. முன்னேற்றக் கழக பொதுக்கூட்டம் என்றால் நாங்கள் வராமல் இருந்து விடுகிறோம்.

ஆண்டிப்பட்டி ஒன்றியம் பரப்பளவில் மிகப்பெரியதாக இருக்கிறது. இதை இரண்டாண்டு காலமாகக் கூறிவருகிறேன். ஒரு இடத்திற்கு தலைவர் செல்ல வேண்டியிருக்கிறது என்றால் ஆண்டிப்பட்டியிலிருந்து 45 மைல் கூட செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, அதை இரண்டாகப் பிரித்தால் நல்லது. ஆண்டிப்பட்டியில் மருத்துவமனை ஒன்று ஊராட்சி ஒன்றியத்தால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது அதை அரசு மருத்துவ மனையாக ஏற்படுத்தித் தருவதாக மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டே சொன்னார்கள். ஏனோ அதை அமைக்காமல் விட்டு விட்டார்கள். ஆகவே, இந்த ஆண்டிலாவது அதை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடிநீர் பிரச்னையைப் பொறுத்தவரையில் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக வைகையிலிருந்து தண்ணீர் கொடுப்பதாகச் சொன்னார்கள். இரண்டு ஆண்டுகளாக அந்தத் திட்டம் பரிசீலனையில் இருந்து வருகிறது. ரூ. 19,500 கூட பரிசோதனைத் தொகை என்று கட்டப்பட்டிருக்கிறது. அந்தத் தொகையை



1973 மார்ச் 5] [திரு. நா. வெ. குருசாமி]

பொதுமக்களிடத்தில் இருந்து மிகவும் கஷ்டப்பட்டு வசூல் செய்து கொடுத்தோம். ஆகவே, உடனடியாக அந்தத் திட்டத்தை அமல் நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதி மலைப்பிரதேசம் அதிகம் உள்ள தொகுதி. வருஷநாடு, கடமலைக்குண்டு போன்றவை மலைபகுதிகள். அங்கேயெல்லாம் செல்வதற்கு சாலை வசதி இல்லை. குடிநீர் வசதி இல்லை. ஆகவே, அங்கே கிணறுகள், சாலைகள் ஏற்படுத்த உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் தொகுதியில் படித்தவர்கள் வேலைகிடைக்காமல் மிகவும் திண்டாடுகிறார்கள். சீனியாரிட்டி முறையில் ஆசிரியர்கள் பயிற்சி பெற்றவர்களுக்கு வேலை போட்டுக்கொடுப்பதாகச் சொன்னார்கள், 1967-68-ல் பாஸ் செய்தவர்களுக்கு வேலை கிடைக்கவில்லை. ஆனால் 70-ல் பாஸ் செய்தவர்களுக்கு வேலை கிடைத்து இருக்கிறது. எந்த அளவில் சீனியாரிட்டி பின்பற்றப்படுகிறது என்று தெரியவில்லை. அவர்களுடைய பிரச்னையை உடனடியாகக் கவனித்து, வேலையில்லாமல் இருக்கும் ஆசிரியர்களுக்கு வேலை கிடைக்க வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என் உரையை முடிக்கிறேன், வணக்கம்.

* **திரு. பொன். சொக்கலிங்கம்**: மாண்புமிகு துணைச் சபா நாயகர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த மாமன்றத்தில் சமர்ப்பித்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று பேசுகின்ற முறையில், எனக்கு வாய்ப்பளித்த தங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றையதினம் நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் வகுத்த வழியில் இந்த நாட்டிலுள்ள ஏழை, எளிய பாட்டாளி மக்களின் கண்ணீரைத் துடைப்பதற்காக, ஒரு சமதர்ம சோசலிச அடிப்படையில் இராமலிங்க அடிகள் வகுத்த அடிப்படையில் இன்றையதினம் நல்லதொரு வரவு-செலவுத் திட்டத்தை இந்த அவையில் சமர்பித்த நேரத்தில், வேண்டுமென்றே சில எதிர்க் கட்சி நண்பர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் வழக்கமாக குறைக் கூறிக்கொண்டு வருவதைப்போல் கூறிக்கொண்டு வருகிறார்கள் என்று நினைக்கிறபோது, கடந்தகால அரசியலை அவர்கள் ஞாபகப் படுத்திப் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்களும் [illegible]

[திரு. பொன். சொக்கலிங்கம்] [மார்ச் 5, 1973

காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்களும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர்களும், மற்ற புதுக்கட்சிக்காரர்களும் யாராக இருந்தாலும் ஒரு கணம் எண்ணிப்பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நாட்டில் 'தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் இந்த ஜெகத்தினை அழித்திடுவோம்' என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இருபது ஆண்டுகாலம் இந்த நாட்டை ஆண்ட காங்கிரஸ்காரர்கள் எப்படி வைத்திருந்தார்கள் என்பதை நாம் நன்றாக அறிவோம். உணவுப் பண்டம் சரிவர வழங்கினார்களா? இப்போது எனக்கு முன்னாலே இங்கு பெரிய கனம் அம்மையார் அவர்கள் 'அமைச்சர்கள் ராஜினாமா செய்ய வேண்டும்' என்று சொன்னார்கள். அதைப்போல மாற்றுக்கட்சி உறுப்பினர் பலரும் 'மின்சார வெட்டு ஏற்பட்டுவிட்டது; அதனால் அமைச்சர்கள் ராஜினாமா செய்யவேண்டும்' என்று சொன்னார்கள். சிம்சன் தொழிற்சாலையில் வேலை நிறுத்தமா, அமைச்சர்கள் ராஜினாமா செய்யவேண்டும். பட்டதாரி ஆசிரியர்கள் வேலை நிறுத்தமா, உடனே அமைச்சர்கள் ராஜினாமா செய்யவேண்டும். இப்படியெல்லாம் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் அவர்கள் ஆண்ட காலத்தில் இப்படி ராஜினாமா செய்தார்களா என்று நான் கேட்க விரும்புகிறேன். படியரிசித்திட்டத்தை கைவிட்டுவிட்டார்கள்; படியரிசி போடவில்லை என்று சொன்னார்கள். அதனால் அமைச்சர்கள் ராஜினாமா செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். இப்படி எடுத்ததற்கு எல்லாம் அமைச்சர்களை ராஜினாமா செய்யச் சொல்வதுதானா உங்கள் வேலை? காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் கோயம்புத்தூரில் அரிசி கேட்ட அர்ச்சுனனைச் சுட்டுக் கொன்றீர்களே, அதற்காக எத்தனை அமைச்சர்கள் அப்போது ராஜினாமா செய்தார்கள்? விவசாயிகள் புரட்சியானாலும் சரி, அல்லது வேறு எந்த பிரச்சனையானாலும் சரி, எடுத்ததற்கெல்லாம் திராவிட முன்னேற்றக் கழக அரசை வேண்டுமென்றே தாக்குவதற்காக இவர்கள் செய்கின்ற வேலைகளைப் பார்க்கும்போது, நான் அவர்களுக்கு சில சம்பவங்களை நினைவூட்ட விரும்புகிறேன்.

காங்கிரஸ் ஆட்சி காலத்திலே இந்த நாட்டிலே விவசாயிகளுக்கு உரம் கிடைத்ததா என்றால் இல்லை. வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக இருந்தது. அதைச் சமாளிப்பதற்கு ஏதாவது திட்டம்



1973 மார்ச் 5] [திரு. பொன். சொக்கலிங்கம்]

தீட்டினார்களா என்றால் இல்லை. அவர்கள் ஆட்சியில் என்னுடைய மகன் சர்வகலாசாலையில் சேர்ந்து படிக்கக்கூடாது என்று சட்டமன்ற உறுப்பினர்கள் கூட தடுத்தார்கள். மகாத்மா காந்திக்கு ஜே. வந்தேமாதரம் என்று முழக்கமிட்டவர்கள் காங்கிரஸ்காரர்கள், அவர்கள் இன்றைக்கு எதற்கெடுத்தாலும் கலைஞரை ராஜினாமா செய், மின்சார அமைச்சர் ஓ. பி. ஆரை ராஜினாமா செய், கல்வி அமைச்சரை ராஜினாமா செய் என்று சொல்கிறார்கள். அவர்களுக்கு மட்டும்தான் இப்படிப் பேசத் தெரியுமா? எங்களுக்கு பேசத்தெரியாது என்று நினைக்கிறார்களா? நாங்களும் இப்படியே திருப்பிச் சொல்லிக்கொண்டிருந்தால் நிலைமை எப்படி இருக்கும் என்பதை அவர்கள் நினைத்துப்பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சுதந்திராக் கட்சி உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் இந்த சட்டமன்றத்திலும் சரி, வெளியிலேயும் சரி, அமைச்சர்கள் ராஜினாமா செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். அதுமட்டுமல்ல, இவர்களுக்கு வீரம் இருக்கிறதா என்றும் அடிக்கடி சொல்கிறார்கள். ஹாண்டே அவர்களுக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தினரின் வீரத்தைப்பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால், அதைத் தெரிந்துகொள்வது சட்டமன்றத்திலே அல்ல. வெளியே வேண்டுமானால் சோதித்துப் பார்க்கலாம். ஏதாவது ஒரு விளையாட்டை சட்டமன்றம் முடியும்போது--சடுகுடு போன்ற விளையாட்டை நடத்தி, அதிலே முன்னேற்றக் கழக உறுப்பினர்களுடன் விளையாடி பார்த்துவிட்டு, வீரம் இருக்கிறதா இல்லையா; யாருக்கு வீரம் இருக்கிறது என்று தெரிந்துகொள்ளுங்கள். பெயரிலே வேண்டுமானால் டாக்டர் ஹாண்டே என்று இருக்கலாம். அதனால்தான் தான் வீரமுள்ளவர் என்று கருதிவிட கூடாது. இன்னொன்றையும் சொன்னார்கள், பூசாரிபோல் தலையை ஆட்டுகிறோம் என்று. கலைஞர் ஆட்சியிலே ஜனநாயகத்தின் பேரால் கோயிலிலே பூஜை செய்கின்ற பூசாரிகள் எல்லாம் இங்கே எம்.எல்.ஏ.க்களாக வந்திருக்கிறார்கள் என்று நான் சொல்லக்கூடும். அதையும் கேட்டுக்கொண்டிருக்கக்கூடிய எங்களைப் பார்த்து கோழைகள் என்று நினைத்திருக்கிறார்கள்? நாங்கள் பேசாமல் இருக்கிறோம் என்றால், எங்களை கலைஞர் அவர்கள் அப்படி அடக்கி வைத்திருக்கிறார்கள்; எங்கள் வாய்க்குப் பூட்டுப் போட்டிருக்கிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் கற்றுக்கொ[illegible]

[திரு. பொன். சொக்கலிங்கம்] [1973 மார்ச் 5

கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டைக் காக்கக்கூடியவர்கள் நாங்கள். அறிஞர் அண்ணா அவர்களுக்குப் பின்னாலே வந்த தலைவர்களும் அதையே வலியுறுத்துகிறார்கள். அவர்கள் கட்டுப்பாட்டிலே இருக்கக்கூடிய எங்களைப் பார்த்துக் கோழைகள் என்று யாரும் நினைத்துவிட வேண்டாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றையதினம் இந்த அரசைப்பற்றிக் குறை கூறுபவர்களைப் பார்த்து, குற்றஞ்சாட்டுகிறவர்களைப் பார்த்துக் கேட்கிறேன், இந்த அரசு செய்த குற்றம் என்ன? உலகம் உள்ளளவும் இந்திரா காங்கிரஸ்தான் நாட்டை ஆளவேண்டுமென்று மகாத்மா காந்தியடிகள் சாசனம் எழுதிவைத்துவிட்டுப் போனாரா? அல்லது அவருக்குப் பின்னாலே வந்த பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் சாசனம் செய்து கொடுத்திருக்கிறாரா? வேறு ஒரு கட்சி நாட்டை ஆளக் கூடாதா? வேறு கட்சி ஆளுகிறது என்றால் எடுத்ததற்கெல்லாம் போராட்டம், போராட்டம் என்று சொல்கிறீர்களே, நாங்களும் போராட்டம் நடத்தினால் நாடு எப்படி இருக்கும் என்பதை ஒரு கணம் எண்ணிப்பாருங்கள்.

இன்றையதினம் தமிழக அரசு, காங்கிரஸ் கட்சி செய்ததைவிட, மற்றக் கட்சிகள் எல்லாம் செய்ததைவிட, விவசாயத் துறையிலே ஒரு பெரும் புரட்சியையே செய்து காட்டியிருக்கிறது. ஐ.ஆர் 8, ஐ.ஆர் 20, பொன்னி, கருணா, ரத்னா, காஞ்சி போன்ற புதிய ரக நெல் விதைகளைக் கண்டுபிடித்து, விவசாய உற்பத்திப் பெருகிட, ஒரு பெரிய சாதனையை செய்திருக்கிறது தமிழக அரசு. அதனால் விவசாயப் பெருங்குடி மக்கள், ஏழை எளிய பாட்டாளி மக்கள் நல்லமுறையிலே விவசாய உற்பத்தி செய்து காட்டக்கூடிய ஊக்கம் பெற்றிருக்கிறார்கள். அதனால் இந்த அரசு ராஜினாமா செய்ய வேண்டுமா? ஏழை எளிய பாட்டாளி மக்களுக்கு வீடுகளைக் கட்டிக்கொடுத்து வருகிறது. அதற்காக ராஜினாமா செய்ய வேண்டுமா? இந்த நாட்டிலே இருக்கின்ற ஏழை எளிய பட்டதாரி மாணவர்கள் பயனடைய இளைஞர் அணி தொடங்கப்பட்டு, வேலைவாய்ப்பளிக்கப்பட்டிருக்கிறது. அதனால் அவர்கள் குடும்பங்கள் எல்லாம் வாழ்வு பெறுகின்றன. அதற்காக கலைஞர் அமைச்சரவை ராஜினாமா செய்ய வேண்டுமா? இந்த சாதனைகளைக் கருதிப் பார்த்து இந்த அரசை வாழ்த்துவதற்குப் பதிலாக ராஜினாமா செய் என்று சொல்வதுதானா உங்கள் வேலை?



1973 மார்ச் 5] [திரு. பொன். சொக்கலிங்கம்]

உரம் கிடைக்கவில்லை, கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். சென்னையிலே இருக்கின்றவர்களுக்கு உரம் எதற்கு? தென்னாற்காடு மாவட்டத்திலே, தஞ்சை மாவட்டத்திலே இருக்கக்கூடிய எங்களுக்கு உரம் கிடைக்கவில்லை என்றால் அதிலே அர்த்தமுண்டு. வீராணம் பாசனத்திட்டத்தினால் பயன் பெறும் எங்களுக்குத் தாராளமாக உரம் கிடைக்கிறது. இளைஞரணி தொடங்கப் பட்டதன் மூலமாக ஆயிரக்கணக்கான பட்டதாரி மாணவர்கள் வேலைவாய்ப்புப் பெறுகின்றனர். எல்லாக் கிராமங்களுக்கும் மின்னொளி வழங்கும் திட்டத்தை மேற்கொண்டது இந்த அரசு. மின்சாரப் பற்றாக்குறையினால் இன்றைக்கு இதிலே நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. அதைப்பற்றி பெரிதாக மேடையிலே பேசித் திரிகிறார்கள். இன்றையதினம் ஒரு பத்திரிகையிலே கூட பார்த்தேன். ஏதோ மக்கள் கையிலே எடுத்து வைத்திருப்பது போல பத்திரிகையிலே போட்டிருக்கிறார்கள். கலைஞர் அவர்கள் எங்கள் கையை கட்டிவிட்டக் காரணத்தினால் அவர்கள் எதை வேண்டுமானாலும் சொல்லலாம், எழுதலாம் என்று நினைத்திருக்கிறார்கள்.

அண்மையிலே போக்குவரத்துத்துறை அமைச்சரவர்கள் சிதம்பரத்திற்கு வந்திருந்தார்கள். அப்போது புதுக்கட்சித் தொடங்கியவர்கள் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் என்று சொல்லி, கம்புகளை வைத்து அடித்தார்கள். அறிஞர் அண்ணா அவர்கள் கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டை எங்களுக்கு கற்றுக்கொடுத்திருப்பதால், அதை நாங்கள் காப்பாற்றி வருவதால், அவர்கள் செய்ததையே எங்களால் திருப்பிச் செய்யமுடியாத நிலை என்பதைப்பற்றி இந்த மன்றத்திலே தெரிவித்துக்கொள்வது என் கடமை என்று கருதுவதால் இங்கே அதைத் தெரிவிக்கிறேன். இன்னும் பல சட்டமன்ற உறுப்பினர்களை கொலை செய்வதற்குக் கூட புதிய கட்சியினரும், மற்றக் கட்சியினரும் சதி செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த நிதிநிலை அறிக்கையிலே விவசாயத் தொழிலாளர்களுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் குடியிருப்பு மனைகளைப் பட்டா செய்து கொடுப்பதற்கு, அதற்கு உரிய பண வசதியை அரசு செலவிலே கொடுப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதை நான் பாராட்டுகிறேன்.

அடுத்து, அண்ணா அவர்கள் இன்றையதினம் இல்லை என்றாலும், அவர் வழிவந்தவர்கள் இன்றைக்கு தலைவர்களாக இருப்பதால், நல்ல பல சோஷலிசத் திட்டங்களை உருவாக்கி, செயல்படுத்தி வருகிறார்கள். அந்த முற்போக்கான எண்ணத்தினால் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு, பிற்பட்ட மாணவர்களுக்கு, ஒதுக்கப்பட்ட மாணவர்களுக்கு உணவு விடுதி கட்டுவதற்காக மானியம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதை பாராட்டி, வரவேற்கிறேன்.

அடுத்து, சிறு தொழிற் சங்கங்களுக்கு நீதிமன்றம் செல்வதற்கு 150 ரூபாய் மானியம் தருவதற்கு 5 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பது குறித்து என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. வடிவேல் அவர்கள் பேசும்போது பூச்சிக்கொல்லி மருந்து தெளிக்கும்போது விவசாயி இறந்துவிட்டால் அவர்கள் குடும்பத்திற்கு 1,000 ரூபாய் உதவித்தொகை அளிக்கப்படுமா என்று கேட்டார்கள். அதற்கு நம்முடைய முதலமைச்சரவர்கள் வழங்கப்படும் என்று சொன்னதைக் கேட்டு, உள்ளபடியே நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். விவசாயப் பெருங்குடி மக்களும் பாராட்டுவார்கள் என்பதில் ஐயப்பாடு இல்லை. இந்த அரசு நீடூழி வாழ்க, வாழ்க என்று விவசாயப் பெருங்குடி மக்களும் தொழிலாளர்களும் தாழ்த்தப்பட்ட மக்களும் கடிதம் எழுதிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் இங்கே பேசுகிறவர்கள், அமைச்சரவை ராஜிநாமா செய்ய வேண்டும் என்று சொல்கிறார்கள். அமைச்சர்களை முற்றுகை இடவேண்டுமென்று சொல்கிறார்கள். முற்றுகை இட்டால் பயந்து ஓடிவிடுவார்களா அல்லது ராஜிநாமா செய்து விடுவார்களா? 174 பேரைக் கொண்டிருக்கிற இந்த அரசு ராஜிநாமா செய்துவிட்டு வேறு யார் இங்கே வந்து ஆளப்போவது? 2, 3 பேர்களை வைத்திருக்கிற 4, 5 கட்சிகளா ஆளப்போகிறார்கள்? அது ஒரு நாளும் நடவாத காரியம். ராஜிநாமா செய்யவேண்டுமென்று சொல்பவர்கள் இன்னும் 2, 3 வருடங்கள் பொறுத்துக் கொள்ளுங்கள். தேர்தல் வரும். அதிலே வெற்றிபெற்றால் ஆளும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுங்கள். அதை விட்டுவிட்டு கறுப்புக்கொடி காட்டுவது, ஆர்ப்பாட்டம் நடத்துவது என்றால் அதற்காக நாங்கள் பயப்பட்டுவிடப்போவதில்லை, பண்டித நேரு





அவர்களுக்கே நாங்கள் கறுப்புக்கொடி காட்டியவர்கள். அப்போது முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் போலீசாரையும், இராணுவத்தையும் வைத்து எங்களை ஒடுக்கிப் பார்த்தார்கள்; முடியவில்லை. இப்போது சின்ன சின்ன கட்சிகள் 4, 5 சேர்ந்து கொண்டு எங்களை ஒழித்து விடலாம் என்றால் அது நடக்கக் கூடியதா? புதிய கட்சி தொடங்கியவர்களும் இப்போது அவர்களோடு சேர்ந்திருக்கிறார்கள். அங்கே அது இல்லை, இங்கே இது இல்லை என்று சொல்லி பத்திரிகையிலே போட்டு, தங்களை விளம்பரப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். யார் எதைச் சொன்னாலும் மக்கள் உண்மையைப் புரிந்துகொள்வார்கள் என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, சிதம்பரம் தொகுதியில், சிதம்பரம் வட்டாரத்தில் வெள்ளப்பெருக்கின்போது ஏற்பட்ட சேதங்களுக்கு உடனடியாக நிவாரணப் பணிகளை மேற்கொண்டதற்காக நான் அரசைப் பாராட்டி, மக்களின் சார்பில் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் சிதம்பரம் எல்லையிலிருந்து திருமுட்டம் வரையில் கிராமங்களுக்கு சாலை போக்குவரத்து வசதி செய்யப்பட்டிருக்கிறது. வெள்ளாற்று உடைப்பை சீர்செய்து செப்பனிட திட்டம் தீட்டியுள்ளார்கள். விவசாயிகளுக்கு உடனடியாக வரிவஜா செய்யப்பட்டது. அதற்காக அந்தப்பகுதி மக்களின் சார்பில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் ஒன்றை மட்டும் கூறிக்கொள்கிறேன். வீராணத்திலிருந்து சென்னைக்கு குடிதண்ணீர் கொண்டுவர இருக்கிறார்கள். அதற்கான வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. வீராணம் ஏரி இப்போது தூர்ந்து போய் இருக்கிறது. ஆகவே, வீராணம் ஏரியை தூர் எடுத்து, இரு பக்கமும் கரையினைக் கட்டி, ஏரியைச் செப்பனிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்றுப் பாராட்டி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

**திரு. துரை கோவிந்தராசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்றையதினம் 1973-74 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையின் மீது பேசுகின்ற ஒரு நல்ல வாய்ப்பை தந்த தலைவரவர்களுக்கு நன்றியை கூறிக்கொள்கிறேன்.

[திரு. துரை கோவிந்தராசன்] [1973 மார்ச் 5

குறிப்பாக, இன்றைய தினம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற இந்த நிதி நிலை அறிக்கை நாட்டினுடைய, மக்களுடைய எண்ணங்களைப் பிரதிபலிக்கத்தக்க வகையில் அல்லாமல் லட்சோப லட்சம் மக்களின் எண்ணங்களை பிரதிபலிக்கின்ற ஈடு செய்கின்ற வகையில் இந்த அறிக்கை இல்லாமல், தங்களுக்கு வேண்டியவர்களுக்கு, ஒரு சிலருக்கு என்ற வகையில் அமைத்திருக்கிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கையில் காணப்படுவதெல்லாம், தங்களுக்கு வேண்டியவர்களுக்கு, தங்கள் கட்சியில் உள்ளவர்களுக்கு என்று கூறக் கூடிய வகையில் இந்த நிதிநிலை அறிக்கை இருப்பதை நான் பார்க்கிறேன். அதேநேரத்தில், பெருந்தகை பேரறிஞர் அண்ணா அவர்கள், "நாட்டு மக்களுக்கு முதலிடம்" என்று ஒரு நேரத்தில் சொல்லி இருக்கிறார்கள். அதற்குப் பிறகு ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிறவர்கள் அந்த மக்களுக்கு பல்வேறு காரியங்களை செய்ய வேண்டுமென்று செய்திருக்கிறார்களா என்று பார்த்தால், இல்லை. அதற்கு மாறாக, தங்களுடைய ஆட்சியிலே, தங்கள் கட்சியிலே இருக்கிறவர்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்ற எண்ணத்தை உள்ளடக்கி இன்றையதினம் பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட்டுக்கொண்டு, வருகின்றன என்பதைத் தவிர செய்கிறதெல்லாம் வேறொன்றுமில்லை.

இன்றையதினம் ஆட்சியை நடத்திக்கொண்டிருக்கிற எந்த அரசும் நீதியையும், நிர்வாகத்தையும் தனித்தனியாகப் பிரித்து நிர்வாகத்தை நடத்த வேண்டும். ஆனால் இங்கே அப்படி நடக்கிறதா என்றால் இல்லை. மக்களெல்லாம் அவதிக்கு உள்ளாக்கப் பட்டு, சட்டமும் நீதியும் பாதுகாக்கப்படாத அளவுக்கு இருக்கிற துர்ப்பாக்கியமான நிலையில் இந்த ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது என்பதை நான் சொல்லிக்கொள்ளாமல் இருக்க முடியவில்லை. அதேநேரத்தில், மாண்புமிகு உறுப்பினர்கள், எதிர்க் கட்சியிலிருக்கிற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பார்த்து ஏதோ, சினிமா கட்சிக்காரர்கள் என்ற வகையில் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்வேன், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருக்கிறவர்கள் ஏதோ ஒரு இடத்திலிருந்து பிரிந்து வந்தவர்கள் என்ற எண்ணத்தினால் இருப்பார்களானால், 1949-இல்



1973 மார்ச் 5] [திரு. துரை கோவிந்தராசன்].

இங்கே இப்போது ஆட்சி நடத்திக்கொண்டிருக்கிற கட்சி ஒரு இயக்கத்திலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு வந்த ஒரு கட்சி என்பதை மறந்து விடவேண்டாம்.

எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பதைச் சொன்னார்கள். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்று கூறிய அதே அண்ணா அவர்கள், கனிவு, தெளிவு, துணிவு என்ற மூன்றையும் உள்ளடக்கிச் சொல்லிச் சென்றிருக்கிறார்கள். இன்றையதினம் இந்த ஆளுங் கட்சியிலிருந்து விடுவித்துக்கொண்டு வந்த எங்களைப் பார்த்து, சினிமா வசனம் பேசுகிறவர்கள் என்றெல்லாம் சொல்கிறார்கள். அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்வேன். இது ஒரு கொள்கை உள்ள கட்சி. ஏதாவது கோட்பாடு இருக்கிறதா, என்றெல்லாம் சொன்னார்கள். அந்த இயக்கத்திலிருந்து விடுவித்துக் கொண்ட நேரத்தில், இந்தக் கட்சிக்குக் கொள்கை இருக்கிறது என்று சொல்லித் தான், இந்தக் கட்சிக்கு திட்டம் இருக்கிறது என்று சொல்லித் தான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பிரிந்திருக்கிறது.

**திரு. நா. வீராசாமி**: தலைவரவர்களே, அந்தக் கட்சிக்கு கொள்கை இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் சொன்னார்கள். என்ன அந்தக் கொள்கை என்பதைச் சொன்னால் மன்றத்திலுள்ளவர்கள் தெரிந்துகொள்ளலாம். தயவுசெய்து அதை அவர் தெரிவிக்க வேண்டும்.

**திரு. துரை கோவிந்தராசன்**: தலைவரவர்களே, அண்ணா அவர்கள் இந்தக் கட்சியை துவக்கிய நேரத்தில் நாட்டு மக்களிடத்தில் எந்தவித கொள்கையை, எந்தவிதக் கோட்பாட்டைச் சொன்னார்களோ, அதே கொள்கை தான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் லட்சியமும் கொள்கையும் ஆகும்.

தலைவரவர்களே, தி.மு.க.வில் இருக்கிறவர்கள் மட்டும் ஏதோ அண்ணா தி.மு.க.விலிருக்கிறவர்களால் தாக்கப்படுகிறார்கள் என்று சொன்னார்கள். ஆனால் பட்டுக்கோட்டையில் 15 ஆம் தேதி நடைபெற்ற சம்பவத்தை இங்கே கூற விரும்புகிறேன். இன்றைய முதல்வர் அவர்கள்—காவல் துறையை உள்ளடக்கியிருக்கிற

மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரத்தநாட்டிலிருக்கிற நேரத்தில் இரவு 10½ மணிக்கு மேல், பொது மக்கள் எல்லாம் கலைந்து சென்ற பின்னால் பொது மக்கள் எல்லாம் காவல் துறையினரால் அடித்து நொறுக்கப்பட்டு, ஏறத்தாழ ஆயிரம் பேர்கள் அந்த ஊர் மருத்துவ மனையிலும் மற்றும் பல்வேறு இடங்களிலும் சேர்க்கப்பட்டார்கள். அப்படி அடிபட்டவர்கள், பொதுவானவர்கள், கட்சிக்கு அப்பாற்பட்டவர்கள், பல்வேறு துறையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறவர்கள் எல்லாம் இருந்திருக்கிறார்கள். அப்படி, சுமார் 100 பேர்கள் பட்டுக்கோட்டை காவல் நிலையத்திலிருந்தார்கள். 18 ஆம் தேதி காலை அந்த இடத்திற்குச் சென்று, அந்தக் காவல் துறை அதிகாரியைப் பார்த்தேன். இங்கே இருக்கிறவர்கள் எல்லாம் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் பரவாயில்லை. இரவு அழைத்துக் கொண்டு வந்திருக்கிறீர்கள். எனவே அவர்களுக்கு உணவு தர வேண்டுமென்று கூறி, அத்தனை பேர்களுக்கும் உணவு தந்து விட்டுச் சென்றேன். அதற்குப் பின்னால், ஆட்சிக் கட்சியைச் சேர்ந்தவர் அந்தக் காவல் நிலையத்திற்குச் சென்று முன்னேற்றக் கழகத்தில் இருக்கிறவர்கள் யார் என்று தனியாகப் பிரித்து அங்கே இருக்கிற நகராட்சித் தலைவர், இன்னும் மற்றவர்களை யெல்லாம் வீட்டுக்கு அனுப்பி விட்டு மற்றவர்களை மட்டும் அந்தக் காவல் நிலையத்தில் உள்ள காவல் அதிகாரி வழக்குத் தொடர்ந்திருக்கிறார் என்றால், எங்கே இருக்கிறது சட்டம், எங்கே இருக்கிறது நியாயம், நீதி?

அந்த வகையில், நீதியும் நிர்வாகமும் இணைந்து தான் நாட்டின் நடைமுறைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தவிர வேறொன்றும் சொல்ல முடியவில்லை. நிர்வாகத்தில் குறுக்கீடுகள் இல்லை என்று பல்வேறு இடங்களில் இந்த ஆட்சிக் கட்சியைச் சேர்ந்தவர்கள் பேசி வருகிறார்கள். ஆனால் குறுக்கீடு குடும்ப நலத் திட்டத்தின் மூலமாக ஏற்படுத்தி விட்டார்கள். நூறு கேசுக்கு அதிகமாகப் போட்டவர்களுக்குத் தான் கிராம அதிகாரி பதவி என்று இருக்கிறது. ஒருவர் 152 கேஸ்களை ஒரத்தநாடு ஒன்றியத்தில் போட்டிருக்கிறார். ஆனால் தி.மு.க.வைச் சேர்ந்தவர் 100-க்குக் குறைவாகப் போட்டிருக்கிறார். ஆனால், அங்கே இருந்த ஆட்சிக்





கட்சியினருடைய தலையீட்டினால் குறைவாக கேஸ் போட்டிருக்கிற அவருக்கு கிராமத் தலைவர் பதவி தரவேண்டுமென்று அங்கே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட சீர்கேடுகளை யெல்லாம் ஆட்சியிலிருக்கிறவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். இன்னொரு இடத்தில், முன்னேற்றக் கழகத்தில் இருக்கிறவருக்குச் சாதகமாக எண்ணிக்கையை நீட்டிக் கொடுக்கின்ற அளவில், இப்படி சீர்கேடுகள் இருக்கின்றன.

காவல் துறைக்கு எப்படிப்பட்ட சட்டங்களையும் போட்டு அண்ணா தி.மு.க.வை அழித்து விடலாம் என்று இந்த ஆட்சிக் கட்சியில் இருப்பவர்கள் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமைகளை இன்றையதினம் கையாண்டு வருகிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில், ஒவ்வொரு இடத்திலும், மேடையில் பேசுகிற பேச்சுக்களை, ஏதோ சின்னஞ்சிறிய பத்திரிக்கைகள் எழுதிவிட்டால் சுதந்திரம் பறிபோய் விடுகிறது என்று சொல்கிறார்கள். இப்படிச் சொல்லிவிட்டு அமைச்சர்கள் முழங்குகிற மேடைகளில் திருப்பிச் சொல்ல முடியாத வார்த்தைகளைச் சொல்லி வருகிறார்கள். அதற்குப் பின்னால் அந்தப் பகுதியில் கலவரங்கள் நிகழ்கின்றன. பக்கத்தில் உள்ள ஆலங்குடியில் கலவரம் நிகழ்ந்திருக்கிறது. முதல்வர் அவர்கள் பட்டுக்கோட்டைக்கு வந்த நேரத்தில் கண்ணீர் புகை வீசப் பட்டிருக்கிறது. கட்சிக்காரர்கள் இப்படிப்பட்ட நிலைமைகளை அங்கங்கே ஏற்படுத்துகிறார்களே தவிர வேறு ஒன்றும் இல்லை.

இந்த நிதிநிலை அறிக்கையில் உள்ள கருத்துக்கள் எதையும் நாங்கள் வரவேற்கவில்லை என்று சொன்னார்கள். வரவேற்கவில்லை என்பதல்ல. அறிஞர் அண்ணா அவர்கள் என்ன சொன்னார்கள் என்பதை நினைவு கொள்ள வேண்டும். பலரை நாட்டுடைமை யாக்குவதா என்பது அல்ல, இந்த ஆட்சி அவர்களுக்குப் பாதுகாப்பாக இருக்கக்கூடாது என்றார்கள், நில உச்சவரம்புகள் பற்றி—நிலம் இல்லாதவர்களுக்கே நிலம் கொடுக்க வேண்டும் என்பதல்ல—நில உடைமையாளர்களுக்கு உடந்தையாக இந்த அரசு இருக்கக்கூடாது என்பதுதான் முக்கியம் என்றார்கள். இந்த ஆட்சி எந்தப் பக்கம் போய்க்கொண்டிருக்கிறது, எந்த வகையில் ஆதரிப்பது என்பதைச் சிந்திக்க வேண்டும்.

[திரு. துரை கோவிந்தராசன்] [1973 மார்ச் 5

எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்று சொல்லிக்கொண்டிருந்த திராவிட முன்னேற்றக் கழகம் தான் இன்றைக்கு ஆட்சியில் இருக்கிறது? சங்கரலிங்க நாடாரை நினைக்க வேண்டும். இன்றைக்கு தமிழ் புலவர் கோர்ஸ் படித்தவர்கள் தமிழாசிரியர்களாகத்தான் இருக்க வேண்டிய நிலை இருக்கிறதே தவிர வேறு ஏதாவது மாற்றம் ஏற்பட்டதா? பி.ஏ. படித்தவர்கள், எம்.ஏ. படித்தவர்கள், எம்.எஸ்.ஸி. படித்தவர்கள் எந்த வேலைக்கு வேண்டுமானாலும் போக முடியும். ஆனால் புலவர் பட்டம் பெற்றவர்கள் தமிழாசிரியராகத்தான் போக முடியும், அதுவும் கிடைக்கவில்லை என்றால் தெருவில் சுற்றிக்கொண்டிருக்கிற நிலையில் தான் இந்த அரசும் அவர்களை விட்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

சேப்பாக்கத்தில் இருக்கிற புலவர் பயிற்சிக் கல்லூரியில் படிக்கிறவர்களுக்கு மாதம் 20 ரூபாய் தரப் போவதாகச் சொன்னார்கள். மாதம் நான்காகிவிட்டது கல்லூரி துவங்கி. இதுவரை எந்தவிதமான தொகையும் அவர்களுக்கு அளிக்கப்படவில்லை. கடலில் வருகிறவர்கள் இதோ தமிழ் நாடு என்பதாக பெயர் சொல்லி அழைக்க தமிழ் நாடு என்று பெயரை மாற்றினார்களே தவிர, இன்றைக்கும் தமிழ்ப் புலவர்களை தரித்திரர்களாகத்தான் திரிய விட்டிருக்கிறார்கள்.

அந்த இடத்தில் இருந்தவர்கள் தான் நாங்கள். என்றாலும் இதுபோன்ற அண்ணா அவர்கள் கொண்ட கொள்கைக்கு மாறுபட்டு அந்த இயக்கம் போய்க் கொண்டிருந்த காரணத்தினால் தான் நாங்கள் அண்ணா முன்னேற்றக் கழகம் என்பதாக அமைத்துக் கொண்டு வெளி வந்திருக்கிறோமே தவிர, புரட்சி நடிகருக்கு நாட்டியமாடிக் கொண்டு வெளி வரவில்லை. இதுபோன்று எல்லாம் பேசலாம். ஆனால் வரலாற்றை மறந்துவிட முடியாது. எங்களைப் போலத்தான் அன்றைக்கு—ஒரு இயக்கத்தில் இருந்துதான் பின்னால் அவர்களும் வெளிவந்த நிலையில் இருந்து இருக்கிறார்கள். கடந்த கால வரலாற்றைப் பார்த்தால் தெரியும். ஒரு இயக்கத்தில் இருந்து பிரிந்துதான் இன்னொரு இயக்கம் வளர்ந்திருக்கிறது. அந்த அடிப்படையில் தான் அவர்களுடன்தான் நாங்களும் இருந்தோம் என்றும்



1973 மார்ச் 5] [திரு. துரை கோவிந்தராசன்]

அதிலிருந்து பிரிந்து வந்த இயக்கத்தில் நாங்கள் இருந்து கொண்டிருக்கிறோம் என்று சொல்லி, என் பேச்சினை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. மு. சுருளிவேல்**: பாயின்ட் ஆப் க்ளாரிபிகேஷன். திரு. துரை கோவிந்தராசன் அவர்கள் அண்ணாவின் கொள்கை அடிப்படையில் பிரிந்து நின்று தனிக்கட்சியாக இயங்குவதாகச் சொன்னார்கள். அப்படியானால் அண்ணா அவர்கள் மாநில சுயாட்சி பற்றி, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் தருவது பற்றி வற்புறுத்தி வந்திருக்கிறார்களே, இதனை ஏற்றுக்கொள்ளத் தயாராய் இருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. துரை கோவிந்தராசன்**: அண்ணா அவர்கள் மாநில சுயாட்சியையும் விட 1949 இல் திராவிட நாடு திராவிடருக்கே என்றுதான் கூறி வந்திருக்கிறார்கள். தனித் திராவிட நாட்டுக் கோரிக்கையைக் கைவிட்ட பிறகுதான் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்று இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் அறிவார்கள் என்று நினைக்கிறேன்.

**திரு. எம். எஸ். கே. சத்தியேந்திரன்**: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1973-74-ஆம் ஆண்டு வரவு—செலவுத் திட்டத்தை வரவேற்றுப் பேசுகின்ற ஒரு நல்ல வாய்ப்பினை எனக்கு அளித்ததற்காக முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் 'நாட்டு வளம், மக்கள் நலம் இவையே நம் குறிக்கோள் எனப் பயணம் நடத்திக் கொண்டிருக்கிறோம்' என்பதாக கலைஞர் அவர்கள் குறிப்பிட்டிருப்பதை எதிர்க் கட்சியினர்கள் கவனித்திருப்பார்கள்.

உதட்டின் வெளியீடாக மட்டும் சமதர்மத் திட்டங்கள் அமையாமல், செயலின் வடிவங்களாகவும் அவை ஒளிவிட வேண்டுமென்பதில் இந்த அரசுக்கு நிறைந்த அக்கறையுண்டு என்பதை கலைஞர் அவர்கள் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

[திரு. எம். எஸ். கே சத்தியேந்திரன்] [1973 மார்ச் 5

இந்திய கம்யூனிஸ்டுக் கட்சியைச் சார்ந்தவர்கள் சமதர்ம திட்டங்களை மிக வேகமாகச் செயல்படுத்த வேண்டும் என்று சொல்வதற்கு கலைஞர் அவர்கள் கொடுத்த பதில் அவசரக் கோலம் அலங்கோலமாகிவிடும் என்பதாகும். படிப்படியாக ஆனால் உறுதியாக சமதர்மக் கொள்கைகளை இந்த அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது என்பதையும் மாற்றுக் கட்சியினர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

பி.ப. 1-30

தனி உடைமைகளை தேசிய உடைமைகளாக்குவதால் தனியார் ஆதிக்கம் தமிழகத்தில் நிலைக்கும் என்றாலும் இதுவே தமிழகத்திலுள்ள லட்சோப லட்சம் தரித்திர நாராயணர்களை வாழ வைக்க போதுமானவை அல்ல என்பதை நன்றாக உணர்ந்து ஏழை எளியோர்க்கு இரப்போர்க்கு, குடிசை வாழ்வோர்க்கு குருடாகி விட்டோர்க்கு, வீட்டு மனை இல்லாதவர்க்கு, விவசாய தொழிலாளர்களுக்கு இந்த அரசு பல திட்டங்களை மேற்கொண்டிருக்கிறது. எனினும் இவற்றை எல்லாம் நமது முதல்வர் அவர்கள் முதலுதவி திட்டமாகத்தான் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இதனையும் எதிர்க்கட்சியினர்கள் புரிந்து கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மத்திய மாநில தொடர்புகள் மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்கிற கருத்தில் இந்த நிதிநிலை அறிக்கையில் பல முக்கியமான விவரங்களை தெரிவித்திருக்கிறார்கள். மத்திய அரசு மாநிலங்களுக்கு நிதி உதவி அளிப்பதில் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் தமிழ் நாட்டின் பங்கு எப்படி 4.7 சதவீதமாக தேய்ந்து விட்டிருக்கிறது என்பதைக் காட்டி மத்திய அரசின் மாற்றாந்தாய் மனப்போக்கை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். இந்திய நாட்டின் மக்கள் தொகையில் தமிழ் நாட்டின் மக்கள் தொகை 7.5 சதவிகிதம். ஆனால் நமக்கு மத்திய அரசு அளிக்கும் நிதி உதவி 4.7 சதவிகிதமாக குறைந்திருக்கிறது. இதையும் எதிர்க்கட்சியினர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்த நிதிநிலை அறிக்கையில் ஆளும் கட்சியினர்க்கு சில சலுகைகளை வழங்கியிருப்பதுபோல் சிலர் குறிப்பிட்டார்கள். நானும் நிதிநிலை அறிக்கையை பார்த்தேன். அதுபோன்று எந்த விதமான அறிவிப்பையும் காண முடியவில்லை.



1973 மார்ச் 5] [திரு. எம். எஸ். கே. சத்தியேந்திரன்]

வெள்ளத்தாலும் புயலாலும் ஏற்பட்ட சீர்குலைவு எவ்வளவு என்பதை நாம் அறிவோம். தமிழக அரசு மக்கள் துயரத்தை துடைக்க மேற்கொண்ட நடவடிக்கைகளை வெள்ளச் சேதத்தை பார்வையிட வந்த மத்திய அரசு குழுவினரே பாராட்டியிருக்கிறார்கள். அதற்காக நான் இந்த அரசுக்கு நன்றி செலுத்த கடமைப்பட்டிருக்கிறேன். வேளாண்மையில் தமிழகம் தன்னிறைவு பெற பல நல்ல திட்டங்களை உருவாக்கியிருக்கும் இந்த அரசை பாராட்டாமல் இருக்க முடியாது. மக்கள் நல்வாழ்வுத் துறையிலும் இந்த அரசு பல நல்ல காரியங்களை செய்து வருகிறது. அதை பாராட்டுகிற நேரத்தில் இராமேஸ்வரம் தீவுப் பகுதியில் இருக்கிற மக்கள் நலனுக்காக அங்கு ஓர் மருத்துவ மனையையும் அமைத்துத் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அறுபத்திஒன்று ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள் மாநில அரசு நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்படும் என்ற அறிக்கையைப் பார்க்கின்ற நேரத்தில், மண்டபம் பகுதியில் இருக்கிற பாம்பன் ஊராட்சி ஒன்றிய மருத்துவ மனையை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்வித் துறையைப் பொறுத்த அளவுக்கு அதற்காக எந்த அளவுக்கு செலவிடப்படுகிறது என்று பார்க்கின்ற பொழுது, ஒரு காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டால் தமிழகத்தில் கல்விக் கூடங்களே இருக்காது என்று சொல்லிவந்த கூற்றுக்கு மாறாக இன்று எந்த அளவுக்கு காரியங்கள் செய்யப்படுகின்றன என்று புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. இந்த நேரத்தில் கல்வி அமைச்சர் அவர்களுக்கு ஒரு கோரிக்கை விடுக்க ஆசைப்படுகிறேன். இராமநாதபுரம் நகரத்திலே இருக்கிற சேதுபதி அரசினர் கலைக் கல்லூரிக்குக் கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது. இப்பொழுது அந்தப் பகுதியிலிருக்கிற அரண்மனையிலே அந்தக் கல்லூரி இருந்து கொண்டிருக்கிறது. அதைப் புதிதாக கட்டிய

கட்டடத்திற்கு மாற்றவிருக்கிறார்கள். அந்தப் பகுதிக்கு மாணவர்களுக்கு விடுதியில்லாத காரணத்தினால் தினசரி கல்லூரி செல்வதற்கு மிகப் பெரிய சிரமம் ஏற்படும் என்பதை கருத்தில் கொண்டு உடனடியாக விடுதியைக் கட்டித் தருவதற்கான காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய தொகுதியில் இருக்கிற சில குறைகளை சொல்ல கடமைப் பட்டிருக்கிறேன். பெரிய கண்மாய் பகுதியைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நன்றாக அறிவார்கள். அந்தப் பகுதிக்கு அமைச்சர் அவர்கள் வந்தபொழுது அவரை அங்கு அழைத்துச் சென்று காட்டியிருக்கிறோம். அந்தப் பெரிய கண்மாயை சீரமைக்க உடனடியாக ரூ. 20.5 லட்சம் மதிப்பீட்டில் திட்டம் தீட்டப் பட்டிருக்கிறது. அதை இந்த நிதி ஆண்டில் நிச்சயமாக நிறைவேற்றித் தருவார்கள் என்று எதிர்பார்க்கிறோம். அந்தப் பகுதியிலுள்ள விவசாயப் பெருங்குடி மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கை அது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்கள்.

அடுத்து சத்திரக்கோட்டை கண்மாய் இராமநாதபுரம் புகை வண்டி நிலையத்திற்கு அருகாமையிலிருக்கிற கண்மாய். அங்கிருந்து பார்ப்பதற்கு அது சமுத்திரம் போல தெரிகிறது. இராமநாதபுரம் பிற்பட்ட பகுதி, நீர்வளமே இல்லாத பகுதி என்று சொல்கிறார்களே, இங்கு சமுத்திரம் போல் தண்ணீர் இருக்கிறதே என்று சொல்கிறார்கள். உண்மையிலேயே அந்த கண்மாயில் ½ அடி தண்ணீர் கூட இல்லை. அந்த சத்திரக் கோட்டை. கண்மாயை ஆழப்படுத்தித் தரவேண்டுமென்ற கோரிக்கையையும் நான் தற்சமயம் விடுக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து, தமிழ் நாட்டில் மீன் வளப்பகுதி, மீன் வளத்தில் சிறப்பான காரியங்களைச் செய்ய வேண்டிய, ஆற்ற வேண்டிய பகுதி என்னுடைய தொகுதியாகத்தான் இருக்கும். பொதுவாக மீன்வளத்தைப் பொறுத்த அளவுக்கு அங்கிருக்கிற ஏரியில் மீன்களைப் பிடித்து, கட்டு மரத்தில் பிடித்து, மெக்கானைஸ்ட் போட் மூலமாக அவைகளை கேரளத்திற்கு எடுத்துச் சென்று,





கேரளத்திலிருந்து வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்கிறார்கள். இதனால் அன்னியச் செலாவணி தமிழகத்திற்குக் கிடைக்காமல் கேரளத்திற்கு கிடைக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். நமது அரசு நிச்சயமாக இதைத் தடுக்க வேண்டும். அந்த ஏழை மீனவ நபர்களுக்கு இது மிகப் பெரியத் திட்டமாக இருக்க வேண்டும். அந்தத் திட்டத்தை நிறைவேற்றக் கோருகின்ற நேரத்தில், அங்கிருக்கிற ட்ராவலார்களை அரசு நிறுவனமாக ஏற் பாடு செய்து பெரிய அளவில் செய்ய வேண்டும். அங்கு ஐஸ் பிளாண்ட் ஒன்று இருக்கிறது. அதை விரிவுபடுத்தி அங்கிருக்கிற மீன்களை பக்குவப்படுத்தி, வெளிநாட்டிற்கு தமிழ்நாடு மூலமாக ஏற்றுமதி செய்கின்ற திட்டத்தை கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தனியார் மின் நிறுவனங்களை அரசு ஏற்றிருக்கிறது என்ற திட்டத்தை வரவேற்கிறேன். மால்கோ அலுமினிய நிறுவனத்தை தமிழக அரசு ஏற்றுக்கொண்டிருப்பதை வரவேற்கிற நேரத்தில் பெருமைப்படுகிறேன். பொதுவாக தமிழக அரசு இது போன்ற சீர்திருத்த திட்டங்களை செய்து காட்டினால் அதை ஏன் எதிர்க் கட்சிகளால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை? இன்று பேருந்து உரிமையாளர்கள் டெல்லிக்குச் சென்று அங்கிருக்கிற அமைச்சர்களைச் சந்தித்து, தங்களுடைய கோரிக்கைகளைக் கொடுக்கிறார்கள் என்று சொன்னால், தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் இதில் ஏதோ உள்நோக்கத்தோடு இருந்து கொண்டு காரியங்களைச் செய்கிறார்கள் என்று எப்படி குற்றச்சாட்டுக் கூற முடியும்? திராவிட முன்னேற்றக் கழக அமைச்சர்கள் இதற்காக பல கோடிகளை கையூட்டாக வாங்கியிருக்கிறார்கள் என்று மாற்றுக் கட்சிகள் வாய் கூசாமல் சொல்வதை தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த வரவு செலவு திட்டம் அருமையான திட்டம் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு சந்தர்ப்பம் அளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று பேரவை மீண்டும் நாளைக் காலை 9.00 மணியளவில் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.35 மணியளவில் ஒத்தி வைக்கப்பட்டது.

## 7. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

60. Notification issued with G.O. Ms. No. 124, Revenue, dated the 19th January 1973, in regard to an amendment to the Tamil Nadu Agricultural Income-Tax Rules, 1955. [Laid on the table of the House under section 61 (3) of the Tamil Nadu Agricultural Income-tax Act, 1955 (Tamil Nadu Act V of 1955).]

61. Notification issued with G.O. Ms. No. 2655, Rural Development and Local Administration, dated the 27th December 1972, in regard to amendment to the rules relating to Receipts and Expenditure of Panchayats published with Rural Development and Local Administration Department Notification S.R.O. No. A-123 (*a*) of 1962 at pages 58 to 66 of the supplement to Part V of the Tamil Nadu Government Gazette, dated the 14th February 1962 as subsequently amended. [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

62. Notification issued with G.O. Ms. No. 2807, Revenue, dated the 26th October 1972, in regard to an amendment to the Tamil Nadu Agricultural Labourer Fair Wages Rules, 1969. [Laid on the Table of the House under section 14 (4) of the Tamil Nadu Agricultural Labourer Fair Wages Act, 1969 (Tamil Nadu Act 19 of 1969).]

63. Notification issued with G.O. Ms. No. 125, Revenue, dated the 19th January 1973, in regard to an amendment to the Tamil Nadu Agricultural Income-tax Rules, 1955. [Laid on the table of the House under section 61 (3) of the Tamil Nadu Agricultural Income-tax Act, 1955 (Tamil Nadu Act V of 1955).]



64. Notification issued with G.O. Ms. No. 273, Excise and Prohibition, dated the 3rd October 1972, making the Tamil Nadu Brewery Rules, 1972. [Laid on the table of the House under section 34 (5) of the Tamil Nadu Excise Act, 1971 (Tamil Nadu Act 34 of 1971).]

65. Notification issued with G.O. Ms. No. 2818, Agriculture, dated the 13th November 1972, making the Tamil Nadu Collection of Statistics (Works-Stoppages) Rules, 1972. [Laid on the table of the House under section 14 (3) of the Collection of Statistics Act, 1953 (Central Act XXXII of 1953).]

### B. *Reports, Notifications and Other Papers.*

'Nil'.

# தமிழ்நாடு சட்டப் பேரவை

---

**செவ்வாய்க்கிழமை, 1973 மார்ச் 6.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்-விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

### *Report of the Administrative Reforms Commission*

*221 Q.—THIRU K. T. K. THANGAMANI:
THIRU N. DENNIS:
DR. H. V. HANDE:
THIRU D. S. A. SIVAPRAKASAM: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the State Administrative Reforms Commission has submitted its interim report;

(b) if so, the deta'ls thereof; and

(c) whether it will be placed on the table of the House?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ), (இ) : மாநில நிர்வாகத்தின் பல்வேறு பிரிவுகளில் செயலில் உள்ள நடைமுறைகளைச் சீர்செய்வதற்காக அடங்கல் செயற் குறிப்புகளை அனுப்புமாறு நிர்வாக சீர்திருத்த ஆணைக்குழு கேட்டுக் கொள்ளப்பட்டது. இடைக்கால அறிக்கைகளை அனுப்புமாறு ஆணைக்குழுவிற்கு உத்தரவிடப்படவில்லை. ஆனால், இறுதி அறிக்கைகள் தயாரித்து முடிக்கப் பெற்றதும் அவற்றை அனுப்பிவைக்குமாறு உத்தரவிடப்பட்டது. கீழ்க்கண்டவை பற்றிய இறுதி அறிக்கைகளை ஆணைக்குழு அனுப்பியுள்ளது :—

(1) வருவாய்த்துறை வாரியம்

(2) வேளாண்மை ஆராய்ச்சி

(3) புதிய சிறு தொழில்களை நிறுவுவதற்குத் தேவையான அனுமதிகளை விரைவுபடுத்துவது குறித்த அறிக்கை.

ஏனைய ஒரு சில பொருள்கள் பற்றிய அறிக்கைகள் விரைவில் எதிர்பார்க்கப்படுகின்றன

(உ) முதலாவதும், மூன்றாவதும் பொருள்கள் குறித்த அறிக்கைகளின் படிகள் மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளன. இரண்டாவது பொருள் குறித்த அறிக்கை அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

**திரு. என். டென்னிஸ் :** நிர்வாக சீர்திருத்த ஆணைக்குழு சமர்ப்பிக்க வேண்டிய இறுதி அறிக்கை எப்பொழுது சமர்ப்பிக்கப்படும்? ஆணைக்குழுவிற்காகச் செலவிடப்படும் தொகை எவ்வளவு? அறிக்கையைச் சமர்ப்பிக்கக் கால தாமதம் ஆகும் போது, அக்குழுவிற்காக ஆகும் செலவும் அதிகமாகத்தானே ஆகும்?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மற்ற பொருள்கள் குறித்த அறிக்கைகள் விரைவில் கிடைத்துவிடும் என்று கருதுகிறேன். கூடுமானவரை நிர்வாகத்தில் காலதாமதம் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காகத்தான் சீர்திருத்தக் குழு அமைக்கப்படுகிறது. ஆகவே, இதுவும் கால தாமதம் இல்லாமல் காரியங்களை முடிக்கும்.

**திரு. என். கே. பழனிசாமி :** நிர்வாகச் சீர்திருத்தக் குழுவின் சிபார்சுகளை அமுலாக்குவதன் மூலம் சர்க்காருக்குச் செலவு குறையுமா? அதிகமாகுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அமலாக்குவதன் மூலம் செலவு எந்த அளவு உயரும் அல்லது குறையும் என்பதை இப்பொழுது சொல்ல முடியாது. மேலும் நிர்வாகம் சீர்படுவதற்கு வழி நிச்சயமாக ஏற்படும்.

**திரு. எஸ். ஆறுமுகம் :** நிர்வாகம் சீர்பெறுவதற்கு வருவாய் வாரியத்தை—ரெவின்யூ போர்டை—ஒழிப்பதற்கு ஏதாவது பரிந்துரை வந்துள்ளதா? அப்படியானால் முடிவு கட்டும் வேலை விரைவில் நடைபெறுமா?





**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அந்த அறிக்கையே உறுப்பினர்களுக்குத் தரப்பட்டிருக்கிறது. அதைப் படித்துப் பார்த்தாலே எவ்வகையான பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது என்பது தெரியும்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** நிர்வாகச் சீர்திருத்தம் என்பது இப்பொழுது இருக்கிற அமைப்பையே வைத்துக்கொண்டு அதிலே என்ன சீர்திருத்தம் செய்வது என்பதுபற்றிப் பரிசீலிக்கப்படுகிறதா? அப்படியில்லாமல், நிர்வாக அமைப்பை அடிப்படையிலேயே புதிதாக மாற்றியமைப்பதற்கான முயற்சி குறித்து ஆராய்ச்சி செய்யப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** சீர்திருத்தத்திற்கும் புரட்சிக்கும் உள்ள வேறுபாடு அதுதான்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, may I know from the Hon. Chief Minister whether there is any connection between the reports of the Central Administrative Reforms Commission and our State Administrative Reforms Commission and whether our Committee have made use of the recommendations of the Central Administrative Reforms Commission?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அதற்கும் இதற்கும் தொடர்பு இருக்க வேண்டும் என்று கூற முடியாது. இந்தச் சீர்திருத்தங்களை ஆராயும் நேரத்தில் அந்தக் குழுவினருக்கு ஒரு வேளை பயன்பட்டிருக்கக்கூடும்.

**திரு. கே. ஏ. வகாப் :** நிர்வாகச் சீர்திருத்தக் குழுவின் அறிக்கைக்குப் பிறகாவது ரெட் டேபிஸம் என்று சொல்லப்படுகிற சிவப்பு நாடா முறை அடியோடு ஒழிக்கப்படுமா ? அதற்கான முயற்சிகளை அரசு எடுக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இப்போதே இதனுடைய பரிந்துரைகளுக்கு முன்பே இந்த அரசு கூடுமான வரையில் அந்த முறையை ஒழிப்பதற்குப் பாடுபட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினரே அறிவார்.

**திரு. நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, நிர்வாகச் சீர் திருத்தக் குழுவினுடைய சிபார்சுகளை நாம் செயல்படுத்தும் போது தலைமைச் செயலகத்தில் செயலாளர்களாக இருக்கக்கூடிய வர்கள் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாக இல்லாமல் அந்தந்த இலாக் காவில் டெக்னிகல் க்வாலிபிகேஷன் உள்ளவர்களை—அதாவது விவசாயத் துறைச் செயலாளராக விவசாயத் துறையில் பட்டம் பெற்றவர்—பொறியியல் துறை இன்ஜினியர் போன்று இப்படிப் பட்டவர்களை அரசாங்கம் நியமிக்கலாம் என்று அவர்களுக்கு அரசு ஆலோசனை கூறுமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நிர்வாகச் சீர்த்திருத்தக் குழுவின் ஆலோசனைகளை எதிர்பார்க்கிறோம். நாம் அவர்களுக்கு ஏதும் ஆலோசனை கூறுவதற்கில்லை. அவர்கள் கூறும் ஆலோசனை களை ஆராய்ந்து நாம் முடிவு எடுக்க வேண்டியவர்கள்.

### *Loans granted under Gold Control Order*

* 222 Q.—THIRU A. M. RAJA : Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any proposal to request the Central Government to write off all the loans sanctioned under the Gold Control Order and Cyclone Relief Scheme?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இல்லை. ஆனால், தங்கக் கட்டுப்பாட்டு ஆணையின் கீழ் வழங்கப்படும் கடன்களைப் பொறுத்தவரையில், பொற்கொல்லர்களிடமிருந்து எந்த அளவுக் குத் தொகைகள் வசூலிக்கப்படுகின்றனவோ அந்த அளவுக்கு மட்டும் இம்மாநில அரசு கடன் திருப்பிக்கொடுக்க வகை செய்யும் உடன்பாடு ஒன்றை ஏற்குமாறு இந்திய அரசு கேட்டுக் கொள்ளப் பட்டது. எனினும், வசூலிக்கமுடியாத கடன்கள் குறித்து விரயம் ஏதும் ஏற்படின் அதனை இந்திய அரசும் மாநில அரசும் சமமாகப் பங்கிட்டுக் கொள்ளும் என்ற நிபந்தனைக்குட்பட்டு மேற் படி உடன்பாட்டிற்கு இந்திய அரசு ஒப்புக் கொண்டுள்ளது.

**திரு. ஏ. எம். இராஜா :** தலைவர் அவர்களே, தங்கக் கட்டுப்பாடு சட்டத்தைப் பொறுத்த வரையில், அது மத்திய அரசால் போடப்பட்ட சட்டமாகும். மத்திய அரசு பிறப்பித்த சட்டத் தால் ஏற்பட்ட விளைவுகளை மாநிலம் ஏற்பதென்பது எந்த வகை யிலும் பொருந்தாது. தங்கக் கட்டுப்பாட்டின் மூலம் பாதிக்கப் பட்ட பொற்கொல்லர்களிடமிருந்து நாம் தொகையை வசூலிக்கவும் முடியாது. பொற்கொல்லர்கள் தொகை கட்டியிருந்தால்கூட, அதை அவர்களுக்குத் திருப்பிக் கொடுப்பதற்கு மாநில அரசு மத்திய அரசுக்குத் தெரிவித்து ஏற்பாடு செய்யுமா ? மத்திய அரசுக்கு பொற்கொல்லர்கள் கொடுக்க வேண்டியதில்லை என்று முடிவு எடுக்க அரசு முன்வருமா ?



**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இது நியாயமான உரிமைக்குரல். ஆனால், நிலைமைக்கேற்ப சில விஷயங்களை நாம் அணுக வேண்டியிருக்கிறது. கிட்டத்தட்ட 251 இலட்ச ரூபாய் பொற்கொல்லர்களுக்கு 1963-ஆம் ஆண்டிலிருந்து கடனாக வழங்கப் பட்டது. அதில் பொற்கொல்லர்கள் திருப்பித் தந்திருக்கும் தொகை ரூ. 2,69,757 அது தவிர வட்டி ரூ. 38,976 ஆக, ரூ 3,08,753 தான் பொற்கொல்லர்கள் திருப்பிக் கொடுத்திருக் கிறார்கள். ஆனால், அவர்கள் வாங்கியிருக்கும் கடன் ரூ. 251 இலட்சம். மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல் இது மத்திய அரசால் பிறப்பிக்கப்பட்ட சட்டம். ஆகவே, பொற் கொல்லர்களுக்கு அவர்கள்தான் அந்தக் கடனைக் கொடுத்தார்கள். அது வராவிட்டால் அவர்கள்தான் பொறுப்பு ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆனால், கடைசியாக மாநில அரசும் மத்திய அரசும் அந்த ஆளுக்குப் பாதி பாதியாக வைத்துக்கொள்ளலாம் என்று கேட்டதற்குப் பிறகு, வசூலிக்காமல் மிச்சம் இருக்கிற அந்தத் தொகையை மாநில அரசும் மத்திய அரசும் பாதிப் பாதியாகப் பொறுப்பேற்றுக்கொள்வது என்ற முடிவுக்கு வந்தோம். நண்பர் ராஜா அவர்கள் கேட்ட கேள்வி, மத்திய அரசு போட்ட சட்டத் திற்கு நாம் ஏன் அந்தக் கடனை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது. அதுதான் இன்றையநிலை

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** தலைவர் அவர்களே, ஏற் கெனவே கடன்பெற்ற பொற்கொல்லர்கள் பெற்றுக் கொண்ட கடன் தொகையில் ஒரு அளவுக்குத்தான் திருப்பிக் கொடுக்க முடிந்திருக்கிறது என்று நினைக்கிறேன். ஆகையால் அவர்கள் அக் கடனைக் கொடுக்க முடியாத நிலையில்தான் இருக்கிறார்கள். அவர்களிடத்தில் வசூல் செய்யலாம் என்று நினைக்கின்ற எண்ணம் கூட மத்திய அரசுக்கு இருப்பது தவறானதாகும். இதிலே மத்திய அரசு மாநில அரசை 50 சதவிகிதம் பொற் கொல்லர் கடனை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பது சரியல்ல

என்பது என் கருத்து. இதுபோன்று எத்தனையோ கடன்கள் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் கடன் கொடுத்து, கொடுத்த கடனைத் திருப்பி வசூலிக்க இயலாத நிலையில் கடன்தொகையை 'ரைட் ஆஃப்' செய்திருக்கிறார்கள். பொற்கொல்லர் கடன் தொகை முழுவதையும் கம்ப்ளீட் ஆக ரைட் ஆஃப் செய்ய இந்த அரசு மத்திய அரசுக்கு எடுத்துக் கூறுமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** பங்கெடுத்துக்கொள்வது என்பது, திருப்பித் தருகிற கடனைப் பங்கெடுத்துக்கொள்வது என்பதல்ல. கடனைத் திருப்பிக் கொடுக்காமலிருக்கிற நஷ்டத்தை இரண்டு அரசுகளும் பங்கெடுத்துக் கொள்வது. நான் ஏற்கெனவே குறிப்பிட்டபடி பொற்கொல்லர்கள் திருப்பிக் கொடுத்த தொகை கிட்டத்தட்ட ரூ. 3 இலட்சம். அவர்கள் பெற்றுக் கொண்ட கடன் ரூ. 251 இலட்சம். ஆக, சுமார் 2 கோடி 48 லட்ச ரூபாய் திருப்பி வராத கடன்தொகை. இதிலே பாதியை மத்திய அரசும், பாதியை மாநில அரசும் பொறுப் பேற்றுக்கொள்வது என்கிற முடிவுக்காவது மத்திய அரசு ஒத்துக் கொண்டதே என்று மகிழ்ச்சி அடையலாம். இது 1963–64-ம் ஆண்டுப் பிரச்சினை. அம்மையார் அவர்கள் அமைச்சராக இருந்த நேரத்திலிருந்து இருக்கிற பிரச்சினை. நாங்கள் வந்த பிறகு இப்படியொரு ஏற்பாட்டைச் செய்து கொண்டிருக்கிறோம்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** மத்திய அரசு ஒரு சட்டத்தைக் கொண்டு வருகிறபோது தேசத்தின் ஒட்டுமொத்தமான நலனைக் கருத்தில் கொண்டுதான் கொண்டுவரும். சில சமயம் தவறாக இருக்கலாம். சில சமயம் நல்லதாக இருக்கலாம். நல்லதாக வருகின்றபோது நாம் ஏற்றுக்கொண்டு, ஏதாவது சிரமம் வந்தால் மத்திய அரசுதான் செய்தது என்று சொல்வதும் அதில் பங்கு எடுத்துக் கொள்வதாகச் சொல்வதும் உசிதம் என்று அரசு கருது கிறதா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நான் நண்பர் மாரி முத்து அவர்கள் சொன்னதுபோல், திரு. ராஜா அவர்களுடைய கேள்விக்கு நிலைமையை விளக்கியிருக்கிறேன். ஆனால் அது நியாயமானதா என்பது வேறு விஷயம்.



**திரு. கா. வேழவேந்தன் :** துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு செய்த தவறுக்கு நாம் அபராதம் செலுத்துகிறோம் என்று முதல்வர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படி அபராதம் செலுத்துகின்ற முறையை மாற்ற வேண்டுமென்று இங்கிருக்கின்ற அகில இந்திய கட்சிகள் ஏதாவது தீர்மானம் போட்டு அனுப்பி யிருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** கட்சி விஷயங்கள் பற்றி எனக்குத் தெரியாது.

**திரு செ. கந்தப்பன் :** தலைவர் அவர்களே, மத்திய அரசு சில சட்டங்களையும் திட்டங்களையும் மாநில அரசுகளைக் கலந்துகொள் ளாமல் கொண்டுவருவதால் இதுபோன்ற சூழ்நிலைகள் ஏற்படுவதால் மத்திய அரசு மாநிலங்களைக் கலந்துகொண்டு செய்தால் அன்றியில் மாநில அரசு பொறுப்பு ஏற்றுக்கொள்ளாது என்பதை நம்முடைய முதல்வர் அவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இது திரு. மாரிமுத்து அவர்கள் கேட்ட கேள்விக்கு நல்ல பதில் ஆகும்.

**திரு. ஆ. பரந்தாமன் :** தலைவர் அவர்களே, இந்தக் கடன்களை ரைட் ஆப் செய்யாவிட்டாலும்கூட அவற்றை நீண்டகாலக் கடன் களாக மாற்றி, உத்திரவிட அரசாங்கம் முயற்சி செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இப்படி முடிவு ஏற்பட்ட தற்குப் பிறகு யாரும் கடனைத் திருப்பிச் செலுத்தமாட்டார்கள் என்று நினைக்கிறேன். திருப்பித் தராத கடனை இரண்டு அரசு களும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று முடிவு எடுத்ததற்குப் பிறகு யாரும் திருப்பிச் செலுத்தமாட்டார்கள்.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** தலைவர் அவர்களே, மத்திய அரசு மட்டுமின்றி அண்டை மாநில அரசு செய்கிற சட்டங்கள், முடிவு களினால்கூட சங்கடங்கள் ஏற்படுகின்றனவே, உதாரணமாக அண்மையிலே ஆப்காரி விஷயத்திலே தென் மண்டல மாநிலங் களுக்கிடையே சங்கடங்கள் ஏற்பட்டுள்ளதாக செய்தி வந்துள்ளதே. அதைப்பற்றி இந்த அரசினுடைய கருத்து என்ன ?

[1973 மார்ச் 6

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மத்திய அரசு மாநிலங்களை அனுசரித்துச் செல்ல வேண்டும். மாநிலத்திற்கு மாநிலம் வேறுபாடு இருக்கலாம். மத்திய அரசு தான் எல்லா மாநிலங்களையும் அனுசரித்துச் செல்ல வேண்டும்.

**திரு. சோ. அழகர்சாமி :** தங்கக் கட்டுப்பாட்டு ஆணையின்கீழ் வழங்கப்பட்ட கடன்களை அவர்களால் செலுத்த முடியவில்லை, அவற்றைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்ற கோரிக்கை நியாயமானதுதான். அதை மத்திய அரசு தள்ளுபடி செய்யக் கடமைப்பட்டிருக்கிறது. அதைப்போன்று புயல், வெள்ளம், வறட்சியால் பாதிக்கப்பட்டவர்கள் இருக்கிறார்கள், அந்த விவசாயிகள் பட்டிருக்கின்ற கடன்களையும் அரசாங்கம் தள்ளுபடி செய்ய முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இப்படி ஒவ்வொரு கடனையும் தள்ளுபடி செய்ய வேண்டும் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கேட்டால் பிறகு கடன் வழங்குவது நிறுத்தப் படக் கூடிய நிலைமை ஏற்படும்.

**திரு. நா. வீராசாமி :** நம்மைக் கேட்காமலே ஒரு சட்டத்தையும் போட்டுவிட்டு, அந்தச் சட்டமும் இப்பொழுது நடைமுறையில் இல்லாமல் இருக்கிறது. அந்தச் சட்டத்தை இப்பொழுது எடுத்துவிட்டார்கள். அந்தச் சட்டத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கொடுத்த தொகையை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று சொல்கிறார்கள். அதற்கு வட்டி வாங்குவது முறைதானா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** கடன் என்று வந்தாலே வட்டியும் சேர்த்துத்தான் என்பது மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியும். அது பாதிக்கின்ற சட்டமா இல்லையா என்பது இந்தியாவெங்கிலும் அந்தச் சட்டம் வந்தபொழுதே விமர்சிக்கப் பட்டிருக்கிறது. இப்பொழுது ஏற்பட்டிருக்கிற சூழ்நிலை மத்திய அரசு, மாநில அரசு யார் யார் எப்படி பங்கை ஏற்றுக் கொள்வது என்பதல்ல. பொற்கொல்லர்களின் பிரச்னையை எப்படிப் பரிசீலிக்க வேண்டும், எப்படி அவர்களை இதிலிருந்து விடுபடச் செய்வது என்பதுதான். அந்த வகையிலேதான் நாம் அந்தத் தொகையிலே பாதியை ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.



1973 மார்ச் 6]

**திரு. கே. எ. வகாப் :** அந்தத் தொகையில் பாதியை மத்திய அரசு ஏற்றுக்கொண்டதற்கு நம்முடைய முதல்வர் அவர்கள் நன்றியைத் தெரிவித்தார்கள். நாம் பாதியை ஏற்றுக்கொண்டதற்கு மத்திய அரசு நமக்கு நன்றியைத் தெரிவித்திருக்கிறதா ? பொற்கொல்லர்களின் பிரச்னையை நல்ல முறையிலே தீர்த்து வைத்தற்காக மத்திய அரசு நம்முடைய அரசுக்கு நன்றியைத் தெரிவித்திருக்கிறதா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நன்றியும் பாராட்டும் கேட்டுப் பெறுவதல்ல.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** மத்திய அரசு கோல்ட் கண்ட்ரோல் ஆர்டர் ஆக்ட் கொண்டுவந்தபோது மாநில அரசைக் கலந்து கொள்ளவில்லை என்பது உண்மையா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** கலந்துகொள்ளவில்லை என்று தான் முன்னாள் அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள்.

### *Training in Swimming in S.I.E.T. College*

* 251 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the Government are aware that the S.I.E.T. College is giving training in swimming for girls; and

(b) if so, the details thereof?

THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN : (a) The S.I.E.T. Women's College has provided facility for its alumni to learn swimming.

(b) A well qualified and trained Physical Directress is in-charge of a well equipped and well maintained Swimming Pool.

THIRU N. DENNIS : May I know whether there is good response to this training from students and whether it will be extended to male colleges too?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** கல்லூரி அவர்களே, இந்தக் கல்லூரி ஒரு பெரும் தொகை செலவிட்டு இந்த நீச்சல் குளத்தைக் கட்டி முடித்திருக்கிறது. அதற்காக இலட்சம் ரூபாய் ஆகியிருக்கிறது. அதிலே பல்கலைக் கழக

மானியக் குழு 30 ஆயிரம் ரூபாய் தந்திருக்கிறது. மீதியை அந்தக் கல்லூரியே ஏற்றுக்கொண்டு செய்திருக்கிறது. அது மட்டுமல்லாமல ஆண்டு ஒன்றுக்கு 20 ஆயிரம் ரூபாய்க்கு மேல் பராமரிப்பு செலவு அதற்கு ஆகிறது. இவ்வளவு செலவையும் மற்றக் கல்லூரிகள் ஏற்றுக்கொள்ளுமா என்பது சந்தேகத்திற்குரியதாக இருக்கிறது.

THIRU K. M. SUBRAMANIAM : I am glad I am reminded about S.I.E.T. College. Is it a fact that many of the students who are not taking part in this swimming are compelled to buy uniforms costing about Rs. 20 to Rs. 30 in the S.I.E.T. College?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, ஆண்டு ஒன்றுக்கு பராமரிப்புச் செலவுக்கு 20 ஆயிரம் ரூபாய் ஆகிறது. ஒரு மாணவியிடம் கட்டணமாக ரூபாய் 10 என்ற அளவிற்கு வசூலிக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. நீச்சல் உடை யார் யார் பயிற்சி பெறுகிறார்களோ அவர்கள் சொந்தச் செலவில் வாங்கிக்கொள்ள வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

**திரு. கே. கந்தசாமி :** தலைவர் அவர்களே, எஸ்.ஐ.இ.டி. கல்லூரியில் நீச்சல் குளம் ஏற்படுத்தி நீச்சல் போட்டி நடந்துவருவதைப் பாராட்டுகிறேன். சர்வதேசப் போட்டியில் எந்த மாணவியாவது அதன் சார்பாகக் கலந்து கொண்டிருக்கிறார்களா ? அப்படியென்றால் அதனுடைய விவரம் என்ன ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றிய விவரம் இல்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : Training in swimming is an important physical exercise and hobby and also essential item for safety of life. May I know from the Hon. Minister for Education whether it will be made part of education and arrangements made for giving training in swimming by arranging swimming pools in important high school centres?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, நான் முதலிலேயே சொல்லியபடி, பெரும் செலவோடு செய்யப்பட வேண்டியதாக அது இருக்கிறது. உடல் பயிற்சிக்கும்,





விளையாட்டுகளுக்கும் கூட இடம் இல்லாத வகையிலே பல பள்ளிகள் இருக்கக்கூடிய நிலைமையிலே அடிப்படைத் தேவைகளைக் கூடி பூர்த்திசெய்யமுடியாத நிலைமையில் பல்வேறு பள்ளிக்கூடங்கள் இருக்கின்ற நிலைமையிலே விளையாட்டுக்கூடங்கள் அமைப்பதற்குத்தான் முதல் கவனம் செலுத்தப்படுகிறது. இப்படிப் பெரும் செலவு ஏற்படுகிற பயிற்சிகளை நாம் இப்பொழுது கவனிக்க முடியாது.

**திரு. கே. எ. வகாப்:** எஸ்.ஐ.இ.டி. கல்லூரி ஒரு சிறமையான நீச்சல் குளத்தை அமைத்திருப்பதுபற்றி நல்ல முறையிலே எடுத்துச் சொன்னார்கள் அதுபோன்ற நம்முடைய அரசு செய்து கொடுக்க வசதியில்லையென்றாலும் அப்படிப்பட்ட பணிகளைச் செய்கின்றவர்களுக்கு உதவி செய்யக்கூடிய நிலையில் நீச்சல் பயிற்சி போன்ற விளையாட்டுப் பயிற்சிகளுக்கு மானியம் அளிக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பல்கலைக் கழக மானியக் குழு 20 ஆயிரம் ரூபாய் வழங்கியிருக்கிறது. இதைத் தவிர ஒரு மாணவிக்கு 10 ரூபாய் கட்டணம் வீதம்—அவர்கள் 3 ஆயிரம் மாணவிகள் இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்—அதிலே 30 ஆயிரம் ரூபாய் கிடைக்கும் Swimming costume is provided at the cost of the student. It is the cheapest of the piece of costume available in the country. என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த உடைகளை அவரவர்களே வாங்கிக் கொள்கிறார்கள் என்ற சூழ்நிலை இருக்கிற காரணத்தினால் அரசாங்கம் மானியம் எதுவும் தர இயலாது

**திரு. ஆ. பரந்தாமன் :** எஸ்.ஐ.இ.டி. கல்லூரியில் இந்தப் பயிற்சி அளிக்கப்படுகிற நிலையில் வேறு கல்லூரியிலிருந்து வருகின்ற மாணவிகளுக்கும் பயிற்சியளிக்க அங்கே வாய்ப்பு அளிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அந்தக் கல்லூரி விதிகளை எப்படி வைத்திருக்கிறார்கள் என்று அறிந்தால் தான் அதுபற்றிக் கூறமுடியும். தனிக் கேள்வி போட்டால் அந்த விதிமுறைகளைப்பற்றி அறியலாம்.

[1973 மார்ச் 6

### ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களுக்குக் குடியிருப்புகள்

* 252 வினா—திரு. கா. வேழவேந்தன்

திரு. கே. எஸ். கோதண்டராமய்யா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு, பள்ளிகளின் அருகிலேயே படிப்படியாக குடியிருப்புகள் அமைக்கும் சிறப்புத் திட்டம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கடந்த பல ஆண்டுகளாக ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி ஆசிரியை களுக்குக் குடியிருப்பு கட்டுவதற்கு மட்டும் ஒவ்வோராண்டும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு அரசு மானிய உதவி அளித்து வருகிறது.

திரு. கா. வேழவேந்தன் : துணைத் தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் அந்தந்தப் பள்ளிகளுக்குப் பக்கத்திலேயே குடியிருந்தால் நேரத்தோடு பள்ளிகளுக்கு வர முடியும். அவர்களுக்கு வீடுகள் கிடைப்பதில் திண்டாட்டமான நிலைமை இருக்கிறது. இப்பொழுது பெண் ஆசிரியைகளுக்கு மட்டுமே ஆங்காங்கு தற்காலிக கட்டிடங்கள் கட்டித் தரப்படுகின்றன அதை விரிவாக்கி படிப்படியாகப் பள்ளிக்கூடங்களுக்குப் பக்கத்திலேயே ஆசிரியர்கள் தங்க வீடுகள் கட்டிக் கொடுக்கின்ற திட்டத்தினை அரசு உருவாக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் 32,248 துவக்கப்பள்ளிகள் இருக்கின்றன. ஊராட்சி ஒன்றியங்களில் 22 ஆயிரத்துச் சில்லரை துவக்கப் பள்ளிகள் இருக்கின்றன. அத்தனை ஆசிரியர்களுக்கும் குடியிருப்புக் கட்டிடங்கள் கட்டித் தருவது என்பது இயலாத ஒன்று. ஏனென்றால் கிட்டத்தட்ட 9,000-க்கு மேற்பட்ட பள்ளிகளுக்கு பள்ளிக்கூடக் கட்டிடங்களே இல்லாமல் தவிக்கின்ற நிலையில் அதற்கே நிதி வசதி தருவது எப்படி என்பதில் ஈடுபட்டிருக்கிறது. இருந்தாலும் குறிப்பிட்ட தொகையை ஒதுக்கி, அந்தக் குறிப்பிட்ட தொகையும் ஆசிரியர்களை விட ஆசிரியைகளுக்கு முக்கியமாகப் போக வேண்டுமென்ற



1973 மார்ச் 6]

எண்ணத்தில் செய்யப்படுகிறது. ஏனென்றால் வசதிகளில்லாத ஊர்களிலே ஆசிரியைகள் பணியாற்ற வேண்டுமென்றால் வேறிடங்களிலேயிருந்து நாள்தோறும் செல்வதற்குச் சிரமம் ஏற்படுகிறது. ஆகவே, முதல் சலுகை ஆசிரியைகளுக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்ற முறையில் சென்ற ஆண்டில் 5 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. ஆனால் இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில், 1973–74 இல் ஆசிரியைகள் குடியிருப்புக்காக 10 இலட்சம் ரூபாயை ஒதுக்கியிருக்கிறோம்.

திரு. கோ. இளங்கோவன் : தலைவரவர்களே, பெரும்பாலான ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளின் ஆசிரியர்கள் தங்கள் தங்கள் ஊரிலேயே தங்கி வருவதை விரும்புகிறார்கள் என்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அது அவர்களுடைய விருப்பமாக இருக்கலாம். ஆனால் அதற்கென்று விதிமுறைகள் இருக்கின்றன. எங்கே இருக்க வேண்டும், எந்த நிலைமைகளிலே இருக்க வேண்டுமென்று இருக்கின்றன. ஆகவே, பள்ளிகள் இருக்கும் இடங்களிலே, பள்ளிக்கூடத்திற்குப் பக்கத்திலே இருக்கும் இடங்களிலே குடியிருக்க இடமில்லாத நிலை இருந்தால் பக்கத்திலிருந்து வருவதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள்.

Thiru K. S. KOTHANDARAMIAH : Sir, It has become very difficult to secure houses for teachers even in villages and they demand higher rents also and at times the teachers have to live in cattle sheds also. May I know from the Hon. Minister for Education whether, if it is not possible to provide houses, Government would consider to pay some house rent allowance to the teachers in villages?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அது பெரு நகரங்களுக்கு மட்டும் வேண்டுமானால் செய்யலாம். ஆனால் எல்லாக் கிராமங்களுக்கும் தருவது என்றால் எல்லா அலுவலர்களுக்கும் தர வேண்டும், எல்லாத் துறையில் இருப்பவர்களுக்கும் தர வேண்டும். சம்பளம் என்று கொடுப்பதே, குடியிருப்பு, சாப்பாடு எல்லாவற்றிற்கும் சேர்த்துத்தான். குடியிருக்க

இடமும் தந்து, சாப்பாடும் போட்டு, உடைகளும் கொடுத்து எல்லா வசதிகளும் செய்து கொடுத்துவிட்டால் சம்பளம் என்று தனியாக ஏன் தர வேண்டும் என்பது புரியவில்லை. ஆனால் எல்லாவற்றையும் செய்யலாம், நிதி வசதி மிகப் பெரிய அளவில் பெருகினால் செய்யலாம். ஆனால் இப்பொழுது உள்ள நிலையில் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றப் போதுமான வசதிகள் இல்லாதவற்றிற்கு அதிலே கவனம் செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம்.

**திரு. மு. இரத்தினசபாபதி:** தலைவரவர்களே, கிராமங்களிலே வேலைபார்க்கின்ற ஆசிரியர்கள் அங்கே குடியிருக்க வீடுகள் இருக்கின்ற நிலையில் அங்கே தங்காமல் 10, 12 மைல் தூரத்திற்கு அப்பாலுள்ள நகரங்களிலே தங்கிக்கொண்டு கிராமங்களுக்குத் தினசரி சென்று வகுப்பை நடத்துகிறார்கள். அவர்கள் கண்டிப்பாகக் கிராமங்களிலேதான் தங்க வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிட முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, நான் முதலிலேயே கூறியபடி எல்லா ஆசிரியர்களுக்கும் எல்லா இடங்களிலும் இடம் கிடைப்பதில்லை. சில ஊர்களில் அங்கே பள்ளிக்கூடம் வேண்டுமென்று பொதுமக்கள் வற்புறுத்திக் கேட்டு வாங்குகிறார்களே தவிர அங்கேயிருந்து பணியாற்றக்கூடிய ஆசிரியர்களுக்கு உதவி செய்யவோ, வீடு பார்த்து வைக்கவோ முன் வருவதில்லை. அப்படிப்பட்ட இடங்களில் வேறு இடங்களிலிருந்துதான் வரவேண்டும். அதைக்கூடப் பொறுத்துக் கொள்ளலாம். ஆனால் ஒழுங்காக, நேரத்தோடு பள்ளிக் கூடத்திற்கு வந்து பாடங்களைச் சொல்லிக் கொடுக்கிறார்களா என்பதைக் கண்காணித்தால் போதும். போலீஸ் அதிகாரிகள் என்றால் அங்கே கட்டாயம் இருக்கவேண்டும், டாக்டர்களாக இருந்தால் கட்டாயமாக அங்கேயே இருந்து தீர வேண்டும். ஆனால் ஆசிரியர்கள் இரவு 12 மணிக்கு அல்லது இரவு 3 மணிக்கு அங்கேயே இருந்து தீர வேண்டுமென்ற அவசியமில்லை. ஆகவேதான் அவர்களுடைய சௌகரியத்தைப் பொறுத்து இம்மாதிரி ஒழுங்காக, நேரத்தோடு வந்து பாடத்தைச் சொல்லிக் கொடுக்கிறார்களா என்பதில் கவனம் செலுத்துகிறோம். காலத்தாழ்வோடு வந்தால் அவர்களைப் பொறுத்தமட்டும் எச்சரிக்கப்படுகிறார்கள்.



**திரு. வெ. ந. முத்தமிழ்ச்செல்வன்:** தலைவரவர்களே, மத்திய அரசின் முழு உதவித் தொகையுடன் ஒவ்வொரு ஆண்டும் ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு வீடு வீதம் கட்டப்பட்டு வந்த திட்டம் செயல்படுத்தப்படுகிறதா? அதற்காக ஒதுக்கப்பட்ட வீடுகள் முழுவதும் கட்டப்பட்டு வருகின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, அந்தத் திட்டத்தைப்பற்றி என்னிடத்திலே விவரம் இல்லை. ஆனால் இதுவரையில், 1,600 ஆசிரியைகளுக்கு வீடுகள் கட்டித் தந்திருக்கிறோம். சென்ற ஆண்டு 5 இலட்சம் ரூபாய் ஒதுக்கினோம். இந்த ஆண்டு 10 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். சமவெளிப் பகுதிகளில் வீடு கட்ட 5,800 ரூபாய் ஆகிறது. மலைப் பிரதேசத்தில் வீடு கட்டுவதற்கு 6,300 ரூபாய் செலவாகிறது. 10 இலட்சம் ரூபாய் நிதியிலே வீடுகள் கட்ட வேண்டியிருக்கிறோம்.

**திரு. த. சோலையா:** தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு வீடுகள் கட்டித் தருவதற்கு பொருளாதாரம் இடம் தரவில்லை என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். ஆனால் அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களிலே இருக்கக்கூடிய புறம்போக்கு நிலங்களை வீட்டு மனைகளுக்குப் பட்டா கேட்டால் கொடுக்கப்படுமா? அதில் கட்டிக் கொள்வதற்குக் கடன் உதவி அளிப்பதில் அவர்களுக்கு முன் உரிமை வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களிலே பணிபுரியக்கூடிய ஆசிரியர்கள் ஓரிடத்திலேயிருந்து இன்னொரு இடத்திற்கு மாற்றப்படக் கூடியவர்கள். ஓர் ஊரிலேயே வீடுகட்ட வசதி செய்துகொடுத்துவிட்டால் அந்த இடத்திலேயிருந்து அவர்களை மாற்ற இயலாது. எனவே அப்படிப்பட்ட சங்கடங்கள் நேரக்கூடிய நிலைமை இருப்பதால் அது காரிய சாத்தியமாகாது.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** தலைவரவர்களே, வீடுகள் கட்டுவதற்கு ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கொடுக்கப்படும் நிதி போதாத காரணத்தால் பலவிடங்களில் கட்டப்படாமல் இருக்கின்றன. ஆகவே, குறிப்பிட்ட காலத்திற்குள், இத்தகை

இடமும் தந்து, சாப்பாடும் போட்டு, உடைகளும் கொடுத்து எல்லா வசதிகளும் செய்து கொடுத்துவிட்டால் சட்டமாம் என்று தனியாக ஏன் தர வேண்டும் என்பது புரியவில்லை. ஆனால் எல்லாவற்றையும் செய்யலாம், நிதி வசதி மிகப் பெரிய அளவில் பெருகினால் செய்யலாம். ஆனால் இப்பொழுது உள்ள நிலையில் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றப் போதுமான வசதிகள் இல்லாதவற்றிற்கு அதிலே கவனம் செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம்.

**திரு. மு. இரத்தினசபாபதி** : தலைவரவர்களே, கிராமங்களிலே வேலைபார்க்கின்ற ஆசிரியர்கள் அங்கே குடியிருக்க விடுகள் இருக்கின்ற நிலையில் அங்கே தங்காமல் 10, 12 மைல் தூரத்திற்கு அப்பாலுள்ள நகரங்களிலே தங்கிக்கொண்டு கிராமங்களுக்குத் தினசரி சென்று வகுப்பை நடத்துகிறார்கள். அவர்கள் கண்டிப்பாகக் கிராமங்களிலேதான் தங்க வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிட முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவரவர்களே, நான் முதலிலேயே கூறியபடி எல்லா ஆசிரியர்களுக்கும் எல்லா இடங்களிலும் இடம் கிடைப்பதில்லை. சில ஊர்களில் அங்கே பள்ளிக்கூடம் வேண்டுமென்று பொதுமக்கள் வற்புறுத்திக் கேட்டு வாங்குகிறார்களே தவிர அங்கேயிருந்து பணியாற்றக்கூடிய ஆசிரியர்களுக்கு உதவி செய்யவோ, வீடு பார்த்து வைக்கவோ முன் வருவதில்லை. அப்படிப்பட்ட இடங்களில் வேறு இடங்களிலிருந்துதான் வரவேண்டும். அதைக்கூடப் பொறுத்துக் கொள்ளலாம். ஆனால் ஒழுங்காக, நேரத்தோடு பள்ளிக் கூடத்திற்கு வந்து பாடங்களைச் சொல்லிக் கொடுக்கிறார்களா என்பதைக் கண்காணித்தால் போதும். போலீஸ் அதிகாரிகள் என்றால் அங்கே கட்டாயம் இருக்கவேண்டும், டாக்டர்களாக இருந்தால் கட்டாயமாக அங்கேயே இருந்து தீர வேண்டும். ஆனால் ஆசிரியர்கள் இரவு 12 மணிக்கு அல்லது இரவு 3 மணிக்கு அங்கேயே இருந்து தீர வேண்டுமென்ற அவசியமில்லை. ஆகவே தான் அவர்களுடைய சௌகரியத்தைப் பொறுத்து இம்மாதிரி ஒழுங்காக, நேரத்தோடு வந்து பாடத்தைச் சொல்லிக் கொடுக்கிறார்களா என்பதில் கவனம் செலுத்துகிறோம். காலத்தாழ்வோடு வந்தால் அவர்களைப் பொறுத்தமட்டும் எச்சரிக்கப்படுகிறார்கள்.



**திரு. வெ. ந. முத்தமிழ்ச்செல்வன்** : தலைவரவர்களே, மத்திய அரசின் முழு உதவித் தொகையுடன் ஒவ்வொரு ஆண்டும் ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு வீடு வீதம் கட்டப்பட்டு வந்த திட்டம் செயல்படுத்தப்படுகிறதா? அதற்காக ஒதுக்கப்பட்ட வீடுகள் முழுவதும் கட்டப்பட்டு வருகின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவரவர்களே, அந்தத் திட்டத்தைப்பற்றி என்னிடத்திலே விவரம் இல்லை. ஆனால் இதுவரையில், 1,600 ஆசிரியைகளுக்கு வீடுகள் கட்டித் தந்திருக்கிறோம். சென்ற ஆண்டு 5 இலட்சம் ரூபாய் ஒதுக்கினோம். இந்த ஆண்டு 10 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். சம வெளிப் பகுதிகளில் வீடு கட்ட 5,800 ரூபாய் ஆகிறது. மலைப் பிரதேசத்தில் வீடு கட்டுவதற்கு 6,300 ரூபாய் செலவாகிறது. 10 இலட்சம் ரூபாய் நிதியிலே வீடுகள் கட்ட வேண்டியிருக்கிறோம்.

**திரு. த. சோலையா** : தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு வீடுகள் கட்டித் தருவதற்கு பொருளாதாரம் இடம் தரவில்லை என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். ஆனால் அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களிலே இருக்கக்கூடிய புறம்போக்கு நிலங்களை வீட்டு மனைகளுக்குப் பட்டா கேட்டால் கொடுக்கப்படுமா? அதில் கட்டிக் கொள்வதற்குக் கடன் உதவி அளிப்பதில் அவர்களுக்கு முன் உரிமை வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களிலே பணிபுரியக்கூடிய ஆசிரியர்கள் ஓரிடத்திலேயிருந்து இன்னொரு இடத்திற்கு மாற்றப்படக் கூடியவர்கள். ஓர் ஊரிலேயே வீடுகட்ட வசதி செய்துகொடுத்துவிட்டால் அந்த இடத்திலேயிருந்து அவர்களை மாற்ற இயலாது. எனவே அப்படிப்பட்ட சங்கடங்கள் நேரக்கூடிய நிலைமை இருப்பதால் அது காரிய சாத்தியமாகாது.

**திரு. ஏ. சுப்பிரமணியம்** : தலைவரவர்களே, வீடுகள் கட்டுவதற்கு ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கொடுக்கப்படும் நிதி போதாத காரணத்தால் பலவிடங்களில் கட்டப்படாமல் இருக்கின்றன. ஆகவே, குறிப்பிட்ட காலத்திற்குள், இந்த

ஆண்டுக்குள் இத்தனை வீடுகள் கட்டப்பட்டாக வேண்டுமென்ற எண்ணத்தில் தொகை அனுமதிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அப்படிப்பட்ட நோக்கத்தோடுதான் சென்ற ஆண்டு 5 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 10 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். ஆனால் முதலிலே கட்டிடங்களே கட்டப்படாமல் இருக்கின்ற பள்ளிக்கூடங்களைப் பற்றிக் கவனம் செலுத்த முயற்சி செய்கிறோம். அதற்காகத்தான் ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் கடன் பெற்று பள்ளிகளைக் கட்டுவதற்கு முயற்சிக்கிறோம். அது வெற்றிபெற்ற பிறகு மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்ற திட்டத்தின் அடிப்படையில் இந்தப் பணிகளை மேற்கொள்ளலாமா என்பதைப் பற்றி ஆராயலாம்.

THIRU B. VENKATASWAMY : Sir, from the answer given by the Hon. Minister, it is seen that the amount allotted for buildings for panchayat union teachers is very low and therefore, may I know from the Hon. Minister whether Housing Board could take up construction of these Houses for teachers and collect rent from the teachers?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இதைத் தனியாகப் பரிசீலிக்கலாம்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** தலைவரவர்களே, வீடுகள் தான் கொடுக்க முடியவில்லை என்றாலும், தொலைதூரத்திலிருந்து வரும் ஆசிரியர்களுக்கு சைக்கிள் போன்ற வாகனங்களை அவர்கள் வாங்கிக் கொள்வதற்குப் பகுதித் தொகையாவது மானியமாக அளிப்பதற்கு அரசு முன் வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இப்பொழுதே கடன் பெறுவதற்கு வழி இருக்கிறது என்று கருதுகிறேன். தனியாகக் கேள்வி கேட்டால் விவரங்களைப் பார்த்துச் சொல்கிறேன்.

**திரு. சி. க. வடிவேலு :** தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியப் பொது நிதியிலிருந்து ஆசிரியர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அந்தப் பொது நிதியிலிருந்து பள்ளிக்கூடங்களைக் கட்டுவதற்கு முதலிலே முற்படலாம். அது முடிந்தபிறகு வேண்டுமானால் பொது நிதியிலிருந்து இப்படிப்பட்ட வீடுகள் கட்டுவதற்கு ஆணை பிறப்பிக்கலாம்.

**திரு. என். மருதாசலம் :** தலைவரவர்களே, கிராமப் பகுதிகளிலே பணிபுரியும் ஆசிரியர்களுக்கு அவர்கள் தாழ்த்தப்பட்டவர்களாக இருந்தால் அவர்களுக்கு வாடகைக்கு வீடுகள் கொடுப்பதில்லை. எனவே அவர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கும் உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, நான் முதலிலே சொன்ன சங்கடங்களின் அடிப்படையிலே பிரச்னைகளை அணுக வேண்டியிருக்கிறது. அந்த முறையிலேதான் ஆசிரியைகளுக்கு வீடு கட்டுகின்ற முயற்சி இருக்கிறது. எங்கேயுமே வசதியில்லாத இடங்களில், 'ரிமோட் வில்லேஜஸ்' என்ற இடங்களில் கவனம் செலுத்துகிறோம். அந்த வகையில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கும் இந்த வசதிகள் கிடைக்கப்பெறுகின்றன.

### கும்மிடிப்பூண்டி, எல்லாபுரம் ஒன்றிய ஆசிரியர்கள்.

*** 253 வினா—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்முடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்திலும், எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்திலும் பணியாற்றும் ஆசிரியர்களில் பாதிப் பேருக்கே நகர ஈட்டுப்படியும், வீட்டு வாடகைப்படியும் கொடுக்கப்படுவதன் காரணமென்ன?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** 223. 224 எண்கள் கொண்ட 8—2—1971-ஆம் நாளிட்ட நிதித் துறையின் அரசாணைகளின்படி, சென்னை நகரிலிருந்து 32 கிலோ மீட்டர் சுற்றளவுக்குட்பட்ட அரசு அலுவலகங்களில் பணிபுரிவோர்க்கு, நகர ஈட்டுப்படியும், வீட்டு வாடகைப்படியும், வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு 32 கிலோ மீட்டர் சுற்றளவிற்குள் வாராத பகுதியில் பணிபுரியும் ஆசிரியர்கள் உட்பட்ட அரசு ஊழியர்கள், இவ்விதச் சலுகைகளைப் பெறத் தகுதியில்லாதவர்கள் ஆவார்கள்.

கும்முடிப்பூண்டி, எல்லாபுரம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களின் சில பகுதிகள் சென்னை நகரிலிருந்து 32 கிலோ மீட்டர் சுற்றளவுக்கு உட்பட்டும், சில அப்பாற்பட்டும் இருப்பதால், மேற் கூறிய அரசாணைகளுக்கு ஏற்ப, 32 கிலோ மீட்டர் உட்பட்ட பகுதிகளில் பணிபுரிவோர் மட்டும் நகர ஈட்டுப்படியும், வீட்டு வாடகைப்படியும் அளிக்கப்பெறுகின்றனர். மற்றவர்களுக்கு இச்சலுகைகள் அளிக்கப்படுவதில்லை.

மு ப. 9-30 **திரு. கா. வேழவேந்தன் :** இவை அளிக்கப்படாமல் இருந்தால் கூட சிக்கல்கள் இல்லாமல் இருந்திருக்கலாம். இந்த 32 கிலோ மீட்டர் எல்லைக்குள் இந்த இரண்டு ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் பாதிப் பகுதிகள் வருகின்றன. ஆகவே இந்த இரண்டு படிகளையும் வாங்குவதற்கு ஆசிரியர்கள் முண்டியடித்துக் கொண்டு அந்தப் பகுதிகளுக்கு வரவேண்டுமென்று தொல்லைப் படுத்துகிறார்கள். எனவே இந்த எல்லைகளில் உள்ள ஒன்றியங் களுக்காவது முழுவதும் இந்த நகர ஈட்டுப்படியும், வீட்டு வாடகைப் படியும் கொடுப்பதற்கு அரசு தனி ஆணை பிறப்பிக்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அப்படிச் செய் வதால் பல சங்கடங்கள் வரும். குறிப்பிட்ட ஒரு ஒன்றியத்தின் எல்லை சென்னையில் இருந்து 30-ல் இருந்து 60 கிலோ மீட்டர் வரையில் இருக்கும். 35 கிலோமீட்டர் வரையில் கொடுத்தால் அறுபது கிலோவில் இருப்பவர்கள், நாங்கள் இந்த எல்லைக்குள் தானே இருக்கிறோம்; அறுபது கிலோ மீட்டர் என்றாலும், ஆகவே எங்களுக்கும் இந்த படிகள் கொடுக்கவேண்டுமென்று கேட்பார் கள். அப்போது அதையும் சேர்த்துக்கொள்ளவேண்டிவரும். அப்படி சென்று கொண்டிருந்தால் குமரி முனை வரை போய் எல்லா ஒன்றியங்களையும் சேர்த்துக்கொள்ளவேண்டிய நிலை ஏற்படும். எனவே எங்கேயாவது ஒரு கட்டத்தில்தான் நாம் நிற்க முடியும். ஒரு குறிப்பிட்ட பகுதிக்குள் வருவது பற்றி போட்டி இருக்குமானால் பணிமூப்பு உடையவர்களை அந்த இடத்தில் போட்டு, புதிதாக வருகிறவர்களை இன்னொரு பகுதிக்குப் போடுவது என்று இப்படி அந்த ஒன்றியத்திற்கு ஏற்றபடி பரிசீலித்து ஓரளவிற்கு அவர்களுக்குள் முடிவு செய்யவேண்டும்.



**திரு. த. சோனையா :** இந்த நகர ஈட்டுப்படி வாங்குவதில் ஒரு கிராமத்தில் ஒரு தெருவில் உள்ள ஒரு பள்ளிக்கூடத்திற்கு இந்த நகர ஈட்டுப்படி கிடைக்கிறது. அடுத்த தெருவில் உள்ளவர் களுக்குக் கிடைக்கவில்லை. இது ஒரு பெரும் புகாராகக் கூறப் படுகிறது. எனவே இப்படி மேஜர் பஞ்சாயத்தாக உள்ள நகரங்களில் அந்த ஊரில் உள்ளவர்களுக்குக் கொடுக்கப்படும் என்று அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இப்படி சட்டங்களை சிரமப்பட்டு மாற்றுவதைவிட அவர் இந்தத் தெரு விற்கு வந்து விடுவது மிக மிக நன்றாயிருக்கும், அந்த வசதிகளை அவர்கள் பெற்றுவிடுவார்கள்.

*House-sites for Harijans in Perundurai firka.*

*254 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state whether house-sites have been provided for the Harijans in Aprianka thuvalasu, Karumandur, Kolathanvalasu Sinniampalayam, Nethichillapalayam, Ellappalayam, Pattakaranpalayam, Chinniampalavam, Naripalayam and Kaliampudur in Perundurai firka of Erode taluk?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :**

**அப்பியான் காட்டுவலசு :—**

பிரிவு 4(1)-ன் கீழ் அறிவிப்பு ஏற்கப்பட்டு தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது. பிரிவு 6 விளம்பல் செயற் குறிப்பு மாவட்ட ஆட்சியரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

**கருமாத்தூர் என்ற கந்தசாமி கவுண்டன்புதூர், பள்ளிப்பாளையம் கிராமத்தின் சிற்றூர்.**

**4(1) & 6** பிரிவுகளின்கீழ் முறையே அறிவிப்பும், விளம்பலும் ஏற்கப்பட்டு தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளன. அவார்டு செய்து, கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர், அரிசனங் களுக்கு மிக விரைவில் பட்டா வழங்குவார்.

**கொளத்தன் வலசு :—**

ஈரோடு தாலூகா, காஞ்சிக்கோவில் கிராமம் கொளத்தன்வலசு பகுதியை பொறுத்தமட்டில் பிரிவு 4(1) முன் மொழிவும், பிரிவு 6

[1973 மார்ச் 6

விளம்பலும் ஏற்கப்பட்டு, தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளன. முதல்நிலை மதிப்பீட்டைப் பெற்றவுடன், அவார்டு செய்து, கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர், அரிசனங்களுக்கு பட்டா வழங்குவார்.

**ஸின்னியம்பாளையம்** (Sinniyampalayam)

ஈரோடு தாலுகா காஞ்சிக்கோவில் கிராமம் சின்னியம்பாளையம் பகுதியைப்பொறுத்தமட்டில் பிரிவு 4 (1) முன்மொழிவும் பிரிவு 6 விளம்பலும் வருவாய்த் துறையினரால் ஏற்கப்பட்டு, தமிழ் நாடு அரசிதழில் வெளியிடப்பட்டன. முதல் நிலை மதிப்பீடு, அவார்டு, பட்டா வழங்கல் ஆகியவைகள் கோவை மாவட்ட ஆட்சியரால் கவனிக்கப்படும்.

நெட்டிச்செல்லப்பாளையம் (Nettichellapalayam) (சீனாபுரம் கிராமத்தின் சிற்றூர்)

4(1) & 6 பிரிவின்கீழ் முறையே அறிவிப்பும், விளம்பலும் ஏற்கப்பட்டு தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளன. அவார்டு செய்து கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் மிக விரைவில் அரிசனங்களுக்கு பட்டா வழங்குவார்.

**எல்லப்பாளையம் :—**

4 (1) பிரிவின்கீழ் அறிவிப்பு மாவட்ட ஆட்சியாளரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

**பட்டாக்காரன்பாளையம் :—**

4(1) பிரிவின் கீழ் அறிவிப்பு மாவட்ட ஆட்சியாளரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

**நரிப்பாளையம் (பெத்தன்பாளையம் கிராமத்தின் சிற்றூர்)**

நிலம் கையகப்படுத்தி 30—10—1972-ல் உரிமைப்பட்டயம் (Title deeds) வழங்கப்பட்டன.

**கல்லம்புதூர் :—**

நிலம் கையகப்படுத்தி உரிமைப்பட்டயம் ( Title deeds முன்னரே வழங்கப்பட்டது.



1973 மார்ச் 6]

**திரு. என். கே. பழனிசாமி :** கெஸட்டில் பப்ளிஷான பிறகு எவ்வளவு மாதங்களுக்குள் அவர்களுக்கு நிலம் ஆர்ஜிதம் செய்து கொடுக்கப்படும்?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** விவரம் இல்லை.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, is it a fact that some of the Harijans to whom plots have been allotted in these places have not constructed houses for want of amenities?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** தற்சமயம் கூறிய இடங்களில் எல்லாம் இப்போதுதான் கையகப்படுத்தப்பட்டு சிலயிடங்களில் கூட்டில் டீட்ஸ் வழங்கப்பட்டுள்ளன, சிலயிடங்களில் வழங்கப்படயிருக்கின்றன. இதற்குள் வீடு கட்டி முடிக்கப்படவில்லையே என்று குறை சொல்லமுடியாது.

**திரு. என். கே. பழனிசாமி :** கெஸட்டில் வெளியிடப்பட்டுள்ளதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கெஸட்டில் பப்ளிஷான பிறகு குறிப்பிட்ட காலத்திற்குள் அவர்களுக்கு நிலம் ஆர்ஜிதம் செய்து கொடுக்கப்படவேண்டும். அது எப்போது நடக்கும்? பலயிடங்களில், மாவட்டங்களானாலும் சரி அல்லது வட்டங்களானாலும் சரி ஏற்கனவே ஹரிஜனங்களுக்கு வீட்டு நிலம் வாங்குவதற்கு போதுமான தொகை ஒதுக்கப்படாததன் காரணமாக, கோவை மாவட்டத்தில் மட்டுமல்ல, எல்லா மாவட்டங்களிலிருந்தும் வந்திருக்கின்றன பல கேள்விகள், ஹரிஜனங்களுக்கு நிலம் வாங்கிக் கொடுப்பதற்கு போதுமான தொகை ஒதுக்கப்படாததன் காரணமாக இந்தமாதிரி சங்கடங்கள் ஏற்படுகின்றன. எனவே ஹரிஜனங்களுக்காக செலவு செய்யும் மற்றச் செலவுகளைக் குறைத்துக்கொண்டு வீட்டு மனைகளாவது வாங்கிக் கொடுக்க சர்க்கார் முயற்சி எடுப்பார்களா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** சிலயிடங்களில் கோர்ட் கேஸ்கள், வழக்குமன்றத்தில் இருந்து ஸ்டே வாங்கி விடுகிறார்கள். நோட்டிபிக்கேஷன் ஆன பிறகும்கூட அவர்கள் நிலத்தைக் கொடுப்பதில் எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள். அவ்வப்போது நிலச் சொந்தக்காரர்களின் உரிமையை நாம் பரிசீலிக்க வேண்டியிருப்பதால் தாமதமாகிறது. சில மாவட்டங்களில் பணப் பற்றாக்குறை காரணமாக நிலம் கையகப்படுத்துவதில்

காலதாமதமாகிறது. இருந்தாலும் அடுத்தடுத்து வருகிற ஆண்டுகளில் அவைகளைப் பூர்த்தி செய்து வருகிறோம்.

**திரு. க. சோனையா :** ஹரிஜனப் பெருமக்களுக்கு நிலம் ஆர்ஜிதம் செய்வதில் காலதாமதம் ஏற்படுகிற காரணத்தினால் அந்த இடங்களின் சொந்தக்காரர்கள் இடையிலே மின்சாரக் கம்பங்களை நட்டு பக்கத்திலுள்ள வீடுகளுக்கு மின்சாரத்தை இழுத்துக்கொண்டுவிடுவதால், மின்சாரக் கம்பிகள் இருக்கும் இடங்களில் நிலம் ஆர்ஜிதம் செய்யக்கூடாது என்ற நிலை இருப்பதால் அவர்கள் அப்படிச் செய்து விடுகிறார்களே, அதைத் தடுக்க என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** மின்சார இணைப்பு மாத்திரமல்ல, சிலவிடங்களில் சொந்தக் கோவில்கள் கட்டி விடுகிறார்கள், வீடுகள் கட்ட ஆரம்பிக்கிறார்கள். பிறகு வாழை, வரகு போன்ற குறுகிய காலப் பயிர்களை வைக்க ஆரம்பிக்கிறார்கள். இப்படிப்பட்ட முயற்சிகளில் நிலச் சொந்தக்காரர்கள் ஈடுபடுவதால் நிலங்களை ஆர்ஜிதம் செய்கிற பணி தாமதப் படுகிறது. இருந்தாலும் எவ்வளவு விரைவுபடுத்தவேண்டுமோ அந்த அளவிற்கு விரைவுபடுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்து நிலங்களை கையகப்படுத்தி, பணம் கொடுத்து நிலங்களை வாங்கிக் கொடுக்கிறது. எனவே கூடுமான வரையில் நிலச் சொந்தக்காரர்களிடத்தில் முக்கியமானவர்கள் சென்று குறிப்பாக சட்டமன்ற உறுப்பினர்கள்கூட சென்று அந்த நிலங்களைக் கொடுப்பதில் அவர்களிடம் சமரசமான முறையில் பேசி, நிலம் கொடுக்க ஏற்பாடு செய்வார்களேயானால் தாமதங்கள் அதிகம் இருக்காது குறையும்.

### நந்தன்கோட்டை-மேட்டுமகாதானபுரம் இணைப்புச்சாலை

*** 255 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், குளித்தலை வட்டத்திலுள்ள நந்தன் கோட்டை, மேட்டு மகாதானபுரம் ஆகிய இரு கிராமங்களில் வசிக்கும் தாழ்த்தப்பட்ட மக்களின் வசதிக்காக இணைப்புச்சாலை அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?



(இ) ஆம் எனில், தற்போது அத்திட்டம் எந்த நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** (அ) இல்லை.

(இ) வினா எழவில்லை.

### அரிசன மாணவர் விடுதிகளுக்குக் கட்டடங்கள்

*** 256 வினா—திரு. மூ. மாரிமுத்து :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தம்மம்பட்டி, கெங்கவல்லி, ஆறகளூர் ஆகிய இடங்களில் உள்ள மாணவரில்லங்களுக்கு சொந்தத்தில் கட்டடங்கள் கட்டுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் ஆய்வில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது கட்டடங்கள் கட்டப்படும்?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** (அ) அரசின் ஆய்வில் இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. க. நாகராஜன் :** உயர்நிலைப் பள்ளிகள் உள்ள எல்லா இடங்களிலும் இதுபோன்ற விடுதிகளை விரைந்து ஏற்படுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையில் தாழ்த்தப்பட்ட, பின் தங்கிய வகுப்பினருக்கு விடுதிகள் கட்டுவதற்காக இரண்டு கோடி ரூபாய் வங்கிகள் மூலம் கடன் உதவி பெற்று விடுதி கட்டுவதற்கான திட்டத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அந்தத் திட்டம் நிறைவேறும்போது, கூடுமானவரையில் ஹரிஜன மாணவர்களுக்கு விடுதிகள் கட்டிக்கொடுக்கிற திட்டம் விரைவு படுத்தப்படும்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** இந்த ஹரிஜன் ஹாஸ்டல்களுக்கு கட்டடங்கள் ஹரிஜன வெல்பேர் பண்டிலிருந்து கட்டுவது என்பது நீண்ட நாட்களாகும் என்பதால் ஹௌஸிங் போர்டு

மூலம் வாடகைக்கு ஹரிஜன வெல்பேர் டிப்பார்ட்மென்டுக்கு கட்டிக்கொடுக்க வேண்டுமென்று ஹௌஸிங் போர்ட்டுக்கு சிபார்சு செய்வார்களா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** நான் முன்னால் கூறிய திட்டம் கடன் உதவி கொடுப்பது, ஹௌஸிங் போர்ட் மூலம் அந்தக் கட்டடங்களைக் கட்டத்தான் அரசு முடிவு செய்திருக்கிறது.

## காவிரிப் பாசன வளர்ச்சித் திட்டங்கள்

* 257 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காவிரிப் பாசன வளர்ச்சித் திட்டங்களுக்காக 1971—72 ஆம் ஆண்டில் தமிழகத்திற்கு மத்திய அரசு ஒதுக்கியுள்ள தொகை எவ்வளவு?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** காவிரிப்பாசன மேம்பாட்டுத் திட்டங்கள் நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மாநில அரசுத் திட்டத்தின் கீழ் வருகின்றன. மாநில திட்டப்பணிகளுக்கு, மத்திய அரசு, மொத்தக் கடன்களையும், மொத்த மானியங்களையும் வழங்குகிறது. திட்டங்களுக்கு தனிப் பட்டு மத்திய அரசு நிதியுதவி எதும் செய்வதில்லை. ஆகவே, காவிரிப் பாசன மேம்பாட்டுத் திட்டங்களுக்காக, 1971-72-ம் ஆண்டில் மத்திய அரசு வழங்கிய நிதி உதவியைத் திட்டவட்டமாகக் குறிப்பிடவியலாது.

**திரு. ஆ. பரந்தாமன் :** காவிரிப் பாசன வளர்ச்சித் திட்டத்திற்காக மத்திய அரசோடு தொடர்பு கொண்டு அக்ரிகல்ச்சரல் ரீ பைனான்ஸிங் கார்ப்பரேஷன் மூலம், வேளாண்மை மறு நிதிக் கழகம்மூலம் கடன் வசதி பெற வாய்ப்புகள் இருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** உலக வங்கி நிபுணர்கள் இங்கே வருகை தந்திருந்தார்கள். அவர்கள் காவிரி டெல்டாவைப் பார்வையிட்ட பிறகு இதுபோன்ற சீரமைப்பதற்கு உள்ள திட்டத்தை மனநிறைவோடு ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்



என்றாலும்கூட மத்திய அரசின் அனுமதி இன்னும் கிடைக்கவில்லை. தஞ்சை மாவட்டம் பழைய காவிரி கயவாய் பாசனத் திட்டத்தை சீர்திருத்தி மேம்படுத்தும் பணிகள் நிறைவேற்றப் படாமலே உள்ளன. எனவே 1972-73 முதல் தொடங்கி அடுத்த நான்காண்டுகளில் 1,298.33 லட்சம் ரூபாய் செலவில் பழைய காவிரி கயவாய்ப் பாசனத் திட்டத்தை விரைவாக சீர்திருத்தி மேம்படுத்தும் பணிகளை மேற்கொள்வதற்கான திட்டம் ஒன்றுக்கு அரசு அண்மையில் ஏற்பளித்துள்ளது. 1972-73-ம் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இதற்காக ரூ. 244.50 லட்சம் ஒதுக்கப் பட்டிருக்கிறது.

## சாம்பார்பள்ளத்திற்குக் கரை அமைப்பு

* 258 வினா—திரு. எம். சுரேந்திரன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தாலுக்கா தார்காடு கிராமத்தில் சாம்பார் பள்ளத்தில் கரையமைப்பது சம்பந்தமாக ரூ. 50,000 மதிப்பீட்டில் திட்டம் ஒன்று அரசாங்க அனுமதிக்கென வந்திருக்கிறதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. எம். சுரேந்திரன் :** இந்தத் திட்டம் சிறிய எரித் திட்டமாக இருக்கிற காரணத்தாலும் இவ்வளவு நீண்ட நாட்களாக பிரதேச மக்களால் கோரிக்கை வைத்துக் கொண்டிருக்கும் காரணத்தாலும் இதை இனிமேலாவது ஆராய்ந்து நிறைவேற்ற அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சாம்பார்பள்ளத்தில் கரை அமைப்பதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறதா என்று கேட்டதற்கு 'இல்லை' என்று பதில் சொன்னேன். சாம்பார்பள்ளத்தில் நீர்த்தேக்கம் அமைப்பதற்காக திட்டம் 67,000 ரூபாயில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, இந்தக் திட்டத்திற்காக 5½ எக்கர் வன நிலங்கள் தேவையாக இருக்கும் காரணத்தால் வனத்துறை ஒப்புதலுக்காக பொறியாளர் தொடர்பு கொண்டுள்ளார்.

### கூட்டுறவு பழம் பயிரிடு பண்ணை

*259 வினா—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கூட்டுறவுத்துறையில் பழம் பயிரிட பண்ணை ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** இல்லை.

**திரு. கே. எ. வகாப்:** வேலூரில் உள்ள பழப் பதனிடும் தொழிற்சாலைக்கு இப்படிப்பட்ட பண்ணை ஒன்று வேண்டுமென்று அங்குள்ள அதிகாரிகள் முயற்சி எடுத்து அதற்காக இராணிப் பேட்டையில் 200 ஏக்கர் நிலம் ஒதுக்கித் தருகிறார்களா என்று கேட்டார்கள். அப்படிப்பட்ட திட்டங்களை ஏற்படுத்தி அந்தத் தொழிற்சாலை நல்ல முறையில் நடக்க இனியாவது அரசு முயற்சிக்குமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** வட ஆற்காடு மாவட்டத்தில் வேலூரில் அமைக்கப்பட்டிருக்கும் பழம் பதனிடும் தொழிற்சாலை கூட்டுறவுத் துறையில் செயல்பட்டு வருகிறது. ஆனாலும் அது ஒரு முன்னோடித் தொழிற்சாலை. அங்கு சோதனைகள் நடைபெற்றன. தக்காளிப் பழத்தைப் பதனிடுதல், சாறு பிழிதல். மாம்பழத்தைப் பதனிடுதல், சாறு பிழிதல்; அன்னாசிப் பழத்தைப் பதனிடுதல், சாறு பிழிதல் என்று இவைகளை எல்லாம் சோதனை செய்து பார்த்த பிறகு அன்னாசிப் பழத்தைப் பதனிட்டு டின்களில் அடைப்பது லாபகரமாகவும், வெற்றிகரமாகவும் நடக்கும் என்று தெரிந்து அதற்குத் தேவைப்படும் அன்னாசிப் பழம் தற்போது கேரளத்திலிருந்து வாங்க வேண்டியிருப்பதால், வட ஆற்காடு மாவட்டத்திலேயே வளர்க்க முடியும் என்பதற்கான சோதனைகளைச் செய்து பார்த்து நன்றாக விளையும் என்பதால் அதை அதிகமாகப் பயிரிட முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. எம். ஏ. லத்தீப்:** இத்தகைய பழத் தோட்டங்களை வட ஆற்காடு மாவட்டத்தில் ஏற்படுத்த முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன என்பது அமைச்சர் அவர்கள் பதிலிலிருந்து தெரிய வருகிறது. எந்தெந்த இடங்களில் இப்படிப்பட்ட முயற்சிகள்



மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன? ஜவ்வாது மலையிலும், ஏலகிரி மலையிலும் இதற்கான முயற்சி செய்யப்பட வேண்டுமென்று மதிப்பீட்டுக் குழு பரிந்துரை செய்திருக்கிறது. அதன் மீது அரசு எடுத்திருக்கும் நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** மலையில்தான் அன்னாசிப் பழம் பயிரிட முடியும் என்பது முன்னாலிருந்த கருத்து. இப்போது அதைச் சாதாரண சமவெளியிலும் தரையிலும் பயிரிட முடியும் என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் தொழிற்சாலைக்குப் பக்கத்தில் இருக்கும் விவசாயிகளை கூடியவரை அதைத் தயாரிக்கும்படி சொல்லியிருக்கிறோம்.

**திரு. எம். சுரேந்திரன்:** இந்தப் பழங்களைப் பதம் செய்வதற்கும் ரசம் எடுப்பதற்கும் ஏற்பாடு செய்திருக்கிறார்களா? இந்தத் தொழிற்சாலைக்கு எவ்வளவு பழங்கள் தேவைப்படுகின்றன? எவ்வளவு பற்றாக்குறை இருக்கிறது? அப்படி எடுக்கப்பட்ட பழங்களில் இந்தக் காரியங்கள் நடைபெற்றால் அது வருஷத்தில் எவ்வளவு லாபம் சம்பாதித்துத் தரும்?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** எவ்வளவு பழங்கள் கிடைத்தாலும் பதனிடுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இப்போது அன்னாசிப் பழத்தை ஒரு கிலோ 85 பைசா என்று வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். பழங்கள் கிடைப்பது அரிதாக இருக்கிறது. கேரளத்திலிருந்து கொண்டுவர வேண்டியிருக்கிறது. கொண்டு வரும் செலவும் அதிகமாகிவிடுகிறது. ஆகவே, வேலூருக்கு அருகாமையில் இருக்கும் இடத்தில் அன்னாசிப் பழங்களைப் பயிரிடும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**திருமதி ஜோதி வெங்கடாசலம்:** இந்த அன்னாசிப் பழங்கள் பயிர் செய்ய எவ்வளவு ஏக்கர் நிலங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன? எந்த இடத்தில் ஒதுக்கப்பட்டிருக்கின்றன?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** நான் சொன்னது பரீட்சார்த்தமாகப் பயிர் செய்து பார்த்ததில் வெற்றிகரமாக நடந்திருக்கிறது, நன்றாக வளர்ந்திருக்கிறது என்பதாகும். பழம் ஒன்று 1¼ கிலோ அளவுக்கு வேலூருக்குப் பக்கத்தில் இருக்கும் நிலங்களில் விளைவிக்க முடியும் என்று சொல்லியிருக்கிறார்கள். எவ்வளவு பழம் பயிரிடுகின்றார்களோ அவ்வளவையும் வாங்கிக் கொள்ளுகிறோம் என்று கூறியிருக்கிறார்கள். இதற்காக கூட்டுறவுப் பண்ணையாக அமைக்காமல்

விவசாயிகள் இதைப் பயிரிடுவதற்கு ஊக்கம் கொடுத்து வருகிறோம். சென்ற வருஷம் ஏறத்தாழ சுமார் 10 லட்சம் ரூபாய் அளவுக்கு அன்னாசிப் பழம் பயிரிடப்பட்டிருக்கிறது. அவ்வளவும் பதப்படுத்தி டின்களில் அடைக்கப்பட்டது. எவ்வளவு பழம் இருந்தாலும் அவ்வளவும் தேவையாக இருக்கிறது.

**திரு. கே. கந்தசாமி:** அன்னாசிப் பழம் போன்ற விலை உயர்ந்த பழங்களைப் பற்றிச் சொன்னார்கள். எங்கள் பகுதியில் தக்காளிப் பழம் அதிகமாக விளைகிறது. அதைப் பயன்படுத்தி பதனிட்டு ரசம் எடுத்தால் சாதாரண மக்கள் சத்துள்ள உணவாகச் சாப்பிட முடியும். இந்தத் திட்டத்தைப் பற்றி அரசு பரிசீலிக்குமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** ஏற்கனவே சொன்னேன். தக்காளிப் பழத்தைப் பதனிடுகின்ற முயற்சியில் வெற்றி பெறவில்லை. காரணம், தமிழகத்தில், மற்றும் இந்தியாவில் உள்ள மக்கள் தக்காளிப் பழத்தைப் பச்சையாகச் சாப்பிடத்தான் விரும்புகிறார்கள். டின்களில் அடைத்து வெளிநாடுகளுக்கு அனுப்பினாலும் நாம் இத்தாலி, கிரீக் நாடுகளோடு போட்டி போட முடியவில்லை. பைன்ஆப்பிள் ஒன்றுதான் பதனிடும் தொழிற்சாலையில் வெற்றிகரமாகப் பயன்படுத்த முடியும் என்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஏ. எம். இராஜா:** இந்த பைன்ஆப்பிளுக்கு நல்ல கிராக்கி இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இதை வளர்க்க விவசாயிகளுக்கு ஊக்கம் கொடுக்கின்ற முறையில் இன்சென்டிவ் ஸ்கீம் இருக்கிறதா? ஒரு ஏக்கரில் விவசாயி இதை விளைவித்தால் அவனுக்கு என்ன கிடைக்கும்?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** விவசாயிகள் உற்பத்தி செய்கிற பழங்கள் பூராவையும் வாங்கிக் கொள்வதே ஒரு இன்சென்டிவ்தான். விவசாயத் துறையில் ஒரு ஏக்கருக்கு இதை வளர்ப்பதன் மூலம் 5,000 ரூபாய் லாபம் கிடைக்குமென்று சொல்லியிருக்கிறார்கள். இதிலே விவசாயிகள் ஊக்கமாகவே இருக்கிறார்கள். இதற்காக தனியாகப் பணம் கொடுக்கவோ, மானியம் கொடுக்கவோ தேவையில்லை.



*Thanjavur Co-operative Marketing Federation*

* 260 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether the accounts of the Thanjavur Co-operative Marketing Federation for the years 1967–68, 1968–69 and 1969–70 have been audited; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தலைவர் அவர்களே, 1967-ல் நட்டம் ரூ. 9,76,937. 1968-ல் நட்டம் 30,40,253 ரூபாய். 1969—70-ல் (30—9—70 வரை) ஏறத்தாழ ஒன்றரை ஆண்டில் நட்டம் 61,64,021 ரூபாய்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** இந்தத் தணிக்கையில் ஏதேனும் ஒழுங்கீனங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றனவா? நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** ஒழுங்கீனங்கள் சில கண்டுபிடிக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. நிர்வாகக் குழு கலைக்கப்பட்டு தனி அதிகாரி போடப்பட்டு நடந்து வருகிறது.

DR. H. V. HANDE: May I know whether it was not a fact that value of stocks of paddy and rice as verified on 30th, was Rs. 228.84 lakhs while the actual stocks should have been Rs. 386.01 lakhs. More than Rs. 1 crore was found missing. If so, may I know whether the amount was recovered and whether suitable action had been taken and deterrent punishment given against erring persons who were connected with this fraud?

THE HON. THIRU SI. PA. ADITANAR: These losses were incurred mostly in procurement operations which were entrusted to this Co-operative Federation. It is true there was a deficit even in the stock. But the Federation's explanation was it was due to drying and other causes. But it has been investigated and both civil and criminal action is being taken.

DR. H. V. HANDE: The Hon. Minister said in his answer that explanations have been given. May I know whether the Government have accepted the explanation completely or have they cast them totally aside and whether action has been taken? Why there was so much delay in spite of the fact that the attention of

the Government was drawn to this far earlier and why this was not discovered earlier and why were the different verifications not done earl.er? Will the Hon. Minister give us the details? What were the dates when different action was taken?

THE HON. THIRU SI. PA. ADITANAR: Sir, I do not have the dates; it is more than 4 or 5 years and it is impossible to have all data without notice.

DR. H. V. HANDE: Sir, on a point of order. Sir, when we have asked a question and this question was given notice some nine months ago—and when the question is a starred question, how does the Hon. Minis.er say that he has not got the details? I am shocked to hear that he does not have the details. Why cannot he get the details, even if it be for four or five years? I want to know what is the difficulty for the Hon. Minister to have the details when a starred question has been asked? Why cannot he give a direct answer to questions arising out of the main starred question? And why there is so much delay? Is it not scandalous that Government have lost more than one crore of rupees completely and what was the action taken in the last four or five years? I would like to know the details from the Hon. Minister, Sir.

THE HON. THIRU SI. PA. ADITANAR: Sir, the loss was found out only for the year 1969–70, on a large-scale; for earlier small-scale cases, action is taken. (Interruption). Yes, discoveries were made. In 1970, it was brought to the notice of the Government and enquiry was instituted. After enquiry, action has been taken. After 1970, it is not a long time for investigations to be conducted. Investigations have to be conducted, because the operations cover a whole district, involving several taluks. Therefore, the investigations are still going on.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: ஏறக்குறைய 1 கோடி ரூபாய்க்கு மேலே இருக்கக்கூடிய இந்த வழக்கினை தனியாக ஒரு போலீஸ் துறையினிடத்தில் கொடுத்து விசாரிக்கப்படுமா? அப்படி விசாரிக்கப்பட்டு எந்த அதிகாரியாவது அல்லது பொறுப்புள்ளவர்களாவது இது வரையில் கைது செய்யப்பட்டு இருக்கிறார்களா என்ற தகவலைத் தர முடியுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, இது குறித்து விசாரிக்க போலீசில் தனி Wing ஒன்று இருக்கிறது. கூட்டுறவுத் துறையில் நடக்கிற இந்தமாதிரியான தவறுகளை



கண்டுபிடிப்பதற்காகவே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அவர்கள் இதைக் கண்காணித்து வருகிறார்கள். அதுவும் பெரிய அதிகாரி ஒருவர் இதை விசாரித்து வருகிறார்கள். சூப்பிரண்டெண்டெண்ட் ஆப் போலீஸ் மட்டத்தில் ஒரு அதிகாரி விசாரித்து வருகிறார். போலீசார் சிலரைக் கைது செய்து இருக்கிறார்களா என்பதற்கு, யார் மேல் குற்றம் என்று ரொம்பத் தெளிவாகத் தெரிந்து இருக்கிறதோ அவர்கள் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் கூறும்போது சிவில் கேசாகவும், கிரிமினல் கேசாகவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகக் கூறினார்கள். அப்படியானால் கிரிமினல் நடவடிக்கைகள் யார் யார் மீது எடுக்கப் பட்டிருக்கின்றன, சிவில் நடவடிக்கைகள் யார் யார் மேல் எடுக்கப்பட்டிருக்கின்றன என்ற விவரங்களை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: நான் இப்போது சொல்லக் கூடியதெல்லாம் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் சம்பந் தப்பட்ட சிலர் என்பது தான். யார் மீது போலீசுக்குத் தெளி வாக சந்தேகம் ஏற்பட்டதோ அவர்கள் கைது செய்யப்பட்டிருக் கிறார்கள், எவ்வளவு மொத்தம் தவறுகள் நடந்து இருக்கின்றன, அதிலே நாம் பெறவேண்டிய தொகை எவ்வளவு இருக்கிறது என்று பூராவுமாக இன்னும் ஆய்ந்து முடியவில்லை.

DR. H. V. HANDE: Sir, is it not a fact that two more faults were discovered, namely, that the Federation did not pay the claims of Marketing Societies? In respect of procurement business for the last two years, I understand that eight members have resigned and their resignations could take effect only after acceptance by the Board of Directors and as there was no Board, a peculiar situation had arisen. What is the action taken by this Government to see that this peculiar situation is counter-acted and what is the action taken with regard to non-finalisation of the accounts in respect of construction of modern rice mills?

THE HON. THIRU SI. PA. ADITANAR: Sir, I have already answered that question. These deficits were found in relation to procurement. (Interruption). Yes, yes, that is the second question. I am coming to that. There are two questions by Dr. Hande. The first question relates to non-settlement of accounts

of marketing societies. I am coming to that. The second queastion is about the procurement . . . .

DR. H. V. HANDE : Sir, the first question was about construction of rice mills and non-finalisation of construction of rice mills. The second is that a peculiar situation has arisen because of the fact that the Board of Directors have not been formed. These are the two questions.

THE HON. THIRU SI. PA. ADITANAR : Sir, construction of rice mills and also many other subsidiary industries connected with that have got to be finalised and a final report is awaited on that. It is not rice mills alone: it contains seed processing unit along with it and it is all part of the Federation. That is why it takes a little more time. I am myself anxious to finalise the accounts, because they have been sold to the Civil Supplies Department and I as a Co-operation Minister am anxious to get the money. Therefore, it is not as though the delay is on the part of Co-operation Department; actually we are anxious to complete it and in spite of all our best efforts, it will take a little time as it is for over a number of years. It involves accounts of construction of other units. Regarding the other question as to why resignations were not accepted, there is a High Court judgment to the effect that when there are resignations, that ground alone need be considered and it would be enough for the superseding of any society. Therefore, when there were resignations that ground was sufficient to supersede. Even if they had not resigned, even then there would have been supersession.

THIRU J. JAMES : On a point of order, Sir.

MR. DEPUTY SPEAKER : There is no point of order during question hour.

THIRU J. JAMES : I just want to ask one more question.

MR. DEPUTY SPEAKER : I have allowed you three or four questions.

(Dr. Hande stood in his seat)



MR. DEPUTY SPEAKER : There should be a limit to this. I have allowed sufficient supplementaries on this question.

DR. H. V. HANDE : We want specific answers which the Hon. Minister has not given.

THIRU J. JAMES : I do not claim it; I may please be allowed one more supplementary.

DR. H. V. HANDE : No specific answer is given.

MR. DEPUTY SPEAKER : Dr. Hande, you are going to speak on the Budget today and you can clarify this matter then in your speech.

*Sugar released for the State*

* 261 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) the quantity of sugar released to our State from the mills during 1972 after the new sugar policy of the Government of India was announced; and

(b) the details of its distribution within the State?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) & (இ) பேரவைமுன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

(திரு. சோ. அழகர்சாமி இருக்கையில் இருந்து கொண்டே பேசிக்கொண்டிருந்தார்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மூலக் கேள்விக்கு சம்பந்தம் இல்லாமல் கேட்டு விடுகிறீர்கள். அதற்கு அப்புறம் பதில் சொல்லவில்லை அமைச்சர் என்று கூறுகிறீர்கள். திரு. சோ. அழகர்சாமி எழுந்து நின்று பேசுங்கள்.

திரு. சோ. அழகர்சாமி : இது ஒரு முக்கியமான கேள்வி. அந்தக் கேள்விக்கு துணைக் கேள்வி போட நானும், ஏ. கே. சுப்பையாவும் கையைத் தூக்கி வைத்துக்கொண்டே இருந்தோம். அதற்கு வாய்ப்பு கொடுக்கவில்லை.

@ 394–396-ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1973 மார்ச் 6

(திரு. எம். சுரேந்திரன் அவர்களும் இருக்கையில் இருந்து பேசிக் கொண்டிருந்தார்கள்).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. எம். சுரேந்திரன் இது கேள்வி நேரம் என்பதை மறந்து விடாதீர்கள். ஏற்கனவே மணி 10 ஆகிவிட்டது. முக்கியமான கேள்வி என்பதால்தான் வேண்டிய துணை வினாக்கள் கேட்க வாய்ப்பளிக்கப்பட்டிருக்கிறது. மேற்கொண்டும் அதற்கு வாய்ப்பளிக்க முடியாது.

**திரு. என். கே. பழனிசாமி :** தலைவரவர்களே, 1972 நவம்பர் மாதம் 10,000 மெட்ரிக் டன் அளவுக்கு ஒதுக்கியிருக்கிறார்கள். டிசம்பர் மாதம் 9,000 மெட்ரிக் டன்கள்தான் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. 27 லட்சம் டன் கரும்பு உற்பத்தி என்று சொன்னால், டிசம்பரில் 3 லட்சம் டன் அதிகமாக உற்பத்தியாகியும் ஏன் குறைவாக ஒதுக்கப்பட்டது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தலைவரவர்களே, இது மத்திய சர்க்காரிலிருந்து நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒதுக்கீடு ஏன் குறைக்கப்பட்டிருக்கிறது என்ற கேள்விக்கு, நாம் 12,000 டன் கேட்டு இருந்தோம். அவர்கள் 9,749.3 டன் அளவுக்குத்தான் கொடுத்து இருக்கிறார்கள்.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** துணைத் தலைவரவர்களே, கோவை, சிங்காநல்லூர் ஆகிய இடங்களில் 10,000-க்கு மேற்பட்ட சர்க்கரை
மு.ப. 10-00 கார்டுகள்—பில் கலெக்டர்கள் செய்த தவறுதலினால்—அடித்தல் திருத்தல்களின் காரணமாக அந்த கார்டுகளுக்கு சர்க்கரை கொடுக்க முடியாது என்று சொல்லிவிடுகிறார்கள். உடனடியாக அரசாங்கம் அந்தக் கார்டுகளுக்குப் சர்க்கரை கொடுக்க நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** இந்தத் தகவல் கனம் அங்கத்தினரின் கேள்வி மூலம் இப்போதுதான் அரசாங்கத்தின் கவனத்திற்கு வருகிறது. அதுபற்றி விசாரிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நான்கு நாட்களுக்கு முன்னால் கூட இதே கேள்வி வந்து, அதற்கு கிட்டத்தட்ட



1973 மார்ச் 6]

20 துணைக் கேள்விகள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, இதிலே மேற்கொண்டும் துணைக் கேள்விகள் தேவையில்லை என்று கருதுகிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி :** அது கரும்பைப் பற்றிய கேள்வி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கரும்பு வேறு, சர்க்கரை வேறு?

**திரு. சோ. அழகர்சாமி :** இப்போது ஒதுக்கப்பட்டிருப்பது, 300 ரூபாய்க்குக் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு 2 கிலோ, 300 ரூபாய் முதல் 500 ரூபாய் வரை வருமானம் உள்ளவர்களுக்கு 4 கிலோ, 500 ரூபாய்க்கு மேல் உள்ளவர்களுக்கு 6 கிலோ வழங்கப்படுகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இன்று நாட்டிலே மதுவிலக்கு ரத்து செய்யப்பட்ட பின்னால் கருப்புக்கட்டி விலை அதிகமாகிவிட்டது. அதனால் சாதாரணமானவர்கள் கூட காப்பி போடுவதற்கு சர்க்கரையை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. அழகர்சாமி, நீங்கள் கேள்வியை நேரடியாகக் கேளுங்கள். அதற்காக ஒரு ஸ்டேட்மெண்ட் தேவை இல்லை. நான் பலமுறை இப்படிச் சொல்லியாயிற்று. அப்படிச் சொல்லும்போது உங்களுக்கு கோபம் கூட வருகிறது. கேள்வியைச் சுருக்கமாக நேரடியாகவே கேளுங்கள்.

**திரு. சோ. அழகர்சாமி :** இப்போது சர்க்கரை விநியோகிக்கும் முறையை தனியார் மூலம் செய்யாமல் நியாயமான விலையில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவே விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** அப்படித்தான் கூட்டுறவுச் சங்கங்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. கூட்டுறவுச் சங்கங்கள் இல்லாத இடங்களில் தனியார் மூலமாக விநியோகம் செய்யப்படுகிறது.

**திரு. கே. ஏ. வகாப் :** தலைவரவர்களே, நம்முடைய தமிழ் நாட்டுக்கு அதிகமாக சர்க்கரை தேவைப்படும் ஜனவரி மாதத்தில் குறைந்த அளவு கோட்டா கொடுக்கப்படுகிறது. அந்த மாதத்தில்தான் நமக்கு அதிகமாகத் தேவைப்படுவதற்கு காரணம் பொங்கல், ரம்ஜான் போன்ற பண்டிகைகள் வருகின்றன. ஆகவே, . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது மூலக் கேள்வியோடு தொடர்புள்ளதாகத் தெரியவில்லை. நீங்கள் உட்காருங்கள்.

திரு. கே. கந்தசாமி: துணைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் கரும்பு அதிகமாக உற்பத்தி செய்தும், சர்க்கரைக்கு நாம் மத்திய அரசை தொங்கி நிற்கவேண்டிய பரிதாபகரமான நிலையில் இருக்கிறோம். ஆகவே, மத்திய அரசுக்கு கடுமையான வேண்டுகோள் விடுத்து, நமக்குத் தேவையான அளவு சர்க்கரையைத் தாராளமாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: வேண்டுகோள் விடுத்திருக்கிறோம். அது கடுமையான வேண்டுகோளா என்பது தெரியவில்லை.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: (நெல்லிக்குப்பம்) நமக்குக் கிடைக்கக்கூடிய சர்க்கரையில் ஓட்டல், டீ கடைகளுக்குக் கொடுக்க முடிவதில்லை. அவர்கள் மூட்டை 370 ரூபாய்க்கு வாங்குவதற்குப் பதிலாக 215 ரூபாய்க்கு லெவி முறையில் கொள்முதல் செய்வதையே வாங்குகிறார்கள். ஆகவே, நம்முடைய மாநிலத்திற்கு லெவி முறையில் கொள்முதல் செய்யப்படும் சர்க்கரையில் அவர்களுக்கும் கொடுக்க மத்திய அரசை வற்புறுத்தி நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: கனம் உறுப்பினர் அவர்கள் சொல்லும் முறை சரியானதாகத்தான் இருக்கிறது. லெவி முறையில் கிடைக்கும் சர்க்கரையை யார் யாருக்குக் கொடுக்க முடியுமோ அந்த முறையில் கொடுக்க மத்திய அரசு ஏற்பாடு செய்துள்ளது. ஓட்டல் மற்றும் டீ கடைகளுக்கு கொடுக்க வேண்டிய அளவுக்கு சர்க்கரையைக் கொள்முதல் செய்வதற்கான யோசனையை தெரிவித்திருக்கிறோம்.

திரு. கா. வேழவேந்தன்: இந்த மாநிலத்திற்குத் தேவையான சர்க்கரையை மாநில அரசின் மூலமாகவே விநியோகம் செய்ய மத்திய அரசு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறதா? அந்தக் கோரிக்கையை இந்த மன்றத்தின் முன் வைத்து, ஒரு தீர்மானம் போட்டு. மத்திய அரசுக்கு அனுப்ப ஏற்பாடு செய்யப்படுமா?





மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: மன்றத்தின் மூலம் தீர்மானம் போடுவதானால், அதுவும் செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

*Development of Tranquebar and Vedaranyam*

* 262 *Q.*—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether there is any proposal to make Tranquebar and Vedaranyam as Sea-side resorts; and

(*b*) if so, the details of the same?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கே. பழனிசாமி: சார், இந்த இடங்களுக்கு யாத்திரிகர்கள் அதிகமாக வந்து செல்வதால், இந்த இடங்களை யாத்திரிகள் ஸ்தலமாக மேம்படுத்தும் திட்டம் அரசாங்கத்திடம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: கடலோரப் பகுதிகள் உல்லாசப் பிரயாணிகள் வந்து செல்லக்கூடிய அளவைப் பொறுத்து மேம்படுத்தப்படலாம். தரங்கம்பாடி, வேதாரண்யம் ஆகிய இடங்களை மேம்படுத்தும் திட்டம் இப்பொழுது இல்லை.

*Wild life week*

* 263 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Electricity be pleased to state the details of the wild life week celebrations in this State proposed by the Government during 1972?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: அவை முன் ஓர் விவர அறிக்கை @ வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, இந்த வன விலங்குகள் வார விழா அறிக்கையைப் பார்க்கும்போது வன விலங்குகளைப் பற்றித்தான் விளம்பரப்படுத்தப்

பட்டிருப்பதாகத் தெரிகிறது. இன்றைக்கு இருக்கின்ற பிரச்சினை வன விலங்குகளைப் பாதுகாப்பதுதான் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** இந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கின்ற 10 பள்ளிகளிலிருந்தும்—10 வாக்கியங்களிலிருந்தும் வன விலங்குகள் பாதுகாக்கப்படும் முறைகள் தூண்டப்பட்டிருக்கின்றன. அந்த வகையிலே துண்டு அறிக்கைகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. கல்லூரிகளில் பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டிகள் நடத்தப்பட்டிருக்கின்றன.

**திரு. ச. சங்குமுத்துத் தேவர் :** வன விலங்குகளுக்குப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய இந்த நேரத்திலே மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகளாகிய அம்பாசமுத்திரம், நாங்குனேரி போன்ற இடங்களில் வன விலங்குகள் வேட்டையாடப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டனவா ? அல்லது தானகவே இறந்துவிடுகின்றனவா ? அங்கே வனவிலங்குகள் வரவரக் குறைந்து போவதற்கு என்ன காரணம் ? அரசாங்கம் அதற்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** அதற்கான விளக்கம் இல்லை, தனிக் கேள்வி போடவும்.

THIRU M. A. LATHEEF : Sir, very rare species of wild animals are being wiped out because of unscrupulous shooting by unscrupulous persons. That is why in my area, Javadu Hills, long before it was suggested that there should be an animal sanctuary. So, what step the Government have taken to preserve wild life in my area?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** பாதுகாப்புச் சட்டம் இருக்கிறது. எல்லோரும் அதைக் கடைப்பிடிக்க வேண்டும்.

சென்னை—அயநல்லூர் பேருந்துப் பணி

*264 வினா—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்மிடிப்பூண்டித் தாலூகா வட்டம், அயநல்லூரிலிருந்து சென்னைக்குப் பேருந்து விடுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?



**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தேவம்பட்டுக்கும், அயநல்லூருக்கும் பேருந்துகள் விடுவதற்கான செயற்குறிப்பை பல்லவா போக்குவரத்துக் கழகம் பரிசீலித்தது. ஆனால் இக் கழகம் நாட்டுடைமையாக்கப்பட்ட சில பேருந்து வழித் தடங்களை ஏற்று அவற்றில் பேருந்துகள் விட வேண்டியிருப்பதால் மேற்கூறப்பட்ட இரு ஊர்களுக்கு விடுவதற்குப் பேருந்துகள் ஒதுக்குவது தற்போது சாத்தியமில்லை.

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவரவர்களே, அமைச்சரவர்கள் தற்போது சாத்தியம் இல்லை என்று சொன்னார்கள். 1973-க்குள்ளாவது அயநல்லூரிலிருந்து சென்னைக்கு பஸ் விட ஏற்பாடு செய்யப்படுமா ? தனியார்களுக்கு பஸ் விடுவதற்கு ஆர்.டி.ஓ. அவர்கள் பெர்மிட் தர முடியாது என்று சொல்லி விட்டார்கள். ஆகையால் 1973-க்குள்ளாக பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக பஸ் விட ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, பஸ் விடுவதற்கு ஏற்ற இடம் என்று அந்த இடம் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறது. ஆனால் பஸ்கள் கிடைப்பதில்லை. குறிப்பாக சேசிஸ் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. தேவையான அளவுக்கு சேசிஸ் கிடைக்குமானால் டிசம்பர் வரை கூட பஸ் விடுவதற்காகக் காத்திருக்க வேண்டியதில்லை.

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, பஸ்கள் விட வேண்டுமென்று முடிவு செய்தாலும், விடுவதற்கு பஸ்கள் இல்லை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். தற்போது மத்திய அரசு பஸ்கள் வாங்குவதற்கு. . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உங்கள் கேள்வி இரண்டு விதத்திலே தப்பானது. முதலில், இந்தக் கேள்வி மூலக்கேள்விக்கு தொடர்புடையது அல்ல. இரண்டாவது, கும்மிடிப்பூண்டியைப் பற்றிக் கேட்பதற்கு கும்பகோணத்தைச் சுற்றி வருவதுபோல இருக்கிறது. ஆகவே, துணைக் கேள்வி போடுவதாக இருந்தால் நேரடியாகவே கேளுங்கள். சுற்றி வளைக்க வேண்டாம்.

[1973 மார்ச் 6

**திரு. நா. வீராசாமி :** அமைச்சரவர்கள் கும்மிடிப்பூண்டியைப் பற்றிச் சொன்னார்கள். நானும் கும்மிடிப்பூண்டியைப் பற்றித்தான் கேட்கிறேன். தற்போது விடுவதற்கு பஸ் இல்லை என்று சொன்னார்கள். இப்போது பஸ்கள் விடுவதற்கு மத்திய அரசு 'டில்லி டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷனுக்கு' 2½ லட்சம் ரூபாய் மானியமும், 2½ லட்சம் ரூபாய் கடனும் கொடுத்திருக்கிறது. அதைப்போல் கடனும் மானியமும் பெற நம்முடைய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** டில்லியிலே பஸ் ஓடுகிறது என்றால் சென்னையிலே உள்ள நாமும் பெருமைப்பட வேண்டும். அதுதான் தேசிய ஒருமைப்பாடு.

சென்னை—குருவாயல் பேருந்துப் பணி

* 265 வினா—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் வட்டம், குருவாயல் கிராம வட்டார மக்களிடமிருந்து 17—8—'1972 அன்று குருவாயல் முதல் சென்னை பிராட்வே வரை பேருந்துவிட ஏற்பாடு செய்யுமாறு போக்குவரத்துத் துறை அமைச்சருக்கு விண்ணப்பம் ஏதேனும் வந்ததா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) ஆம்.

(இ) அவ் வழித்தடம் பேருந்துப் போக்குவரத்துக்கு ஏற்றதாயில்லை.

**திரு. கா. வேழவேந்தன் :** அது 1972-லே இருந்த நிலைமை. இப்போது புதிய ரோடு நன்றாகப் போடப்பட்டிருக்கிறது. ஆகவே, இப்போது பேருந்துகள் விடுவதற்கு அமைச்சரவர்கள் துரிதமான நடவடிக்கை எடுத்து, விரைவிலே உத்தரவு பிறப்பிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** நிலைமைகள் மாறினால் வசதிகளும் மாறும்.



1973 மார்ச் 6]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

**செவிலி உதவிப் பயிற்சியாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டதன் காரணமாக, கோவையில் செவிலி உதவிப் பணியாளர்கள் வேலை நிறுத்தம் செய்திருப்பதும். அதன் விளைவுகளும் குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. மருதாசலம் அவர்கள் தமிழ்நாடு சட்டப்பேரவை 42-வது விதியின் கீழ் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார். அது எப்படி ஒத்திவைப்பு தீர்மானத்திற்கான விதிகளின்கீழ் வரும் என சுருக்கமாக அவர் விளக்கலாம்.

**திரு. என். மருதாசலம் :** தலைவரவர்களே, 3—3—73 ஆம் தேதி கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் 40 செவிலி உதவி பயிற்சியாளர்களை திடீர் வேலை நீக்கம் செய்யப்பட்டதால் அங்கு பணிபுரிந்த சுமார் 140 செவிலி உதவிப் பணியாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள காரணத்தினால் நோயாளிகளுக்கும், பொது மக்களுக்கும் தாங்க முடியாத துன்பம் ஏற்பட்டிருக்கிற காரணத்தால் மக்கள் மத்தியில் கொந்தளிப்பான நிலைமை ஏற்பட்டிருக்கின்ற அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயம் பற்றி விவாதிக்க சபையின் மற்றைய அலுவல்களை ஒத்தி வைக்கக் கோருகிறேன்.

* **மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, செவிலிப் பணி உதவியாளர்கள் என்ற நிலையிலே உள்ள எம்.என்.ஓ.க்கள் யாரும் வேலையிலே இருந்து நீக்கப்படவில்லை. செவிலிப் பணி உதவியாளர் அப்ரண்டிஸ்—பயிற்சி பெற்றுக் கொண்டு இருக்கக் கூடிய 40 பேர் பயிற்சி பெறுகிற ஆறு மாதத்திற்குள்ளாக அவர்கள் தங்கள் பயிற்சி பெற வேண்டிய பாட திட்டத்திலுள்ளவாறு வார்டுகளைச் சுத்தமாக வைத்துக்கொள்வது—'ஸ்வாபில்'—சோப்புப் போட்டு தண்ணீரால் கழுவுவது—ஆகிய இந்த வேலையைச் செய்ய மறுத்த காரணத்தால் பயிற்சி காலத்திலேயே

பயிற்சி பெற மறுக்கிறார்கள் என்ற அடிப்படையில் அவர்களின் பயிற்சியை மருத்துவக் கல்லூரியினுடைய மேலாளர் அவர்கள் உடனடியாக நிறுத்தியிருக்கிறார்கள். பயிற்சி காலத்திலேயே பயிற்சிக்குரிய பாட வேலைகளைச் செய்ய மாட்டோம் என்று சொல்வது பயிற்சி பெறுகிறவர்களுக்கு அழகல்ல. அவர்களுக்கு ஆதரவாகவும், தூண்டி ஓரளவுக்கு ஊக்கப்படுத்தியும் எம்.என்.ஓ.க்கள் 2 ஆம் தேதி வேலை நிறுத்தம் செய்வதாக அறிவித்தார்கள். இங்கே, அந்த எம்.என்.ஓ.க்களின் தலைவர் வந்தபோது, நாங்கள் வேலை நிறுத்தம் செய்யவில்லை என்று சொன்னார்கள். ஏதோ ஒரு காரணத்தால், வேலை நிறுத்தம் செய்ய எண்ணினாலும் 3 ஆம் தேதி வேலை நிறுத்தம் இல்லை, என்று தெரிவித்தார்கள். ஆகவே, இப்போது சகஜ நிலைமை— அமைதியான நிலை தோன்றி இருக்கிறது. பயிற்சி பெறுகிறவர்கள் எப்படிப் பயிற்சி பெற வேண்டுமோ, அப்படிப் பயிற்சி பெற மாட்டோம் என்று சொல்வார்களேயானால் அவர்களுக்குப் பயிற்சி அளிக்க எந்த அரசாங்க இலாக்காவாலும் முடியாது. செவிலி உதவிப் பணியாளர்களாக உள்ளவர்கள் தான் அப்படிச் செய்ய வேண்டும் என்று பாட திட்டம் இருக்கிறது. நாங்கள் அப்படிச் செய்யமாட்டோம் என்று சொல்கிறார்கள். பாடத் திட்டத்திலேயே, வேலை முறையிலேயே அந்தப் பணி அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பணியை மற்றவர்களிடம் மாற்ற வேண்டுமென்கிறார்கள்.

கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையிலே 114 நர்சிங் அஸிஸ்டண்டுகள் இருக்கிறார்கள். இவர்களுடைய வேலையை லஸ்கர்களிடம் கொடுக்க வேண்டுமென்கிறார்கள். அங்கே 10 லஸ்கர்கள் இருக்கிறார்கள். இந்த 114 பேர்கள் வேலையை அந்தப் பத்து பேர்களிடம் விட வேண்டும் என்றால், மருத்துவ மனை துப்புரவு செம்மையாக இருக்காது. ஆகவே, அப்படி அவர்களிடத்திலே தான் கொடுக்கப்பட வேண்டுமென்ற ஒரு கருத்து ஏற்றுக்கொள்ளப்படுவதாக இருந்தால் 114 பேரில் 20 பேரையாவது குறைத்துவிட்டு, 20 லஸ்கர்களை அந்த இடத்தில் நியமிப்பது பற்றி கவனிக்க வேண்டும். மருத்துவ மனையிலுள்ள நோயாளிகளின் நன்மையை யாவரும் கருத வேண்டும். மேலும் அவர்கள் கொடுத்துள்ள வேண்டுகோளை அரசாங்கம் பரிசீலனை





செய்து வருகிறது. முடிந்தால், கோரிக்கை நியாயமானதாக இருந்தால், அவற்றை அரசு ஏற்றுக்கொள்ளும் என்பதாலும் இப்போது வேலை நிறுத்தம் இல்லை என்ற காரணத்தாலும் இப்படிப் பட்ட ஒத்திவைப்பு நடவடிக்கைக்கு அவசியம் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகு ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அவசியமில்லை என்று கருதி, அத்தீர்மானத்திற்கு அனுமதியை மறுக்கிறேன்.

3. கவன ஈர்ப்பு.

(அ) பாபநாசம், மணிமுத்தாறு நீர்த் தேக்கத்தில் இருந்து அட்வான்ஸ் கார் பயிருக்கு அளவுக்கு மேல் நீர் கொடுப்பது குறித்து.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ச. சங்குமுத்து தேவர் அவர்கள், சட்டப் பேரவை விதி 41-ன் கீழ் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கவன ஈர்ப்புத் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வருவார்.

**திரு. ச. சங்குமுத்து தேவர்:** தலைவரவர்களே, சட்டப் பேரவை விதி 41-ன் கீழ் கீழ்க்கண்ட அவசர பொது முக்கியமான காரியத்தைக் கொண்டு வருகிறேன்.

திருநெல்வேலி மாவட்டம், 1972 ஆம் வருஷம் ஏப்ரல் மாதத்தில் அட்வான்ஸ் கார் பாசனத்திற்காக பாபநாசம், மணிமுத்தாறு நீர்த் தேக்கத்திலிருந்த நீரை கீழ் பாசனத்திற்காக அளவுக்கு மேல் உபயோகப்படுத்தியதால் அம்பாசமுத்திரம் தாலுகா, திருநெல்வேலி பகுதியில் உள்ள விவசாயிகள் அடுத்துவரும் மாதங்களில் அடைந்த பெரும் நஷ்டத்தையும் இதனால் ஆண்டுதோறும் விவசாயம் பாதிக்கப்படுவதையும் கவனிக்க வேண்டிய அவசரப் பொது முக்கியமான காரியத்தைப் பற்றி மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவர் அவர்களே, கோடை காலத்தில் தாமிரவருணி ஆற்றில் வரும் நீரைப் பயன்படுத்திக் கொள்ளும்பொருட்டு, மருதூர்

[1973 மார்ச் 6

ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டுகளின் கீழ்ப்பகுதியில் உள்ள ஆயக்கட்டுப் பகுதியில் தாமிரவருணி ஆற்றுப்பாசன முறையின் கீழ் முன் கார் சாகுபடி செய்யும் திட்டம் நீண்ட காலமாகச் செயலில் இருந்து வந்துள்ளது. பாபநாசம் நீர்த்தேக்கம் கட்டப்பட்ட பின்னர், கோடை மாதங்களில் அந்த நீர்த்தேக்கத்தின் மூலம் கிடைக்கும் மின்சக்தியும் முன் கார் பயிரிடுவதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

முன் கார் சாகுபடி செய்யும் பிரச்சினைக்குக் கூடுமானவரை இணக்கமான முறையின் தீர்வு காணும் பொருட்டு, தாமிரவருணி ஆற்றுப்பாசன முறையின் மேல்பகுதி, கீழ்ப்பகுதி ஆயக்கட்டுதாரர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், உழவர் சங்கங்களின் பிரதிநிதிகள் ஆகியோரைக் கொண்ட கூட்டம் ஒன்றைத் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் 8—2—69-ல் கூட்டினார். கூட்டத்தின் முடிவில் மார்ச் திங்கள் இறுதியில் நீர்த்தேக்கத்தில் உள்ள நீரின் அளவைக் கருத்திற்கொண்டு ஒவ்வோர் ஆண்டும் முன் கார் சாகுபடிக்காக அனுமதிக்கப்படும் பரப்பளவை சம்பந்தப்பட்ட அதிகாரிகளே முடிவு செய்ய விட்டுவிடப்பட வேண்டுமென்றும், ஒவ்வோர் ஆண்டும் ஜூன் மாதத் தொடக்கத்தில் தாமிரவருணி ஆயக்கட்டில் விதைப் பாத்திகள் அமைப்பதற்காக ஆற்றுக்கு மேற்பகுதியில் இருக்கும் ஆயக்கட்டுதாரர்களின் தேவையை நிறைவு செய்யப் பாபநாசம் நீர்த்தேக்கத்தில் சுமார் 500 மில்லியன் கன அடி நீர் சேமித்து வைத்திருக்கப்பட வேண்டுமென்றும் அக்கூட்டத்திற்கு வந்த பிரதிநிதிகளும் ஏனையோரும் ஒருமுகமாக ஒப்புக் கொண்டனர். இந்த முடிவின் அடிப்படையில், முன் கார் சாகுபடிக்கான பரப்பை முடிவு செய்யும் பொதுவான பிரச்சினை குறித்து அவசியமான செயற்குறிப்புகளை அரசுக்குத் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அனுப்பி வைத்தார். இச்செயற்குறிப்புகளை அரசு பரிசீலித்தது. பின்னர், முன் கார் சாகுபடிக்கான பரப்பை முடிவு செய்யும் பொதுவான பிரச்சினை குறித்துப் பொதுப்பணித் துறையின் 12—11—1969 ஆம் நாளிட்ட 2011 ஆம் எண் ஆணையில் கீழ்க்கண்டவாறு அரசு ஆணைகளைப் பிறப்பித்தது :

1. மேல் கால்வாய்ப் பகுதிகளில் முறையான கார் சாகுபடிக்கான விதைப் பாத்திகளை அமைப்பதற்காக பாபநாசம்



1973 மார்ச் 6] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

நீர்த்தேக்கத்தில் ஜூன் 1 ஆம் நாளன்று குறைந்த அளவு 500 மில்லியன் கன அடி நீர் தேக்கி வைத்திருக்கப்பட வேண்டும்

2. பாபநாசம் நீர்த்தேக்கத்தில் சேமித்து வைக்க எதிர்பார்க்கப்படும் நீரின் அளவு, நீர்த்தேக்கத்தில் உறுதியாகக் கிடைக்கக்கூடிய நீரின் அளவு, கோடை காலத்தில் வரும் நீரின் அளவு, மீண்டும் பெறக்கூடிய நீரின் அளவு, ஏரிகளில் தேக்கி வைக்கப்பட்டுள்ள நீரின் அளவு, கடைக்கோடிப் பகுதிகளுக்கு வரும் நீரின் அளவு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு ஒவ்வோர் ஆண்டும் மார்ச் மாத மத்தியில் முன் கார் சாகுபடிக்கான பரப்பு வரையறுக்கப்பட வேண்டும்.

முன் கார் சாகுபடிக்காக நீர் அனுமதிக்கும்போது கீழ்க்கண்டவாறு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் :—

(i) இருக்கக்கூடிய நீர் 8,124 ஏக்கருக்கும் குறைவான பரப்பளவிற்கு ('A' வகை நிலங்கள்) மட்டுமே பாசனமளிக்கப் போதுமானதாயிருந்தால் கால்வாயில் நீர் விடுவதற்கும் கால்வாயைப் பராமரித்து வருவதற்கும் உள்ள வசதிக்கேற்பவும், சிக்கனமாக நீரைப் பயன்படுத்துவதற்கேற்றவாறும் தெற்குத் தலைக் கால்வாய்க்கும் வடக்குத் தலைக் கால்வாய்க்குமிடையே உள்ள பகுதியில் முன் கார் பயிருக்காக நீர் விடப்படும்;

(ii) 10,000 ஏக்கர் 'A' வகை நிலங்களுக்குப் பாசனமளிக்க நீர் இருந்தால், ஆத்தூர் நீர் வழங்குக் கால்வாயிலிருந்து நேரடியாகப் பாசனம் பெறும் ஆயக்கட்டுக்கும் (உயர் மட்ட மதகுகள் நீங்கலாக) தெற்கு தலைக் கால்வாயிலிருந்து கடம்பா ஏரி வரை நேரடியாகப் பாசனம் பெறும் ஆயக்கட்டுக்கும், கீழ்ப்பிடாகை அணைக்கட்டுக்கு மேற்பகுதியில் ஸ்ரீவைகுண்டம் வடக்குத் தலைக் கால்வாயின் 11 ஆம் எண் மதகின் கீழ்ப் பகுதியில் உள்ள ஆயக்கட்டுக்கும் நீர் வழங்கப்படும்;

(iii) 10,000 ஏக்கருக்கு மேற்பட்ட பரப்பின் முன் கார் பயிருக்காகப் பாசனமளிக்க நீர் இருந்தால், மேலே (i), (ii) இனங்களின் கீழ்க் குறிப்பிட்ட பகுதிகளோடு, ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டுக் கால்வாய்களின் கீழ்ப் பகுதியிலுள்ள பரப்பையும் பாசனத்திற்காக நிர்வாகப் பொறியாளர் தெரிந்தெடுப்பார். ஆனால், அவ்வாறு தெரிந்தெடுக்கப்படும் பகுதிகளில் குறைந்த அளவு நீரே வீணாவதாக இருக்க வேண்டியதுடன், பாசனம் பெறுவதற்குத் தொழில் நுட்ப முறையில் மிகவும் வசதி படைத்தனவாக அவை இருக்க வேண்டும்;

(iv) மிகவும் சாதகமான ஆண்டுகளில், 20,000 ஏக்கருக்கு மேற்பட்ட பரப்பின் முன் கார் பயிருக்குப் பாசனமளிக்க நீர் இருந்தால் மேலே (i), (ii), (iii) இனங்களின் கீழ்க் குறிப்பிட்டுள்ள பகுதிகளுடன், மருதூர் அணைக்கட்டுக் கால்வாய்களின் இடப்பக்கத்திலும் வலது பக்கத்திலும் உள்ள பகுதிகளுக்கு மாற்றி மாற்றி நீர் வழங்கப்படும்.

எனவே, பாபநாசம் நீர்த் தேக்கத்தில் இருப்பில் உள்ள நீரின் அளவு, ஏப்ரல் முதல் ஜூன் வரை மேலும் நீர்த் தேக்கத்திற்கு வருமென எதிர்பார்க்கப்படும் நீரின் அளவு, ஏரிகளில் தேக்கப் பட்டுள்ள நீரின் அளவு ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு ஒவ்வொர் ஆண்டும் முன் கார் பயிரிடுவதற்கான பரப்பு வரையறுக்கப்படுகிறது. இதற்கு மணிமுத்தாறு நீர்த் தேக்கத்திலுள்ள நீர் இருப்பு கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வில்லை.

1972 ஆம் ஆண்டில், அரசு, திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர், தலைமைப் பொறியாளர் (பாசனம்), வருவாய்த் துறை வாரியம் (உணவு உற்பத்தி) ஆகியோரைக் கலந்தாலோசித்து திருநெல்வேலி மாவட்டத்தின் தாமிரவருணி நீர்ப்பாசன அமைப்பின்கீழ் 1381 (1972) ஆம் பசலிக்கு 19,800 ஏக்கரில் முன் கார் சாகுபடி செய்ய அனுமதி அளித்தது. அதன் பின்னர், தலைமைப் பொறியாளர் (பாசனம்), கடம்பா நதியின் 11-வது மதகிலிருந்து பாசனம் பெறும் உழவர்கள், தங்களது ஆயக்கட்டுகளையும் முன் கார் சாகுபடியில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று அடிக்கடி முறையிட்டு வந்தனர் என்று தெரிவித்து மணிமுத்தாறு நீர்த் தேக்கத்தின் சேமிப்பு அளவை 1,000 மி.க. அடி குறைத்துக் கொண்டு 1931 (1972) ஆம் பசலியில் கடம்பா ஏரியின் 11-வது மதகிலிருந்து நீர் பெறுகின்ற 12 ஏரிகளைச் சேர்ந்த 5,762 ஏக்கரில் முன் கார் சாகுபடி செய்ய அனுமதி வழங்கலாம் என்று அவர் பரிவுரை செய்தார். அரசு, இப்பரிவுரையை ஏற்றுக் கொண்டு, அதன்படி உத்தரவுகள் பிறப்பித்தது.

இவ்வாறு, 1381 (1972) ஆம் பசலி ஆண்டில் முன் கார் சாகுபடி செய்ய வேண்டிய பரப்பை அரசு முன்னரே நிர்ணயித்து விட்டது. எனவே, அந்த முன் கார் பயிர்கள் நல்ல விளைச்சல் தருவதற்காக, அவற்றிற்குப் பாசன வசதி அளிக்க வேண்டியது அவசியமாகியது.





ஏப்ரலிலும் மே மாதம் 11 ஆம் தேதி வரையிலும எதிர்பார்த்ததைவிட மிகக் குறைந்த அளவே பாபநாசம் நீர்த் தேக்கத்திற்கு நீர் வந்தது. எனவே, 23-4-72 முதல 11-5—1972 வரையில் மணிமுத்தாறு நீர்த்தேக்கத்திலிருந்து குறைந்த அளவாகிய 379 மி.க. அடி நீர் பெறப்பட்டது. 1972 ஆம் ஆண்டில் தென்மேற்குப் பருவ மழை பொய்த்துவிடவே, குறையான கார் சாகுபடியின் கடைசி காலத்தில் தண்ணீர்ப் பற்றுக்குறை ஏற்பட்டது சேமித்து வைத்திருந்த நீரைக் கொண்டு முறை மாற்று முறையை (Turn system) பின்பற்றியும் விவேகத்துடன் பாசனத்தை முறைப்படுத்தியும் தாமிரவருணி நீர்த் திட்டத்தைச் சேர்ந்த பெரும்பாலான கார் பயிர்கள் பாதுகாக்கப்பட்டன தென்மேற்குப் பருவமழை பொய்த்ததனால்தான் திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம வட்டத்தில் தண்ணீர்ப் பற்றுக்குறை ஏற்பட்டதேயொழிய முன் கார் பயிருக்குத் தண்ணீர் விட்டதனால் அல்ல.

*திரு. ச. சங்குமுத்து தேவர்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அட்வான்ஸ் கார் சாகுபடிக்குத் தண்ணீர் கொடுப்பதுபற்றி விளக்கம் தந்திருக்கிறார்கள் என்றாலும் சென்ற தடவை தண்ணீர் கொடுப்பது ஜூன் மாதத்திற்கு பின்னும் அட்வான்ஸ் கார் என்ற பெயர் நீட்டிக்கப்பட்டதால் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் பெரிதும் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். அட்வான்ஸ் கார் என்பதே மின்சாரத்திற்கு உபயோகப்படுத்தும் தண்ணீர் வீணாகக் கடலில் போய்ச் சேர்ந்து விணாகாமல் இருக்கும்பொருட்டு விவசாயத்திற்கு கீழ்பாசனத்திற்கு கொடுக்கப்பட்டது. ஆயினும் இப்படி ஜூன் மாதத்திற்குப் பிறகும் தண்ணீர் கொடுப்பதால் மேலே உள்ள பாசனமும் பாதிக்கப்படுகிறது; கீழே உள்ள பாசனமும் பாதிக்கப்படுகிறது. வளர்ச்சி மன்றத்திலும் இதுபற்றிப் பலதடவை சொல்லியிருக்கிறோம். அதிகாரிகள் இந்த நிலைமையைத் தவிர்க்கவில்லை என்றால் விவசாயிகள் கோர்ட்டுக்குப் போக வேண்டிய நிலைதான் ஏற்படும் என்று நமது சட்ட மன்ற உறுப்பினர் பத்மநாபன் அவர்கள் கூட வேதனையோடு வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் வற்புறுத்தி பேசியிருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : நீங்கள் கேள்வியாகக் கேளுங்கள். பேசிக்கொண்டே போகக்கூடாது.

**திரு. ச. சங்குமுத்து தேவர்** : ஆகவே, இந்த ஆண்டு 1973 ஏப்ரல்—மே மாதங்களில் தண்ணீர் கொடுக்கும்போது தயவுசெய்து எந்தக் காரணத்தினாலும் ஜூன் 1-ஆம் தேதிக்கு மேல் போகாது குறுகிய கால விதைகளைப் பயிர் செய்யும்படி பார்த்துக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** : என்னுடைய அறிக்கையிலேயே மிக விவரமாகவும், விளக்கமாகவும் தெரிவித்திருக்கிறேன். சட்ட மன்ற உறுப்பினரை விட்டு கோர்ட்டுக்குப் போவோம் என்று சொல்லச் சொல்வதில் பயன் இல்லை. இது பற்றி உழவர் சங்கப் பிரதிநிதிகள், அதிகாரிகள் எல்லோரும் சேர்ந்துதான் முடிவு எடுக்கிறார்கள். உறுப்பினருக்குத் தனிப்பட்ட முறையில் குறை இருந்தால் தனியாக எழுதி அனுப்பினால், அரசாங்கம் அதைப் பரிசீலிக்கும்.

### (ஆ) பாலிடெக்னிக்கில் பயிலும் மாணவர்களது வேலை நிறுத்தமும், உண்ணாநோன்பும் குறித்து.

**திரு. என். டென்னிஸ்** : சட்டப் பேரவை விதி 41-ன் கீழ், தமிழகத்தில் உள்ள பாலிடெக்னிக்கில் பயிலும் மாணவர்கள் தங்கள் பல்வேறு கோரிக்கைகள் குறித்து நடவடிக்கைகள் எடுக்கப்படாத நிலையில் வேலைநிறுத்தமும், உண்ணாநோன்பும் இருப்பதால் ஏற்பட்டுள்ள நிலை பற்றி அவசரப் பொது முக்கியமான காரியத்தை, மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

THIRU K. SUPPU : Sir, Under Rule 41, I wish to call the attention of the Hon. Minister for Education and Local Administration to an urgent matter of public importance viz. :

"the serious situation arising out of the strike by the Polytechnic students numbering about 25,000 following the failure of the Government to concede their demands."

**திரு. ஏ. சுப்பிரமணியம்** : தலைவர் அவர்களே, "தமிழகத்திலுள்ள 35 அரசு பாலிடெக்னிக்குகளில் சுமார் 20,000 மாணவர்கள் 1972 செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் பல கோரிக்கை



களுக்காக 55 நாட்கள் வரையில் வேலை நிறுத்தம் செய்த பின்னர் கோரிக்கைகள் குறித்து அவர்களுக்கும் மாநில டெக்னிகல் கல்வி இயக்குநருக்கும் 1972 அக்டோபர் திங்களில் ஒரு உடன்பாடு ஏற்பட்டது. ஆனால் அவ்வுடன்பாட்டில் ஒப்புக்கொண்டபடி நடவடிக்கைகள் எடுக்கப்படாததால் மேற்படி மாணவர்கள் 12—2—73 முதல் வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர். உண்ணா நோன்பு இருக்கின்றனர். சென்னை, மதுரை, கோவை போன்ற நகரங்களில் மாணவர்கள் பலர் கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டுள்ளனர். இதனால் மாணவர் சமுதாயத்திலும் பெற்றோரிடத்திலும் கொந்தளிப்பு வளர்ந்து வருகிறது". என்கிற அவசர பொது முக்கியம் வாய்ந்த விஷயத்தை நான் கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்**: தலைவர் அவர்களே, பல தொழில் பயிற்சிப் பள்ளிகளான பாலிடெக்னிக் மாணவர்கள் அண்மைக் காலமாகத் தங்கள் கோரிக்கைகளை வற்புறுத்த பள்ளிகளுக்குச் செல்லாமல் கிளர்ச்சி செய்து வருவதையும், அதையொட்டி விரும்பத்தகாத வன்முறைச் செயல்கள் சில நடைபெற்றதையும், இம் மாமன்றத்[illegible] மாணவர்களின் கோரிக்கைகளில் முக்கியமானவை பற்றி [illegible]ரசாங்கத்தின் நிலைமையைத் தெளிவுபடுத்[illegible] நான் விரும்புகின்[illegible]

பல்தொழில் பயிற்சிப் [illegible]ளிகளில் பயின்[illegible]டிப்ளமோ பெற்ற மாணவர்கள், பொ[illegible]யல் பட்டம் (பி.இ[illegible]றுவதற்கு முழு நேரப் பயிற்சிக்கு [illegible] செய்துதர வேண்[illegible] என்பது மாணவர்களின் ஒரு கோரி[illegible] இது பல்கலை[illegible]கங்களால் முடிவு செய்யப்பட வேண்டி[illegible]பிரச்சினை. [illegible]ழில் கல்வி இயக்குநர் பல்கலைக் கழக[illegible] கொண்டு இக்கோரிக்கையைப் பரிசீலிக்கு[illegible]கொண்டுள்ளார். பல்கலைக் கழகங்களும் தங்கள் பல்வேறு நிபுணர் குழுக்களைக் கலந்துகொண்டு, இப் பிரச்னையைப் பல கோணங்களிலிருந்தும் பரிசீலனை செய்து, இதில் முடிவு எடுக்க வேண்டும். இந்த நிலைமை மாணவர்களுக்குத் தெளிவாக பலமுறை விளக்கப்பட்டுள்ளது.

எஸ்.எஸ்.எல்.சி பயிற்சியையோ, தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளிப் பயிற்சியையோ முடித்த பின்பு, பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளில் சேரும் மாணவர்கள் மூன்று ஆண்டுகள் பயின்று

பின்பு டிப்ளமோ பெறுகின்றார்கள். மேலும் 1½ ஆண்டுகள் படித்து விட்டு அவர்கள் பொறியியல் பட்டம் பெற வசதி செய்ய வேண்டும் என்பது கோரிக்கை. பொறியியல் கல்லூரிகளில் சேர்ந்து பொறியியல் பட்டம் பெறுகின்ற மாணவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. பயிற்சியை முடித்த பின்பு ஓராண்டு புகுமுக பயிற்சியையும் முடித்துக் கொண்டு, அதற்குப் பின்பு 5 ஆண்டுகள் பொறியியல் பயிற்சி பெற்ற பின்பே அவர்களுக்குப் பட்டம் வழங்கப்படுகிறது. இது அகில இந்திய தொழிற் கல்விக் குழுவினரால் அனைத்திந்திய அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட நியதியைப்பின்பற்றி ஏற்படுத்தப்பட்ட முடிவு. எஸ்.எஸ்.எல்.சிக்கு பின்பு 6 ஆண்டுகள் பயிற்சியின் பயனாக வழங்கப்படும் இப் பட்டத்தை, 3 ஆண்டு பயிற்சிக்குப் பின் டிப்ளமோ பெறும் மாணவர்களுக்கு, மேலும் 1½ ஆண்டு பயிற்சிக்குப் பின் வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை, ஏற்றுக்கொள்ளத் தக்கதாயில்லை. ஆறு ஆண்டு பயிற்சிக்குப் பின் தாங்கள் பெறும் பட்டத்தை, 4½ ஆண்டு பயிற்சிக்குப் பின் வேறு சில மாணவர்கள் பெறுவதற்கு வழி செய்து தருவதை பொறியியல் பட்டப் பயிற்சி மாணவர்கள் நிச்சயமாக ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். அகில இந்திய தொழில் கல்விக் குழுவும் இதற்கு இசைவளிக்காது. மேலும் பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளில் டிப்ளமோ பயிற்சிக்கு வசதி செய்யப்பட்டது, தொழில் நுட்பத் துறையில் பட்டப் பயிற்சி தேவைப்படாத, நடுமட்டத் திறமைத் தேவைகளை நிறைவு செய்வதற்குத் தான். டிப்ளமோ பயிற்சியும் பட்டப் பயிற்சியும் தனித்தனி அடிப்படையில் வகுக்கப்பட்ட திட்டங்கள். இந்த இரு பயிற்சிகளின் அடிப்படை நோக்கமே வேறுபட்டதாகும். இவற்றையெல்லாம் மனதிற்கொண்டு பல்கலைக் கழகங்களின் முடிவான கருத்தையும், அகில இந்திய தொழிற் கல்விக் குழுவின் ஒப்புதலையும் பெற்ற பின்பு தான் அரசு இந்தக் கோரிக்கை பற்றி ஒரு முடிவு எடுக்க முடியும் என்பது அனைவருக்கும் தெளிவாகும்.

இது மட்டுமல்லாமல், இன்ஸ்டிட்யூசன் ஆஃப் எஞ்சினியேர்ஸ், இந்தியா, என்ற நிபுணர் அமைப்பு நடத்துகின்ற தேர்வுகளில் பிரிவு ஏ. பிரிவு பி என்ற இரு தேர்வுகளில் வெற்றி பெற்றால், பொறியியல் பட்டத்துக்குச் சமமான பட்டத்தைப் பெறுவதற்கும் டிப்ளமோ மாணவர்களுக்கு வசதியுள்ளது என்பதையும் நான்



இங்கு குறிப்பிட விரும்புகிறேன். இதன்படி, நாடு முழுவதும் சுமார் நாற்பதாயிரம் மாணவர்கள் இத்தேர்வுகளை எழுதப் பதிவு செய்துள்ளனர்.

டிப்ளமோ பெற்ற மாணவர்கள் பொறியியல் பட்டம் பெறுவதற்காகப் பகுதி நேர பட்டப் பயிற்சி வகுப்புகள் அண்மையில் திறக்கப்பட்டுள்ளன. டிப்ளமோ பெற்ற பின்பு ஐந்து ஆண்டுகள் பணி அனுபவம் பெற்றவர்களை இந்தப் பயிற்சியில் சேர்த்துக்கொள்ளலாம் என்று உத்தரவு இடப்பட்டுள்ளது. பணி அனுபவ காலத்தை ஐந்து ஆண்டுகளிலிருந்து மூன்று ஆண்டுகளாக குறைக்க வேண்டும் என்பது மாணவர்களின கோரிக்கை. இப்பகுதி நேரப் பயிற்சிக்கு ஏராளமான மனுக்கள் வந்ததையொட்டி, அனுபவம் பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கும்பொருட்டு, ஐந்து ஆண்டு அனுபவ காலம் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இருந்தபோதிலும், இந்த பணி அனுபவ காலத்தை மூன்று ஆண்டுகளாக குறைக்க இப்பொழுது அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

மாணவர்கள் தேர்ச்சியை நிர்ணயிக்கும் முறையில், தேர்வுகளில் பெறும் மதிப்பெண்களுடன், வகுப்புப் பயிற்சியில் அவர்கள் பெறும் தேர்ச்சியை மதிப்பிட்டு வழங்கப்படும் மதிப்பெண்களையும் சேர்த்துக்கொள்ளும் முறை இப்போது இருந்து வருகிறது. இந்த முறையை நீக்கிவிட வேண்டுமென்பது மாணவர்களின் மற்றொரு கோரிக்கை. கல்வித் தரத்தை உயர்த்தவும், மாணவர்கள் ஆண்டு முழுவதும் தொடர்ந்து கல்வி பயில்வதை மதிப்பிட்டு, அவர்கள் திறமையைச் சீராக நிர்ணயிக்கவும், இந்த முறை புகுத்தப்பட்டது. இது போன்ற முறையை பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளிலும், பொறியியல் கல்லூரிகளிலும் மட்டுமல்லாமல், சாதாரண பள்ளிகளிலும் கலைக் கல்லூரிகளிலும் கூட புகுத்த வேண்டுமென்பதுதான் கல்வி நிபுணர்களின் தெரிவித்த கருத்தாகும். ஆண்டு இறுதியில் நடக்கும் ஒரு தேர்வில் மாணவர்கள் பெறும் மதிப்பெண்கள், அவர்களுடைய திறமைக்குப் பொருத்தமான சான்றாகாது என்ற கருத்தில்தான், வகுப்பறைப் பயிற்சியில் அவர்கள் பெறும் தேர்ச்சியையும் மதிப்பிட்டு, மதிப்பெண்கள் வழங்கப்பட்டு இரண்டும் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டுமென்பது, இந்த முறையின் அடிப்படை தேர்வு முறையில்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1973 மார்ச் 6

சீர்திருத்தங்கள் செய்ய வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தி வருகின்ற நிபுணர்கள் அனைவரும் இது போன்ற சீர்திருத்தங்களை ஆதரித்துள்ளனர். இம்முறை மாணவர்கள் நலனுக்கு எவ்விதத்திலும் ஊறு செய்யாது என்பதோடு, உண்மையில் அவர்கள் நலனுக்கு உகந்ததாகும் என்ற நிலைமை மாணவர்களுக்குத் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. நடைமுறையில் ஏதேனும் சிக்கல்கள் எழுந்தால், அவை அனுதாபத்துடன் பரிசீலிக்கப்படும் என்றும் மாணவர்களுக்கு விளக்கிக் கூறப்பட்டுள்ளது.

மாணவர்கள் தேர்வு எழுதுவதற்கு இன்ன குறைந்த அளவு குறிப்பிட்ட நாட்கள் பள்ளிகளுக்கு சென்றிருக்க வேண்டுமென்ற விதி இருக்கிறது. உடல் நலக் குறைவு காரணமாக, மாணவர்கள் போதிய நாட்கள் பள்ளிக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டால், இந்த விதியைத் தளர்த்தி, அவர்கள் தேர்வு எழுத அனுமதிக்கப்பட வேண்டுமென்பது மற்றொரு கோரிக்கை. மாணவர்கள் பள்ளிக்குச் செல்லாமல் இருந்ததற்கு தக்க சான்றுகளுடன் நியாயமான காரணங்கள் இருந்தால், அவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்படும் என்று ஏற்கெனவே ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு விட்டன.

டிப்ளமோ பயிற்சி பெற்றவர்கள் அனைவர்க்கும் வேலை கொடுக்கவேண்டுமென்ற உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டுமென்பது மற்றொரு கோரிக்கை. அரசாங்கம் ஆணைகள் பிறப்பித்து வேலையின்மைச் சிக்கலுக்குத் தீர்வு காண முடியாது என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்வார்கள். நாட்டில் தொழில் வேகமாக வளர்ந்து வருகின்ற இக்கட்டத்தில், வேலைக்கான வாய்ப்புகளும் போதிய அளவு பெருகும் என்று நாம் எதிர்பார்க்கலாம். படித்தவர்களிடை வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க மாநில அரசும் மத்திய அரசும் பல சிறப்புத் திட்டங்களை செயல்படுத்தி வருவதையும் இம் மன்றம் அறியும்.

பட்டதாரி வாக்காளர் தொகுதி என்று தனியாக அமைத்து, அவர்கள் பிரதிநிதிகள் சட்டமன்ற மேலவையில் இடம்பெற வசதி செய்யப்பட்டுள்ளது போல், டிப்ளமோ பெற்றவர்களுக்கும் வாக்காளர் தொகுதி தனியாக அமைத்து, அவர்கள் பிரதிநிதிகளையும் மேலவைக்கு அனுப்ப வசதி செய்யவேண்டுமென்பது



1973 மார்ச் 6] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

மற்றொரு கோரிக்கை. இக்கோரிக்கையைப் பற்றி மாநில அரசு முடிவு செய்வதற்கில்லை. அனைத்திந்திய தேர்தல் கமிஷனும், மத்திய அரசும் தான் யார் யாருக்குப் பிரதிநிதித்துவம் அளிப்பது என்பதை முடிவு செய்ய வேண்டும்.

டிப்ளமோ பெற்றவர்கள் பணியில் அமர்த்தப்படும்போது பட்டம் பெற்றவர்களுக்குச் சமமாக அவர்களுக்கு ஊதியமும் அந்தஸ்தும் தரப்பட வேண்டுமென்பது மற்றொரு கோரிக்கை. பட்டம் பெற்றவர்களுக்கும் டிப்ளமோ பெற்றவர்களுக்குமிடையே ஊதியத்தில் பாகுபாடு இருக்கக்கூடாது என்ற கோரிக்கை ஏற்புடைமை கொண்டதல்ல. டிப்ளமோ பெற்றவர்களுக்கு உரிய ஊதியமும் அந்தஸ்தும் அளிக்கப்பட வேண்டுமென்பதில் அரசாங்கத்துக்கு எப்பொழுதும் நாட்டம் உண்டு.

மேற்சொன்னவற்றிலிருந்து, மாணவர்களின் நியாயமான கோரிக்கைகளை அனுதாபத்துடன் பரிசீலிக்க அரசு தன்னால் இயன்றது அனைத்தையும் செய்துள்ளது என்பது தெளிவாகும். இக்கோரிக்கைகளை வற்புறுத்த மாணவர்கள் பள்ளிகளுக்குச் செல்லாமல் ஆர்ப்பாட்டம் செய்தும், பள்ளிகளுக்குச் செல்ல விரும்பிய மாணவர்களையும், குறிப்பாக மாணவிகளையும் வலுக்கட்டாயமாகத் தடுத்தும், சில பள்ளிகளுக்குள் ஆசிரியர்கள் செல்லவிடாமல் தடுத்தும், கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ளது வருந்தத்தக்கதாகும். கோவையிலும், பொள்ளாச்சியிலும் கிளர்ச்சி செய்த பல்தொழில் பயிற்சிப் பள்ளி மாணவர்கள் சிலர், பஸ்களைக் கொளுத்தியது போன்ற வன்முறைச் செயல்களில் ஈடுபட்டுள்ளதை மாணவர்கள் நலனில் அக்கறை கொண்ட அனைவரும் வன்மையாகக் கண்டிப்பார்கள் என்று நான் நம்புகிறேன். பல பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளில், மாணவர்களின் வன்முறைச் செயல்களின் விளைவாக, பள்ளிச் சொத்துக்கு சேதம் ஏற்பட்டுள்ளது. நிலைமையைச் சமாளிப்பதற்காக, பல்தொழில் பயிற்சி மாணவர்களின் பதட்ட நிலை அடங்கும் வரை பள்ளிகள் சிறிது காலம் மூடப்பட்டிருந்தன. பெரும்பாலான மாணவர்கள் தாங்கள் பள்ளிக்குச் செல்ல விரும்புவதாகத் தெரிவித்ததன் பேரில், பள்ளிகள் இப்பொழுது படிப்படியாகத் திறக்கப்பட்டு, இப்பொழுது சில பள்ளிகள் சுமுகமாக இயங்கி வருகின்றன. இன்னும் சில பள்ளிகள், விரைவில் திறக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

பல்தொழில் பயிற்சி பள்ளியில் பயிலும் ஒவ்வொரு மாணவர்க்காகவும், கல்விச் செலவு ஆண்டுக்கு மூவாயிரத்து ஐந்நூறு ரூபாய் ஆகின்றது. அரசும் சமுதாயமும் இந்த அளவில் முதலீடு செய்து, இந்த வசதியை செய்து தந்திருப்பது, மாணவர்கள் தொழில் நுட்பத் தேர்ச்சி பெற்று, தங்கள் எதிர்காலத்தை வளமாக்கிக் கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான். தேர்வுகள் வெகு விரைவில் நடக்கவிருக்கின்றன. இவற்றையெல்லாம் மனதிற் கொண்டும், நான் கூறியுள்ள விளக்கங்களை ஏற்றுக்கொண்டும், பாலிடெக்னிக் மாணவர்கள் தங்கள் கிளர்ச்சியை நிறுத்திவிட்டு, பள்ளிகளுக்கு மீண்டும் செல்ல வேண்டுமென்று இம் மன்றத்தின் மூலம் நான் வேண்டுகோள்விடுக்க விரும்புகிறேன்.

**திரு. க. சுப்பு:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கத்தில், மாணவர்களுடைய கோரிக்கைகள் எல்லாம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அமுல்படுத்தப் படவில்லையென்று சொல்லியிருக்கிறார்கள். எப்படியிருந்தாலும். அந்த மாணவர்களுடைய பிரதிநிதிகளை அழைத்து மறுபடியும் கல்வி அமைச்சரின் மூலம் பேச்சு வார்த்தை நடத்தவும், சிறையில் இருப்பதாக சொல்கின்ற மாணவர்களை, சரியான, சீரான சூழ்நிலையை உருவாக்க, விடுதலை செய்து, பேச்சு வார்த்தை நடத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** நான் மாணவப் பிரதிநிதிகளை அழைத்து சந்தித்துப் பலமணிநேரம் பேசினேன். கோவைக்குச் சென்ற போதும் நான் பேசினேன், மதுரைக்குச் சென்றபோதும் நான் பேசினேன். நிலைமைகளை நான் விளக்கினேன். விளக்கியதற்குப் பிறகும்– எல்லா மாணவர்களும் இதில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று நான் சொல்லமாட்டேன்—சில மாணவர்கள் தூண்டிய வண்ணமாக, தூண்டுதலாக இருக்கிற காரணத்தால், இந்த நிலைமைகள் ஏற்படுகின்றன.

அது தவிர, தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் மூலமும் பேச்சு வார்த்தை நடத்த ஏற்பாடு செய்திருக்கிறேன். அவர்களுக்கு நிலைமைகள் தெளிவாக விளக்கப்பட்டிருக்கின்றன. ஏற்றுக் கொள்ளப்பட்டு நிறைவேற்றப்படாமல் ஒரு கோரிக்கையும் இல்லை. அவர்கள் நேரடியாக பி.ஈ. தேர்வுக்கு செல்லவேண்டுமென்பது, பல்கலைக் கழகம் முடிவு செய்யவேண்டிய ஒன்று. இந்த கருத்தை





தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் பல்கலைக் கழகத்திற்கு தெரிவித்திருக்கிறார். அவர்கள் அவர்களுடைய குழுவின் மூலமாக அதை முடிவு செய்ய வேண்டும்.

பாலிடெக்னிக் மாணவர்கள் பி.ஈ. தேர்வு எழுத மூன்று வழிகள் இருக்கின்றன. முதல் ஆண்டு படித்த உடனே அவர்கள் பி.இ. படிக்க வழி இருக்கிறது. மூன்று ஆண்டு காலம் படித்த பிறகு ஏ.எம்.ஐ.இ. படிப்பை நேரடியாக பெற வழி இருககிறது. ஐந்து ஆண்டுகால டிப்ளமோவுக்குப் பிறகு அவர்கள் பகுதிநேர படிப்பைப் பெற வாய்ப்பிருக்கிறது. அந்த 5 ஆண்டு காலத்தை 3 ஆண்டு காலமாக குறைக்கவும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இதற்குப் பிறகும் அவர்கள் வேலை நிறுத்தத்திலே, வன்முறைச் செயலிலே ஈடுபட்டிருக்கிறார்கள். சில இடங்களில் நிலைமையை புரிந்து கொண்டிருக்கிறார்கள். 10, 15 பள்ளிகள் திறக்கப்பட்டு நடந்து வருகின்றன. விரைவில் எல்லாப் பள்ளிகளும் திறக்கப்படும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: On a point of order, Sir. I gave you an adjournment motion on the same subject under Rule 42, some days ago . . .

MR. DEPUTY SPEAKER: We must follow some principles, ரூல் 42-ஐப் பற்றியோ, மற்ற பிரிவிலெஜ் பிரச்சினைகள் பற்றியோ இங்கே கேட்கக்கூடாது.

The hon. Member must ask me in my Chamber.

Now Thiru A. Subramaniam may ask his clarification.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பல விஷயங்களை இங்கே அறிவித்தார்கள். இதெல்லாம் வேலை நிறுத்தம் தொடங்குவதற்கு முன்னாலே நடந்ததா? வேலை நிறுத்தம் தொடங்கி 22 நாட்கள் ஆகிவிட்டன. முதலிலே சிறையிலே இருப்பவர்களை விடுதலை செய்து, மாணவர்களை அழைத்துப் பேசி சுமுகமான முடிவு செய்ய இன்னொரு முயற்சியையும் அரசு செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே நான் நடத்திய பேச்சுவார்த்தைகள் எல்லாம் அவர்கள் போராட்டம் நடத்தியபொழுதும் அதன் காரணமாக பள்ளிகள்

முடியபொழுதுதான். அவர்களோடு கோவையிலே பேசினேன். மதுரையிலே பேசினேன். இப்பொழுது நான் இயக்குநர் மூலமாக கருத்துக்களைத் தெரிவித்து இருக்கிறேன். நான் இந்த மன்றத்திலே அளித்த விளக்கங்களை அடிப்படையாகக் கொண்டு—இந்த மாமன்றத்தின் மூலமாக நான் வேண்டுகோள் விடுக்கிறேன், இந்த மாமன்றத்தின் மூலமாக விடுகின்ற வேண்டுகோளைவிட சிறப்புடையது வேறு எதுவும் இருக்காது என்ற அடிப்படையிலே—மாணவர்கள் தொடர்ந்து பள்ளிகளுக்குச் சென்று படிப்பைத் தொடர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் எந்த எந்த வகையிலே இங்கே கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறேனோ அந்த முறையிலே தொடர்ந்து அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

### 4. அமைச்சரின் அறிக்கை.

### கன்னியாகுமரி மாவட்டத்தில் விவசாயத்திற்கு நிலம் அளிப்பது குறித்த வருவாய்த்துறை அமைச்சரது அறிக்கை.

THE HON. THIRU P. U. SHANMUGAM: Sir, in the Transferred Territory, i.e., the Kanyakumari District and Shencottah Taluk of Tirunelveli District, lands were given for cultivation purposes, by the erstwhile Travancore-Cochin Government, under the rules for Kuthakapattom or under the Kandukrishi Thanathu System or under the Kandukrishi Pattom System, as the case may be. In order to grant permanent rights to the holders of these lands, we have now decided that these lands should be assigned to them with reference to the provisions in the B.S.Os. In view of the fact that the lands under Kuthakapattom and the Kandukrishi Thanathu and Kandukrishi Pattom lands in the Transferred Territory have been under the enjoyment of the ryots for a long time under circumstances peculiar to this area, the Government have decided to assign the lands to the present holders in partial relaxation of the conditions and restrictions as applicable elsewhere in the State. The following orders have accordingly been issued in G.O. Ms. No. 947, Revenue, dated 2nd March 1973:

I. Lands held under Kuthakapattom:—

(a) Persons who are in possession of these lands who are eligible for assignment of Government lands, i.e., landless poor persons may be assigned these lands up to 5 acres of dry or 3



acres of wet *free of land value*. Lands in excess of these limits in their possession may be assigned to them on collection of *single market value* provided the following two conditions are satisfied, (i) they had effected very valuable improvements to the lands and (ii) the lands in excess of the limits prescribed cannot be independently assigned to any other landless poor.

(b) Persons who are in possession of these lands who are normally ineligible for assignment of Government lands, i.e., persons who are not landless poor, may be assigned 5 acres of dry land or 3 acres of wet land provided they had effected very valuable improvements to the land. Such assignment will be on collection of *single market value* if their annual income from all sources is less than Rs. 12,000 and on collection of *double market value* if their annual income from all sources is Rs. 12,000 or more.

II. Lands held under Kandukrishi Thanathu and Kandukrishi Pattom—

Government have decided that these lands should be assigned *free of land value* to the holders thereof irrespective of the extent held by them and irrespective of whether or not they are normally eligible for such assignment.

In making these assignments, care will be taken to see that the extent of land for which patta is granted together with any other land the individual concerned may own in the State is not in excess of the ceiling under the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961, as amended.

Encroachments on Government lands will be regularised under the provisions of the Board's Standing Orders applicable in the State.

### 5. 1973-74 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

* திரு. எல். கணேசன்: பெருமதிப்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1973-74 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்து மாண்புமிகு முதல்வர் அவர்களை நான் பாராட்டி நெஞ்சார நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கை பாராட்டுக்குரியது என்பதற்கான காரணங்கள் பலப் பலவாகும். பற்றுக்குறை நிதிநிலை அறிக்கை சமர்ப்பிப்பதுதான் வழக்கமான மரபாக ஆகிவிட்ட இந்தக் காலத்தில் உபரி நிதிநிலை அறிக்கையை நம்முடைய முதல்வர் அவர்கள் சமர்ப்பித்திருப்பது உண்மையிலேயே பாராட்டுக்குரியது ஆகும். வரிக்கு வரி, வரிமேல் வரி, புதிய வரிகள் என்றெல்லாம் போடுகிற மத்திய அரசையும் மற்ற மாநில அரசுகள் சிலவற்றையும் பார்க்கிற நேரத்திலே வரியில்லாமல் ஒரு நிதிநிலை அறிக்கையை நம்முடைய முதல்வர் அவர்கள் சமர்ப்பித்திருப்பதற்கு தமிழக மக்களின் நன்றிக்குரியவர்களாக அவர்கள் இருக்கிறார்கள்.

இந்த நிதிநிலை அறிக்கை சோஷலிஸ சித்தாந்தத்தின் யதார்த்தம் ஆகும். சோஷலிஸ சித்தாந்தம் வெறும் பொருளற்ற அரசியல் முழக்கம் என்ற முறையிலே பலபேர்கள் கையாள்கிற நிலைமையிலே உண்மையான உணர்வோடு, நேர்மையான உணர்வோடு சோஷலிஸ சித்தாந்தங்களை யதார்த்தம் ஆக்குகின்ற முயற்சியிலே நம்முடைய அரசு முயற்சிகளைச் செய்வதை எல்லோரும் பாராட்டுகிறோம். இந்த அரசினுடைய நல்ல திட்டங்கள் நிறைவேற்றப்படுவதை பொதுவுடைமைக் கட்சியில் உள்ள அனுபவமும், முதிர்ச்சியும் உள்ள பெரியவர்கள் ஆதரிக்கிறார்கள், ஆனால் அதே நேரத்திலே அதே இயக்கத்தைச் சேர்ந்த சிலர் தங்கள் அரசியல் செல்வாக்கை இழந்துவிடுவோமா என்ற காரணத்தினால் அவற்றை எதிர்க்கிறார்கள். ஒன்றல்ல, இரண்டல்ல, பல நல்ல திட்டங்களை அரசு நிறைவேற்றியிருக்கிறது.

இந்த அரசு நிறைவேற்றுகிற திட்டங்களானாலும், சட்டங்களானாலும் அவை ஏழை எளிய தொழிலாளர்களுக்கு, விவசாய மக்களுக்கு ஏதாவது நன்மை செய்கிறதா என்று பார்த்துத்தான் நிறைவேற்றப்படுகின்றன.

பேருந்துகளை இந்த அரசு நாட்டுடைமையாக்கியது சோஷலிஸ சித்தாந்தத்தின் அடிப்படை என்பதை எல்லோரும் அறிவார்கள். மின்சாரம் வழங்குகின்ற தனியார் நிறுவனங்களை தேசியமய மாக்கியது இந்த அரசு. மேட்டூர் அலுமினியம் தொழிற்சாலையை தேசிய மயமாகக்கியது இந்த அரசு, நில உச்சவரம்பு அளவினை அரசு குறைத்து இருக்கிறது, அது மட்டுமல்ல, நில உச்சவரம்புச்



சட்டத்திற்குக் கொடுக்கப்பட்ட விதிவிலக்குகளையெல்லாம் ரத்து செய்தது இந்த அரசு. குத்தகைதாரர்களுக்குப் பாதுகாப்பு அளித்தது இந்த அரசு. தஞ்சை மாவட்டத்திலே இருக்கிற விவசாய கூலிகளுக்கு நியாயமான கூலி நிர்ணயம் செய்து தந்தது இந்த அரசு, குடியிருப்புச் சட்டம், பெருமதிப்பிற்குரிய திரு. மணலியார் கூறியதுபோல் இது மிகப் பெரிய சமதர்மத் திட்டம் என்பதை யாரும் மறுக்க முடியாது, அதைச் செய்தது இந்த அரசு, ஏழைகள் பல இலட்சக்கணக்கானவர்களுக்கு நிலப் பட்டா வழங்கியது இந்த அரசு, ஏழைகளுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கியது இந்த அரசு, குடிசை மாற்று வாரியம் அமைத்து ஏழை எளியவர்களுக்கு நல்ல வீடுகளைக் கட்டித் தந்தது இந்த அரசு, பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம் என்ற முறையிலே இந்திய பூபாகத்திலே வேறு எங்கும் இல்லாத சோஷலிஸத் திட்டத்தைக் கொண்டுவந்து ஏழை எளியவர்களுக்கு மறு வாழ்வை அளித்து அவர்களுக்கு ஒளிமயமான எதிர் காலத்தை வழங்கியது இந்த அரசு என்று தான் தமிழ்நாட்டு மக்கள் இந்த அரசைப் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள். நன்றியைத் தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், இங்கே பேசிய ஒரு உறுப்பினர் குறிப்பிட்டார். மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொதுமக்களைச் சந்திக்க அஞ்சுகிறார். முதல்வர் அவர்கள் கழகத் தோழர்களைத் தூண்டி விட்டு தகராறு ஏற்படுத்துகிறார் என்று பட்டுக்கோட்டையிலே நடைபெற்ற நிகழ்ச்சியைச் சுட்டிக்காட்டிப் பேசினார்கள். நேர்மை யான அரசியல்வாதி என்று பெயர் பெற்றவர்கூட இப்பொழுது ஏற்பட்டிருக்கிற அரசியல் மாற்றங்களின் காரணத்தினால் மாறி விடுகிறார் என்பதைப் பார்க்கிறோம். மதிப்பிற்குரிய திரு. ஏ. ஆர். மாரிமுத்து அவர்கள் விட்ட அறிக்கை அதைவிடக் கொடுமையானது ஆகும். திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரை வரவேற்க பல ஆயிரக்கணக்கான தொண்டர்கள் காத்திருக்கிறார்கள். கழகச் செயல் வீரர்கள் கூட்டத்திலே கலந்து கொள்ள கழகத் தலைவர் அவர்கள் வருகிறார்கள். அவர்களுக்குக் கருப்புக் கொடி காட்ட வேண்டுமென்று சொல்லியவர்கள் சட்டத்திற்குட்பட்டு ஜனநாயக வரம்பிற்குட்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அழைத்துப் பேசி மாவட்ட காவல் துறை அதிகாரி அழைத்துப் பேசிய பிறகு குறிப்பிட்ட இடத்திலிருந்து

காட்டுகிறோம் என்று ஒப்புக்கொண்டார்கள். ஆனால் அந்த ஜனநாயக வரம்பை மீறி அவர்கள்தான் கலகத்தை விளைவிக்க முனைந்தார்கள். சாலைகளிலே யாருமே செல்லமுடியாத நிலைமையை உருவாக்கினார்கள். எதிலும் ஈடுபடாத பொதுமக்கள் துன்புறுத்தப்படுகிற வேலையைச் செய்தவர்கள் அவர்கள்தான்.

ஏறத்தாழ 50,000 தொண்டர்கள். வடபுறத்திலேயிருந்து சென்ற தோழர்கள் வடபுறத்திலும், தென்புறத்திலேயிருந்து சென்ற தோழர்கள் தென்புறத்திலேயும் நிறுத்தப்பட்டிருந்தார்கள். இடையில் கறுப்புக்கொடி காட்ட வந்த கலகக்காரர்கள் கூடியிருந்தார்கள். நேற்று முன்தினம் என்று கருதுகிறேன், இங்கே பேசிய உறுப்பினரொருவர் இதில் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் மிகப்பெரிய அராஜகத்தில் ஈடுபட்டதாகப் பேசினார்கள். அவர்களுக்கே தெரியும். நாங்கள் 50,000 பேர்கள் கூடியிருந்தோம். அது, அறிக்கைவிட்ட பட்டுக்கோட்டை சட்ட மன்ற உறுப்பினருக்கும் நன்றாகத் தெரியும். அவர்கள் 5,000 பேர்கள்தான் இருந்தார்கள். நாங்கள் இருபுறமும் சூழ்ந்திருந்தோம். நாங்கள் நினைத்திருந்தால் என்ன நடந்திருக்கும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அவர்கள் இங்கே பேசிக்கொண்டிருக்கும் நிலையே கூட இருந்திருக்காது.

இவ்வளவுக்கும் பிறகும் கட்டுப்பாட்டோடு அந்தத் தோழர்கள் இருந்தார்கள் என்றால் அதற்கு மிகப்பெரிய காரணம் ஒன்றிருக்கிறது. நாங்கள் அவர்களை அடித்தாலும் அல்லது அவர்கள் எங்களை அடித்தாலும் அங்கே சிந்தும் இரத்தம் தமிழினத்தின் இரத்தம் அந்த இரத்தம் வேறு இன இரத்தமாக இருக்க முடியாது. பாதிக்கப்படும் மக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அல்லது எதிர்த் தரப்பிலே இருப்பவர்களாக இருந்தாலும் அவர்கள் தமிழக மக்களே தவிர வேற்று மாநில மக்கள் அல்ல என்பதைத் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் உணர்ந்து அமைதியாக இருந்தார்கள்.

அதற்கு இன்னொரு காரணமும் உண்டு. அவர்கள் விரித்த வலையில் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் விழுவதற்குத் தயாராக இல்லை. அங்கே இரண்டுபேர்களுக்கும் இடையே



சண்டை நடக்கும், அதனால் துப்பாக்கிச் சூடு நடைபெறும், ஏதாவது பிணங்கள் விழும், அந்தப் பிணங்களை எடுத்து வைத்துக் கொண்டு, பார் பார், திராவிட முன்னேற்றக் கழக அரசின் கொடுமையைப் பார் என்று சொல்லலாம் என்று திட்டமிட்டுக் கலகம் விளைவித்தார்கள்.

எனவேதான், திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் எவ்வளவுதான் ஆத்திரமூட்டப்பட்டாலும், உணர்ச்சி தூண்டி விடப்பட்டாலும், எங்களுடைய மனத்தைப் புண்படுத்தி விட்டாலும் நாங்கள் அமைதி காத்தோம்.

அதுமட்டுமல்லாமல், அவர்கள் வழி மறித்திருக்கின்ற சாலைகளிலே லாரிகள் செல்ல வேண்டாமென்பதற்காக, வடபுறத்திலேயிருந்து வந்த லாரிகளைத் திருப்பி குறுக்கு மார்க்கமாகச் சென்ற பொழுதுகூட இங்கேயிருந்த சாலையை மறித்த அவர்கள் மீண்டும் ஓடி வந்து எங்களை மறித்தார்கள். இவர்கள் கொடி பிடிக்க வேண்டிய இடம் முக்கிய சாலை. அங்கே மறித்துக்கொண்டிருக்கிறார்கள், எனவே அங்கே சென்றால் கலகம் ஏற்படும் என்று நாங்கள் ஒதுங்கிவந்தாலும் அப்படி வந்தவர்களை மீண்டும் வழி மறித்துத் தாக்கியவர்கள் அவர்களே அல்லாமல் நாங்கள் அல்ல. என்ன காரணமோ தெரியவில்லை, அந்த நிலைமைகளையெல்லாம் மாற்றி அறிக்கை விட்டிருக்கிறார்கள்.

இன்னொன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். விலைவாசிகளைப் பொறுத்தவரையில் இங்கே பேசுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள், நிரம்பப் படித்தவர்கள்கூடப் பேசுகிறார்கள். இன்னும் அதில் வேடிக்கை என்னவென்றால், அவர்கள் அதிகம் படித்தவர்கள் என்ற நம்பிக்கையோடுகூடப் பேசுகிறார்கள். விலைவாசி ஏற்றத்திற்கு மாநில அரசு எவ்வளவு பொறுப்பாக இருக்க முடியும்? விலைவாசியேற்றத்தின் அடிப்படைக் காரணங்களில் ஒன்று பற்றாக்குறை நிதிநிலை அறிக்கையாகும்.

Deficit financing and inflationary policies are the main causes for rising prices over which the State Government have no role whatsoever. எனவே, நிச்சயமாகத் தெரியும், இங்கே பேசுபவர்களுக்குக்கூடத் தெரியும், பற்றாக்குறை பட்ஜெட் போடுவது ஆண்டுதோறும் மத்திய அரசுதான்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார், அன்றைக்கு கலெக்டர் ஆபீஸ்களின் முன்னால் இங்கேயிருந்த காங்கிரஸ் அரசாங்கத்தை எதிர்த்து மறியல் செய்தார்களே, அன்றைக்கு மாநில அரசுக்கு பொறுப்பு இல்லை என்று தெரியாதா ?

**திரு. எல். கணேசன் :** மத்திய அரசு பற்றுக்குறை நிதிநிலை அறிக்கையை மட்டும் சமர்ப்பிக்கவில்லை. அந்தப் பற்றுக்குறையை ஈடுகட்டுவதற்கு நோட்டு அடிக்கிறது. பொருள் உற்பத்தியாகாமல் நோட்டு மட்டும் அச்சடிக்கப்படும்பொழுது விலைவாசி ஏறத்தான் செய்யும் என்பது இங்கே இருக்கும் உறுப்பினர்களுக்கும் தெரியும். நோட்டடிப்பதிலே நமக்குத் தொடர்பில்லை பற்றுக்குறை நிதி நிலை அறிக்கையை அவர்கள்தான் அதிகமாக சமர்ப்பிக்கிறார்கள்.

ஆனால், ஒட்டுமொத்தமாக விலைவாசி ஏறுகிறது என்று மாநில அரசைக் குற்றம் சாட்டுகிறார்கள். அவர்கள் சாட்டவேண்டிய குற்றச்சாட்டு மத்திய அரசை நோக்கியிருக்க வேண்டும். விலைவாசி ஏற்றத்திற்கு அடிப்படையான காரணம் மத்திய அரசின் செயல்களே என்பது எல்லோருக்கும் தெரியும். அது தெரிந்தும் வேண்டுமென்றே இட்டுக்கட்டிப் பேசுகிறார்கள். தொழில் வளர்ச்சி, தொழில் உற்பத்திப் பெருகாமல் இருப்பது இன்னொரு காரணம். இதில்கூட மாநில அரசுக்கு எவ்வளவு பங்கிருக்கிறது? மாநில அரசு தொழில் தொடங்கும் உரிமையை கூட மத்திய அரசிடம் கோரிப்பெற வேண்டும்.

ஆகவே, நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புவதெல்லாம் இந்த நிதிநிலை அறிக்கையை மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையோடு ஒப்பிட்டுப்பார்க்கும்பொழுது தெளிவாகத் தெரியும், தமிழகத்தில் இன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் நிதிநிலை அறிக்கை எல்லா வகையிலுமே பாராட்டுதற்குரியது. எவ்வளவு தான் அரசியல் மாச்சர்யங்கள் கொண்டிருந்தாலும், கருத்து வேறுபாடு இருந்தாலும் நல்லவைகளை ஆதரிக்க வேண்டுமென்ற கருத்துக்கொண்டவர்கள் இதை நிச்சயமாக ஆதரிப்பார்கள் என்று கருதி விடை பெறுகிறேன், நன்றி.

**திரு. எ. சுவாமிதாஸ் :** தலைவரவர்களே, 1973-74 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களை நான் கூறுவதற்கு முற்படுகிறேன்.



இந்த நிதிநிலை அறிக்கையைப் படித்துப் பார்க்கும்பொழுது, 1966-67-இல் அன்றைக்கிருந்த அரசுக்குக் கிடைத்த வருவாயைவிட இன்றைக்கு அதைவிட ஒருபங்கு வருவாய் பெருகியிருப்பதைப் பார்க்கிறோம். அப்படிப்பெருகியிருக்கும் காரணத்தால், இது மிச்ச பட்ஜெட்டாகத் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. அன்றைக்கிருந்த வருவாயைவிட இன்றைக்கு ஏறத்தாழ 271 கோடி ரூபாய் வருவாய் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. அன்றைக்கு 194 கோடி ரூபாய் வருவாயாக இருந்தது. 6 ஆண்டுகளுக்குப்பிறகு இப்பொழுது 271 கோடி ரூபாய் வருவாய் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. இன்றைய வருவாய்க் கணக்கில் 465 கோடிக்கு வருவாய்க் கணக்குக் கொடுத்திருக்கிறார்கள். எப்படி வருவாய் அதிகரிக்கப்பட்டாலும், இது மக்களுக்குச் செலவழிக்கும்பொழுது எந்த அளவிற்குப் பயன்படுகிறது, பயன்படுத்தப்பட்டுக்கொண்டு இருக்கிறது, அதனால் நாட்டின் முன்னேற்றம் என்ன என்பதைப் பற்றி நாம் சிந்திப்பதற்குக் கடமைப்பட்டிருக்கிறோம்.

மக்கள்மீது வரிகளைப் போட்டிருக்கிறோம், கள்ளுக்கடை, சாராயக் கடைகளைத் திறந்து அதனால் வருவாயைப் பெருக்கியிருக்கிறோம். இதனால் நாட்டு மக்களிடத்திலே, அரசு பெருமையாகச் சொல்லிக்கொள்கின்ற சமதர்ம சமுதாயம் அமைக்கப்பட்டிருக்கிறதா ? அந்தச் சமதர்ம சமுதாயத்தை எதிர்நோக்கி முதற்படியிலே நின்று கொண்டிருக்கிறோமா என்பதைச் சிந்தித்துப் பார்க்கும்பொழுது இன்றைய நிலை என்ன ? மக்களின் வருவாயைப் பெருக்கியிருக்கிறோம் என்றாலும் விலைவாசி ஏற்றத்தின் காரணமாக சாமான்களை வாங்கும் சக்தி குறைந்திருக்கிறது என்பதை மனத்தில் கொள்ள வேண்டும். வாங்கும் சக்தி குறையும்பொழுது மக்கள் மத்தியிலே நிச்சயமாக வறுமை தாண்டவமாடுகிறது. ஆகவே, நாம் எவ்வளவுதான் பட்ஜெட்டைப் பெருக்கினாலும், எவ்வளவுதான் திட்டங்களைத் தீட்டினாலும்கூட வாங்கும் சக்தியை நாம் குறைத்துவிட்டு, வாங்கும் பொருள்களின் விலை ஏறிக்கொண்டே போகிற திட்டத்தின்மூலம் இன்றைக்கு ஓரளவு நாட்டிலே வறுமையைப் புகுத்தியிருக்கிறோம் என்பதை மறுக்க முடியாது.

இன்றைக்கு வாங்கும் சக்தி குறைந்திருக்கிறது. விவசாயிகள் வாங்க முடியவில்லை என்று பேசுகிறார்கள். தொழிலாளர்கள் தமக்கு வேண்டிய பண்டங்களின் விலை ஏறிவிட்டது என்கிறார்கள்.

அரசு ஊழியர்கள்கூட தங்களுக்குக் கொடுத்திருக்கின்ற ஊதியம் போதவில்லை, பண்டங்களின் விலை ஏறிவிட்டது என்று சொல்கிறார்கள். எனவே, அடிப்படையில் என்ன செய்திருக்க வேண்டுமென்றால் பண்டங்களின் விலையைக் குறைப்பதற்கு ஒரு பட்ஜெட்டைத் தயார் செய்திருக்கவேண்டும். அப்படிச் செய்திருந்தால்தான் மக்களுக்கு, எல்லாம் தரப்பு மக்களுக்கும் நன்மை உடையதாக இருந்திருக்கும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

முன்னால் பேசிய நண்பரவர்கள் குறிப்பிட்டார்கள், விலைவாசி உயர்விற்கு மத்திய அரசுதான் காரணம் என்று சொன்னார்கள். அதை ஒப்புக்கொள்ள முடியாது. மாநில அரசுக்கு இருக்கின்ற பொறுப்பையும் தட்டிக்கழிக்க முடியாது. மத்திய அரசுக்கு எந்த அளவிற்குப் பொறுப்பு இருக்கிறதோ அந்த அளவிற்கு மாநில அரசுக்கும் பொறுப்பு உண்டு. 1966-க்கு முன் இன்றைக்கு ஆளுங்கட்சியிலே இருப்பவர்கள் எதிர் வரிசையிலே இருந்தார்கள். நானும் அப்பொழுது எதிர்க்கட்சி வரிசையிலே தான் இருந்தேன் அப்பொழுது 194 கோடி ரூபாய் வருவாய் கிடைக்கின்ற அளவில் அன்றைக்குப் போட்ட வரிகளை நாம் கண்டித்தோம். ஜனவரி, பிப்ரவரி தவிர மற்ற எல்லா வரிகளையும் போட்டு, ஜனங்களைக் கசக்கிப் பிழிந்த இந்த அரசு இனி இருக்கக்கூடாது என்று பேசினார்கள். அன்றைக்கிருந்த விலைவாசியைக் கண்டித்துப் பேசினார்கள். இட்லியைக் கூடக் கொண்டு வந்து காண்பித்தார்கள். இன்றைக்கு நீங்கள் ஆளும் வரிசைக்கு வந்துவிட்டீர்கள். இப்பொழுது நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அப்படிச் சிந்தித்து நடவடிக்கை எடுக்கத் தவறினால் அன்றைக்கிருந்த அரசாங்கத்திற்கு ஏற்பட்ட கதிதான் இந்த அரசுக்கு வரும் என்பதை நினைவுபடுத்த ஆசைப்படுகிறேன்

மு.ப.
11-00 THE HON. THIRU Si. Pa. ADITANAR: Sir, on a point of clarification. As regards price level, we must clearly understand the economic principles and we could have read it in the ordinary text-books of economics. Supposing the price level is X. X is equal to money supply divided by production. Therefore, the price level, apart from the price of individual articles, depends upon the total money supply divided by total production. Now the created money supply is over Rs. 5,000 crores. If the money supply is reduced, the price will go down.





திரு. எ. சுவாமிதாஸ்: அமைச்சர் அவர்கள் ஒரு பொருளாதாரத் தத்துவத்தைச் சொன்னார்கள். எங்களுக்கு வேண்டியதெல்லாம் தத்துவங்கள் அல்ல. நடைமுறை.

நடைமுறையில் கையில் காசு எடுத்துக் கொண்டு அரிசி வாங்கப் போகிறான் என்றால் அவனுக்கு தேவையான அரிசி அந்தக் காசுக்குக் கிடைக்கிறதா; கடையில் போய் காப்பி குடிக்கும் போது மலிவாகக் கிடைக்கிறதா; வாங்கும் சக்தி இருக்கிறதா என்பதுதான். தத்துவத்தைப் பற்றிப் பேச நான் முன்வரவில்லை. இவ்வளவு தூரம் பட்ஜெட் தயாரித்திருப்பதில் மக்களுக்கு என்ன வசதி ஏற்பட்டிருக்கிறது, வாய்ப்பு பெருகி இருக்கிறதா, சமதர்ம சமுதாயத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறார்களா என்று பார்க்க வேண்டும்.

அரசாங்க நிர்வாகம் எப்படி நடந்து கொண்டிருக்கிறது. அரசாங்கத்திற்கும் பொது மக்களுக்கும் எப்படி தொடர்பு இருக்கிறது என்று பார்த்தால் இன்றைக்கு எதற்கெடுத்தாலும் சிபாரிசு தேவையாக இருக்கிறது. ஒரு ஃபைலை மூவ் பண்ண எம்.எல்.ஏ.க்களைப் பிடிக்கலாமா, எம்.எல்.சி.க்களைப் பிடிக்கலாமா, ஆளும் கட்சியில் இருப்பவர்களைப் பிடிக்கலாமா, எதிர்க்கட்சியில் இருப்பவர்களைப் பிடிக்கலாமா என்ற நிலைமையில் நிர்வாகம் போய்க் கொண்டிருக்கிறது.

பொது மக்கள் அரசாங்க அதிகாரிகளையும், எம்.எல்.ஏ.க்களையும் தங்களுடைய எஜமானர்கள் என்று எண்ணும் நிலைமை இருக்கிறது. அதுவா சமதர்மத் தத்துவம்? பொது மக்கள்தான் நாட்டின் மன்னர்கள்; நாமெல்லாம் ஊழியர்கள். அந்த நிலை இன்று இருந்து கொண்டிருக்கிறதா? இதைக் காங்கிரஸ் அரசு செய்யவில்லையா என்று கேட்கலாம். இப்போது அது அதிகமாக இருக்கிறது. செக்ரடேரியட்டில் ஒரே கூட்டம். ஒவ்வொரு எம்.எல்.ஏ. பின்னாலும் 50 பேர் தொடர்ந்து போய்க் கொண்டே இருக்கிறார்கள். இது எதைக் காட்டுகிறது? நம்முடைய அரசாங்க நிர்வாகம் போய்க் கொண்டிருக்கும் தவறான பாதையைத் தான் காட்டுகிறதே தவிர, நல்ல முறையில் இந்த அரசு செயல்படவில்லை என்பதைக் காட்டுகிறதே தவிர, வேறல்ல.

காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் இல்லையா என்று கேட்பதெல்லாம் பரிகாரம் ஆகாது. அதே தவறை நீங்களும் செய்யவேண்டுமென்பது சரியல்ல. கேரளத்தில் இல்லையா, ஆந்திரத்தில் இல்லையா என்று

சொல்லிக் கொண்டிருப்பதற்கு இங்கு ஒரு அரசாங்கம் தேவையில்லை. பல அரசாங்கங்களில் தவறுகள் இருக்கலாம். அதைச் சுட்டிக்காட்டித் தப்பித்துக் கொள்ள முற்படக் கூடாது. இங்கே சீர்திருத்தம் காட்ட வேண்டும். அப்படிக் காட்டினால்தான் இங்கு அரசு நல்ல முறையில் நிர்வாகத்தை நடத்தி வருகிறது என்பது பொதுமக்களுக்குப் புலப்படும்.

இன்று கூட்டுறவுத் துறையை எடுத்துக் கொள்ளுங்கள். அதனிடம் எல்லாவற்றையும் கொடுத்து விட வேண்டுமென்று முயற்சி செய்கிறோம். அரிசி விற்பனை, சர்க்கரை விற்பனை, உர விற்பனை எல்லாவற்றையும் கூட்டுறவுத் துறைக்குக் கொடுக்கக் கூடாது என்பது என்னுடைய அனுபவத்தில் கூறுகின்ற கருத்தாகும். தனியார் துறைக்கும் கொடுக்கக்கூடாது. அரிசி, சீனி, உரம் போன்றவற்றை விற்பனை செய்ய வேண்டுமென்றால் அரசே நேரடியாகக் கடைகளைத் திறக்க வேண்டும்.

திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன் : கூட்டுறவுத் துறைக்கும் கொடுக்கக் கூடாது ; தனியோருக்கும் கொடுக்கக் கூடாது ; பின் யாருக்குக் கொடுத்து மக்களுக்கு விநியோகிப்பது ?

திரு. எ. சுவாமிதாஸ் : அதைத்தான் சொன்னேன். அரசாங்கமே நேரடியாகக் கடைகளைத் திறந்து தங்கள் ஊழியர்கள் மூலம் பங்கீடு செய்ய வேண்டும். நான் கூட கூட்டுறவுத் துறையில் தலைவராக இருந்திருக்கிறேன். அதிலுள்ள சிக்கல்கள் பல. இப்போது ஸ்மால் சேவிங்சுக்கு பணம் திரட்ட வேண்டும். கண்ணொளி வழங்கும் திட்டத்திற்குப் பணம் திரட்ட வேண்டும் அதற்காக அரசாங்க அதிகாரிகளை முடுக்கி விடுகிறோம். அவர்கள் லைசென்ஸ் பெற்ற தனியார் கடைக்காரர்களை நெருக்குகிறார்கள். ஆயிரம் கொடு, 500 ரூபாய் கொடு என்று நிர்ப்பந்திக்கிறார்கள். கூட்டுறவுத் தலைவரிடத்திலும் கேட்கிறார்கள். அரசு மூலம் வியாபாரத்தை ஏற்றிருக்கிற கூட்டுறவுத் துறையைச் சார்ந்த தலைவர்களைக் கேட்கும்போது அவர்கள் சொசைடி பணத்தை எடுத்து இதற்கெல்லாம் கொடுக்க முடியாது. தங்கள் கையிலிருந்து 500 ரூபாய் தொலையட்டும் என்று கொடுத்து விடுகிறார்கள். அவர்கள் கையிலிருந்து கொடுக்கின்ற காரணத்தால் அவர்கள் பிளாக் மார்க்கட் செய்ய தூண்டப்படுகிறார்கள். அதே போல் தனியார் துறையினரும் பிளாக் மார்க்கெட்டுக்குத் தூண்டப்



படுகிறார்கள். ஆகவே, நம்முடைய அமைப்பு முறையில், நிர்வாக முறையில் சிக்கல்கள் காரணமாக பிளாக் மார்க்கெட்டுக்கு உற்சாகப் படுத்துகிறோம், தூண்டி விடுகிறோம். அது மாற்றப்பட வேண்டுமென்று சொன்னால் அரசே நேரடியாக பொது மக்களுக்கு இவற்றை விநியோகிக்க வேண்டும். அதற்காக அரசாங்கமே நேரடியாகக் கடைகளைத் திறந்தால்தான் சரிவரச் செய்ய முடியும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, எங்கள் மாவட்டப் பிரச்சினைகளைப் பற்றிச் சொல்லுவது நலமாக இருக்குமென்று கருதுகிறேன். 1956-க்கு முன்னால் பத்தாண்டுக் காலம் பெரிய பெரிய போராட்டங்களை நடத்தி, பலர் உயிரிழந்து, ஜெயிலுக்குப் போய், அடிதடி பட்டு தாய்த் தமிழகத்தோடு சேர்ந்தோம். தாய்த் தமிழகத்தோடு சேர்ந்தால் நமது முன்னேற்றம் இன்னும் கூடுதலாக இருக்கும், வேலையில்லாத் திண்டாட்டம் நீங்கும், எல்லோருக்கும் வேலை வாய்ப்பு கிடைக்கும் என்ற நல்லெண்ணத்தோடு வந்தோம். வந்த பிறகு இன்று வரை பார்த்தால் எங்களைக் காங்கிரஸ் அரசாங்கமும் கவனிக்கத் தவறி விட்டது என்பதைச் சொல்லத்தான் வேண்டும் ; திராவிட முன்னேற்றக் கழக அரசும் கடந்த ஆறு ஏழு ஆண்டுகளாக எங்களைக் கவனிக்கவில்லை, நியாயம் கிடைக்கவில்லை பல்வேறு துறைகளிலும் நாங்கள் பின்தங்கியிருக்கிறோம்.

தொழிற்துறையை எடுத்துக் கொண்டால் ஜெனரல் பர்ப்பஸ் ஒர்க்ஷாப் ஒன்று காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்டது. அதையாவது விட்டு வைக்கக்கூடாதா ? அதையும் மூடி விட்டார்கள். அதை மூடிய பெருமை இந்த அரசுக்கு உண்டு. ஒரு சா-மில், 120 பேர் வேலை செய்து வந்தார்கள். அதையும் நிறுத்திவிட்டார்கள். இருந்ததை எடுத்துக் கொள்ளுகிறார்கள், புதிதாக ஒன்றும் வரவில்லை.

அங்கு ஒரு ரப்பர் பாக்டரி வந்துவிடும் என்று நீண்ட காலமாக எதிர்பார்த்துக் கொண்டிருந்தும் அது வராமல் இன்னொரு மாவட்டத்திற்கு இராமநாதபுரம் மாவட்டத்திற்குக் கொண்டு போகப்பட்டு விட்டதாகக் கேள்விப்படுகிறோம். இராமநாதபுரத்தில் எந்தப் பகுதியிலும் ரப்பர் உற்பத்தி செய்வதாகத் தெரியவில்லை. எந்தடிக் ரப்பர் உற்பத்தி செய்கிறார்களோ என்னவோ தெரியாது. கேரளாவையும், தமிழகத்தில் கன்னியாகுமரியையும் எடுத்துக் கொண்டால் கன்னியாகுமரியில் உற்பத்தியாகும் ரப்பர் தரம்தான் உயர்ந்தது. அங்கு [illegible]

ரப்பர் உற்பத்தியாகிறது. அரசாங்க ரப்பர் தோட்டமே 30,000 ஏக்கருக்கு மேல் இருக்கிறது. அங்கு ஒரு ரப்பர் தொழிற்சாலை ஏற்படுத்த வேண்டுமென்று நாங்கள் யாரிடம் போய்ச் சொல்லுவது? இந்த அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடக்கக் கூடாது. இரு கண்களில் ஒரு கண்ணுக்குச் சுண்ணாம்பும், ஒரு கண்ணுக்கு வெண்ணெய்யும் தடவுகிறது. எங்களுக்குக் கிடைக்க வேண்டியதைக் கொடுங்கள் என்றுதான் கேட்கிறோம்.

**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி:** ரப்பர் பாக்டரி இராமநாதபுரத்தில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். வேண்டுமென்றால் இன்னொரு ரப்பர் பாக்டரி தங்களுக்கு வேண்டுமென்று கேட்கலாம். இராமநாதபுரம் பின்தங்கிய மாவட்டம். தொழிற்சாலைகள் எதுவும் கிடையாது. ஒன்றிரண்டு கொண்டு வந்தால்கூட அதைப் பார்த்து பொறாமைப் படுவது சரியல்ல.

**திரு. எ. சுவாமிதாஸ்:** இராமநாதபுரம் மாவட்டம் பின்தங்கிய மாவட்டம் என்பதில் சந்தேகம் இல்லை. நீங்கள் என்ன வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்கள், அதில் ஆட்சேபணை இல்லை. கன்னியாகுமரியில் ரப்பர் உற்பத்தியாகிறது. ரப்பர் தொழிற்சாலைக்கு வாய்ப்பு இருக்கிறது. வேறு என்ன தொழில் அங்கு இருக்கிறது? கன்னியாகுமரி தொழில் வளர்ச்சியில் பிற்போக்காக இருக்கிறது. நான் சவால் விட்டுக் கேட்கிறேன். வேறு எந்தத் தொழிலை உடனடியாக அங்கு ஆரம்பிக்க முடியும்?

படித்தவர்கள் வேலையில்லாமல் நிறையப் பேர் இருக்கிறார்கள். இந்தியாவில் ஆலப்புழைக்கு அடுத்தபடியாக கன்னியாகுமரியில் தான் படித்தவர்கள் எண்ணிக்கை அதிகம் என்று சென்ஸஸ் கணக்கு குறிப்பிடுகிறது. ஆனால் அவர்களுக்கெல்லாம் வேலை கிடைக்க முடியாத நிலை இருக்கிறது. உள்ளூரில்தான் வேலை இல்லை, சென்னைக்கு வந்து போக்குவரத்து இலாகாவில் கண்டக்டர் வேலையாவது கிடைக்காதா என்று படித்தவர்கள் வருகிறார்கள். இங்காவது கிடைக்கிறதா என்றால் அவர்களை மலையாளிகள் என்று நினைத்துக் கொண்டு அங்கிருந்து வரக் கூடியவர்களைத் துரத்திக் கொண்டிருக்கிறார்கள்.





**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிற கருத்து சரியானதல்ல. இங்கே என்ன குறை இருக்கிறது என்று சொன்னால் நிறையப் பேர்களை, கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் நிறையப் பேர்களுக்கு போக்குவரத்துத் துறையில் வேலை கொடுத்து இருக்கிறார்களே என்பதுதான். இருந்தாலும்கூட கடந்த ஆண்டு அங்கு நூறு பேர்கள் அளவிற்கு கண்டக்டர்கள் பணிக்கு தேர்வு செய்யப்பட்டபோது அங்கு வேலை காலி இல்லாததால் இதர இடங்களில் அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே முடிந்தவரையில் செய்கிறோம். ஆனால் அவ்வளவையும் அங்கேயேதான் செய்ய வேண்டுமென்றால், இதர மாவட்டங்களையும் புறக்கணித்துவிட முடியாத சூழ்நிலை அரசாங்கத்திற்கு இருக்கிறது அல்லவா?

**திரு. எ. சுவாமிதாஸ்:** அதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரவேண்டும் என்ற காரணத்திற்காகத் தான் நான் குறிப்பிட்டேன். ஏனெனில் அங்கு படித்தவர்கள் அதிகம். வேறு தொழில்கள் செய்ய அங்கு வாய்ப்பில்லை. அது பரந்த பகுதியும் அல்ல. குறுகிய பகுதி அது. கன்னியாகுமரி மாவட்டத்தில் வேறு எந்தத் தொழிலும் செய்ய வாய்ப்பில்லை. படிப்புதான் முக்கியமாக இருக்கிறது ஆகவேதான் அதைச் சுட்டிக் காட்ட விழைந்தேன.

அடுத்தபடியாக, போக்குவரத்து இலாகாவில் பஸ் பாடிகள் கட்டுவதற்கான யூனிட்கள் தமிழ்நாட்டில் இங்கு குரோம்பேட்டையில் ஒன்று இருக்கிறது, அடுத்தபடியாக நாகர்கோவிலில் ஒன்று இருக்கிறது. பஸ் பாடி கட்டுவதில் குரோம்பேட்டையில் கட்டுகிற பாடிக்கு எவ்வளவு செலவாகிறதோ அதை விட ஐயாயிரம் ரூபாய் குறைந்த செலவில் கன்னியாகுமரியில் பாடி கட்டுகிறார்கள் அங்குள்ள தொழிலாளர்கள். அப்படியிருக்க இன்று அங்குள்ள தொழிலாளர்களுக்கு வேலை இல்லை. அங்குள்ள நிரந்தரமான ஊழியர்களுக்கு அரசாங்கத்திலிருந்து சும்மா சம்பளம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை கொடுப்பதற்கு, பாடிகள் கட்டுவதற்கு சாஸிஸ் அனுப்புவதில்லை. இதை அரசாங்கம் கவனிக்க வேண்டும். ஒரு வண்டிக்கு ஐயாயிரம் ரூபாய் லாபம் என்றால் நூறு வண்டிகளுக்கு எவ்வளவு லாபம் கிடைக்கும் என்பதை கணக்கிட்டுப் பாருங்கள். அங்குள்ள

தொழிலாளர்களுக்கு ஊக்கத்தொகைக் கொடுப்பதற்குப் பதிலாக அந்த வொர்க்ஷாப்பையே நிறுத்திவிடுவார்களோ என்ற ஐயப்பாடு ஏற்படுகிறது. இரண்டை நிறுத்தியாகிவிட்டது. மூன்றாவதும் அப்படி ஆகக்கூடாது. எனவே அங்குள்ள அந்தத் தொழிலாளர்களுக்கு தகுந்த முறையில் வேலை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன.

பின்னர், மின்சாரம், எலெக்ட்ரிஸிட்டி என்று சொன்னால் அந்தச் சொல்லிலேயே ஸிட்டி, எலெக்ட்ரிக் கரன்ட் என்ற இரண்டும் அடங்கியிருக்கிறது. ஸிட்டிக்கு மட்டும்தான் எலக்ட்ரிக் கரண்டா? கிராமங்களுக்கு அது கிடைக்க வேண்டாமா? கிராமங்களுக்கு எலக்ட்ரிக் கரன்ட் கிடைப்பதில்லை, என் ஊருக்கு கரன்டே இல்லை. ஆனால் நகரத்தில் இருப்பவர்களுக்குக் கிடைக்கிறது. கிராமங்களுக்கும் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டாமா? கிராமவாசிகள் என்ன நினைக்கிறார்கள் என்று பார்க்க வேண்டாமா? கம்பங்களும் வொயர்களும் கிராமங்களில், கரன்ட் பட்டணத்திற்குப் போகிறது. இந்த நிலை மாற வேண்டும். இப்போது பரீட்சை சமயம். மாணவர்கள் படித்துக் கொண்டிருக்கும் நேரம். மின்சாரம் இல்லாததால் கிராமங்களில் உள்ள மாணவர்கள் படிக்க முடியவில்லை. ரிசல்டைப் பார்த்தால் கிராமங்களில் உள்ள அத்தனை பேர்களும் தோற்றுப் போயிருப்பார்கள். காரணம் படிக்க வசதியில்லை. முன்னாலே வெளிச்சத்தைக் காட்டி, பல்ப் வெளிச்சத்தைக் காட்டி அதில் பழகியவர்கள் இப்போது அது இல்லை என்றால் என்ன செய்வார்கள்? கஷ்டப்படுவதை உணருகிறோம்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஹைட்ரோ எலக்ட்ரிக் ஸ்கீம் மூலம் கிட்டத்தட்ட 60 மெகா வாட்ஸ் கரன்ட் உற்பத்தி செய்யப்படுகிறது என்று பத்திரிகையில் பார்த்தேன். 100 மெகா வாட்ஸ் உற்பத்தியாக வேண்டும். 60 மெகா வாட்ஸ் உற்பத்தி செய்யப்படுகிறது. எங்களுக்கு எட்டு மெகா வாட்ஸ் கொடுத்தால் போதும். அங்கு உற்பத்தி செய்வதில் எட்டு மெகா வாட்ஸ் கொடுத்தாலே எங்களுக்குப் போதும்.

அடுத்தபடியாக, செட்டில்மென்ட் பற்றி ஒரு வார்த்தை. ரீ-சர்வே நடந்தது, செட்டில்மென்ட் ஏற்பாடு இப்போது நடந்து கொண்டிருக்கிறது. இந்த ரீ-செட்டில்மென்டைப் பார்த்தால்





ராமசாமி என்பவரின் பெயருக்குச் செல்லவேண்டிய நிலம் சுப்பிரமணியம் என்ற பெயரில் பதிந்திருக்கிறது. இப்படி தகாறு நிரம்பியிருப்பதால் இந்த செட்டில்மென்ட் வழக்குகளை பரிசீலனை செய்வதற்காக அதிகாரிகளைப் போட்டு பரிசீலனை நடந்து கொண்டிருக்கிறது. ஆனால் மேல் அதிகாரிகள் என்ன சொல்கிறார்கள் என்றால் ஒரு மாதத்திற்குள் 500 பட்டாக்களாவது பரிசீலனை செய்தாக வேண்டும் என்று சொல்லி டார்கெட் போடுவதால் வழக்குகளைப் பரிசீலனை செய்து ஒழுங்காக அவைகளை முடிக்க முடியவில்லை. எனவே டார்கெட் போடாமல் ஒழுங்காக எல்லா ரிக்கார்டுகளையும் சரிப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்குரிய கட்டளைகள் பிறப்பிக்கப்பட வேண்டும்.

சிற்றூர்—பட்டணங்கால் வேலை முடிந்துவிட்டது என்று சொன்னாலும் பல கிளைக் கால்வாய்கள் இன்னும் வெட்டப்படவில்லை. அவற்றையும் செம்மைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பின்னர், பள்ளிக்கூடங்களுக்கு எல்லாம் கட்டடங்கள் இல்லை. ஸர். சி. பி. ராமஸ்வாமி ஐயர் காலத்தில் கட்டாயக் கல்வி புகுத்தப் பட்ட இடம் கன்னியாகுமரி மாவட்டம். அங்கு கூரை இல்லாத பல பள்ளிக்கூடங்கள் உள்ளன. கட்டடங்கள் இல்லை அவற்றிற்கு. அவற்றையும் கட்டித் தர ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக அரசாங்கம் முக்கியமாக கவனிக்க வேண்டிய ஒன்று மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் இருக்கிற தொடர்பு இருக்கிறதே அதைச் செம்மைப்படுத்த வேண்டும். எதற்கெடுத்தாலும் சிபாரிசு மூலம்தான் காரியங்கள் ஆக வேண்டும் என்ற மனப்போக்கு மக்கள் மத்தியில் பரவியிருக்கிறது. அந்த மனப்போக்கு மாற்றப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. கே. வி. சுப்பையா: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1973-74-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை வரவேற்கிறபோது நான் இந்த அரசாங்கத்தையும், முதல் அமைச்சர் அவர்களையும் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

[திரு. கே. வி. சுப்பையா] [1973 மார்ச் 6

இந்த நிதிநிலை அறிக்கையை படித்துப் பார்க்கிறபோது கடந்த இருபத்தைந்தாண்டுகளாக இப்படிப்பட்டதொரு நிதிநிலை அறிக்கையை நாம் பார்த்ததே கிடையாது. தமிழ்நாட்டில் மட்டுமல்ல. அகில இந்தியாவையும் எடுத்துக்கொண்டால் இப்படிப்பட்ட முற்போக்கானதொரு நிதிநிலை அறிக்கையை நாம் பார்த்ததே கிடையாது என்பதில் நாம் பெருமைப்பட்டுக் கொள்ளலாம். இந்த நிதிநிலை அறிக்கையைப் படிக்கிறபோது இது தமிழ்நாடு அரசு சமதர்மத்தை நோக்கி ஒவ்வொரு ஆண்டும் நல்ல முறையில் நடைபோட்டுக் கொண்டிருக்கிறது என்பதற்கு நல்ல அறிகுறியாகும். இதில் உழுபவனுக்கே நிலம் சொந்த மானது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கனவே ஆண்டுவந்த ஆட்சியாளர்கள் அதைக் கேலி செய்தார்கள். உழுபவனுக்கு நிலம் சொந்தமா, அப்படியானால் ரெயிலில் செல்பவர்களுக்கு எல்லாம் ரெயில் சொந்தமாகலாமே என்று அன்று கேலி செய்தவர்கள் இன்றும் அந்த மனப்பான்மையில் இந்த நிதிநிலை அறிக்கையை கேலியும் கிண்டலும் செய்து கொண்டிருக்கிறார்கள். இதில் பிற்போக்குக் கட்சிகளும் இருக்கின்றன. அவர்கூட இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்கவில்லையே என்று பார்க்கிறபோது அவர்கள் ஏன் இதை எதிர்க்கிறார்கள் என்று பார்த்தால் இத்தகைய திட்டங்கள் மூலம் இந்த நாட்டில் ஏழைகள் இல்லாமல் போய் விடுவார்கள், அப்படி ஏழைகள் இல்லாமல் போனால் நம் கட்சிக்கு வாழ்வு இல்லாமல் போய்விடுமே என்ற அச்சத்தில் அவர்கள் இருக்கிறார்கள். அந்தக் கட்சிகளுக்கு நாட்டில் ஏழைகள் தேவைப்படுகிறது. ஆகவேதான் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையை எதிர்க்கிறார்கள்.

அதல்லாமல் மற்றக் கட்சிகள் இருக்கின்றன. இதை மறுத்துப் பேச முடியாத காரணத்தினால் ஏதோ சாக்கைச் சொல்லி இந்த நிதிநிலை அறிக்கை சரியானதல்ல என்று அவர்கள் வாதிடுகிறார்களே தவிர வேறு ஒன்றும் அல்ல. அவர்களுடைய மனப்பான்மையை அவர்கள் பேச்சே எடுத்துக்காட்டுகிறது.

அடுத்தபடியாக, இந்த நிதிநிலை அறிக்கையில் நம் முதல்வர் அவர்கள் புதுக்கோட்டையை தனி மாவட்டமாக ஆக்கி இருக்கிறார்கள். அதற்காக புதுக்கோட்டைப் பகுதி மக்களின் சார்பில் எனது நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். நீண்ட நெடுங்காலமாக இருபத்



1973 மார்ச் 6] [திரு. கே. வி. சுப்பையா]

இருபத்தைந்தாண்டுகளாக புதுக்கோட்டையை தனி மாவட்டமாக ஆக்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கேட்டுக் கொண்டிருந்தும் அப்போது நாட்டை ஆண்டு வந்தவர்கள் கேளாக்காதினராக இருந்து வந்தார்கள். இன்று இந்த அரசு மக்களின் மனப்பான்மையை உணர்ந்து புதுக்கோட்டையை தனி மாவட்டமாக ஆக்க முன்வந்ததற்கு நாங்கள் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். அதை உடனடியாக செயல்முறைக்குக் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினரான திரு. சத்திய மூர்த்தி அவர்கள் பேசும்போது புதுக்கோட்டையில் உள்ள சர்வ கட்சிகளும் சேர்ந்து போராடுவதற்கு முன்வந்ததால் இந்த மாவட்ட அமைப்பு வந்தது என்று சொன்னார்கள். எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. இருபது ஆண்டுகளாக ஆண்டு வந்தவர்கள் இன்று போராட்டக் குழு ஒன்று அமைத்திருக்கிறார்கள் என்றால் அது வேடிக்கையான விஷயமாக இருக்கிறது. இப்படி ஒரு குழு அமைப்பதாக பத்திரிகைகளில் வந்ததே தவிர எந்தவிதமான போராட்டமும் அங்கு நடைபெற்றதாக எனக்கு ஞாபகம் இல்லை. அப்படி போராட்டம் நடத்தியதாகத் தெரியவில்லை. இருந்தாலும் ஒரு நல்ல பெயர் இந்த அரசாங்கத்திற்கு வந்துவிடக்கூடாது என்பதில்தான் அவர்கள் கண்ணுங்கருத்துமாக இருக்கிறார்கள் என்பதைத்தான் அது எடுத்துக்காட்டுகிறது. ஆகையால், அவர்களுடைய பேச்சு இந்த திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு எந்தவிதமான நல்ல பெயரும் வந்து விடக்கூடாது என்பதற்காகத் தான் என்பதை எடுத்துக் காட்டி, நான் அவர்கள் பேசி வருவதை வன்மையாகக் கண்டிக்க விரும்புகிறேன்.

புதுக்கோட்டைப் பகுதியில் திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம் இருக்கிறது. இது 63 பஞ்சாயத்துக்களைக் கொண்டதாக இருக்கிறது. ஆகையால் இந்த ஊராட்சி ஒன்றியம் சரிவர இயங்க முடியவில்லை. இதை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று 20 ஆண்டுகளாகக் கேட்டுக் கொண்டு வருகிறார்கள். இதை இந்த அரசாங்கம் நிறைவேற்றித் தர வேண்டும். அந்த ஒன்றியத்தை [illegible] இரண்டு ஒன்றியமாக பிரித்துத் தர வேண்டுமென்று [illegible] கொள்கிறேன்.

[திரு. கே. வி. சுப்பையா] [1973 மார்ச் 6

புதுக்கோட்டைப் பகுதியில் ஆலங்குடிக்கு ஜனவரி 6-ம் தேதி நாவலர் அவர்கள் வந்தபோது எதிர்க்கட்சிக்காரர்கள் கறுப்புக் கொடி காண்பித்தார்கள். அங்கே ஏதோ நடந்து விட்டதாக பல எதிர்க்கட்சித் தலைவர்கள் பேசினார்கள். பல எதிர்க்கட்சித் தலைவர்கள் ஆலங்குடிக்கு வந்து ஏதோ விசாரணை செய்தது போல் செய்து அங்கே அராஜகம் நடந்தது என்று சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தினர் பொது மக்களை அடித்து விட்டார்கள் என்று சொன்னார்கள். எனக்கு ஒன்று ஞாபகத்திற்கு வருகிறது.

இதே மன்றத்தில் டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கத்தை எதிர்த்து தமிழ் நாட்டிலுள்ள 4½ கோடி மக்களும் இருக்கிறார்கள் என்று. அப்படியிருக்கிறபோது திராவிட முன்னேற்றக் கழகத்தினர் அடித்தார்கள் என்று சொல்வது முன்னுக்குப்பின் முரணாக இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு நாட்டிலே நாதி கிடையாது என்று சொன்னவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் எங்களை அடிக்கிறார்கள் என்று சொல்வதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

6 ஆம் தேதி நடந்தது என்ன. அன்று நாவலரும், நானும் கரமக்குடி நிகழ்ச்சிக்குச் சென்றோம். அங்கே கூட்டத்தை நடத்த முடியாமல் செய்தார்கள். நல்லவேளையாக கல் எறியவில்லை. நல்ல காலமாக அங்கே கூட்டத்தை முடித்துக்கொண்டு ஆலங்குடிக்கு வந்தோம். போலீஸ்காரர்கள் காண்பித்த இடத்தில் கறுப்புக் கொடி காட்டப்பட்டது. பொதுக் கூட்டம் நடந்த இடத்திற்கும் கறுப்புக் கொடி காட்டப்பட்ட இடத்திற்கும் 2 பர்லாங்கு தூரம் இருக்கும். நாவலர் அவர்களை பேச விடாமல் கோஷம் போட்டார்கள். அப்போது போலீஸ் அதிகாரி சொன்னார், கோஷம் போடுகிறவர்கள் தனியாக வாருங்கள், தனியாக வந்து கோஷங்கள் போடுங்கள் என்று இங்கே உறுப்பினர் செல்லையா அவர்கள் பேசினார்கள் என்று நினைக்கிறேன். அங்கே கோஷம் போடவில்லை நாங்கள், பொது மக்கள் போட்டார்கள் என்று சொன்னார்கள். ஆனால் போலீஸ் அதிகாரி தனியாக வந்து கோஷம் போடுங்கள் என்று சொன்னவுடன், கோஷம் போடுகிறவர்கள் தனியே வந்து நின்றார்கள். அவர்களைச் சுற்றி போலீஸ் அதிகாரிகள் நின்று



1973 மார்ச் 6] [திரு. கே. வி. சுப்பையா]

கொண்டு அவர்களை கோஷம் போடுவதற்கு அனுமதித்தார்கள். இப்படி கோஷம் போட்டுக்கொண்டே இருந்து நாவலர் அவர்களைப் பேச விடாமல் செய்து கொண்டு இருந்தார்கள். கூட்டத்தை முடித்து விட்டு நானும் நாவலரும் காரில் சென்றோம். நல்ல வேளையாக நாவலர் காரில் கல் படவில்லை. என்னுடைய காரில் கல் படாத இடமே இல்லை. அதையும் மீறிக்கொண்டு போய் விட்டோம். இது எப்போது நடந்தது என்றால் இரவு 10 அல்லது 10.30 மணி இருக்கும். இரவில் கல் எறிந்தால் யார் தலைமீதும் படலாம். அது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் மீதுதான் விழும் என்று சொல்ல முடியாது. பொது மக்கள் தலையில் பட்டதால் அவர்களுக்கும் பொது மக்களுக்கும் தகராறு. இதற்கும் எங்களுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை.

அமைச்சர் அவர்கள் தூண்டிவிட்டு இந்நிகழ்ச்சி நடைபெற்றது என்று சொன்னார்கள். அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது சொன்னார்கள், கல் விழுந்த உடனே சொன்னார்கள்—கூட்டத்தில் இருந்தவர்கள் நாம் கூட்டம் போடுவது எதிர்க்கட்சிகள் கல் எறிவதா என்று எழுந்தார்கள்—நீங்கள் அமைதியாக இருங்கள், அதையெல்லாம் போலீஸ்காரர்கள் பார்த்துக்கொள்வார்கள் என்று சொன்னார்கள். அப்படி அவர்கள் சொல்லாமல் இருந்து இருந்தால் பெரும் ரகளை ஏற்பட்டு ரணகளம் ஏற்பட்டு இருக்கும்.

ஒரு 10 நாளைக்கு முன்பு புதுக்கோட்டை சப்-கலெக்டர் எல்லா சர்வ கட்சித் தலைவர்களையும் அழைத்து கூட்டம் நடத்தினார். அந்தக் கூட்டத்தில் ஒரு முடிவு எடுக்கப்பட்டது. அந்த முடிவு என்னவென்றால், எந்தக் கட்சிக் கூட்டமாக இருந்தாலும், மாற்றுக் கட்சிக்காரர்கள் அங்கே சென்று கலகம் விளைவிக்கக் கூடாது, தாறுமாறாகப் பேசக்கூடாது என்பதாகும். அதற்கு அத்தனைத் தலைவர்களும் கையெழுத்துப் போட்டு இருக்கிறார்கள். அப்படிக் கையெழுத்துப் போட்டபின்புகூட அந்தக் கூட்டத்தில் வந்து தகராறு செய்தார்கள் என்று சொன்னால் அதைப் பற்றிப் பேசுவதற்கு எனக்கு இங்கே நேரம் இல்லை. பல எதிர்க்கட்சித் தலைவர்கள் அங்கே வந்தார்கள். வந்தவர்கள் இந்தக் காரியம் நடந்ததா என்பதைப் பற்றி அவர்களுடைய கட்சிக்காரர்களை அழைத்துப் பேசினார்களே தவிர, மற்றவர்களை அழைத்துப்

பேசவில்லை. அப்படிச் செய்து இருந்தால் உண்மைநிலை புரிந்து இருக்கும். ஆனால் இதை வைத்துக்கொண்டு எல்லாக் கட்சிகளும் அரசியல் லாபம் பெற வேண்டுமென்ற எண்ணத்தில் செய்கிறார்களே தவிர வேறு ஒன்றும் இல்லை.

போன மாதம் 26 ஆம் தேதி எம்.ஜி.ஆர். அவர்கள் ஒரு கூட்டத்திற்கு வந்தார்கள். எம்.ஜி.ஆர். எப்போதுமே தனியாக வருவது இல்லை. 10 லாரியில் ஆட்களை ஏற்றிக்கொண்டு வருகிறார். போலீஸ்காரர்கள் வருவதுபோல் வருகிறார். எம்.ஜி.ஆருக்குக் கறுப்புக் கொடி காட்டுவது என்று புதுக்கோட்டைத் தோழர்கள் முடிவு எடுத்து இருந்தார்கள். அதற்குப் பிறகு என்ன காரணத்தாலோ அதை நடத்தாமல் விட்டு விட்டார்கள். அந்தத் தகவல் தெரியாமல் மணப்பாறையிலிருந்து கறுப்புக் கொடி காட்டுவதற்காக தோழர்கள் 50 பேர் வந்தார்கள். அவர்களை எம்.ஜி.ஆர் ஆட்கள் பிடித்து நொறுக்கி விட்டார்கள். 50 பேர் 500 பேரை எப்படி தடுத்து நிறுத்த முடியும். சிந்தித்துப் பார்க்க வேண்டும். வேண்டுமென்றே தவறான முறையில் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தான் இதைச் செய்கிறார்கள் என்று சொல்கிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் எனக்கு ஹாண்டே அவர்கள் சொன்னது நினைவுக்கு வருகிறது, 4½ கோடி மக்கள் எங்கள் பக்கம் இருக்கிறார்கள். மந்திரிகள் வெளியில் தலைகாட்ட முடியவில்லை என்று சொன்னார்கள். அப்படி மந்திரிகள் வெளியில் தலை காட்டாமல் இருக்கச் செய்ய வேண்டுமென்பதற்காகத்தான் இப்படி அவர்கள் செய்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன். என்னுடைய தொகுதியில் ஏழை விவசாயிகள் இருக்கிறார்கள். 5 ஏக்கருக்குக் குறைவாக நிலம் வைத்துள்ள விவசாயிக்கு 67-க்கு முன்னால் ஏதாவது கடன் தொகை கட்ட வேண்டுமென்று இருந்தால் அதை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். புதுக்கோட்டையில் தர்பார் இருந்த காலத்தில் கொடுக்கப்பட்ட லோன்களுக்கான பணம் கூட வசூலிக்கப்பட்டு வருகிறது. அப்படிப்பட்ட லோன்களையெல்லாம் எந்த அளவில் இருந்தாலும் அதை ரத்து செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



ஹரிஜனங்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பது போல் முத்துராஜா என்ற கம்யூனிட்டிக்கும்—அதுவும் ஹரிஜனங்களை விட பிற்பட்ட சமுதாயம்—வீடுகள் கட்டித்தரும் திட்டத்தை உருவாக்கி வீடு கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் பர்மா அகதிகள் அதிகம் இருக்கிறார்கள். அவர்கள் சரியாக கவனிக்கப்படவில்லை. நீண்ட நாட்களாக அவர்கள் அதைச் சொல்லி வருகிறார்கள். அவர்கள்பால் தனிக் கவனம் செலுத்தத வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு சர்வீஸ் கமிஷனில் குரூப் 4 சர்வீஸ்களுக்கு இன்டர்வியூ நேரடித் தேர்வு வைப்பது இல்லை. கிராமப்புறத்தில் இருப்பவர்கள் பரீட்சை பாஸ் செய்து உத்தியோகம் பெற முடியாது. ஆகவே, நேர்முகத் தேர்வு வைத்து கிராமப்புறத்தில் இருக்கிறவர்களுக்கு வேலைவாய்ப்புத் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

* THIRUMATHI ALDA M. FOWLER: Mr. Chairman, Sir, I rise to add a few remarks to the many words that have been expressed on the budget for the current year.

I would like to congratulate the Hon. Chief Minister on his budget for one reason viz, that he has stressed the principles of socialism for the welfare of the people. Yet between the words and deed and the implementation of these ideals there seem to be many gaps.

We have the beautification of our city, we have beggar rehabilitation centres, slums are being eradicated, lepers are being given every care, the blinds have special facilities and one may hope even the lame would get the same facilities.

But it would seem that the citizens of the State and City are quite oblivious of their responsibilities in the fulfilment and carrying out of these ideals. The opposite seems to be true. There is a concerted action to pull down the structures that have been set up. That is what is distressing among citizens who are supposed to be mature. Take for example, the beautification of the City. A clean place does not need any adornment. If it is clean, scrupulously clean, it is beautiful. And yet what do we see? Irresponsible actions done by the public which make the city a place which no tourist should visit. Therefore, we must pay special attention and regard to this aspect. We cannot run away from it; we should

[Thirumathi Alda M. Fowler] [1973 மார்ச் 6

not shut our eyes to it and we should take action against such irresponsible deeds by the public. I would in all seriousness ask the Government to set up more conveniences. I think even a thousand conveniences in the City of Madras would be too little, and we must do this in a businesslike way.

As for slums, Sir, we have build up tenements and we have changed their habits of living, from huts to concrete buildings. I wonder whether we have done anything to find out which they actually like. I am sure they will still call their huts the cosy homes, for they are not used to tenement buildings. They present certain difficulties. Have we asked them what their difficulties are? How do they take their fishing nets up to the top floor? That is a physical difficulty that should be gone into. Has morality gone up or has it worsened ever since people began to live in tenements? Is there a better way? Can we think of a better way? Surely, there should be an alternative to tenements. These are the aspects we should examine and not stick to the original plan, if there is a better one.

The lepers have had very special thought and consideration given to them. Every sort of facility has been provided to lepers. We find them all round the City. Who is to tell them what they should do, where they should go and how do they get to the place which has been provided for them? I think the propaganda machinery should get into action in an intensive way. This, I think, is the crux of the matter that whereas we provide many amenities, the gap that has to be bridged is in the education of the people through propaganda that has to be done to teach the citizens their rightful duties and that they have a responsibility. Then and only then will we make any stride forward; otherwise, the next year, or the year after the next, or a 100 years afterwards or even a thousand years afterwards, we will still be talking on this theme and we shall not be cleaner in our city and the many things that we want to do for the people will be exactly where they are now.

Sir, I also have a concern about the students in our colleges. They are our children; we send them there and we hope that they will become responsible citizens. But we find that they are exploited and used—they do not know it. I think steps should be taken to protect young students from being exploited.



1973 மார்ச் 6] (Thirumathi Alda M. Fowler)

My next point is about unemployment. Here Government have to help and they have done everything they could possibly do to eradicate it and still it seems an impossible feat. But every means has been put at the disposal of the unemployed to try to employ himself and yet every morning and afternoon and evening and night, the unemployed visit me. What can one individual do against such a weight of unemployment? For, the Government directs its plans towards those who hold certificates and diplomas and very rightly so. But there are the under-educated, the unskilled and the untrained and they also are within our plan and we have a responsibility to watch over them also, and so, Sir, for a minority community which has the direct concern and care for its unemployed, there may be plans to help to eradicate this grave situation. I would appeal to Government not to stop their work—their plan is meant for the skilled and the educated and sometimes the over-educated also—not to stop there, but also to concern itself with these others, the less-educated and unskilled who are also a burden to them as well and should be regarded as their own community. In helping them, Government is helping itself; it can channel its work through a responsible society which is concerned for the unemployed people in its own circle. All I say is that these should also go into the orbit of the Government's plan for the unemployed.

Thank you, Sir, for the opportunity given to me to say these few words.

*திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1973–74 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது நான் என்னுடைய பேச்சைத் தொடங்குகிறேன்.

தொடங்குவதற்கு முன்பு எனக்குள்ள சிரமத்தை நான் நன்றாகப் புரிந்துகொள்கிறேன். நான் ஆளும் கட்சியும் அல்ல; எதிர்க்கட்சியும் அல்ல. ஆளும் கட்சியாக இருந்தால் வெட்டு ஒன்று, துண்டு இரண்டு என்று பேசிவிடலாம். எதிர்க்கட்சியாக இருந்தால் பட்ஜெட் ஒருபுறம் இருந்தாலும் நாம் நம் விஷயங்களைச் சொல்லிவிடுவோம் என்று பேசிவிடலாம். அப்படி இல்லாமல் பொதுவான நிலையைப் பின்பற்ற வேண்டுமென்று எண்ணும்போது உண்மையிலேயே மனது சங்கடமாகவும் பேச்சுத் தடைப்படுவதாகவும் இருக்கிறது.

[திருப்பூர் திரு. எ. எம். மொய்தீன்] [1973 மார்ச் 6

25 வருஷங்களுக்குள் இந்தப் பேரவையின் வரலாற்றில் இம்மாதிரியான ஒரு நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்தவர் யார் என்று உங்கள் சார்பில் நான் கேட்க விரும்புகிறேன். அப்படி உண்டா? பட்ஜெட் துண்டு விழுந்தது; புது வரி போடப்பட்டது என்ற நிலைதான் இருந்தது. பட்ஜெட் வருகிறது என்றாலே மக்களுடைய நெஞ்சங்கள் எதற்கு எதற்கு வரி போடப்படுமோ என்று அடி வயிற்றைப் பற்றிக் கொண்டிருப்பார்கள். ஆனால், அந்த நிலைமை இல்லாமல் உபரி பட்ஜெட் போட்டு, இந்தியாவுக்கே ஒரு வழிகாட்டியாகக் காட்டிய ஒரு பட்ஜெட்டை உப்பும் இல்லை, சப்பும் இல்லை என்று சொல்லி முடித்து விடுகிறார்கள். ஒரே வார்த்தையில் சொல்லி முடித்து விடுகிறார்கள். நான் எப்படிச் சொல்வது? ஆரம்பத்திலேயே சொல்லும்போது சொன்னேன், எனக்குச் சங்கடமாக இருக்கிறது. அந்தச் சங்கடத்தை உணர்ந்துதானோ, என்னவோ, அதைச் சொல்லும் போது எனக்கு ஒரு கவிதை நினைவுக்கு வருகிறது. என்னுடைய நிலையிலிருந்து தானோ என்னவோ அந்தப் புலவன் பாடியிருப்பான் என்று நினைக்கிறேன். எந்தக் காரணத்தினாலோ, என்னுடைய கவனத்திற்கு அந்தக் கவிதை நினைவுக்கு வருகிறது. அதை இந்தப் பேரவையில் படிக்கிறேன், அவன் என்ன உள்ள உருக்கத்தோடு சொல்கிறான், பாருங்கள்.

"பேசினால் வாயாடி என்பார்
பேசாட்டி பித்தன் என்பார்
ஆதரித்தால் அகந்தை என்பார்
அது வேண்டாம் என்றால் மடமை என்பார்."

இந்த நிலைதான் இப்போது இருக்கிறது. (சிரிப்பு) இன்னொரு முறை நன்றாகச் சொல்கிறேன்.

"பேசினால் வாயாடி என்பார்
பேசாட்டி பித்தன் என்பார்
ஆதரித்தால் அகந்தை என்பார்
அது வேண்டாம் என்றால் மடமை என்பார்."

இந்த நிலைதான் இப்போது இருக்கிறது. நான் பேசுவதற்கு முன்பே என்னுடைய நண்பர்கள் என்னை பரிகாசமாகச் சொன்னார்கள். அது என்னை ஈட்டி கொண்டு குத்தியது போலத் தான் இருக்கிறது. இங்கு முதல்வர் அவர்கள் இல்லை. இப்போது



1973 மார்ச் 6] [திருப்பூர் திரு. எ. எம். மொய்தீன்]

நான் அதைப் பற்றிப் பேசப் போவதில்லை. இங்கே பேசியவர்களுடைய பேச்சையே வைத்துக் கொண்டு நான் என்னுடைய அபிப்பிராயத்தைச் சொல்ல விரும்புகிறேன் என்று சொல்லாம், அபிப்பிராயத்தைச் சொல்லும்போது பிடில் கட்சி என்று சொன்னார்கள். அதை எடுத்துவிட்டார்கள். அது இருந்திருக்க வேண்டிய அவசியம் இருக்கின்றது என்று பெருமையோடு சொன்னேன். ஆனால் பேரவையின் குறிப்பிலிருந்து எடுத்து விட்டார்கள். அதைப்பற்றி இப்போது நான் பேசப்போவதில்லை.

இந்த இருபத்தைந்தாண்டுகளாக யாரும் சமர்ப்பிக்க முடியாத, எல்லா நிலைமைகளையும் தன்னகத்தே கொண்டு, எல்லாத் துறைகளையும் நன்றாகச் சிந்தித்து, எல்லா நிலைகளுக்கும் பொருளிட்டு, பங்கிட்டு, பட்ஜெட்டை சமர்ப்பித்த ஒரு முதல்வர், எவ்வளவு தன்னடக்கத்தோடு அதைச் சமர்ப்பிக்கிறார் என்பதை தயவுசெய்து பாருங்கள்—

"சமதர்ம மணங்கமழ் சமுதாயத்தை அமைத்திட அயராது
பணிபுரியும் இந்த அரசின் நிதிநிலை அறிக்கையை
தமிழ் மக்களின் முன்பு சமர்ப்பிக்கிறேன்" என்று

பணிவோடு தொடங்குகிறார். நான் செய்து விட்டேன் என்று சொல்லாமல், இந்த அரசு சாதித்து விட்டது என்று சொல்லாமல், 25 வருடத்திய பட்ஜெட்டை விட திறமையான பட்ஜெட்டை கொண்டு வந்திருக்கிறேன் என்று கூறாமல் தன்னடக்கத்தோடு தொடங்கி இருப்பது அவருடைய தன்னடக்கத்தை மட்டுமல்ல, பெருமையை மட்டுமல்ல, அந்தக் கட்சியின் நன்னோக்கத்தையே காட்டுகிறது என எண்ணிப் பெருமைப்படுகிறேன்.

அடுத்து, இங்கே பேசப்படுவது சமதர்மம். அப்பப்பா! இந்தச் சமதர்ம படுகிற பாடு!! சுதந்திரா கட்சி கூட சமதர்மம் தான் பேசுகிறது. அலுமினியத் தொழிற்சாலையை தேசிய மயமாக்கக் கூடாது என்று சொல்லும் சுதந்திராக் கட்சியும் சமதர்மம்—பொதுவுடைமையைப் பேசுகிறது. இப்போது பொதுவுடைமையைப் பேசுவது மாடலாகப் போய் விட்டது—அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் சொல்வது போல் மாடல் சோஷலிசம்! இப்படிப் பேசினால், எதையும் பேசலாம். அப்படி பொருள் போல இருக்கிறது.

சோஷலிசத்திற்கு இந்த நாடு உடனடியாக தகுதி உடையதல்ல என்பது என்னுடைய பணிவான எண்ணம். படிப்படியாகத் தான் இந்த நாட்டில் சோஷலிசம் வர முடியும். வேண்டுமானால் இப்போது கம்யூனிஸ்ட் சித்தாந்தப்படி, மாற்ற வேண்டுமானால் இப்போது ராணுவத் துறையிலுள்ளவர்கள் துப்பாக்கி எடுத்து, அத்தனை மந்திரி சபைகளையும், டெல்லியிலிருக்கிற சட்ட சபையையும், அத்தனை நிர்வாகத்தினரையும் கைது செய்து உள்ளே தள்ளிவிட்டு வேண்டுமானால் அது நடக்கும் என்று இந்த ஜனநாயகத்தில் பேசுகிறார்கள். 13, 14 பேர்கள் இருக்கின்ற கட்சி, வெளியே போகும்போது, ஏதோ வாழைப்பழம் விற்பது போல, மாம்பழம் விற்பது போல, "ஜனநாயகக் கொலை, ஜனநாயகக் கொலை" என்று பேசுகிறார்கள். ஏதோ, இப்படி ஒரு பொருள் இங்கே விற்பனை ஆகிறது போலும், சட்ட சபையில் விற்கிறது என்று கருத வேண்டிய நிலை இருக்கிறது.

இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், ஜனநாயகம் என்றால், பண்பு என்றும் ஒரு பொருள் உண்டு. ஜனநாயகம் அளந்து பேசப்பட வேண்டும். நாம் எதை விரும்புகிறோமோ, எதை நேசிக்கிறோமோ, எதை இந்தப் பேரவையில் பெற விரும்புகிறோமோ, எது மக்களுக்குத் தேவை என்று கருதுகிறோமோ, எது உண்மையானது என்று கருதுகிறோமோ, அதை, பொதுவாக நாம் பங்கிட்டுக்கொள்ள பழகிக்கொள்ள வேண்டும். நாம் சொல்வது மட்டும்தான் ஜனநாயகம் என்றால் அது ஜனநாயகம் ஆகாது. நாம் பேசுவது மட்டும் தான் ஜனநாயகம் என்றால் அது ஜனநாயகம் ஆகாது. நாம் சொல்லும் திட்டங்கள் தான் ஜனநாயகம் என்றால் அது ஜனநாயகம் ஆகாது. ஜனநாயகக் கண்ணோட்டத்தில், எதெது பேசப்படுகிறதோ, யார் யாரால் பேசப்படுகிறதோ, திட்டங்கள் கொண்டு வரப்படுகிறதோ அதை ஜனநாயகம் என்று ஒப்புக்கொள்வதால் கட்சிக்கு ஆபத்தில்லை. சுதந்திராக் கட்சியோ, ஆளுங்காங்கிரசோ, பழைய காங்கிரசோ, நல்லதைச் சொல்லி விட்டால், நாம் அதை ஆதரித்து விட்டால் அதனால் கட்சி அழிந்து விடாது. அப்படி அழிந்து போகும் உப்புக் கட்சியாக இருந்தால், உருப்படியாக எதையும் செய்யாது. நல்லதை ஒப்புக்கொள்ளக்கூடாது, நல்ல விஷயத்தையே கொஞ்சமும் பார்க்கக் கூடாது, என்பது ஜனநாயகமாகாது.





தலைவரின் அனுமதியோடு, சுதேசமித்திரன் பத்திரிக்கையில் கொஞ்சம் படிக்கிறேன். "எல்லாச் சாரருக்கும் திருப்தி தரக் கூடிய அளவில், சில தாழ்த்தப்பட்டவர்களுக்கு மனைகள்—வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம், பக்கிங்ஹாம் அபிவிருத்தி திட்டம்—இவற்றை மேற்கொண்டிருப்பது வரவேற்கத்தக்கது. எந்த ஒரு வரவு-செலவுத் திட்டமும் எல்லோருக்கும் பூரண திருப்தி தரக் கூடிய வகையில் அமையும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. இவ்வகையில் நோக்கும்போது மேற்சொன்னவற்றைப் போன்ற சில சிறப்பான அம்சங்கள் இருப்பதால், அவற்றைப் பாராட்டுகிறோம்" என்று மித்திரன் தலையங்கத்தில் கூறுகிறது. இதுதான் உண்மை.

ஆனால், அதே சமயம், இன்னொன்றையும் நினைவில் கொள்ள வேண்டும். மின்சாரம் இங்கே பற்றாக்குறை. எதிர்க் கட்சிகள் பேசுவது எல்லாம் ஒரேமாதிரியாக இருக்க வேண்டும் அல்லவா? அந்தக் கருத்து இருக்கிறதா? சொல்லும்போது ஒரேமாதிரி இருக்க வேண்டும். அப்படி இருக்கிறதா? பாருங்கள். திரு. ஹாண்டே சொல்கிறார்—பத்திரிக்கை நிருபர்களுக்கு கோவையில், "இப்படி மின்சார வெட்டு ஏற்பட்டதற்கு மத்திய அரசாங்கம்தான் முழுப் பொறுப்பு. மத்திய அரசு விவேகமின்றி திட்டம் தீட்டியதுதான் இதற்குக் காரணம்" என்று கூறியிருக்கிறார்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** தலைவரவர்களே, ஒரு விளக்கம். உறுப்பினர் இப்போது படித்தது முரசொலியில் வந்ததே தவிர, வேறெந்தப் பத்திரிக்கையிலும் வரவில்லை. நான் மிகத் தெளிவாகத் தான் கூறி இருக்கிறேன். மத்திய அரசாங்கம் ஐந்தாண்டுத் திட்டத்தைப் போடுகின்ற நேரத்தில் சரியான வகையில் போட வேண்டும். இப்போது பற்றாக்குறை ஏற்பட்டதற்கு முழுப் பொறுப்பு தமிழக அரசுதான் என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். எல்லாப் பத்திரிக்கைகளிலும் வந்திருக்கிறது. என்னுடைய நிலையான கருத்து என்னவென்றால், மத்திய அரசுக்கு ஓரளவு பொறுப்பு இருக்கிறது. நான் சொன்னது என்று கூறியதை, முழுப் பொறுப்பு என்று முரசொலியில் போட்டிருக்கிறார்கள். இந்த நெருக்கடிக்கு மூலக்காரணம் தமிழ்நாடு அரசுதான். முன் கூட்டியே எச்சரிக்கையாக இருந்திருக்க வேண்டும் என்றுதான்

சொல்லியிருக்கிறேன். முரசொலி தவறான செய்தி போட்டிருக்கிறது. நான் முரசொலிக்கு எந்த அறிக்கையும் தரவில்லை, தந்தாலும் போடமாட்டார்கள்.

**திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன் :** தலைவர் அவர்களே, அந்த வகையில் நான் பாராட்டுகிறேன் ஓரளவு. மத்திய அரசும் இதற்கு ஓரளவு பொறுப்பு என்பதை ஒத்துக்கொண்டிருக்கிறார்கள் அல்லவா ? அவருக்குப் பதில் கீழே சொல்கிறேன். அதற்குள் அவர் அவசரப்பட்டுவிட்டார். மின்சார வெட்டிற்கு தி.மு.க. அரசே முழுப்பொறுப்பு என்பதாக தமிழ்நாடு புதுக் காங்கிரஸ் தலைவர் திரு. ராமையா குற்றம் சாட்டியிருக்கிறார். ஆக திரு. ஹாண்டே ஓரளவு குற்றம் சாட்டினார். இவர் முழுக்க குற்றம் சாட்டுகிறார். இதைத்தான் சொன்னேன். அவர்களிடையே ஒருமைப்பாடு இல்லை.

ஆகையால்தான் நான் சொல்கிறேன். இந்தமாதிரியான நோங்களில் பாராட்ட வேண்டிய காரியங்களுக்குப் பாராட்டுங்கள். உப்பும் இல்லை, சப்பும் இல்லை என்று பேசிப் பயன் இல்லை.

கோயம்புத்தூர் விவசாயச் சங்கத்தின் தீர்மானத்தைப் பாருங்கள். "மின்சார வெட்டு காரணமாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு தக்க நிவாரணம் அளிக்காவிட்டால் மார்ச் 10-ம் தேதி கோவையில் வரி கொடா இயக்கம் ஆரம்பிக்கப்படும்" என்பது அவர்கள் தீர்மானம். இது அரசியல் அமைதிக்கு உரிய நோக்கம்தானா என்பதைச் சிந்திக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இதில் அரசியல் உள்நோக்கம் இல்லையா ?

மின்சாரப் பற்றாக்குறை இருக்கிறது. அதுபற்றி நிதிநிலை அறிக்கையில் முதல்வர் சுட்டிக் காட்டவில்லையா ? மின்வெட்டின் காரணமாக இந்தியாவில் பல மாநிலங்கள் பாதிக்கப்பட்டு இருப்பதைப் போலவே நம் மாநிலமும் பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்த நெருக்கடியான காரணங்களே பேரவை நன்றாக அறியும் என்றே அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இவர்கள் சொல்கிறார்கள் மின்சார வெட்டுக்கு இந்த அரசே காரணம் என்று. அதற்கு நான் சொல்கிறேன். இதற்கு முன்பு இருந்த அரசே தான் காரணம் என்று.





1973 இல் மழை பொய்க்கும் என்று உணர்ந்து 62, 63-லேயே அவர்கள் நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டார் என்று நான் சொல்ல முடியாதா ? துன்பம் வரும்போது அதனைக் குறைகக எப்படி நாம் அதனைப் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்று நினைக்காது—வெளியே போய் கிளர்ச்சி செய்யுங்கள் என்று சொல்வது, கிளர்ச்சியை ஆரம்பித்தவுடன் இங்கே தீர்மானம் கொண்டு வருவது—நான் ஆரம்பத்திலே சொன்னமாதிரி போலீஸ் காரர்கள் என்னைப்போல இருக்கிறார்கள், கிளர்ச்சியையும் அடக்க வேண்டும், இவர்களுக்கும் பாதுகாப்பாக இருக்க வேண்டும், கடைசியில் அவர்கள் தலையில் கல் அடி. இதுதான் உண்மை.

ஓர் உண்மையைச் சொல்கிறேன். மன்னிக்கவேண்டும். இம்மாதிரியான நிலையில் யார் அடிபட்டு ரத்தம் சிந்திச் செத்தாலும் தங்கள் கட்சியை வளர்த்துக்கொள்ளவேண்டும் என்று நினைப்பவர்கள் ஜனநாயகம் பற்றியோ, சோஷலிசம் பற்றியோ பேச யோக்கியதை இல்லை என்பது என்னுடைய தாழ்மையான எண்ணம். பிரச்சாரத்தின் மூலம் செய்யலாம். திராவிட முன்னேற்றக் கழகம் மக்கள் நம்பிக்கையை இழந்துவிட்டது. சரி. வெளியே என்ன பேச்சு ? பார்ப்போம் திண்டுக்கல்லில். அது ஜனநாயக மரபு. ஒருவர் சொல்லிவிட்டார்—அவர் பெயரை நான் இங்கே சொல்லத் தயாராயில்லை—'நாலும் களத்தில் இறங்கி விட்டேன்' என்று. சபாஷ். இப்போது மூன்று, நான்கா என்பதுதான். நான்காக வந்தாலும் கவலையில்லை. மூன்றாக வந்தாலும் பரவாயில்லை. இரண்டாக வந்தாலும் ஒருகை பார்ப்போம். தனியாக நேரிடைப்போட்டியில் வந்தாலும் சரி ஒருகை பார்ப்போம்.

சுதந்திராக் கட்சிக்கு ஒரு சபலம். தாங்களும் அங்கே போட்டியிடலாம் போலிருக்கிறது என்று. ஆளும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் எங்களுக்கும் அங்கே ஆதரவு இருக்கிறது என்று சொல்ல ஆரம்பித்திருக்கிறார்கள். பழைய காங்கிரஸ் முடிவே செய்துவிட்டோம் என்று சொல்லி விட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்து தனியாகப் பிரிந்து வந்திருப்பவர்கள் நாங்களும் கோதாவுக்கு வரப்போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இது நியாயமானது. இது நேர்மையானது. ஒரு பரீட்சை பார்ப்போம் என்பதில் எனக்கு ஆசைதான்.

[திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன்] [1973 மார்ச் 6

திரு. ஹாண்டே பேசும்போது சொன்னார். மக்கள் நம்பிக்கையை திராவிட முன்னேற்றக் கழகம் இழந்துவிட்டது என்று. அதை இப்போதும சொல்கிறார் அவர். அதைப் பார்க்க வேண்டும் அல்லவா? அதைப் பார்ப்பதற்கான சூழ்நிலையை ஹாண்டே உருவாக்கிக் கொடுத்திருந்தால் நான் நன்றி உள்ளவனாக இருப்பேன். இந்த எம்.எல்.ஏ. பதவியைத் தூக்கி எறிந்துவிட்டு திண்டுக்கல் தேர்தலில் அவரே போட்டியிட அவருக்கு ஏனோ துணிவு வரவில்லை. திண்டுக்கல்லைப் பொறுத்த வரை யாரையாவது தள்ளிவிட்டு ஆழம் பார்க்கலாம் என்று நினைத்துக்கொண்டிருக்கிறார். தி.மு.க. மக்கள் நம்பிக்கையை இழந்துவிட்டது என்பதாக மற்ற கட்சிக்காரர்கள் திரு. ஹாண்டேயைப்போல துணிவாகச் சொல்லவில்லை. எல்லாருடைய மதிப்பையும் திராவிட முன்னேற்றக் கழகம் இழந்துவிட்டது—இது திரு. ஹாண்டே பேச்சு. அப்போது திண்டுக்கல்லில் அவர் தைரியமாக நிற்கலாமே?

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** முதல் அமைச்சர் அவர்களே அங்கே நிற்கத் தயாராக இருந்தால் நானும் நிற்கிறேன்.

**திரு. திரு. ஏ. எம். மொய்தீன்:** அவர் 185 பேர்களை வைத்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறார். நீங்கள் குட்டிச்சுவரை வைத்துக்கொண்டு இங்கே நிற்கிறீர்கள். இந்தக் குட்டிச்சுவரைத் தகர்த்துவிட்டு நீங்கள் நில்லுங்கள். அப்புறம் பாம் வைத்து அவர்களைத் தகர்க்கப் பார்க்கலாம்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** அவர்கள் 185 பேர்களை வைத்துக் கொண்டு குண்டுபோட்டுத் தகர்க்கும் நிலையில் இருக்கிறார்கள். ஆகவே அவர்கள் நிற்கட்டும். நானும் அங்கே நிற்கத் தயார். அதற்கு முதல் அமைச்சர் அவர்கள் தயாரா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** திருப்பூர் மொய்தீன் அவர்கள் திரு. ஹாண்டே அவர்களைப் பார்த்துக் கேட்டார். எனக்கு அல்லது. திரு. ஹாண்டே அவர்கள் திருப்பூர் திரு. மொய்தீன் அதற்குத் தயாரா என்று கேட்கலாம். என்னை இழுக்க வேண்டியதில்லை.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** அவர் நிற்கப்போவதில்லை என்று சொல்லிவிட்டார்கள்.



1973 மார்ச் 6]

**திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன்:** ஒரு சின்ன விளக்கம். நான் நிற்பதாகச் சொல்லவில்லை. எல்லோரும் வெளியே வந்து நிற்கும் போது நானும் நிற்பேன். பயப்படமாட்டேன். நாங்கள் 185 பேர்கள் இருக்கிறோம். நீங்கள் நின்று பாருங்கள். அது பொருத்தமாக இருக்கும். முன்பும் அதைத்தான் சொன்னேன். இப்போதும் சொல்கிறேன். தேர்தல் களத்திலேயும் இதைத்தான் சொல்லப்போகிறேன். மேல் சபையில் சுதந்திராக் கட்சி அங்கத்தினர் சுவாமிநாதன் அவர்கள் நேற்றுப் பேசினார். "இந்த அரசு புதியதாக வரி போடவில்லை என ஆளும் கட்சி அங்கத்தினர்கள் பாராட்டுகிறார்கள். வரி விதிப்பு புதியதாக இல்லை என்ற காரணத்தினால் வரி போடாமல் இருக்கிறார்களா?" என்று.

இது நியாயமா? நான் அதற்கு பதில் சொல்லட்டுமா? ராஜ கோபாலாச்சாரியருடைய காலத்திலேயே போட்டாச்சு. அதற்கு பின்பு இருந்தவர்கள் காலத்திலே போட்டாச்சு. இனி இந்த நண்
பரிதாபகரமான தமிழ் மக்கள் மீது வரியை சுமத்த வேண்டாமே பகல்
என்ற நல்லெண்ணத்தோடு வரி போடாததற்கு பாராட்ட 12-00
வேண்டியிருக்கிறது, பெருமைப்பட வேண்டியிருக்கிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தபிறகு வரியே போடவில்லையென்று நம்முடைய கனம் அங்கத்தினர் பேசுகிறாரே, சென்ற ஆண்டு கூட வரி போட்டார்களே. இதையெல்லாம் பார்க்கும்போது வரி போடுவது தவறானது என்ற அபிப்பிராயத்தை கட்சியின் தலைவரே உருவாக்குகிறாரே என்பது வருத்தமாக இருக்கிறது.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** மதிப்பிற்குரிய இராஜாஜி அவர்களை இழுக்கவேண்டியத் தேவையில்லை. நமக்குள்ளே முடித்துக்கொள்ளலாம். 1967-க்கு முன்னால் இராஜாஜி வரி போட்டார்கள் என்று சொன்னார்கள். அதற்கு முன்னால் காங்கிரஸ் நண்பர்கள் வரி போட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். சாமிநாதன் அவர்களுடைய கேள்வி எல்லாம் 1967-க்குப் பிறகு பல வரிகளை, ஏராளமாக போடவில்லையா? சேல்ஸ் டாக்ஸ்-ஐ உயர்த்த வில்லையா? படிப்படியாக உயர்த்தவில்லையா என்பதுதான் கேள்வி. ஏறத்தாழ 1½ மடங்கு, 2 மடங்கு போட்டிருக்கிறீர்கள்.

இன்னும் போட்டால் மக்கள் தாங்கமாட்டார்கள், ஆகவே போட வில்லையென்று சொன்னார்கள். அவர் பேசியதைப்பற்றி அங்கே கேட்கவேண்டும். இங்கே பேசினால், இங்கே பதில் சொல்ல முடியும். அவர் என்ன பேசி இருக்கிறார் என்று முழுவதும் உங்களுக்குத் தெரியுமா ?

**திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன் :** இப்பொழுது ஹாண்டே அவர்கள் பதில் சொல்லும்போது அவர்கள் போட்ட வரியை ஒப்புக்கொள்ளுகிறார்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** வரி போடாமல் எந்த அரசாங்கமும் நடத்த முடியாது. நான் சொல்வதெல்லாம், 6 ஆண்டுகளாகப் போட்டிருக்கக் கூடிய வரிச் சுமை ஆண்டுக்காண்டு உயர்ந்துகொண்டே, ஜாஸ்தியாகிக்கொண்டே இருக்கிறது. இனி மேல், பொதுமக்கள் தாங்கமாட்டார்களென்றுதான் அவர் சொல்லி யிருக்கிறார்.

**திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன் :** அப்பொழுது முன்னே இருந்தவர்கள் போட்டு முடிந்துவிட்டது. போட்டு முடிந்து விட்டதனால் இனிமேல் போடமுடியாது என்று விட்டுவிட்டார் களென்று சொன்னேன். அதையாவது ஒப்புக்கொள்ளுகிறாரா ஹாண்டே. வரி போட்டார்கள். போட்டு முடிந்துவிட்டது. அதைப் போட்டவர்கள் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். ஆகை யினாலே எதிலும் கட்சியினுடைய பிரச்சார நோக்கத்தோடு செய்யப்படுபவை என்று சொல்வதற்காகத்தான் நான் இவைகளை யெல்லாம் குறிப்பிட்டேன்.

இன்னும் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். நம்முடைய எதிர்க்கட்சி நண்பர்களுக்கும் எங்களோடு கூட்டு கொண்டிருக்கிற கூட்டுக் கட்சிகளுக்கும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன் ஒரு ஆட்சியை நடத்துவது என்பது இருக்கிறதே அது மிக மிக சிரமமானதுதான். அது சாதாரணம் அல்ல. முள்வேலிக்குப் பக்கத்திலே நடந்துகொண்டிருப்பதுபோல்தான் மிகவும் ஆபத்தானதுதான். ஆட்சியை இழந்தவர்கள் ஆளுகிறவர்களைக் கவிழ்ப்பதற்கு எல்லாவித சதியைச் செய்யத்தான் செய்வார்கள். ஏனென்றால் அவர்களுக்கும் முன்வரிசையில் உட்காரவேண்டு மென்ற சபலம் இருக்கத்தான் செய்யும். அந்தச் சபல



உணர்ச்சியை நாம் உணரவேண்டும். அவை நடக்கத்தான் செய்யும். என்னதான் முடிவு செய்து, எவ்வளவுதான் நியாயமான முடிவுகளைக் கொண்டுவந்தாலும், எவ்வளவு நல்ல திட்டங்களைக் கொண்டுவந்தாலும் கூட பாருங்கள், அலுமினியம் கம்பெனியை தேசியமயமாக்கியது சோஷலிசத் திட்டம் இல்லையா ? ஏன் திடீரென்று அதை தேசியமயமாக்கவேண்டாமென்று சொல் கிறார்கள் ? ஆக்கினாலும் தப்பு, ஆக்காவிட்டாலும் தப்பு. செய் தாலும் தப்பு, இப்பொழுது இன்னும் சொல்கிறார்கள், பஸ்ஸை தேசியமயமாக்குவதும் சரியல்ல, மின் நிறுவனத்தை தேசியமய மாக்குவதும் சரியல்ல, என்று. அவர்களுக்கு ஆள் வேண்டும். எவன் எவனெல்லாம் அடிபடுகிறானோ, எதிலே அவனுடைய சொந்த நிலைமைகள் மாற்றம் அடைகிறதோ, எவனுடைய அடி வயிறு கனம் குறைகிறதோ அவர்களெல்லாம் எதிர்க்கும்பொழுது இவர்கள் நினைத்துக் கொள்வது அவர்களெல்லாம் நம்முடைய கட்சிக்கு வந்துவிட்டார்களென்று. அப்படி எண்ணுகிறார்கள். அந்த எதிர்ப்பு இருக்கத்தான் செய்யும். அதை ஆளுகின்றவர்கள் சமாளித்துத்தான் ஆக வேண்டும். நிச்சயமாக தேசியமயமாக்கப் பட்டுத்தான் ஆக வேண்டும். அலுமினியம் கம்பெனியை தேசிய மயமாக்கியதை நான் முழுமனதோடு ஆதரிக்கிறேன். இன்னும் அதைப்போல் பல செய்யவேண்டும்.

இந்த சினிமாத் துறையைப் போல் ஒரு வேப்பங்காய் வேறு இல்லவே இல்லை. (சிரிப்பு) காரணம் இருக்கிறது. நாங்கள் வேண்டாமென்று சொல்வதற்கு காரணம் இருக்கிறது. அது ஒரு கலையாக போய்விட்டது. அதற்கு ஒரு அழகான பெயர் கொடுத்து விட்டார்கள், கலை என்று. அந்த கலையின் பெயரால் இன்றைக்கு நடப்பது மிகவும் கொடுமையானது. ஸ்டுடியோவை, தியேட்டரை, சர்க்கார் எடுத்து, என்னைப் போன்ற மனிதாபிமான உணர்ச்சியும், மனித நேர்மை உணர்ச்சியும் உடையவர்கள் சிலரையாவது ஒரு கமிட்டி அமைத்து, அதில் உறுப்பினர்களாக்கி, இந்தப் பரிதாப கரமான படங்களைப் பார்த்து, 24-க்கும் 20-க்கும் இடையில் உள்ள குழந்தைகள், பெண் குழந்தைகளும், ஆண் குழந்தைகளும் பாழாகாமல் போவதற்கு சர்க்கார் அதையும் தேசிய மயமாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

காரணம் என்ன வென்றால், பிள்ளைகளைப் பாருங்கள். இன்றைக்கு அனந்தநாயகி அம்மையாருடைய குழந்தைகள் சின்னவையாக இருக்கலாம் அந்த அம்மையாருக்கு எத்தனை

குழந்தைகள் இருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியாது. என் குழந்தைகள் எல்லாம் பெரிய குழந்தைகள். நான் பார்க்கிற பொழுது வயிறு எரிகிறது. பெற்ற என் மனம் அப்படியே உருகுகிறது. அவன் முடியா வைத்திருக்கிறான்? (சிரிப்பு) நாளைக்கு உங்கள் பிள்ளைகள் அப்படி வந்துவிடும். பிள்ளைகள் பள்ளிக்கூடத்திற்குப் போகும்பொழுது, கடற்கரைக்குப் போகும் பொழுது, அவர்கள் ஆண் குழந்தைகளா அல்லது பெண் குழந்தைகளா என்று கண்டுபிடிக்க முடியாத நிலையிலிருப்பது (சிரிப்பு) பரிதாபமானதில்லையா? இதை மாற்றுவது மனிதாபிமான உணர்ச்சியோடு செய்யப்படுகிற காரியம் என்று சொல்கிறேன்.

யாரோ ஒரு தேவராம். அவரே சொன்னார், அவருடைய நண்பரும் சொன்னார்கள். நீ படத்தைப்பற்றி இப்படி பேசுகிறாயே, தேவர் எடுக்கிற படத்தை வந்து பார் என்று சொன்னார்கள். வேண்டாமென்று சொன்னேன் நான் படம் பார்ப்பதில்லை, பார்க்கமாட்டேன் என்று சொன்னேன். டாக்சியிலே போகும் பொழுது, பஸ்ஸிலே போகும்பொழுது, சென்னையிலே நடந்து போகும்பொழுது சுவரில் இருக்கிற வால் போஸ்டர்களைப் பார்த்தால், 'கால் தலைக்கு மேல் இருக்கிறது' (சிரிப்பு). என்ன அநியாயம்? (திரு. கோவை செழியன் உள்ளே நுழைந்தார்). (குறுக்கீடு). அவர் ஒரு பட முதலாளியா? (குறுக்கீடு) அவர் அப்படி எடுக்கவில்லையென்று சொல்கிறார்கள். ஆனால் சில பேர்களிடத்தில் கேட்டேன். அம்மாதிரி இல்லையென்றால் படம் ஓடுவதில்லையென்று சொல்கிறார்கள். படம் எந்த மாதிரி? காலை தலைக்கு மேலே... ஒரு கால் தலைக்கு மேலே இருக்கிறது. அப்படியே படம் எடுக்கப்பட்டிருக்கிறது. அது வால் போஸ்டாக ஒட்டப்பட்டிருக்கிறது. எவனாவது 30-க்கும் 22-க்கும் மத்தியிலே இருக்கிறவன் இதைப்பார்த்துவிட்டு, தியேட்டருக்குப் போகாமல் இருப்பானா? என்னைப் போல் 60-க்கு மேல் இருப்பவன், வெட்கப்பட்டு, விகாரப்பட்டு, போகாமல் இருப்பான் ஆகவேதான் தேசியமயமாக்கவேண்டுமென்று சொல்கிறேன்.

நான் சினிமாவே வேண்டாமென்று சொல்கிறவன். நான் ராஜகோபாலாச்சாரியாரைப் போல, பெரியார் ஈ. வி. ராமசாமியைப் போல வேண்டாமென்று சொல்பவன். இல்லை



வேண்டும், பொழுதுபோக்குக்கு வேண்டுமென்று சொன்னால், அதிலே கொஞ்சம் புனிதம் இருக்கட்டும், நியாயம் இருக்கட்டும். இதை வரையறை செய்ய சர்க்கார் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் வரையறை செய்யமுடியும். வெளி நாட்டுப் படங்களைப் பார், என்று சொல்வார்கள். அவர்கள் எதை வேண்டுமானாலும் செய்வார்கள் அந்தப் படங்களைப் பார்த்து..

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** படம் தியேட்டர்களை தேசியமயமாக ஆக்கினாலும் மத்திய தணிக்கைக் குழு பார்த்துத் தான் படங்கள் வெளியிடப்படுகின்றன. அவர்கள்தான் அதைத் தடுக்கவேண்டுமே தவிர, மாநில அரசு அதைத் தடுக்க முடியாது.

**திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன்:** முதல்வர் அவர்களுடைய பதிலை பார்த்தீர்களா? இப்படித்தான் நாம் மாட்டிக்கொண்டிருக்கிறோம் எல்லாவற்றிலும்.

'சேவித்தும் சென்றிரந்தும் தெண்ணீர் கடல்கடந்தும்
பாவித்தும் பாராண்டும் பாட்டிசைத்தும்
பாழி னுடம்பை வயிறுவளர்க்க
நாழி அரிசிக்கே நாம்...

என்று சொன்னதுபோல் எங்கே போய் நின்றாலும் அங்கே போய்த் தான் நிற்கிறது. இந்தப் படத்தை சென்சார் செய்து, இங்கிருக்கிற தமிழகத்தினுடைய நாகரிகத்திற்கு ஒத்தபடி படம் எடுப்பதற்கு அவர்களுடைய ஆதரவு வேண்டுமென்றால், அவர்கள் சம்மதிக்க வேண்டுமென்றால், இந்த தமிழ் நாட்டிற்கு ஒரு சுயாட்சி வேண்டுமென்று அவர்கள் கூறுவது எவ்வளவு முக்கியமானது என்பதை....

**திருமதி த. ந. அனந்தநாயகி:** ஆனால் படம் எடுப்பவர்கள் எல்லாம் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள். ஆகையால், மத்திய தணிக்கை போர்டு செய்யவில்லையென்று சொல்லாமல், இங்கே இருக்கிற பட முதலாளிகளோடு பேசி, நல்லமுறையில் படம் எடுத்தால், அப்படி தணிக்கை போர்டுக்குப் போய் அவர்கள் செய்யவில்லையென்று...

[1973 மார்ச் 6

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, நான் விளக்க விரும்புகிறேன். தணிக்கை போர்டு மத்திய அரசின் சார்பாகத்தான் நியமிக்கப்படுகிறது. இன்னும் சொல்லப் போனால் அந்த தணிக்கை போர்டிலே இருக்கிற உறுப்பினர்களை நியமிக்க சிபாரிசு செய்கின்ற அந்த உரிமை கூட மாநில அரசுக்குக் கிடையாது. அவர்களேதான் நேரடியாக அந்த உறுப்பினர்களை நியமிக்கிறார்கள்.

இங்கே நம்முடைய முஸ்லீம் லீக் கட்சித் தலைவர் குறிப்பிட்டதைப் போல, அல்லது அம்மையார் அவர்கள் குறிப்பிட்டதைப் போல் நாம் ஒரே சீரான படங்களைத் தான் எடுக்கவேண்டும். பண்பாடு கெடாமல் அந்தப் படங்களை எடுக்க வேண்டுமென்று பட முதலாளிகள் முன்வந்து அந்தப் படத்தை எடுத்து வெளியிட்டால் அதே நேரத்திலே, ஏற்படுகின்ற கோளாறு என்னவென்றால், வட நாட்டிலே எடுக்கின்ற இந்திப் படங்கள், அவர்கள் இடத்திற்கு எது எது வசூலைக் கொடுக்குமோ அப்படிப்பட்ட காட்சிகளை எடுத்து படங்களை எல்லாம் சென்சார் போர்டுக்கு அனுப்பி விடுகிறார்கள்.

அந்தப் படங்கள் தமிழ் நாட்டிலே எடுக்கப்படுகின்ற தூய்மையான படங்களுக்கு நேர்மாறாக, போட்டியாக வந்துவிடுகின்றன. அதன் காரணமாகத் தமிழ்ப் படங்களின் வசூல் குறைந்து விடுகிறது. அந்தப் போட்டியைத் தவிர்ப்பதற்காக அதே ரீதியிலே படம் எடுத்தால்தான் வசூலாகும் என்பதால் அப்படிப்பட்ட படங்களை எடுப்பதற்கான சூழ்நிலைக்கு இங்கே உள்ளவர்கள் தள்ளப்படுகிறார்கள். மாநில அரசுக்கு என்று அவர்களே ஒரு தணிக்கைக் குழுவை வைத்து அவர்களே அவற்றையெல்லாம் கட்டுப்படுத்தக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டால் நல்லது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** அந்தக் காரணத்திற்காகத்தான் மத்திய அரசு தணிக்கை போர்டை வைத்திருக்கிறது.

It is a multi-State. This is a federal country. There are pictures produced in Calcutta and Bombay. They may be in different languages. They are censored by All-India Board. The Hon. Minister is giving an answer to his own poser; because different States are producing pictures, we should have a Central Board of Censors.



1973 மார்ச் 6] [டாக்டர் எச். வி. ஹாண்டே]

Probably the Hon. Chief Minister wants another Board of Censors to censor films produced in Calcutta, Bombay, etc., and which are to be exhibited in this State. Then we become isolated.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** எனக்குப் படத் துறையிலே நீண்ட நாள் அனுபவம் உண்டு என்று டாக்டர் ஹாண்டே அவர்களுக்கு நன்றாகத் தெரியும் என்று கருதுகிறேன். மத்திய அரசு சென்சார் போர்டு, நம்முடைய முஸ்லீம் லீக் கட்சியின் தலைவர் அவர்கள் சொல்லியதைப்போல், அவர்கள் மும்முரமாக இருந்து தணிக்கை செய்வதிலே கண்காணிப்பாக இருந்திடவேண்டும். சென்னையிலே இருக்கின்ற தணிக்கை போர்டு படத்தை தணிக்கை செய்வதற்கும் மத்தியிலே இருக்கின்ற போர்டு தணிக்கை செய்வதற்கும் இடையே சில சங்கடங்கள் இருக்கின்றன. அதற்காகத்தான் சொன்னேன். அப்படிப்பட்ட படங்கள் வரக்கூடாது என்று முடிவு எடுத்தால்கூட அதைக் கட்டுப்படுத்த முடியாது. மத்தியிலே இருக்கிற போர்டு, பம்பாயிலே இருக்கிற ரீஜினல் போர்டு, அப்படிப்பட்ட ஆபாசமான படங்களை அங்கே இருக்கின்ற கலாச்சாரத்தை மனதிலே வைத்துக்கொண்டு அனுமதித்து விடுகிறார்கள். அப்படிப்பட்ட படங்கள் தமிழ் நாட்டிற்கு வருகின்றபொழுது இங்கே இருக்கின்றவர்களும் அப்படிப்பட்ட படங்களை எடுத்தால்தான் போட்டியைச் சமாளிக்க முடியும் என்ற சூழ்நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள் என்றுதான் சொன்னேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** மாநிலத்திற்கு படங்களை தணிக்கை செய்கின்ற உரிமை கொடுக்கப்படவேண்டுமென்று கேட்கிறார்கள். பம்பாயிலே தணிக்கை செய்யப்பட்ட படத்தை இங்கே கொண்டுவந்தால் வரக்கூடாது என்று நீங்கள் தடுப்பீர்களா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** பல மாநிலங்கள் ஆக இருந்தாலும் கலாச்சாரம் வேறுபடுகின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது. பம்பாயிலே எடுக்கப்பட்டு, அவை ஆபாசமான படங்களாக இருந்தால் அவை தமிழ்நாட்டிற்கு வந்தால், அவற்றைத் தடுப்பதற்கு உரிமை இருக்கவேண்டும். அந்த உரிமை இங்கே இருக்கிற தணிக்கைக் குழுவிற்கு வேண்டும் என்றுதான் சொன்னேன்.

Dr. H. V. HANDE: My point is, it is only for that we are having the Central Board. Otherwise we will be dividing the whole country into number of small pockets. Other States' pictures come here. It is only for that purpose the Central Board exists.

THIRU M. A. LATHEEF: So far as this point is concerned, let me say this. There is the Central Board of Censors. There are so many States in this country and it should be an inter-State relationship. It is said that the Central Government alone is competent to censor the pictures that are produced in different States. It is an admitted fact that every State has got its own culture and civilisation. That is why we say so far as this State Government is concerned, it alone is competent to look after and preserve its own culture and so we must have the censoring power to preserve that culture and that authority must be with the State Government and not with the Central Government. That is the point.

(Dr. H. V. Hande rose).

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Dr. Hande, just a minute. (laughter) தமிழ் நாட்டிற்கு ஆங்கிலப் படங்கள் வருகின்றனவே, அவர்களுடைய கலாச்சாரப்படி அந்தப் படங்கள் அவர்களுக்கு ஆபாசமாக இல்லையென்று சொல்வார்கள். ஆனால் நீங்கள் ஆங்கிலப் படம் இங்கே வரக்கூடாது என்று தடுப்பதற்கு அதிகாரம் கேட்கிறீர்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஆங்கிலப் படங்கள் இங்கே நம்முடைய நாட்டிற்கு வந்தால் மத்திய தணிக்கைக் குழு அப்படியே அவற்றை அனுமதித்து விடுவதில்லை. அவர்கள் வெட்டி விடுகின்ற காட்சிகள் தவிர மிச்சம் இருக்கிற காட்சிகளை கவர்ச்சியாக இருப்பதைப் பார்க்கிறோம். எப்படி வெளி நாட்டிலிருந்து படங்கள் இந்தியாவிற்கு வருகிற நேரத்திலே மத்திய தணிக்கைக் குழு, காட்டத் தகாத காட்சிகள் என்று வெட்டிவிட உரிமையிருக்கிறதோ, அதைப் போலவே மாநிலத்திலே இருக்கிற தணிக்கைக் குழுவிற்கு, இந்த மாநிலத்தின் கலாச்சாரத்திற்கு மாறாக விரோதமான காட்சிகள் இருந்தால் அப்படிப்பட்ட காட்சிகளை வெட்டிவிடுகின்ற உரிமை வேண்டும் என்றுதான் சொன்னேன்.



டாக்டர் எச். வி. ஹாண்டே: அப்படிப் பண்ணினால் இந்த ஸ்டேட் ஐஸொலேட்டட் ஆக இன்ஸொலேட்டட் ஆகப் போய்விடக் கூடிய நிலைமை வரும் என்றுதான் நானும் முன்னாலேயே சொன்னேன்.

திரு. கோவை செழியன்: ஒரு மாநிலத்திலே பெண்கள் மேல் சட்டை போடுவது பழக்கம் இல்லை. அதனால் அங்கே இருக்கிற ரீஜினல் போர்டு அதை அனுமதித்து இருக்கிறார்கள். அந்தப் படம் தமிழ் நாட்டிலே ஓடுகிறது. நாங்கள் தமிழ்நாட்டுப் பண்பாடோடு படம் எடுத்தாலும் யாரும் பார்ப்பதில்லை. அதனால் தான் ரீஜினல் போர்டு கன்ட்ரோல் வேண்டும் என்று சொல்வதை நான் முழு மனதோடு வரவேற்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன்: எப்படியோ இப்பொழுது இருக்கிற முறை நல்லதல்ல என்று எல்லோரும் சொல்கிறார்கள், அதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிப் பட்ட நிலைமை வளருமானால் தொன்றுதொட்டு இருந்து வருகிற தமிழ் நாட்டின் பண்பு, நிலைமை பாழ்பட்டுப் போய்விடும், தீமைப்பட்டுப் போய்விடும், கெட்டுவிடும். ஆங்கிலப் படத்திலே முழங்காலுக்கு மேலே துணியில்லையா, அந்தக் காட்சியை வெட்டிவிடு, வடநாட்டுப் படங்களிலே மேலே முழுமையாகத் துணியில்லையா வேண்டாம் என்று சொல்லிவிடு என்று சொல்லக் கூடிய உரிமையைக் கேட்போம். அவர்கள் சொன்னார்கள், எங்களது படம் ஓடவில்லையென்று.

முதல்வர் அவர்கள் அதைப்பற்றி சொல்லும்பொழுது ஒரு நல்ல வார்த்தையைச் சொன்னார்கள், எனக்கு மறந்துவிட்டது. கவர்ச்சி என்ற வார்த்தையைச் சொன்னார்கள். கலை என்பதுபோல் அது கவர்ச்சி. அதற்கு கலை உலகத்திலே வைத்திருக்கிற பெயர் அதுதான். அந்த பாழாய்ப்போன கவர்ச்சியை வேரோடு சாய்ப்பதற்கு மாநில சர்க்காருக்கு உரிமை கொடுக்க வேண்டும். ஆளுங்கட்சி உறுப்பினர்களும் அதற்கு சிபாரிசு செய்ய வேண்டும். மற்றவர்களும் குறிப்பாக என் சகோதரி ஹாண்டேயும் (சிரிப்பு) அவரை நான் சகோதரன் என்பதற்குப் பதிலாக அப்படிச் சொல்[illegible] விட்டேன். நான் திருமதி அனந்தநாயகி அம்மையா[illegible] குறிப்பிடுவதற்குப் பதிலாக ஹாண்டேயைக் குறிப்பிட்[illegible]

விட்டேன். அம்மையார் அவர்களை சகோதரன் என்றுகூடச் சொல்லலாம். சில சமயங்களிலே அவர்கள் சகோதரியாக மட்டுமல்ல, சகோதரனாக மாறுகிறார் (சிரிப்பு) சில சமயங்களிலே வீரத்தன்மையோடு, மறவர் வீரத்தன்மையோடு அவருடைய பேச்சு இருக்கிறது. அம்மையார் அவர்கள் அவர்களுடைய அரசினிடத்திலே சொல்லி இந்த உரிமையை மாநில சர்க்காருக்கு வாங்கித் தரவேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன்.

இன்னொன்றும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். முதல்வரவர்கள் குறிப்பிடுகிறார்கள். இதை அவருடைய கட்சிக்காக மட்டும் அவர்கள் குறிப்பிட்டதாக நான் கருதவில்லை. எனக்கும் சேர்த்துத்தான் குறிப்பிட்டதாகக் கருதுகிறேன். ஹாண்டே அவர்களுக்கும் சேர்த்துத்தான் குறிப்பிட்டதாகக் கருதுகிறேன். மற்றவர்களுக்கும் சேர்த்துத்தான் குறிப்பிட்டதாகக் கருதுகிறேன். இதுதான் அதனுடைய முடிவு. அதாவது ஆங்கிலத்தில் சொல்ல வேண்டுமென்றால் 'எஸ்ஸென்ஸ் பாயிண்ட்'. "உதட்டின் வெளியீடுகளாக மட்டும் சமதர்மத் திட்டங்கள் அமையாமல், செயலின் வடிவங்களாகவும் அவைகள் ஒளிவிட வேண்டுமென்பதில் இந்த அரசுக்கு நிறைந்த அக்கறையுண்டு" என்பதுதான் இதிலே முக்கியம். வெறும் உதட்டளவிலே சோஷலிசம் பேசுவது, எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள், எவ்வளவு தொல்லைப் படுகிறார்கள், தொழிலாளர்கள் எவ்வளவு பரிதாபகரமான நிலையில் வேலையற்றிருக்கிறார்கள், அந்தோ பாவம், அவர்கள் அவதியுறுகிறார்கள், இம்சைப்படுகிறார்கள் என்று சொல்வதற்கு முன்னால், அவர்களை அந்நிலைக்குக் கொண்டு வந்துவிடாமல் சமதர்ம சோஷலிசத்தைச் சிருஷ்டிப்பதற்கு இந்தச் சர்க்காரோடு ஒத்துழையுங்கள் என்பதுதான் அதனுடைய கருத்து என்று கூறிக் கொண்டு நான் என்னுடைய தொகுதியைப்பற்றி ஓரிரு வார்த்தைகள் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியிலே இரண்டு பிரச்னைகள் முக்கியமாக இருக்கின்றன. அதாவது குடிசைகள் அதிகமாக உள்ள பகுதியும், பணம் அதிகமாக உள்ள பகுதியும் கொண்டது என்னுடைய தொகுதி. அதாவது சென்னையினுடைய இருதயம். குடிசை மாற்று வாரியம், அதற்காக அங்கே குடிசைகளை மாற்றித் திட்டங்கள் பல செய்திருக்கிறது. ஆனால் இன்னும் சில செய்ய



வேண்டி இருக்கிறது. அதை என்னுடைய தொகுதியில் பூர்த்தியாகச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இன்னொன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அந்தத் தொகுதியில் சாராயக் கடைகளும், கள்ளுக் கடைகளும் அங்கேயுள்ள வியாபாரிகளைப் பெரிதும் பாதிக்கும். இரண்டு இலட்சம் வருமானம் வரக் கூடிய ஒரு சாராயக்கடை ஒரு மாதத்திற்கு 1 கோடி ரூபாய் வருமான வரி கட்டுபவர்களின் மத்தியில் வைக்கப்பட்டிருப்பதால் அவர்கள் எவ்வளவு தொல்லைகளை அனுபவிக்கிறார்கள் என்பதைப்பற்றி முதல்வரிடத்திலேயே நேரிலேயும் சொல்லியிருக்கிறேன், கலெக்டரிடத்திலேயும் சொல்லியிருக்கிறேன், அவருக்குக் கீழேயுள்ள நிர்வாகிகளிடத்திலேயும் சொல்லியிருக்கிறேன். அதை மாற்றிக் கொஞ்சம் ஒதுக்கலாக வைத்தால் நல்லது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மூன்றாவதாக என்னுடைய தொகுதியில் பர்மா அகதிகள் இருக்கிறார்கள். இன்னும் அவர்களுடைய வாழ்க்கை திரிசங்கு சொர்க்கத்தில்தான் இருக்கிறது. இன்றைக்குப் பிடுங்குவார்களோ, நாளைக்குப் பிடுங்கச் சொல்லுவார்களோ, இன்றைக்குப் பிரிக்கச் சொல்லுவார்களோ, நாளைக்குப் பிரிக்கச் சொல்லுவார்களோ என்ற நிலை இருக்கிறது. அவர்களுக்கு ஒரு நிரந்தரமான பரிகாரத்தை உண்டாக்கி, அவர்களுடைய நிலையைச் சமமாக்கி அவர்களது மனத்தில் திருப்தியை உண்டாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்று தயவு செய்து கேட்டுக்கொள்கிறேன். இங்கே தொப்பி இல்லாமல் எவ்வளவு பேர் இருக்கிறார்கள். இன்னொரு தொப்பி இருக்கிறது. நான் வகாபைச் சொல்லுகிறேன், வேறு யாரையும் குறிப்பிடவில்லை. இந்த 2, 3 தொப்பிகள் இருந்தால் எடுப்பாகத் தெரியும், பல தொப்பிகள் இருப்பதைப்போல். அதைப்போல முஸ்லீம்களில் மிகச் சிலரே வசதியுள்ளவர்கள். மற்றவர்களெல்லாம் பின் தங்கியவர்கள். உருது முஸ்லீம்கள் என்று சொல்லப்படுபவர்கள் இப்பொழுது உருது மொழி பேசுவதில்லை, அவர்கள் தமிழ்தான் பேசுகிறார்கள். ஆனால் உருது முஸ்லீம் என்ற பெயர் இருக்கிறது. அவர்கள் பெரும்பாலும் மிகவும் பின்தங்கியவர்களாகத்தான் இருக்கிறார்கள். அவர்கள் ரோடி சுற்றுகிறார்கள், தகர வேலை செய்பவர்களாக இருக்கிறார்

[திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன்] [1973 மார்ச் 6

குதிரை வண்டி ஓட்டுகிறார்கள், டெய்லர் வேலை செய்கிறார்கள். இம்மாதிரி இருக்கின்ற அந்தச் சிறு தொகையினரைத் தயவு செய்து பின் தங்கியவர்களின் பட்டியலிலே சேர்க்க வேண்டு மென்பதை முடிவுரையாகக் கேட்டுக்கொண்டு, இந்த நேரத்தை எனக்கு அளித்ததற்காக தலைவரவர்களுக்கு நன்றி கூறி என் னுடைய வார்த்தைகளை முடித்துக்கொண்டு விடைபெறுகிறேன்.

*திரு. இ. எஸ். தியாகராசன் : மாண்புமிகு தலைவரவர்களே, டாக்டர் கலைஞர் அவர்கள் அளித்த 1973-74-ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையை நான் மனப்பூர்வமாக வரவேற்று என்னுடைய சில கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றையதினம் நமக்கு அளிக்கப்பட்டிருக்கின்ற நிதிநிலை அறிக்கை உபரி நிதிநிலை அறிக்கையாக அளிக்கப்பட்டிருக்கிறது இந்தியாவிலேயே நமது தமிழகத்திலேதான் உபரி பட்ஜெட் அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை அறியும்பொழுது உண்மை யிலேயே கலைஞர் அவர்களையும், இந்த அமைச்சரவையையும் நான் பாராட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒருசில நண்பர்கள் சொல்கிறார்கள், உபரி வரி விதிக்காமலே இந்த பட் ஜெட்டைக் கலைஞர் போட்டிருக்கிறார், அதற்குக் காரணம் மது விலக்கை ரத்து செய்ததுதான் என்று ஒருசாரார் அபிப்பிராயப் படுகிறார்கள். ஆனால் மதுவிலக்கை ரத்து செய்து இருக்கின்ற பல இராஜ்யங்களில் இன்றைக்கு அந்த வரியையும் பெற்றுக் கொண்டு மக்கள்மீதும் அதிக வரியைப் போடுகின்ற சில இராஜ்யங்கள் இந்த நாட்டிலே இருப்பதை நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், புதிய பட்ஜெட்டிலே அரிசனங்களுக்காக வீட்டு வாரியம் அமைப்பது என்றும், அவர்களுக்கு எதிர் காலத்திலே வாழ்வை உண்டாக்கப்போகிறது என்பதையும் அறியும்பொழுது உண்மையிலேயே இந்த அரசைப் பாராட்டு வதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். அரிசன மக்களுக்கு இது வரையிலே தமிழகத்திலே திராவிட முன்னேற்றக்கழக அரசு பொறுப்பேற்ற பிறகு பல கோடிக்கணக்கான பணத்தை அவர் களுக்காகச் செலவு செய்து நல்ல பல காரியங்களைச் செய்து வருகிறது. மனைப்பட்டாக்களும், நிலப்பட்டாக்களும் அவர்களுக்கு



1973 மார்ச் 6] [திரு. இ. எஸ். தியாகராசன்]

அளிக்கப்பட்டு வந்திருக்கிறது. அதைத்தொடர்ந்து இந்த ஆண்டிலே ஒரு வாரியத்தை அமைத்து அதன் மூலம் 10,000 வீடுகள் கட்டிக்கொடுப்பதற்காக அரசு முன் வந்திருப்பதற்கு நான் உண்மையிலேயே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதேபோன்று அரிசன மக்களைவிட கீழ் நிலையிலே பிற்பட்ட மக்களும் இருக்கிறார்கள். பிற்பட்ட ஜாதி மக்கள் அந்த நிலை யிலே இருக்கிறார்கள். அவர்களுக்கும் நமது அரசு ஒரு வாரி யத்தை அமைத்து, எப்படி அரிசன மக்களுக்கு 10 ஆண்டுக் காலத்தில் வீடுகள் கட்டித் தருவதற்கு அரசு முன் வந்திருக் கிறதோ அதைப்போன்றே பிற்பட்ட சமூகத்தினருக்கும் ஒரு வாரியத்தை அமைக்க முன்வர வேண்டும். அதன்மூலம், 10,000 வீடுகள் இல்லையென்றாலும், 5,000 வீடுகளாவது ஆண்டுக்கு ஒரு முறை கட்டுவதற்கு முன் வந்தால் உண்மையிலேயே பிற்பட்ட சமுதாயத்தை அக்கறையோடு பார்க்கின்ற இந்த அரசுக்கு மேலும் நல்ல பெயர் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

(திரு. நா. வீராசாமி தலைமை)

வாரியங்கள் அமைப்பதைப்பற்றிச் சொல்கிறார்கள். குறை சொல்கிறார்கள். வாரியங்களை அமைப்பதன் வாயிலாக ஏதோ அரசியலிலே இருப்பவர்களுக்குச் சில பதவிகள் கொடுக்கத்தான் அதை அமைப்பதாகக் குறைப்படுகிறார்கள். இப்பொழுது நமக்கு குடிசை மாற்று வாரியம், குடிநீர் வாரியம் போன்ற அமைப்புகள் வந்த பிறகு தான் இன்றைக்குச் சென்னையைச் சுற்றிவரும்பொழுது பல மாடி வீடுகள் தென்படுகின்றன. முன்பு குடிசைகளிலே வாழ்ந்த ஏழை எளியவர்களெல்லாம் இன்றைக்கு மாடி வீட்டிலே வாழும் நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பெருமையாகக் கூறிக்கொள்ள முடிகிறது. நம்முடைய நாட்டிற்கே வெளிநாட்டிலேயிருந்து வருகின்றவர்கள் எல்லாம் அதைப்பார்த்துப் பாராட்டக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இப்படி தனியாக வாரியம் அமைத்த பிறகுதான் இவ்வளவு மும்முரமாக வேலை செய்ய வாய்ப்பிருக்கிறது. அதேபோன்று குடி நீர் வாரியம் அமைத்திருக்கிறார்கள். அதற்குத் தலைவர் இருக் கிறார். இப்படி அமைத்ததன் பயனை இன்றைக்கு நாட்டிலே

கிராமங்களுக்குக் குடிநீர் வசதியும், டவுன் பஞ்சாயத்து, முனிசிபாலிடிகளுக்கும் விரைவிலே தண்ணீர் கிடைக்கிறது. இது வாரியத்தை அமைத்ததன் விளைவாகத்தான் ஏற்பட்டதேயன்றி வேறல்ல என்பதை நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, என்னுடைய பெருமதிப்பிற்குரிய நண்பர்களெல்லாம், மேட்டூர் அலுமினியம் தொழிற்சாலையைத் தேசியமயமாக்கியது தவறு என்று சொல்கிறார்கள். அலுமினியம்தான் ஏழை எளிய மக்களுக்கு மிகவும் குறைந்த விலையில் கிடைப்பது. மண் பாண்டங்களுக்கு அடுத்தாற்போல் மலிவாகக் கிடைப்பது அலுமினியம்தான். அது குறைந்த விலையில் ஏழைகளுக்குக் கிடைக்க வேண்டுமென்று டாக்டர் கலைஞர் அவர்கள் கருதியதன் பயனாக மேட்டூர் அலுமினியம் தொழிற்சாலை பொதுச்சொத்தாக ஆக்கப்படுகிறது. அதை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். இதனால் ஏழை எளியவர்களுக்கு அலுமினியம் குறைந்த விலையில் கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது.

அடுத்தபடியாக, மின்சாரப் பற்றாக்குறையைப்பற்றி நாம் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறோம். மின்சாரப்பற்றாக்குறை என்பது நம்முடைய அரசு தோன்றியபிறகுதான் ஏற்பட்டது என்பது அல்ல. தமிழகத்திலே எந்த ஒரு கிராமமும் மின்சாரம் இல்லாத நிலையில் இருக்கக்கூடாது என்று நம்முடைய தமிழக அரசு பொறுப்பேற்ற பிறகு அந்தப் பெரும் பணியைச் செய்திருக்கிறது. அதுமட்டுமல்லாமல், 1967-க்குப் பிறகு பல தொழிற்சாலைகள் இந்த நாட்டிலே தோன்றியிருக்கின்றன. அதற்குப் போதுமான மின்சாரத்தைக் கொடுத்தது மட்டும் அல்லாமல், இயற்கையின் சதியின் காரணமாகவும், மழையில்லாததன் காரணமாகவும் இந்த மின்சாரப் பற்றாக்குறை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. அதைப் போக்குவதற்காக கலைஞர் அவர்களும், அமைச்சரவர்களும் இதற்குத் தக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டதற்காக அவர்களைப் பாராட்டி, மிக்க விரைவிலே மின்சாரக் குறைப்பைத் தவிர்க்க நாம் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

பி.ப. 12-30 அடுத்து, நூல் விநியோகத்தைப் பற்றிச் சில வார்த்தைகள் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றையதினம் நூல் கிடைக்காமல் நெசவாளர்கள் துன்பப்படுகிறார்கள். நூல் விலை





திடீரென்று உயர்ந்து விட்டது. அந்த ஏழை நெசவாளர்களுக்கு நல்ல எதிர்காலம் உண்டாக்க அரசு மில்களில் உற்பத்தியாகும் நூல்களை எல்லாம் அரசே பெற்று விநியோகம் செய்வதற்கு நூல் விநியோக வாரியம் ஒன்று அமைக்கப்படுமானால் ஏழை நெசவாளர்களுக்கு வாய்ப்பாக இருக்கும் என்ற எண்ணத்தை எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏழை நெசவாளர்கள் படும் துன்பத்தைக் கண்டு எல்லாக் கட்சியினரும் சேர்ந்து சட்டமன்றத்தில் அருமையான தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். நம்முடைய முதல்வர் அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றி இருக்கிறார்கள். நமக்குத் தேவையான நூலை மத்திய அரசு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். நெசவாளர்களுக்குத் தேவையான நூல் விரைவில் கிடைக்க மத்திய அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கல்வித் துறையில் ஆண்டுதோறும் கோடிக்கணக்கான ரூபாய்களை அதிகமாகச் செலவழித்துக் கொண்டே வருகிறோம். என்னுடைய தொகுதியில் திருத்தணியில் தோற்றுவிக்கப்பட்டிருக்கும் கல்லூரியில் பட்டப்படிப்பு வகுப்பு வசதி செய்து கொடுக்கப்படவில்லை. ஆரம்பத்திலிருந்து பி.யு.சி. மட்டுந்தான் இருக்கிறது. சுமார் 500 மாணவர்கள் படிக்கிறார்கள். படித்து முடித்த பிறகு பட்டப் படிப்பு வகுப்புக்குப் போக வேண்டுமென்றால் வெளியூர்களுக்குச் செல்லும் கஷ்ட நிலையில் இருக்கிறார்கள். இந்த ஆண்டாவது மாண்புமிகு நாவலர் அவர்கள் அங்குள்ள அரசினர் கல்லூரியில் பட்டதாரி வகுப்பை ஏற்படுத்துவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

திருத்தணி மாபெரும் யாத்திரிகர்கள் ஸ்தலம். ஆயிரக்கணக்கான மக்கள் தினந்தோறும் வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ரயில்வே ஓவர் பிரிட்ஜ் இல்லாமல் மிகவும் அவதிப்படுகிறார்கள். நம்முடைய மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் மத்திய அரசுக்குச் சிபாரிசு செய்து விரைவில் அங்கு ஒரு ஓவர் பிரிட்ஜ் வருவதற்கான வாய்ப்பை உண்டாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. இ. எஸ். தியாகராசன்] [1973 மார்ச் 6

திருத்தணித் தொகுதியில் இருக்கும் எல்லா அரசு உயர்நிலைப் பள்ளிகளும் கட்டடங்கள் இல்லாமல் இருக்கின்றன. அண்மையில் ஏற்பட்ட புயலின் காரணமாக பல பள்ளிக்கூரைகள் காற்ருேடு காற்ருகப் பறந்து விட்டன. அந்த மாணவர்கள் படிக்க கட்டடம் இல்லாமல் அவதிப்படுகிருர்கள். இந்த பட்ஜட்டிலாவது அதற்குப் போதுமான நிதியை ஒதுக்கீடு செய்து நல்ல பள்ளிக் கட்டடங்களைக் கட்டித் தர வேண்டுமென்று கல்வியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் அதிலே அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, I rise to say a few words on the Budget presented to the House for 1973–74.

I congratulate the Hon. Chief Minister who also happens to be the Hon. Finance Minister for presenting a surplus budget in spite of many natural calamities, like cyclone, drought and presence of chronically drought-affected areas. In addition to the surplus nature of the budget, he has taken care not to levy any new taxes and thus made it a tax-free budget. He also introduced many popular measures or benefits keeping the interests of Government servants and others in view. By these measures, increased D.A. has been given to Government servants and a legal cell to help labour, etc., has been created and help to unemployed has been chalked out.

Further, the budget has many good points like steps taken to development of Sidha and Ayurveda systems and also other rural development schemes. We know that a budget means that it is a bundle of many uninteresting hard facts and figures but by adding couplets from Thirukural, the Hon. Chief Minister has given charm to it and made it poltic. Thus it is relieving and revealing also. I feel we can accept the budget and appreciate it. I am also tempted to call it since it is a tax-free budget containing many welfare measures, a gift budget also, because the people are not worried with new taxes.

Another thing which I wish to refer to is decision to constitute Pudukkottai into a separate Revenue district. It is clearly stated by the Hon. Chief Minister as follows :



1973 மார்ச் 6] [Thiru K. S. KOTHANDARAMIAH]

' I am happy to announce that Pudukkottai will be constituted as a separate revenue district in keeping with the long-standing request of the people of the locality. The Board of Revenue has been requested to examine and make recommendations as to the areas that should be part of this new district and on connected issues '.

I congratulate the Hon. Chief Minister for taking into account the request of the people of that locality and deciding to constitute Pudukkottai into a separate district. At the same time, I wish to make an appeal to the Hon. Minister that there is a similar case in our State where there is a long-standing demand to constitute Hosur with the present Denkinikota taluk into a separate district. The people of that area have been representing to this Government and also the previous Government since a very long time.

The extent and population in Hosur with Denkinikota is almost similar to that of Pudukkottai. In our own state we have got the Kanyakumari district which is only 630 square miles in extent, still it is a separate district, and it is given so many facilities. Similarly in other States also, in West Bengal, there is the Darjeeling district with a population that is equal to Hosur taluk and similar in extent. Physical feature are also same.

In Maharastra State also there is a district with only 430 square miles. There are such districts in many other States also. Therefore, I feel that the request and desire of the people of Hosur may also be taken into consideration and the former Hosur taluk may be constituted into a separate district.

Hosur is also called the ' Balaghat ' area because of its physical features. In former years, i.e., before 1800 A.D., there was no Salem district at all. It came into existence to satisfy the imperial needs of the British Government. Taking certain parts of South Arcot, certain parts of North Arcot and Kongunadu, they formed an unnatural district. Recently it has now bifurcated into Salem and Dharmapuri, thereby setting right one injustice.

But there is another injustice which is yet to be set right. There should be a separate district of Hosur. Therefore, I request that the Hon. Chief Minister should bestow his kind attention to the

request of the people of Hosur and Denkanikotta taluks. I would also submit a memorandum soon.

My next point is about collegiate education. Now the Government wants to increase the period of college education to five years. My feeling is that it should not be increased. We have now got 11 years of high school education—five years in elementary school, three years in middle school and three years in High School, with four years in the colleges. To change in this is not needed. Therefore I feel that college education should be only four years. Perhaps, instead of one—year P.U.C., that can be converted into a two-year course as of old..............

(மணி அடிக்கப்பட்டது.)

* **திரு. ஆலடி அருணா :** மதிப்பிற்குரிய மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அளித்திருக்கிற வரவு-செலவுத் திட்டத்தை ஆதரித்து எனது கருத்துக்களை இந்த அவையின் மேலான கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன்.

மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்டு நாட்டில் தேக்கம் ஓரளவு ஏற்பட்டிருக்கிற சூழ்நிலையிலும் தென் மேற்கு பருவக் காற்று காரணமாக நாடெங்கும் வறட்சி ஏற்பட்டு மக்கள் மத்தியில் ஓரளவிற்கு பீதி கலந்த நிலைமை ஏற்பட்டிருக்கிற சூழ்நிலையிலும், மத்திய அரசு சுமார் 300 கோடி ரூபாய் அளவிற்கு வரிகளை விதித்து ஏழை மக்களின் மத்தியில் பெரிய துயரத்தை உண்டாக்கியிருக்கிற சூழ்நிலையிலும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் மாநிலங்களுக்கெல்லாம் வழிகாட்டுகின்ற வகையில் சமதர்ம அடிப்படையில் இந்த நிதிநிலை அறிக்கையை இந்த மன்றத்திற்கு அளித்திருப்பதற்காக தமிழ் சமுதாயம் அவருக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறது.

இந்த நிதிநிலை அறிக்கையில் எந்தப் புது வரியையும் முதல்வர் அவர்கள் விதிக்கவில்லை. ஏற்கனவே விதிக்கப்பட்ட எந்த வரியிலும் எந்தவித மாற்றமும் செய்யவில்லை. சூழ்நிலையை உணர்ந்து இந்த நாட்டு மக்களுடைய பளுவை உணர்ந்து, இந்த நாட்டு மக்களின் நியாயங்களை உணர்ந்து இவ்வளவு மகத்தான





நிதிநிலை அறிக்கையை அவர்கள் இந்த மன்றத்திற்கு அளித்திருக்கிறார்கள். இவ்வளவு சிறப்பான நிதிநிலை அறிக்கையை அளித்த பிறகும் கூட எதிர்முகாமைச் சேர்ந்தவர்கள் வழக்கம்போல் அவர்களுடைய முனைமுறிந்த கணைகளை இந்த அரசின்மீது வீசிக் கொண்டேயிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபிறகு உபரி பட்ஜெட்டையும் அளித்திருக்கிறது, பற்றாக்குறை வரவு செலவுத் திட்டத்தையும் அளித்திருக்கிறது, வரி உள்ள நிதிநிலை அறிக்கையும் அளித்திருக்கிறது, வரியே இல்லாத நிதிநிலை அறிக்கையையும் அளித்திருக்கிறது. இப்படி ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எந்த நிதிநிலை அறிக்கையை எடுத்தாலும் அவற்றை குறை சொல்வதே, அவற்றிற்கு களங்கம் கற்பிப்பது மட்டுமே, அவர்கள் வழக்கமான பாணங்களாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

இவ்வளவு அருமையான வரவு செலவுத் திட்டத்தை, சமதர்ம அடிப்படையில் உருவாக்கப்பட்ட இந்தத் திட்டத்தை, இதைக் கூட குறை சொல்கிறார்களே என்பதற்காக நிச்சயமாக ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் யாரும் வருத்தப்படவில்லை. ஆனால் இவ்வளவும் பார்த்துவிட்டு எதிர்க்கட்சிக்காரர்கள் குற்றம் சொல்கிறார்களே, இதற்கு களங்கம் கற்பிக்கிறார்களே என்ற நிலையைப் பொதுமக்கள் எண்ணிப்பார்க்கும்போது எதிர்க்கட்சிக்காரர்கள் தங்கள் கடமைகளை ஒழுங்காகச் செய்யவில்லை. எதிர்க்கட்சிக்காரர்கள் தங்கள் கடமைகளை நியாயமான அடிப்படையில் செய்யவில்லை என்பதை மக்கள் நினைப்பார்களே என்பதை மறந்துவிட்டு இந்த மன்றத்தில் சொல்கிறார்கள் என்பதை அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

வரிகள் போடவில்லை என்பதற்கான காரணங்களைத் தெரிவிக்கும்போது, இந்த அரசு ஏற்கனவே அதிகப்படியான வரிகளைப் போட்டுவிட்டது, எனவே புதிய வரிகள் போடுவதற்கான சாத்தியக்கூறுகள், வாய்ப்புகள் நாட்டிலே இல்லாத காரணத்தினால் தான் புது வரிகள் விதிக்கப்படவில்லை என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அப்படி ஒரு கருத்தை அவர்கள் இருதய பூர்வமாக சொல்வார்களேயானால், இனி வரிகள் விதிப்பதற்கான சாத்தியக்கூறுகளே நாட்டில் இல்லை என்பதை அவர்கள் ஒப்புக் கொள்வார்களேயானால் அவர்கள் வசமுள்ள ஊராட்சிகளில், நகராட்சிகளில் இனி எதிர்காலத்தில் வரிகள் விதிக்கப்

[திரு. ஆலடி அருணா] [1973 மார்ச் 6

போவதில்லை என்ற முடிவை அவர்கள் ஏற்றுக்கொள்வார்களா என்று கேட்க ஆசைப்படுகிறேன். யார் மீது வரி போடவேண்டும், யார் யார் மீது வரிகள் போட்டால் தாங்குவார்கள் என்பதை சமதர்மக் கொள்கையில் நம்பிக்கை கொண்டுள்ள நாங்கள், புரிந்துகொண்டுதான் செயல்படுகிறோம்.

இன்றைய தினம் ஏற்பட்டிருக்கிற மின்சாரப் பற்றுக்குறையைப் பயன்படுத்தி எப்படியாவது நாட்டில் ஆளும் கட்சிக்கு எதிராக ஒரு பெரிய நெருக்கடியை ஏற்படுத்த திட்டமிட்டு சூழ்ச்சி செய்து வருகிறார்கள் எதிர்க்கட்சிக்காரர்கள். இந்த மின்சாரப் பற்றுக்குறை எதனால் ஏற்பட்டது, யாரால் ஏற்பட்டது, எப்படி ஏற்பட்டது, இதற்கு யார் யார் பொறுப்பாளி என்பதை இதே மன்றத்தில் நமது முதல்வர் அவர்கள் தெளிவாக விளக்கிக் காட்டியிருக்கிறார்கள். ஆதாரங்களோடு சொல்லியிருக்கிறார்கள். புள்ளி விவரங்களோடு சொல்லியிருக்கிறார்கள். அரசு இதற்குப் பொறுப்பாளி அல்ல என்பதை விளக்கிக் காட்டியிருக்கிறார்கள். இயற்கையால் ஏற்பட்ட தீங்கினை சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசால் ஏற்பட்ட தடுமாற்றங்களை விளக்கிக் காட்டியிருக்கிறார்கள். இத்தனைக்கும் பிறகு எதிர்கட்சிக்காரர்கள் அந்த நியாயமான வாதங்களை ஏற்று மக்கள் மத்தியில் சந்திக்கிறார்களா என்றால் இல்லை.

எதிர்கட்சித் தலைவர்கள், அவர்களுக்காக வாதாடுகிற பத்திரிகைகள் திட்டமிட்டே ஆளும் கட்சிக்கு எதிராக விஷமப் பிரசாரம் செய்கின்றன. தென்மேற்கு பருவ மழை பெய்யவில்லை, அதனால் நீர் தேக்கங்களில் தண்ணீர் இல்லை என்பதை மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எந்த மட்டத்தில் நீர் இருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லியிருக்கிறோம். ஆனால் எதிர்முகாமைச் சார்ந்த பத்திரிகைகள் மக்கள் மன்றத்திற்கு வேண்டுமென்றே ஒரு தவறான தகவலை, தந்திருக்கிறது.

சபாநாயகர் அவர்களின் அனுமதியோடு ஒரு பத்திரிகையில் வெளியிட்டிருக்கிற தவறான தகவலை இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். அணைகளில் நீர்மட்டம் குறைகிற காலங்களில் மின்சார வெட்டு அமல்படுத்தப்படுவது உண்டு. ஆனால் தமிழ்நாட்டில் சமீபத்தில்தான் வெள்ளப் பெருக்கால் பலத்த சேதங்கள் ஏற்பட்டதுடன், அணைக்கட்டு களிலும் தற்போது திருப்திகரமான அளவு நீர்மட்டம் உள்ளது.



1973 மார்ச் 6] [திரு. ஆலடி அருணா]

இருந்தபோதிலும் நாடே இருளில் மூழ்கத்தக்க அளவிற்கு மின்சார வெட்டை தி.மு.க. கொண்டு வந்துள்ளது என்று பழைய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அந்தப் பத்திரிகை எழுதியிருக்கிறது. நாம் எல்லாம் கோயபெல்ஸ் இறந்துவிட்டான் என்று நினைத்தோம். ஆனால் அவன் இப்படி ஒரு புதிய அவதாரத்தை எடுத்திருக்கிறான் என்பது இதைப் படித்த பிறகுதான் புரிந்து கொள்ளமுடிகிறது.

இவ்வாறு உண்மைக்கு மாறான தகவலை மக்களிடையே அவர்கள் தந்து வருகிறார்கள். அகில இந்திய அடிப்படையில் எடுத்துப்பார்த்தால் ஆந்திரா, அல்லது பக்கத்திலுள்ள கேரளா அல்லது வேறு எந்த மாநிலத்தை எடுத்துக்கொண்டு பார்த்தாலும், அங்கு தனி நபர்கள் மின்சாரத்தை பயன்படுத்துகிற அளவிற்கு நாம் பயன்படுத்துவோமானால் இந்த நாட்டில் மின்சார வெட்டே ஏற்பட்டிருக்காது. தனி நபர்கள் மின்சாரத்தைப் பயன் படுத்துகிற நிலையில் இந்தியாவிலே அதிகமாக இருக்கிற மாநிலம் பஞ்சாப், அடுத்தபடியாக மஹாராஷ்டிரம், அதற்கு அடுத்த படியாக இருப்பது தமிழ்நாடுதான். வலது கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்கள் கேரளா பற்றி ஒவ்வொரு கட்டத்திலும் பெருமையோடு சொல்வார்கள். அந்தக் கேரளாவில் கூட இப்போது 25% மின் வெட்டு இருக்கிறது. கேரளாவில் பயன்படுத்துவது போல் தமிழ்நாட்டில் மின்சாரத்தைப் பயன்படுத்தியிருப்பார்களேயானால் இந்த வெட்டே ஏற்பட்டிருக்காது. அந்த அளவிற்கு தொழில்களுக்கும், விவசாயத்திற்கும் நல்லமுறையில் மின்சாரம் அளித்திருப்பதே தமிழக அரசுதான். இதை கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஆதரவாக வருகிற ஒரு வட நாட்டுப் பத்திரிகை கூட மிகத் தெளிவாக எழுதியிருக்கிறது. தாற்காலிக சபாநாயகர் அவர்களே, தங்கள் அனுமதியோடு அதை இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன்.

'In Tamil Nadu the requirement of power has grown at a faster rate than the other States. This is due to the high per capita consumption of energy in that State, the large utilisation of power for agricultural purposes and the better industrial atmosphere prevailing.

[திரு. ஆலடி அருணா] [1973 மார்ச் 6

Kerala has a *per capita* consumption less than the All-India average and only about half of Tamil Nadu.

The *per capita* consumption of power in Kerala has been low. Growth of *per capita* consumption has also been rather slow, compared to the neighbouring State of Tamil Nadu. In the matter of utilisation of power for agricultural purposes Tamil Nadu has set up an All-India record. Nearly 23 per cent of total power is consumed by the agricultural sector. In Andhra Predesh the corresponding figure is 17 per cent and in Mysore 8 per cent. '

என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்த அளவிற்கு, மக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய அளவிற்கு கடந்த ஆறு ஆண்டுகளாக விவசாயத்திற்கும், தொழில் துறைக்கும் திராவிட முன்னேற்றக் கழக அரசு மின்சாரம் அளிப்பதன் மூலமாகத்தான் நாம் எதிர்பாராத வகையில் இதை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. இந்த நிலையை உணராத எதிர்க்கட்சிக்காரர்கள் மக்களை திசை திருப்பிவிடுகிற முறையில் இந்த இருட்டை பயன்படுத்த விரும்பினால் இருட்டில் திருடுகிற திருடனுக்கும் அவர்களுக்கும் வித்தியாசம் இல்லாமல் போய்விடும். நாங்கள் கூறியுள்ளவற்றின் நியாயங்களை அவர்கள் உணரவேண்டும். இன்று மின்சாரப் பற்றாக்குறைக்காக அரசின் மீது ஆத்திரப்படுகிற எதிர்க்கட்சிக்காரர்கள் அவர்களுக்கு செல்வாக்குள்ள பகுதிகளில் இந்தப் பற்றாக்குறையைப் பயன்படுத்தி சில அரிசி ஆலைக்காரர்கள் அதிகக் கட்டணம் வசூலிக்கிறார்கள், சில எண்ணெய் உற்பத்தியாளர்கள் அதிகமாக வசூலிக்கிறார்கள். இவற்றை எதிர்க்கட்சிக்காரர்கள் கண்டித்தார்களா? அவற்றிற்கு எதிராக எதிர்க்கட்சிக்காரர்கள் குரல் எழுப்பினார்களா? அந்தத் தவறான நடவடிக்கைகளை அவர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்களா என்றால் இல்லை. அவர்கள் அதை ஏன் செய்யவில்லை? அவர்களுக்கு இவர்கள் எல்லாம் தேவைப்படுகிறார்கள். அவர்களுக்கு ஆதரவாக சில வட்டாரங்களில் விளங்குகிறார்கள். ஆனால் தனிப்பட்டவர்கள் இந்தப் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு சுரண்டிக் கொண்டிருக்கிறார்கள். அரசாங்கத்தின் மீது பழியைச் சுமத்தி அரசியல் ஆதாயம் பெறுவதற்கும் முயன்று வருகிறார்கள். இதைத் தெளிவாகத் தமிழக மக்கள் புரிந்து வைத்திருக்கிறார்கள். எவ்வளவு நெருக்கடி வந்தாலும் இந்த அரசு உறுதியோடு நின்று



1973 மார்ச் 6] [திரு. ஆலடி அருணா]

சமதர்ம அடிப்படையில் செயல்படும் என்று கூறி, அதற்கான அடிப்படையில் இந்த வரவு செலவுத் திட்டம் அமைந்து இருக்கிறது என்று கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

THIRU B. VENKATASWAMY: Sir, I thank you for giving me an opportunity to speak on the budget for 1973–74.

At the outset let me state that the State of Tamil Nadu is anxious that socialistic programmes should be pushed through with energetic action but in actual implementation we are failing because we are unable to follow the promises and keep up the promises. We are in the habit of blaming the Centre for anything. We say that so far as fertilisers are concerned instead of 2.74 lakh tonnes, we have received only 1.30 lakh tonnes. What I say is there is no use of blaming the Centre. We must feel the responsibility ourselves so that we can stand on our own legs. There are so many things like that.

We have got plenty of cow-dung. We can have good fertilisers from that. In block development activities, upkeep of cow-dung should be popularised and we can have good manure and also gas from that. But that is neglected and we blame the Centre.

Now we have the electricity cut and we blame the Central Government.

I am sorry to say that the Animal Husbandry department has not improved since the last several years. They have not produced a good progeny. Let the Government appoint a Committee to devise ways and means of having a good progeny. Let them give one good cow for each household and improve their economy. I am glad key village centres and ICDP schemes have been revived.

Job-oriented colleges should be opened. For people affected by power-cut, and also the agriculturists, subsidy-should be given Otherwise how can they pull on their lives.

I am against wholesale State trading in foodgrains. It would lead to misery. They would not take care to preserve the foodgrains. In the PAC we have seen how there had been huge loss to the State because of improper storing of foodgrains. If a private man is there, he would not neglect the thing like that.

[Thiru B. VENKATASWAMY] *[1973 மார்ச் 6*

Regarding apprentice-teachers, no allotment has neen made to Panchayat Union Schools this year. I request Government to take action in this regard.

(The gong was sounded)

With these words I resume my seat.

**திரு. மணலி சி. கந்தசாமி :** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, இந்த ஆண்டு நிதி அறிக்கை மீது என்னுடைய சில அபிப்பிராயங்களைக் கூறிக் கொள்வதற்கு முன்வந்திருக்கிறேன்.

இந்த நிதி நிலை அறிக்கையைப் பூராவும் பார்க்கிறபோது, ஆதியிலிருந்து அந்தம் வரையில் பார்க்கிறபோது, மத்திய மாநில உறவைப் பற்றி ஒரு இழைபோடுவது போல் போட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

An outline of such schemes and suggestions about the manner in which the present Centre-State relationships have to be modified in order to implement the schemes effectively have been embodied in this Budget speech.

இது பிரதானமாக அதிலே இருக்கிறது. பல்வேறு உதாரணங்கள் சொல்லப்பட்டு இருக்கின்றன. அந்த உதாரணங்களை நான் நன்றாகப் படித்தேன்.

மத்திய-மாநில உறவு சம்பந்தமாக ஒரு புதிய நிலை வேண்டுமென்று சொல்லும் கட்டத்திற்கு நாம் வந்திருக்கிறோம் என்பதை நாம் மறுப்பதற்கு இல்லை. இன்றையதினம் மத்திய-மாநில உறவு சம்பந்தமாக எல்லா அரசாங்கமும் இப்படிப்பட்ட ஒரு கருத்தை வெளிப்படுத்தும் அடிப்படையில் நம்முடைய சிந்தனை போக வேண்டும், செயல் திறன் இருக்கவேண்டுமென்று நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். பல்வேறு சிக்கலான விஷயங்கள் இருக்கின்றன.

உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால் இன்றைக்குப் பணம் ஒதுக்குவதில் திட்டத்திற்கு அல்லது திட்டம் இல்லாத இனங்களுக்கு ஒதுக்குவதில் நிதிக் கமிஷனுக்கு அதிகாரம் கொடுக்க வேண்டுமென்று கோரியிருக்கிறோம். அதை ஒதுக்குவதில் கூட அந்தந்த ராஜ்யத்திற்கு இருக்கிற ஜனத்தொகையின் அடிப்படையில் இல்லாமல், அங்கே தற்போதுள்ள நிலைமைகளின் அடிப்படையில் இருக்கவேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். தனிநபர்



*1973 மார்ச் 6]* *[திரு. மணலி சி. கந்தசாமி]*

வருமானத்தின் அடிப்படையில் இருக்கவேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். எல்லா ராஜ்யங்களிலும் இது குறித்து, ஒருமித்த கருத்தை ஏற்படுத்தும் வகையில் நாம் சிந்திக்கவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சில இராஜ்யங்களில் தனி நபர் வருமானம் மிகவும் குறைந்து இருக்கிறது. அதை மறுப்பதற்கு இல்லை. வேறு இராஜ்யங்களையும் கவனிக்க வேண்டி இருக்கிறது என்பதையும் நான் மறுக்க முடியாது. நாம் போடும் திட்டங்களை நிறைவேற்றுவதில் தயக்கம் ஏற்படுகிறது, ஆகவே, மத்திய மாநில உறவுகள் சீர் திருத்தப்பட வேண்டுமென்றால் நாம் வகுக்கும் கோஷம், நாம் வகுக்கும் திட்டம், நாம் அந்தத் திட்டத்தை நாடு முழுவதும் பரப்பி ஆதரவு திரட்டி, ஒட்டு மொத்தமாக ஒரு கருத்தை உருவாக்குவதில்தான் இருக்கிறது என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். மத்திய-மாநில உறவில் திருத்தம் ஏற்படுவதற்காக நாம் கொடுக்கும் கோஷம் நாட்டுப் பிரிவினையில் கொண்டுபோய் விட்டுவிடுமோ என்று சொல்லும் ஐயத்தை தவிர்க்க வேண்டிய கடமையும் நமக்கு இருக்கிறது. இதைச் சொல்லுகின்ற நேரத்தில் நான் ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இன்று உலகத்தில் இருக்கும் ஏகாதிபத்திய வாதிகள் எந்த இடத்தில் நமக்குப் பிடிப்புக் கிடைக்கும் என்று பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள். இன்று வியட்நாமில் நடக்கும் சம்பவம், அரேபியாவில் நடக்கும் சம்பவம், ஆப்பிரிக்காவில் இருக்கிற சம்பவங்கள் ஆகியவற்றைப் பார்க்கிற நேரத்தில் ஏதாவது ஒரு வகையில் பிடிப்புக் கிடைத்தால் பிசாசு போல் அதைப் பிடித்துக்கொண்டு விடுகிறார்கள். அவர்கள் வைத்து இருக்கும் சி.ஐ.ஏ. போன்ற பல்வேறு ஏஜென்சிகளின் மூலமாக என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதற்கு இடம்கொடுக்காத வகையில் மத்திய-மாநில உறவை நாம் நல்ல முறையில் சிந்தித்து என்ன வகையில் மாற்றவேண்டும், மாற்றினால் நன்மை பயக்கும் என்பதை ஆலோசிக்கவேண்டும்.

நாம் மேற்கொள்கிற திட்டங்கள் தெளிவாக இருக்கவேண்டும் என்று கூறிக்கொள்கிறேன். உங்களைப்பொறுத்தவரையில் ஃபுல் அடானமி பார் ஸ்டேட் என்று சொல்லியிருக்கிறீர்கள். பரிபூர்ண

[திரு. மணலி சி. கந்தசாமி] [1973 மார்ச் 6

சுதந்திரம் ஏற்படவேண்டுமென்று சொல்கிற நேரத்தில், மத்திய சர்க்காரின் நிலை எப்படி இருக்கவேண்டுமென்று சொல்ல வேண்டும்.

பி.ப 1-00 உங்களுடையப் பாணியிலே சொல்வதானால் 'மாநிலத்தில் சுயாட்சி, மத்தியிலே கூட்டாட்சி' என்று சொல்லலாம். ஆனால் அது எப்படி இருக்க வேண்டுமென்றால், இந்தியாவின் ஒருமைப் பாட்டுக்கு ஊறு விளைவிக்காததாக இருக்க வேண்டும். அந்த வகையிலே இந்த மத்திய-மாநில உறவுகளைப் பற்றி பரிசீலிக்க வேண்டும். எங்கள் கட்சியைப் பொறுத்தவரையிலே, இந்திய அரசின் ஒருமைப்பாட்டுக்குக் குந்தகம் ஏற்படாதவகையில் மத்திய-மாநில உறவுகள் இருக்க வேண்டுமென்பதை நான் தெளிவாகத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி இருந்தால் அதை நாங்கள் நிச்சயமாக வரவேற்போம். இதுபற்றி எங்கள் கட்சியின் தலைமையிடம் ஆராய்ந்துகொண்டிருக்கிறது. மாநில அரசுகளும் மத்திய அரசும் பரிபூரணமாக இயங்கக்கூடிய வகையில் அதிகார மாற்றங்கள் வேண்டும் என்பதைக்குறித்து பரிசீலித்து அறிக்கை வெளியிட இருக்கிறோம். அது அல்லாத 'மாநிலத்தில் சுயாட்சி, மத்தியிலே கூட்டாட்சி' என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்வதற்கில்லை.

அடுத்தபடியாக, மின்சார வெட்டு. மின்சாரவெட்டு சம்பந்தமாக பல்வேறு விஷயங்கள் பேசப்படுகின்றன. இயற்கையின் கோளாறு காரணமாக இந்த நிலை ஏற்பட்டது என்றாலும் அதற்கு அரசாங்கம் பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான். நீங்கள் அதைத் தட்டிக்கழித்துவிட முடியாது. இந்தமாதிரியான ஒரு நெருக்கடி ஏற்படும் என்று பல மாதங்களுக்கு முன்னாலே தெரியும். அதைச் சமாளிப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகளை எடுக்க நீங்கள் தவறிவிட்டீர்கள். மின்சாரத் தட்டுப்பாட்டினால் இன்றைக்கு பல கோடிக்கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. விவசாயத்திலும் தொழில்துறையிலும் பெருத்த நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இன்னும் பல்வேறு விதமான நஷ்டங்கள் இன்றைக்கு தமிழ்நாட்டிலே ஏற்பட்டிருக்கின்றன. அதை நீங்கள் மறுக்க முடியாது. இந்த அடிப்படையை வைத்துப்பார்த்தால், 'no power is costlier than no power' என்பதை இப்போதாவது உணர்வீர்கள் என்று நினைக்கிறேன்.



1973 மார்ச் 6] [திரு. மணலி சி. கந்தசாமி]

சமயநல்லூரிலே இருந்த தெர்மல் பிளான்டை விற்காமல் இருந்தால் இந்த நேரத்தில் அது எவ்வளவு பிரயோஜனமாக இருக்கும் என்பதை இப்போது நன்றாக உணரமுடிகிறது. சமய நல்லூர் தெர்மல் பிளான்டை விற்றதைப்போல் தவறானது வேறொன்றும் இல்லை. அது நஷ்டத்தில் வேலை செய்தது; அதனால்தான் விற்றுவிட்டோம் என்று வேண்டுமானால் காரணம் சொல்வீர்கள். அதை ஏற்றுக்கொள்வதற்கில்லை. 450 கோடி ரூபாய் நிர்வாகத்தை நடத்துகின்ற இந்த மாநில அரசுக்கு வருடத்திற்கு 45 லட்சம் ரூபாய் நஷ்டமடைகிற அந்த தெர்மல் பிளான்டை நிர்வகிப்பது பெரிய காரியமல்ல. எனவே, சமய நல்லூர் தெர்மல் பிளான்டை விற்றது நீங்கள் செய்த மகாபெரிய தவறு என்பதை நான் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு இருக்கக்கூடிய நிலையைவைத்துப் பார்த்தால், இன்னும் 10 நாட்களுக்கு தண்ணீர் இல்லை என்றால் பயிர்கள் எல்லாம் நாசமடைந்து விடும். விவசாயத்திலிருந்து எந்தவிதமான வருமானமும் கிடைக்காது. லட்சக்கணக்கான விவசாயிகள் அதனால் பாதிக்கப்படுவார்கள். ஒரு ஆண்டு காலத்திற்கு விவசாய வருமானம் இல்லை என்றால் விவசாயிகளால் தலைதூக்க முடியாது. அதனால் என்ன செய்வது என்று அவர்கள் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட சிக்கல்களை எல்லாம் எதிர்பார்த்து, நீங்கள் உஷாராக இருந்திருந்தால், நிலைமையை ஓரளவாவது சமாளித்திருக்கலாம். ஆகவே, இந்த நெருக்கடிக்கு உங்கள் கவலையீனமும் ஒரு காரணம் என்பதை நீங்கள் மறுக்க முடியாது.

கைத்தறி நெசவாளர்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக எல்லாக் கட்சிகளும் சேர்ந்து இந்த மன்றத்தில் ஒரு தீர்மானம் போட்டதைப் போல, இந்த மின்சார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு என்னென்ன நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று எல்லாக் கட்சிகளையும் கூட்டி, ஒரு ஆலோசனை நடத்தியிருக்கலாம். அந்தக் கூட்டத்தில் எடுக்கும் முடிவைச் செயல்படுத்தினால் இந்தமாதிரியான ஒரு நெருக்கடி ஏற்பட்டிருக்காது.

இன்றைக்கு எல்லா இடங்களிலும் அவரவர் மின்சாரத்தை உற்பத்திச் செய்துகொள்வதற்கு அனுமதி அளித்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. அப்படி மின்சாரத்தை உற்பத்தி செய்யும்

எஞ்சின்களை எல்லோராலும் வாங்க முடியாது ஒருசில பெரிய பணக்காரர்களால்தான் வாங்க முடியும். ஆகவே, அரசாங்கம் இதிலே பாரபட்சம் காட்டாமல் எஞ்சின்களை இறக்குமதி செய்து, எல்லோருக்கும் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். இல்லை என்றால் இதிலேயும் ஊழல் ஏற்படும், ஊழல் நிறைந்துவிடும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இவ்வளவு நெருக்கடிக்கு இடையிலும்—நேற்று யாரோ ஒரு ஒரு மெம்பர் குறிப்பிட்டார்—தக்கோலம் என்ற ஊரில் பரிபூரணமாக மின்சாரம் இருக்கிறது. மின்சார வெட்டே இல்லை என்று சொன்னார்கள். அதற்கு காரணம் அங்கே இருக்கிறவர்கள்—அரசாங்கத்திலே செல்வாக்குப் படைத்தவர்களாக இருப்பதால் தட்டுப்பாடு இல்லாமல் மின்சாரம் சப்ளை செய்யப்படுவதாகச் சொன்னார்கள். இப்படிப்பட்ட நிலைமை உலகத்தில் எங்கேயும் இருக்கக்கூடாது. இப்படிப்பட்டக் காரணங்களால் பல்வேறு விதமான மக்கள் மத்தியிலே, அவர்களின் எதிர்ப்பை எதிர் நோக்கக்கூடிய ஒரு வாய்ப்பு இன்றைக்கு உங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. அதை நீங்கள் இப்போதாவது உணரவேண்டும். மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்டதற்கு மத்திய அரசுதான் காரணம் என்று சொன்னால் அது ஓரளவுக்கு உண்மைதான். ஆனால் முழு பொறுப்பும் அவர்களைச் சேர்ந்தது அல்ல. மத்திய அரசும் தவறு செய்திருக்கிறது. ஆனால் நீங்கள் உஷாராக இருந்திருந்தால் இந்த நிலைமையை ஓரளவுக்கு தவிர்த்திருக்கலாம் என்பதை நீங்கள் உணர்ந்துகொள்ளவேண்டும்.

இன்றைக்கு சோஷலிசத்தைப்பற்றி பேசுகிறோம்—எல்லோரும் பேசுகிறோம். சோஷலிசத்தை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமானால் அதில் கஷ்டம் இருக்கிறது. ஒரு ஜனநாயக நாட்டில் சோஷலிசத்தைக் கொண்டுவருவது மிக மிகக் கஷ்டம். இருந்தாலும் அதைச் செய்துதான் தீரவேண்டும். அதிலே எவ்வளவு சிரமங்கள் ஏற்பட்டாலும், எவ்வளவு சங்கடங்கள் ஏற்பட்டாலும் அதற்கு வேண்டிய திட்டங்களைத் துரிதமாக நிறைவேற்ற வேண்டும். இதிலே கட்சி கண்ணோட்டம் பார்க்காமல், கட்சி வேறுபாடு காட்டாமல், எல்லாக் கட்சிகளையும் கூட்டி





உண்மையான சாத்தியக்கூறுகளை கண்டறிந்து, அதற்குப் பரிகாரம் தேடுகின்ற வகையில் நல்ல ஆலோசனைகளைப் பெற்று, அவைகளை நடைமுறைப்படுத்த வேண்டும். அதிலே தவறு கிடையாது. இப்போது ஏற்பட்டிருக்கும் மின்சாரப் பற்றாக் குறையைச் சமாளிப்பதற்கும் இதைப்போன்ற ஒரு கூட்டத்தை நடத்தி அதிலே எடுக்கப்பட்ட முடிவுகளை செயல்படுத்த வேண்டும். அந்த வகையிலே சர்க்காருடைய இயந்திரத்தை முடுக்கிவிட வேண்டும். இல்லாவிட்டால் கிராமப்புற மக்கள்—விவசாயிகள் தலைதூக்க முடியாத அளவுக்கு பாதிக்கப்படுவார்கள்.

இன்றைக்கு அகில இந்தியாவிலே அதிகமாக பம்புசெட்டுகளை வைத்திருக்கும் மாநிலம் தமிழ்நாடுதான். அது நமக்கெல்லாம் பெருமைதான். அதேநேரத்தில் இன்றைக்கு லட்சக்கணக்கான பம்புசெட்டுகளுக்கு தண்ணீர் இறைவைக்கு போதுமான மின்சாரம் விநியோகம் செய்ய முடியவில்லை என்பது பெருத்த வேதனையை ஏற்படுத்துகிறது. லோ வோல்டேஜில் பம்புசெட்டுகள் வேலை செய்யும்போது பல எஞ்சின்கள் புகைந்துபோய் விடுகின்றன. ஆக, இம்மாதிரியான நிலைமைகளுக்கு எல்லாம் நீங்கள் பொறுப்பேற்று, வருங்காலத்தில் இதுபோன்ற சூழ்நிலை ஏற்படாதவாறு செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நிலச்சீர்திருத்தம். நீங்கள் போட்டிருக்கின்ற நிலச்சீர்திருத்தச் சட்டங்கள் திருப்தி அளிக்கக்கூடியவைகளாக இல்லை. இப்போது நம்முடைய வருவாய்த்துறை அமைச்சர் ப. உ. சண்முகம் அவர்கள் இங்கே இல்லை. கேரளத்திலே நல்ல காரியங்கள் நடக்கிறது என்று சொன்னால் எதற்கு எடுத்தாலும் கேரளத்திற்குப் போகிறார்கள் என்று அவர்கள் சொல்வார்கள். எங்கள் கட்சி ஆளுகின்ற கேரளத்தில் ஒரே தினத்தில் 25 லட்சம் குடிமக்களுக்கு 5 ஏக்கர்களுக்கு உட்பட்டு, நிலம் வழங்கியிருக்கிறார்கள். அவர்கள் போட்ட சட்டத்தை மாதிரி ஏன் இங்கேயும் ஒரு சட்டத்தைப் போடக்கூடாது? போடக்கூடிய சட்டங்களைப்பற்றி மக்களுக்குத் தெளிவாகத் தெரிவித்து விடுங்கள். இன்றைக்கு நீங்கள் போட்டிருக்கிற பல சட்டங்களைப் பற்றி விவசாயிகளுக்குத் தெரியாது. அதனால் இன்னும் அவர்கள்

[திரு. மணலி சி. கந்தசாமி] [1973 மார்ச் 6

ஏமாற்றப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். நில உச்சவரம்பு சட்டத்தைக் கொண்டு வந்தீர்கள் 30 ஸ்டான்டர்டு ஏக்கர் என்றீர்கள்; மிச்ச நிலம் எதுவும் இல்லை. பின்னால் 15 ஸ்டான்டர்டு ஏக்கர் என்றீர்கள்; அப்போதும் மிச்சமில்லை. அப்படியானால் இருக்கின்ற நிலம் எங்கே போச்சு? நீங்கள் கொண்டுவந்த சட்டம் மிச்ச நிலங்களை மறைக்க வழிவகை செய்ததால்தான் அரசாங்கத்திற்கு நிலம் கிடைக்கவில்லை. ஏழை எளிய மக்களுக்கு அதன் பலன் இல்லாமல் போய்விட்டது.

நிலச் சீர்திருத்தத்தைப்பற்றி நான் ஒரு மசோதாவைக் கொடுத்திருக்கிறேன். அதிலே ஓட்டை உடைசல்களுக்கு இடமில்லை. நீங்கள் ஏன் அதை ஏற்றுக்கொள்ளக்கூடாது? மாற்றுக்கட்சிக்காரன் கொடுத்திருக்கிறானே என்று நினைக்காதீர்கள். உச்சவரம்பு சட்டத்தினால், நிலம் இல்லாமல் உழைத்துக்கொண்டிருப்பவனுக்கு அந்த நிலம் சொந்தமாக்கப்படுவதற்கு உத்தரவாதம் வேண்டும். அந்தவகையில் பொருளாதாரத்தில் ஒரு தீவிர மாறுதல் கொண்டுவரவேண்டும். கிராமப்புறத்திலே பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டால்தான நாட்டிலே பொருளாதார முன்னேற்றம் ஏற்படும். கைத்தறி நெசவாளர்கள், மில் தொழிலாளர்கள், விவசாயிகள் இவர்களுடைய வாழ்க்கை சீரடைந்தால்தான் இந்த நாட்டின் வாழ்க்கைத்தரம் முன்னேறும்; கலாச்சாரமும் முன்னேறும்.

கலாச்சாரத்தைப்பற்றி சொல்லும்போது இன்னொன்றும் ஞாபகத்திற்கு வருகிறது. இன்று சினிமாவைப்பற்றி பலர் பேசினார்கள். இன்றைக்கு சினிமாவை ரசிக்கக்கூடிய அளவுக்கு தமிழ்நாட்டின் தரம் தாழ்ந்துபோய்விட்டது. அதைப்பார்த்து நாம் வெட்கப்பட வேண்டும்; வேதனைப்பட வேண்டும். காலைத் தூக்கி தலைக்கு மேலே வைக்கும் காட்சியைப் பார்த்து ரசிக்கக் கூடிய அளவுக்கு கலாச்சாரத்தில் முன்னேறியிருக்கிறார்கள் தமிழ் நாட்டு மக்கள். அதுமட்டுமல்ல. பல இடங்களில் ரகசியப் படங்களைக் காட்டுகிறார்கள். அதற்கு 10 ரூபாய், 20 ரூபாய் டிக்கட் போடுகிறார்கள். அதையும் போய் பார்க்கிறார்கள். போலீசார் கூட அதற்கு உடந்தையாக இருப்பதாகத் தெரிகிறது. உங்கள் ஆட்சியிலே கலாச்சாரத்திலும் மக்கள் அந்த



1973 மார்ச் 6] [திரு. மணலி சி. கந்தசாமி]

அளவுக்கு தாழ்ந்துவிட்டார்கள். இதற்கும் மத்திய அரசாங்கத்தைக் குறை சொல்ல முடியாது. இதை நீங்களே கட்டுப்படுத்தலாம். மாற்றுக் கட்சிக்காரர்கள் சொல்கிறார்களே என்று நாங்கள் சொல்வதை நீங்கள் அலட்சியப்படுத்திவிடக்கூடாது.

“எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு” என்று வள்ளுவர் சொல்லியிருக்கிறார்கள். திருக்குறளை நீங்கள் போற்றுகிறீர்கள். திருக்குறளைப் போற்றினால் மட்டும் போதாது; அந்தக் கருத்திலே உங்களுக்கு நம்பிக்கையும் இருக்கவேண்டும். இன்றைக்கு நாங்கள் ஒவ்வொருவரும் சொல்லும் விதம் வேறாக இருக்கலாம். ஆனால் சொல்லக்கூடிய விஷயம் ஒன்றுதான். யார் சொல்கிறார்கள் என்று பார்க்கக்கூடாது. என்ன சொல்கிறார்கள் என்பதைத் தான் நீங்கள் பார்க்கவேண்டும். இங்கே இருக்கின்ற சகோதரி திருமதி அனந்தநாயகி கொஞ்சம் காட்டமாகப் பேசலாம். நான் கொஞ்சம் ‘மைல்டாக’ப் பேசுகிறேன். நம்முடைய மொய்தீன் அவர்கள் வேறுவிதமாகப் பேசலாம். எப்படிப் பேசினாலும் விஷயம் என்ன என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாய சீர்திருத்தச் சட்டத்தை எப்போதும்போல் பார்க்காமல் ஒரு புதியக் கண்ணோட்டத்தோடு அதைப் பார்க்க வேண்டும். சட்டங்கள் கொண்டுவந்துவிட்டால் மட்டும் போதாது. எழக்கூடியப் பிரச்சனைகளைத் தீர்க்கக்கூடிய விதத்தில் சட்டங்கள் இருக்கவேண்டும். இப்போது குத்தகைதாரர்களுக்காகக் கொண்டுவரப்பட்டிருக்கும் சட்டத்தை கொஞ்சம் மாற்றிக் கொண்டுவந்திருக்கலாம். ஒரு ஃபைனான்ஸ் கார்ப்பரேஷன், வாங்கக்கூடிய உரிமை, விற்கக்கூடிய உரிமை இவைகள் எல்லாம் தேவையில்லை என்று நான் கருதுகிறேன். “12 வருஷம் அல்லது 16 வருஷம் குத்தகை கட்டவேண்டும்; நிலத்திற்கு உரிய விலையை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்; நிலச்சொந்தக்காரர்கள் எங்களிடத்திலே பணத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்; நிலம் நாளை முதல் குத்தகைதாரர்களுக்குச் சொந்தம்” என்று சொல்லிவிட்டால் போதும். இந்த அரசியல் சட்டம் குறுக்கே நிற்கிறது. நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும். ஒத்துக் கொள்கிறோம். நாங்கள்

யாரும் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டாம் என்று சொல்லவில்லை. கொடுக்க வேண்டுமென்ற அடிப்படை தீர்மானங்கள் வந்து விட்டன.

முதலமைச்சரை நான் இப்போதும் கேட்டுக்கொள்கிறேன். இதனால், பல சிக்கல்கள், தொல்லைகள் வரும். நிலக் காப்பரேஷனில் மனு கொடுக்க வேண்டுமென்றால், விவசாயிக்கு இதெல்லாம் ஒன்றுமே தெரியாது. விவசாயிக்கு நாம் தான் வாங்கிக் கொடுக்க வேண்டும். குடியிருப்பு மனை கொடுத்திருக்கிறீர்கள். வரவேற்கிறோம். அதில் இருக்கிற இடைஞ்சல்களையெல்லாம் போக்க வேண்டும். ஆளுங்கட்சி எம்.எல்.ஏக்கள் ஒத்துழைக்க வேண்டும். தஞ்சையில ஒரு கமிஷன் போட்டால் நான வருகிறேன். எத்தனை இடையூறுகள் இருக்கின்றன? கணக்குப்பிள்ளையின் செல்வாக்கை வைத்துக்கொண்டு எத்தனை மரங்களை வெட்டியிருக்கிறார்கள்? பழககத்திற்கு போதுமான இடம் என்று போட்டிருக்கிறார்கள். அதை எப்படி நிர்ணயிப்பது? அதற்காக ஒரு சப்ஆர்டினேட் லெஜிஸ்லேஷன் கமிட்டி போட்டு ரூல்ஸ் ஃப்ரேம் பண்ணலாம் ஒரு கணக்குப்பிள்ளை ஒரு செண்ட் என்று சொல்லலாம், இன்னொருவர் இன்னொரு மாதிரி சொல்லலாம், இதை எப்படி நிர்ணயிப்பது?

இப்படி தூண்டு விழக்கூடிய விஷயங்கள் ரொம்ப இருக்கின்றன. சட்டத்தை போட்டு விட்டால் மட்டும் போதாது. அதை நிறைவேற்றுகின்ற பொறுப்பையும் உங்கள் ஆட்சி எடுத்துக் கொள்ளவில்லை என்றால் என்ன பிரயோசனம். நாங்கள் செய்கிறோம் என்றால், எங்கள் தலையில் என்ன கூழா கறைத்துக் கொட்டியிருக்கிறது? ஒன்று சொல்கிறேன். சட்டம் செய்கிறீர்கள் விழுந்து விழுந்து பேசுகிறீர்கள். ஹரிஜனங்களுக்கு எத்தனையோ சட்டம் போட்டு என்ன பிரயோசனம்? ஹரிஜனங்களின் வீடுகளை காலிபண்ணுகிற காரியங்கள் நடக்கின்றன.

எனவே தான் சொல்கிறேன். சட்டம் இருக்கிறது என்றாலும், எந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தாலும், அதை நிறைவேற்றுகின்ற பொறுப்பை உங்கள் கட்சி எடுத்துக் கொள்ள வேண்டும். நாங்கள் ஒத்துழைப்புத் தர தயாராக இருக்கிறோம். இப்படிப்பட்ட நிலையில் தான் நிலச் சீர்திருத்தச் சட்டம் இருக்கிறது.





அடுத்து விலைவாசி. மாண்புமிகு மன்னை நாராயணசாமிக்கு அவர்களுக்குத் தெரியும். ஏராளமான விளைச்சல் ஆகியிருக்கிறது. பம்பர் ஹார்வெஸ்ட் இருந்தாலும் விலை வீக்கம். நான் இன்றைக்குச் சொல்கிறேன். இன்னும் நான்கு மாதம் கழித்துப் பாருங்கள். லபோ, லபோ என்று கத்தப் போகிறார்கள். விலை ஏறப்போகிறது. அப்போது ஒன்றுமே செய்ய முடியாது. அதற்குத் தான் சொல்கிறேன், உணவு வியாபாரத்தை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று. இப்படிச் செய்யாவிட்டால், வேண்டுமானால் பாருங்கள், ஆறு மாதம் கழித்து தெளிவாகப் போகிறது—கொள்ளைக் கூட்டம்—தெளிவாகச் சொல்கிறேன்—நேற்றைய தினம் கூட படித்தேன்—பேரறிஞர் அண்ணா அவர்கள் திருப்பரங்குன்ற மாநாட்டில் பேசியிருக்கிறார்—குன்றின் மேல் இட்ட விளக்கு என்ற தலைப்பில் வரிசையாக கடிதங்களை சேர்த்து அந்தப் புத்தகத்தை எழுதியிருக்கிறார். நான் படித்துப் பார்த்தேன் நீங்கள் படிக்க வேண்டாமா? அவர் எழுதியிருக்கிறார், இந்த நாட்டில் இரண்டு கொள்ளைக்காரர்கள் இருக்கிறார்கள் சம்பல் கூட்டக் கொள்ளைக்காரர்கள் ஒரு இனம். இன்னொன்று 'முந்தரா போன்றவர்கள்' என்று அழகாக வர்ணிக்கிறார். அவன் வசிக்கும் இடம் காடு. அவன் கையில் இருப்பது கத்தி. இவன் வசிக்கும் இடம் அங்காடி: இவனிடம் இருக்கும் ஆயுதம் புன்முறுவல் என்று அழகாக எழுதியிருக்கிறார். அந்த நிலை இப்போது மாறி விட்டதா? விலைவாசி ஏற்றத்தை இறக்க முடியவில்லையே; விலைவாசி விழுந்து விட்டதா? அதைத் தான் அண்ணா அவர்கள் ஒரு பாட்டின் மூலம் சொல்லியிருக்கிறார். "தம்பி, நீ பாடு" என்று நான்கு வரிகள் சொல்கிறார். வேண்டுமானால் அதை இங்கே வாசிக்கிறேன். எனக்கு பாடத் தெரியாது. மியூசிக் எல்லாம் உங்கள் ஆப்ஷன் தம்பி, இந்தப் பாட்டை நீ பாடு என்று:—

"மிளகாய் சர்க்கரை தனியா,
இதற்கு ஏழைரை நாட்டு சனியா.

இப்படி ஒரு பாட்டு விலைவாசி இறங்கியாச்சா? சிந்தித்துப் பாருங்கள்; இன்றைக்கு மிளகாய் விலை என்ன? புளி விலை என்ன? இப்படியே நிலைமை போய்க்கொண்டிருந்தால் விளைவுகள் என்ன வாகும் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதனால் பல கட்சிக்காரர்களும் இந்த நின்மைகள் பயன்படுத்திக்கொள்கிறார்கள் என்ற அடிப்படையைப் பார்க்கிறோம். இதற்கு முடிவானதொரு சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.

[திரு. மணலி சி. கந்தசாமி] [1973 மார்ச் 6

நிலச்சீர்திருத்தத்தைப் பற்றி இவ்வளவு சொல்லிக்கொண்டிருக்கிறோம். புதுக்கோட்டையில் என்ன நடந்தது. புதுக்கோட்டையை பிட்டாடல் ஆப் கேபிடலிஸ்ட்ஸ் என்று சொல்வார்கள். இப்பொழுது அங்கே மன்னர்கள் போய் விட்டார்கள். இப்போது வேறு மன்னர்கள்—சர் ராஜா முத்தையா செட்டியார், இன்னும் சில செட்டியார்கள் இரும் கிராமங்கள் பூராவையும் வாங்கிக்கொண்டு அதிகார வர்க்கத்தை ஆட்டிப் படைக்கிறார்கள். அவர்களுக்கு இன்னும் செல்வாக்கு இருக்கிறது. எங்கே பார்த்தாலும் ஜப்தி, தகராறு, ஏழைகளுக்கு எதிராக நடந்து கொண்டிருக்கிறது என்று புதுக்கோட்டை நண்பர்கள் சொல்கிறார்கள். இங்கே இருக்கிற புதுக்கோட்டை நண்பர்களுக்கும் கூட தெரிந்திருக்கும். இதைப் பேசித் தீர்க்கக் கூடாதா ஆளுங்கட்சி நண்பர்கள்? வழக்குகள் சுப்ரீம் கோர்ட் வரை போயிருக்கின்றன.

திருநெல்வேலியில் சில கிராமங்களில் பண்டார சன்னதிகளுக்கும் சொந்தமாக இடங்கள் இருக்கின்றன. அவர்கள் 30 ஆயிரம் பனை மரங்களை ரூ. 3 வீதம் விற்றிருக்கிறார்கள், ராஜா மங்க ராஜா என்ற காண்டிராக்டருக்கு. தேக்கு மரக்காடுகளை எல்லாம் இப்படி விற்றிருக்கிறார்கள். அதைத் தடுக்கக் கூடிய பொறுப்பு உங்களுக்கு இருக்கிறதா, இல்லையா? இந்த நிலைமையில் தான் நிலச் சீர்திருத்தச் சட்டம் செயல் பட்டுக்கொண்டிருக்கிறது. நிலச்சீர்திருத்தச் சட்டம் என்று சொல்லும்போது ஒரு வேடிக்கை. ஒரு குடும்பத்திற்கு 4.2 எக்கர் சீலிங்கிற்கு அதிகமாக இருக்கிறது. என்ன செய்கிறார் என்றால், பேத்தி மேலேயும், சொந்தக்காரன் பேரிலேயும் எழுதி வைத்தாச்சு. நாகநல்லூர்—திருநெல்வேலி ஜில்லாவில் இப்படி ஒரு காரியம் நடந்திருக்கிறது. இதையெல்லாம் ஆளுங்கட்சிக்காரர்கள் தடுக்கக் கூடாதா? முயற்சி செய்யக் கூடாதா? நாங்கள் ஒத்துழைப்புத் தான் தர முடியும். அப்படிப்பட்ட நடவடிக்கையில் ஈடுபட்டால் நாங்கள் நிச்சயம் ஒத்துழைப்புத் தர தயாராக இருக்கிறோம். இப்படிப் பட்ட நிலைகள் இன்னும் தொடர்ந்து நடந்து கொண்டே போனால், காலம் ஒரு நாள் மாறும் என்று தான் குறிப்பிடவேண்டியிருக்கிறது.



1973 மார்ச் 6] [திரு. மணலி சி. கந்தசாமி]

விலைவாசியை எடுத்துக்கொண்டால், மாண்புமிகு மன்னை நாராயணசாமி அவர்களுக்கு நன்றாகத் தெரியும். விவசாயிகளுக்கு இப்போது கொடுக்கிற விலை கட்டி வருகிறதா என்று. என்னைப் பொறுத்தவரையில் 30, 40 மூட்டை விற்றால் பெரிய காரியம். ஆனால் பொதுவாக விவசாயியை எடுத்துக்கொண்டால், கொடுக்கிற விலை கட்டி வரவில்லை. வேண்டுமானால் பந்தயம் வைத்துக் கொள்ளலாம். இன்றைக்கு லைசென்ஸ் வைத்துக் கொண்டு பெருந்தனக்காரர்கள், பெரு முதலாளிகள் எவ்வளவு பணக்காரர்களாக ஆகியிருக்கிறார்கள்?

இந்தக் கொள்ளைக் கூட்டத்தைத் தடுத்தாலொழிய விவசாயிகளுக்கும் நியாயமான விலையைக் கொடுக்க முடியாது. மக்களுக்கும் நியாயமான விலையில் வாங்கிச் சாப்பிட உணவுதானியம் அளிக்க முடியாது. வாங்கக்கூடிய விலை என்ன, மில்லுக்குப் போய் வந்த பிறகு விற்கக்கூடிய விலை என்ன என்பதை கொஞ்சம் கணக்குப் பார்ப்பது நல்லது. திருநெல்வேலியில் அறுவடைக்கு முன்பு என்ன விலை விற்றது, இப்போது என்ன விலை விற்கிறது என்கிற கணக்கு எல்லாம் என்னிடம் இருக்கிறது. அதனால்தான் உணவு தானிய கொள்முதல் விற்பனையை அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நாங்கள் சொல்கிறோம். நான் மாண்புமிகு மன்னை நாராயணசாமி அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். விவசாயிகளுக்குத் தயவு செய்து க்விண்டாலுக்கு 15 ரூபாயாவது கூட்டித்தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். என்னிடம் கொடுங்கள். நான் விவசாயிகளுக்கும் நியாயமான விலை கொடுக்கிறேன், மக்களுக்கும் நியாயமான விலைக்குக் கிடைக்கச் செய்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** எது நியாயமான விலை என்று சொல்லுங்கள்.

**திரு. மணலி சி. கந்தசாமி:** நான் போட்டுச் சொல்கிறேன். நியாயமான விலைக்கு மக்களுக்கும் கிடைக்கச் செய்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** வார்த்தை நியாயமாக இருந்து பயன் இல்லை. நியாயமான விலை என்ன என்று சொல்லுங்கள்.

[1973 மார்ச் 6

**திரு. மணலி சி. கந்தசாமி :** இரண்டு நாள் டைம் கொடுங்கள். என்னிடத்தில் பி.ஏ., செக்ரடரி என்று யார் இருக்கிறார்கள்? நானே வொர்க் பண்ணிச் சொல்கிறேன். ஆயிரம் நலம் கொடுத்தால் போதும். கொள்முதல் செய்து அரைத்து விவசாயிக்கும் கட்டுபடியாகக் கூடிய விலைகொடுத்து, மக்களுக்கும் கட்டுபடியாகக் கூடிய விலைக்கு விற்பதற்கும் கொடுக்கிறேன். நான் வேறு என்ன சொல்கிறேன்? நடுவில் உள்ளவர்கள் கொள்ளை அடிப்பதைத் தடுக்கவேண்டும் என்றுதான் சொல்கிறேன். இப்படிப்பட்ட பல்வேறு விஷயங்களினால் மக்கள் செழிப்பு இழந்து இருக்கிறார்கள். இந்த நிலையில் அதைச் செய்கிறோம், இதைச் செய்கிறோம் என்கிறீர்கள். நாற்றம் சொல்லவில்லை. கண்ணொளி வழங்குகிறீர்கள், நல்ல திட்டம் தான். இவை போதுமா? இன்றைக்கு இருக்கக்கூடிய சமுதாயக் கொந்தளிப்பு எப்படி? அங்கே போனால் ஆயிரம்பேர் கூட்டம், இங்கே வந்தால் நூற்றுக்கணக்கான தந்திகள்.

இந்த நிலையில் நீங்கள் ஏதோ செய்துவிட்டது போன்ற திருப்தியில் மிதக்க வேண்டாம். யதார்த்தமான நிலைமைக்கு வாருங்கள். போய்ப் பார்க்க வேண்டும். ரயிலில் உங்களைப்பற்றி என்ன பேசுகிறார்கள்? பஸ்ஸில் உங்களைப்பற்றி என்ன பேசுகிறார்கள்? மாறுவேடத்தில் வந்து பார்க்கக்கூடாதா? இன்றைக்கு நாட்டில் உங்களைப்பற்றி மாற்றமான கருத்து உருவாகிக்கொண்டு வருகிறது. சர்ப்ளஸ் பட்ஜெட் போட்டுவிட்டோம், வரியே இல்லை என்று உங்களை திருப்தி பண்ணிக்கொண்டு உட்கார்ந்து பயன் இல்லை. இருக்கிறவர்களுக்கு வரி போடக் கூடாதா? இந்த நான்கு ஆண்டுகளில் மாடிக்குமேல் மாடி கட்டினவர்கள் எத்தனை பேர்? அவர்கள் வீட்டுப் பெண்கள் கழுத்தில் வைர நெக்லஸ் ஜொலிப்பதைப் பார்க்கவில்லையா? இவர்களை உங்களுக்குத் தெரியாதா? ஏன் என்றால் யார் மீது வரி போடலாம் என்று என்னையே ப.உ.ச. கேட்பார்கள். அதற்குச் சொல்கிறேன். இந்த நான்கு வருஷத்தில் கொள்ளை அடித்த கும்பல் நாட்டில் இருக்கிறதா, இல்லையா? 14 லட்சம் சர்ப்ளஸ் பட்ஜெட் என்று என்ன, இவர்கள் மீது வரி போட்டால் 14 கோடிக்கு சர்ப்ளஸ் பட்ஜெட் போட முடியாதா?



1973 மார்ச் 6]

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** விவசாயத்தில் அதிக வருமானம் பெறுகிற பெரிய நிலப்பிரபுக்களுக்கு வருமான வரி போட்டபோது இந்த அவையில் கம்யூனிஸ்டுக் கட்சியின் சார்பில் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் நல்லமுறையில் வரவேற்று ஆதரித்துப் பேசினார்கள். பிறகு அந்த வரியை அடிப்படையில் குறைக்கவேண்டுமென்று நிலப்பிரபுக்கள் ஒரு இயக்கம் நடத்திய போது அதிலும் கம்யூனிஸ்டுக் கட்சியினர் அங்கம் எடுத்துக் கொண்டார்கள். முற்போக்கான புதிய சட்டத்தையோ, திட்டங்களையோ அரசு கொண்டுவருகிறபோது அதனை அமல்படுத்துகிற நேரத்தில் எல்லா முற்போக்குக் கட்சிகளும் அதற்கு ஆதரவாக இருக்கவேண்டுமென்று இங்கே மணலி அவர்கள் சொன்னார்கள். ஆனால் இந்த அவையில் விவசாய வருமான வரியை ஆதரித்துப் பேசி வெளியில் அதற்கு எதிராக இருந்தார்கள் கம்யூனிஸ்டுக் கட்சியினர், இதை மறந்துவிடக் கூடாது.

**திரு. மணலி சி. கந்தசாமி :** எந்தப் பிரச்னையாக இருந்தாலும் ஒரு சில குறிப்பிட்ட நிலையில்தான் நாங்கள் நிற்போம் அதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். நாங்கள் எப்படியோ குட்டிச்சுவராய்ப் போகிறோம். நான் சொல்லக்கூடிய விஷயங்களைக் கொஞ்சம் கவனித்துப் பாருங்கள். மேல்மட்டத்திலேயே நின்று பயன் இல்லை.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அவர் சொல்லக்கூடிய விஷயங்களுக்கு வாதமாக நான் பேசவில்லை. பெரியவரின் அறிவுரை என்று எடுத்துக் கொண்டுதான் என் கருத்தைச் சொன்னேன். இப்படி ஒரு முக்கியமான சட்டத்திற்கு இங்கே ஆதரவு அளித்த அந்தக் கட்சி வெளியில் எதிர்ப்பைத் தந்திருக்கிறதே என்பதைச் சொன்னது விவாதத்திற்காக அல்ல.

**திரு. மணலி சி. கந்தசாமி :** நானும் வாதப் பிரதிவாதத்திற்குப் போகத் தயாராய் இல்லை. விவசாயத்தைப் பொறுத்த வரையில் இன்றைக்கு புஞ்சைப் பயிர் கமர்ஷியல் க்ராப் வைக்கிறவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இடையில் உள்ளவர்கள் தான் இதிலும் கொள்ளை அடிக்கிறார்கள். புஞ்சைப்பயிர் வைக்கிற விவசாயிகளுக்கு ஒரு நிரந்தரமான விலை உத்தரவாதம் இருக்கவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நேரமாகி விட்டது.

[1973 மார்ச் 6

**திரு. மணலி சி. கந்தசாமி :** இன்னும் இரண்டு மூன்று கருத்துக்கள் இருக்கின்றன. நான் வேண்டுமானால் நாளை தொடர்ந்து பேசுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இல்லை. இப்பொழுதே பேசிவிடுங்கள். உங்களுக்குப் பிறகு இன்றைக்கே திரு. எ. ஆர். மாரிமுத்து பேசியாக வேண்டும்.

**திரு. மணலி சி. கந்தசாமி :** அடுத்து, உங்கள் அதிகார வர்க்கத்தைப்பற்றிச் சொல்லித்தான் ஆகவேண்டும். நிலச்சீர் திருத்தச் சட்டம் கொண்டுவந்திருக்கிறோம். பதிவு செய்து கொள்ள வேண்டுமென்றால் 200 ரூபாய் கொடு என்று கேட்கிறார்கள். உடனே நிரூபிக்க முடியுமா என்பார்கள். நான் நடப்பதைச் சொல்கிறேன். மேல்மட்டத்தில் ரெவின்யூ போர்டு அளவில் எத்தனை ஊழல்கள் இருக்கின்றன என்பது எனக்குத் தெரியும். நாங்கள் இதற்காகத்தான் அப்போதே சொன்னோம். நிலம் கொடுப்பது என்றால் சர்வகட்சியினரையும் கொண்ட ஒரு குழுவை வைத்துக்கொடுங்கள் என்பதாக. நாங்கள் என்ன பதவிக்கு ஆசைப்பட்டு கேட்டோமா? இல்லை. இப்படி சர்வ கட்சியினர்களும் இருக்கிறபோது இதுபோன்ற ஊழல்களுக்கு இடம் ஏற்படாது என்றுதான் சொன்னோம்.

பி.ப. 1-30 அப்படிப்பட்ட ஒரு நிலைமையிலே இன்றைக்கு நிர்வாகத்திலே இருக்கக்கூடிய ஊழல்கள் மிகைப்படுத்தப்படுவதாகச் சொன்னாலும், எதிலும் 10-ல் ஒன்றாவது இருக்கத்தான் செய்கிறது. குடியிருப்பு மனை பதிவு செய்ய கணக்குப்பிள்ளை ரூ. 5 கேட்கிறான். அவனுக்குக் கொடுக்காமல் இருக்க முடியுமா? விவசாயி சொல்கிறான், அவன் ரூ. 5 கேட்கிறானே என்று. அங்கும் பாவமாக இருக்கிறது, இங்கும் பாவமாக இருக்கிறது. நான் உள்ளபடியே கேட்டுக் கொள்கிறேன், தஞ்சை ஜில்லாவிலே சகல கட்சிகளுடைய கமிட்டி போட்டு, பட்டாக்கள் எப்படி கொடுக்கப்படுகின்றன, எப்படி கொடுக்கப்படவில்லை என்று யோசனை செய்யுங்கள். நீங்கள் செய்தது தப்பு என்று அதை ருஜுப் படுத்துவதற்காகச் சொல்லவில்லை. அதைச் செம்மைப்படுத்தி அடுத்த ஜில்லாக்களில் சரியாக அமல்படுத்த வேண்டுமென்பதற்காகத்தான் சொல்கிறேன்.



1973 மார்ச் 6] [திரு. மணலி சி. கந்தசாமி]

இன்றைக்கு சபார்டினேட் லெஜிஸ்லேஷன் கமிட்டி, ரூல்ஸ்களை, விதிகளைப் போடும்போது, சௌகரியத்திற்கு தக்கபடி என்று போடுகிறார்கள். சௌகரியத்திற்கு தக்கபடி என்று சொல்வதற்கு வியாக்கியானம் இருக்கிறது. பணத்திற்கு ஏற்றபடி ஒரு கணக்கு பிள்ளை 2 சென்ட் கொடுக்கிறான். வேண்டியவனாக இருந்தால் 5 சென்ட் என்று சொல்வான். சிலபேருக்கு இல்லாமல் போய் விடும். நிலச் சட்டங்களைப் போடும்போது விரோதமான நிலைமை களுக்குக் கொண்டு போகாதீர்கள் என்று சொல்கிறேன். நீங்கள் ஒத்துக்கொள்ளமாட்டீர்கள் கரும்புக்கு அதிக விலை கொடுக்க வேண்டுமென்றால்.

மால்கோவை எடுத்திருக்கிறீர்கள். சோஷலிசத் திட்டம் தான். சோஷலிசத் திட்டம் எதைச் செய்தாலும் கண்ணை மூடிக் கொண்டு கையைத் தூக்க எங்கள் கட்சி தயார். மால்கோவால் சென்டர்-ஸ்டேட் கன்ஃப்ராண்டேஷன் வரப்போகிறது. அப்புறம் சொல்லப் போகிறீர்கள், அவர்கள் ஒத்துக்கொள்ளவில்லை, ஆகவே, இதை விட்டுவிடவேண்டுமென்று. சக்தி சர்க்கரை ஆலைக்குப் போயிருந்தோம். எங்களுடைய ஆலையைப் போல் நன்றாக இயங்குகிற ஆலை கிடையாது என்று சொன்னார்கள். அவர்களுக்கு ரூ. 2½ கோடி நிகர லாபம் கிடைத்திருக்கிறது. வட்டி கொடுத்து, போனஸ் கொடுத்து, சம்பளம் கொடுத்து, ரூ. 2½ கோடி நிகர லாபமாக கிடைத்திருக்கிறது. அப்படிப்பட்ட ஆலைகளை தனிப் பட்டவர்களிடத்திலே ஏன் வைத்திருக்கவேண்டும்? அவைகளை எடுத்தால் சர்க்காருக்கு ஆதாயம் கிடைக்கும், சர்க்கரையும் சுலபமாக கிடைக்கும், கரும்பு வியாபாரத்தில் விவசாயிக்குக்கூட நல்ல விலை கொடுக்க முடியும்.

அதேபோல் ஆரூரான் ஆலை, பிரயோஜனம் இல்லாமல், நஷ்டக் கணக்குக் காட்டுவது அவர்கள் வேலை. அதில் பல ஊழல்கள் இருக்கின்றன. மால்கோவை எடுத்ததைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் முதன்மை நிர்ணயிக்கும்போது பிரையாரிட்டி டிசைட் பண்ணும்போது, உங்களுக்கு விஞ்ஞான ரீதியான கண்ணோட்டம் இல்லை. தமிழ் நாட்டு மக்களுடைய வாழ்வுக்கு ஆதாரம் தரக்கூடிய, நல்ல விதத்திலே வினியோகப் படுத்தக் கூடிய, எது நல்லதாக இருக்கும் என்று சிந்தித்துப் பார்த்தால் மால்கோ எடுத்ததை ஆதரிக்கிறோம். ஆனால் இதனால்

மத்திய சர்க்காருக்கும் மாநில சர்க்காருக்கும் மோதல் ஏற்படும். ஏனென்றால், இது கன்கரன்ட் லிஸ்டில் இருக்கிறது.

அடுத்தது, கைத்தறி தொழிலில் 20 லட்சம் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். 50 லட்சம் சமுதாயத்தினர் சந்நியில் இருக்கிறார்கள் என்று சொன்னால் அவர்களுக்கு நன்மை செய்யும் காரியங்களில் எல்லாம் நாங்கள் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோம். அன்றைக்கு தீர்மானம்கூடப் போட்டோம். அப்படிப்பட்ட அதிகாரம் வந்தபிறகு அதை ஒழுங்காக விநியோகிக்க, உத்தரவாதம் ஏற்படுத்த வேண்டுமென்பதற்காக சர்வகட்சி குழுவை அமைக்கவேண்டுமென்று கோருகிறோம். சர்வ கட்சி குழு வேண்டுமென்று சொல்லும்போது எங்களுக்குப் பதவி வேண்டுமென்பதற்காக அல்ல. அப்படிப்பட்ட ஊழல்கள் இடம் பெறாமல் இருக்கவேண்டுமென்பதற்காக இதைச் சொல்கிறேன். நூல் விநியோகத்தில் பல ஊழல்கள் இருக்கின்றன. அவை தவிர்க்கப்படவேண்டும்.

மத்திய சர்க்கார் அதிகாரத்தை கொடுத்து விட்டால் மட்டும் போதாது. நமக்கு கொடுக்கிற அதிகாரத்தை, நூல் வாங்குவது, என்ன விலையை நிர்ணயிப்பது, குறிப்பிட்ட விலையை நிர்ணயிப்பது, இவைகளைப் பார்க்கத்தான் சர்வ கட்சி குழு வேண்டுமென்று நான் சொல்கிறேன். ஆகவே, ஒரு சட்டத்தை நிறைவேற்றுவது மட்டும் போதாது. அது அழகாக இருக்கலாம். அதிலே இருக்கக்கூடிய பலகீனங்களை எதிர்க்கட்சிகள் சுட்டிக் காட்டும்பொழுது நீங்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும். நான் கொண்டு வந்திருக்கிற நிலச் சீர்திருத்தச் சட்டத்தை நீங்கள் ஆதரியுங்கள். நீங்களே அதைக் கொண்டு வருவதாக இருந்தால் நாங்கள் வாபஸ் வாங்கிக் கொள்கிறோம், உங்கள் சட்டத்தை ஆதரிக்கிறோம். உழுகிற குடியானவனுக்கு 5 ஏக்கர் சொந்தமாகி விட்டது என்று அடுத்த வருடம் சொல்லுங்களேன்.

வன இலாகாவுக்கு சொந்தமான, சாகுபடிக்கு சொந்தமான நிலங்களை பரிசீலித்து கொடுங்கள். ஏனென்றால், எனக்குத் தெரியும், எம்.எல்.ஏக்களே சிலபேர் தங்களுக்கு நிலத்தை பட்டா செய்துகொண்டிருக்கிறார்கள். நான் அவர்களுடைய பெயரைக் குறிப்பிட விரும்பவில்லை. நான் வேதனைப்படுகிறேன், ஆத்திரப் படுகிறேன். என்னுடைய பிள்ளைகளுக்கு வருங்காலம்





கிடையாதா? சோஷலிசத்தைப்பற்றி பேசுகிற நேரத்தில், நம்முடைய பிள்ளைகள் என்ன செய்வார்கள் வருங்காலத்தில் என்று நினைத்தால் அது பைத்தியக்காரத்தனம் அல்லவா? ஏன் உங்கள் பிள்ளைகளுக்கு வருங்காலம், நன்றாக இருக்கும் என்று, இந்த சோஷலிசத்தைப்பற்றி பேசுகிற நேரத்தில், தன்னம்பிக்கை ஏற்படவில்லை. அவைகளை நீங்கள் சீர் தூக்கிப் பார்க்கவேண்டும். மற்ற கட்சிகள் நீங்கள் செயல்படுவதைப்பற்றிச் சொல்லும்போது, அவர்கள் சரியான பாதையில் போகவில்லையென்று சொல்கிறீர்கள். அப்படியென்றால் நல்ல வழியில் கொண்டுபோவதற்கான வகையிலே நிர்வாகத்திலே எந்த அளவுக்கு உங்கள் கட்சிக்காரர்களுக்குப் பங்கு இருக்கிறதோ எந்த அளவுக்கு உங்கள் கட்சிக்காரர்கள் பங்கு எடுத்துக்கொள்கிறார்களோ அந்த அளவுக்கு சர்வ பகுதியினருக்கும் பங்கு அளித்தால் அது ரொம்ப நல்லது.

இன்னும் பல்வேறு காரியங்களைப் பற்றிப் பேசுகிற வாய்ப்பு மானியங்களின்போது வரும். இப்பொழுது நல்லெண்ணத்தோடு இவைகளைக் கூறிவிட்டேன். நீங்கள் அதை நல்லெண்ணத்தோடு எடுத்துக்கொண்டு, மானியங்கள்மீது, எவை செழுமைபடுத்தப் பட்டவைகள் எந்தச் செலவுகள் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கின்றன என்று தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்கு வாய்ப்பு வழங்கியதற்காக நன்றி தெரிவித்து முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஏற்கனவே மணி 1.35. திரு. ஏ. ஆர். மாரிமுத்து அவர்கள் இன்று பேசப் போகிறாரா?

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** தலைவர் அவர்களே, நாளை நான் ஊரிலிருக்க மாட்டேன் என்ற காரணத்தால், முன்பே தலைவரிடத்திலே கேட்டுக்கொண்டேன். கொஞ்சம் நேரம் இன்றைக்கே கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின் அனுமதியோடு அலுவல் நேரத்தை சிறிதுநேரம் நீடித்துக்கொள்கிறேன். தயவுசெய்து சீக்கிரமாக முடித்துக்கொள்ளுங்கள்.

*திரு. ஏ. ஆர். மாரிமுத்து: மதிப்பிற்குரிய தலைவரவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையின்பேரில் என்னுடைய கருத்துக்களை சொல்ல முன்வந்துள்ளேன்.

இன்றையதினம் ஒரு வரியுமில்லாத நிதிநிலை அறிக்கையை மிகவும் ஜாக்கிரதையோடு நமது முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். வரி போடவில்லையென்றாலும் நாட்டிலே இருக்கிற அபிவிருத்தித் திட்டங்கள் கடந்த ஆண்டில் எந்த வேகத்தில் இருந்தனவோ அதே அளவில் வைத்துக்கொண்டால் போதும், இன்றைக்குப் புதிதாக வரிகள் போட்டால் மக்களிடத்திலே அதிருப்தி வந்துவிடுமோ என்பதை தெளிவாக புரிந்து கொண்டு வரியில்லாத ஒரு நிதிநிலை அறிக்கையை கொடுத்திருக்கிறார்கள்.

அடுத்தபடியாக, இந்த நிதிநிலை அறிக்கையைப் பார்க்கின்ற பொழுது, எல்லா ஆண்டுகளிலேயும் எப்படி மத்திய அரசின்மீது குறைகள் சொல்லப்பட்டதோ, அதை இந்த ஆண்டு கொடுத்துள்ள அறிக்கையிலேயும் கூறி இருக்கிறார்கள். நம்முடைய திட்ட நிதி உதவி குறைந்துபோயிருக்கிறது என்பதை அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். திட்ட நிதி என்பது மத்திய அரசு அந்தந்த மாநிலங்களுடைய நிலைமையை உணர்ந்துகொண்டு அவர்களுடைய தேவையைப் புரிந்துகொண்டு, அந்த மாநிலத்தினுடைய வளர்ச்சியை அடிப்படையாக வைத்து, நிர்ணயித்துக் கொடுக்கிறது. ஆனால், நமது அரசு கூறுவது, அதை நிதிக் கமிஷனிடமே கொடுத்துவிட்டு நிதிக் கமிஷன் மூலமாகத்தான் பிரித்துக் கொடுக்கவேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். அது எவ்வளவு தூரம் சரியானது என்பதை தயவு செய்து சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்க விரும்புகிறேன்.

நமது நாட்டிலே ஒரு பகுதி வளர்ச்சியுற்றிருக்கிறது, இன்னொரு பகுதி மிக மோசமான நிலையிலே, வளர்ச்சியுறாத நிலையிலே இருக்கிறது. இவைகளையும் கருத்தில்கொண்டு, மத்திய அரசு அவர்களுடைய நிலையை கீழே விடாமல், எல்லா மாநிலங்களும் வளரவேண்டுமென்ற நிலையிலே நடவடிக்கைகளை எடுக்கிற பொழுது வளர்ச்சியுற்ற மாநிலங்களுக்கு ஓரளவு குறைவான நிதி கொடுப்பது இயற்கையாக இருக்கிறது. உதாரணத்திற்கு எடுத்துக் கொண்டால் தஞ்சை மாவட்டத்தையும், இராமநாத-





புரம் மாவட்டத்தையும் நாம் ஒரே நிலையிலே வைத்துப் பார்க்க முடியாது. இராமநாதபுரம் மாவட்டம் ஒரு பிற்பட்ட மாவட்டம். அங்கே வளர்ச்சி மிகக் குறைவாக இருக்கிறது. வளர்ச்சியுற்ற மாவட்டங்களை விட வளர்ச்சி குறைவாக உள்ள மாவட்டங்களுக்கு நாம் அதிகமாகக் கவனம் செலுத்தி வளர்ச்சியுறச் செய்து அதையும் மற்ற மாவட்டங்களோடு ஒத்ததாகக் கொண்டு வருவதிலே எந்தத் தவறும் இருக்கமுடியாது. மத்திய அரசு இவற்றையெல்லாம் கவனத்தில் வைத்துக்கொண்டு தான் நிதி ஒதுக்குகிறது.

ஜனத்தொகை விகிதாச்சாரத்தில் நிதி கிடைக்கவில்லை என்றெல்லாம் சொல்வது சரியல்ல. அதிகமாக வேண்டுமென்று கேட்பதிலே தவறில்லை. அழுதபிள்ளைதான் பால்குடிக்கும், ஆகவே, கேட்பதிலே தவறில்லை. ஆனால் மத்திய அரசினுடைய கொள்கை தவறானது தமிழகத்திற்கு விரோதமானது என்ற எண்ணம் இருக்கக்கூடாது. நம்முடைய நிதிநிலை அறிக்கையை வைத்துப் பார்க்கிறபோது மத்திய அரசுமூலம் 151 கோடி ரூபாய் மானியமாகவும் வரியினுடைய பங்காகவும் கிடைத்து இருக்கிறது. அது மட்டுமல்லாமல் 60 கோடி ரூபாய் வரையிலும் கடன் வகையிலே கொடுத்திருக்கிறார்கள். சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு 28 கோடி ரூபாய் அதிகமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. எந்த அளவிற்கு அவர்களுடைய வருவாய் வருகிறதோ அந்த அளவிற்கு நமக்கும் கொடுத்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். கிராண்ட்ஸ் இன் எய்ட் சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு சுமார் 11½ கோடி ரூபாய் வரையிலும் கடன் சுமையிலே 2½ கோடி ரூபாயை கிராண்ட்ஸ் இன் எய்டாக மாற்றியும் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, மத்திய அரசு நமக்கு எதிராக காரியங்களைச் செய்யவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மத்திய அரசு நிதிக்கமிஷனிடம் நம்முடைய அரசு கொடுத்திருக்கிற மெமோரண்டத்தைப் பார்த்தால் மத்திய அரசுக்கு வருகின்ற எல்லா வரி வருமானத்தையும் மாநிலங்களுக்கு கொடுத்துவிடவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மத்திய அரசு தனக்கு என்று சில வரி வருமானத்தை முழுமையாக வைத்துக்கொண்டிருக்கிறது. உதாரணமாகச் சொன்னால் சுங்க

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1973 மார்ச் 6

வரி, ஏற்றுமதி வரி, கார்ப்பரேஷன் வரி போன்றவையாகும். மத்திய அரசுக்குச் சேருகிற கார்ப்பரேஷன் டாக்ஸையும் இன்கம் டாக்ஸோடு இணைக்கவேண்டுமென்று நாம் மெமோரண்டத்திலே குறிப்பிட்டு இருக்கிறோம். அந்த வரியையும் மாநில அரசு களுக்கு பிரித்துக் கொடுத்துவிட்டால் மத்திய அரசின் நிதிநிலை என்ன ஆகும், அதனுடைய பொறுப்பு என்ன ஆகும் என்பதை யெல்லாம் நாம் கவனித்துப் பார்க்கவேண்டும். இந்தமாதிரி சில வருமான இனங்கள் இருப்பதால்தான் பிற்பட்ட மாநிலங்கள், முற்பட்ட மாநிலங்கள் எவை என்று பார்த்து அவற்றிற்கு வேண்டிய அளவிற்கு நிதியை ஒதுக்கிக்கொடுக்கக்கூடிய நிலைமை பொறுப்பு அதற்கு இருக்கிறது. இப்பொழுது இருக்கிற நிலைமையை மாற்றி அத்தனையையும் மாநிலங்களுக்கே பிரித்துக் கொடுத்துவிட்டால் நீக்குப்போக்கற்ற தன்மையை அது ஏற்படுத்திவிடும் என்ற காரணத்தினாலேதான் அவர்களிடத்திலே சில வரிகளைப் பொறுத்தவரையில் வருமானத்தைப் பெறுகின்ற உரிமையை நாம் அனுமதித்துத் தான் ஆகவேண்டும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, அந்த பேக்வர்ட்னஸ்-ஐ வைத்துதான் கேட்டிருக்கிறோம்.

" Financial resources should come within the purview of the Finance Commission "

என்று கேரளாவின் நிதியமைச்சர் அவர்களும் கேட்டிருக்கிறார்கள். அவர்களும் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்தான் என்று கருதுகிறேன். ஆகவே, தங்களுடைய கட்சியின் கருத்து என்ன என்பதைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** என்னுடைய கட்சி ஆட்சியிலே இருக்கிறது. ஆட்சியிலே உள்ளவர்களின் கருத்துத்தான் என்னுடைய கருத்தாகும். கோரிக்கைகள் இருக்கலாம். எல்லா வற்றையும் நிதிக்கமிஷனிடத்திலே கொடுத்து விடவேண்டாம் என்பதுதான் என்னுடைய கருத்து. அதிலே இன்னொன்றையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். வெள்ளப் பெருக்கு இருந்தாலும் இல்லாவிட்டாலும் அதற்காக ஒரு தொகையை மாநிலக் கணக்கிலே சேர்க்கவேண்டுமென்றும் தேவையானபொழுது அந்த



1973 மார்ச் 6] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

எடுத்துக்கொள்ளவேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. வறட்சி, புயல், வெள்ளம் எப்பொழுதோ வருகிறது. மகாராட்டிரத்திலே மிகமோசமான வறட்சி இப்பொழுது இருக்கிறது. தமிழகத்திலே வெள்ளப் பாதிப்பு பெருமளவிலே ஏற்பட்டு அதற்காக 14½ கோடி ரூபாய் கேட்டு அதை வாங்கி யிருக்கிறோம். இவர்கள் சொல்லியிருக்கின்ற நிலைமையை ஏற்றுக் கொண்டால் யாருக்குத் தேவையில்லையோ அவர்களுக்குப் போய்ச் சேரக்கூடிய நிலைமையும், யாருக்குத் தேவைப்படுகிறதோ அவர்களுக்கு இல்லாத நிலைமையும் ஏற்படும். . .

THIRU J. JAMES : Sir, on a point of order. There is no Quorum in the House.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கோரம் இருக் கிறது. நீங்கள் பேசுங்கள்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** விவசாயத்தைப் பொறுத்த வரையிலே மின்சாரம் மிக முக்கியமான பங்கு வகிக்கிறது. மின்சார வெட்டினாலே இன்றைக்குத் தமிழ்நாடே பாதிக்கப் பட்டிருக்கிறது என்பதிலே எல்லோருக்கும் கருத்து வேறுபாடு இல்லை. இதிலே இந்த அரசு காலத்திலே முன்னெச்சரிக்கையாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லையென்பதுதான் எங்களுடைய குற்றச்சாட்டு ஆகும்.

இதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. பருவ மழையின்மை காரணமாக உற்பத்தி செய்யமுடியவில்லை, அது இயற்கையின் செயல் என்று சொல்லிவிடலாம். ஆனால் அனல் மின்சாரத் திட்டங்கள் மூலம் ஓரளவுக்கு உற்பத்தியைப் பெருக்கியிருக்கலாம். இப்பொழுது எதற்கெடுத்தாலும்சரி மத்திய சர்க்கார் என்று சொல்கிறார்கள். மின்சாரப் பற்றாக்குறை என்றால் மத்திய சர்க்கார் பொறுப்பு என்று சொல்கிறார்கள். மின்சார உற்பத்தி செய்வது விநியோகம் செய்வது மாநில சர்க்காருடைய பொறுப்பு. மத்திய சர்க்கார் உதவி அளிப்பார்கள். நெய்வேலியிலே 600 மெகாவாட். மின்சக்தியுள்ள ஜெனரேட்டர் வைக்கப்பட்டிருக்கிறது. அது ஓடிய அளவு 150 மெகாவாட் அளவுக்குத்தான், அந்த ஜென

மோட்டார் ஓடியிருக்கிறது. மீதி அளவுக்கு ஓடவில்லை. அதையும் ஓட்டியிருந்து அதன் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்திருந்தால் அந்த மின்சாரத்திற்கு கட்டுபடியாகக்கூடிய விலையைக் கொடுக்க நாம் தயாராக இல்லை. நாம் எடுத்துக்கொள்வதற்கு தயாராக இருந்தால் அவர்கள் உற்பத்தி செய்திருப்பார்கள். நான் நெய்வேலிக்குச் சென்றபோது அதைத்தான் தெரிந்து கொண்டேன். இப்பொழுது அங்கே அந்த நிர்வாகம் 400 மெகா வாட் சக்தியுள்ள மின்சாரம் உற்பத்திசெய்து வருகிறது.

இன்றைக்கு இந்த அரசு 10 பைசா கொடுத்துவருகிறது. முன்பு 8.2 பைசாதான் கொடுத்தார்கள். அன்றைக்கே மின்சாரத்தை அதிமாக எடுத்துக்கொள்வோம் என்று இவர்கள் சொல்லியிருந்தால் இன்றைக்கு இந்தத் தட்டுப்பாடே வந்திருக்காது. வெளி மாநிலங்களிலிருந்து உற்பத்திசெய்யக்கூடிய மின்சாரத்தை குறைவான விலைக்கு வாங்குவதில்தான் அக்கறை காட்டினோமே தவிர மத்திய சர்க்கார் திட்டத்திற்கு நாம் ஊக்கம் கொடுக்கவில்லை. 150 கோடி ரூபாய் மூலதனம் போட்டு நடத்தப்படுகிறது அது. அதனிடமிருந்து மின்சாரம் வாங்கவில்லை. தமிழகத்தின் மூலதனத்தினுடைய சக்தியை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ளக்கூடிய முயற்சியை இந்த அரசு செய்யவில்லை. இப்பொழுதாவது அரசாங்கம் செவிசாய்த்து அந்த முறையிலே இன்றைக்கு அந்த நிர்வாகம் 400 மெகாவாட் உற்பத்தி செய்துவருகிறார்கள் என்பதை வரவேற்கிறேன். 600 மெகாவாட் உற்பத்தி செய்யவேண்டும். அப்படி நாம் அதிலே உற்பத்தியாகின்ற எல்லாவற்றையும் பயன்படுத்திக்கொண்ட பிறகு நாம் சிபாரிசு செய்தால் இரண்டாவது சுரங்க வேலைத் திட்டத்தை அவர்கள் தொடங்குவதற்கு வசதியாக இருக்கும். இல்லையென்றால் போட்ட முதலுக்கு நஷ்டம் வந்துகொண்டிருக்கும். உற்பத்தி இல்லையென்றால் இன்னொரு சுரங்கத்தைத் தோண்டுவதற்கு அவர்கள் தயாராக இருக்க மாட்டார்கள். நாம் சிபாரிசு செய்த இரண்டாவது சுரங்கத்தைப் பெற வேண்டுமென்றால் 600 மெகா வாட் உற்பத்தி சக்தியை வாங்கிக்கொள்வதற்குத் தயாராக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இரண்டு மூன்று ஆண்டுகளாக மின்சார உற்பத்தியிலே அதிகக் கவனம் செலுத்தவில்லை. பிளானில் 40 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். அதுவல்லாமல் செவின்த்



கணக்கில் 1½ கோடி கொடுப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. இது தவிர மின்சார வாரியம் ஏதாவது கடன்களுக்கு வழி செய்து திட்டம் போட்டு செயல்பட இருக்கிறதா என்பது மின்சார வாரியக் கணக்கைப் பார்க்கும்பொழுதுதான் தெரியும். இந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக ரூரல் எக்ஸ்டென்ஷன்களிலேதான் அதிக ரூபாயை செலவழித்திருக்கிறோம்.

நம்முடைய ஆசையாலே, கம்பிகளை அதிகமாகப் போட வேண்டும், எக்ஸ்டெண்ட் செய்ய வேண்டுமென்ற ஆசையிலே செய்திருந்தாலும்கூட, மின்சார உற்பத்தியைப் பெருக்குவதற்கு நாம் செயல்படவில்லை. ஆகவே, இனிமேலாவது அதிலே கவனக் குறைவில்லாமல் அனல் மின்சாரத் திட்டங்களை அமல் செய்ய நம்முடைய மாநில அரசும் முன்வரவேண்டும். மின்சாரத் திட்டங்களைப் பொறுத்தவரையில் மத்திய சர்க்காரின் அனுமதியைப் பெற்றுத்தான் செய்ய வேண்டுமென்று இல்லை என்பதாக நான் அறிகிறேன்.

ஆகவே, மாநில அரசின் நிதியிலிருந்து, அனுமதிக்கு எழுதி விட்டு, இந்தத் துறையிலே மாநில அரசின் நிதியிலிருந்து இன்னின்ன அனல் மின்சாரத் திட்டங்களை ஆரம்பிக்கிறோம் என்று அறிவித்துவிட்டு நாமே செய்யலாம் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, மின்சாரத் திட்டத்திற்கு நாமே செலவு செய்யலாம் என்று கூறுகிறார்கள். அவைகளுக்கு வெளிநாட்டுச் செலாவணி தேவைப்படுமானால் மத்திய அரசின் அனுமதியில்லாமல் ஒரு அணுவைக் கூட அசைக்க முடியாது.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** நான் கேள்விப்பட்ட வரையில் சொல்லுகிறேன்.

அடுத்து, இந்தக் கைத்தறி பெரிய பிரச்னையாக இருக்கிறது. நூல் விநியோகம் இல்லை. சபையிலேகூட ஒரு தீர்மானம் போட்டிருக்கிறோம். அதுமட்டும் போதும் என்று நான் கருதவில்லை. தொழிலமைச்சரவர்கள் மத்திய அரசோடு தொடர்புகொண்டு நேரிலே சென்று வற்புறுத்தி நூலை அதிகமாகப் பெறுவதற்கு முயற்சிக்கவேண்டும். மத்திய அரசுக்கும் சில சிக்கல்கள் இருக்

கின்றன. அதை நாம் புறக்கணித்துவிட முடியாது. 200 மில்களிலும் இந்த நூல் பூராவையும் வட மாநிலங்களுக்குத் தான் தர வேண்டும். தமிழகத்தில் கைத்தறித் தொழிலை உற்பத்தியாகும் நூல் பூராவையும் தமிழகமே எடுத்துக்கொள்ள முடியாது. ஆகவே வேறு மாநிலங்களுக்கு விற்கத்தான் வேண்டும்.

எனவே, நூல் பற்றாக்குறையாக இருக்கும்பொழுது யார் யார் நூல்களை அங்கேயிருந்து வாங்கிக்கொண்டிருந்தார்களோ அவர்களும் தங்களுக்குப் பங்கு வேண்டுமென்ற கோரிக்கையை அனுப்புவார்கள். அதைப் புறக்கணிக்க முடியாது. நம்முடைய உற்பத்தி அதிகமாகும்பொழுது சிக்கல் ஏற்படுமானால் அந்தச் சிக்கலைப்பற்றி அவர்களிடத்திலே சொல்லலாம். மத்திய அரசுக்கு இருக்கின்ற நிலைமைகளையும் எடுத்துப்பார்த்து அதற்குத் தக்க முறையில் நூலைப் பெறுவதற்கு முயற்சி எடுக்கவேண்டும். நமக்கு அதிகாரம் மட்டும் கொடுத்தால் போதும் என்று சொன்னால் சரியாகாது. பிற மாநில அரசுகளிடமிருந்து கொள்முதல் செய்கின்ற அதிகாரத்தைக் கொடுத்துவிட்டால் இன்றைக்கு வேண்டுமானால் சமாளித்துவிடலாம். ஆனால், அவைகளை எங்கே விற்பது? இந்த நிலையைக் கருத்திற்கொண்டு அதிக நூலைப் பெறுவதற்கு நாம் முயற்சியெடுக்கவேண்டும். அதிகாரம் இருக்கிறதோ இல்லையோ அதை விட்டுவிடுங்கள். அதிகாரம் வேண்டுமென்பதை விட நூல் அதிகமாக வேண்டுமென்று மத்திய சர்க்காரிடம் கோரிக்கையைத் தெரிவிக்க வேண்டும்.

மத்திய சர்க்கார் தொழில் துறைகளில் 686 கோடி ரூபாய் முதலீடு செய்துள்ளதாகவும், தமிழகத்திற்கு இதில் சென்ற ஆண்டு 20 கோடி ரூபாய் மட்டுமே முதலீடு செய்யப்பட்டிருக்கிறது என்ற கருத்து முதலமைச்சருடைய உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே, இருக்கும் தொகையை முதலீடு செய்வதற்கு எங்கே வாய்ப்பிருக்கிறது, எங்கே அதிகப்படியான முதலீட்டைப் போட்டால் லாபம் பெற முடியும், மக்களுக்குப் பயன்தரத்தக்க அளவில் இருக்கும் என்பதையெல்லாம் பார்த்துத் தான் அவர்கள் செய்ய முடியுமேதவிர, இந்தந்த மாநிலங்களுக்கு இவ்வளவு என்று பிரித்துக்கொடுத்துவிட வேண்டுமென்று எதிர்பார்க்க முடியாது. இதை ஒட்டுமொத்தமாகப் பார்க்கவேண்டும். முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலே அவர்கள் முதலீடு செய்வதில்





தமிழகத்திற்கு எவ்வளவு போட்டிருக்கிறார்கள், இதர மாநிலங்களுக்கு எவ்வளவு போட்டிருக்கிறார்கள் என்பதைக் கருத்திற்கொண்டு பார்க்க வேண்டுமே தவிர, சென்ற ஒரு ஆண்டிலே மட்டும் 20 கோடி ரூபாய் மட்டும் முதலீடு செய்திருக்கிறது என்று கூறுவது நியாயமல்ல.

ஏதாவது முழுத்திட்டங்கள் இருந்தால் அதை வற்புறுத்துவதிலே தவறில்லை. ஆனால் தொழிலில் லாபம் வருகிறதோ இல்லையோ, முதலீடு செய்ய வேண்டும் என்று ஒட்டுமொத்தமாகச் சொன்னால் அது நாட்டிற்குப் பயன்தரத் தக்கதல்ல, அது நல்ல விளைவுகளை ஏற்படுத்தாது என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இராணுவத்திற்குத் தேவையான தளவாடங்களை உற்பத்தி செய்யலாம் என்று குறிப்பிடுகிறார்கள். முதலிலேயே இராணுவ தளவாடங்களுக்கு வைத்திருக்கிறோம்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்தச் சட்டசபையினுடைய ஒரு கட்சியின் தலைவராக உள்ள திரு. மாரிமுத்து அவர்கள் தமிழ்நாட்டிற்கு எதுவும் தேவையில்லை, மத்திய சர்க்கார் நல்ல நோக்கத்திலேதான் காரியங்களைச் செய்கிறார்கள் என்பதால் இங்கே திட்டங்கள் அவசியமில்லை என்ற முறையில் சொல்கிறார்கள். இங்கேதான், தமிழ்நாடு சட்டசபையிலேதான் இப்படிக் கேட்க முடியும், வேறு எந்த மாநிலத்திலும் அந்த மாநிலத்திற்கு எதிராக பேசக்கூடிய நிலைமையைக் காண முடியாது. அந்தந்த மாநிலங்களின் குறைகளை அந்தந்த மாநில உறுப்பினர்கள் மத்திய அரசுக்குச் சொல்வார்கள். அதிலும் மத்தியில் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் சொன்னால் அதிகமாகப் பயன்படும். அதற்கு மாறாகப் பேசினால் இழப்பு—தமிழ் மக்களுக்குத்தான்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மதிப்பிற்குரிய அமைச்சரவர்கள் நான் கூறிய கருத்துக்களைத் தவறாகப் புரிந்துகொண்டார்கள் என்று கருதுகிறேன். ஏதோ தமிழகத்திற்கு ஒன்றுமே வேண்டாம், நீங்களே அங்கேயே வைத்துக் கொள்ளுங்கள் என்று நான் சொல்லவில்லை. நானும் தமிழகத்தில்தான் இருப்பவன். நானும் தமிழகம் வளர்ச்சிபெற வேண்டுமென்றுதான் கருதுகிறேன். ஆனால் மத்திய சர்க்கார் மாற்றாந்தாய் மனப்பான்மையில் நடப்பதாகக் கூறி, மத்திய சர்க்காரின்மீது ஒரு வெறுப்பு ஏற்படத்தக்க

ஒருநிலை உருவாகியிருக்கிறது என்பதற்காகச் சொன்னேனே தவிர இன்னின்ன தொழில்களுக்கு வாய்ப்புகள் இருக்கின்றன என்று சொன்னால் நாங்களும் சேர்ந்து கேட்பதற்குத் தயாராக இருக்கிறோம்.

அடுத்தபடியாக, இளைஞர் அணியை ஏற்படுத்தியிருக்கிறோம். இதில் ரொம்பப் பேரைச் சேர்த்திருக்கிறோம். அவர்களுக்கெல்லாம் வேலை வாய்ப்பு தருவது எப்படி என்று தெரியவில்லை. 25 வயதிலிருந்து 28 வயதுவரையில் இருந்தால் நாம் சேர்த்துக் கொள்ள முடியும் 30 வயது அளவில் வந்து விட்டால் என்ன செய்யப் போகின்றீர்கள்? ஆகவே, இந்தச் சந்தர்ப்பத்தில் இளைஞர் அணியிலே யார் சேர்வதாக இருந்தாலும் அரசு வேலையிலே அமர்த்திக் கொள்ளக்கூடிய காரியங்களில் விதிமுறைகளைத் திருத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 15 கோடி ரூபாய் அளவில் ஒரு திட்டத்தை மத்திய அரசின் ஒப்புதலைப் பெற்று, செயல்படுத்த இருப்பதாகக் காணப்படுகிறது. அந்தத் திட்டம் எப்படியிருக்கும், என்னென்ன முறைகளில் இருக்கும் என்பதைப்பற்றிக் குறிப்பிடப்படவில்லை, அது என் என்று தெரியவில்லை. இப்படிப்பட்ட வேலை வாய்ப்புகள் என்பது உற்பத்தித் துறையிலே அதிக வேலை வாய்ப்பை ஏற்படுத்துவதாக இருத்தல் வேண்டும். அரசு வேலைக்கு மட்டுமல்லாமல் உற்பத்தித் துறையிலும் அதிக வேலை வாய்ப்பை ஏற்படுத்துகின்ற முறையில் இந்தத் திட்டம் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாய வருமான வரியிலே மத்திய சர்க்கார் ஏதோ தலையிட்டு விட்டதாகப் பல உறுப்பினர்கள் கூறினார்கள். விவசாய வருமான வரி என்பது முழுக்க முழுக்க மாநில அரசின் அதிகார வரம்பிற்குட்பட்டது. மத்திய சர்க்கார் இன்றைக்குச் செய்திருப்பது, விவசாய வருமானத்தின்மீது 5,000 ரூபாய் விதிவிலக்கு. அந்த இன்கம் டாக்ஸுக்கு 5,000 ரூபாய்க்கு இரண்டாவது விதிவிலக்கு என்று இருக்கவேண்டாம். இரண்டாவது முதல் வருவாயைச் சேர்த்து அதிக வருவாயைத் தொழிலிலே போட்டு அதிகப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்திலே செய்யப்பட்டிருக்கிறதே தவிர நம்முடைய அதிகார வரம்பிலே மத்திய சர்க்கார் தலையிட்டதாகக் கூற முடியாது.





அதுமட்டுமல்ல, அதிகமான வருமான வரி வாங்கப்பட்டால் அது பிரித்துக் கொடுக்கப்படக்கூடிய ஒன்றுதான். அதிக வருமானம் வந்தால், வருமானத்தைப் பிரித்துக் கொடுக்கக்கூடிய ஒன்றுதான். இங்கே அதிக வசதி படைத்தவர்களிடமிருந்து வரிகளை வாங்கினால் அந்தப் பங்கு நமக்கும் இருக்கிறது. ஆகவே, இதில் ஒன்றும் மத்திய சர்க்கார் தவறு செய்யவில்லை, நம்முடைய அதிகாரத்திலே குறுக்கிடவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, கிராமப்புறக் குடிநீர்த் திட்டத்திற்காக 2 கோடி ரூபாய் மத்திய சர்க்கார் 'கிராண்ட்ஸ் இன் எய்ட்' ஆகக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் நாம் 1.46 கோடி ரூபாய் மட்டுமே செலவிடப்போவதாகத் தெரிகிறது. இதற்கு அந்த 2 கோடி ரூபாயையுமே ஒதுக்கியிருக்கலாம். ஆனால் இன்றைக்கு 1.46 கோடி ரூபாய் மட்டும் ஒதுக்கியிருப்பதன் காரணம் என்ன என்பது புரியவில்லை.

பி.ப

திரு. செ. கந்தப்பன் : தலைவரவர்களே, அவர்கள் சொன்ன 2-00

கருத்தைத் திருத்த விரும்புகிறேன். இரண்டு கோடி ரூபாய் 'கிராண்ட்ஸ் இன் எய்ட்' ஆக எதுவும் தரப்படவில்லை. 1972-73-ஆம் ஆண்டிற்கு 1 கோடி ரூபாய் முனைப்புத் திட்டத்தின்கீழ் கொடுக்கப்பட்டது. 1973-74-க்கு எவ்வளவு கிடைக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, 2 கோடி என்று போட்டிருக்கிறது. எதிர்பார்க்கப்படுகிறது என்று சொல்லவில்லை.

அடுத்தபடியாக, மருந்து வகைகளைப் பொறுத்தவரையில், பி. பார்மசி படித்தவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். இரண்டு கோடியே 70 இலட்சம் ரூபாய்க்கு மருந்துகள் வாங்குவதாகத் தெரிகிறது. இம்மாதிரி மருந்துகளை வாங்குவதைவிட நேரடியாக நாமே தயார் செய்ய முடியுமா என்று பார்க்க வேண்டும். அநேக டாக்டர்களைப் பார்க்கும்போது, மருத்துவமனைகளிலே கொடுக்கப்படும் மருந்துகள் அவ்வளவு நல்லதாக இல்லை. வெளியிலே வாங்குவது நல்லது என்று சொல்லும்படியான நிலைமையில் அதன் தரம் இருப்பதால் அந்த மருந்துகளை நாமே உற்பத்தி செய்தால் அதிகப்படியான மருந்துகளை உற்பத்தி செய்ய முடியும்.

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1973 மார்ச் 6

அவர்களுக்கும் கொடுக்க முடியும். ஆகவே, 2 கோடி 70 லட்சம் ரூபாய்க்கு வருஷா வருஷம் வாங்குவது என்பதற்குப் பதிலாக அதற்காக நாலைந்து கோடி மூலதனம் போட்டு முக்கியமான மருந்துகளை நாமே செய்வதற்கு முயற்சியை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிராமங்களில் பல விவசாயிகள் பெரும் நஷ்டத்தை அடைந்திருக்கிறார்கள். அவர்களுக்குப் பல நிவாரணங்களை அளிப்பதற்கான திட்டத்திற்கு மத்திய அரசும் தேவையான பணத்தைக் கொடுத்திருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் பெருமளவுக்கு விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அத்தகைய விவசாயிகளுக்கு கடன் வசூலிப்பை தள்ளி வைக்கவேண்டும். வெள்ள நிவாரணப் பணி தென்னாற்காடு மாவட்டத்தில் நடைபெறுவதைப் பார்த்தேன். அங்கே வெள்ள நிவாரணப் பணி என்று ஒரு போர்டு போட்டிருக்கிறார்கள். மத்திய அரசு அதற்காக 14½ கோடி ரூபாய் கொடுத்திருக்கிறது. அதைப்பற்றி போர்டில் ஒன்றும் காணவில்லை. மத்திய அரசு கொடுப்பதை மக்களுக்குத் தெரியப்படுத்தினால் அதனால் பெரிய நஷ்டம் ஒன்றும் வந்துவிடாது.

**திரு. செ. கந்தப்பன்:** மக்களிடமிருந்து வாங்கிய வரிப் பணத்தைதானே மத்திய அரசு கொடுக்கிறது.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** மக்களிடமிருந்து வாங்கி மத்திய அரசு கொடுக்கிறது என்றே போடலாம். தஞ்சையில் ராஜராஜ சோழன் சிலையைக் கோயிலுக்குள் வைப்பதற்கு மத்திய அரசு அனுமதி கொடுக்காததால், அந்தச் சிலையை வெளியே வைத்து 'மத்திய அரசு அனுமதி கொடுக்காததால் இந்தச் சிலை இங்கே வைக்கப்பட்டிருக்கிறது' என்று எழுதி வைத்திருக்கிறீர்கள். அதே போல் மத்திய அரசு கொடுக்கும்போது மத்திய அரசு கொடுக்கிறது என்று போட்டால் அதிலே தவறு கிடையாது.

ஸ்டாம்ப்ஸ் அட்மினிஸ்ட்ரேஷன் வருவாய் குறைந்திருக்கிறது. மார்க்கெட் வால்யூ படி ரிஜிஸ்ட்ரேஷன் கட்டணம் செலுத்த வேண்டுமென்பதற்கு ஹைகோர்ட் எதிர்ப்பாகத் தீர்ப்புக் கூறியது. அப்பீலில் சாதகமாக தீர்ப்பு வந்திருக்கிறது. மார்க்கெட் வால்யூ



1973 மார்ச் 6] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

என்று சொல்லும்போது 4 ரூபாய் கட்ட வேண்டிய இடத்தில் 40, 50 ரூபாய் வாங்கக் கூடிய நிலை இருக்கிறது. அதை நல்ல முறையில் மாற்றவேண்டும்.

ஐ.எம்.எஸ். லோனுக்காக வருஷத்திற்கு 3 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டது. இந்த வருஷம் ஐ.எம்.எஸ். லோன் கிடையாது. கூட்டுறவுச் சங்கங்கள் பல இடங்களில் செயல்படும் காரணத்தால் இது இல்லை என்று கூறியிருக்கிறார்கள். இந்த ஆண்டு ஐ.எம்.எஸ். லோனைக் கொடுப்பதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்த விஷயங்களை எல்லாம் டிமாண்ட்ஸ் மீதான விவாதங்களின்போது பேசலாம்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** தமிழை நிர்வாகத்தில் கொண்டு வரும் திட்டம் ரொம்ப மந்தமாக இருக்கிறது. அதை வேகப்படுத்த வேண்டும். காங்கிரஸ் அரசு இருக்கும்போது இருந்த மந்தத்தை விட இப்போது அதிக மந்தமாக இருக்கிறது.

எதை எடுத்துக் கொண்டாலும் ஆங்கிலந்தான் அதிகமாக இருக்கிறது. கோர்ட்டுகளை எடுத்துக் கொண்டால் தீர்ப்புகள் ஆங்கிலத்தில்தான் வழங்கப்படுகின்றன. வக்கீல்கள் வாதம் ஆங்கிலத்தில்தான் இருக்கின்றன. அவை எல்லாம் தமிழிலே இருக்க வேண்டும். கீழ்நிலைக் கோர்ட்டுகளிலாவது உடனடியாகத் தமிழிலே வாதங்கள், தீர்ப்புகள் இருக்க வேண்டுமென்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

மதிப்பிற்குரிய ஓரத்தநாடு சட்டமன்ற உறுப்பினர் ஒரு புகார் கூறினார். அப்படிப்பட்ட கருத்தை அவர்கள் தவறான கருத்தில் கூறி இருப்பார்கள் என்று கருதுகிறேன். என்னைப் பொறுத்த வரையில் இப்படிச் சொல்லிவிட்டால் பெரிய மாற்றம் வந்துவிடப் போவதில்லை. எந்தக் கட்சி சார்பும் இல்லாமல் பொதுமக்களிடத்தில் சென்று, வீடு வீடாகச் சென்று நான் அறிந்து நம்பியதைத்தான் எழுதியிருக்கிறேனே தவிர, உடனடியாக முன்னேற்றக் கழக ஆட்சியைக் கவிழ்த்துவிட்டு முதலமைச்சர் சீட்டில் உட்கார்ந்து விடப் போகிறேன் என்று கொடுக்கவில்லை. என்னுடைய நேர்மையில் சந்தேகம்

ஏற்பட்டாலும் எனக்கு அவருடைய நேர்மையில் நிரம்ப நம்பிக்கையுண்டு. கட்சி சார்பற்றவர்களை விசாரித்தால் என்னுடைய ஸ்டேட்மெண்ட் சரியாக இருக்கும் என்று தெரிவித்து
2-04 பி.ப. என்னுடைய உரையை முடிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இன்று இத்துடன் முடிவுற்று மீண்டும் நாளைக் காலை 9 மணி அளவில் கூடும்.

பின்னர், பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

## 6. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

66. Notification issued with G.O. Rt. No. 2219, Revenue, dated the 3rd October 1972, in regard to exemption from liability to entertainments tax, show tax and surcharge on entertainments tax to the benefit film shows conducted in the City of Madras and in the districts in aid of the 'Chief Minister's Eye Camp Fund'. [Laid on the Table of the House under sections 16 (4) and 8 (3) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939) and the Tamil Nadu Local Authorities Finance, Act, 1961 (Tamil Nadu Act 52 of 1961) respectively.]

67. Notification issued with G.O. Ms. No. 109, Revenue, dated the 17th January 1973, in regard to exemption from liability to entertainments tax, show tax and additional surcharge on the Cinematograph film show organised by Muslim Women's Association, Matriculation School, Madras on 21st January 1973, at Devi Theatre, Madras. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

68. Notification issued with G.O. Ms. No. 2967, Revenue, dated the 15th November 1972, in regard to certain amendments to Revenue Department Notification II-1 No. 3987 (*b*) of 1971, published at page 2 of Part II—Section 1 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 8th September 1971, as subsequently amended. [Laid on the Table of the House under section 18 (4) of the Tamil Nadu Agricultural Lands Record of Tenancy Rights Act, 1969 (Tamil Nadu Act 10 of 1969).]





69. Notification issued with G.O. R. No. 213, Revenue, dated the 1st February 1973, in regard to exemption from liability to entertainments tax, show tax and surcharge on entertainments tax to the benefit film show organised by the Ceylon-Students' Association, Ganga Hostel, I.I.T., Madras-36, on 4th February 1973 at Devi Theatre, Madras. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

70. Notification issued with G.O. R. No. 2492, Revenue, dated the 16th November 1972, in regard to exemption from liability to entertainments tax, show tax and additional surcharge on entertainments tax to the benefit film show conducted in the City of Madras and in the districts in aid of the Flag Day Fund to be held upto 30th June 1973. [Laid on the Table of the House under sections 16 (4) and 8 (3) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939) and the Tamil Nadu Local Authorities Finance Act, 1961 (Tamil Nadu Act 52 of 1961) respectively.]

### B. *Reports, notifications and other papers.*

52. Notification issued with G.O. Ms. No. 1333, Labour and Employment, dated the 7th November 1972, in regard to an amendment to the Tamil Nadu Factories Rules, 1950.

@ 53. Resume of work transacted by the Tamil Nadu Legislative Assembly on 13th November 1972 and from the 2nd to 15th December 1972. (Fifth Assembly—Fifth Session—Second Meeting and Sixth Session.)

---

@ Despatched to Members on 3rd March 1973.

[1973 மார்ச் 6

## இணைப்பு I

[285-ம் பக்கத்தில் உள்ள 261-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவுக்குரிய விடையைக் காண்க.]

*A.*—(*a*) The quantity of fair price sugar allotted to Tamil Nadu from January 1972 is as follows :—

| | (*Metric ton.*) |
|---|---|
| January 1972 ... ... ... ... | 9,818.0 |
| February 1972 ... ... ... ... | 9,700.0 |
| March 1972 ... ... ... ... | 10,000.0 |
| April 1972 ... ... ... ... | 10,083.3 |
| May 1972 ... ... ... ... | 10,083.3 |
| June 1972 ... ... ... ... | 10,083.3 |
| July 1972 ... ... ... ... | 10,083.3 |
| August 1972 ... ... ... ... | 9,488.3 |
| September 1972 ... ... ... ... | 9,488.3 |
| October 1972 ... ... ... ... | 10,855.3 |
| November 1972 ... ... ... ... | 10,855.3 |
| December 1972 ... ... ... ... | 9,749.3 |

The quantity of fair price sugar allotted from the month of April 1972 includes 83.3 tonnes for distribution to pharmaceutical industry.

(*b*) Levy sugar is being supplied to domestic consumers on cards from January 1972. Enumeration of families was under taken throughout the State of Tamil Nadu, and cards have been issued to each family. These cards are attached to 9,004 retail outlets. The scale of issue is as noted below in Madras City and larger towns :—

*Family income and scale of issue (kg. per month)*—

Rupees 300 and below—2 kgs.

Rupees 301 to 499—4 kgs.

Rupees 500 and above—6 kgs.



1973 மார்ச் 6]

In the rural areas the quotas are fixed by Collectors with reference to local conditions, subject to a minimum of 1 kg. per family. Generally the supply ranges from 1 to 4 kgs. per family.

*விடை.*—(அ) 1972 ஜனவரியிலிருந்து தமிழ்நாட்டுக்கு ஒதுக்கப் பட்ட சர்க்கரை அளவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | (மெட்ரிக் டன்.) |
|---|---|
| ஜனவரி 1972 | 9,818 |
| பெப்ரவரி 1972 | 9,700 |
| மார்ச் 1972 | 10,000 |
| ஏப்ரல் 1972 | 10,083.3 |
| மே 1972 | 10,083.3 |
| ஜூன் 1972 | 10,083.3 |
| ஜூலை 1972 | 10,083.3 |
| ஆகஸ்டு 1972 | 9,488.3 |
| செப்டம்பர் 1972 | 9,488.3 |
| அக்டோபர் 1972 | 10,855.3 |
| நவம்பர் 1972 | 10,855.3 |
| டிசம்பர் 1972 | 9,749.3 |

1972 ஏப்ரலிலிருந்து ஒதுக்கப்பட்ட நியாயவிலை சர்க்கரையின் அளவில், மருந்தாக்கத் தொழிலுக்கு வழங்கப்படுவதற்காக ஒதுக்கப்பட்ட 83.3 டன் அளவும் அடங்குகிறது.

(இ) 1972 ஜனவரியிலிருந்து வீட்டுக்காரியங்களுக்குப் பயன் படுத்துவோருக்கு பங்கீட்டு அட்டைகளின்மீது விதிமுறைக் கொள்முதல் சர்க்கரை வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு முழுவதிலும் குடும்பங்கள் குறித்த கணக்கெடுப்பு மேற்கொள்ளப் பட்டது. எல்லா குடும்பங்களுக்கும் அட்டைகள் வழங்கப் பட்டுள்ளன. இந்த அட்டைகள் 9,004 சில்லறை விற்பனைக்

கடைகளுடன் இணைக்கப்பட்டுள்ளன. சென்னை மாநகரிலும் பெரிய நகரங்களிலும் கீழே குறிப்பிட்டுள்ள அளவு வீதங்களில் சர்க்கரை வழங்கப்படுகிறது :—

| குடும்ப வருவாய் | (மாதமொன்றுக்கு) வழங்கப்படும் அளவு. |
|---|---|
| ரூ. 300-ம் அதற்குக் குறைவாகவும் | 2 கிலோ. |
| ரூ. 301-லிருந்து ரூ. 499 வரை | 4 கிலோ. |
| ரூ. 500-ம் அதற்கு மேலும் | 6 கிலோ. |

கிராமப்பகுதிகளில், உள்ளூர் நிலைமைகளையொட்டி ஒதுக்க அளவுகள் மாவட்ட ஆட்சித்தலைவர்களால் வரையறுக்கப் படுகின்றன. பொதுவாக, அங்கு, குடும்பம் ஒன்றுக்கு குறைந்த பட்சம் 1 கிலோவும் அதிகமாக 4 கிலோ வரை வழங்கப்படுகிறது.

## இணைப்பு II

[289-ம் பக்கத்தில் உள்ள 263-ம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவுக்குரிய விடையைக் காண்க.]

1972-ம் ஆண்டு அக்டோபர் திங்களில் நடைபெற்ற வன விலங்கு வார விழாவையொட்டி, கீழ்க்கண்ட சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெற்றன :—

(1) சென்னை வானொலியில், மின் துறை அமைச்சர், வனத் துறைத் தலைவர் ஆகியோரது உரைகள் முறையே 30—9—1972 அன்றும், 4—10—1972 அன்றும் ஒலி பரப்பப்பட்டன.

(2) 1—10—1972 அன்று மாலையில், சென்னை கிண்டியிலுள்ள சிறுவர் பூங்காவில், தமிழக ஆளுநரின் தலைமையில், பொதுக் கூட்டமும், கதம்ப நிகழ்ச்சியும் நடைபெற்றன.

(3) 2—10—1972 அன்று, எழும்பூர் அரும்பொருட் காட்சியக அரங்கில், வன விலங்குகள்பற்றிய புகைப்பட, ஓவியக் கண் காட்சி நடைபெற்றது.

(4) கல்லூரி, பள்ளி மாணவர்களிடையே, வன விலங்கு களைப்பற்றிய கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்தப்பட்டன.



(5) சென்னையில் உள்ள கல்லூரிகளில், வன விலங்குகளைப் பற்றிய நிழற் படங்கள் காட்டப்பட்டன ; கூட்டங்களும் நடத்தப் பட்டன.

(6) சரணாலயங்கள், மிருகக் காட்சி சாலை, அரும் பொருட் காட்சியகங்களில், சிறுவர்களுக்கு விசேஷ நிகழ்ச்சிகள் நடத்த அனுமதி வழங்கப்பட்டது.

(7) கல்லூரி, பள்ளி மாணவர்களைச் சரணாலயங்களுக்குச் சுற்றுலா அழைத்துச் செல்லுமாறு, கல்லூரி, பள்ளிப் பாட இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

(8) 10—10—1972 அன்று மாலை, சென்னை கிண்டியிலுள்ள சிறுவர் பூங்காவில், மின் துறை அமைச்சர் தலைமையில், பொதுக் கூட்டமும், கதம்ப நிகழ்ச்சியும் நடைபெற்றன. பிற்பட்டோர் நலத் துறை அமைச்சரும் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த் தினார்.

(9) மாவட்டங்களிலும், வன விலங்கு வாரத்தையொட்டிப் பொதுக் கூட்டங்களையும் மற்ற நிகழ்ச்சிகளையும் சிறப்பான முறை யில் நடத்துவதற்கு மாவட்ட வன அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டன.

(10) செய்தித் தாள்களில், வன விலங்குகளைப்பற்றிய தனி அனுபந்தங்கள் வெளியிடப்பட்டன.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, இந்தக் கண்ணொளி வழங்கும் திட்டத்தின்கீழ் தொகை வசூலித்து இப்பணி நடைபெறுவதாகச் சொல்லப் படுகிறது. குடும்ப நலத் திட்டத்திற்கு மத்திய அரசு உதவுவது போல, இப்படிப்பட்ட கண்ணொளி வழங்கும் திட்டத்திற்கும் ஏதாவது தொகை கேட்டு வாங்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இந்த அரசுக்கு, யார் கொடுப்பதாக இருந்தாலும்கூட வாங்கிக்கொள்கிற எண்ணம் உண்டு. மத்திய அரசும் இதற்கு உதவி செய்யலாம். ஆனால், மத்திய அரசு குடும்ப நலத் திட்டத்தினை ஒரு தேசியத் திட்டமாக ஏற்கெனவே ஏற்றுக்கொண்டு அதை இன்னும் வெற்றி கரமாகச் செயல்படுத்த முயற்சி செய்துகொண்டிருக்கிறது. இந்தத் திட்டத் தைப்பற்றி அவர்களும் இப்பொழுது அறிந்துகொண்டிருக்கிறார்கள். உதவ முன்வருவார்களானால் மிகப் பெரிய நன்றியோடு வரவேற்கப்படும்.

## *Family Planning Programme*

*270 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Public Health be pleased to state the details of facilities offered during the preoperative period to persons seeking sterilisation under the Family Planning Programme?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அறுவைச் சிகிச்சைக்காக வரும் ஒவ்வொருவருக்கும்—ஆணுக்கும் பெண்ணுக்கும்---அவரவருடைய தேவைக்கு ஏற்ப கீழ்க்கண்ட வசதிகள் செய்து தரப்படுகின்றன :—

1. இலவசப் போக்குவரத்து.

2. தங்கி இருக்கிற நேரத்திற்கான இருக்கை வசதி.

3. நோய்க் கிருமிகளைத் தடுப்பதற்கு ஊசி போடுதல்.

4. தங்கியிருக்கும் நாட்களுக்கு உணவு.

5. இலவச மருத்துவ ஆய்வு.

6. டிப்திரியா, பெர்டிசிஸ், டெட்டானஸ் போன்ற நோய்களிலிருந்து குழந்தைகளைக் காக்கும் தடுப்பு முறை.

7. குழந்தைகளைக் கருவுற்றிருக்கிற தாய்மார்களுக்கு வைட்டமின் ஏ, போலிக் ஆசிட், பெரஸ் மாத்திரைகளை வழங்குதல்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : திருமணம் ஆகாதவர்கள்கூட பணத்திற்கு ஆசைப்பட்டு கருத்தடை அறுவை சிகிச்சை செய்துகொள்வதாகப் பல புகார் கள் இருக்கின்றன. கருத்தடை செய்து கொள்ள வரும்போது . . . .





மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வசதிகளைப்பற்றி மட்டும் கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : கருத்தடை செய்து கொள்ள வரும்போது மனைவி யையும் அழைத்து வரவேண்டும் என்பதற்கு வகை செய்வார்களா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : திருமணம் ஆக வேண்டாம் என்று இருக்கக்கூடிய நல்ல ஆண்கள் செய்துகொள்வதில்கூடத் தவறு இல்லை. சிலர் செய்யக்கூடிய தவறுகள் காரணமாகத் தீமைகள் ஏற்படாமலிருக்க இது ஒரு வகையான பாதுகாப்பாக இருக்கும். ஆனால் அதற்காக அரசின் உதவித் தொகை பெறுவது சரியல்ல. மனைவி கணவனுடைய சம்மதம் பெற்றுத்தான் கருத்தடை அறுவை சிகிச்சை செய்துகொள்ளவேண்டும் என்கிற கட்டாயத்தி லிருந்து இப்பொழுது விதி விலக்கு ஏற்பட்டிருக்கிறது. கணவன்மார்களை மருத்துவ மனைக்கு அழைத்து வந்து சாட்சி சொல்ல வைக்கவேண்டிய அவசியம் பொதுவாக இல்லை, ஆண் உலகம் அவர்களுக்கு மிக நன்றாகத் தெரியும்.

திரு. வி. செல்லதுரை : அறுவை சிகிச்சை செய்து கொள்பவர்களுக்கு வயது நிர்ணயிக்கப்பட்டுள்ளதா? அதன் விவரத்தை அறிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பொதுவாக, திருமண வயது என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிற வயதுக்குப் பின்னர்தான் செய்யப்பட வேண்டும். இரண்டு குழந்தைகள் பெற்றுவிட்ட—திருமணம் ஆன தம்பதிகளாக இருப் பவர்களுக்குத்தான் இது வலியுறுத்தப்பட்டு செய்யப்படவேண்டும் என்று அரசாங்கம் கருதுகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மூலக் கேள்வியையொட்டி துணைக் கேள்விகள் கேட்கவேண்டும்.

திரு. கா. வேழவேந்தன் : அளிக்கப்பட்டிருக்கிற வசதிகளைப்பற்றி அமைச்சரவர்கள் பட்டியல் போட்டுக் காட்டினார்கள். இவ்வளவு வசதிகள் அளிக்கப்பட்டும்கூட, மூன்று குழந்தைகளுக்கு மேல் ஈன்ற பெற்றோர்கள் இந்த நிலையங்கள் பக்கமே வாராமலிருக்கிறார்கள். ஆகவே, மத்திய அரசின் நிதி உதவியோடு இன்னும் தனி அதிகாரிகளை நியமித்து, மூன்று குழந்தை களுக்குமேல் பெற்ற குடும்பங்களை அடிக்கடி அணுகி, ஒவ்வொரு குடும்பமாகப் போய் அவர்களை மருத்துவ மனைக்கு கொண்டு வர. . . .

(மணி அடிக்கப்பட்டு அடுத்த உறுப்பினர் அழைக்கப்பட்டார்)

# தமிழ் நாடு சட்டப் பேரவை

---

**புதன்கிழமை, 1973 மார்ச் 7.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 266, 267, 268 ஆகிய எண்களுள்ள வினாக்கள் பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

### கண்ணொளி வழங்கு திட்ட நிதி

*269. **வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1972 ஆகஸ்டு முடிய இலவச கண் சிகிச்சை நிதிக்கு எவ்வளவு தொகை சேர்ந்துள்ளது?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** 1972, ஆகஸ்ட் மாதம் முடிய ரூ. 15,61,110.55 சேர்ந்திருந்தது.

**திரு. கா. வேழவேந்தன்:** துணைத் தலைவர் அவர்களே, இந்த நல்ல திட்டத்திற்கு நாடெல்லாம் நிதி தர வேண்டும் என்ற அடிப்படையில் வருவாய் மிகுந்த கோயில்களிலிருந்து நிதி பெறுவதற்கு அரசாங்கம் ஏதேனும் தனி நடவடிக்கை எடுப்பதற்கு முயலுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** கோயில் போன்ற அற நிலையங்களை ஒவ்வொன்றுக்கும் தனியாக வலியுறுத்துவது என்பது முறை அல்ல. ஆனால், பொதுவாக, இதற்காக வேண்டுகோள் தரப்பட்டிருக்கிறது. சில அற நிலையங்களில் அவர்களே கூட சில கண் சிகிச்சை முகாம்களுக்கு ஓரளவு தொகை தந்து அந்த வட்டாரத்தில் நடத்தி வருகிறார்கள்.

திரு. கே. கந்தசாமி: இவ்வளவு சலுகைகள் அளித்தும், குடும்ப நல அறுவை சிகிச்சைக்கு முன்வராத பெற்றோர்கள் அதிகம் இருப்பதால், அறுவை சிகிச்சை செய்துகொள்ளுகிற பெற்றோர்களுடைய குழந்தைகளுக்கு உத்தியோகச் சலுகைகள் போன்றவை அளித்தால் மிகப் பயனளிக்கும் அல்லவா? இதை அரசு செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: குறைந்த அளவு எண்ணிக்கை மக்கள் இத்தகைய அறுவை சிகிச்சை செய்துகொள்ளுகிற நிலையாக இருக்குமானால் அப்படிப்பட்ட ஆலோசனையை அரசு கருத முடியும். இப்பொழுதே தமிழ் நாட்டில் ஏறத்தாழ பத்தாண்டுகளில் 12 இலட்சம் முதல் 15 இலட்சம் பேர் அறுவை சிகிச்சை செய்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவ்வளவு பேர்களுடைய குழந்தைகளுக்கும் எப்படி அரசாங்கம் உத்தியோகச் சலுகைகள் காட்ட முடியும் என்பது அறிய முடியாத ஒன்று. ஆனால், வேறு வகையில் அந்தக் குழந்தைகளுடைய உடல் நிலையைப் பாதுகாக்கலாம். குடும்பக் கட்டுப்பாடு செய்துகொள்ளுவதற்குமுன் பிறந்த குழந்தைகளின் உடல் நலத்தை காப்பாற்றுவதைப் பொறுத்து அரசாங்கம் எல்லா வகையிலும் முன்னுரிமை தந்து உதவி செய்யும்.

## பெரியகுளம் மருத்துவ மனையில் குருதி சேமிப்பு நிலையம்

* 271. வினா—திரு. நா. வெ. குருசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், பெரியகுளம் அரசினர் மருத்துவ மனையில் ரத்த சேமிப்புப் பிரிவு ஒன்றை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்பொழுது முதல் ஏற்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) தற்சமயம் செயற்குறிப்பு ஒன்றும் இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

## கிராமப்பகுதிகளில் மருத்துவத்துறைப் பணியாளர்களுக்குவீட்டுவசதி

* 272. வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கிராமப் பகுதியிலுள்ள அரசாங்க மருத்துவ மனைகளில் பணிபுரியும் மருத்துவர்களுக்கும், ஊழியர்களுக்கும் வீடு கட்டித்தரும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?



(இ) ஆம் எனில், அத்திட்டத்திற்கு மத்திய அரசு நிதி உதவி ஏதேனும் அளிக்க ஒப்புக்கொண்டுள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (இ) இல்லை.

திரு. ஏ. சுப்பிரமணியம்: கிராமப் பகுதிகளில் இருக்கக்கூடிய மருத்துவ மனைகளை மருத்துவர்களோ மற்றவர்களோ அவ்வளவாக நாடிச் செல்வதில்லை. என்ற குறைபாடு இருக்கிறது. அதைக் களைவதற்காகவாவது வீடுகள் கட்டித் தரும் திட்டத்தை இனிமேலாவது அரசு மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: கிராமப் பகுதிகளில் உள்ள மருத்துவ மனைகளில் இரண்டு வகையான மருத்துவ மனைகள் இருக்கின்றன. ஒன்று சாதாரண டிஸ்பென்சரி மற்றொன்று ப்ரைமரி ஹெல்த் சென்டர் அதாவது ஆரம்ப சுகாதார நிலையங்கள். ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டப்படுகிற இடங்களில் படிப்படியாக அங்கே பணியாற்றுகிற டாக்டர்களுக்கும் மற்ற மருத்துவ நல உதவியாளர்களுக்கும் வீடுகள் கட்டப்படுகிற திட்டம் இருக்கிறது. ஆண்டுக்கு பத்து, இருபது இடங்களில் கட்டப்படுகின்றன. ஆனால், பொதுவாகவே கிராமங்களில் பணியாற்றுகிறவர்களுக்கு வீடு கட்டுவது என்ற திட்டம் நிறைவேற்றப்படக்கூடியதாக இல்லை. அதற்கான பெரு நிதி செலவழிக்க வாய்ப்பு இல்லை. அரசு அலுவலர்களுக்கு வீடு கட்டுவது என்ற திட்டம் இடையில் சில ஆண்டுகளுக்கும் முன் ஒத்திவைக்கப்பட்டது. அது எப்பொழுது எடுத்துக்கொள்ளப்பட்டாலும், அதிலே முன் உரிமை தர வேண்டியவர்களுக்குத் தகுந்த அளவில் வீடு கட்ட முயற்சிக்கப்படும்.

## அரசு அலுவலகங்களில் தமிழ்

* 266. வினா—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தலைமைச் செயலகத்திலும், துறைத் தலைவர்களின் அலுவலகங்களிலும் இருந்து எத்தனை விழுக்காடு (சதவீதம்) ஆணைகள் தமிழில் பிறப்பிக்கப்படுகின்றன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைமைச் செயலகத்திலும், துறைத் தலைவர்களின் அலுவலகங்களிலும் முறையே 9 சதவிகிதம், 34 சதவிகிதம் தமிழில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

திரு. கா. வேழவேந்தன்: தமிழ் அன்னையே எல்லாத் துறைகளிலும் ஆட்சி செலுத்தவேண்டுமென்ற. . .

[1973 மார்ச் 7

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்று கடைசி நாள் விவாதம். நாலைந்து தலைவர்கள் பேசி முதல் அமைச்சர் அவர்களும் பதில் சொல்லவேண்டியிருக்கிறது. எனவே கேள்வி நேரத்தை நீட்டிக்கமுடியாது. ஆகவே வர்ணனை இல்லாமல் கேள்வி கேளுங்கள். நேரடியாகக் கேள்வி கேளுங்கள்.

திரு. கா. வேழவேந்தன் : துணைத் தலைவர் அவர்களே, நான் இந்த நேரத்திற்குள் கேட்டு முடித்திருப்பேன். தமிழே எல்லாத் துறைகளிலும் ஆட்சி செலுத்தவேண்டும் என்ற கொள்கையை உடைய நம் அரசு காலத்தில்தான் எல்லாத் துறைகளிலும் தமிழ் வரவேண்டும் என்ற அடிப்படையில் 100-க்கு 100 விழுக்காடு எல்லாத் துறைகளிலும் தமிழ் கையாளப்பட்டு கோப்புகள் எல்லாம் தமிழிலேயே வெளியிடுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அந்த நோக்கத்தை அடிப்படையாக வைத்துத்தான் படிப்படியாக பல்வேறு முன்னேற்றங்கள் காணவேண்டியிருக்கிறது. தமிழை ஆட்சிமொழியாகக் கொண்டுவருகிற வகையில் நான்கு கட்டங்கள் வகுக்கப்பட்டு படிப்படியாக நிறைவேற்றி வருகிறோம். அந்த முறையில் மாவட்டங்களில் உள்ள அலுவலகங்களிலும், துறை அலுவலங்களிலும் செயல்படுத்தப்பட்டு இப்போது தலைமைச் செயலகத்தின் புகுத்தி வருகிறோம். தமிழ் வளர்ச்சித் துறை என்று தனித்து இயங்கி கொண்டிருக்கிறது. மேலும் பல அதிகாரிகள் போடப்பட்டிருக்கிறார்கள். இப்படி தக்க ஊக்கம் தருகிற வகையில் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. ஆ. பாழ்தாமன் : ஆங்கிலத்தில் இருக்கிற எல்லாச் சொற்களையும் தமிழில் மொழிபெயர்க்கவில்லை என்ற காரணத்தால்தான் இந்த விகிதாசாரத்தை உயர்த்தமுடியவில்லை என்று சொல்கிறார்களே, அது உண்மையா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதல்ல குறைபாடு. அண்மையில் ஆட்சிச் சொல் அகராதி மூன்றாவது பதிப்பு தயாரித்து எல்லாப் பணியாளர்கள், கண்காணிப்பாளர்கள், எழுத்தர்கள், இளநிலை எழுத்தர்கள், இவர்களுக்குக் கொடுத்திருக்கிறோம். தட்டச்சுத் துறையிலும், சுருக்கெழுத்து துறையிலும் பயிற்சி அளித்து வரப்படுகிறது, அதற்கு ஊக்கம் தருகிறோம். பொது மக்களின் ஒத்துழைப்போடு இவற்றைச் செய்யவேண்டியிருக்கிறது. இதில் பயிற்சி பெறவேண்டியவர்களாகவும் இருக்கிறார்கள். ஆகவே படிப்படியாக இதை நிறைவேற்றவேண்டியதாகயிருக்கிறது.



1973 மார்ச் 7]

திரு. நா. வீராசாமி : தட்டச்சு, சுருக்கெழுத்து பயிற்சி கொடுக்கப்பட்டாலும் இன்னும் தலைமைச் செயலகத்தில் உள்ள அதிகாரிகளின் 99 சதவிகிதம் ஸ்டெனோகிராபர்களும் ஆங்கிலத்தில்தான் எழுதிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே ஒரு ஐந்தாண்டுக் காலத்திற்குள்ளாக இங்குள்ள சுருக்கெழுத்தாளர்கள் கட்டாயம் தமிழில் தேர்ச்சி பெற வேண்டும் என்று உத்தரவிட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தமிழில் தட்டச்சுப் பயிற்சி, சுருக்கெழுத்துப் பயிற்சி தருவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒரேயடியாக அவசரப்பட்டு எதுவும் செய்துவிடமுடியாது. படிப்படியாகத்தான் செய்யமுடியும். காலவரம்பு வைத்தால்கூட அதைத் தாண்டுகிற அளவிற்குத்தான் இருந்து வருகிறது. அதற்கான முயற்சிகளை அரசு இப்போது தீவிரமாக எடுத்து வருகிறது.

திரு. கா. வேழவேந்தன் : தமிழைச் சிறந்த வகையில் கையாள்கிற அதிகாரிகளுக்குப் பதவி உயர்வு தரப்படுவதில் முன்னுரிமை வழங்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சிறந்த முறையில் வரைவுகள், குறிப்புகள் எழுதுபவர்களுக்கு இப்போது பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. மாவட்ட அளவில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரூ. 500 வீதம் சென்னையில் இரண்டு பரிசுகளும், தலைமைச் செயலகத்தில் ஒரு பரிசும் ரூ. 500 என்று வைத்திருக்கிறோம். அதுபோன்று வேறு பல துறைகளிலும் சென்னை மாநகராட்சி மன்றம், மதுரை மாநகராட்சி மன்றம் இவற்றிலும் ரூ. 500 பரிசு என்று சிறந்தமுறையில் தமிழ் எழுதுகிறவர்களுக்கு வழங்குகிறோம். நகராட்சி, நகராட்சி மன்றங்கள் இவற்றில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு பரிசு என்று 13 ஏற்பாடு செய்திருக்கிறோம். இப்படிப்பட்ட வகைகளில் ஊக்கம் அளிக்கப்பட்டு வருகிறது.

## ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வு வாய்ப்புகள்

*267. வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஆரம்ப ஆசிரியர்களாக இருந்துகொண்டே தேர்வு எழுதி பி. டி. அல்லது புலவர் பட்டம் பெற்றவர்களை உயர்நிலைப்பள்ளிகளில் பணிபுரிய நியமிக்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

[1973 மார்ச் 7

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஆம். அத்தகையோர் 5 ஆண்டுகளுக்கு குறையாமல் பணி புரிந்திருந்தால் அவர்கள் 40 வயதுவரை தமிழ்நாடு தேர்வாணைக்குழுவின் மூலம் பட்டதாரி ஆசிரியர் மற்றும் முதல்தர தமிழ் ஆசிரியர்கள் பதவிகளுக்கும் நேரடித் தேர்வில் போட்டியிட அனுமதியளிக்கப்படுகிறார்கள்.

## பி. ஓ. எல். பட்டப்படிப்பு

* 268 வினு.—திரு. பி. எஸ். மணியன்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா:

B.O.L. பட்டப்படிப்பை மறுபடியும் துவக்கும் செயற் குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

புலவர் சி. பழனிச்சாமி: புலவர் படிப்பிற்கு டிப்ளமா என்றில்லாமல் பி.ஏ., எம்.ஏ. போல பட்டப்படிப்பாக மாற்றும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதுபற்றிய விவரம் இல்லை. பல்கலைக்கழகங்கள்தான் அதைப் பற்றி முடிவு செய்யவேண்டும். பி. ஓ. எல். பட்டத்தைப் பொறுத்தவரையில் பல்கலைக்கழகங்களில் ஏதாவது செயற் குறிப்பு இருக்கிறதா என்று கேட்கப்பட்டு சென்னை, மதுரை, அண்ணாமலைப் பல்கலைக்கழகங்களில் அப்படிப்பட்ட உத்தேசம் எதுவும் இல்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

## ஆழ்கடலில் மீன்பிடிப் பயிற்சி

* 273. வினு—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மீனவர்களுக்கு ஆழ்கடலில் மீன் பிடிப்பதற்கான பயிற்சி அளித்திடும் நிலையங்கள் எவற்றையேனும் தமிழ்நாடு அரசு நடத்திவருகின்றதா?

(இ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.



1973 மார்ச் 7]

## மீன் பதப்படுத்துவதற்கான நிலையங்கள்

* 274. வினு—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழகத்தில் உள்ள கடற்கரைப் பகுதிகளில் கிடைக்கும் மீன்களைப் பதப்படுத்தி பக்குவப்படுத்தும் கருவிகள் அமைந்த நிலையம் ஒன்றை சென்னையில் அமைக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) இல்லை.

(இ) இவ்வினுவிற்கு இடமில்லை.

திரு. ஆ. பரந்தாமன்: கேரளாவில் இருக்கிற கொச்சியில் இப்படிப்பட்ட பதனிடும் கூடங்கள் இருப்பதன் காரணமாகத்தான் அதிக அளவிற்கு வருவாய் வருகிறது. அதேபோன்று பதனிடும் நிலையங்களை இங்கும் அமைப்பதற்கு நம் அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இப்போது மூன்று நிலையங்கள் அரசுச் சார்பில் இருக்கின்றன. தனிப்பட்டவர்கள் வேறு சில நிலையங்களை வைத்திருக்கிறார்கள். இதுவும் தவிர சென்னைத் துறைமுகத்தில் மீன்வளத் துறைமுகம் கட்டி முடித்த பிறகு இதுபோன்ற பல இயந்திரங்களுக்கு வாய்ப்பு இருக்கிறது.

திரு. கே. எ. வகாப்: இப்போதிருக்கிற மூன்று நிலையங்களில் எண்ணூரில் உள்ள நிலையம் இப்போது செயல்பட்டுக்கொண்டுவருகிறதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இலாகாவின் மூலம் செயல்பட்டுவருகிறது.

## கிராம அதிகாரிகளுக்கு அகவிலைப்படி

* 275 வினு.—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டக் கிராம உத்தியோகஸ்தர்களிடமிருந்து தமிழ்நாட்டு என். ஜி. ஓ. க்களுக்கு அளிப்பது போன்ற கிராக்கிப்படி தங்களுக்கும் அளிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை அரசுக்கு வந்ததா?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

[illegible] ...கராப்: இப்போது ஏறிக்கொண்டிருக்கிற விலைவாசியில் அவர்கள் கேட்கிற கோரிக்கைகள் நியாயமானவைகளாகும். ஆகவே கிராம அதிகாரிகளுக்கு இந்தக் கிராக்கிப் படியைத் தருவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** 2—10—1970-ல் இருந்துதான் அவர்களுக்குச் சம்பள உயர்வு அளிக்கப்பட்டிருக்கிறது. பிறகு, 1—9—1972-ல் இருந்து எல்லாக் கிராம உத்தியோகஸ்தர்களுக்கும் ஏழு ரூபாய் மாதந்தோறும் அளிக்கப்பட்டுவருகிறது. இதல்லாமல் பஞ்சாயத்து டாக்ஸ் வசூலிப்பவர்களுக்குக் கூடுதல் பணம் அளிக்கப்படுகிறது.

**திரு. கே. கந்தசாமி:** இப்படிப்பட்ட உயர்வு கொடுத்தும் அந்த அதிகாரிகளுக்குத் தக்க வருமானம் இல்லாததன் காரணமாகச் சில தவறுகள் கிராம அளவில் நடக்கின்றன என்பதை அரசு அறியுமா? ஆகவே அதைத் தடுக்க அவர்களுக்கு இன்னும் உயரிய சம்பளம் கொடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இவர்கள் முழுநேர ஊழியர்கள் அல்ல. பகுதிநேர ஊழியர்கள். இதுவேபோதும் என்று அரசு கருதுகிறது.

**திரு. எம். சுரேந்திரன்:** கிராமாதிகாரிகள் மிகவும் அடிப்படையான ஆட்களாக கிராமங்களில் இருந்துகொண்டிருக்கிறார்கள். இவர்களை முழுநேர ஊழியர்களாகப் பதிவுசெய்து மற்ற அரசு அலுவலர்களுக்குள்ள எல்லாச் சலுகைகளையும் அளித்து எங்கு வேண்டுமானாலும் மாறுதல் செய்வது, மற்றக் காரியங்களுக்கும் இவர்களைப் பயன்படுத்தினால் கிராமக்கணக்குகள், கிராம வசூல்கள் எல்லாம் நன்றாயிருக்குமே என்று கேரளாவில் செய்திருக்கிறார்கள். அதுபோல் இங்கும் செய்வதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளப்படுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** கேரளாவில் இருக்கிற சட்டத்தைக் கொண்டு வந்து இங்கு புகுத்தமுடியாது. இங்கு அவர்களை முழுநேர ஊழியர்களாக் ஆக்கும் யோசனை இப்போது கிடையாது.



### *Over Bridge at Palakarai*

* 276. Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to construct a bridge at Palakarai in Tiruchirappalli district; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** திருச்சிராப்பள்ளி நகராட்சி எல்லைக்குள், பாலக்கரை அருகில், 45 எண் தேசிய நெடுஞ்சாலையின் 197/6 மைலில் இருப்புப்பாதை—சாலை கடவிற்குப்பதிலாக மேம்பாலம் கட்டுவதற்கு ரூ. 46.00 லட்சம் மதிப்பீட்டுக்கு, 1971 ஆகஸ்டில் அரசாங்கம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

**திரு. கு. காயாட்சி:** அந்தப் பாலம் கட்டப்படுகிறபோது பாதிக்கப்படுகிற சிறிய வியாபாரிகளுக்கு அந்தப் பாலத்தின் அடியில் கடைகள் அமைத்து குறைந்த வாடகையில் தர அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** அப்படி ஒரு செயற்குறிப்பு இல்லை.

### *Buildings for Public Works Department*

* 277. Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to put up new buildings for the Public Works Department in Madras City; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** (அ) ஆம். சேப்பாக்கத்தில் ரூபாய் ஐந்து லட்சத்து ஐம்பதினாயிரம் செலவில், பரீட்சார்த்தமாக இரண்டு மாடிக் கட்டிடம் கட்ட கருத்து உள்ளது.

(இ) இக்கட்டிடம் கட்ட ஆகும் மொத்த தொகையில் 75 சதவீதத்தை தேசிய கட்டிட நிறுவனத்திடமிருந்து மானியமாகப்பெற்று அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இக்கட்டிடமானது, ஆராய்ச்சி புத்தறிவில் கூடும் கட்டிட மையக் கோட்டத்தின் எல்லாவித தேவைகளையும் பூர்த்தி செய்யும். மேலும் இக்கட்டிடமானது ஆராய்ச்சிக் கூடங்கள், தொழில் நுட்ப நூலகம் முதலியவற்றுக்கும் கட்டிட மையக் கோட்டத்தின் அலுவலகமும் அமைவதற்கு போதுமான இடவசதியுள்ளதாயுமிருக்கும்.

*Accident at Adyar Bridge Workspot*

*278. Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether it is a fact that the Pile Driving Machine at Adyar Bridge in Madras collapsed about the 10th July 1972 causing injuries to workers; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** (அ) ஆம்.

(இ) 10—7—1972 அன்று 3-வது கண் மையப்படுகை தோண்டுங்காலத்து தோண்டுகருவியை மேல் நோக்கி இழுக்கும் போது அக்கருவியில் பிணைக்கப் பட்டிருந்த இருப்பு இழுகயிறுனது சரியான முறையில் இயங்கத் தவறியதால் கீழே விழலாயிற்று. அப்போது காண்ட்ராக்டரின் வேலையாட்கள் நால்வர் காயமடைந்தனர். அவர்கள் உடனே சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அனுப் பப்பட்டனர். அவர்கள் சிகிச்சைக்குப்பின் மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப் பட்டனர்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** காயம் அடைந்த தொழிலாளர்களுக்கு ஏதேனும் இழப்பீடு வழங்கப்பட்டிருக்கிறதா? அப்படியானல் எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** காயம் பட்ட தொழிலாளர் களுக்கு இழப்பீடு கொடுக்கவேண்டுமென்றால் காண்டிராக்டர்தான் கொடுக்க வேண்டும். அதைப்பற்றிய விவரம் என்னிடம் இல்லை.

*Production of Cavendish variety of banana*

*279. Q.—THIRU B. VENKATASWAMY: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) the names of areas in Tamil Nadu where large quantity of Cavendish variety of banana are grown at present: and

(b) whether there is any proposal to intensify its growth?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** (அ) கோயம்புத்தூர் மாவட்டம், மதுரை மாவட்டம் (கம்பம் பகுதி), திருநெல்வேலி மாவட்டத்தில் தூத்துக்குடி, தென்காசி ஆகிய பகுதிகள், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் குளித்தலை, இருஞ் ஸைாயபுரம், அந்தநல்லூர், வயலூர், தொட்டியம் ஆகிய வட்டாரங்கள்,



வட ஆற்காடு மாவட்டத்தில் வேலூர், குடியாத்தம், வாணியம்பாடி, திருப்பத் தூர் ஆகிய தாலுக்காக்கள், செங்கல்பட்டு மாவட்டம் ஆகிய இடங்களில் குட்டை பச்சை வாழை பயிர் செய்யப்படுகிறது.

(இ) மாநில அரசின் கீழ் அந்த மாவட்டங்களில் குட்டை வாழை உற்பத் தியை அதிகரிக்க ஒரு தீவிர வாழை சாகுபடி திட்டம் ஏற்கனவே செயல்பட்டு வருகிறது. மத்திய அரசு திட்டங்களின் கீழ் செங்கல்பட்டு மாவட்டத்தில் ஏற்றுமதிக்கான பச்சை வாழை சாகுபடி செய்ய ஒரு திட்டம் செயல் பட்டு வருகிறது.

THIRU B. VENKATASWAMY: In the answer given by the Hon. Minister he has said that Robusta (pachai vazhai) is being introduced. At Hosur, this variety is coming up nicely. I have planted Robusta banana and it has come up nicely in my garden. So, may I know whether the Hon. Minister would extend the Central scheme to Dharmapuri district also.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தலைவர் அவர்களே, கனம் உறுப் பினர் அவர்களே அதைச் செய்வது குறித்து நான் அவர்களைப் பாராட்டு கிறேன். அந்தத் திட்டம் செங்கற்பட்டு மாவட்டத்தில் மட்டும் தான் மத்திய அரசின் சார்பில் அமல்நடத்தப்படுகிறது. மேலும் இந்தத் திட்டத்தை விரிவு படுத்துவதற்குத் தற்சமயம் செயற்குறிப்பு இல்லை.

**திரு. ஆ. பரந்தாமன்:** குட்டை வாழையின் ஒரு பழத்தை ரூ. 2 கொடுத்து வாங்குவதற்கு ரஷ்யா நாட்டிலும், பாரிஸ் நகரத்திலும் கிராக்கி இருக்கிறதாக சொல்லப்படுகிறதே? ஆகவே, இதை ஏற்றுமதி செய்கின்ற அளவில் மேலும் பல இடங்களில் பயிரிட அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** இப்பொழுது மத்திய அரசின் உதவியோடு செங்கற்பட்டு மாவட்டத்தில் மட்டும் ஆண்டு ஒன்றுக்கு 1,000 ஹெக்டார், 2,500 ஏக்கர் இப்பொழுது பயிர்செய்யப்பட்டு வருகிறது. இந்த வாழைக்கு மேலும் ஏற்றுமதிக்கு அதிக கிராக்கி இருக்குமானல் அதைப் பற்றிப் பரிசிலனை செய்யப்படும்.

**திரு. ஏ. எம். இராஜா:** கோவை மாவட்டத்தில் இந்தப் பச்சைவாழை பயிரிடுவதற்கான ஏற்பாடுகளை அரசு செய்துகொண்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தப் பகுதியில் இருக்கும் மக்கள் இந்தப் பச்சை வாழையை அதிகம் விரும்புவதில்லை. ஆகவே, வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்வதற்கு அரசு அங்கே உற்பத்தி ஆகும் வாழையை விலைக்கு வாங்குவதற்கு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அப்படி ஒன்றும் யோசனை தற்சமயம் இல்லை.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** தலைவர் அவர்களே இந்தத் திட்டம் மத்திய அரசின் சார்பில் எந்த அடிப்படையில் செங்கற்பட்டு மாவட்டத்தில் மாத்திரம் அமல்நடத்தப்படுகிறது? மற்ற மாவட்டங்களுக்கும் கொடுப்பதற்கு இந்த அரசு அவர்களைக் கேட்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இந்தச் செயல் திட்டம் 1,000 ஹெக்டாரில் கொடுக்கப்பட்டிருக்கிறது. செங்கற்பட்டு மாவட்டத்திற்கு மாத்திரம் கொடுப்பதற்கு ஆண்டு ஒன்றுக்கு 1,000 ஹெக்டார் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. மத்திய அரசு இயந்திரப் தெளிப்பான் வாங்க 50 சதவிகிதம் மானியமும், பயிர்ப்பாதுகாப்பு மருந்துகள் வாங்க 50 சதவிகித மானியமும் வழங்குகிறது. மற்றைய செலவுகளைத் தமிழக அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. இது வெற்றிகரமாக நடைபெற்றால், பிறகு மற்ற மாவட்டங்களிலும் அதைப் பயிரிடுவதற்கு ஏற்பாடு செய்வதற்கு இந்த அரசு மத்திய அரசை அணுகும்.

**திரு. அ. ஆறுமுகம் :** குட்டை வாழை சேலம் மாவட்டத்தில் வேலூர், மோகனூர் ஆகிய பகுதிகளில் பயிரிடப்படுகிறது. ஆகவே, அங்கேயும் அந்தத் திட்டத்தை விரிவுபடுத்துவதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தற்சமயம் இல்லை.

**திரு. ஏ. ஆர். சுப்பையா :** வாழை திருநெல்வேலி மாவட்டத்திலும் அதிகம் பயிரிடப்படுகிறது. திருநெல்வேலி மாவட்டத்திற்கும் இந்தத் திட்டம் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : திருநெல்வேலி மாவட்டத்தில் 1969-70-ல் 4,818 ஏக்கர் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. 1970-71-ல் 5,250 ஏக்கர் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. 1971-72-ல் எனக்கு இன்னும் கணக்கு வரவில்லை. கூட்டுறவுத் துறைமூலம் கடன் வசதி அளிக்கப்படுகிறது. ஒரு ஏக்கருக்கு ரூ. 1,000 வீதம் நிலங்களுக்குத் தேவையான உரம் முதலானவற்றை வாங்க கடனுதவி அளிக்கப்படுகிறது. டெமான்ஸ்ட்ரேஷன் பிளாட், திருப்பணங்கள் பண்ணைகள் அமைப்பதற்கு அரசு ஒரு ஏக்கருக்கு ரூ. 100 வீதம் மானியம் வழங்குகிறது. பயிரிடும் முறைபற்றி அவர்களுக்கு இலவசமாகச் சொல்லிக்கொடுக்கப்படுகிறது. வாழையை நோயிலிருந்து பாதுகாக்க பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் அங்கே வழங்கப்படுகின்றன.



THIRU B. VENKATASWAMY : May I know from the Hon. Minister the amount of robusta exported from our country to other nations?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : 1971-72-ல் துவக்கப் பட்டிருக்கிறது. வெளி நாட்டிற்கு அனுப்புவதுபற்றிய செய்திக்குறிப்பு என்னிடம் இல்லை.

திரு. எம். சுரேந்திரன் : விலை மதிப்பும் மிகவும் ருசியுமான வாழைப் பழத்தை உண்டாக்குகின்ற இந்தக் குட்டை வாழைக்கு அந்தப் பெயர் பொருத்தம் இல்லாமல் இருக்கிறது. நெல்லிற்கு அமைச்சர்களின் பெயரை வைத்திருப்பதுபோல, இதற்கும் யாராவது ஒரு அமைச்சரின் பெயர் வைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அமைச்சர் பெயரை நெல்லுக்கு வைக்கவில்லை. அதைப்போல சில பெயர்கள் அவைகளுக்குப் பொருந்தியிருக்கின்றன. பொன்னி என்று ஒரு வகை நெல்லுக்குப் பெயர். இங்கே யாரும் பொன்னி என்ற பெயரில் அமைச்சர் இல்லை. பத்மா, ஜெயா என்ற பெயர்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. பத்மா, ஜெயா என்று இங்கு யாரும் அமைச்சர் இல்லை. அதைப்போல பல்வேறு பெயர்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் குறிப்பிட்டுக் கேட்பது கருணா, கரிகாலன் என்பதைப்பற்றிக் கேட்கிறார்கள் என்று நினைக்கிறேன். கரிகாலன் என்ற பெயர் இங்கே யாருக்கும் இல்லை. ஆனால், அந்தப் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் இருக்கிறோம்.

திரு. எஸ். முருகையன் : குட்டை வாழைத் திட்டத்திற்கு மத்திய அரசு எவ்வளவு தொகையை மானியமாகக் கொடுக்கிறது, மாநில அரசு எவ்வளவு தொகை மானியமாகக் கொடுக்கிறது. கடனுதவி மத்திய அரசு எவ்வளவு தொகை கொடுக்கிறது, மாநில அரசு எவ்வளவு தொகை கொடுக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா? இந்தத் திட்டத்தை வட ஆற்காடு மாவட்டத்தில் மேலும் விரிவுபடுத்துவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இந்தத் தீவிர சாகுபடித் திட்டம் தமிழக அரசு சார்பில்மட்டும் மேலே குறிப்பிட்ட மாவட்டங்களில் நடைபெறுகிறது. அதைப்பற்றித்தான் நான் சொன்னேன். உரம், பூச்சிகொல்லி மருந்துகள் இவை வாங்குவதற்கு கடன் வழங்கப்படுகிறது. ஆராய்ச்சி செய்து அதன் முடிவுகள் விவசாயிகளுக்குத் தெரிவிக்கப்படுகின்றன. இவை இலவசமாக அறிவிக்கப்படுகிறது. அவர்களுக்கு டெமான்ஸ்ட்ரேஷன் பிளாட்,

நிருபணைப் பண்ணைகள் போடுவதற்கு ஒரு எக்கருக்கு ரூ. 100 வீதம் அரசு மானியம் வழங்குகிறது. வேறு கூட்டுறவுத் துறை மூலம் ஒரு எக்கருக்கு ரூ. 1,000 வரை வழங்கப்படுகிறது. இந்தத் திட்டம் தமிழக அரசின் சார்பில் நடைபெறுகிறது. மத்திய அரசின் உதவியோடு செங்கற்பட்டு மாவட்டத்தில் மாத்திரம் இந்தத் தீவிர சாகுபடித் திட்டம் நிறைவேற்றப்பட்டுவருகிறது. மற்ற மாவட்டங்களுக்கு அதை விரிவுபடுத்துவதற்கு இப்பொழுது ஒன்றும் குறிப்பு இல்லை.

**திரு. நா. வீராசாமி:** இவ்வளவு முயற்சி எடுத்துக்கொண்டு வாழை உற்பத்தி செய்யவேண்டும் என்று நம்முடைய அரசு நினைக்கும்பொழுது, திடீரென்று வாழைக்கு நோய் வருகிறது. அந்த நோய்களைத் தடுப்பதற்கு டைட்டேன், இலட் 48, இலட் 42 போன்ற மருந்துகள் தெளிக்கப்பட்டாலும், அது சரியான பலன் அளிக்கவில்லை. அந்த நோய்களைத் தடுப்பதுபற்றி ஆராய்ச்சி செய்வதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** பயிர்களுக்கு மாத்திரம் அல்ல, உயிர்களுக்கும் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன. அதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதுபோல, இவைகளைத் தடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

THIRU B. VENKATASWAMY: Is it not a fact that in Chinglepur district, this variety is not coming up very well. That is the information I have got. Will the Hon. Minister tell me whether it is true or not?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** அப்படி எந்தவிதமான புகாரும் வரவில்லை. சென்ற ஆண்டு 1,000 ஹெக்டாரில் அப்படி உற்பத்தி செய்யப்பட்டது. அது சரியாக வருகிறது என்ற காரணத்தினால் இந்த ஆண்டு இன்னும் 1,000 ஹெக்டார், அதாவது 2,500 ஏக்கர் சேர்த்து, 2,000 ஹெக்டாரில் அது செயல்படுத்தப்பட்டு வருகிறது. கனம் உறுப்பினர் அவர்கள் சொல்வது போல எந்தவிதமான குறைகளும் இதுவரையில் எங்களுக்கு வரவில்லை.

**திரு. கே. கந்தசாமி:** இந்தப் பச்சை வாழை மதுரை மாவட்டத்தில் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது என்றாலும், அந்த வளர்ச்சித் திட்டம் அங்கே செயல்படுத்தப்படவில்லை. இதை வெளி நாட்டிற்கு அனுப்பி நல்ல விலைக்கு விற்பதற்கு அரசு என்ன முயற்சி எடுத்திருக்கிறது? இல்லையெனில் இனி மேலாவது அதற்கான முயற்சி எடுக்கப்படுமா?



**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** மதுரை மாவட்டத்தில் கம்பம் பகுதியில் மிகச் சிறப்பான முறையில், நல்ல முறையில் பயிர் செய்யப்பட்டு பலன் கிடைத்து வருகிறது. மற்றப் பகுதிகளுக்கு விஸ்தரிப்பதற்குக் குறிப்பு இல்லை. தனியாகக் கேள்விபோட்டால், பரிசீலித்துப் பதில் சொல்லலாம்.

**திரு. கே. எ. வகாப்:** குட்டை வாழை வளர்க்கும் திட்டம் செங்கற்பட்டு மாவட்டத்தில் செயல்படுத்தப்படுவது மத்திய அரசே தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தப்படுவதா அல்லது மாநில அரசின் பரிந்துரையின் பேரில் மத்திய அரசு அதை அங்கே செயல்படுத்த முன்வந்ததா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** மாநில அரசின் பரிந்துரையின் பேரில்தான் அது அங்கே செயல்படுத்தப்படுகிறது.

## வேளாண்மைக் கருத்தரங்குகள்

*280 வினா—**திரு. பி. எஸ். மணியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வட்ட அளவில், வேளாண்மைக் கருத்தரங்குகள் நடத்துவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** இல்லை.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** தலைவரவர்களே, இந்த வேளாண்மைக் கருத்தரங்குகளில் சொல்லப்படும் கருத்துக்களின்மீது ஏதேனும் நடவடிக்கைகளை வேளாண்மைத் துறை எடுத்து இருக்கிறதா? அப்படியானால் கடந்த ஆண்டு குளித்தலையில் நடந்த வேளாண்மைக் கருத்தரங்கில் சொல்லப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் நல்ல பாசனத் திட்டங்களைப் பொதுப் பணித் துறைக்கு வேளாண்மைத் துறை சிபார்சு செய்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

ப. 9–30

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தலைவரவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திலும் தற்போது கருத்தரங்குகள் இரண்டு நாட்கள் நடைபெற்று வருகின்றன. முதல் நாள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும், சம்பந்தப்பட்ட உழவுத் தொழிலில் ஈடுபட்டு இருப்பவர்களும் கலந்து பேசி, அதில் எடுக்கப்பட்ட முடிவுகளை இரண்டாவது நாள் நாங்கள் கலந்து பேசி, அதன் பேரில் என்னென்ன நடவடிக்கைகளை உடனடியாக அதே இடத்தில் எடுக்க முடியுமோ அவைகளுக்கு ஆங்காங்கே உத்தரவிடப்படுகிறது. மற்றவற்றை நாங்கள்

பரிசீலித்து உடனுக்குடன் ஏற்றவற்றைச் செய்யமுடியுமோ அவற்றிற்கு உத்தரவிடப்படுகிறது. குளித்தலையில் எடுக்கப்பட்ட முடிவுப்படி பல்வேறு திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன. திருச்சி மாவட்டத்தில் அங்கேதான் "இண்டென்சிவ் ஏரியா கல்டிவேஷன்" திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் ஆரம்பித்து வைத்தார்கள். திருச்சி மாவட்டத்தில் இருக்கிற 39 வட்டங்களில் 29 வட்டங்களில் இது இப்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது. இன்னும் இருக்கிற 10 வட்டங்களிலும் செயல்படுத்த செயற்குறிப்பு கேட்கப்பட்டிருக்கிறது. தண்ணீரைப்பற்றிக் கேட்டு இருக்கிறார்கள். அது சம்பந்தமாக கரூர் வட்டத்தில் நானும் பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களும் சுற்றிப் பார்த்தபோது அங்கே சில வேலைகளில் குறைகளை எடுத்துச் சொன்னார்கள். அவைகளை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று சொல்லி, அதற்கு அங்கேயே அனுமதி வழங்கிவிட்டு வந்திருக்கிறோம்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** அப்படியானால் அரவக்குறிச்சி தொகுதியில் புஞ்சை சம்பந்தப்பட்ட கருத்தரங்குகளில் எடுக்கப்பட்ட முடிவுகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தலைவரவர்களே, அது பரிசீலிக்கப்படவேண்டிய ஒன்று என்பது கனம் உறுப்பினர் அவர்களுக்கும் தெரியும். அவர்கள்கூட சமீபத்தில் பேசுகிறநேரத்தில் சில திட்டங்கள் நிறைவேற்ற முடியாமல் இருப்பதால் தொகுதிக்குக்கூடப் போக முடியாமல் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நீண்ட நெடுங்காலமாக கேட்கப்பட்டு வருகிற திட்டங்கள் உடனடியாக நிறைவேற்றப்படவேண்டுமென்பது இயலாது என்றாலும், அவைகளைப் பரிசீலனை செய்வதற்கும், அங்கே இருக்கும் உழவர்களை மேம்பாடுபடுத்துவதற்கும் தனித் திட்டம் தயாரிக்க அரசு முயற்சி எடுத்து வருகிறது.

**திரு. தோப்பூர் திருவேங்கடம்:** தலைவரவர்களே, அப்படிப்பட்ட விவசாயக் கருத்தரங்குகளுக்கு யார்யார் அழைக்கப்படுகிறார்கள்? அந்த அழைப்புகளில் அதிகாரிகளும், ஊராட்சி மன்றத் தலைவர்களும்தான் அழைக்கப்படுகிறார்களா, சட்டமன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்ள வாய்ப்பளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** பெரும்பாலும் ஊராட்சி ஒன்றியங்களில்தான் இது ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ஒன்றியத் தலைவர்களுக்கு இதில் பெரும் பங்கு உண்டு. அதிலே சம்பந்தப்பட்ட அதிகாரிகள், கூட்டுறவுத் துறை, பொதுப்பணித் துறை, மின்சாரத் துறை போன்ற துறைகளிலிருந்து அதிகாரிகள் அழைக்கப்படுகிறார்கள். வேளாண்மைத்துறை அதிகாரிகளும் அவர்களோடு கலந்து பேசி முடிவு எடுக்கிறார்கள். அதிகாரிகள் மட்டும் கலந்து பேசி முடிவு எடுப்பது மட்டுமல்லாமல், விவசாயிகளையும் அழைத்துப் பேசி அவர்களுக்கு இருக்கும் குறைகளையும் அறிந்து அதைத் தவிர்ப்பதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்கள். பொதுவாக இந்தக் காரியத்தில் ஊராட்சி ஒன்றியங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு இருக்கிறது. உழவர்களும் கலந்துகொண்டு அவர்களுடைய குறைகளையும் கருத்தையும் எடுத்துச்சொல்லி வருகிறார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, the Panchayat Union Councils conduct Seminars, but they do not give much publicity and they do not invite a large number of ryots. We find only officials are more in numbers there than ryots. May I know from the Hon. Minister whether instructions will be issued to give wide publicity to such Seminars and invite all ryots?

**மாண்புமிகு திரு. அ. பெ தர்மலிங்கம்:** தலைவரவர்களே, இப்போது அதிக விளம்பரம் செய்யப்பட்டு வருவது வேளாண்மைத் துறையில்தான் என்று சொல்லி வருகிறார்கள். நீங்கள்கூட சாலைகளில் பார்த்து இருப்பீர்கள். ஐ.ஆர். 8, ஐ.ஆர். 20 போன்றவற்றிற்கு போஸ்டர் போட்டு விளம்பரம் போடுகிறோம். அதைப் போலவே ஊராட்சி ஒன்றியங்களின்மூலம் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன. கனம் உறுப்பினர் அவர்கள்கூட கேள்வியில் அதுபற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். மாவட்ட அளவில் கருத்தரங்குகள் நடத்தத்தான் இப்போது வகைசெய்யப்பட்டிருக்கிறது. வேளாண்மைத் துறையைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு ஊராட்சியிலும் நடத்தவேண்டுமென்று சொல்லி அதற்காகத் தனிச் சலுகைகளும் வழங்கப்பட்டு வருகின்றன. பல்வேறு பகுதிகளில் இப்படிப்பட்ட விவசாயக் கருத்தரங்குகள், கண்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. அதற்கு அரசு உதவிகள் செய்து வருகிறது. பெரும்பாலும் 100 பேர் இருக்கக்கூடிய இடமாக இருந்தால் வேளாண்மைத் துறையின் சார்பில் கண்காட்சி நடத்தப்படுகிறது. அதில் எப்படி மருந்து தெளிப்பது, என்னென்ன உரங்களை எது எதற்கு உபயோகிப்பது என்று சொல்லப்படுகிறது. இப்படிப்பட்ட கண்காட்சிகள் எல்லா கிராமத்திலும் நடந்து வருகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. கந்தசாமி:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, கருத்தரங்குகள் மாவட்ட அளவில் நடத்தப்படுவதாகச் சொன்னார்கள். வட்ட அளவில் நடத்தினால், நல்ல திட்டங்களை விவசாயிகள் மத்தியில் பரப்புவதற்கும், அவர்களுடைய குறைகளை அறிந்து கொள்வதற்கும் வசதியாக இருக்கும். அப்படி

நடத்துவதில் தவறு என்ன? அப்படி நடத்துவதன் மூலம் விவசாயிகளுக்கு நன்மை ஏற்படாதா? ஆகவே, அரசு இதைச் செய்யுமா என்று அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** மாவட்ட அளவில் தான் தற்போது நடத்தப்பட்டு வருகிறது. வட்ட அளவில் நடத்துவதற்கு அரசு தனியாகச் செலவு செய்ய முடியாது என்பதால்தான் மூலக்கேள்விக்குப்பதில் சொல்கிறபோதே இல்லை என்று குறிப்பிட்டேன். துணைக்கேள்வி பலவற்றைக் கேட்டதில் இந்த அரசின் கொள்கையையும், கருத்தையும் எடுத்துச்சொல்லி வட்டங்களில் நடத்துவதற்குப் பதிலாக இன்றையதினம் ஆங்காங்கு பல இடங் களில் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன, அவற்றால் உழவர்கள் பயன்பட்டு வருகிறார்கள் என்றும் குறிப்பிட்டேன். எந்த நேரத்தில், எந்த இடத்தில் விவசாயிகளுக்குத் தேவையான உதவி வேண்டுமென்று கேட்டாலும் அவர்களுக்குச் சொல்லித் தருவதற்கு விவசாயத்துறைமூலமாக உதவி பெற வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களுடைய வேண்டுகோள்கள் உடனுக்குடன் நிறைவேற்றப்படும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். முருகையன் :** தலைவரவர்களே, இதுபோன்ற கருத்தரங்குகள் நடத்துவதற்கு நிறையப் பணம் செலவாகும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மாவட்ட அபிவிருத்தி மன்றக்கூட்டங்கள் நடக்கிறபோது அமைச்சர் அவர்கள் அந்த இடத்திற்கு வந்து எல்லா உறுப்பினர்களின் கருத்துக்களையும் தெரிந்து கொண்டால் வசதியாக இருக்கும், அதைச் செய்ய முன்வருவார்களா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** ஆரம்பத்தில் எல்லா மாவட்டங் களின் வளர்ச்சி மன்றக்கூட்டங்களிலும் கலந்துகொண்டு அங்கே இருக்கின்ற பிரச்னைகளைக் கவனித்து, அதுபற்றிச் செய்யவேண்டிய நடவடிக்கைகளைச் செய்ய உத்தரவிட்டிருக்கிறேன். அதற்குப் பிறகு அந்த வேளாண்மை சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அந்தக் கூட்டங்களுக்கு அனுப்பி, அங்கே வேளாண்மைத்துறைபற்றி என்னென்ன குறைகளை அங்கத்தினர்கள் சொல் கிறார்கள், அரசாங்கத்தின் சார்பில் என்ன சொல்லப்படுகிறது என்று கேட்டு, ஒரு குறிப்பு அனுப்பச்சொல்லியிருக்கிறேன். ஒவ்வொரு மாவட்ட வளர்ச்சி மன்றக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களும் ஆராயப்பட்டு, அதற்கான உடனடிப் பதிலும் அனுப்பப்பட்டு வருகிறது என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்



**திரு. எம். சுரேந்திரன் :** சார், வேளாண்மைத்துறை இப்போது விஞ்ஞான ரீதியாக வளர்ந்து வரவேண்டிய காலகட்டத்தில் இருந்து வருகிறது. வேளாண்மைத் துறையில் இருப்பவர்கள் கல்வியில் கற்றுச்சிறந்தவர்கள் அல்ல. மாவட்டத்தில் மட்டும் இம்மாதிரியான கருத்தரங்குகள் அதிகாரிகள், சட்ட மன்ற உறுப்பினர்கள் ஆகியோரைக்கொண்டு நடத்துவதோடு மட்டுமல்லாமல், கிராமப்புறத்தில் இருக்கிற விவசாயிகளுக்கும் விஞ்ஞான ரீதியில் அடைந் துள்ள முன்னேற்றங்களை எடுத்துச்சொல்வதற்கும் அரசு வழிவகை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** மாவட்ட அளவில் கருத்தரங்கு கள் நடத்தப்படுவது என்று சொன்னது, மாவட்டத்தின் தலைநகரில் நடத்தப் படுவது என்பது அல்ல. ஒரு மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், குறிப்பாக மதுரை மாவட்டத்தில் கருத்தரங்கு என்றால் மதுரையில் நடத்தப்படுவது அல்ல. சேலம் மாவட்டத்தில் என்றால் சேலம் மாவட்டத்தில் நடத்தப்படுவது அல்லது. அப்படி நடத்தப்படுகிற கருத்தரங்குகள் எல்லாம் அந்த மாவட்டத் திலுள்ள ஒரு கிராமத்தில், அந்த மாவட்டத்தின் சார்பாக நடத்துகிறோம். அப்படி நடத்துகிறபோது பெரும்பாலும் விவசாயிகளை அழைத்து அவர் களுடைய குறைபாடுகள் என்னென்ன என்று ஆராய்ந்து, அதற்கு அதிகாரிகள் தக்க பதில் அளித்து வருகிறார்கள். உடனடியாகத் தீர்க்கக்கூடிய பிரச்னையாக இருந்தால் அதைத் தீர்ப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வருகிறோம். நானே இதுவரையில் 6 கருத்தரங்குகளில் கலந்துகொண்டு இருக்கிறேன். அந்த விவசாயிகளிடத்தில் எப்படி நல்ல முறையில் பயிர் செய்ய வேண்டு மென்று எடுத்துச்சொல்லப்பட்டு வருகிறது. அவர்கள் தெரிவித்த கருத்து களும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** இந்தக்கருத்தரங்குகள் தஞ்சை மாவட்டத்தில் மட்டுமல்ல, வேறு மாவட்டங்களிலும் நடைபெறு கின்றன. அந்தக்கருத்தரங்குகளில் பலவிதக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. ஒரு குழு உரம் எப்படித் தயாரிப்பது, ஒரு குழு பூச்சிக் கொல்லி மருந்து எப்படி உபயோகிப்பது, இப்படிப் பல குழுக்கள் அமைக்கப்பட்டு, ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு தலைவர் போட்டு, அதில் விவசாயிகள், விவசாய விஸ்தரிப்பு அதிகாரிகள் சேர்ந்து இரண்டு நாட்கள் வாதம் செய்து முடிவு செய்து அவர்கள் எடுத்த முடிவுகளைத்தான் அறிக்கையாக அமைச்சர்கள் முன்பு படிக்கிறார்கள். அதோடு, ஒவ்வொரு பஞ்சாயத்து ஒன்றியத்திலும் 20 பஞ்சா யத்துகள் தேர்ந்தெடுத்து, அந்த 20 கிராமங்களிலும் விவசாயக் கண்காட்சி, நாடகம், மற்றும் சினிமா போன்றவைகளும் காட்டப்படுகின்றன. இந்த இரண்டு ஆண்டுக் காலமாக இவை செய்யப்பட்டு வருகின்றன என்று தெரி வித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் * வெள்ளிக் குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒத்திவைப்புத் தீர்மானம்

### சென்னையில் பட்டதாரி ஆசிரியர்களது பேரணியும் 480 பேர்கள் கைது செய்யப்பட்டதன் காரணமாக ஏற்பட்டுள்ள பதட்ட நிலையும் குறித்து.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருவாளர்கள் கே. கந்தசாமி, என். கே. பழனிசாமி, எம். சுரேந்திரன், டாக்டர் ஹாண்டே, மணலி கந்தசாமி ஆகியோர் சட்டப்பேரவை 42-வது விதியின்கீழ் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக்கொண்டுவந்திருக்கிறார்கள். இங்கே 5 உறுப்பினர்கள் அந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருப்பதால் ஒவ்வொருவரும் அதிக நேரம் எடுக்காமல், இது எப்படி சட்டப்பேரவை 42-வது விதியின்கீழ் ஒத்திவைப்புப் பிரச்னையின்கீழ் வரும் என்பதைச் சுருக்கமாக எடுத்துக் கூற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நானே அவர்கள் கொடுத்திருக்கிற தீர்மானத்தை படித்துக் காட்டுகிறேன்.

'The procession of Graduate Teachers and the arrest of about 480 of them at Madras on 6th March 1973 and consequent restlessness amongst students, teachers and the public touching law and order.'

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி:** சார், ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர். இப்பொழுது திருமதி அலர்ந்தநாயகி அம்மையார் அவர்கள் ஏதோ கொண்டு வந்து தங்களிடம் கொடுத்தார்கள். அது சரியா? சரியென்றால் நாங்களும் அதுமாதிரிக் கொடுக்கலாம் என்று நினைக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்:** அவர்கள் என்ன கொடுத்தார்கள் என்று நான் இன்னும் பார்க்கக்கூட இல்லை. அதற்குள் நீங்கள் பாயின்ட் ஆஃப் ஆர்டர் ரெயிஸ் பண்ணிவிட்டீர்கள். ஏதோ ஒரு காகிதத்தைக் கொண்டு வந்து கொடுத்தார்கள். ஏதாவது விண்ணப்பமாக இருக்கலாம். விண்ணப்பம் கொடுப்பது, யார் வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் கொடுக்கலாம். அதுபற்றி முடிவு செய்ய வேண்டியது என் வேலை.





**திரு. ஏ. சுப்பிரமணியம்:** சார், இன்று காலை 9 மணிக்கு நானும் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைச் செயலாளரிடம் கொடுத்திருந்தேன். அது ஏன் வரவில்லை என்று தெரியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வந்திருந்தால் சேர்த்துக் கொள்ளலாம்.

THIRU K. KANDASWAMY: Hon. Deputy Speaker, Sir; under 42 of the Tamil Nadu Legislative Assembly Rules, I have given notice of the following adournment motion to discuss a definite mater of urgent public importance, namely—

'The procession of Graduate Teachers and the arrest of about 480 of them at Madras on 6th March 1973 and consequent restlessness amongst students, teachers and the public touching law and order.'

I request the Hon. Deputy Speaker to adjourn the House to discuss the above matter as it has become a routine matter touching the normal life of the public. It has more or less become a fashion for Government employees organised in unions to go in a procession and put forth their demands every day thereby creating trouble not only to the Government but also the public. Therefore, I request the Hon. Deputy Speaker to adjourn the ordinary routine business of the House to discuss the matter once for all to find a solution in this Honourable House.

**திரு. என். கே. பழனிசாமி:** சார், ஏற்கெனவே இந்தச் சபையில் சர்க்கார் சார்பில் ஆசிரியர்கள் பிரச்சினைப்பற்றி அறிவிக்கப்பட்டிருக்கிறது. அப்படி அறிவித்தது சரிதான். ஆனால் அவர்களை அழைத்துப் பேசி, அதற்கு ஒரு முடிவு காணுகின்ற வகையில் எதுவும் சொல்லப்படவில்லை. ஆகவே சர்க்கார் சார்பில் சொல்லப்பட்டதை ஏற்றுக்கொள்வதற்கில்லை.

பொதுவாக 1—4—1970-க்குப் பின்னால் அப்பாயின்ட்மென்ட் ஆனவர்களை யெல்லாம் ரெகுலரைஸ் பண்ணவேண்டுமென்று ஆசிரியர்கள் கேட்கிறார்கள். அரசாங்கச் சார்பில் ரெகுலரைஸ் செய்யலாம் என்று சொல்லியிருக்கிறார்களே தவிர எந்தத் தேதியிலிருந்து ரெகுலரைஸ் செய்யப்படும் என்று சொல்லவில்லை.

இரண்டாவதாக, செலக்ஷன் கிரேடு ஆசிரியர்களுக்கு 400 ரூபாய் சம்பளம் வருகிறது. 10 வருஷம் சர்வீஸ் பார்த்தவர்களுக்கு 460 ரூபாய் வருகிறது. செலக்ஷன் கிரேடு ஆசிரியர்கள் ஆனால் 400 ரூபாய் என்று இருக்கிறது. ஆக 60 ரூபாய் குறைவாக இருக்கிறது. அந்த 60 ரூபாயும் சேர்த்து

கேட்கிறார்கள். ஏற்கெனவே 1960-ம் வருஷத்துக்கு முன்பு பி.டி. டிகிரி படித்தவர்களுக்கு அலவன்ஸ் வழங்கப்படுகிறது. பல ஆசிரியர்கள் பி.டி. டிகிரி வாங்காமலேயே அலவன்ஸ் வாங்குகிறார்கள். அந்த முறையில் இப்போது எல்லா பி.டி. ஆசிரியர்களுக்கும் 20 ரூபாய் அல்லது 10 ரூபாய் டோக்கன் அலவன்ஸாகக் கொடுப்பதில் அரசாங்கத்திற்கு பெருத்த இழப்பு ஒன்றும் வந்துவிடாது. அவர்கள் ஆர்வத்துடன் பணியாற்றும் வாய்ப்பும் ஏற்படும். அரசாங்கத்திற்கு அதிகப்படணச் செலவும் இல்லை; வேறு கமிட்மெண்டும் இல்லை. ஆகவே அரசாங்கம் ஆசிரியர்களின் இந்தக் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, திரு. சுரேந்திரன் அல்லது திரு. வ. சுப்பிரமணியம் இருவரில் யாராவது ஒருவர் பேசுங்கள்.

* திரு. எம். சுரேந்திரன்: சார், இங்கே என்னால் கொடுக்கப்பட்டிருக்கும் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைப்பற்றி விவாதிப்பது மிகவும் அவசரமும் அவசியமும் நிறைந்த ஒன்றாகும் என்பதை நான் முதற்கண் வற்புறுத்திக் கூறிக் கொள்கிறேன்.

தற்போது இந்த ஆசிரியர்கள் மட்டுமல்லாமல், எல்லாப் பிரிவுகளிலே இருக்கின்ற மக்களும் போராட்டங்கள், கிளர்ச்சிகள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். மக்களின் மற்றப் பிரிவினர்கள் கிளர்ச்சிகள் நடத்துவதைவிட இந்தப் பட்டதாரி ஆசிரியர்கள் நடத்துகின்ற கிளர்ச்சியினால் சமுதாயத்திற்குப் பெருத்த கேடு விளையும் என்பதை முதலில் புரிந்துகொள்ள வேண்டும். காரணம், இந்த மாநிலத்திலே இருக்கின்ற எல்லா மாணவர்களும் ஆசிரியர்களைப் பார்த்துத்தான் வளர்ந்துவரவேண்டும். ஆசிரியர்கள் காட்டுகின்ற சிறந்த அறிவு வளர்ச்சிப் பாதையிலே சென்று, சமுதாயத்தை முன்னேற்றுகின்ற வகையில் மாணவர் சமுதாயம் இருக்கிறது. அப்படிப்பட்ட ஆசிரியர்கள் இம்மாதிரியான கிளர்ச்சிகளில் ஈடுபட்டு, கைது செய்யப்பட்டு, அவர்களுக்குச் சாதகமாக மாணவர்களும் பள்ளிக்குச் செல்லாமல் கண்டனம் செய்கின்ற நிலைமை ஏற்பட்டு, அதனால் பெற்றோர்களும் மற்றவர்களும் கவலைப்படும் சூழ்நிலை ஏற்படுகிறது. அது இந்த அரசாங்கத்துக்கு நல்லது அல்ல என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆசிரியர்கள் போராட்டம் நடத்துவதுபற்றி நேற்றைக்கு முன்தினம் சமரசப் பேச்சுவார்த்தை நடைபெற்று, அது முடிவுறாத நிலையில் நேற்று ஆசிரியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு, நூற்றுக்கணக்கானோர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இன்றைக்கு எப்படி என்று தகவல் இன்னும் வரவில்லை.



எப்படி இருந்தாலும் இந்த நிலைமை நீடிக்கக்கூடாது; அது நல்லதல்ல. ஆசிரியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு, அதன் காரணமாக மாணவர்களும் கிளர்ச்சியில் ஈடுபடுவது தடுக்கப்பட வேண்டும். அதற்கு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டியது மிகவும் அவசரமும் அவசியமும் ஆகும். ஆகவே, சபையின் இதர நடவடிக்கைகளை ஒத்திவைத்து, இந்தப்பிரச்சனைபற்றித் தாராளமாக விவாதித்து, முடிவு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE: Mr. Deputy Speaker, Sir, in support of the adjournment motion I have given notice of, I want to briefly state the following:—

Sir, unless the Hon. Minister for Education forgets the high pedestal from which the Government are placing themselves vis-a-vis the present agitation of the graduate-teachers, things may go completely out of hand. That is the note of warning I would like to strike in the interest of the Government, teachers and the public. I would request the Hon. Ministers to come down from the pedestal to examine their problems and see whether it is not possible for them to find a solution so that they may have a feeling of some sort of satisfaction that the Government have understood the problem.

In this connection, I would briefly refer to the pay scales of trained and untrained teachers. The trained teachers were getting Rs. 85 and the untrained teachers Rs. 65. That defference in pay is not in vogue to-day. Even in the neighbouring State of Andhra Pradesh there is a difference in the pay of trained and untrained teachers. So, the plea of the graduate teachers for the past so many years is that an allowance should be given to them for the additional degree qualification like B.T. that they posses.

MR. DEPUTY SPEAKER: The Hon. Member need not go into details. The House wants to know the present situation arising out of the arrest of the teachers and their agitation. We cannot go on discussing the reasons for the agitation and the reply of the Government and all these things.

DR. H. V. HANDE: Sir, I am only trying to point out whether it is possible for the Government to find a solution to the problem and I am doing it only in the interest of the country. I would not take more time of the House and I would not take more than three or four minutes.

[Dr. H. V. Hande] [1973 மார்ச் 7

Another important point which I want the Hon. Minister to consider is the fact that the Hon. Chief Minister in his reply to the adjournment motion raised in the Madras Legislative Council had stated that if the graduate-teachers took a stiff attitude, he would try to put it down as had been done in Kerala. He had even mentioned the name of the Hon. Chief Minister of Kerala. My submission is that one of the reasons why they are now on the war path is the militant attitude adopted by the Government.

Then I want to refer to another point. A few days ago when the matter was brought before this House, the Hon. Minister for Education had stated in this House that the pay of the teachers in Pondicherry was only Rs. 233 as against Rs. 350 for teachers in Tamil Nadu. I want to point out that that was a totally incorrect information that the Hon. Minister had given in this House. My information is that the total pay in Pondicherry is Rs. 446 and I have received a letter to that effect and I do not want to read its contents now. Therefore, my point is that such an incorrect statement of the Hon. Minister on the floor of the House is one of the main reasons responsible for the teachers being on the war path. In fact, if I am given an opportunity I would move a privilege motion against the Hon. Minister for giving such an incorrect information in this House. It is a serious matter. It is these sort of statements that have given these people anger. So, I would request the Hon. Minister to come down from his high pedestal and not treat them with contempt.

THE HON. THIRU K. ANBAZHAGAN: The hon. Member is moving the House asking for an adjournment. The adjournment motion itself is not accepted by the House but it is being discussed. But the hon. Member is completely going into the merits of the case, the merits of the agitation. Is it proper for you, Sir, to admit such words and such remarks even at the time when he is allowed only to explain the responsibility of the Government for pressing a discussion on an adjournment motion.

MR. DEPUTY SPEAKER: DR. Hande, I would like to tell you that if you have got anger against the Minister or complaint you can move a privilege motion. But you cannot accuse the Hon. Minister in an adjournment motion.



1973 மார்ச் 7]

DR. H. V. HANDE: Adjournment motion is an attempt to accuse, to censure the Government. Let me complete my point. Adjournment motions are in a way a censure of the Government. This is why consent is withheld. I am making out a case. I am not moving the House, as the Hon. Minister said. In fact nobody can move the House. I only say that the business of the House do stand adjourned to discuss the serious situation that has arisen. I am trying to explain the causative factors that have led to this situation, the statement made by the Hon. Minister for Education on the floor of the House and by the Hon. Chief Minister on the floor of the other House. Therefore, I would like the Hon. Minister, while he would plead for non-allowance of the adjournment motion by giving some causes, to give correct answers and not to utter militant words.

I beseech the indulgence of this House and move that the business of the House be adjourned at least for a couple of hours so that we could discuss the question threadbare. Though I do not agree with the second part of the motion of Thiru Kandasami, I agree with the first part, viz., that the business of the House be adjourned. We should discuss the question for at least two hours. So, I would request the Deputy Speaker, in consultation with the Leader of the House, to adjourn the business of the House for two hours. Such a thing had been done in the Legislative Council some years ago. At that time the present Hon. Minister for Health was there and Dr. A. L. Mudaliar was also there and we had two hours discussion. So let us discuss this question threadbare for two-hours by adjourning the House. Thank you.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பட்டதாரி ஆசிரியர்களின் சார்பாக கிளர்ச்சி நடத்தப்பட்டு, அதன் காரணமாக இங்கே ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவந்திருக்கிறார்கள்.

பட்டதாரி ஆசிரியர்கள் மாணவர்களின் எதிர்காலத்திற்கு வழிகாட்டியாக இருக்கவேண்டியவர்கள் இவர்களே, இப்போது சட்டத்தை மீறுகின்ற அணியோடு கிளர்ச்சியில் ஈடுபட முன்வந்திருக்கிற காரணத்தினால், நாட்டில் பலவிதமான குழப்பங்கள் உருவாகி இருப்பது உள்ளபடியே வருந்தத்தக்கதாகும். மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே அரசுக்கு அறிவுரைகள் கூறியதைப்போன்று, ஆசிரியர்களுக்கும் அறிவுரை கூறி நல்லதொரு சூழ்நிலையை உருவாக்க முன்வந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

அதுமட்டுமல்லாமல் இந்த அரசு மேலே உட்கார்ந்துகொண்டு, பட்டதாரி ஆசிரியர்களின் குறைகளைக் கேட்க கீழே இறங்கிவரத் தயக்கம் காட்டுவதைப் போன்று டாக்டர் ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் எந்தக் கிளர்ச்சியாக இருந்தாலும் இந்த அரசு தயக்கம் காட்டாது அவர்களோடு கலந்து பேசி ஒரு சுமுகமான நிலையை உண்டாக்க எத்தனையோ சந்தர்ப்பங்களில் எவ்வளவோ முறைகள் முயன்று வந்திருக்கிறது என்பதை வரலாற்று நிகழ்ச்சிகளை எடுத்துப்பார்த்தாலே தெரியும். யாரைப் பார்க்க வேண்டுமென்றாலும் எந்தச் சந்தர்ப்பத்தில் பார்க்க வேண்டுமென்றாலும் அவர்களைப் பார்க்க இந்த அரசு தயக்கம் காட்டியது கிடையாது. இந்த அரசுக்கு ஒரு கௌரவம் வந்தாலும், இழிவு வந்தாலும் அது இந்த அமைச்சர்களை மட்டும் தான் பொறுத்தது என்பது அல்ல. அமைச்சர்கள் மட்டும்தான் இந்த அரசின் மானத்தை, கௌரவத்தைக் காப்பாற்றக் கடமைப்பட்டவர்கள் என்பது அல்ல. டாக்டர் ஹாண்டே அவர்கள் உட்பட இங்குள்ள அத்தனை உறுப்பினர்களும் அரசின் கௌரவத்தைக் காப்பாற்றக் கடமைப்பட்டவர்கள்.

பட்டதாரி ஆசிரியர்களுடைய கோரிக்கைகள் சம்பந்தமாக இந்த அரசு பல தடவைகள் அவர்களோடு கலந்து பேசியிருக்கிறது. இந்தக் கிளர்ச்சி சம்பந்தமாக அவர்கள் அமைச்சருக்கோ, கல்வி இயக்குநருக்கோ, செயலாளருக்கோ எவ்வித தகவலும் கொடுக்கவில்லை, அதுபற்றி நேற்றே நான் குறிப்பிட்டேன். இன்று வரைக்கும் நேரிடையாக ஒரு பேச்சுவார்த்தை நடத்தி இதுபற்றி ஒரு முடிவுக்கு வருவதுபற்றி அவர்கள் எங்களுக்குத் தகவல் தரவில்லை. ஆயினும், அவர்கள் கிளர்ச்சியை துவங்குவதற்கு முன்னால் ஆங்கிலத்திலும், தமிழிலும் கொடுத்துள்ள அறிக்கைகளைப் பார்த்தால் தெரியும்.

' The Chief Minister, the Education Minister, the Education Secretary and the Director of School Education had talks with us many times '. என்பதாக பலதடவைகள் பேச்சுவார்த்தை நாங்கள் நடத்தியிருப்பதைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே அவர்களோடு அரசு பேசத் தயாராக இல்லை என்கிற குற்றச்சாட்டு சரியல்ல, அதனால் கிளர்ச்சியில் ஈடுபடுவதாகச் சொல்வது சரியல்ல.

சென்ற தடவை கிளர்ச்சி நடத்தியபோதும் கூட, இரண்டாவது சம்பளக் கமிஷன் அறிக்கையில் உள்ள குறைகளைப் போக்க தனி நபர் கமிஷன் அமைத்து மாற்றங்கள் செய்து ஒரு முடிவுக்கு வந்த பாங்கினைக் காணலாம்.

இன்றைக்கு அவர்களது முக்கியமான கோரிக்கைகளில் ஒன்று அவர்களது சர்வீசை வரன்முறைப்படுத்துவது பற்றியதாகும். ஜில்லா போர்டு உயர்



நிலைப் பள்ளிகளை அரசு எடுத்துக்கொண்டபோதே அதில் வேலை செய்கிறவர்கள் 1—4—1970-க்குப் பிறகு சேர்ந்தவர்களது சர்வீஸ் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலமாக ரெகுலரைஸ் செய்யப்படவேண்டும் என்பதைத் தெரிவித்து இருக்கிறோம். அவர்களுக்குக் கொடுத்த ஆணை அறிக்கையில்

' The candidates are informed that if he or she does not qualify himself or herself for regular appointment to the post to which he or she has been appointed temporarily, by being selected for regular recruitment by the Tamil Nadu Public Service Commission, he or she is likely to be ousted as and when candidates selected for regular recruitment are available or at any time without notice or without reason being assigned '. என்பதாக கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் மேல்சபை உறுப்பினர்கள் திருவாளர்கள் ராஜா ஐயர், சுவாமிநாதன், கணபதி, சந்தோஷம் ஆகியவர்கள் என்னைச் சந்தித்தபோது முக்கியமாக அவர்களது இரண்டு கோரிக்கைகளை அரசாங்கம் உடனடியாக ஏற்றுக்கொண்டால் இந்தக் கிளர்ச்சியைத் தவிர்க்கலாம் என்றார்கள். அதில் ஒன்று, இப்போதுள்ள ஆசிரியர்கள் அத்தனை பேரையும் அரசாங்கமே வரன்முறைப்படுத்தி, புதியதாக எடுக்கிறவர்களை சர்வீஸ் கமிஷன் மூலமாக ரெகுலரைஸ் பண்ணச் செய்ய வேண்டும் என்பதாகும். இதுபற்றி நான் இந்த அவையில் 3-ம் தேதி அன்றே இப்போதுள்ள மூவாயிரத்துச் சில்லரை பட்டதாரி ஆசிரியர்களும் வரன்முறைப் படுத்தப்படுவார்கள் என்பதாகத் தெரிவித்திருக்கிறேன்.

மற்றொன்று அவர்கள் எடுத்துச் சொல்லியது, இந்த செலக்ஷன் கிரேடு 1/3
என்று கொடுத்ததன் காரணமாக மாவட்ட அளவில் வைக்கும் போது சில மு.ப. 10-00
மாவட்டங்களில் 6, 7 ஆண்டுகள் பணியாற்றியவர்களுக்கும், மற்றும் சில இடங்களில் 17, 18 ஆண்டுகள் பணியாற்றியவர்களுக்கும் கிடைக்கிற காரணத்தால் அதை மாற்றி அவர்கள் வேலை செய்கின்ற ஆண்டுகளைக் கணக்கிட்டு தேர்வு நிலை ஊதியம் தரவேண்டுமென்று குறிப்பிட்டு வைத்தார்கள். அதை இந்த மானியக்கோரிக்கையில் எடுத்துச்சொல்லும்போது சொல்லலாம் என்று சொன்னேன். பிறகு பேசிய மேலவை உறுப்பினர்கள் இதைப் பேசிவிட்டு இப்போதே அதை அறிவித்து விட்டால் அந்தக் கிளர்ச்சியைக் கைவிட்டு விடுவார்கள் என்று கூறிவிட்டுச் சென்றார்கள். அந்த அடிப்படையில், 10 ஆண்டு பணி புரிந்தவர்கள் அத்தனை பேருக்கும் தேர்வுநிலை ஊதியம் தரப்படும் என்ற அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு அந்த இரண்டையும் இந்த ஆண்டே அறிவித்தோம். அதனால் ஐந்தாம் தேதி கிளர்ச்சியை கை விட்டு விடுவார்கள் என்று எதிர்பார்த்தோம். மேலவை உறுப்பினர்களும் எதிர் பார்த்தார்கள்.

பிறகு, இன்னும் சில சிக்கல்கள் இருக்கின்றன, அவற்றையும் நீக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதற்கும் பேச்சுவார்த்தைக்கு தயார் என்று சொன்னேன்.

மேலேயிருந்து கீழே இறங்கி வரவில்லை என்று சொன்னார்கள். நடந்தது என்னவென்றால், பாண்டிச்சேரியிலிருந்து ஓடோடி வந்தேன். 8½ மணிக்கே பேசவேண்டுமென்று முதல்வர் தொலைபேசியில் சொன்ன காரணத்தால் பாண்டிச்சேரியிலிருந்து 5 மணிக்கே புறப்பட்டு 8 மணிக்கே ஓடோடி வந்தேன் என்பதை இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன். முதல்வரவர்களும், நானும், நிதி இலாக்கா செயலாளரும், கல்வி இலாக்கா செயலாளரும், மேலவை உறுப்பினர்கள் திருவாளர்கள் ராஜா ஐயர், சந்தோஷம், சுவாமிநாதன், மற்றும் கணபதி ஆகியவர்களுடன் பேசினோம், அவர்களோடு இன்னும் ஏழெட்டு பேர்களும் வந்திருந்தார்கள். ஏற்பட்டுள்ள சிக்கல்கள் இன்னின்ன என்று எடுத்துச் சொன்னார்கள். முதலில் இலாக்கா செயலாளர்களுடன் பேசி விட்டு பிறகு எங்களுடன் பேசி சிக்கல்களை தெளிவுபடுத்தினார்கள். எந்தெந்தச் சங்கடங்கள் இருக்கின்றன என்று சொன்னார்கள். ப்ரொபேஷன் பிரியட் பற்றி குறிப்பிட்டார்கள். அதைப் பற்றி தேர்வுநிலைச் சூழ் முறையைப் பற்றியும் சொன்னார்கள். கடைசியில் பத்தாண்டு என்று முடிவு செய்து, எந்த நிலையிலிருந்து தேர்வு நிலை ஊதியம் தரப்படும் என்று சொன்னோம்.

அது மட்டுமல்ல, 'ஏ' குரூப், 'பி' குரூப் என்று இரண்டு வேறுபாடுகள் இருக்கின்றன என்று சொன்னார்கள். அதைப் பற்றி அன்றே சொன்னோம், 1967-லிருந்தே இதை மாற்ற வேண்டுமென்று அரசாங்கமே முயற்சி எடுத்து வருகிறது; இரண்டு பிரிவுகள் இருக்கக் கூடாது; இதனால் அரசாங்கத்திற்கும், அரசு நிர்வாகத்திற்கும் கூட சங்கடங்கள் இருக்கின்றன, எனவே இரண்டையும் ஒன்றாக ஆக்கவேண்டுமென்று. ஆனால், அவர்களில் 'பி' குரூப் தலைமை ஆசிரியர்கள் இதற்கு உடன்பாடாக இல்லை. ஆகவே, மூன்று தரப்பினரும் உட்கார்ந்து ஒரு வாரகாலமானாலும் சரி, ஒரு முடிவுக்கு வந்து எங்களுக்குத் தெரிவித்தால் அரசு நடவடிக்கை எடுக்க ஆயத்தமாக இருக்கிறது என்று சொன்னோம். அதில் ஒருவர் முடிவை மற்றொருவர் ஏற்றுக்கொண்டுவிட்டால் அரசு உத்தரவிட ஆயத்தமாக இருக்கிறது என்று சொன்னோம். அதில் ஒருவர் முடிவை மாத்திரம் அரசு செயல்படுத்துமேயானால் அது மற்றொருவருக்கு கிளர்ச்சிக்கு காரணமாக ஆகிவிடும். ஆகவே சொன்னோம் மூன்று பேரும்



உட்கார்ந்து பேசுங்கள் அதிகாரிகளிடம் பேசுங்கள் பிறகு என்னிடம் வாருங்கள் என்று சொன்னேன்.

அதற்குப் பிறகு முக்கியமான விஷயங்கள் தீர்க்கப்பட்டுவிட்டன என்ற அளவில், போராட்டத்தை ஒத்தி வைக்கிறோம் என்று சொன்னார்கள். இருந்தாலும் வெளியில் ஐந்து பேர்கள் இருக்கிறார்கள், ஆகவே, அவர்களிடம் சம்பிரதாயத்திற்காகச் சொல்லிவிட்டு ஒத்திவைக்கிறோம் என்று எனக்குச் சொன்னார்கள். முதலமைச்சர் அவர்கள் கூட வேடிக்கையாகக் குறிப்பிட்டார்கள். அந்த ஐந்து பேர்களையும் அழைத்து வந்திருக்கக்கூடாதா, ஒருவேளை இடம் அதிகமில்லை என்று விட்டுவிட்டு வந்துவிட்டார்கள் போலும் என்று வேடிக்கையாகக் குறிப்பிட்டார்கள்.

ஆகவே, போராட்டம் கைவிடப்படும் என்றுதான் நாங்கள் எல்லாம் எதிர்பார்த்தோம். பேசிவிட்டுச் சென்ற அவர்களும் மீண்டும் சந்திக்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால், பத்திரிகையில் வெளியிட்டிருக்கிற அறிக்கையின்படி, "அப்படி நாங்கள் சொல்லவில்லை" என்ற அளவுக்குக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைப் பத்திரிகையில் சொல்கின்றபோது, "முதலமைச்சருடன் நடத்திய பேச்சுவார்த்தை பலன் தராததால் மறியல் போராட்டம் திட்டம் இட்டது திட்டப்படி நடக்கும். ஆசிரியர்கள் போராட்டம் நடத்த மாட்டார்கள் என்று அவர்கள் சொன்னதாக முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருப்பது உண்மைக்கு மாறானது" என்று அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். இதைப் பற்றி மேலவையில் குறிப்பிடும்போது, முதலமைச்சர் அவர்களே சொன்னார்கள், திரு. ராஜா ஐயரே இதைப் பற்றிச் சொல்லட்டும் என்று சொன்னார்கள். அப்போது ராஜா ஐயர் எழுந்து சொன்னார்கள், நடந்த விதத்தைப் பற்றி மனசாட்சிப்படி சொல்கிறேன். இந்தப் போராட்டம் ஒத்தி வைக்கப்படும் என்று உறுப்பினர்கள் சொன்னார்கள். இதை எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால், பேச்சுவார்த்தைகள் எப்படி இருந்தாலும், திட்டமிட்டபடி, எப்படியிருந்தாலும், போராட்டத்தை நடத்துவது என்ற முடிவுக்கு ஏற்கனவே அவர்கள் வந்திருக்கிறார்கள் என்ற முடிவுக்குத்தான் நாங்கள் வந்து சேரவேண்டியவர்களாக இருக்கிறோம். அப்படி தமிழிலும் ஆங்கிலத்திலும் அறிக்கைகள் விட்டிருக்கிறார்கள். சர்குலர்கள் அனுப்பியிருக்கிறார்கள். போராட்டம் நடத்த வேண்டும் அதில் மாணவ மாணவியர்களை ஈடுபடுத்தி குழப்ப நிலையை உருவாக்கவேண்டும் என்பது தான் அவர்களுடைய எண்ணம் என்பதைத் தவிர, பிரச்சினை தீர்ந்து, பள்ளிகள் திறந்து, மாணவ மாணவியர்கள் பயன்பெற வேண்டுமென்ற நிலை இல்லை என்ற முடிவுக்கு நாங்கள் வந்து

சேரவேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் ஆங்கிலத்தில் விட்ட அறிக்கையில்,

' We have decided to go on with direct action and picketing before the Fort. '

ஆகவே, நாங்கள் மறியல் செய்யத்தான் போகிறோம், அந்த நிலையிலிருந்து மாறுவதாக இல்லை என்ற வகையில் தோட்டிலைகளில் சொல்லியிருக்கிறார்கள்.

' We know that we will be beaten and thrown into jails and subjected to departmental torture. '

எதையும் தாங்கிக்கொள்கின்ற முழு உறுதியோடு அவர்கள் வந்து சேரவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல. இன்னொரு அறிக்கையில் அவர்கள் சொல்கிறார்கள். போராட்டத்திற்கான அத்தனை நிலைகளையும், உருவாக்கிவிட்டுத்தான் வந்திருக்கிறார்கள். கல்வித் துறையினரிடமிருந்து எந்தவிதமான அச்சுறுத்தல்கள் வந்தாலும் அவற்றை துச்சமென மதித்து போராட்டத்தை வெற்றிகரமாக நடத்தவேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். எனவே, அவர்கள் திட்டமிட்டபடி, கைது செய்யப்பட்ட உடனே, பள்ளிகளை மூடியிருக்கிறார்கள். பள்ளிக்கூடங்களுக்கு முன்னால் போஸ்டர்கள் ஒட்டப்பட்டிருக்கின்றன. போஸ்டர்கள் ஆங்காங்கே காணப்படுகின்றன. உறுப்பினர்கள், போராட்டத்தை நிறுத்திவிடுவார்கள் என்று சொல்லிப போனார்கள. காலையிலே தடையுத்தரவை மீறுகிறார்களா, இல்லையா என்பது தெரியாது கைது செய்யப்போகிறார்களா, இல்லையா என்பது தெரியாது. ஆனால் போஸ்டர்கள் ஏற்பாடாக தயாரிக்கப்பட்டு ஒட்டப்பட்டிருக்கின்றன. எனவே, திட்டமிட்டபடி செய்திருக்கிறார்கள் என்ற முடிவுக்குத்தான் வரவேண்டியிருக்கிறது. அவர்கள சொல்லியிருக்கிறார்கள் :—

"எண்ணற்ற இடையூறுகள் ஏற்பட்டாலும் பிரச்சினைகள் தீருகின்ற வரையிலும் பல கட்டங்களில் போராட்டம் தொடர்ந்து நடைபெற வழிமுறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. . . பட்டதாரிகளின் இந்த இயக்கம் மிகக் கடுமையாக தன்னுடைய எதிர்ப்பைக் காட்ட வேண்டும். எத்தனை முறை சிறை சென்றாலும், செந்நீரையும் வெள்நீரையும் சிந்தியாவது வெற்றியடைந்தே தீரும்" என்று சொல்லியிருக்கிறார்கள். எனக்கு ஓரளவுக்கு தமிழ் தெரியும்.



இப்படி, செந்நீரும், வெள்நீரும் என்றெல்லாம் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த சர்க்குலர்கள் எல்லாம் எனக்கு நேரடியாக அனுப்பப்பட்டதல்ல. இன்னும் பலரும் பலருக்கு சர்க்குலர் அனுப்பியிருக்கிறார்கள்.

எனவே, இப்படி திட்டமிட்டு தொல்லை கொடுப்பதற்கு போராட்டத்தை நடத்தியிருக்கிறார்கள். இது அரசுக்குத் தொல்லை கொடுப்பதாக மட்டும் ஆகாது. அரசு எந்தவிதமான தொல்லையையும் தாங்கிக் கொள்ளும். அரசியலிலேயே வளர்ந்த நாங்கள் இந்தப் போராட்டம் மட்டுமல்ல, எந்தப் போராட்டத்தையும் தாங்கிக் கொள்ளும் வலிமையைப் பெற்றிருக்கிறோம். சமாளிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆனால், ஆசிரியர்கள், அரசுக்குத் தொல்லை கொடுப்பதாக நினைத்துக் கொண்டு மக்களுக்குத் தொல்லை கொடுக்கிறார்கள். தாய் எட்டடி பாய்ந்தால், குட்டி பதினாறடி பாயும் என்பது போல இந்த ஆசிரியர்களிடம் பயிலுகிற மாணவர்கள் எவ்வளவு துள்ளுவார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சிந்திக்க வேண்டும் என்பதற்காகத் தான் இதை நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

ஆக, இந்த நிலைமைக்கு வந்ததற்குப் பிறகும் கூட, நாங்கள் எவ்வளவோ எடுத்துக் சொல்லியும் கூட, அதை மீறியே தீரவேண்டுமென்ற கட்டத்திற்கு வந்து எப்படியும் போராட்டத்தை நடத்தவேண்டும், குழப்பத்திற்கு வரவேண்டும் என்று ஏற்பாடு செய்துவிட்டு, மாநில அளவிலே ஈடுபட்டிருக்கிறார்கள். நான் எதிர்க்கட்சியிலே இருக்கி உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்வது, இதை அரசுக்கு ஒரு தொல்லை என்று கருதாமல், வேறு எந்த வகையில் வேண்டுமானாலும் நேரடியாக தொல்லை கொடுக்க திட்டம் தீட்டிக் கொடுங்கள். ஆனால் இதிலே ஆசிரியர்களுக்கு அறிவுரை கூறுங்கள். உங்களுடைய ஆதரவு இருக்கிற வகையிலேதான் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். யார் யாருடைய ஒத்துழைப்பு வேண்டுமென்று அவர்கள் கேட்டிருப்பது,

' All the unions, such as Teachers' Associations, N.G.O. Unions, trade unions, labour organisations. educational students' unions, lawyers, political parties and newspapers '

ஆகிய அத்தனை பேரும் இந்தப் போராட்டங்களுக்கு ஆதரவு தர வேண்டுமென்று 'சர்க்குலர்' விட்டு எல்லோருடைய உதவியையும் கேட்டிருக்கிறார்கள். நாங்கள் எவ்வளவு பரிந்து பேசவேண்டுமோ அவ்வளவு பரிந்து பேசியிருக்

'பே ஸ்கேலை'ப் பொறுத்தமட்டிலே அவர்களிடத்திலே தெளிவாக விளக்கி இது ஒன்று மட்டுமல்ல, வேறு பல துறைகளும் இணைந்திருக்கிற காரணத் தினால் இது பரிசீலிக்க வேண்டிய ஒன்று என்று சொல்லியிருக்கிறோம். பரிசீலிக்க வேண்டிய ஒன்று என்று சொன்னாலே அதை உறுதிமொழியாக எடுத்துக் கொள்ளக் கூடாது. பரிசீலிக்க வேண்டிய ஒன்று என்று நிதி அமைச்சர் அவர்களையும் மற்றவர்களையும் வைத்துக்கொண்டு அதை உறுதிப் படுத்தி இருக்கிறோம். இதற்குப் பிறகு தான் போராட்டத்தைக் கைவிட்டு விடுவோம், சம்பிரதாயத்திற்கு அவர்களுக்குச் சொல்லவேண்டுமென்று சொல் லிவிட்டு, பிறகு இவ்வாறு செய்வது வேண்டுமென்றே செய்கிற ஒன்று. அதற் குப் பிறகு அவர்கள் ஊர்வலம் துவக்கினார்கள், சட்டப்படி அனுமதிக்கப்பட வேண்டிய இடத்தில் அவர்கள் சென்றபொழுது கைது செய்யப்படவில்லை.

ஆனால், இங்கு 41-வது விதி இருக்கிறது. 41-வது விதியை மீறினால், கைது செய்யப்படுவார்கள் என்று தெரிந்து, அவர்கள் மீறியதால், கைது செய்யப் படவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. அந்த முறையில் அவர்கள் தங்களை கைது செய்யவேண்டிய சூழ்நிலையை உண்டாக்கிய பிறகுதான் அந்த நிலை ஏற்பட்டதே தவிர, சட்டத்திற்கு அடங்கியிருக்கிற நிலைமையிலே கைது செய்தோம் என்று அல்ல. சட்டத்தை மீறி தூண்டுகிற பணிகளிலே, அதற் காக ஈடுபடுகிற பணிகளிலே அவர்கள் ஈடுபட்ட தன் காரணமாகத்தான் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். என்னுடைய அறிக்கையிலும் சொல்லியிருக் கிறேன், பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களும் சுற்றறிக்கை அனுப்பி இருக்கி றார்கள். அதற்கு அவர்கள் எது வந்தாலும் துச்சமென மதிக்கிறோம், அவற்றை மீறுவோம் என்று சொல்கிறார்கள்.

அரசாங்கத்தினுடைய ஒழுங்கை, நடவடிக்கையை காப்பாற்ற வேறு வழியில்லாமல் அவர்கள் கைது செய்யப்பட்டு விட்டார்களே தவிர, பேச்சு வார்த்தை மூலம் சுமுகமான சூழ்நிலையைக் கொண்டுவர இதுவரையிலே அரசு முயற்சி எடுத்திருக்கிறது, இப்பொழுதும் எடுக்கிறது. இப்பொழுதும் போராட்டத்தைக் கைவிடவேண்டுமென்று நான் இந்த மன்றத்தின் வாயிலாக நான் குறிப்பிட விரும்புகிறேன். பரீட்சைகள் நடக்கிற நேரம் இது. இப்பொழுது கிளர்ச்சிகள் மூலம் மாணவர்களுடைய எதிர்காலம் எவ்வளவு பாதிப்பு அடையும் என்பதையும் கவனிக்கவேண்டும். பத்திரிகைகளிலே வந்திருக்கிறது, ஒரு பள்ளியிலே கேள்வித்தாள்களை கொடுத்துக் கொண்டிருந்த ஆசிரியர்கள் அப்படியே விட்டுவிட்டு, வெளியே வந்துவிட்டார்கள். பின்னால் மாணவர்களும் வெளியே வந்து விட்டார்கள், ஊர்வலங்கள் நடந்தன, அதிகாரி





கள், போலீசார் போய் பாதுகாப்பு அளிக்க வேண்டிய சூழ்நிலைகள் ஏற்பட்டன என்று பத்திரிகைகளில் வந்திருக்கின்றன. இவைகள் எல்லாம் உள்ளபடியே மறுக்கப்படவேண்டும், கண்டிக்கப்பட வேண்டும்.

சட்டத்தை மீறுகின்ற ஆசிரியர்கள்மீது சட்டப்படி நடவடிக்கை எடுப்போம் என்று சொல்லியும், அதற்கென்று வைத்திருக்கின்ற கோட் ஆப் காண்டக்டை நாங்கள் மதிக்கவும் மாட்டோம், சட்டத்தை மதிக்கவும் மாட்டோம், என்று அவர்கள் சொல்லும்போது சட்டத்தையும் நாம் பிரயோ கிக்கக் கூடாது என்றால் அப்பொழுது மாண்புமிகு உறுப்பினர்கள் ஹாண்டே அவர்களும் மற்றவர்களும் கேட்பார்கள், சட்டம் தூங்குகிறதா? சட்டத்தைப் பிரயோகிக்க வக்கு, வழியில்லாமல் இருக்கிறீர்களா? யார் சட்டத்தை மீறினாலும் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று கேட்பார்கள். சட்டத் திற்குப் புறம்பாகப் போகிறோம் என்று தெரிந்தும் அறிக்கைகள் வந்தாலும் துச்சமென மதிப்போம் என்று போராடுகின்ற ஆசிரியப் பெருமக்களுக்கு நாங்கள் வேண்டுகோள் விடுத்துவிட்டோம். மறுபடியும் பேச்சுவார்த்தை நடத்தி சுமுகமான சூழ்நிலை ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லியிருக் கிறோம். மாண்புமிகு உறுப்பினர்களும் இதிலே ஈடுபடவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். சட்டப்படி நடவடிக்கை தொடர வேண்டுமென்ப தையும், இலாகா மூலமாக எடுக்கவேண்டிய நடவடிக்கைகளும் தவிர்க்க முடியாதவைகள் ஆகிவிட்டன என்பதையும் நான் வருத்தத்தோடு தெரிவித் துக்கொள்கிறேன். அவர்கள் போராட்டங்களை கைவிட்டுவிட்டு, சுமுகமான சூழ்நிலைக்கு வந்து, மாணவர்களுக்கு பாதகம் ஏற்படாமல், பரீட்சை களுக்குப் பாதகம் ஏற்படாமல், எதை எதைச் செய்யக் கூடும் என்று சொன் னேமோ அதைச் செய்ய அரசு ஆயத்தமாக இருக்கிற காரணத்தினால், இந்த அவை நடவடிக்கைகளை ஒத்திவைத்து இதுபற்றி விவாதிக்கத் தேவையில்லை யென்று கருதுகிறேன்.

அடுத்து, பாண்டிச்சேரியைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். துறையினர் தந்த புள்ளிவிவரத்தை நான் தந்தேன். உண்மையான விவரத்தைக் கேட் டிருக்கிறேன். அது வந்ததற்குப் பிறகு இந்த அவைக்கு அறிவிக்கிறேன். இந்த அவையை 'மிஸ்லீட்' பண்ணவேண்டுமென்ற எண்ணத்தோடு நான் அவ்வாறு கூறினேன் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் கருதுவார்களானால் அது தவறு. கொடுக்கிற புள்ளிவிவரங்களை வைத்துச் சொல்கிறோம். அது புதிதாக எடுக்கப்பட்டதா, சில மாதங்களுக்கு முன்பு எடுக்கப்பட்டதா என்று பாண்டிச்சேரி அரசைக் கேட்டிருக்கிறோம். சில மாநிலங்களிடமிருந்து கிடைக்கிறது, சில மாநிலங்களிடமிருந்து கிடைக்கவில்லையென்று எனக்கே

அந்த சந்தேகத்தை எழுதி அனுப்பினார்கள். அந்த ஆசிரியரிடத்திலேயும் கேட்டிருக்கிறேன். அது வந்ததற்குப் பிறகு அறிவிப்பேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் திட்டமிட்டே அவர்கள் போராட்டத்திலே ஈடுபட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். நான் கேட்பதெல்லாம், தெளிவாக ஒரு விளக்கத்தைக் கேட்பதெல்லாம், இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலைக்கு அவர்கள் ஆளாக்கப்பட்டதற்கு அரசாங்கம் தான் காரணம்.

They have become so desperate and they have been pushed back to the wall. I would request the Hon. Minister to clarify whether any interim relief can be given immediately so that a proper situation may be created and they can withdraw the strike.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அன்றைக்கு வந்த ஆசிரியப் பிரதிநிதிகளிடத்தில், மேலவைப் பிரதிநிதிகளிடத்தில், அப்பொழுது நிதித் துறைசெயலாளரும் இருந்தார். கல்வித் துறை செயலாளரும் இருந்தார்—எந்த அளவுக்கு பரிசீலிக்கப்படும் என்று சொன்னோம். அதை ஒப்புக்கொண்டுதான் நாங்கள் போய் போராட்டத்தைக் கைவிடுகிறோம், சம்பிரதாயத்திற்காக கேட்டு விட்டு கை விடுகிறோம் என்று சொன்னார்கள். ஆக, அந்த நிலையில்தான் இருக்கிறது என்று சொன்னார்கள்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவர் அவர்களே, தங்களுடைய அனுமதியின்பேரிலே ஒரு கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். இன்று போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. அரசாங்கத் தரப்பிலே இதை ஒரு 'பிரஸ்டிஜ் இஷ்யூ' வாக நினைக்காமல், அவர்களுடைய பிரதிநிதிகளை உடனடியாக அழைத்துப் பேசுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, 5-ம் தேதி காலையில் ஆசிரியர்களுடைய பிரதிநிதிகள், சங்கத்தினுடைய நிர்வாகிகள் மேலவையிலே ஆசிரியர்களுக்காக வாதாடுகின்றவர்கள் இந்த இரண்டு கோரிக்கைகளையும் அரசு நிறைவேற்றியமைக்காக நன்றி தெரிவித்து அந்த அடிப்படையிலே போராட்டம் கைவிடப்படும் என்கின்ற மகிழ்ச்சியையும் எங்களிடத்திலே தெரிவித்து மாண்புமிகு மேலவை உறுப்பினர்கள் சாமிநாதன், ராஜா ஐயர், கணபதி, சந்தோஷம் ஆகியோர் உட்பட என்னுடைய இல்லத்தில்



நானும் கல்வி அமைச்சரும் கலந்துகொண்டு பேசியபிறகு, அவர்கள் போராட்டத்தை கைவிட்டுவிடுகிறோம், சம்பிரதாயத்திற்காகத்தான் நாங்கள் வெளியிலே இருக்கிற 5, 6 பேரிடத்திலே கலந்து பேசி முடிவு செய்யப் போகிறோம், பிற்பகல் உங்களுக்கு முடிவை அறிவிக்கப் போகிறோம் என்று சொன்னார்கள். அதைத்தான் இந்த அவையிலே கூட மாண்புமிகு சுதந்திராக் கட்சி உறுப்பினர் பேசுகிற நேரத்தில் நான் குறிப்பிட்டேன். கைவிட்டுவிடுவதாகச் சொல்லிவிட்டு சென்றிருக்கிறார்கள், என்ன முடிவெடுக்கப் போகிறார்கள் என்று பிற்பகலிலே தெரிவிக்கப் போவதாகக் கூறி இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு அவர்கள் நாங்கள் கைவிடவில்லையென்று சொன்னாலும் கூட, வெளியிலே 5 பேரை கலந்து பேசினோம், அவர்கள் இன்னும் சில கோரிக்கைகளை வற்புறுத்துகிறார்கள், மீண்டும் அமைச்சரைச் சந்திக்கப்போகிறோம் மேலவை உறுப்பினர்களைச் சந்திக்கப் போகிறோம் என்று சொன்னார்களா என்றால் இல்லை. எங்களிடத்திலே ஒத்துக்கொண்டு போய், 5 பேர் சம்மதிக்காத காரணத்தால் போராட்டத்தைத் தொடரப் போகிறோம் என்று அதையாவது எங்களிடம் மீண்டும் பார்த்து தெரிவித்திருக்கவேண்டும். அவர்கள், போராட்டம் நிறுத்தப்பட்டுவிட்டது என்று சொல்லிவிடப் போகிறோம், மற்றவர்களை சந்தித்து சம்பிரதாயத்திற்காக சொல்லிவிட்டு பிற்பகல் உங்களிடம் முடிவைச் சொல்லப்போகிறோம் என்று சொல்லிவிட்டுப் போனார்கள். போராட்டத்தை தொடர முடிவெடுத்த அவர்கள் அதையும் எங்களிடம் சொல்லாமல் மறுநாள் காலையிலே போராட்டத்தை நடத்தினார்கள். அதற்குப் பின்னாலே எப்படி அவர்களை அழைத்துப் பேசுவது?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைச்சர் அவர்களது நீண்ட விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அவசியம் இல்லையென்று கருதி, இதற்கான அனுமதியை மறுக்கிறேன்.

### 3. 1973-74-ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

DR. H. V. HANDE: Hon. Deputy Speaker, Sir, for the past few days, we have been hearing from the ruling side a lot of encomiums on the Budget and from this side we have been listening to harsh criticisms. As far as I am concerned, I am shocked and I am pained to say that a proper analysis has not been made of this Budget by the Members of the Ruling Party.

[Dr. H. V. Hande] 

I wonder under what circumstances they can compliment this Government—

(1) There is to-day in the State of Tamil Nadu total dissatisfaction among agriculturists.

(2) There is tremendous discontentment in the labour front. Even this morning I have had an opportunity of visiting a number of workers of Messrs. Addison and Company who are on a relay fast. The Hon. Minister for Labour has not taken steps to see that the relay fast is properly looked after. That shows the callousness with which the problem of the workers has been dealt with by the Government.

(3) The problem of elementary, higher elementary, secondary grade and graduate teachers. With regard to their demands a most unsatisfactory reply was given by the Hon. Chief Minister and the Hon. Chief Minister has not solved it.

(4) Again, there is serious power cut and this has completely baffled the electrical engineers, the Electricity Board and the State Government and put a number of people to inconvenience. The Government have not bothered about it.

(5) Then there is the unemployment problem which has assumed fantastic dimensions and nobody seems to be bothered about it.

(6) There is the terrible price-spiral and the State Government has put the blame on the Central Government. But the fact of the matter is that there is remendous spiralling of prices.

(7) Then there is the industrial stagnation, about which nobody is bothered.

(8) There is fantastic and appalling discontentment among the student population. What is the answer given by the ruling party for this discontentment among the students? They do not seem to be bothered about it.

(9) Then there is acute political instability because of the split in the ruling party and have they spoken about it? This instability is due to the break-away of the major chunk of the ruling party and this had led to deterioration in the administration of the State.



 [Dr. H. V. Hande]

(10) Then there is the law and order problem about which no Member of the ruling party has spoken and this has come about as a result of the victimisation of the Members of the Opposition Parties by the police officials. Have the Government done anything about it? These are the ten main points on which I want to highlight and I hope the Hon. Chief Minister would reply to at least some of them as I know he cannot reply to all of them.

Then I come to another matter. I did not know whether I should congratulate the Hon. Chief Minister on presenting the sur-surplus budget but I should give compliments to the department concerned for making the Chief Minister say that the Budget is a surplus one and there is no fresh taxation. I would say that a very ingenious hoax has been played by the distinguished Chief Minister in an intelligent manner on the public.

How? It is my duty to explode the myth of the surplus budget. Heavy doses of taxation have already been introduced during the last year itself. The Hon. Minister for Revenue is smiling and it was only he who had proposed extra levy of sales tax but I have to shed tears for that.

Then, revenue accrued as a result of the scrapping of prohibition during the previous fiscal year was deliberately under-estimated. They had estimated only Rs. 20 crores as revenue on account of the scrapping of prohibition. Now it is more than two or three times that amount.

Then there has been an increase in the share of income-tax from Rs. 37 crores to Rs. 50 crores—an increase of Rs. 13 crores. I welcome it.

Then there has been an increase of Rs. 7½ crores in the Union Excise duties, from Rs. 37 crores to Rs. 44.75 crores. Then there is also increase of Rs. 21 crores in Grant-in-aid from Rs. 33 crores to Rs. 54 crores. Thus there is a total increase of about Rs. 42 crores. Then there is the revenue of Rs. 20 crores on account of the scrapping of prohibition. Thus the increase in the income rose to more than Rs. 60 crores. Thus the revised estimate of receipts went up from Rs. 397 crores to about Rs. 441 crores.

[Dr. H. V. Hande]

Now this year, the Budget Estimate is about Rs. 465 crores, an increase of about Rs. 68 crores. Now I have completely pricked the bubble.

Then I come to the most tragic aspect of the matter for which the whole country is responsible. Everyone has to consider seriously the economic situation in the country. An economic survey report has been presented to the Parliament. What is the point in conducting an Economic Survey? What is the purpose of planning and what is the purpose of framing a budget? The purpose of planning is to generate a substantial increase in the economic growth and resources. In the progressive countries like Japan the increase is 12 per cent but in India in the initial stages it was 5.5 per cent. Now the economic growth is only 2 per cent. We advance 1½ft. but go back two metres and this is exactly what is happening on the economic front. The annual average of wholesale prices in 1972 showed an increase of 7.8 per cent over the year, as against a rise of less than 4 per cent recorded in 1971.

பி.ப. 10-30 " A distinctive feature of price behaviour in 1972, as compared with 1971 was the pronounced increase in the price of food articles. The rise in the prices of foodgrains and sugar and allied products accounted for two thirds of the total price rise in 1972.

The index of industrial production in the first eight months of 1972 shows an increase of 7.4 per cent over the level reached in January to August 1971 and the Survey hopes that for 1972 as a whole, the index may show an increase of 7 per cent As a result of the shortage of power, it is not likely that the hope will be realised and the actual rate of growth will not be more than 6 per cent for 1972–73 and it is likely to be much less for 1973–74."

This is not what I say. This is from Economic Survey for 1973–74.

According to the survey, in spite of unprecendented resource mobilisation effort by way of additional taxation, the budgetary operations of the Central and State Governments for 1971–72 disclosed an over-all budgetary deficit of Rs. 738 crores, the largest ever. It has in my view clearly refrained from trying to estimate the budgetary deficit for 1972–73 and has merely said "that it may turn out to be larger than the budgeted figure of Rs. 252 crores."



 [Dr. H. V. Hande]

Dealing with India's national income, the survey says that it increased by 4.6 per cent in 1970–71 but the rise was only 1.52 per cent in 1971–72 and it is estimated that the rate of increase for 1972–73 should be about the same as in 1971–72.........

THE HON. THIRU P. U. SHANMUGAM: I am afraid Dr. Hande is making a speech here instead of making the speech in Parliament. This is Assembly.

DR. H. V. HANDE: I am trying to educate the Revenue Minister on economics.

* THE HON. THIRU SI. PA. ADITANAR: What the hon. Member says about price rise is found in text-books. It need not be a matter for education for a Minister. Regarding price rise, the Hon. Finance Minister at the Centre has made a statement even yesterday. He says:—

"The price rise was due to heavy deficit financing during war with Pakistan, severe drought in large parts of the country". He has made a statement that price rise was due to deficit financing. They have said that creation of more paper money has been admitted to be the main reason for price rise.

THE HON. THIRU P. U. SHANMUGAM: The hon. Member said that he will teach economics to me. I would like to state that I will be the last person to select such a wrong master.

DR. H. V. HANDE: I have never said that I would teach. I said 'educate'. I know the Hon. Minister for Revenue can never be educated. I know it is a hopeless task but it is my job to go on educating. Let me complete my point. Obviously he did not understand the full meaning of the term. 'Educating' is a sort of English expression which is used. When I say 'educating a person' it means' enlightening that person on a particular point. The Hon. Minister for Co-operation was mentioning what the Central Minister said and how paper money creation had led to price rise. I know that and I have read that statement. What I am trying to say is that in 1971 people voted DMK to power thinking that you would control price increase.

THE HON. THIRU P. U. SHANMUGAM: They voted for Swatantra party also.

DR. H. V. HANDE: We have no opportunity to rule the State or Centre.

THE HON. THIRU P. U. SHANMUGAM: You will never get that opportunity.

DR. H. V. HANDE: I am quite content with the present opportunity that we have, to explain the omissions and commissions. I have the right to point out that the Revenue Minister in spite of his geting an opportunity to rule has failed in his task. It is my opportunity to point out his mistakes so that the Government may be run on proper lines and people properly looked after. I was only quoting from the Economic Survey of 1973-74 and explaining the economic factors. I was only trying to enlighten and not educate.

THE HON. THIRU P. U. SHANMUGAM: I take strong objection, to the hon. Member trying to educate me. I will be the last man to have such a bad master.

DR. H. V. HANDE: I know that. I know I cannot educate that student at all. It is merely an English expression for enlightening a point. I am only trying to enlighten the Hon Minister on a point, on which he is ignorant.

THE HON. THIRU Si. Pa. ADITANAR: On a point of Order, Sir. Insinuating words like 'educating a Minsiter' Minister being ignorant' are being used. Why should Dr. Hande use such strong words? Let us follow what is said in **Kural**".

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று"

You can put it in a mild way.

DR. H. V. HANDE: I would like to give back for my distinguished friend the following kural also

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பாரி லானுங் கெடும்"

It is my prerogative to say that the Hon. Minister is ignorant.

MR. DEPUTY SPEAKER: Dr. Hande, just note the time also.

DR. H. V. HANDE: See all these distractions, Sir. I want some more time and also protection from the Chair against frequent interruptions. Let me continue my point.

Government had not tackled the unemployment problem at all. What is it they have done to industrialise the State? Are the



Government prepared to start new industries? Where is the money to come from? Have the Government the resources? What are the concrete steps taken by this Government to industrialise the State? That is the question I would like to ask.

Now I come to spiralling up of prices. The Hon. Minister may have an answer for this. I am not concerned with the answer. I am concerned with the concrete steps taken by Government to control prices. Let me mention the figures to show how prices have spiralled up from 1967 to 1973.

| | 1967 January | 1973 on date. |
|---|---|---|
| Raw rice 1 measure ... ... ... ... | 1.53 | 2.93 |
| Boiled rice 1 measure ... ... ... | 1.50 | 2.35 |
| Toor Dhall 1 kg. ... ... ... ... | 1.05 | 2.80 |
| Blackgram dhall 1 kg. ... ... ... | 1.60 | 3.00 |
| Bengalgram dhall 1 kg. ... ... ... | 1.14 | 1.80 |
| O.K. oil ... ... ... ... ... | 3.95 | 8.00 |

Gingelly oil was Rs. 4.29 in January 1967, but now it is Rs. 7.50 (Interruption). I am told it is now Rs. 8.25 per kilo. Between the time I got my figures and now there has been perhaps a rise of 75 paise for which also this Government is responsible. In 1967 January, Sugar was Rs. 1.50 and now it is Rs. 3.60. Chillies has risen from Rs. 1.70 in 1967 to Rs. 3.25 now; Tamarind was Rs. 1.83 then and now it is Rs. 2.75; Pepper was Rs. 5.40 in 1967 and now it is Rs. 8.00. Like this, all commodities and essential articles have registered high prices.

My submission is that in 1971 people voted the D.M.K. to power—they voted for both the Centre and the State, that was the political climate then and that might have changed now. That is why I refer to the Central Budget and the economic survey which is for the entire country. I want to highlight this particular point, namely, a few days ago I made a survey of my constituency and I met the people and asked them, 'what is the subject you want me to speak in the Assembly?' and do you know what the people told me? They said 'please talk about one subject and one subject

1973 மார்ச் 7] [Dr. H. V. Hande]

only and that is about prices spiralling '. So, that is the anxiety of the people and they have asked me to speak about it only. Therefore I am referring to it.

You are laughing when I am speaking about spiralling prices; I do not expect this from the ruling party Members. It is appalling to me to see the unconcern of the hon. Member to prices spiralling. I am painted to see this that Members of the ruling party should be laughing at my reference to prices spiral. Why should they not also share my concern? That is a matter of concern for all of us. Please do not laugh atthe spiralling prices (Interruption). That is a different point. I am going to another point.

(Thiru S. Kandappan stood in his seat.)

MR. DEPUTY SPEAKER: Dr. Hande, you please do not provoke other Members.

THIRU R. PONNAPPA NADAR: The hon. Member can face the Chair and speak and not look at the face of Members.

(Thiru Latheef stood in his seat.)

DR. H. V. HANDE: Let me finish.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் மற்றவர்களை விவாதத்** திற்கு இழுக்கிறீர்கள். வேறு எதையாவது நினைத்துக் கொண்டு அவர்கள் சிரிக்கலாம். அவர்கள் சிரிக்கக் கூடாது என்று எப்படிச் சொல்ல முடியும்?

DR. H. V. HANDE: Now, I shall refer to the agricultural front. I find that the Government has not properly undertood the seriousness of the agricultural problem. I will quote only one statistics which I wish to place before the Hon. Chief Minister. The following are the details of the actual expenditure incurred in the first three years of the Fourth Plan and the anticipated expenditure in 1972–73 and the proposed outlay for 1973–74 under agricultural production. In 1969–70 they spen Rs. 759 lakhs; in 1970–71, they have spent Rs. 621 lakhs; in 1971–72 it is Rs. 581 lakhs. There is progressive decrease in the plan outlay on the agricultural front which also the Government does not seem to have properly appreciated.



1973 மார்ச் 7] [Dr. H. V. Hande]

Then I come to another important matter which also is worrying the State a lot, and that is about electricity problem. A number of points have been mentioned on this problem. Right now my fear is this. Unless concrete steps are taken by the Government to solve the problem, nothing worthwhile will happen and the discontentment of the people will increase. We do not have an Electricity Demand also and therefore this is the only opportunity for me to discuss that subject briefly.

I personally feel that in the last three Plans there has been bad planning and that has been accepted by the Central Government and it is also found in the Planning Commission Report that so far as power and power production is concerned, they have not bestowed attention. As for Tamil Nadu, our State, is concerned, the present crisis is mainly due to the failure of the State Government. I charge the State Government that they are directly responsible for the present power crisis and how is it I charge them? The most important thing is this. Even with regard to Thermal Stations, full production has not been achieved in several of our Thermal Stations.

For instance, take the Basin Bridge Power House. What is its total capacity and what is the total quantity that should have been produced there? Has the Hon. Chief Minister found that out? Is the Hon. Chief Minister aware of that? The most unhappy thing that is taking place there is the low percentage of production. I would like to know what steps have been taken to see that this under-production in the Basin Bridge Thermal Station is counteracted. Are they even aware of it? Has that been brought to the notice of the Ministry? Obviously not. For, none of the statements made on the floor of this House both by the Hon. Chief Minister and the Hon. Minister for Electricity made mention about it. So, the Basin Bridge Power House administration is in total chaos. I am even told that a particular officer has been at the Power House for the last 20 years. He was in charge of the Turbines as Assistant Engineer.

During this period 2 persons died due to the 30 M.W. sets condensor doors falling on one foreman by name Mr. Lawrence. He expired on the spot and another man, name not known also died. But again, the same officer had been promoted—I am not bothered about his promotion. But he had been there for the last 15, 20 years. There is so much discontent there.

The installed capacity of the plant up to 1960 was 70 MW. The actual electricity generation was 60 MW. What was the installed capacity? It was 70 MW. But the actual generation was only 60 MW. Out of the installed capacity of 70 MW, they had reached the peak of only 60 MW. What is the present position? Now, the installed capacity is 97.5 MW. So, from 70 MW it has been raised to 97.5 MW. What is the present generation? Normally one would expect the generation to be more than 60 MW. But is it more than 60 MW? It is 30 to 35 MW. This is the main reason for the power cut in the State. I am afraid all these facts are not placed at the disposal of the Hon. Chief Minister. I am not sure if the Hon. Chief Minister is aware of all this.

The average production now, till about three months ago was only 30 to 35 MW as against the installed capacity of 97.5 MW. And what steps have the Government taken to see that this particular thing is set right? In the Basin Bridge Power House there is so much chaos. Another instance. The vehicles belonging to this power house are mis-used. Vehicle No. TMC 7428 has been used for private purpose; again MDE 5313—a jeep—has been put to private use; MDE 8230—a jeep—was put to private use; MDY 1873 a Ford Van and MSL 4670 a Benz Lorry and also MDY 6697 a Bedford Lorry have been used for private purposes.

There are many such instances and if the Minister wants I can furnish him all the details. I have got them right now with me, and I will place them at his disposal. That is the position with regard to Basin Bridge Power House.

What is the installed capacity of Ennore? What is the production? For the last one year, what is the installed capacity and what is the production there? My own information is that it is not even 60 per cent, that is production is not even 60 per cent of installed capacity. Production has gone down so much. Similarly, if we take the other schemes also, the installed capacity is one thing, that is only on paper and the real production is quite low. That is the chaotic condition in which the Power Houses are and therefore there is this electricity problem. That is why I want the Hon. Minister to do something about it. What is the remedial measures adopted? We are in a soup.





Another thing also I must caution. In two or three months, the position will become very difficult for the Government unless the problem is tackled properly right now. We have been supplied with State Planning Books. I was shocked to see that information was woefully lacking about planning in regard to power generation for the Fourth Plan. What is the amount spent for power generation? That basic fact is not found in the books supplied to us. Such a total un-concern about planning for electricity is something shocking for me. Something should be immediately done by the Hon. Chief Minister to solve this problem.

This House has been discussing something very useful to the public. But in the last six days, no solution to this problem has ben given. I went to tour some places in Coimbatore District. There the people had only a tale of woe to relate to me; the ryots there did not know that a power crisis was round the corner. I want to know why it was not informed to them. Was it not the duty of the Government and the department to tell the ryots and farmers sufficiently early? ' Look here, the power crisis is round the corner; you make some alternate arrangements and take steps to step up food production '.

How can they produce without water? How can they get water without the working of the pumpsets due to the non-availability of electricity. It is stated that electricity is supplied for 4 or 6 hours. Actually they do not get it even for 1½ hours. I had gone personally to some places like Gobichettipalayam and enquired the farmers about it. They stated that it was a myth to say that electricity was supplied for 4 hours. There is a total lack of communication between the Hon. Chief Minister and the Hon. Minister for Electricity and between the Hon. Minister for Electricity and the Chairman of the Electricity Board and between the Hon. Minister for Electricity and the department concerned and consequently the farmers do not know what the Government are going to do to meet the situation.

In this connection I want to inform the House that a large number of pumpsets have been burnt out because of low voltage and who is responsible for that. It is only the Government.

Also, if they had been sufficiently warned earlier about the power crisis, they would have purchased oil engines. Now even the oil engines have not been supplied to them. The Government

should solve this problem on a war footing. I ask the plain question is it not the duty of the Hon. Chief Minister to make arrangements for the supply of oil engines? Now they are helpless and they are rushing to Bombay, Gujarat, Mysore, etc. to purchase them. They are sold at black market prices. Cannot the Government take steps to see that oil engines are supplied at a subsidised rate? Is it not their duty to do so?

Also uniform supply of electricity for household consumption should be given between 6 and 10 p.m., irrespective of towns and villages. Now in a number of places there is frequent failure of electricity. Only minimum supply of electricity is given for pumpsets, houses and industries. They get only one-fourth of the regular supply and they do not know when it would be supplied but at the same time they have to pay the minimum charge. Why should they pay it? Minimum electricity charge should be abolished.

Then the loss incurred by the agriculturists due to power cut should be compensated by the Government by taking into consideration the damage done to the pumpsets due to deteriorating low voltage.

The Government should write off land tax, surcharge and agricultural income-tax for the current year and the collection of the agricultural income tax for the last year should be postponed.

Also the collection of loans by Co-operative Banks and nationalised banks should be postponed for five years.

Diesel pumps should be supplied at subsidised rate. Also one bag of cement should be supplied. If there is no cement, there will be difficulty in fixing the pumps. Nobody bothers about this problem. It is the duty of the Government to supply one bag of cement to the agriculturists. Otherwise, the agriculturists cannot fix the pumps. I hope the Government will look into this aspect of the matter. Also if they are not supplied diesel pumps at subsidised rate, the crops would completely wither away.

The members of the Agriculturists Association also want representation in the Committee which the Hon. Minister for Industries has constituted with the labour leaders, etc. I want to refer to one other mater. Today is the last day of the discussion on the



Budget. So, is it not the duty of the Hon. Chief Minister to see that the Leader of the Communist Party is allowed to participate in this debate? Is it not the duty of any Government which believes in democracy to do so? Why should he be given conditional bail and why should he be humiliated?

THE HON. THIRU S. MADHAVAN : We do not have any power to give any bail. We do not impose any conditions.

DR. H. V. HANDE : Where you want to use your power, you say that you have power and where you do not want to use it, you say you have no power. You can handle the situation as you like and I know it. It is easily possible to allow the hon. Member to participate in to-day's debate . . . . .

THIRU M. A. LATHEEF : Sir, the observation of Dr. Hande directly implies that the Government have got powers to influence the judicial officers. This sort of observation is something which is likely to degrade respectability, status, the impartiality and the purity of the judiciary. So I take strong objection to the observation made by Dr. Hande and I request the Chair to expunge those words.

DR. H. V. HANDE : What is the use of expunging . . .

MR. DEPUTY SPEAKER : He has got the right to request the Chair to expunge some words. The Hon. Minister for Law has given a very good explanation.

THIRU R. PONNAPPA NADAR : Sir, may I be permitted to say one thing? So far as the bail is concerned, it may be argued that it is a discretionary matter. But the Public Prosecutors are empowered to say that he may be released on bail. Public Prosecutors are under the Government and that is the reason why the hon. Member had asked whether this Government will be gracious enough to allow another hon. Member and the Leader of a Party to participate in the debate on the Budget. So, there is nothing wrong and there is no insinuation against the judiciary.

MR. DEPUTY SPEAKER : I may inform the House that I have received information from the court that Thiru K. T. K. Thangamani has not been forbidden to speak in the House or stay in Madras. . . .

THIRUMATHI T. N. ANANDANAYAKI : It is a conditional bail . . . .

MR. DEPUTY SPEAKER : He has not been prohibited . . .

DR. H. V. HANDE : I am sorry that the hon. Member, Thiru Latheef, has stated that I am trying to cast aspersion on the judiciary. I have not cast any aspersion on the judges and in fact I want them to administer justice without any political interference and I have reiterated it again and again. I am in the least concerned about the legal quibblings. I am only concerned about the moral aspect of the matter but the hon. Member has stated that I wanted to cast aspersion on the judiciary.

THIRU M. A. LATHEEF : Sir, on a point of order . . .

DR. H. V. HANDE : Sir, am I going to be allowed to speak?

MR. DEPUTY SPEAKER : He wants to raise a point of order. Let him raise it . . . .

THIRU M. A. LATHEEF : Sir, as an advocate I feel that no aspersion should be cast on the judiciary.

With regard to the observation made by the Leader of the Congress (O) Party that the Public Prosecutor could have been instructed to move the court to give bail to the hon. Member, Thiru Thangamani, even if he makes such a plea, it lies within the discretionary power of the judge to allow it or not. So that argument also cannot be upheld.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஹாண்டே அவர்களின் குற்றச்சாட்டெல்லாம் சட்டமன்ற உறுப்பினர் தங்கமணி அவர்கள் இந்த மன்றத்தில் வந்து வாதாடுவதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்யாமல் தடுத்துவிட்டார்கள், அதுதான் அவர்கள் குற்றச்சாட்டு சுற்றிச்சுற்றி வந்தால். நான் தெரிந்து கொண்ட வரையில் நீதிமன்றம் போட்டிருக்கிற உத்தரவு சென்னையில் இருக்க வேண்டுமென்றுதான் அவர்கள் போட்டிருக்கிறார்கள். ஆகவே அவர்கள் குற்றச்சாட்டுக்கு இடமில்லை என்றுதான் சொல்கிறேன்.

DR. H. V. HANDE : Sir, I want protection from the Chair. Whenever the hon. Member (Thiru Latheef) raises a point of order, he raises it when I have not even completed the sentence. This is another point of order I wish to raise now.. . ,



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தவறாகப் புரிந்து கொள்ளாமல் இருந்தால் நல்லது. (குறுக்கீடு.) மு. 11. 11-00

டாக்டர் எச். வி. ஹாண்டே : பேசக்கூடாது என்று சொல்கிறீர்களா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேசக்கூடாது என்று நான் சொல்லவில்லை. Suddenly you jump to conclusions.

DR. H. V. HANDE : In evey two minutes, I am cut. இரண்டு நிமிடம் பேசுகிறேன். அதற்குள் அவர்கள் எழுந்து விடுகிறார்கள், இவர்கள் எழுந்து விடுகிறார்கள், நான் என்ன செய்வது ? ஒரு இரண்டு நிமிடம் கூட பேச முடியவில்லையென்றால் எப்படி ? There is a limit for this. It is high-time this sort of thing is put an end to. I have become sick of this.

(Thiru M. A. Latheef rose )

THIRU R. PONNAPPA NADAR : From whichever quarter this emanates, it should be put an end to.

திரு. கே. கந்தசாமி : பாயின்ட் ஆப் ஆர்டர் சார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உட்காருங்கள். என்னுடைய பாயிண்டைக் கேளுங்கள். டாக்டர் ஹாண்டே அவர்களுக்கு நான் யோசனையாகச் சொல்கிறேன். ஆலோசனையாக, அட்வைஸ் என்று எடுத்துகொள்ளா தீர்கள். கூடியவரைக்கும் உறுப்பினர்கள் பேசுகிறபோது மற்றவர்களை விவாதத்திற்கு இழுக்காமல் இருந்தால் நல்லது.

டாக்டர் எச். வி. ஹாண்டே : அவர்கள் தான் அனாவசியமாக எழுந்து விடுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களைக் கைது செய்தது பற்றிப் பேசினார்கள். நீதிபதி அவர்கள் சில அன்டர்டேக்கிங் பேரில் ஜாமீனில் விடுவிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அது ஒரு சம்பிரதாயம், நீங்கள் ஏன் அரசாங்கம் விடவில்லை என்று கேட்டீர்கள், சட்ட அமைச்சர் அதற்கு விளக்கம் தந்து விட்டார்கள். அதற்கு மேலும் நீதிபதிகளைக் குறித்துப் பேசுவது பொதுமக்கள் மத்தியில் ஒரு சந்தேகத்தை விளைவிக்கக்கூடும். கூடியவரைக்கும் அந்தப் பாயின்டை விட்டு விட்டுப் பேசினால் நல்லது.

திரு. க. சுப்பு: மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், அங்கே கே.டி.கே. தங்கமணி அவர்களுக்கு கோர்ட் தடைபோட்டு இருக்கிறது என்று. ஆனால் மாண்புமிகு பொன்னப்பநாடார் அவர்கள் சொன்னது எல்லாம் பப்ளிக் பிராசிகியூட்டர் சொல்லியிருக்கலாம், அதாவது பப்ளிக் பிராசிகியூட்டர் ஆட்சேபணையில்லை என்று சொல்லவில்லை. அரசாங்கச் சார்பில் அப்படிச் சொல்லியிருப்பதாகத் தெரிகிறது. சென்னையில் இருக்கவேண்டுமென்று கோர்ட் விதித்து இருக்கிறது. இது அரசாங்கம் சொன்னதன் பேரில் விதிக்கப்பட்டது என்று சொல்வதில் என்ன தவறு? அதை ரிலீஸ் செய்வது சட்ட அமைச்சர் தானே தவிர வேறு யாரும் இல்லை.

DR. H. V. HANDE: I want at least five minutes of uninterrupted time. This has been going on since a long time. I start to speak. A point of order is raised. Because it is a point of order, it is allowed. After it is disposed of, I again start speaking. Then again another point of order is raised, when I am half way through. When the hon. Member Thiru M. A. Latheef talks. I do not bother about it and I never raise point of order at all. But while I am speaking, as a conspiracy. the interruption comes. (Thiru M. A. Latheef rose).

I want protection from the Chair. See, now I am going to be interrupted. Can we not start doing the same thing? The Hon. Chief Minister is going to reply. I can go on raising point of order every three minutes of his speech. It is possible. If this sort of thing is allowed in my speech, we can start hitting back. All the while we have been tolerating. But there is a limit for our tolerance

THIRU M. A. LATHEEF: He has no business to accuse us that we are disturbing.

THIRU K. SUPPU: We can also interrupt.

DR. H. V. HANDE: What I am saying is, I should be allowed to speak uninterruptedly.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவரவர்களே, டாக்டர் ஹாண்டே அவர்கள் மற்றவர்கள் மனதைப் புண்படுத்தாமல் பேசவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



டாக்டர் எச். வி. ஹாண்டே: அந்த நெறியை அமைச்சர் அவர்களும் கடைப்பிடிக்க வேண்டும். மற்ற அங்கத்தினர்களும் கடை பிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். I now come to the subject proper. My point is not with regard to judiciary or magistracy. I am going one stage earlier. When the Assembly is in session, why should a Member of the House be arrested for a crime he is supposed to have committed some time ago? That is my submission. In fact the hon. Member Thiru K. T. K. Thangamani had written a letter to me. I want to read only some portion which says:

"I was arrested by the Madras Criminal Investigation Department Police at 13-40 on 27th soon after I left you and directed by the D. C. to S. M. (Judicial), Tiruvadanai who remanded me to Central Jail, Madurai on 28th till 14/3 for an alleged objectionable speech made at R. S. Mangalam on 26th January 1973. The Indian Penal Code sections are 117 and 302 (inciting 10 or more people).

I would like to stress one point very clearly. The members of the Assembly want to participate in the discussion here not according to the terms of the Minister for Law and Industries. As members we have our own self-respect. Nobody can ask us to lose our self-respect. We may differ from one another ideologically. But as Members we have a right to come and argue in this House as full-fledged Members. That right has been hurt in the case of Thiru K. T. K. Thangamani because he has been arrested for an alleged offence because of his speech on 26th January. I want to have a categorical assurance from the Hon. Chief Minister that such things will not take place and that all members will be given the full right to come and discuss on the floor of the House and participate in the discussion as full-fledged members.

Lastly let me ask whether this Government have done anything to industrialise the State. There is serious law and order problem and unemployment has assumed alarming proportions. All these problems have not been properly tackled. There is total anarchy and the budget is one that should be rejected. For the reasons I had already mentioned, I say that Budget should be summarily and totally rejected. Thank you.

THIRU M. A. LATHEEF: On a point of clarification, Sir.

THIRU K. M. SUBRAMANIAM : What is all these interruptions every now and then?

(பல உறுப்பினர்கள் இருக்கையில் இருந்து கொண்டே பேசிக் கொண்டிருந்தார்கள்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் பல பேரை இங்கே கவனித்துக்கொண்டு வருகிறேன். சில உறுப்பினர்கள்—அவர்கள் பெயரை நான் இப்போது சொல்ல விரும்பவில்லை—உட்கார்ந்து கொண்டே சத்தம் போட்டுப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப் பேசுவது சரியல்ல.

(திரு. எஸ். வடிவேல் : எழுந்து நின்று பேச முடியாது)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. வடிவேல் உங்களைத்தான்—பெயரைச் சொல்ல வேண்டாம் என்று நினைத்தேன். இடத்தில் உட்கார்ந்து கொண்டே இவ்வளவு உரக்கப்பேசக்கூடாது.

(திரு. எஸ். வடிவேல் : வேறு என்ன வழி இருக்கிறது.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்களுக்கு முன்னால் ஒலி பெருக்கி இருக்கிறது. திரு. வடிவேல், தயவுசெய்து பேசாமல் இருங்கள் திரு. சுப்பு அவர்களுக்கும் சொல்லிக்கொள்கிறேன். இப்படி உட்கார்ந்த இடத்திலிருந்தே எல்லோரும் பேசினால் என்ன செய்வது ?

திரு. க. சுப்பு : எல்லோரும் ஒரே நேரத்தில் எழுந்து நின்று பேசுகிறார்களே, அப்பொது என்ன சொல்கிறீர்கள் ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கூடியவரைக்கும் நீங்கள் பேசுகிறீர்கள் என்றால், பாயின்ட் ஆப் ஆர்டர் என்று யார் எழுந்தாலும் அவர்களை அனுமதிக்கிறேன். அதற்கு இடையில் ஒருவர் எழுந்து நின்றால் என்ன செய்வது? திரு. லத்தீப் அவர்கள் பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன் கேட்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு இப்போது நேரம் இல்லை. கட்சித் தலைவர்கள் பேச வேண்டியிருக்கிறது.

* திரு. ஏ. ஆர். பெருமாள் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, சமதர்ம சமுதாயத்தை நோக்கி 4½ கோடி தமிழ் மக்களை அழைத்துச் செல்கிற 1973-74 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை வரவேற்று என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.



எனக்கு முன்னால் பேசிய டாக்டர் ஹாண்டே அவர்கள், கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் கே.டி.கே. தங்கமணி அவர்கள் இந்த மன்றத்திற்கு வந்து தன்னுடைய கடமையை செய்யவிடாமல் இந்த அரசு தடுத்துவிட்டது என்பதைப்பற்றி விரிவாகப் பேசினார்கள். நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். கம்யூனிஸ்டுத் தலைவர் அவர்களை சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் அந்தப் பொது நோக்கத்தோடு ஆதரித்துப் பேசியதை நான் பாராட்டுகிறேன். ஆனால், அதே நேரத்தில் சட்டத்தின் மூலம் தடுக்கப்பட்டிருக்கிறார் என்று குற்றம் சாட்டும்பொழுது, டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒன்றையும் சிந்திக்க வேண்டும். இந்த மன்றத்தில் அண்ணா தி.மு.க. தலைவர் அவர்கள் இருக்கிறார்கள். ஆனால் அண்ணா தி. மு. க. தலைவர் அவர்கள் ஒரு மாநிலத்தினுடைய நிதிநிலை அறிக்கை இந்த மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறபொழுது அதிலே தொடர்பான கருத்தைச் சொல்ல இங்கே வரவில்லை. திரு. கே.டி.கே. தங்கமணி அவர்களை கடமையாற்றவிடாமல் தடுத்துவிட்டது இந்த அரசு என்று யோசித்துப் பேசுகின்ற டாக்டர் ஹாண்டே அவர்கள் அவருடைய மிக நண்பரான அண்ணா தி.மு.க. தலைவர் அவர்கள் இங்கே கடமையாற்ற வர வேண்டும் என்று அழைத்திருக்கவேண்டும் . . . .

THIRU K. KANDASAMY : On a point of order, Sir. When Dr. Hande has got the right to talk about the hon. Member, Thiru K. T. K. Thangamani, I do feel . . . .

MR. DEPUTY SPEAKER : No point of order in that. நீங்கள் உட்காருங்கள்.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, on a point of order. It is not the right of any Assembly member to say that such and such a member has not come to the House; any member can be absent. His party is represented and all policies of the party have been spoken here by other members of the party. There is no need to drag unnecessarily members who are not here and who cannot oppose or answer the points raised against them.

MR. DEPUTY SPEAKER : That is not a point of order. He has not cast any aspersions against that member; he is just mentioning about the member. உட்காருங்கள்

திரு. ஏ. ஆர். பெருமாள் : நான் குறிப்பிட்டது என்னவென்றால் டாக்டர் ஹாண்டே அவர்கள் கம்யூனிஸ்டுத் கட்சித் தலைவர் திரு. கே. டி. கே. தங்கமணி

இந்த மன்றத்திற்கு வந்து கடைமையாற்ற முடியாமல் இந்த அரசினால் தடுக்கப்பட்டுவிட்டார் என்று சொன்னார்கள். அதே நேரத்தில் கம்யூனிஸ்டு கட்சியின் மற்ற சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே வந்துதான் இருக்கிறார்கள். கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் சட்டமன்றத்தில் வந்து தன்னுடைய கடமையை ஆற்ற முடியாமல் இந்த அரசு தடுத்துவிட்டது என்று குற்றம் சாட்டிய ஹாண்டே அவர்கள், அவருடைய நண்பரான அண்ணா தி.மு.க. தலைவர் அவர்கள் இந்த மன்றத்திற்கு வந்து கடமையாற்றாமல் இருக்கிறார்களே அது சரிதானா? அதை ஏன் அவர் சொல்லக்கூடாது? நாங்கள் எல்லாம் இல்லையா என்று அவர்கள் கேட்கிறார்கள். நான் சொன்னது அவர்களைப்பற்றி இல்லை. அவர்களைப்போல இங்கே கம்யூனிஸ்டு கட்சி எம். எல். ஏ க்களும் இருக்கிறார்கள். கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் அவர்கள் இங்கே வந்து கடமையாற்றமுடியாமல் தடுக்கப்பட்டு விட்டதாக அவர் குறிப்பிட்டார். அண்ணா தி. மு.க. வின் தலைவர் அவர்கள் இங்கே வந்து ஏன் கடமையாற்றவில்லை, அவர் ஏன் வரவில்லை? அதை டாக்டர் ஹாண்டே அவர்கள் ஏன் சொல்லக்கூடாது? இந்த நிதிநிலை அறிக்கையில் 1973-74-ம் ஆண்டுக்கான தமிழ் மக்களுக்குச் செய்ய வேண்டிய காரியங்களை இந்த அரசு சமர்ப்பித்திருக்கிறது. இதிலே குற்றம் இருக்கிறதா, குறை இருக்கிறதா, ஏற்றம் இருக்கிறதா, இறக்கம் இருக்கிறதா என்று எடுத்துப் பேசவேண்டிய பொறுப்பு அண்ணா தி.மு.க. தலைவர் அவர்களுக்கு இருக்கிறது. அவர் ஒரு புதிய இயக்கத்தை தோற்றுவித்தவர். எனவே, அவர் ஏன் வரவில்லை என்று தான் கேட்டேன். கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் அவர்களை இங்கே கடமையாற்றவிடாமல் தடுத்துவிட்டது இந்த அரசு என்று குறிப்பிட்டவர், கடமையாற்றக்கூடியவர் கடமையாற்றாமல் இருக்கிறாரே என்று பேச வேண்டாமா என்பதைத் தான் நான் எடுத்துக்காட்டினேன்.

அடுத்தபடியாக, இந்த நிதி நிலை அறிக்கையில் புதிய வரிகள் போடாமல் உபரி பட்ஜெட்டாக' தயாரிக்கப்பட்டிருக்கிறது. புதிய வரிகள் போடாமல் உபரி பட்ஜெட் தயாரிப்பது என்பது ஒரு சாதாரணமான காரியம் அல்ல. அதிகப்படியான வரிகள் போடப்பட்டு, துண்டு விழுகின்ற பட்ஜெட் தயாரிக்கப்படுகிறது. அதற்குப் பாராட்டுகள் எல்லாம் கிடைக்கின்றன. ஆனால், இவ்வளவு சிரமப்பட்டு, சமதர்ம நோக்கங்களுக்கும், லட்சியங்களுக்கும் புறம்பில்லாத வகையில், சமதர்ம சமுதாயத்துக்கு அழைத்துச் செல்கின்ற ஒரு நிதிநிலை அறிக்கையை தயாரித்தற்கு ஏதாவது பாராட்டு உண்டா? திரு. வடிவேல் அவர்கள் சட்டமன்றத்தில் பேசும்பொழுது ஒரு நாள் குறிப்பிட்டார்கள். "பனைமரத்தின் உச்சியிலிருந்து கீழே விழுந்து இறந்துபட்டவர்களுக்கு ரூ. 1,000 நஷ்டஈடு தரப்படுகிறது. அதைப்போல மீன்பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கும் மீனவர்கள் இறந்துபட்டால் ரூ. 1,000 நஷ்ட ஈடு வழங்கப்படுகிறது. ஆனால் அதே நேரத்தில் விவசாயத் தொழிலாளர்கள் பூச்சி மருந்து



அடிக்கும்போதும் அல்லது வேறு பல காரணங்களாலும் இறந்துபட்டால் அவர்களுக்கு இப்படிப்பட்ட நஷ்டஈடு கிடையாது, அது நியாயம் தானா, அம்மாதிரி நஷ்ட ஈடு கொடுக்கக்கூடிய அளவுக்கு நீங்கள் செய்வீர்களா, நீங்கள் அம்மாதிரி அவர்களுக்கு நஷ்டஈடு கொடுப்பதற்கு தயாரா" என்று இந்த மன்றத்தில் கேட்டார். அவர்கள் அப்படிப் பேசிக்கொண்டிருக்கும்பொழுது முதல் அமைச்சர் அவர்கள் எழுந்து பூச்சி மருந்து அடிக்கும் விவசாயத் தொழிலாளர்களுக்கும் அதைப்போல ரூ. 1,000 நஷ்ட ஈடு வழங்கப்படும் என்று சொன்னார்கள். இந்த ஒரு சம்பவத்தை மாத்திரம் அவர்கள் சிந்தித்துப் பார்க்கும்படி கேட்டுக்கொள்கிறேன். முன்னால் 20 ஆண்டு காலத்திற்கு ஒரு அரசு ஆட்சி பீடத்தில் இருந்திருக்கிறது. எதிர்க்கட்சியினர் இதைப்போல மன்றத்தில் ஒரு கோரிக்கையை கொடுத்து, அந்த கோரிக்கையை உடனே நிறைவேற்றும் அளவுக்கு மன்றத்திலேயே அறிக்கை விடக்கூடிய ஒரு முதல்வரை நீங்களும் சந்தித்திருக்க முடியுமா? நாங்களும் சந்தித்திருக்க முடியாது. எதிர்க்கட்சியினராக இருந்தாலும், அவர்கள் சொல்லுகின்ற திட்டம் உண்மையிலேயே ஏழை எளிய மக்களுக்கு ஏற்றம் தரக்கூடிய திட்டமாக இருந்தால், அதை ஏற்றுக் கொண்டு செயல்படுத்துகின்ற ஒரு அரசு இந்த அரசு தான். மக்களுடைய எண்ணத்தில் என்னவெல்லாம் உதிக்கின்றனவோ, மக்களுடைய எண்ணத்தில் என்னென்ன நல்ல கருத்துக்கள் தோன்றுகின்றனவோ மக்கள் என்றால் சமுதாயத்திலுள்ள சாதாரண மக்கள், ஏழை மக்கள், எளிய மக்கள், பாட்டாளி மக்கள், விவசாய மக்கள் இவர்களைத்தான் நான் குறிப்பிடுகிறேன். பெரிய முதலாளிகள், நிலச் சொந்தக்காரர்கள், மோட்டார் மன்னர்கள், ஆலை அரசுகள், மிட்டா மிராசுதார்கள், இவர்களையெல்லாம் நான் மக்கள் என்று குறிப்பிடவில்லை, தமிழ் சமுதாயத்தில் ஏழை எளிய மக்கள், பெரும்பகுதி மக்கள் உள்ளத்தில் எந்தக் கருத்துக்கள் உதிக்கின்றனவோ, அந்தக் கருத்துக்களை பிரதிபலிக்கத்தக்க வகையில் இந்த நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது.

புதுக்கோட்டை தனி மாவட்டமாக ஆக்கப்பட்டிருக்கிறது. இது நீண்ட நெடுங்கால கோரிக்கை, மக்கள் உள்ளத்தில் இருந்து வந்த ஒரு கருத்து. அந்தக் மக்கள் எப்பொழுதும் எதிர்பார்த்துக்கொண்டிருந்த ஒரு கருத்து. அந்தக் கருத்தை அடிப்படையாக வைத்து புதுக்கோட்டை தனி மாவட்டமாக ஆக்கப் பட்டது. அதற்குப் பாராட்டு உண்டா? தனியார் மின்சார நிறுவனங்களை நாட்டுடைமையாக்கப்படுகிற திட்டம் அறிவிக்கப்பட்டதே, அதற்குப் பாராட்டு உண்டா? மேட்டூர் அலுமினியத் தொழிற்சாலையை நாட்டுடைமை யாக்குகின்ற திட்டம் வந்ததே, அதற்குப் பாராட்டு உண்டா? இல்லை. உழு பவனுக்கே நிலம் சொந்தம் என்ற திட்டம் அறிவிக்கப்பட்டதே, அதற்குப்

பாராட்டு உண்டா? இல்லை. எத்தனை நல்ல காரியங்கள் செய்தாலும், அதைப் பாராட்டாமல் எங்கே ஓட்டை இருக்கிறது என்று தேடிப் பார்த்து அதைப்பற்றிக் குறை கூறுகிறார்கள். இந்த நாட்டு மக்கள் முன்னால் மின்சார வெட்டைப் பற்றி எவ்வளவு பெரிய கூப்பாடு? கண் ஒளி கொடுத்துவிட்டு மின் ஒளியைப் பறித்துவிட்டார்கள், தமிழ் நாடே இருளில் மூழ்கிக்கிடக்கிறது. இப்படியெல்லாம் பிரசாரம் நடைபெறுகிறது. பொறுமையோடு, நல்ல அரசியல் தெளிவோடு சிந்தித்துப் பார்த்தால் இந்த மின்வெட்டுக்குக் காரணம் தமிழக அரசு அல்ல என்பது புலப்படும். இந்த மின்வெட்டுக்குக் காரணம் தமிழக அரசு தான் என்று மேடையில் வேண்டுமானால் பொது மக்கள் முன்னால் பேசலாம். ஆனால், அரசியல் ரீதியாக, நியாயத்தை அடிப்படையாக வைத்து இந்த அரசு தான் மின்வெட்டுக்குக் காரணம் என்று நிரூபிப்பதற்கு எந்த எதிர்க்கட்சித் தலைவராவது தயாராக இருக்கிறாரா? அப்படி நிரூபிக்க முடியாது. முழு பொறுப்பும் இந்த அரசைச் சார்ந்தது அல்ல. நாடு பூராவிலும் ஏற்பட்ட விளைவின் பிரதிபலிப்புத் தான் தமிழ் மாநிலமும் பாதிக்கப்பட்டிருக்கிறது. எந்தப் பிரச்சினையை எடுத்துக்கொண்டாலும், அதிலுள்ள நல்ல காரியங்களை எடுத்துச்சொல்லாமல், எங்கே அதில் விரிசல் ஏற்பட்டிருக்கிறது, எங்கே அதில் கோளாறு ஏற்பட்டிருக்கிறது என்பதை மட்டும் எடுத்துப்பேசுவதில் எதிர்க்கட்சினர் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவைகளையெல்லாம் பெரிது படுத்தி நாட்டு மக்களிடையே பிரசாரம் செய்வதே எதிர்க்கட்சியினரின் வேலையாக இருக்கிறது. அவர்கள் அந்த வேலையில் ஈடுபட்டால் இந்த அரசாங்கத்தை மக்களிடமிருந்து பிரித்துவிடமுடியும் என்று நினைக்கிறார்கள். நிச்சயமாகச் சொல்கிறேன். இப்படிப்பட்ட காரியங்களில் அவர்கள் ஈடுபட்ட காரணத்தினால் தான் படிப்படியாக நாட்டு மக்கள் உண்மையை அறிந்துகொள்ளும் நிலைமைக்கு வந்திருக்கிறார்கள். மூன்று, நான்கு மாதங்களுக்கு முன்பு நாட்டு மக்கள் மத்தியில் இருந்த ஒரு கொந்தளிப்பு, குமுறல் இப்பொழுது கொஞ்சம் கொஞ்சமாக மாறி, எவ்வளவு அரசுக்கு விரோதமாக வேண்டுமென்றே திட்டமிட்டு செயலாற்றினாலும், இந்த அரசின் மீது குற்றம் சாட்டி நாட்டு மக்கள் முன்னால் இந்த அரசை குற்றவாளியாக்கவேண்டும் என்று நினைத்தாலும், அது உண்மை அல்ல என்று நாட்டு மக்கள் கொஞ்சம் கொஞ்சமாக அறிந்துகொண்டு வருகிறார்கள். நமது அரசு மக்களுக்கு முன்னால் எடுத்துவைத்திருக்கின்ற திட்டங்களைப் பார்த்தால், பிற்பட்டோர் நலனுக்கு என்று எடுத்துக்கொண்டாலும் 1973-74-ம் ஆண்டுக்கு அரிசன நலத் துறைக்கு 84 லட்சம் ரூபாய் நீங்கலாக ரூ. 8.16 கோடி பிற்பட்ட இனத்தோருக்கு ரூ. 5.56 கோடி, மத்திய அரசு மாத்திரம் பொறுப்பேற்றிருக்கும் தொகை அரிசன நலனுக்கு மாத்திரம் 59 லட்சம் ரூபாய், பிற்பட்டோர் நலனுக்கு ரூ. 30 லட்சம். இது தான் மத்திய அரசு நமக்கு அளிக்கின்ற மிகப் பெரிய உதவியாகும்.



ஐந்தாண்டுத் திட்டங்களை எடுத்துக்கொண்டால் ஒவ்வொரு ஐந்தாண்டுத் திட்டத்திலும் மத்திய அரசாங்கம் தமிழகத்தை எப்படி புறக்கணித்து வந்திருக்கிறது என்பதை நிதிநிலை அறிக்கையில் தெளிவாகக் காட்டியிருக்கிறார்கள். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் 10.8 சதவிகிதம் தமிழகத்திற்கு ஒதுக்கப்பட்டது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 10.8 சதவிகிதத்திலிருந்து மேலே போகவில்லை. அதற்குப் பதிலாக குறைந்துவிட்டது. 10.8 சதவிகிதத்திலிருந்து 9 சதவிகிதமாக குறைந்துவிட்டது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 9 சதவிகிதத்திலிருந்து 7.4 சதவிகிதமாகக் குறைந்துவிட்டது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் வந்தபோது அது 4.7 சதவிகிதமாகக் குறைந்துவிட்டது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலே 10.8 சதவிகிதத்திலிருந்து மத்திய அரசின் உதவி நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 4.7 சதவிகிதமாக குறைந்திருக்கிறது என்றால் மத்திய அரசு இந்த மாநிலத்தின் மீது எந்த அளவுக்கு அக்கறை கொண்டிருக்கிறது என்பதை மத்திய அரசாங்கத்தை ஆதரிக்கக் கூடியவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். தமிழகத்திலே இருக்கக்கூடியவர்கள் எந்தக் கட்சிக்காரர்களாக இருந்தாலும் அவர்கள் வாழ்கின்ற இடம் தமிழகம் என்பதை மறந்துவிடக் கூடாது. தமிழ்நாட்டு மக்களுக்காக அவர்கள் எல்லாம் பாடுபட வேண்டும். அந்த மக்களின் அனுமதியோடுதான் நாமெல்லாம் இங்கே தேசிய ஒருமைப்பாட்டைக் கட்டிக் காப்பதற்காக அமர்ந்திருக்கிறோம். ஆகவே, மத்திய அரசு எதைச் செய்தாலும் நீங்கள் அதை ஆதரித்து, மாநில அரசு எந்த நல்ல காரியத்தைச் செய்தாலும் நீங்கள் அதை எதிர்த்தே தீருவது என்று இருக்கின்ற காரணத்தால்தான் இங்கே தமிழகத்திலே உங்கள் நிலை கொஞ்சம் கொஞ்சமாக தேய்ந்து கொண்டிருக்கிறது. ஆளும் கட்சி வளர்ந்திருக்கிறது என்பதை எல்லாம் நீங்கள் மறந்துவிடக் கூடாது.

மக்கள் முன்னிலையிலே மந்திரிகள் எல்லாம் போக முடியவில்லை, பேசமுடியவில்லை என்று இங்கே பலர் பேசினார்கள். யார் மக்கள் முன்னால் போகமுடியவில்லை என்பது எங்களுக்கு நன்றாகத் தெரியும். நேற்று மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் இங்கே பேசும்போது, திரு. மொய்தீன் அவர்களிடத்திலே சவால் விட்டிருக்கிறார்கள். திண்டுக்கல் தேர்தலைப் பொறுத்தவரையில் ஹாண்டே அவர்கள் ஆழம் தெரியாமல் காலை விடவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே ஆளும் கட்சியைத் தவிர வேறு யாரும் வெற்றி பெற முடியாது. சவால் விடுவதாக இருந்தால் என்னிடத்திலே விடுங்கள். நீங்கள் எத்தனை சவால் விட்டாலும் நான் ஏற்றுக்கொள்ளத் தயார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே கூட சவால் விடவேண்டியதில்லை. என்னிடமே விடுங்கள். ராஜினாமா செய்துவிட்டு என்னுடன் போட்டியிட

ஹாண்டே தயாரா? நானும் ராஜிநாமா செய்யத் தயார். அல்லது வேறு ஏதாவது செய்யவேண்டுமென்றால் அதற்கும் தயார்தான். ஆகவே, திண்டுக்கல் தேர்தலைப் பொறுத்தவரையில் ஹாண்டே அவர்கள் ஆழம் தெரியாமல் காலை விடவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சமதர்ம சமுதாயத்தை உருவாக்கும் பயணத்திலே நமது மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அந்த வகையில் ஒவ்வொன்றாக நாட்டுடைமையாக்கிக் கொண்டு வருகிறார்கள். மேட்டுக்குடி மக்களால், பெரும் முதலாளிகளால் ஏழை எளிய மக்களை இனி சுரண்டி வாழமுடியாதபடி திட்டங்களைப் போட்டு, தொண்டாற்றி வருகிறார்கள். அதனால்தான் கிளர்ச்சிகளை தூண்டிவிட்டு, இந்த அரசை எப்படியாவது கவிழ்த்துவிட வேண்டுமென்று அவர்கள் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் முயற்சி எந்தக்காலத்திலும் ஈடேறாது என்பதை நான் தெளிவாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக கல்வி. கல்வியை எடுத்துக்கொண்டால், 1966-67-ம் ஆண்டில் இந்த அரசு வருவதற்கு முன்னால் 43.38 கோடி ரூபாய் கல்விக்காகச் செலவிட்டிருக்கிறார்கள். இந்த அரசு வந்தபின்னால், 1973-74-ம் ஆண்டுக்கு கல்விக்காக 97.23 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1966-67-ல் 43.38 கோடி ரூபாயாக இருந்ததை 1973-74-ல் 97.23 கோடி ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள். இப்படி ஒவ்வொரு துறையிலும் புள்ளிவிபரங்களைச் சொல்லிக் கொண்டேபோகலாம். அதற்குப் போதுமான நேரம் இல்லாததால் மேற்கொண்டு புள்ளிவிபரங்களுக்குச் செல்லவில்லை.

இப்போது நடைபெறுகின்ற பட்டதாரி ஆசிரியர்கள் வேலை நிறுத்தத்தைப் பற்றி இங்கே பலர் பேசினார்கள். நான் அரசுக்குத் தெரிவித்துக்கொள்வது இதுதான். எந்த ஒரு வேலை நிறுத்தம், கிளர்ச்சி வந்தாலும், அதிலே இருக்கின்ற நியாயமான கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். நியாயமான கோரிக்கைகளை ஏற்றுக்கொண்ட பின்னாலும் அவர்கள் வேண்டுமென்றே போராட்டங்களில் ஈடுபடுவதாக இருந்தால் அவர்களை அடக்கி ஒடுக்க வேண்டும், கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும். அதிலே அரசாங்கம் தயக்கம் காட்டக்கூடாது. எதற்கெடுத்தாலும் கேரளத்தைப்பற்றி இங்கே பல உறுப்பினர்கள் பேசுவார்கள். சில நாட்களுக்கு முன்னால் அங்கே என்ன நடந்தது? கேரளத்திலே அச்சுதமேனனுக்கு எதிராக அரசாங்கத்திற்கு எதிராக ஆசிரியர்கள் கிளர்ச்சி நடத்தினார்கள். அச்சுதமேனன் கடுமையாக நடவடிக்கை எடுத்து, அவர்களை அடக்கி ஒடுக்கினார். அதற்குப்பின்னால் ஆசிரியர்கள் எல்லாம் சரண்டர் ஆனார்கள். அதேபோல இங்கும் வன்முறைகளில் ஈடுபடுபவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும்.





இன்றைக்கு நாட்டிலே போராட்டங்கள், கிளர்ச்சிகள் நடத்தினால்தான் நமது கோரிக்கைகளை ஏற்றுக்கொள்கிறார்கள் என்ற ஒரு எண்ணம் ஏற்பட்டிருக்கிறது. கேட்க கேட்க வாரி வாரி வழங்குகிறார்கள்; அதனால் கேட்டுக் கொண்டே இருப்போம் என்று நினைக்கிறார்கள். வாரி வாரி வழங்கும் வள்ளல் தன்மையைப் பாராட்டுகிறோம். ஆனால் எதற்கெடுத்தாலும் போராட்டம், ஆர்ப்பாட்டம் போன்றவைகளில் ஈடுபடுவார்களேயானால், அப்படிச் செய்தால் தான் நாம் கேட்டது கிடைக்கும் என்று நினைப்பார்களேயானால், நியாயமான கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டப் பிறகும் மீண்டும் மீண்டும் போராட்டங்களில் ஈடுபடுவார்களேயானால், அவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து, அடக்கி ஒடுக்க வேண்டும்; தயக்கம் காட்டக்கூடாது என்று கேட்டுக்கொண்டு, இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த பட்ஜெட் விவாதத்திலே இறுதியாக எங்கள் கட்சியின் சார்பிலே சில கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முதலிலே இந்த வரவுசெலவு திட்டமானது ஏழை எளிய மக்களை விழுத்துகிற ஒரு திட்டமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆங்கிலத்திலே சொல்வதாக இருந்தால், இதை ஒரு 'கிரிப்பிளிங் பட்ஜெட்' என்று சொல்லலாம். இது எப்படி கிரிப்பிளிங் பட்ஜெட்டாக இருக்கிறது என்பதை தெளிவாக்க, ஒவ்வொன்றாக என்னுடையக் கருத்துக்களைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

நமது முதலமைச்சர் அவர்கள் இன்று ஒரு பட்ஜெட் தயாரித்து நமக்கு தந்திருக்கிறார்கள். அதிலும் உபரி பட்ஜெட்டாக இருக்கிறது என்று பலரும் பாராட்டினார்கள். உபரி பட்ஜெட்டாக இருப்பதினால் இந்த பட்ஜெட்டை வரவேற்க வேண்டுமென்ற நியதி இல்லை என்று நான் ஆரம்பத்திலேயே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஏனைய மாநிலங்களிலே இன்று பல பட்ஜெட்டுகளை எல்லாம் தாக்கல் செய்திருக்கிறார்கள். அதையும் இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

பீகார் மாநிலத்திலே ஒரு பட்ஜெட்டை தாக்கல் செய்திருக்கிறார்கள். அதிலே வரவினம் 355.54 கோடி ரூபாய்; செலவினம் 376.05 கோடி ரூபாய். அதேமாதிரி வங்காளத்திலே ஒரு பட்ஜெட்டை தாக்கல் செய்திருக்கிறார்கள். அதிலே வரவினம் 377.54 கோடி ரூபாய்; செலவினம் 393.03 கோடி ரூபாய் என்று கூறப்பட்டிருக்கிறது. அவைகள் எல்லாம் துண்டு விழுகிற பட்ஜெட்

களாகத்தான் இருக்கின்றன. ஆனால் தமிழ்நாட்டு பட்ஜெட்டிலே உபரி வந்திருக்கிறது. அதனால் இதை பாராட்ட வேண்டும் என்றில்லை. ஏனென்றால் தமிழ்நாட்டிலே போட வேண்டிய வரிகளை எல்லாம் ஆறாண்டு காலத்தில் போட்டு முடித்துவிட்டார்கள். முன்பு காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் வரி போட்டால், இவர்கள் 'ஜனவரி, பேப்வரி," தவிர மற்ற வரிகளை எல்லாம் போட்டு விட்டார்கள்' என்று குற்றஞ்சாட்டினார்கள். ஆனால் இன்றைக்கு வரியே போட முடியாத அளவுக்கு ஏற்கனவே எல்லா வரிகளையும் போட்டுவிட்டார்கள் என்ற குற்றச்சாட்டினை நான் இவர்கள் மீது சாற்றக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு மேலும் ஏன் வரி போடவில்லை என்றால், விற்பனை வரிகள் மூலமும் எக்சைஸ் வரி மூலமும் கணிசமான வருமானம் வந்துகொண்டிருக்கிறது. அதனால் இன்று உபரி பட்ஜெட்டை தயாரிக்கக்கூடிய சக்தி ஏற்பட்டிருக்கிறது. உபரி வந்ததற்கு அதுதான் காரணம். இந்தாண்டு உபரி பட்ஜெட்டாக இருந்தாலும் அடுத்து வரும் ஆண்டுகளில் இந்த நாட்டின் நிலைமை எப்படி இருக்கும் என்பதை ஆராய்ந்துப் பார்க்கவேண்டும். இருள் நிறைந்த நிலையில்தான் இந்த நாடு இருக்கும் என்பதற்கான அறிகுறிகள் இப்போதே தோன்றிவிட்டன. இன்றைக்கு முக்கியமாக இந்த நாட்டிலே பெரும் பிரச்சனையாக இருப்பது மின்சார வெட்டு என்பதை எடுத்துக்காட்ட நான் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். இந்த அரசாங்கம் இந்த மின்சார வெட்டை சரியான முறையில் தீர்ப்பதற்கான கடமையில் இருந்து தவறி விட்டது என்ற குற்றச்சாட்டினை தெரிவிக்க விரும்புகிறேன். ஏனென்றால் முதலமைச்சர் அவர்களுடைய நிதிநிலை அறிக்கையிலே 500 மெகாவாட் மின்சாரம் அதிகமாக உற்பத்தி ஏற்பட்டிருப்பதாக கணித்துச் சொல்லியிருக்கிறார்கள். பசுமைப் புரட்சி ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் உண்மையான நிலைமை என்ன என்பது விவசாய மக்களுக்குத் தெரியும்.

மின்வெட்டு எப்படி படிப்படியாக உயர்ந்து? அதற்கு யார் காரணம்? அதிகாரிகளா அல்லது இந்த அரசாங்கமா? அதிகாரிகளாக இருந்தால் அவர்கள்மேல் ஏன் கடுமையான நடவடிக்கை எடுக்கவில்லை? அதிகாரிகளுக்கு இந்த நிலைமை வரும் என்று தெரிந்திருந்தும் ஏன் அதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரவில்லை? அப்படி கொண்டுவந்தும் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் அது அரசாங்கத்தின் தவறு. இல்லை என்றால் அந்த அதிகாரிகள் மீது என்ன நடவடிக்கைகளை இந்த அரசாங்கம் எடுத்திருக்கிறது என்று கேட்பதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன்.



தலைமை எஞ்ஜினியர் இதற்காக என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார் மு.ப. 11-30
என்பதை மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இந்த விஷயத்தில் புள்ளிவிவரங்களோடு சொல்வார்களா என்பது ஐப்பாட்டிற்குரிய விஷயமாக இருக்கிறது. பல திட்டங்களெல்லாம் தீட்டியிருக்கிறார்கள். அதைப் பற்றி ஒன்று கூற விரும்புகிறேன். அடாமிக் பவர் பிளாண்ட், தெர்மல் பிளாண்ட், ஹைடல் பிளாண்ட் இவையெல்லாம் இருக்கின்றன. இவற்றிற்கெல்லாம் மத்திய அரசாங்கம் அனுமதி வழங்கவில்லை. போதிய உதவி காலாகாலத்தில் அளிக்கவில்லை என்று சொல்லி பொறுப்பை தட்டிக் கழிக்க முடியாது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறவிரும்புகிறேன். கோதையாறு மின்சாரத் திட்டத்தில் ஒரு சிறு கோளாறு ஏற்பட்டதன் காரணத்தால் பல மாதங்களாக அங்கு மின்சார உற்பத்தி செய்யப்படவில்லை. அதன் உற்பத்தி 100 மெகாவாட். ஆனால் நானறிந்த மட்டில் அங்கே, 40 மெகாவாட் உற்பத்தி செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த மெஷினரி பழுது அடைந்ததென்றால், அதை உடனடியாக பழுதுபார்க்க தவறியதன் காரணம், பெரும் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று குற்றம் சாட்ட விரும்புகிறேன்.

இந்த மாதிரி பல திட்டங்கள், பல காரியங்கள் செய்திருக்கிறார்கள். அரசாங்கம் கொடுத்திருக்கிற விவரங்களிலிருந்தே, இன்னும் பல கஷ்டங்கள் வரவிருக்கின்றன என்பது புலப்படுகிறது. இதை நான் கூறக்கடமைப்பட்டிருக்கிறேன். அக்டோபரில் 25 சதவிகிதம் மின்வெட்டு இருந்தது. பிறகு 40 சதவிகிதம். அடுத்தபடியாக, எல்லாத் தொழில் நிறுவனங்களுக்கும் 75 சதவிகிதம் மின்வெட்டு ஏற்பட்டிருக்கிறது. இது தொழில் நிறுவனங்களுக்கு கஷ்டமளிக்கும் என்பதை கவனிக்க வேண்டும். இந்த மின்வெட்டு சிறு தொழில்களை அதிகமாக பாதித்திருக்கிறது என்று குற்றம் சாட்ட விரும்புகிறேன். அடுத்தபடியாக, இந்த மின் வெட்டில் இருக்கின்ற பிரச்சினைகளைப்பற்றி ஆழ்ந்து கவனிக்க வேண்டும். பல மாவட்டங்களிலிருந்து தந்திகள், மனுக்கள், தாராளமாக வந்துகொண்டே இருக்கின்றன. நான்கு மணி நேரம் கரண்டு கொடுப்பதாக உத்தரவு இருக்கிறது. ஆனால் 4 மணி நேரம் ஒழுங்காக போதிய அளவு கொடுக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு பல இடங்களிலிருந்து வந்தவண்ணம் இருக்கிறது. குறிப்பாக, தர்மபுரி, சேலம், கோயம்புத்தூர் மாவட்டங்களிலிருந்து இவை ஏற்பட்டிருக்கின்றன. சிறு தொழில் நடத்துகின்ற நிறுவனங்களுக்கு போதிய அளவு மின்சாரம் கிடைக்கவில்லை. 180 யூனிட்டுக்குக் குறைவாக 'கன்ஸ்யூம்' செய்கிற நபர்களுக்கு நான்கு, இரண்டு என்ற அளவுக்குத் தான் மின்சாரம் கிடைக்கிறது. பதறிக்கொண்டிருக்கிறார்கள், இந்த மாதிரி பதட்ட நிலைமையை அகற்ற அரசு ஆவன செய்ய வேண்டும். சிறு தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் எல்லாம் பிரபுக்கள் அல்ல.

சாதாரண மக்கள் தான். நீங்கள் எல்லாம் சாமானியர்களுக்காக அதிகம் செய்கிற காரணத்தால் இந்த பிரச்னைகளை அனுதாபத்தோடு அணுகி பிரச்னைகளுக்கு முடிவு ஏற்படுத்த வேண்டுமென்பதை கூற விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, மத்திய அரசாங்கம் நமக்கு பல காரியங்களை செய்யத் தவறிவிட்டது என்று கூறுகின்றபோது நாமே பல காரியங்களை செய்யத் தவறியிருக்கிறோம் என்பதை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நிலக்கரியின்மையால் எண்ணூர் பாதிக்கபடவில்லை என்று மாட்சிமை தங்கிய முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஒன்று கூற விரும்புகிறேன். பல துறைகளிலும் உற்பத்தித் திறனைப் பெருக்குவதற்கு என்ன திட்டம் அரசாங்கம் செய்திருக்கிறது. 500 மெகாவாட்டாக பெருக்குவதற்கு திட்டமிட்டு காரியம் செய்திருக்கிறதா என்றால், இல்லை. என்ன காரியம் நடந்திருக்கிறது என்றால் பல இடங்களில் கனெக்ஷன் கொடுத்து இருக்கிறீர்கள். சிறப்பு விழா கொண்டாடியிருக்கிறீர்கள். சிறப்பு விழா முடிந்த உடனே இந்த மாதிரி நிலைமை ஏற்பட்டுவிட்டது. இந்த விஷயத்தில் அரசு திட்டமிட்டு காரியமாற்ற தவறிவிட்டது என்று குற்றம் சாட்ட விரும்புகிறேன். அதற்கு இந்த அரசு தான் முழுப் பொறுப்பு. அதனால்தான் இந்த மின் வெட்டு. அடுத்தபடியாக, சிறு கடை நடத்துகிறவர்களுக்கு எட்டு மணிக்கே கடைகளை மூடி விடவேண்டுமென்று சொல்கிறார்கள். வசதி படைத்தவர்கள் எல்லாம் பிரைவேட் ஜெனரேட்டர்களை வைத்துக்கொண்டு எப்படியாவது காரியங்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் சிறு தொழில் நடத்துகிறவர்கள் தான் அவதிப் படுகிறார்கள். அவர்கள் படும் கஷ்டங்கள் கொஞ்சநஞ்சமல்ல. அவர்களுக்கு தேவையான விதிவிலக்கு கொடுக்க வேண்டுமென்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன.

அடுத்தபடியாக, இந்தத் தூத்துக்குடித் திட்டத்தை உடனடியாக ஏற்படுத்த அரசு தவறிவிட்டது என்று குற்றஞ்சாட்டுகிறேன். தூத்துக்குடியில் இருக்கிற மின் திட்டத்தை உடனடியாக துவங்கி ப்ரொடக்ஷனில் ஈடுபடுத்தியிருந்தால் நிச்சயமாக தமிழகத்தில் இந்தப் பிரச்னைக்கு தீர்வு காணமுடியும் என்று கருதுகிறேன். அதேமாதிரி வேறு பல திட்டங்கள் எல்லாம் தூங்கிக்கொண்டிருக்கின்றன. ஒகேனக்கல் திட்டம் தூங்கிக் கொண்டிருக்கிறது. இதற்குப் பொறுப்பு மத்திய அரசு, மத்திய அரசு ஆனாலும் சரி, மாநில அரசானாலும் சரி, தமிழ்நாட்டு மக்களுக்கு மின்சாரம் தேவை. விவசாயிகளுக்கு மின்சாரம் தேவை. அதை கொடுப்பதற்கு இந்த அரசாங்கம் தவறியது, தயங்கியது என்று மறுமுறையும் குற்றம் சாட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, முக்கியமான பிரச்னை, இந்த நெசவாளர் பிரச்னையாகும். நெசவாளர் பிரச்னையைப் பற்றி இந்த மன்றத்தில் பல தடவை விவாதங்கள்



நடந்ததுண்டு. முன்பு, கைத்தறி நெசவாளர்களுக்கு அதிக ஆக்கமும் ஊக்கமும் கொடுக்கப்பட்டு வந்தது. கைத்தறித் துணிகளை தோளில் சுமந்து கொண்டு விற்றோம் என்று பெருமையோடு சொன்னால் மட்டும் போதாது. இன்றைய தினம் என்ன நிலைமையைப் பார்க்கிறோம் என்றால், நெசவாளர்கள் பசி, பட்டினியாக இருக்கிறார்கள். போராட்டப் பாதையில் சென்று கொண்டிருக்கிறார்கள். சென்ற சில தினங்களாக, சேலத்தில் துர்பாக்கியமான நிகழ்ச்சிகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. அங்கே பதட்ட நிலைமை உருவாகிக்கொண்டு வருகிறது. அவர்கள் எதற்காகப் போராடுகிறார்கள் என்பதைப் பற்றி கவனிக்க வேண்டும். பஞ்சு விலை குறைந்து கொண்டிருந்தபோதிலும் நூலின் விலை உயர்ந்து கொண்டேபோகிற காரணத்தால் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த மன்றத்தில் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். சேலத்திலும், கோயம்புத்தூரிலும், மதுரை, இன்னும் பல பகுதிகளிலும் இந்தப் பிரச்னை இருக்கிறது. இதை எந்த முறையில் அரசாங்கம் அணுகுகின்றது என்பதைப் பற்றி விவரங்களையெல்லாம் பார்க்கிறோம். பட்ஜெட் உரையில், மாட்சிமை தங்கிய முதலமைச்சரவர்கள், வேட்டிகள், புடவைகள், துண்டுகள், ஆகியவற்றையெல்லாம் இந்த ஹேண்ட்லூம் இண்டஸ்ட்ரிக்கே ஒதுக்க வேண்டுமென்ற கருத்துக்களையெல்லாம் கூறியிருக்கிறார்கள். முன்பு ராஜாஜி அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது கொடுத்த திட்டங்கள் தான் இவை. ஒருவேளை டெல்லியில் இவை தூங்கப் போடப்பட்டிருக்கலாம். தமிழ்நாட்டிலும் இத்தகைய திட்டங்கள் தூங்கிக்கொண்டிருக்கின்றன. அதற்குப் பொறுப்பு இந்த அரசாங்கம் தான் என்று குற்றஞ்சாட்ட விரும்புகிறேன். இன்றைக்குக் காலையில் சேலத்திலே பெண்கள் எல்லாம் ஊர்வலமாகச் சென்று மறியல் நடத்தியிருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டேன். ஏன் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்கள் இவ்வளவு வேகமாக இருக்கிறார்கள் என்றால் அவர்களுடைய பிரச்னை மிகப் பெரியது. எனவே, பல அரசியல் கட்சிகள் இதில் ஈடுபட்டிருக்கின்றன. பல அரசியல் கட்சிகளும் இதில் ஈடுபட்டு விட்ட காரணத்தால் ஒருவேளை அரசு தன்னுடைய பொறுப்பை தட்டிக் கழிக்கிறது என்று சொல்லக் கூடும். ஆனால் ஒன்று செல்லிக்கொள்ள விரும்புகிறேன். எல்லா அரசியல் கட்சிகளும் இதில் ஈடுபட்டிருக்கிற காரணத்தால் ஆளுங்கட்சியில் உள்ளவர்கள் அதிகமாகக் காட்ட வேண்டிய பொறுப்பு இருக்கிறது. இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், மக்கள் வாடுகிறார்கள்; வேதனைப் படுகிறார்கள். ஏனென்றால் இது அவர்களுடைய அன்றாடப் பிரச்னை. இதில் அரசாங்கம் பாராமுகமாக இருக்கிறது. அதிலும் இதில் பாதிக்கப்பட்டவர்கள் நெசவாளர்கள்—உங்களை ஆதரிப்பவர்கள்—ஆகவே அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டாமா? என்று தான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதிலே கவுரவப் பிரச்னை ஒன்று

யில்லை. இன்னும் பல கேஸ்கள் போட்டிருக்கிறார்கள். இந்தக் கேஸ்கள் எல்லாம் வாபஸ் வாங்கப்பட வேண்டும். இதை ஒரு தொழில் பிரச்னையாக அணுகி, அரசியல் பிரச்னையாக அணுகாமல், பரிகாரம் காண வேண்டுமென்று மாட்சிமை தங்கிய முதலமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன். இல்லையென்றால், தமிழ் நாட்டில் போராட்டம் வலுவடைந்து பல இடங்களுக்கும் பரவுகின்ற துர்பாக்கியமான நிர்பந்தம் உருவாகும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, இன்னொரு விஷயத்தையும் கூற கடமைப்பட்டிருக்கிறேன். நமது மாநிலத்தில் இருக்கிற ஸ்பின்னிங் மில்களில் எவ்வளவு நூல் உற்பத்தி ஆகிறது என்ற கணக்கையெல்லாம் நமது மாண்புமிகு தொழிலமைச்சர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். ஆனால், ஒன்று கூற விரும்புகிறேன். இவர்கள் 20 ஆயிரம் பேல் நூல் வேண்டுமென்று ஒரு கணக்கு கொடுத்திருக்கிறார்கள். மத்திய அரசாங்க அமைச்சர் அவர்கள் ஏதோ கூறுகிறார்கள். இது என்ன கணக்கு? எல்லா மில்களுக்கும்—மில்கள், கூட்டுறவு மில்கள் ஆகிய எல்லாவற்றையும்—உள்ளடக்கிய கணக்குதானா, அல்லது ஒட்டுமொத்தமாகக் கூறியிருக்கிறார்களா என்பதை விளக்கமாகத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இது சம்பந்தமாக சந்தானம் கமிட்டியினர் அறிக்கை கொடுத்திருக்கிறார்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. அதில் என்ன பரிந்துரைகள் இருக்கின்றன? அரசாங்கம் என்ன உத்தரவுகளைப் பிறப்பிக்க இருக்கிறது என்கிற விவரங்களையும் தெரிவித்தால் நன்றாக இருக்கும். அதுவும் நூல் விலை ஏறிக்கொண்டே போகிற நிலையில், நெசவாளர்களது அவதிகள் பெருகிக் கொண்டே போகிற நிலையில் அரசாங்கம் உடனடியாக இதுபற்றி தக்க கவனம் செலுத்தியாக வேண்டும் என்பதை வற்புறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக நமது நிதி அமைச்சர் அவர்கள் தமது பட்ஜெட் உரையில் மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கத்திற்கு அளித்து வந்த நிதி உதவி படிப்படியாக எப்படிக் குறைந்து வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்திருக்கிறார்கள். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் 10.8% ஆக இருந்தது, இரண்டாவது திட்டத்தில் 9 சதவிகிதமாகக் குறைந்து, மூன்றாவது திட்டத்தில் 7.4 சதவிகிதமாகக் குறைந்து, இப்போது 4.7 சதவிகிதத்துக்குக் குறைந்திருப்பது பற்றிச் சுட்டிக்காட்டி யிருக்கிறார்கள். அதோடு வேறு ஓர் பக்கத்தில்

Taxes collected and shares to Tamil Nadu

என்கிற இடத்தில் கூறியிருக்கிற விவரத்தையும் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். மத்திய அரசாங்கத்திற்கு மொத்தம் கிடைத்த வரி வருமானம் 14 கோடி—1960-61 இல்—நமக்குக் கிடைத்தது



7 கோடி. அதுபோல 1965-66 இல் 22 கோடி கிடைத்ததில் நமக்கு அளித்தது 10 கோடி. 1967-68 இல் அவர்களுக்குக் கிடைத்தது 29 கோடி என்றால் நமக்குக் கொடுத்தது 15 கோடி. 1968-69 இல் அவர்களுக்கு 33 கோடி கிடைத்ததில் நமக்கு 16 கோடி கொடுத்திருக்கிறார்கள். 1969-70 இல் மொத்தம் கிடைத்த 41 கோடியில் நமக்கு 24 கோடி கொடுத்திருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். ஆக மத்திய அரசில் இருந்து நமக்குக் கணிசமான தொகை கிடைத்துக்கொண்டிருக்கிறது. இது போதாது என்று வாதாட வேண்டும் என்பதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. முன்பு வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்பதாக திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் இங்கே பல தடவை பேசியிருப்பது எனக்கு ஞாபகத்தில் இருக்கிறது. இப்படி மத்திய அரசாங்கத்தின் நிதி உதவி நமக்குத் தொடர்ந்து குறைந்துகொண்டே வருகிறது என்றால் ஏன் இன்றைக்கு ஆளும் கட்சியாக உள்ள திராவிட முன்னேற்றக் கழகம் மத்திய அரசாங்கத்தின் மீது தனது போராட்டக் கணையைத் தொடுக்கவில்லை என்று கேட்க விரும்புகிறேன். இதுபற்றிய விளக்கத்தையும் நமது முதல்வர் அவர்கள் இங்கே அளிக்க வேண்டும். இதை ஒரு பிரிவினை மனப்பான்மையோடு நான் பார்க்கவில்லை.

அடுத்தபடியாக இன்னொரு முக்கியமான விஷயத்தை நான் இங்கே கூறியாக வேண்டும். நமது மாநில வருமானம் குறைகிற அளவுக்கு மத்திய சர்க்கார் வருமான வரி விதிப்புச் சட்டத்தைத் திருத்த திட்டமிட்டிருக்கிறார்கள். குறிப்பாக விவசாய வருமானத்தின் மீது வரி விதிப்பையும் கணக்கிட்டுக் கொள்ள இருப்பதாக அறிகிறேன். நமது அரசியல் அமைப்புச் சட்டத்தில்

" Entry 82—Central list—Taxes on Income other than agricultural income "

என்பதாக மத்திய அரசுக்கு வரி விதிக்க உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது என்றால் அதிலேயே

'List II—Entry 46—Taxes on agricultural income'.

என்பதாக மாநில அரசாங்கத்திற்கு என்று விவசாயம் சம்பந்தப்பட்ட வரி இனம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதுபற்றி மத்திய அரசாங்கம் சட்டம் செய்வதாக இருந்தால் நம்மைக் கலந்துகொண்டு செய்ய வேண்டும். அப்படி கேட்கப்பட்டதா? அதற்கு இவர்கள் என்ன ஆட்சேபணை தெரிவித்தார்கள் என்கிற விளக்கத்தையும் அளிக்க வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன். இன்றையதினம் விவசாயிகள் இரட்டை வரிவிதிப்புக்கு ஆளாகக்கூடிய பரிதாபகரமான நிலைமைதான் இருக்கிறது. இதுபற்றியும் இந்த அரசாங்கம் பரிசீலித்ததா என்று அறிய விரும்புகிறேன்.

அடுத்து, விலைவாசி உயர்வைப்பற்றி பலரும் இங்கே எடுத்துச்சொன்னார்கள். பாராளுமன்றத்தில் இதுபற்றி கொடுத்த தகவல்களை இங்கே கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

'12 per cent rise in prices in 1972'

என்ற தலைப்பில் கூறியிருக்கிறார்கள்.

'The price increase in 1972 (January-December) was 12 per cent higher than in the previous year, according to final official figures available here'

என்பதாக அதில் இன்னொரு விஷயத்தையும் கூற நாற்படுகிறேன்.

'The main reason for the price rise in 1972 was the increase in prices of food articles and industrial materials groups which advanced by 16·5 per cent and 15.5 per cent respectively. Cereal prices went up by 16 per cent, pulses by about 22 per cent, edible oils by 23 per cent and sugar and allied products by 28.5 per cent'.

என்பதாகக் கணக்குச் சொல்லியிருக்கிறார்கள். இதைவிட இப்போது விலைவாசி அதிகமாக உயர்ந்திருக்கிறது. இதை மத்திய நிதி அமைச்சரே நேற்று பாராளுமன்றத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள். கோதுமை, கோதுமைப் பண்ட மொத்த விற்பனையை இன்றைக்கு எப்படி மத்திய அரசாங்கமே எடுத்துக் கொண்டிருக்கிறதோ, அப்படி நெல் மொத்த விற்பனையை நமது மாநில அரசாங்கம் உடனடியாக மேற்கொண்டாகவேண்டும். கோள்முதலில் கஷ்டங்கள் இருக்கலாம். பராமரிப்பில் கஷ்டங்கள் இருக்கலாம். ஆயினும் உணவுக் கொள்கை பாதிக்கப்படாத வகையில் இன்றைக்கு அரசாங்கம் செயல்பட்டாக வேண்டும். அது மட்டுமல்ல, இந்த பிரச்னையைப் பொறுத்த அளவிலே எல்லா கட்சிகளும் ஹோல்சேல் டிரேடை தேசியமயமாக்க வேண்டுமென்ற கொள்கைக்கு ஏற்ப அதை நிச்சயமாக வரவேற்பார்கள் என்று கருதுகிறேன். ஒருவேளை ஒருசில கட்சிகள் இதை வரவேற்காது என்று எனக்குத் தெரியும். இந்தப் பொருள்கள் மக்களுடைய அத்தியாவசியமான தேவைகளாக இருக்கின்ற காரணத்தால் நிச்சயமாக இது பற்றி ஒரு இறுதியான முடிவை எடுக்க வேண்டுமென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னொரு விஷயம், விலைவாசியைப் பொறுத்த அளவிலே இங்கே கூறவேண்டு மென்று நினைக்கிறேன். மத்தியிலேயிருந்து இந்த மாதிரியான நிர்வாகத்தை அவர்கள் நடத்தினால், இங்கு எப்பொழுது 'லீன்' மாதங்களாக இருக்கிறதோ அல்லது விலை எப்பொழுது அதிகமாக இருக்கிறதோ அப்பொழுது உடனடியாக நமது தேவைகளை பூர்த்தி செய்வதற்கு இதனால் நல்ல வழிவகை பிறக்கும்.



நமக்கும் இப்பொழுது நிறுவனம் இருக்கிறது. அந்த நிறுவனத்தின் எல்லையை விஸ்தரித்து உடனடியாக விலைவாசியைக் குறைப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்றும் இந்தச் சந்தர்ப்பத்திலே கூற விரும்புகிறேன்.

இன்று ஓட்டலிலே இருக்கிற நிலைமையை எடுத்துக் கூறுவதற்கு கடமைப் பட்டவனாக இருக்கிறேன். இன்று இளைத்துப்போன இட்டிலியை சட்டமன்றத் திலே காட்ட நான் வரவில்லை. அந்த மாதிரியான காரியங்கள் செய்ய நான் முற்படவில்லை. பொதுவாக இன்றிருக்கிற நிலைமையைப் பற்றி பிப்ரவரி 26-ம் தேதி அன்று 'இந்து' பத்திரிகையிலே ஒருசில விவரங்களைத் தந்திருக்கிறார் கள். ஓட்டல் உரிமையாளர்களோடு அவர்களுடைய ஸ்டாஃப் ரிப்போர்ட்டர் பேசி, அந்த விவரங்களெல்லாம் அந்த பத்திரிகையிலே வந்திருக்கிறது. அதை யெல்லாம் விரிவாக எடுத்துக் கூறவேண்டுமென்று நான் நினைக்கவில்லை. அதிலேயிருந்து ஓரிரண்டு விஷயங்களை மட்டும் குறிப்பிட நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

'One of the chief items responsible for pushing up the cost of eatables in hotels, he said, was refined oil which was now selling at Rs. 125 plus taxes per 15 kg. as against Rs. 85 a few weeks ago. In fact, many of the members wanted to charge for the side-dishes of 'sambar and chutney' which are being supplied free at present. The general body of the Association which met last week discussed these things at length and decided against any levy for the side-dishes in public interest but resolved to the increase of 5 to 10 paise on fried items only. Hitherto the general prices obtaining in hotels were Dosai 30 paise, Vadai 15 paise, Uthappam 35 paise, Iddili 10 paise, Bonda 30 paise and Coffee 30 paise.

இந்த மாதிரியான புள்ளிவிரங்களையெல்லாம் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இந்த மாதிரி இருப்பது யாரை பாதிக்கிறது என்று சொன்னால் சாதாரணமாக நடுத்தர வகுப்பினர், ஓட்டலையே நம்பி வாழ்கின்ற பலர் இருக்கிறார்கள், அவர்களைப் பாதிக்கிறது. மெட்ராஸ் பட்டணத்திலே இந்த மாதிரியான நிலைமை உருவாகியிருக்கிறது என்று சொன்னால் மற்ற பகுதியிலே எப்படி நிலைமைகள் உருவாகியிருக்கும், உருவாகும் என்று உணரவேண்டும். எண்ணெய் விலை எவ்வளவு உயர்ந்திருக்கிறது, புளி விலை எவ்வளவு உயர்ந் திருக்கிறது, மிளகாய் விலை எவ்வளவு உயர்ந்திருக்கிறது என்று சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் கூறினார்கள்.

THE HON. THIRU SI PA. ADITANAR: Sir, I did not want any clarification from the hon. Member belong to the Swatantra Party because he does not take anything in a cool manner. The point on which I want clarification from the Leader of the Congress (O) Party is this. He has stated that what was sold for Re. 1 previously is now being sold at Rs. 1.12, that is, an increase of 12 per cent. What I am asking is, whether he has taken into account also the erosion in the value of the rupee-money. For instance, boiled rice which was sold at Rs. 1.50 or Rs. 1.75 in the original value of money is now sold at Rs. 2.50 per measure and this sum of Rs. 2.50 is depreciated value. The hon. Member has also mentioned about the printing of currency notes. I am not talking about the printing of notes. The creation of money may be either through currency or cheque. The increase in the value of the money put into circulation creates inflation and depreciates the value of currency. Now I am asking only whether the hon. Member has taken into account the erosion in the value of the money also.

THIRU R. PONNAPPA NADAR: Sir, it is an economic principle or theory which my hon. Learned Member has put forward. Whether there is erosion in the value of money or not is not the concern of the common man. The common man is very much worried about his food and eatables. That is the reason why he says that there has been an abnormal increase in the value of food articles and proportionate to that, the wage of the worker has not increased. It may be that the value of the rupee has been less but the price of articles is so phenomenal that it is accepted by the Central Minister, Thiru Chavan. The Hon. Minister for Co-operation may be right when he says that value of the rupee has fallen but that does not mean that the prices should spiral. Sir, I do not want to enter into a discussion regarding that matter.

தலைவர் அவர்களே, வேறு சில பிரச்சினைகளைப் பற்றி இங்கு கூறுவதற்கு நான் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். திண்டுக்கல் இடைத் தேர்தலைப் பற்றி ஓரிரு கருத்துக்கள் கூறுவதற்கு நான் முற்படுகிறேன். இதிலே இருக்கிற காரியங்களை நான் ஏன் பேசவேண்டுமென்றால், இதை ஒருவேளை எலெக்ஷன் கமிஷன் நடத்துகின்றது, என்று கூறி நமது மாநில அரசாங்கம் தனது பொறுப்பினை தட்டிக்கழிக்க இயலும் என்பதால்தான். அங்கு நடக்கின்ற ஓரிரு நிகழ்ச்சியினை இந்த அவையின் கவனத்திற்கு கொண்டு வரக் கடமைப்பட்டி-



ருக்கிறேன். அந்தப் பகுதிக்குச் சென்று நேரடியாக விசாரித்தேன், உண்மையை தெரிந்துகொண்டேன், அதை இங்கு சொல்ல விழைகிறேன். திண்டுக்கல் முனிசிபாலிட்டியிலே, வார்டு நெம்பர் 15-லே, ஒரு வீட்டிலே 145-சி என்ற நெம்பர் கொடுக்கப்பட்டிருக்கிறது. முன்னால் அங்கு 4 ஓட்டர்கள் பதிவு செய்யப்பட்டதாக வாக்காளர் ஜாபிதாவிலே இருக்கிறது. இப்பொழுது 13 நபர்கள் இருப்பதாக பதிவு செய்திருக்கிறார்கள். அதிலே எல்லா மதத்தவர்களும் இருக்கிறார்கள், இந்துக்கள் இருக்கிறார்கள், முஸ்லிம்கள் இருக்கிறார்கள் என்ற விவரத்தையெல்லாம் என்னிடம் எடுத்துக் கூறினார்கள். இதன் மர்மம் என்ன? இதில் அரசாங்கம் வேண்டிய நடவடிக்கையை எடுக்கவேண்டும். சிறு சிறு வீடுகளிலே பல பகுதிகளிலே சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்றெல்லாம் என்னிடம் குறிப்பிட்டார்கள்.

இன்னொரு பெரிய ஆட்சேபணைக்குரிய விஷயம் பலரும் சப்ளிமெண்டரி லிஸ்டுகளைக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆளும் கட்சி தரப்பிலேயிருப்பவர்கள் கொடுக்கிற லிஸ்டுகளை, பரிசீலனை செய்யாமல், வெரிஃபிகேஷன் நடத்தாமல், உடனடியாக ஏற்றுக்கொள்கின்ற தன்மையை அங்கிருக்கிற எங்களுடைய தலைவர்களும் ஊழியர்களும் எடுத்துக் கூறினார்கள். அது விரும்பத்தக்கது அல்ல. மற்ற கட்சிக்காரர்கள் ஏதாவது, அப்ஜக்ஷன்ஸ் கொடுத்தால், அதை சரியான முறையிலே பார்க்கவில்லை, தீர்ப்பு வழங்கவில்லையென்ற குற்றச்சாட்டை பலரும் கூறியிருக்கிறார்கள். ஐடெண்டிட்டி கார்டுகளையெல்லாம் பலரிடமிருந்து திரும்பப் பெற்றுக்கொண்டதாக புகார்கள் வந்த வண்ணமாக இருக்கின்றன. இதையெல்லாம் தவிர்க்கவேண்டும்.

இன்னொரு விஷயத்தையும் இங்கு கூறவிரும்புகிறேன். அங்கு பல அதிகாரிகளை மாற்றியிருக்கிறார்கள். குறிப்பாக காவல் துறையில் ஒரு சர்க்கிள் இன்ஸ்பெக்டரை மாற்றி அவருக்குப் பதிலாக நீலமேகம் என்ற ஒரு சர்க்கிள் இன்ஸ்பெக்டரை நியமித்திருக்கிறார்கள். அதேமாதிரி நிலக்கோட்டையிலிருந்து டி. எஸ். பி. சந்திரன் மாற்றப்பட்டிருக்கிறார். திண்டுக்கல்லிலிருந்தவரை மாற்றி, அசீஸ் கொண்டு வரப்பட்டிருக்கிறார் என்ற விவரத்தையும் தந்தார்கள், நிலக்கோட்டையிலேயிருக்கின்ற சப் இன்ஸ்பெக்டர், தேவக்கோட்டையிலே இருக்கின்ற சப் இன்ஸ்பெக்டர், திண்டுக்கல் டவுனிலே இருக்கின்ற சப் இன்ஸ்பெக்டர், வேடசந்தூரிலே இருக்கிற சப் இன்ஸ்பெக்டர் இவர்களை எல்லாம் உடனடியாக மாற்றியிருக்கிறார்கள். இதற்கு என்ன காரணமோ, என்ன மர்மமோ எங்களுக்குத் தெரியவில்லை. எது எப்படியிருந்தாலும், தேர்தல் நேரத்திலே இப்படி நடக்கிறது என்றால், தங்களுக்கு வேண்டிய அதிகாரிகளை கொண்டு வந்து குவித்திருக்கிறார்கள் என்று மக்கள் கவலைப்படுகிறார்கள், பீதி அடைந்துள்ளார்கள். ஆகையினால், நேர்மையான முறையிலே எலெக்ஷனை நடத்த

வதற்கு ஒரு ஆலோசனையை தங்கள் மூலமாக நான் முதலமைச்சருக்கு தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன். இதிலே போலிங் பர்சனல் யாரைப் போட வேண்டுமென்பதை மத்திய அரசாங்கமும் மாநில அரசாங்கமும் கலந்து கொண்டு நல்ல நேர்மையான நபர்களைப் போடுவது சாலச் சிறந்ததாக இருக்
ந.ப. 12-00 கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏப்ரல் 29-ஆம் தேதியன்று தேர்தல் நாள் என்று அறிவிக்கப்பட வேண்டுமென்று மத்திய அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டிருப்பதை ஜூன் மாதத்திலே மாற்றவேண்டுமென்று ஆலோசனை கூறியிருப்பதாக அறிகிறேன். அதை மாற்றத் தேவையில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்பொழுதே பதில் சொல்லிவிடுகிறேன். அப்படி எந்தக் கருத்தும் அறிவிக்கப்படவில்லை. ஜூன் மாதத்திற்கு மாற்றவேண்டுமென்று அறிவிக்கவில்லை. அவர்களும் எப்பொழுது வைத்துக் கொள்ளலாம் என்று கருத்து கேட்கவில்லை. ஏப்ரல் மாதத்தைப்பற்றி எழுதியிருக்கிறோம். ஜூன் மாதத்திற்குத் தள்ளி வைக்கவேண்டுமென்று எந்தக் கருத்தும் எழுதப்படவில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கத்திற்கு நன்றி. தேர்தல் அங்கே நடக்கின்றபொழுது பந்தோபஸ்துக்காக போலிங் பூத் போன்ற இடங்களிலே காவல்செய்வதற்கு மத்திய போலீஸை அனுப்பவேண்டுமென்பதை நான் எங்கள் கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அங்கே சப்ளிமெண்ட் லிஸ்டை உடனடியாகப் பரிசீலனைசெய்த பிறகுதான் தேர்தல் நடத்தவேண்டும். ஆனால் அதைப் பிரசுரம் செய்ததாக வெளியளவிலே சொல்லிக்கொண்டு அங்கே இருக்கின்ற மற்றக் கட்சிக்காரர்களுக்கு அதைக் கொடுக்காத நிலை இருக்கிறது என்று என்னிடத்திலே கூறினார்கள். அப்படிப்பட்ட துர்பாக்கியமான நிலைமை அங்கே இருக்கக்கூடாது. திண்டுக்கல்லுக்கு அமைச்சர்கள் எல்லாம் சென்றார்கள் என்று அறிந்தேன். மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்களும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும் அங்கே சென்றிருந்தார்கள். அங்கே பலருக்கும் அதிகமான அளவில் 250 ரூபாய் கடனைக் கொடுத்திருக்கிறார்கள் என்று அறிகிறேன். அப்படிக் கொடுப்பதை நான் ஆட்சேபிக்கவில்லை. இந்த நேரத்தில் அமைச்சர்கள் எல்லாம் அவசரம் அவசரமாகத் திண்டுக்கல்லுக்குச் சென்று எப்படியாவது கைப்பற்றிக்கொள்ளவேண்டுமென்ற முறையிலே திட்டமிட்டிருப்பதாக அங்கே உள்ள தலைவர்களும் ஊழியர்களும் தெரிவித்தார்கள், அதோடு வன்முறை வெளியாட்டங்களை நடத்துவதற்கு



திட்டமிட்டு இருக்கிறார்கள் என்றும் தெரிவித்திருக்கிறார்கள். அதைத் தடுப்பதற்கு இந்த அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசியல் தலைவர்கள்மீது எடுக்கப்பட்டு இருக்கிற கேஸ்களையெல்லாம் வாபஸ் பெறவேண்டுமென்று சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். முன்பு திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் செய்த ஒரு காரியத்தை நான் ஞாபகத்திற்குக் கொண்டுவர முற்படுகிறேன். இன்று துணைத்தலைவராக இருக்கிற மாண்புமிகு சீனிவாசன் அவர்களின் டிரேட் யூனியன் வேலைக்காக அவர்கள்மீது ஒரு வழக்கு தொடரப்பட்டது. அந்த வழக்கை கடைசியிலே மறைந்த முதலமைச்சர் திரு. சி. என். அண்ணாதுரை அவர்கள் வாபஸ் பெற வேண்டுமென்று உத்திரவு போட்டிருக்கிறார்கள். அதேமாதிரிப் பெருந்தன்மையோடு இன்றைக்குப் பல அரசியல் தலைவர்கள்மீது போடப்பட்டிருக்கின்ற வழக்குகளை எல்லாம் வாபஸ் பெறவேண்டும். தமிழகத்திலே ஒரு சுமுகமான சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்ற வகையிலே அதற்காக நாம் உழைக்கவேண்டுமென்ற என்னுடைய ஆலோசனையைக் கூற விரும்புகிறேன்.

எங்கள் கட்சியைச் சேர்ந்த எங்கள் கட்சி காரியதரிசியாக இருக்கிற திரு. திண்டிவனம் இராமமூர்த்தி அவர்களுக்கு நடந்த நிகழ்ச்சிகளை இந்த மன்றத்திலே கூறுவது கடமை என்று கருதுகிறேன். அது சம்பந்தமாகச் சில விவரங்களை இந்த அவைக்குத் தெரிவிப்பது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். 18—2—1973-ஆம் தேதியன்று திண்டிவனத்திலே ஒரு காங்கிரஸ் கட்சிக் கூட்டம் நடந்தது. அது திண்டிவனம் இராமமூர்த்தி அவர்கள் தலைமையிலே நடந்தது. அதிலே சில நிகழ்ச்சிகள் நடந்தன. அந்தக் கூட்டம் சம்பந்தமாக பலத்த போலீஸ் பந்தோபஸ்து இருக்கிறது. அங்கே அ.தி.மு.க.வைச் சேர்ந்த தங்கவேலு என்ற பெரியவருக்கும் இந்த ஆளுங்கட்சிக்கும் வேறுபாடு இருக்கிறது, அதற்குள்ளே நான் புக விரும்பவில்லை. அந்தக் கூட்டத்திலே ஒருசில அமளியை ஏற்படுத்தினார்கள். அந்த அமளியை அந்தக் கூட்டத்தில் உள்ளவர்கள் தடுத்தார்கள். உடனே போலீஸார் தலையிட்டு தடியடி நடத்தியிருக்கிறார்கள். யார் அமளி செய்தார்களோ அவர்கள்மீது தடியடி நடத்தாமல் யார் கூட்டத்திலே பங்குகொண்டார்களோ அவர்கள்மீது தடியடி நடத்தியிருக்கிறார்கள். பிறகு அதைப்பற்றி, கடுமையான போலீஸ் தாக்குதலைப்பற்றி, மேடையிலே திரு. திண்டிவனம் இராமமூர்த்தி அவர்கள் அந்த மேடையிலே கண்டித்துப் பேசியதற்குப் பிறகு, அவர்கள் சென்றுவிட்டார்கள். அதைப் பற்றி டெலிபோன் மூலமாக தகவல் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். . .

திரு. ஜி. ராஜாராம்: தலைவர் அவர்களே, திண்டிவனத்திலே நடந்ததை பற்றிப் பேசுகிறார்கள். . .

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: நான் தங்களைப்பற்றி எதையும் தெரிவிக்கவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதிலிலே அதைப்பற்றி தெரிவிப்பார்கள் என்று கருதுகிறேன். தங்களிடத்திலே அதைப்பற்றிய விவரம் இருந்தால் முதலமைச்சரிடத்திலே தெரிவிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். . .

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: அதுபற்றிய வழக்கு கோர்ட்டிலே இருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: அது சப்ஜுடிஸ் என்று எனக்குத் தெரியும். நான் ஒரு வழக்கறிஞன் என்ற முறையிலே எப்படிச் சம்பிரதாயப்படி பேசவேண்டுமென்று எனக்குத் தெரியும், அதைத் தெரிந்து கொண்டுதான் பேசுகிறேன். டெலிபோனில் என்னபேசப்பட்டது என்பதைக் கேட்டுக்கொண்டார்கள், ஒரு ஐ. பி. எஸ்., அதிகாரி இருக்கிறாராம். என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள், நான் மத்திய அரசுக்குப் போகத் தயாராக இருக்கிறேன் என்று சொன்னதாக எனக்கு ஆதாரப் பூர்வமாகத் தகவல் வந்திருக்கிறது. ஒரு வழக்கைப் பதிவுசெய்து இருக்கிறார்கள், அந்த வழக்கு வேடிக்கையாக இருக்கிறது. திரு திண்டிவனம் இராமமூர்த்தி அவர்கள் ஆட்களையெல்லாம் தூண்டிவிட்டு அடிப்பதற்கு முனைந்தார்கள் என்று 307 வது பிரிவிலே வழக்கு ஒன்றைப் பதிவுசெய்திருக்கிறார்கள். போலீஸ்காரர்களை அடிக்க. . .

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: போலீஸ்காரர்கள் அங்கே இராமமூர்த்திக்கு வேண்டியவர்கள்தான். அவர்களை மாற்றவேண்டுமென்று சொன்னால் மாற்றி விடலாம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: அதிகாரம் உங்கள் கையிலே இருக்கிறது. திண்டிவனம் இராமமூர்த்திக்கு வேண்டியவர்கள் என்று சொல்வதில் நியாயமில்லை. அவர் எங்களுடைய கட்சிக்காரராக இருக்கிறார், எங்கள் கட்சி காரியதரிசியாக. . .

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: இப்பொழுது அவர்கள் இந்த மன்றத்திலே உறுப்பினராக இல்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: திண்டிவனத்திலே ஏற்பட்ட தகராறு ஆளுங்கட்சிக்கும் அங்கேயுள்ள பழைய காங்கிரஸ் கட்சிக்கும் ஏற்பட்ட தகராறு அல்ல. பழைய காங்கிரஸ் கட்சிக்கும் அங்கேயுள்ள அ.தி.மு.க. கட்சிக்கும் ஏற்பட்ட தகராறு. அதிலே திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எந்த விதமான சம்பந்தமும் கிடையாது. அந்தத்தகராறிலே இராமமூர்த்திக்கும்



போலீஸுக்கும் இடையே இருந்த தவறான போக்கினாலே அந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. மேற்கொண்டு தகவல் அதைப்பற்றி இருந்தால் அதைப்பற்றித் தெரிவித்தால் நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: முதலமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அங்கே மோதல் ஏற்பட்டிருக்கிறது, போலீசார் கடுமையான லத்தி சார்ஜ் செய்திருக்கிறார்கள். அவர்கள் தப்பித்துக் கொள்வதற்கு இராமமூர்த்தின்மீது பொய்வழக்குப் போட்டிருக்கிறார்கள். அது சம்பந்தமாகப் பலரும் கையெழுத்துப்போட்டு கொடுக்கப்பட்ட மனு என்னிடத்திலே இருக்கிறது. நான் முதலமைச்சர் கையிலே கொடுப்பதற்கு தயாராக இருக்கிறேன். இந்த மாதிரியான விஷயங்கள் பல இடங்களிலே நடந்துகொண்டிருக்கின்றன.

பட்டுக்கோட்டையிலே நடந்த சம்பவத்தைப்பற்றிக் கூறுவதற்கு விரும்புகிறேன். பட்டுக்கோட்டையிலே நடந்த நிகழ்ச்சி பலரும் கண்டிக்கத் தக்க நிகழ்ச்சி என்பது எனக்குத் தெரியும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 17—2—1973 ஆம் தேதியன்று அங்கே ஒரு கூட்டத்திலே பேசுவதற்கு ஏற்பாடாகியிருந்தது. அதை எதிர்த்து அ.தி.மு.க.-வைச் சேர்ந்தவர்கள் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடத்தத் திட்டமிட்டு கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடந்தது. அதற்குப் பிறகு நடந்த சம்பவம்தான் வேதனை தரக்கூடிய சம்பவமாக நாங்கள் எல்லாம் வருந்தக்கூடிய சம்பவமாக இருக்கிறது. அன்றைய தினம் இந்த மாதிரியான மோதல்கள் எல்லாம் ஏற்படுவதற்கு என்ன காரணம் என்பதைச் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். லாரிகளிலே பல பகுதிகளிலேயிருந்தும் திராவிட முன்னேற்றக் கழக ஊழியர்களும், தொண்டர்களும் அங்கு சாரி சாரியாக வந்து சுமார் 50 லாரிகளுக்கு மேல் வந்திருந்தார்கள். எனக்குக் கிடைத்த தகவல்கள் என்னவென்றால், அதில் பலரும் ஆயுதங்களையும், கம்புகளையும், கற்களையும் வைத்திருந்தார்கள் என்று சொல்லப்படுகிறது. இதையெல்லாம் நான் நேரிலே கேட்டு அங்குள்ள பெரியவர்கள் தந்த தகவல்களின் பேரிலேதான் கூறுகிறேன்.

இதிலே முதலமைச்சரவர்களுக்குப் பாதுகாப்பு கொடுப்பதற்கு போலீஸ்காரர்கள் கடமைப்பட்டவர்கள். நிச்சயமாகப் பாதுகாப்பு அளிக்க வேண்டியதுதான். அதைப்பற்றி யாருக்கும் எந்தவிதமான அபிப்பிராய பேதமும் கிடையாது. ஆனால் முதலமைச்சரவர்கள் வந்து சென்றதற்குப் பிறகு நடந்த நிகழ்ச்சிகள்தான் கண்டிக்கத்தக்க விதத்தில் பல காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன. பலயிடங்களில் வீடுகளில் புகுந்து அத்துமீறி நடத்துகொண்டிருந்திருக்கிறார்கள். தி.மு.க.விற்கும் அ.தி.மு.க.விற்கும்

நடந்த இந்த மோதலில் எங்கள் கட்சியைச் சேர்ந்த பல ஊழியர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள் எங்கள் கட்சி ஆதரவாளர்கள் . தாக்கப்பட்டிருக்கிறார்கள் இதைத்தான் நான் கடுமையாகக் கண்டிக்கிறேன். இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கின்ற அரசியல் சூழ்நிலையில் வன்முறையைத் தூண்டிவிடுகின்ற நிலைமை இருக்கின்றது. இப்படிப்பட்ட நிலைமையிலிருந்தால் எந்த அரசியல் கட்சியும் நியாயமாகச் செயல்படுவதற்கு ஏதுவாக இருக்காது என்று சொல்வதற்காகத்தான் நான் இதைக் கூறுகிறேன்.

தஞ்சாவூர் ரோட்டில் 13-வது வார்டு, பட்டுக்கோட்டையில், கேசவன் என்பவர் தச்சுப்பட்டறையிலே வேலை செய்பவர். அவரது மண்டையிலே இரத்தம் சொட்டச்சொட்ட அடித்து இன்றைக்கும் காயம் ஆறாத நிலையில் இருக்கிறார். நான் நேற்று நேரிடையாகப் பார்த்து சந்தித்துவிட்டு வந்தேன். அதைப்போலவே அதற்கு அருகில் ஒரு டீக்கடையில் வேலை பார்ப்பவர்களை அடித்திருக்கிறார்கள். அதற்குப் பல விவரங்களெல்லாம் வைத்திருக்கிறேன். கார்த்திகேயன் என்பவர் 17 வயது, செல்வராஜ் என்பவர் 16 வயது இவர்கள் டீ அடித்துக்கொண்டிருப்பவர்கள். அவர்கள் எந்தவிதமான குற்றமும் செய்யவில்லை. கலவரம் நடந்த இடத்திலிருந்து அவர்கள் இருக்கின்ற இடம் வெகு அப்பால் இருக்கிறது. இரும்புத் தொப்பி வைத்த போலீஸ்காரர்களும், முண்டாசு வைத்துக்கொண்டிருந்தவர்களும் தாக்கினார்கள் என்று சொல்லப்படுகிறது.

போலீஸ்காரர்கள் அடித்திருந்தால் அவர்கள் சட்டம், ஒழுங்கைப் பராமரிப்பதற்குக் கடமைப்பட்டவர்கள் என்று நினைத்துக்கொள்ளலாம். ஆனால் இம்மாதிரி தனி துறையாக இயங்கி, ஒருசில நபர்கள் போலீஸ் வேடத்தில் வந்து தாக்கியிருந்தால் அது தமிழகத்தில் அராஜகத்தைத் தூண்டிவிடுவதற்குத்தான் உடந்தையாக இருக்கும். துரைமாணிக்கம் என்ற எங்கள் இயக்கத்தைச் சேர்ந்தவர், சிவாஜி மன்றத் தலைவர், அவருடைய சைக்கிளை அருகில் உள்ள கிணற்றில் போட்டிருக்கிறார்கள். அவருடைய சைக்கிளைப் பூட்டி வைத்திருந்தார்கள். அந்த சைக்கிள் என்ன குற்றம் செய்ததோ, என்ன பாவம் செய்ததோ தெரியவில்லை. இம்மாதிரி முறையில் விரும்பத் தகாத காரியங்கள் நடந்திருக்கின்றன.

அதேபோன்று ரிக்ஷா ஓட்டிச் சென்றவருடைய ரிக்ஷாவை போலீஸ் வேனில் வந்து நொறுக்கியிருக்கிறார்கள். ஆட்களின் மண்டைகளை உடைத்தது போதாது என்று நினைத்தோ என்னவோ தெரியவில்லை. இம்மாதிரியான விரும்பத் தகாத காரியங்களைச் செய்திருக்கிறார்கள். அதே மாதிரி பலயிடங்களிலும், ஒரு தாயைத் தாக்கியிருக்கிறார்கள். அந்த அம்மையார், இரத்தினத்தம்மாள்,



அவர் வைசூரி கண்டு படுத்த படுக்கையாக இருப்பவர் அவருடைய மண்டையிலே, தோளிலெல்லாம் அடித்திருக்கிறார்கள். நான் நேரிடையாகவே அவர்களைப் பார்த்துவிட்டு வந்திருக்கிறேன். அந்தக் காயங்களில் வடுக்கள் இப்பொழுதும் தெரிகின்றன.

இம்மாதிரியாக சிறிய குடிசைகளிலே வாழுகின்ற இந்தப் பெண்மணியை அடித்திருக்கிறார்கள். அதேமாதிரி சாக்கு தைத்துக்கொண்டிருக்கும் மொய்தீன் என்பவரையும், ஷேக்பாய் என்ற 60 வயது ஆன சாக்கு தைப்பவரையும் அடித்திருக்கிறார்கள். இம்மாதிரி நிரம்பப்பட்டியல் இருக்கிறது. பல இடங்களிலும் இம்மாதிரியாக அத்துமீறல்கள் நடந்திருக்கின்றன. இம்மாதிரி அடக்குமுறைகள் நடந்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: தலைவரவர்களே, அன்று திராவிட முன்னேற்றக் கழகத்தினர் வேண்டுமென்றே கலகம் ஏற்படுத்த வேண்டுமென்று திட்டமிட்டுப் போராட்டம் நடத்துகின்ற சமயத்தில் அவர்களுடைய கட்சித் தொண்டர்கள் ஏன் அங்கே செல்ல வேண்டும்? அப்படிச் செல்வதனால்தானே இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படுகின்றன. ஆகவே, அவர்களுடைய கட்சித் தொண்டர்கள் அவர்களது நிலையிலிருந்து பிரிந்து வேறொரு பக்கத்தில் இருக்கச் சொல்வார்களா? இனிமேலாவது சொல்வார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, மீட்டிங்கிலே வைத்து அடித்தால் புரிந்துகொள்ள முடியும். ஆனால் வன்முறை எப்படி நடந்தது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். அவர்களுடைய வீடுகளிலே, குடிசைகளிலே இம்மாதிரி புகுந்து தாக்கி அடித்திருக்கிறார்கள். இதைக்கூட நீங்கள் நியாயம் என்று ஒப்புக்கொள்ளுகிறீர்களோ என்னவோ தெரியவில்லை. ஆகவே, நான் கட்சிக் கண்ணோட்டத்தில் சொல்லவில்லை.

அதற்குப்பிறகு பலயிடங்களிலே அத்துமீறல்கள் நடந்திருக்கின்றன. நடணம் செட்டியார் என்பவருடைய அரிசி ஆலைக்குப் பக்கத்திலே சென்றவர்களை விரட்டி விரட்டி அடித்திருக்கிறார்கள். ஆலைக்குள்ளே சென்று அடித்திருக்கிறார்கள். பலயிடங்களிலும் இம்மாதிரி அத்துமீறிய செயல்களை நடத்தியிருக்கிறார்கள். இதைப்பொறுத்தவரையிலே கேஸ்கள் எடுத்திருக்கிறார்கள். இனிமேல் எத்தனைபேர் மீது கேஸ்களைப் போடுவார்கள் என்ற விவரம் தெரியவில்லை. இம்மாதிரியான காரியங்கள் நீடித்தால் பல கஷ்டங்கள் ஏற்படும் என்பதைச் சுட்டிக் காட்டுவதற்காகத்தான் நான் இந்தப் பிரச்சினையை இங்கே கூறுவதற்கு முற்பட்டேன்.

அடுத்து இன்னொரு விஷயத்தைக் கூறவேண்டுமென்று நினைக்கிறேன். இதை என்னைப்பொறுத்தவரையில் ஒரு தன்னிலை விளக்கமாகக் கூறிக்கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். மதிப்பிற்குரிய என்னுடைய நண்பர் திரு. கந்தப்பன் அவர்கள் நாகர்கோயிலுக்கு விஜயம் செய்தார்கள் அண்மையிலே. அப்பொழுது அவர்கள் பேசியதாகப் பத்திரிகைகளிலே சில குறிப்புகளைப் படித்தேன். அதையெல்லாம் பார்த்த எனக்கு மிகுந்த வேதனையாக இருக்கிறது. ஏனென்றால், நானும், மேலவை உறுப்பினர் திரு. வில்சன் அப்போலன் அவர்களும், காங்கிரஸ் கவுன்சிலரும், வேறு சிலருமாக 50 பேர்கள் குடிநீர்ப் பிரச்சினைக்காக உண்ணாவிரதம் இருந்தோம். அதுமுடிந்து, வந்தபொழுது அவர்களோடு நாங்கள் தொடர்பு கொள்ளவில்லை என்றும், அவர்களுக்கு இந்தப் பிரச்சினையைத் தெரிவிக்கவில்லை என்னும் கருத்தை அங்கே கூறியிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் வந்தபொழுது என்ன நிலைமையென்றால், முனிசிபாலிட்டியிலே நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள் என்பதையும் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன் உங்களுடைய கட்சியைச் சேர்ந்த நகராசபைத் தலைவர்கள் ஒரு அறிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள்.

" நிகழும் 19—2—1973 திங்கள் கிழமையன்று மாலை 5-30 மணி அளவில், தமிழ் நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத் தலைவர் திரு. மிகு. செ. கந்தப்பன், M.A., M.L.A. அவர்கள் நமது நகர்மன்றத்திற்கு வருகை தருவதுடன், இந்நகர் குடிநீர் அபிவிருத்தி திட்டம் குறித்து பேச்சுவார்த்தைகள் நடத்தவும் இசைந்துள்ளார். எனவே அவ்வேளையில் மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் வருகை தர, அன்புடன் வேண்டுகிறேன் " என்ற அறிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள்.

ஆனால் அங்கு உறுப்பினர்களுடைய அபிப்பிராயத்தைக் கேட்கவில்லை. ஆனால் நேர்மாறாக திரு. கந்தப்பன் அவர்கள், அரசியல் லாபத்திற்காக இந்தக் குடிநீர்ப் பிரச்சினையை அரசியல் பிரச்சினையாகக் காட்டி உண்ணாவிரதம் இருந்ததாகச் சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் ஒருநாள் அடையாள உண்ணாவிரதம் இருந்தோம். ஏனென்றால், அந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் இந்த அரசாங்கம் பாராமுகமாக இருந்தது. ஏன் இப்படிச் சொல்கிறேன் என்றால், நகராசபைத் தலைவரும் பலமுறை நமது முதலமைச்சர் அவர்களையும், நமது வாட்டர் போர்ட் சேர்மன் திரு. கந்தப்பன் அவர்களையும் சந்திக்க வேண்டுமென்று கடிதம் எழுதினார்கள். அதுபற்றி எனக்கு நேரிடையாகத் தெரியும். அதை ஒருவேளை மறுக்கலாம். அம்மாதிரி தொடர்பு கொள்ள முயற்சித்தபொழுதும் அதற்கு அவர்களுக்கு எந்தவிதமான பதிலும் கிடைக்கவில்லை. கடைசியாக நாங்கள் உண்ணாவிரதம் இருந்த நிலை ஏற்பட்டதால், அந்த அதிகாரிகள் வந்தார்கள், அதற்குப்பிறகு தலைவரவர்களும் வந்தார்கள். ஆகவே நான்





குறை சொல்ல வேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. ஏதோ அரசியல் லாபத்திற்காகச் சந்திக்கவில்லை என்று கூறியதாகப் பத்திரிகைகளிலே பார்த்தேன். நீங்கள் உங்களுடைய ப்ரோக்ராமை அனுப்பியிருந்தால் நிச்சயமாக உங்களைக் கண்டு பேசியிருந்திருப்போம். அதுபற்றி ஒன்றும் தகவல் சொல்லாமல், ஏதோ உங்கள் கட்சிக்காரர்கள் சில தகவல்கள் தந்ததை வைத்துக் கொண்டு எங்களை இழித்தும் பழித்தும் பேசுவது நியாயமல்ல.

* திரு. செ. கந்தப்பன் : தலைவரவர்களே, தன்னிலை விளக்கமாக ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். இழித்தும் பழித்துமோ, அல்லது அரசியல் நோக்கத்தோடு என்றோ பேசியதாகத் தவறான தகவல் அவர்களுக்குத் தரப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன். நாகர்கோயிலிலே தண்ணீர்ப் பற்றாக்குறைக்காக உண்ணாவிரதம் இருப்பதாகச் செய்தித் தாள்களின் வாயிலாக அறிந்தேன். நானே நகராசபைத் தலைவரோடு தொடர்பு கொண்டேன். அந்த நேரத்திலே கன்னியாகுமரிக்கு நான் செல்ல வேண்டிய நிகழ்ச்சி இருந்ததால், அங்குள்ள தண்ணீர்ப் பற்றாக்குறையைப் பற்றி விவாதிக்கலாம் என்று சொன்னேன். அதையொட்டி நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதில் நானும் கலந்துகொண்டு, இருக்கின்ற நிலவரத்தைப்பற்றி, பொறியாளர்களோடு பேசி, அங்கே கவுன்சிலர்களிடத்திலே பேசும்பொழுது தண்ணீரிலே அரசியல் எழுத வேண்டாம் என்று பேசினேன். வேறு சில உறுப்பினர்களும் அதேபோல் பேசினார்கள். அதே கருத்தைப் பிரதிபலித்தார்கள். கடுமையான பற்றாக்குறை எதுவும் இல்லை என்பதை உணர்ந்தேன். நான், இருக்கின்ற ஏற்பாடுகளையும், அரசு செய்த முயற்சிகளையும் எடுத்துச் சொன்னேன். பத்திரிகைகளிலே என்ன வந்ததோ எனக்குத் தெரியாது. நிகழ்ச்சி முடிந்த பிறகு அங்கு மாவட்ட ஆட்சித் தலைவரவர்களும் வந்திருந்தார்கள். நிகழ்ச்சி முடிந்த பிறகு காங்கிரஸ் கவுன்சிலர் தன்னை அங்கே பேச விடவில்லை என்று நகராசபைத் தலைவரோடு குறைபட்டுக்கொண்டதாக மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் என்னிடத்திலே சொல்லிக்கொண்டிருந்தார்கள். அங்கு நடந்த நிகழ்ச்சியைப் பற்றிப் பின்னால் தெரிந்து கொண்டேன். செய்தி ஏடுகளில் என்ன வந்தது என்று எனக்குத் தெரியாது. பொதுவாக அங்குள்ள பிரச்சினை பற்றித்தான் பேசினேனே தவிர, அரசியல் பற்றிப் பேசவில்லை என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்த விளக்கத்திலேயே குடிதண்ணீரிலே அரசியலைப் புகுத்திவிட்டோம் என்று சொன்னார்கள். அந்த வண்ணம் பூசக்கூடிய அளவில் நாங்கள் நடந்து கொள்ளவில்லை. எங்களது கட்சியின் சார்பாக குடிதண்ணீர்ப் பிரச்சினை சம்பந்தமாகத் தீர்வு ஏற்படும் என்று நினைத்தார்கள்.

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1973 மார்ச் 7

அங்கு தண்ணீர்த் தட்டுப்பாடு இல்லையென்று வாட்டர் போர்டு சேர்மன் கூறினார்கள். நான் தைரியமாகச் சொல்வேன். நாங்கள் எல்லாம் டவுனில் இருப்பவர்கள். எங்களுக்குக் குடிப்பதற்கு தண்ணீர் இல்லை, குளிப்பதற்குத் தண்ணீர் இல்லை. வேறு வசதிகளும் இல்லை. முன்பு திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் இருந்தபோது 1943-ல் திட்டம் தீட்டி 50,000 மக்கள் தொகைக்கு சிறிய திட்டம் தீட்டினார்கள். இதை விஸ்தரிக்க வேண்டுமென்று நகரசபையில் இருந்து பல தீர்மானங்கள் நிறைவேற்றி ஒரு கோடி இருபத்தைந்து லட்சம் ரூபாய் கடனாக எல். ஐ. சி. ல் இருந்து பெற திட்டம் தீட்டியிருக்கிறார்கள். அதற்கு அரசாங்கம் இதுவரை கிளியரன்ஸ் கொடுக்கவில்லை, அனுமதி கொடுக்கவில்லை. குற்றஞ் சாட்டிக் கொண்டே இருக்கிறார்கள். இப்போது அங்கு ஜனத்தொகை 1½ லட்சம். 50,000 பேருக்கு ஏற்படுத்தப்பட்ட திட்டத்தில் இன்று ஒன்றரை லட்சம் மக்கள் தண்ணீர் பெற வேண்டியிருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் உங்களுடைய ஜில்லா கலெக்டரையே கேளுங்கள். அவருக்கு எத்தனை நாள் குடிதண்ணீர் கிடைக்கவில்லை; எவ்வளவு நாட்கள் போலீஸ் வானிலும், ஜீப்பிலும் தண்ணீர் கொண்டு போய் உபயோகித்தார்கள் என்பதை ஆதாரத்தோடு நிரூபிக்க முடியும். அதே மாதிரி மேட்டுப் பகுதியில் இருப்பவர்கள் யாரும் தண்ணீர் பெற பெரும் சங்கடத்திற்கு ஆளாக வேண்டியிருக்கிறது. இதிலே நீங்கள் அரசியலைப் புகுத்த வேண்டாமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். கன்னியாகுமரி ஜில்லாவில் இருப்பவர்கள் காங்கிரஸ் பேரில் பற்றும் பாசமும் உடையவர்களாக இருக்கிறார்கள், தொன்றுதொட்டு அப்படி இருக்கிறார்கள் என்ற காரணத்தால் புறக்கணித்து வருகிறார்களோ என்று தோன்றுகிறது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நேற்றையதினந்தான் சொன்னேன். அப்போது அவர்கள் சபையில் இல்லை. தமிழ்நாட்டில் மற்றப் பகுதிகளைவிட கன்னியாகுமரி மாவட்டத்திற்குத்தான் தனிச் சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது என்று அறிக்கையில் கூறினேன். மற்றப் பகுதிகளுக்குக் கொடுக்காத சலுகை, தனிச் சலுகை கன்னியாகுமரி மாவட்டத்திற்குப் பட்டா கொடுப்பதில் அளித்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: பட்டா கொடுப்பதில் திருவிதாங்கூரில் இருந்தபோது என்ன சட்டம் இருந்தது என்பது தெரியும். இன்று அதிலே மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. பட்டா கொடுத்துவிடுவது மட்டும் அங்குள்ள பிரச்சினைகள் அத்தனைக்கும் பரிகாரம் ஆகாது. அதனால் அங்குள்ள பிரச்சினைகள் எல்லாம் பைசலாகிவிட்டது என்று நினைக்கவேண்டாம். 465 கோடி ரூபாய் இந்த அரசாங்கம் செலவழிக்கும்போது அந்த ஜில்லாவுக்கு சில லட்சம் ரூபாய் செலவழிக்கக்கூடாதா? உங்களுடைய உறுப்பினர் ஒருவர் அந்த ஜில்லாவில் இருந்து வெற்றி பெற்று வந்திருக்கிறார். ஒரு கோடி என்ன, ஐந்து கோடி ரூபாய் வேண்டுமென்றாலும் அந்தத் தொகுதியிலே செலவழியுங்கள், ஆட்சேபிக்க மாட்டோம், ஒத்துழைப்போம் என்று கூற விரும்புகிறேன்.



1973 மார்ச் 7] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: கன்னியாகுமரி மாவட்டத்தில் 15 லட்சம் ரூபாய் செலவில் அண்ணா கலையரங்கமும், ஸ்டேடியமும் கட்டிக் கொண்டிருக்கிறோம். அதையும் மறந்து விட்டுப் பேசுகிறார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இந்தக் கலையரங்கத்தின் வரலாறுகள் எல்லாம் நன்றாகத் தெரியும். எப்படி வசூல் செய்தார்கள், இப்போது எப்படி வசூல் நடக்கிறது என்ற விவரங்களை எல்லாம், அந்தக் கிளறுகளை எல்லாம் இப்போது தோண்ட வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். அன்று மாவட்ட கலெக்டராக இருந்தவர் இதற்காக எப்படிப் பணம் பிரித்தார். ரேஷன் வியாபாரிகள், அப்காரி காண்டிராக்டர்கள் ஆகியவர்களிடமிருந்தெல்லாம் எப்படி கசக்கிப் பிழிந்து வாங்கினார்கள் என்று நன்றாகத் தெரியும். அரசாங்கமே முழுப் பணத்தையும் போட்டுவிட்டால் ஒருவேளை வரவேற்க முடியும். ஆனால் முழுக்க முழுக்க அந்தப் பகுதியிலிருந்து கட்டாயத்தின் பேரில் வசூல் செய்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். விவாதத்திற்குரிய இந்த விஷயங்களை எல்லாம் இந்த மன்றத்தில் பட்ஜட் விவாதத்தின்போது கூற வேண்டாமென்று நினைத்தேன்.

பொதுவாக, இன்று வேதனைக்குரிய விஷயமாக இருப்பது என்னவென்றால் கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் இந்த விவாதத்திலே பங்கு கொள்ளுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தாததாகும். அந்த வருத்தத்தை தங்கள் மூலமாக இந்த மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். ஒருவேளை கண்டிஷனல் பெய்ல் கொடுத்திருக்கிறார்கள் என்று அரசாங்கம் கூறினாலும் அவர்கள் குற்றம் செய்தார்கள் என்று சொன்னால் விசாரணை முடிந்து குற்றவாளி என்று சொன்னால் அந்தத் தண்டனையை ஏற்றுக் கொள்ள அன்னார் தயங்கமாட்டார்கள். அவரை ஜாமீனில் விடுவதிலே அன்கண்டிஷனலாக விடுவதிலே அரசுக்கு ஆட்சேபனை இல்லையென்றால் நிச்சயமாக நீதிபதி அந்த மாதிரி கூறி இருக்க மாட்டார்கள். நான் வக்கீல் தொழிலிலே 28 ஆண்டுகளாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறேன். பப்ளிக் ப்ராசிக்யூட்டர் என்ற முறையில் கோர்ட்டில் சொல்லுவார்கள் என்பதெல்லாம் எங்களுக்கும் நன்றாகத் தெரியும். விவாதத்திற்குரிய விஷயமாக, நீதிபதியைப் பற்றி, நீதிமன்றத்தைப் பற்றி

விமர்சனம் செய்வதாக நினைக்க வேண்டியதில்லை. நீதிபதிகள் அரசாங்கத்தைப் பற்றியெல்லாம் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்பது இந்த மன்றத்தில் தெரிவிக்க விரும்புகிறேன். ஓய்வு பெற்ற நீதிபதி நமது அரசாங்கத்தைப் பற்றியெல்லாம் குறை கூறியிருக்கிறார்கள். அங்கிருக்கும் காரியங்களைப் பற்றியெல்லாம் கூறுவதற்கு நமக்கு உரிமை இருக்கிறது.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி:** ஜட்ஜுகள் எப்படிப் பணியாற்றுகிறார்கள் என்று மன்றத்தில் சொல்லக்கூடாது. பப்ளிக் ப்ராசிக்யூட்டர் கண்டிஷனல் பெய்ல் வேண்டாமென்று சொன்னாலும் அதை ஏற்றுக் கொள்ளுவதோ, ஏற்றுக் கொள்ளாமல் இருப்பதோ ஜட்ஜைப் பொறுத்தது. வேண்டுமானால் மீண்டும் ஹைகோர்ட்டில் மனுச் செய்யலாம். அதை வைத்துக் கொண்டு பெரிய வழக்கறிஞராக இருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் பேசுவது பொருந்தாது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** பப்ளிக் ப்ராசிக்யூட்டர் பெய்லில் விடுங்கள் என்று சொல்லியிருக்கலாம் என்று சொன்னாலும் கூட ஜட்ஜைப் பற்றிப் பேசுகிறார்கள் என்று சொல்லுகிறார்கள். எல்லோருக்கும் தெரியும். அடிப்படை வழக்கு என்ன? அவர் என்ன கொலையா செய்து விட்டார்? மேடையிலே பேசினார். வெளியே வந்தால் விட்னஸையா டாம்பர் செய்து விடுவார்? குற்றமே இல்லாமல் ஒரு சட்டசபை அங்கத்தினருக்குக் கண்டிஷனல் பெய்ல் கொடுப்பது நியாயம் இல்லை என்று சொன்னால் அதிலே என்ன தவறு?

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி:** அவர் பெரிய ஹைகோர்ட் வழக்கறிஞர். அவர் இப்படிப் பேசுவது சரியல்ல. 'வேஜிங் வார் அகென்ஸ்ட் கவர்ன்மெண்ட்' என்று பேசியிருக்கிறார். அரசாங்கத்திற்கு எதிராகச் சொன்னார். அவ்வாறு மேடையிலே சொன்னது எவ்வளவு பெரிய தவறு? அவரை வெளியே விட்டால் என்ன ஆபத்து வந்துவிடும் என்று ஒரு வழக்கறிஞர் கேட்பதா?

DR. H. V. HANDE: On a point of Order, Sir. It is not as if, as the hon. Member Mr. Krishnamoorthi alleges, Thiru R. Ponnappa Nadar is casting aspersion on the judiciary. What he is trying to point out is this. Just as Government had withdrawn a case previously, what is the difficulty for Government to withdraw the case against him now. That is the only question that I am trying to ask now.

(THIRU M. A. Latheef and Thiru K. Suppu rose.)



THIRU M. A. LATHEEF: Dr. Hande is submitting to Government that they should instruct the Public Prosecutor to submit to unconditional bail or request the Court to accept the bail application. He says that such instructions should be given and if that is given, he has no obection. What I say is this. எந்தெந்த முறையில் இப்படி எல்லாம் செய்யப்படுகிறது? இதெல்லாம் எனக்கும் தெரியும். இப்படி நடப்பது தெரியும் என்று சொல்வதைப் பற்றித்தான் நான் கேட்கிறேன்.

**திரு. க. சுப்பு:** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். நீதிமன்றத்தின்பேரில் ஆஸ்பர்ஷன் சொல்ல முடியாது. சட்டமன்றத்தில் இங்கு பேசியது பப்ளிக் ப்ராசிக்யூட்டர் அப்படிச் சொல்லியிருக்கலாம் என்றுதான் சொல்லுகிறார்கள். இராமநாதபுரம் பப்ளிக் ப்ராசிக்யூட்டரும், உயர்நீதிமன்ற பப்ளிக் ப்ராசிக்யூட்டரும் தி.மு.க. முன்னணித் தொண்டர்களாக இருந்தவர்கள். அவர்கள் நீங்கள் சொல்லுவதைப் புறக்கணித்துவிட மாட்டார்கள். 'நோ அப்ஜக்ஷன்' சொல்லியிருக்கலாம் என்பதுதான் எங்கள் வாதம்.

**திரு. நா. வீராசாமி:** திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் எதற்காகக் கைது செய்யப்பட்டார் என்பதற்கான காரணங்கள் கோர்ட்டில் இருக்கின்றன. 'அவர் என்ன கொலையா செய்து விட்டார்?' என்று அம்மையார் கேட்கிறார். முதலமைச்சரைப் பார்த்து எப்படிப்பட்ட வார்த்தைகளைப் பேசினார் என்பது தெரியும். திரு. கே. டி. கே. அவர்கள் கொலையா செய்து விட்டார் என்று பேசுவது கொலை செய்யத் தூண்டுவது போல் இருக்கிறது. இது முறைதானா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதுவே முதலில் முறையல்ல.

THIRU N. GANAPATHY: Sir, during this debate, the duties of the Public Prosecutor has been questioned. I have been a Public Prosecutor. A Public Prosecutor is an advocate and an officer of the Court. He is not bound to take the instructions of his client. He acts fairly and freely. We are not to dictate terms to the Public Prosecutor and he is also not bound to take it and obey the Government.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Your are an a-tive member of the Ruling Party and naturally we consider you will act only for the party.

THIRU N. GANAPATHY: I have been a Public Prosecutor and the hon. Member has never appeared in my court.

THIRU M. A. LATHEEF: Sir, he is an officer of the Court and not an officer of the D.M.K. The member's remarks about the Public Prosecutor should be expunged.

MR. DEPUTY SPEAKER. The point raised by the hon. Member was that since he is an officer of the Government, Government should have instructed.

(Thiru Latheef stood in his seat.)

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** திரு. சுப்பு அவர்களுக்கு மாத்திரம் நான் பதில் சொல்ல விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தில் உறுப்பினராக இருந்தவர்கள் பப்ளிக் ப்ராஸிக்யூட்டராக ஆகிவிட்டார் என்று சொன்னார்கள். அப்படி இருந்திருந்தால் கூட மோகன் குமாரமங்கலம் அவர்கள் எப்படி கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து ராஜிநாமா செய்துவிட்டாரோ (பலத்த ஆரவாரம்) அப்படித்தான் ஆகியிருப்பார்கள்.

**திரு. க. சுப்பு:** மோகன் குமாரமங்கலம் அவர்கள் அட்வகேட் ஜெனரலான வுடன் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து நீக்கப்பட்டார், அது வேறு விவகாரம். உங்கள் கட்சியில் மாவட்டச் செயலாளராக இருந்தவர் அவர் தேர்தலில் தோல்வியுற்றபோது இப்படி போட்டார்கள், ஆறுதலுக்காக போட்டதற்காக வரவேற்கிறேன். மாவட்டச் செயலாளராக இருந்தவரை அப்படி தோல்வி யுற்றதற்காகப் போட்டதை வரவேற்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அது நல்லதல்ல.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** உண்மையைப் புரிந்து கொண்டேன். கம்யூனிஸ்ட் கட்சியில் இருக்கும்போதே போட்டிருக்கிறார்கள், அதற்குப் பிறகு தான் அவர் நீக்கப்பட்டார் என்பது சுப்பு அவர்கள் சொல்வதிலிருந்து தெரிகிறது. கம்யூனிஸ்ட் கட்சியில் இருக்கும்போதே போட்டிருக்கிறார். பிறகு நீக்கப்பட்டார். இங்கு அப்படி அல்ல. அவர் கட்சியிலிருந்து விலகி பிறகு இங்கு போடப்பட்டார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சபையில் இல்லாதவர்களைப் பற்றி விவாதிக்க வேண்டாம்.

THIRU R. PONNAPPA NADAR: There has been a spate of questions regarding this. My only point is this. The prosecution should not end in persecution. That is the only point. I do not want to reply to the other points which have been raised.



தலைவர் அவர்களே, இறுதியாக இன்னொரு விஷயத்தைக் கூறலாம் என்று கருதுகிறேன். அதாவது, இது உபரி பட்ஜட்டாக இருக்கிறது. விற்பனை வரியில் இருந்து அதிகப் பணம் நம் அரசாங்கத்திற்குக் கிடைக்கிறது. சென்ற பட்ஜட்டில் ஒரு மேல் வரி—சர்சார்ஜ் ஆன் சேல்ஸ் டாக்ஸ்—போட்டார்கள். இந்த மேல் வரியையாவது ஏன் அரசாங்கம் எடுத்துவிடக்கூடாது? மத்திய பாராளுமன்றத்தில் பல வரிகளைக் குறைத்திருக்கிறார்கள். ரெஃப்யூஜீஸ்க்காக வேண்டி பல வரிகள் போடப்பட்டிருந்தன, அவைகள் எல்லாம் இன்று எடுக்கப் பட்டிருக்கின்றன. நமது அரசாங்கம் ஸ்டாம்ப் கட்டணத்தை உயர்த்தியிருக் கிறது. மேல் வரியையும் ஏற்படுத்தியிருக்கிறது. விற்பனை வரியை படிப்படி யாக உயர்த்தியிருக்கிறது. ஆனால் சாதனை என்று சொல்லக் கூடிய அளவில் போட்டிருந்த படி அரிசித் திட்டத்தை 82-வது விதிப்படி ஒரு ஸ்டேட்மெண்ட் கொண்டுவந்து இப்போது எமர்ஜன்சியாக இருப்பதால் அதை வாபஸ் பெற்று விட்டோம் என்று அது முடங்கலாக இருக்கிறது என்று சொல்லக்கூடும்.

இன்றுள்ள நிலைமையில் வாடி வதங்கிக் கொண்டிருக்கிற மக்களுக்கு ஏதாவது வழிவகை செய்யக்கூடிய அளவில் ஏதாவது செய்யப்பட்டிருக்கிறதா? இந்த விற்பனை வரியினால் பாதிக்கப்பட்டிருப்பவர்கள் ஏழை எளிய மக்கள் தான். இது ஒரு இன்டைரக்ட் டாக்ஸ் என்ற முறையில் இதிலிருந்து விதி விலக்கு அளிப்பது பொருத்தமாக இருக்கும். ஏப்ரல் 1-ம் தேதியில் இருந்து இந்தமாதிரியான விலக்கை அமல் செய்வதற்கு நம் முதல் அமைச்சர் அவர்கள் வழிவகை செய்யவேண்டும். சில பண்டங்களின் மீது போடப்பட்டு இதி லிருந்து வரும் வரி ஒரு கோடிச் சில்லறை என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அதன் விவரங்கள் இப்போது என் கைவசம் இல்லை. அதை எடுத்துவிட்டால் நன்றாகயிருக்கும்.

அடுத்தபடியாக, அத்தியாவசியப் பண்டங்கள் மக்களுக்குக் கிடைப்பதற்கு வழிவகை செய்யப்பட வேண்டும். இப்போதுள்ள மின்சாரப் பற்றாக்குறை யைத் தீர்ப்பதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். இதில் இன்றுள்ள அதிகாரிகளை வேண்டு மானால் அவர்களை மாற்றி, அவர்களின் பதவிக் காலத்தை நீட்டிக்காமல் செய்வது பொருத்தமாகவிருக்கும். ஏனெனில் ஒரு அதிகாரி நீண்ட நெடுங் காலமாக அந்தப் பதவியில் இருந்தால் புளித்துப் போகும். பழகப் பழக பாலும் புளிக்கும் என்று சொல்லும் முறையில் அந்த அதிகாரிகளுக்கு வேலை செய்வதில் சுறுசுறுப்பு இருக்காது. இது மின்சார வாரியத்திலும் புகுந்திருக் கிறது என்று நான் கேள்விப்படுகிறேன். இதை வாரியத்தில் புக விடக் கூடாது என்பதை முதல் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள் கிறேன்.

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1973 மார்ச் 7

அடுத்தபடியாக, வேலையில்லாத் திண்டாட்டம் பற்றி இங்கு எடுத்துச் சொல்லப்பட்டது. வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க கோடிக் கணக்கான ரூபாய் செலவழிப்பதற்குத் திட்டங்கள் எல்லாம் தீட்டப்பட்டிருக்கின்றன. ஆசிரியர்கள் பிரச்சினை மிகக் கடுமையான நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. அதை கௌரவப் பிரச்சினையாக அணுகாமல் இருக்கும்படி மறுமுறையும் கேட்டுக்கொள்கிறேன். ஆசிரியர்கள் சார்பாகவும், படிக்கிற மாணவர்கள் சார்பாகவும். படிக்கிற மாணவர்கள் வாழ்வு பாழடைந்த நிலையில் இருக்கிறது. எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு அருகாமையில் வரப்போகிறது. ஆதலால் இதற்கு எப்படியாவது ஒரு முடிவு காணவேண்டும். அவர்கள் சொல்கிற வாதங்களை எல்லாம் நியாய உணர்வோடு, நல்ல பரிவோடு கவனிக்க வேண்டும் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்னும் பல குறைகள் எல்லாம் உள்ளன. ஹௌஸிங்கில் என்னென்ன காரியங்கள் செய்யவேண்டும்—வாரியம் அமைக்க வேண்டாம் என்று எங்கள் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். அந்த வாதங்களையெல்லாம் நானும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். இந்த மாதிரி இப்பட்ஜட்டில் பல ஓட்டை உடைசல்கள் இருக்கின்றன. ஆதலால் இது சாதாரண மக்களின் பட்ஜட் அல்லது ஏதோ சாமான்யர்களின் பட்ஜட் அல்ல என்ற முறையில் இந்த பட்ஜட்டை நாங்கள் எல்லாம் ஏற்பதற்குத் தயாராக இல்லை என்று கூறி இத்துடன் என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

* **மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் வைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கை மீது காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் பொன்னப்ப நாடார் அவர்கள் உட்பட 81 உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். 175 திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களில் 38 உறுப்பினர்களும் திராவிட முன்னேற்றக் கழகம் அல்லாத மற்றக் கட்சிகளைச் சேர்ந்த 58 உறுப்பினர்களில் 43 உறுப்பினர்களும் இந்த விவாதத்தில் கலந்துகொண்டு அரிய கருத்துக்கள் பலவற்றை அவரவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிற கட்சிகளின் கொள்கைகளுக்கு ஏற்ப இங்கு விளக்கியிருக்கிறார்கள். அந்தக் கருத்துக்களில் சாதகமான கருத்துக்கள், பாதகமான கருத்துக்கள் எவை இருந்தாலும் அவைகள் அனைத்தும் இந்த ஆட்சிச் சக்கரம் நல்லமுறையில் சுழல்வதற்குப் பயன்படும் என்ற வகையில் கருத்து அறிவித்த எல்லாக் கட்சிகளினுடைய உறுப்பினர்களுக்கும் நான் என்னுடைய நன்றியையும், பாராட்டுதலையும் முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

வழக்கமாக ஆளுநரின் உரையின்மீது நடைபெறுகிற விவாதம் ஆளும் கட்சி உறுப்பினரால் பாராட்டுத் தீர்மானம் கொண்டுவரப்பெற்று அதற்குப்



1973 மார்ச் 7] [டாக்டர் மு. கருணாநிதி]

பிறகு விவாதம் தொடங்கும். முதல் அமைச்சருடைய அல்லது நிதி அமைச்சருடைய நிதிநிலை அறிக்கையின்மீது தொடங்குகிற விவாதம் வழக்கமாக எதிர்க்கட்சி முதலில் எதிர்த்துப் பேசி பிறகு விவாதம் தொடங்கும். ஆனால் முதல் தடவையாக என்று நான் கருதுகிறேன், இந்த மாமன்றத்தில் ஆளும் கட்சியின் சார்பிலும் தொடங்கப் பெறுமல் மரபுவழி எதிர்க்கட்சியின் சார் பிலும் தொடங்கப் பெறுமல் தோழமைக் கட்சியின் சார்பில் இந்த விவாதம் தொடங்கப்பெற்று ஆக ஆரம்பத்திலேயே இதற்கு எதிர்ப்பு இல்லை என்கிற அளவில் இந்த விவாதம் தொடங்கியிருப்பதைக் காண நான் மிகுந்த மகிழ்ச்சி யடைகிறேன். முஸ்லிம் லீக் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. வகாப் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையை ஆதரித்துப் பேசி நல் வாழ்த்துக்களைக் கூறி விவாதத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

இங்கு பேசிய கட்சித் தலைவர்களும், சில உறுப்பினர்களும், என்னுடைய அருமை நண்பரும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவருமான கே.டி.கே. தங்கமணி அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையில் அவர்களுடைய கருத்துக்களைக் கூறுவதற்கு முடியாமல் தடுக்கப்பட்டு விட்டார்கள் என்ற கருத்தினை எடுத்துச் சொன்னார்கள். கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் பேசியபோது, எனக்கு அது புரிந்தது. சுதந்திராக் கட்சியின் சார்பில் திரு. ஹாண்டே அவர்கள் பேசியபோது அது எனக்குப் புரிந்தது. ஆளும் காங்கிரஸ் கட்சியின் சார்பில் திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் தவிர மற்றவர்கள் பேசியபோதும் அது எனக்குப் புரிந்தது. ஆனால், பழைய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் வேறு சிலரும் பேசிய நேரத்தில் எனக்கு அது புரியவில்லை. ஏனெனில், இங்கே சுதந்திராக் கட்சியோ, கம்யூனிஸ்ட் கட்சியோ அல்லது ஆளும் காங்கிரஸ் கட்சியோ தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் ஆட்சிப் பொறுப்பை இது வரையில் ஏற்றுக்கொண்டு இருந்த கட்சிகள் அல்ல. ஆனால் நம்முடைய பொன்னப்ப நாடார் அவர்களுடைய காங்கிரஸ் கட்சி தமிழ் நாட்டை 20 ஆண்டுகாலம் அரசோச்சிய கட்சியாகும். அந்தக் கட்சியின் சார்பில் நம்மு டைய நிறுவன காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் என்னை 62 நாட்கள் பாளையங்கோட்டை சிறைச்சாலையில் பூட்டி வைத்து விட்டு இங்கே சட்டசபை நடத்துவதற்கு துணையாக இருந்தவர்கள். நம்முடைய மாண்புமிகு கல்வியமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் தண்டிக்கப்பட்டு சென்னைச் சிறைச்சாலையில் இருந்தபோது அவர் தலைமை வகிக்கும் பொதுக் கணக்காய்வுக் குழுவிற்கு ஒரு நாள் வந்த அதன் தலைமைப் பொறுப்பை ஏற்று, அந்தக் குழுவை நடத்தி வைக்க ஒரு நாள் விடுமுறை

கேட்டபோது, அதற்காக வெளியே வந்து விட்டுப்போக அனுமதி கேட்ட போது, அதை மறுத்த அன்றைய பழைய காங்கிரஸ் கட்சியினுடைய போக்குக்குத் துணையாக இருந்த திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் அதைப் பற்றிப் பேசும்போது தான் எனக்கு வேடிக்கையாக இருந்தது.

ஆனால், நடைபெற்று இருப்பது என்ன? திரு. தங்கமணி அவர்கள் மீது ஒரு வழக்கு. நான் அந்த வழக்கின் சாராம்சத்திற்குள்ளே நுழைய விரும்ப வில்லை, அது நீதிமன்றத்தின் படிக்கட்டிற்கு சென்றுவிட்ட காரணத்தால். ஏன் அதை அரசு திரும்பப் பெற்றுவிடக்கூடாது என்று ஹாண்டே அவர்கள் கேட்டார்கள். அது வேறு பிரச்னை. ஆனால் அவருக்கு நீதிமன்றத்தில் தரப் பட்டிருக்கும் நிபந்தனை அவர் சென்னையில் தங்கியிருக்கலாம் என்பதுதான். சென்னையிலே தங்கியிருக்கலாம் என்று அளிக்கப்பட்டிருக்கும் அந்தத் தீர்ப்பு எப்படி சட்டசபைக்கு அவர் செல்லக்கூடாது என்று தடுக்கிறது என்பது எனக்குப் புரியவில்லை. சென்னையில்தான் சட்டசபை நடந்து கொண்டு இருக்கிறது. முன்பு ஒரு காலத்தில் நடந்தது போல் உதகமண்டத்தில் சட்டசபை நடந்து, சென்னையில் திரு. தங்கமணி அவர்கள் தங்கியிருக்க வேண்டுமென்று சொன்னால், "ஐயோ! சட்டசபைக்கு அவர் வர முடியாமல் தடுத்து விட்டார்களே" என்று ஆதங்கப்பட நியாயம் இருகக முடியும். சென்னையில் சட்ட மன்றம் நடந்து கொண்டு இருக்கிறது. நம்முடைய நண்பர் திரு. ஹாண்டே அவர்கள் நேற்றோ அதற்கு முதல் நாளோ என்று கருது கிறேன்—இன்று படித்துக் காட்டிய நண்பர் தங்கமணி அவர்களின் கடிதத்தை என்னிடம் காட்டி அவர் சட்ட சபைக்கு வருவதற்கு விரும்புகிறாரே, ஏன், அவர் ஜாமீன் கோரினால் விட்டுவிடக் கூடாதா என்று கேட்டார்கள். நான் உடனே அவரிடத்தில் சொன்னேன், அது என் கையில் இல்லை என்பது உங்களுக்குத் தெரியும். "அது நீதிமன்றத்தில் இருக்கும் விஷயம். ஆனால், நான் உங்களுக்கு ஒரு செய்தி சொல்கிறேன். அவர்களுகசு அளிக்கப்பட்டு இருக்கும் தீர்ப்பில், அவர் சென்னையில் தங்கியிருக்கலாம் என்று இருக்கிறது. சட்டசபை நடவடிக்கைகளுக்கு வர எந்தத் தடையில்லை" என்று சொன்னேன். ஓகோ அப்படியா என்று கேட்டுக் கொண்டார். ஆறுதல் பெற்றுச் சென்றார். இங்கே பேசுகிறபோது அவர் அப்படித்தான் பேச வேண்டும், பேசினார். ஆனால் அவர்கள் எதிர்க்கட்சித் தரப்பிலிருந்து எடுத்துச் சொல்லப்பட்டக் கருத்துக்களை அதிலும் பொன்னப்ப நாடார் அவர்கள் சொன்னபோது நான் உள்ளபடியே வியப்பு அடைந்தேன்.

இப்போதும நாட்கள் ஒன்றும் ஆகிவிடவில்லை. இந்த மாமன்றம் இந்த மாதம் இறுதி வரையிலும், அதைத தாண்டி ஏப்ரல் திங்கள் முதல் வாரம்



வரையிலும் கூட நடைபெறக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. இதிலே கலந்து கொள்ளும் வாய்ப்பினை திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் பெறமுடியும்.

இந்த நிதி நிலை அறிக்கையில் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் நான் கோடிட்டுக் காட்டி இருக்கின்ற ஒரு முக்கியமான விஷயத்தில் கொஞ்சம் கருத்து வேறுபாடு கொண்டார்கள். குறிப்பாக திரு. சௌடி சுந்தரபாரதி அவர்களும், வேறு சில உறுப்பினர்களும் நிதி ஆணைக் குழு தலையாய இடத்தை மாநிலங்களுக்கு நிதி வழங்குவதில் பெற வேண்டுமென்று நான் சுட்டிக் காட்டி இருக்கின்ற கருத்துக்களை அவர்கள், தங்களுக்கு இருக்கின்ற வேறு பாட்டுக் கருத்தின் மூலமாக மறுத்துரைத்தார்கள். திரு. சௌடி சுந்தரபாரதி அவர்கள் நிதி ஆணைக்குழு மூலமாக மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்ற ஒரு கொள்கை சொல்லப்பட்டிருக்கிறது. அது ஒரு சரியான கொள்கையாக எனக்குத் தெரியவில்லை என்று இங்கே குறிப்பிட்டார்கள். நான் அவர்களுக்குச் சொல்லும் விளக்கம் எல்லாம், மாநில அரசுகள் மத்திய அரசிடமிருந்து நிதி பெற வழி வகுப்பதில் நிதி ஆணைக்குழுவே தலையாய இடம் பெறவேண்டுமென்றுதான் நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டிருக்கி றேனே அல்லாமல், திட்டத்திற்கு ஆகும் செலவுகளை நிதி ஆணைக்குழுவே கணக்கிலே எடுத்து பரிந்துரைக்க வேண்டும் என்பதும், நிதி ஆணைக்குழுவின் கொள்கைக்கு ஏற்ப ஆண்டுக்கு ஆண்டு திட்டங்களுக்காக மாநிலங்களுக்கு உதவி அளிப்பதில் திட்டக்குழுவிற்குப் பொறுப்பு கொடுக்கலாம் என்பதும் நம்முடைய கருத்தாகும். அதைத்தான் இந்த அறிக்கையில் நான் சுட்டிக் காட்டியிருக்கிறேன். நிதி ஒதுக்குவதில் திட்டக்குழுவிற்கு எந்தவிதமான பங்கும் இருக்கக்கூடாது என்பது என்னுடைய வாதமல்ல.

மத்திய வரிகளில் மாநில அரசின் பங்கு, நிதி ஆணைக்குழு கொடுக்கும் துண்டு மானியங்கள் இப்போதுள்ள நிலைமைகளில் நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைப்படி கொடுக்கப்படுகின்றன. அது அப்படியே இருக்கவேண்டு மென்று நாம் கூறுகிறோம். இவைகளை மாநில அரசு தன்னுடைய விருப்பப்படி செலவு செய்வதற்கான உரிமை பெற்ற அரசாக இருக்கிறது. ஆனால் திட்டக் குழு மாநில திட்டச் செலவுகளுக்கு என்று ஒதுக்கும் தொகையில்—அதை அனைவரும் அறிந்துகொள்வது நலம் என்று கருதுகிறேன்—திட்டக்குழு மாநிலங்களுடைய திட்டச் செலவுக்காக ஒதுக்குகின்ற தொகையில் உதவி யாகத் தருவது, கடன் உதவியாகத் தருவது, 70 சதவீதம், மானியமாகத் தருவது 30 சதவீதம்தான் என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும். அதிலே நான் சொல்வது இந்த உதவி மானியத்தைப் பொறுத்தவரையில் நிதி ஆணைக் குழுவின் பொதுவான பரிந்துரைப்படி, திட்டக் குழு மாநிலங்களுக்கு

கொடுக்கவேண்டுமென்பதும், மத்திய நிர்வாக சீரமைப்புக் குழுவின் கருத்தும் இதுவாகத்தான் இருக்கிறது என்பதாகும். திட்டக் கடன் உதவி, பெரிய குறிப்பிட்ட திட்டப்பணிகளுக்கு கடன் அளிப்பதற்கு அனைத்து இந்திய கடன் நிறுவனம் ஒன்று ஏற்படுத்தி, அதிலே மாநிலங்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கவேண்டும் என்பது இந்த அரசினுடைய கருத்தாகும்.

மத்திய அரசின் சார்பில் மாநிலம் நடத்தும் பணிகள் உதவி (சென்ட்ரலி ஸ்பான்சர்ட் ஸ்கீம்ஸ்) மத்திய அரசின் பல துறைகள் தொடங்கும் திட்டங்களை மாநிலத்தில் மாநில அரசு நடத்துவதற்கு உதவி ஆகியவைகளை எல்லாம் நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைக்கு உட்படுத்தவேண்டும் என்றுதான் சொல்லி இருக்கிறோமேயல்லாமல் எல்லாவற்றையும் நிதி ஆணைக்குழுதான் வழங்க வேண்டும், திட்டக்குழுவே அந்தப் பணியைச் செய்யவேண்டுமென்று நான் குறிப்பிடவில்லை.

இந்த நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் அவர்களுக்கு ஏற்பட்ட சில சந்தேகங்களை தங்களுடைய உரையில் குறிப்பிட்டார்கள். திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் ஒன்றைச் சுட்டிக் காட்டினார்கள். "பொதுச் சுகாதாரம் என்பதின் கீழ் வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு 12.45 கோடி ரூபாய், திருத்தப்பட்ட மதிப்பீட்டில் இதற்கான செலவு 10.04 கோடி ரூபாய் என்று காட்டப்பட்டிருக்கிறது, குறைந்து இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அதை அவர்கள் கவனித்து எடுத்துக்காட்டியதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் அவர்களுக்கு நான் விளக்கம் அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். வரவு செலவுத் திட்டத்தில் 12.45 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டு இருப்பதில், குடும்ப நல திட்டத்திற்காக நிதி ஒதுக்கம் 3.86 கோடியாகும். இதை நீக்கி விட்டுப் பார்த்தால் 8.59 கோடி ரூபாய்தான் பொதுச் சுகாதாரத்திற்காக நிதி ஒதுக்கப் பட்டது. இப்போது ஒதுக்கப்பட்டிருக்கிற 10.04 கோடி ரூபாயில் இந்த குடும்ப நல திட்டத்திற்காகச் செலவு செய்யப்படுவது அதிலே சேரவில்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி: அதே நேரத்தில் அடுத்தப் பக்கத்தில் பார்த்தால் குடும்ப நலத் திட்டத்திற்காக 6 கோடி ரூபாய் செலவு செய்யப் பட்டிருக்கிறது. அது எப்படி வந்தது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அதைத்தான் நான் சொல்கிறேன். குடும்ப நலத் திட்டத்திற்காக 6 கோடி தனியாகப் போடப்பட்ட காரணத்தால் இதிலே அதைச் சேர்க்கவில்லை. பொதுச் சுகாதாரம் நிதி ஒதுக்கீடு 8.59 கோடி ரூபாய், திருத்த மதிப்பீடு 10.04 கோடி ரூபாயாக உயர்ந்து இருக்கிறது என்று



நாம் தெரிந்துகொள்ள முடியும். பொதுவாக மருத்துவம், மக்கள் நல்வாழ்வு, குடும்ப நலத் திட்டம் என்ற மூன்று துறைகளுக்கும் 1972-73 வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு ரூ. 34.69 கோடி மொத்த மதிப்பீடு. திருத்தப்பட்ட மதிப்பீடு 38.9 கோடி ரூபாயாக உயர்ந்து இருக்கிறது. இது பட்ஜெட் டிடெயில்ஸ் என்ற புத்தகத்தில் பார்த்தால் விளக்கமாகத் தெரியும்.

திரு. ஹாண்டே அவர்கள் இதே போன்று இன்னொரு கருத்தைச் சொன்னார்கள். வேளாண்மைக்காக செலவிடப்படும் திட்டத்தொகை குறைந்து வருவதாகச் சொன்னார்கள். அதிலே இருப்பதை எடுத்துக் காட்டினார்கள். 1972-73 வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு இதற்கு 619 லட்சம் ரூபாய், 1972-73 திருத்த மதிப்பீடு நிதி ஒதுக்கீடு 564 லட்சம் ரூபாய் என்று இருப்பதை அவர்கள் எடுத்துக் காட்டினார்கள். இதிலே திட்டச் செலவு, திட்டம் இல்லாத செலவுகள் என்று இரண்டு இருக்கின்றன. நாம் அந்தக் குழப்பம் நீக்கப்படவேண்டுமென்று அடிக்கடி நிதி நிலை அறிக்கையில் பேசுகிற நேரத்தில் எடுத்துச் சொல்லி வருகிறோம். திட்டச் செலவு, திட்டமில்லாத செலவு என்று இரண்டையும் சேர்த்து கொடுக்கவேண்டுமென்று அடிக்கடி எடுத்துக் காட்டி வருகிறோம். ஆனால் இந்த ரூ. 619 லட்சத்தில் திட்டச் செலவு ரூ. 564 லட்சம். திட்டச் செலவு குறைந்து இருக்கிற அதே நேரத்தில் வேளாண்மைத் துறைக்கு திட்டம் இல்லாத செலவுகளின் மூலமாக நிறைய ஒதுக்கப்பட்டு இருக்கிறது. இந்த 619 இலட்சம் ரூபாய் திட்டத் செலவோடு 1972-73-ல் நிதி ஒதுக்கீடு 20.16 கோடி ரூபாய்தான். ஆனால் திருத்தப்பட்ட மதிப்பீடு 24.18 கோடி ரூபாயாக இருக்கிறது. ஆகவே, அது குறைந்துவிடவில்லை. திட்டச் செலவு என்ற வகையில் பார்த்தால் திரு. ஹாண்டே அவர்கள் சொன்னது சரியாக வரும். ஆனால் திட்டச் செலவு, திட்டம் இல்லாத செலவு என்று இணைத்து பார்க்கிற நேரத்தில் பொதுவாக வேளாண்மைத் துறைகு நாம் செலவு செய்யும் பணம் எதுவும் குறைந்துவிடவில்லை என்று நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

ஆளும் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த திரு. காசிராமன் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். அவர்கள் இங்கு இல்லாவிட்டாலும், அவர்கள் சொன்ன கருத்து பத்திரிகையில் வந்திருக்கின்ற காரணத்தினால் நான் அதற்குப் பதில் அளிக்கவேண்டிய கடமை உடையவனாக இருக்கிறேன். அவர்கள் எடுத்துக் காட்டிய குறிப்பு, "1966-67-ல் நிலவரி, பாசன வரி, செஸ் வரி, விவசாய வருமான வரி இவைகள் எல்லாம் சேர்ந்து, இந்த அரசுக்கு இவைகளின் மூலம் மொத்தம் ரூ. 840 லட்சம் கிடைத்திருக்கிறது. இந்த ஆண்டு, அதே இனங்களில் இந்த அரசுக்குக் கிடைக்கும் தொகையும் ரூ. 840 லட்சம்தான். எனவே, இதிக்

மாற்றம் இல்லை, எந்த வரியும் குறைக்கவில்லை, ஆகவே நில வரியைக் குறைத்தோம் என்று சொல்வது ஒரு மாயை 'மித்' என்று திரு. காசிராமன் அவர்கள் அன்றைக்கு குறிப்பிட்டார்கள். இதற்கு நான் விளக்கம் அளிக்க வேண்டுமானால், விவசாய வருமான வரியில் நாம் செய்திருக்கிற மாற்றங்களை மறந்துவிடக்கூடாது. 5 ஏக்கர் வரையிலே நஞ்சைக்கும், புஞ்சை நிலத்திற்கும் அடிப்படை நிலத் தீர்வை இல்லை என்று நாம் அறிவித்துவிட்ட பிறகு, பணப் பயிர்கள் செய்துகொண்டிருக்கிற வசதி படைத்த விவசாயிகளுக்கு விவசாய வருமான வரியை நாம் இங்கே உருவாக்கி, அதன் மூலமாகக் கொஞ்சம் அதிகமான பணத்தையும் பெறுகிறோம். அதையும் நாம் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். அப்படி கணக்கில் எடுத்துக்கொள்வது மாத்திரம் போதாது. இந்த நிலவரியை வசூலிப்பது பொறுத்தமட்டில் ஒவ்வொரு ஆண்டுக்கும் எவ்வளவு கிடைக்கின்றது என்ற கணக்கைவிட, ஒவ்வொரு ஐந்து ஆண்டு காலத்திற்கும் சராசரி எவ்வளவு கிடைத்திருக்கிறது என்பதைக் கணக்கிடவேண்டும். ஏனென்றால், சில ஆண்டுகளில் வரிவஜா அல்லது தவணை என்கின்ற இவைகளெல்லாம் வந்து சேரும். ஆகவே, ஒரு ஐந்தாண்டுக் கணக்கை எடுத்துப் பார்த்து, சராசரி பார்த்தால், 1966-67 முடிய, திரு. காசிராமன் குறிப்பிட்டுக் காட்டிய 1966-67 முடிய உள்ள ஐந்து ஆண்டுகளுக்கு நில வரியின் கீழ் சராசரி வருவாய் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 8 கோடி. அதே போல 1973-74-ம் ஆண்டோடு முடிவடைகிற ஐந்து ஆண்டுகளுக்கு சராசரி நில வரி வருவாய் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 6.3 கோடி. ஆகவே, ரூ. 2 கோடி அளவுக்கு குறைந்திருக்கிறது. அடிப்படை நில வரியை ரத்து செய்ததன் காரணமாக சாதாரண விவசாயிகளுக்கு இந்தச் சலுகைகள் மூலம் பயன் கிடைத்திருக்கிறது. இன்னும் போகப் போக இந்த வரியின் மூலம் கிடைக்கின்ற தொகை குறையக்கூடுமே அல்லாமல், அதிகரிப்பதற்கு வாய்ப்பு வசதிகள் இல்லை என்பதனையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய பழைய காங்கிரஸ் கட்சியின் சார்பில் பேசிய கம்பம் தொகுதியைச் சேர்ந்த திரு. கோபால் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். "1965-66-ல் தொழில் அபிவிருத்திக்காக ரூ. 6.56 கோடி ஒதுக்கப்பட்டது, 1973-74-ல் ரூ. 4.48 கோடிதான் ஒதுக்கப்பட்டிருக்கிறது" என்று சொன்னார்கள். அவர்கள் பட்ஜெட் மெமோராண்டம் பக்கம் 37-ஐப் பார்ப்பார்களேயானால், ஒன்றைப் புரிந்துகொள்ளலாம். எண் 35 "தொழில்கள்" என்ற தலைப்பில் ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை 1965-66-ம் ஆண்டுக்கு ரூ. 6.56 கோடி ஆகும். வரும் ஆண்டில் அதே எண் 35-ல் "தொழில்கள்" என்ற தலைப்பில் ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை ரூ. 7.80 கோடி ஆகும். தொழில்கள் என்ற தலைப்பின்



கீழ் ஒதுக்கப்பட்ட தொகை நான்கு கோரிக்கைகளின் கீழ் வருகிறது என்பதையும் மறந்துவிடக்கூடாது. சென்ற ஆண்டையும், அதற்கும் முந்தைய ஆண்டையும் பார்த்தால் இரண்டு, மூன்று ஆண்டுகளாகத் தான் இம்மாதிரி தனித் தனியாக கோரிக்கைகள் வைக்கப்படுகின்ற ஒரு முறையை நாம் கடைப்பிடித்து வருகிறோம். இந்தக் கோரிக்கைகளையெல்லாம் சேர்த்துத்தான் 1965-66-ல் திரு. கோபால் அவர்கள் சொன்னதுபோல ரூ. 6.56 கோடி தொழிலுக்காக ஒதுக்கப்பட்டது. இதில் ஒரு கோரிக்கையை மாத்திரம் எடுத்துச் சொல்வது சரியல்ல. ஆனால் "டான்சி" நிறுவனத்திற்கு ரூ. 3.35 கோடி ஒதுக்கியதும் அடங்கியிருக்கிறது. இப்பொழுது டான்சி நிறுவனத்தின் மூலம் செலவழிக்கப்படுகின்ற தொகை ரூ. 7 கோடி, அதிலே இது அடங்காமல் தனியாக செலவழிக்கப்படுகிறது. இது மாநில நிதிநிலை அறிக்கையில் இப்பொழுது தொழில்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூ. 7.5 கோடிக்கும் மேற்பட்டது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. ஆகவே, இந்த இரண்டையும் கணக்கில் எடுத்துக்கொண்டால் 1965-66-ல் ரூ. 6.56 கோடி தொழில் வளர்ச்சிக்காக செலவிடப்பட்டது என்பதற்கு மாறாக, இப்பொழுது சுமார் ரூ. 15 கோடி அளவில் அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்ற உண்மை புலனாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜேம்ஸ் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையின் மீது பேசினார்கள். அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையை இங்கு சமர்ப்பிப்பதற்கு முதல் அமைச்சருக்கு உரிமையே கிடையாது என்று பேசினார்கள். நல்ல வேளையாக அப்படிப்பட்ட தகுதியற்ற ஒருவர் நிதிநிலை அறிக்கையை இங்கே வைத்த காரணத்தினால், அதிலே தான் பேச முடியாது என்று சொல்லிவிடாமல், என்பால் அன்பு வைத்து, அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையில் தன்னுடைய ஆழ்ந்த கருத்துக்களையெல்லாம் எடுத்துச் சொன்னதற்கு, திரு. ஜேம்ஸ் அவர்கள் இங்கே இப்பொழுது இல்லாவிட்டாலும், திரு. பொன்னப்ப நாடார் அவர்களின் மூலம் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜேம்ஸ் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். "1966-67-ம் ஆண்டில் ரூ. 194 கோடி வருமானம் இருந்தது மாநில அரசுக்கு. 1973-74-ல் ரூ. 465 கோடி வருமானம் மாநில அரசுக்கு என்று சொல்லிவிட்டு 465-லிருந்து 194-ஐக் கழித்தார்கள். கழித்து, ஆக 271 கோடி ரூபாய் வரி அதிகமாக மக்கள் மீது சுமத்தப்பட்டிருக்கிறது". ஆக வருமானம் முழுவதையும் வரி என்று கணக்கில் எடுத்துக்கொண்டு ரூ. 465 கோடி வரி இப்பொழுது, 1966-67-ல் ரூ. 194 கோடி வரி, ஆக 465-ல் 194 போனால் ரூ. 271 கோடி என்று கணக்கிட்டு

றொன்றைச் சொன்னார்கள். இது சுலபமான வாதம். "7-ம் 8-ம்—15" என்று சொல்கிறார்கள். நாம் அதை மறுக்கிறோம். "7-ம் 8-ம்—15 என்பதை எப்படி மறுக்கிறாய்" என்று கேட்கிறார்கள்.

நாம் சொல்வதெல்லாம் சந்தேகமின்றி 7-ம் 8-ம்—15-ம் தான். ஆனால் 7-ஐ நீங்கள் எப்படிக் கண்க்கிடுகிறீர்கள் என்றால், 4-ம் 2-ம் -7 என்று கணக்கிட்டு, பிறகு 7-ம், 8-ம்—15 என்றுதான் சொல்கிறீர்கள்' என்றுதான் பதில் அளிக்கிறோம். அந்த வகையில் திரு. ஜேம்ஸ அவர்கள் குறிப்பிட்ட ரூ. 194 கோடி மாநில அரசுக்கு வரி மூலமாக 1966-67-ல் வருமானம் வந்திருக்கிறது என்பது அதுவும் தவறு. 1973-74-ல் ரூ. 465 கோடி வரி மூலம் வந்தது என்பது அதுவும் தவறாகும். இந்த வருமானத்தில் பல இனங்கள் சேருகின்றன. 1966-67-ல் ரூ. 29 கோடியாக இருந்த மத்திய வரியின் பங்கு இப்பொழுது ரூ. 96 கோடியாக உயர்ந்திருக்கிறது. அம்மையார் அவர்களுக்கு ரொம்ப சந்தோஷமாக இருக்கும். பாருங்கள், 1966-67-ல் மத்திய அரசு ரூ. 29 கோடி தான் கொடுத்தது, இப்பொழுது ரூ. 96 கோடி கொடுக்கிறது, இப்படிக் கொடுத்தும்கூட கருணாநிதி மாற்றாந்தாய் மனப்பான்மை என்று சொல்கிறாரே, அது நியாயமா என்று கேட்பதற்கு அவர்களுக்கு மேடைக்கு ஒரு சரியான பாயிண்டு கிடைத்தது என்று கருதுகிறேன். ஆனால், நான் சொல்ல விரும்புவதெல்லாம் தமிழ்நாட்டிலும் சேர்த்து வசூல் பண்ணுகின்ற வரிப் பணத்திலிருந்து தான் மத்திய அரசு பங்குத் தொகையை அளித்து வருகிறது என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. மத்திய அரசின் மூலம் ரூ. 29 கோடி வந்த வரிப் பங்கு இப்பொழுது ரூ. 96 கோடியாக உயர்ந்திருக்கிறது. 1966-67-ல் ரூ. 23 கோடியாக இருந்த மத்திய அரசினுடைய உதவித்தொகை இப்பொழுது ரூ. 89 கோடியாக உயர்ந்திருக்கிறது. இதையெல்லாம் கழித்துப அதாவது நான்-டாக்ஸ் ரெவின்யூ ரூ. 46 கோடியாக இருந்தது. அது இப்பொழுது ரூ. 54 கோடியாகியிருக்கிறது. 1966-67-ல் வரி தவிர்த்த வருமானம் பார்த்தால் 1966-67-ல் வரி ரூ. 194 கோடி அல்ல, வருமானம் ரூ. 194 கோடி. அதிலே வரி மாத்திரம் ரூ. 95 கோடிதான் 1966-67-ல் அதைப்போல கழித்துப் பார்த்தால் இப்பொழுது மாநில வரி ரூ. 225 கோடி. 1966-67-ல் ரூ. 95 கோடி வரி. இப்பொழுது மாநில வரி ரூ. 225 கோடி. இது எந்த புதிய வரிகளையும் தாங்க முடியாதவர்கள் மீது போட்டு உயர்ந்த வரி அல்ல என்பதையும இந்த அவையிலே பல நேரங்களில் அமைச்சர்களும் நானும் எடுத்து விளக்கியிருக்கிறோம். பழைய வரிகளை சிறிது உயர்த்தியதாலும், சீரமைப்புகள் பலவற்றைச் செய்ததாலும், நாட்டில் நம்முடைய மாநிலத்தில் தொழில் வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சி இவைகளிலே நாம் உண்டாக்கிய முன்னேற்றங்களினாலும் ரூ. 95 கோடி என்கின்ற அந்த வரி 7 ஆண்டு காலத்தில் ரூ. 225



கோடியாக உயர்ந்திருக்கிறது. இந்த 7 ஆண்டு காலத்தில் இவ்வளவு உயரலாமா? ஒரு நல்ல கேள்வி. ரூ. 95 கோடியாக இருந்த வரி 7 ஆண்டு காலத்தில் ரூ. 225 கோடியாக உயரலாமா என்பது நல்ல கேள்விதான். அதே நேரத்தில் 1967-க்கு முன்பு ஒரு ஏழு ஆண்டு காலம் நாம் பின்நோக்கிச் சென்று பார்க்கவேண்டும். 1967-க்கு ஏழு ஆண்டுக்கு முன்பு 1959-60-ல் ரூ. 39 கோடியாக இருந்த வரி, 1966-67-ல் ரூ. 95 கோடியாக உயர்ந்திருக்கிறது. இது 2.46 மடங்கு அதிகம். 1959-60-ஐக் காட்டிலும் 1966-67-ல் உயர்ந்த வரி 2.45 மடங்கு அதிகம். அதை ஒப்பிட்டுப் பார்த்தால், இந்த ஏழு ஆண்டு **பி.ப.**
காலத்தில் 95 கோடி ரூபாயாக இருந்தது 225 கோடி ரூபாயாக உயர்ந்திருப் **1-30**
பது 2.36 மடங்குதான் அதிகம் என்பதை நன்றாகப் புலப்படுத்தும். ஆகவே, முந்தைய ஏழாண்டு காலங்களிலே பார்க்கிறபோது, 2.45 மடங்கு உயர்ந்திருக்கிறது. இப்பொழுது ஏழாண்டு காலங்களிலே 2.36 மடங்குதான் உயர்ந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** இந்த ஆறு, ஏழு ஆண்டு காலங்களிலே—ஆறு ஆண்டு காலத்தைத்தான் எடுத்துக்கொள்ள வேண்டும்—1967-லிருந்து 1973 வரை 130 கோடி ரூபாய் அளவுக்கு வரியிலே உயர்வு இருக்கிறது என்பதை ஒப்புக் கொள்கிறீர்களா என்பதுதான் கேள்வி.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** ஒப்புக்கொள்ளாவிட்டால் வரி வராதே.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** மதிப்பிற்குரிய முதலமைச்சரவர்கள் திரு. கோபால் அவர்கள் பேசியதற்கு பதில் சொன்னார்கள். கோபால் அவர்கள் இன்னும் ஒரு கருத்தைச் சொன்னார்கள். விளம்பரத்திற்கு ஏராளமான பணம் செலவு செய்கிறார்கள் அது எதற்காக என்று சொன்னார்கள். அதற்கு பதில் என்ன ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** திரு. ஹாண்டே அவர்களுக்கு இவ்வளவு அவசரம் கூடாது. அடுத்த பாயிண்ட் அதுதான். திரு. கோபால் அவர்கள் சொன்னார்கள், குறித்து வைத்திருக்கிறேன். அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது—இரண்டாண்டு காலத்திலே பத்திரிகை விளம்பரச் செலவுகளுக்காக ரூ. 2.18 லட்சம் என்றும், அது இப்போது அதிகமாகிவிட்டது என்றும் திரு. கோபால் அவர்கள் குறிப்பிட்டார்கள். முதலிலே ஒரு விளக்கத்தை சொல்ல விரும்புகிறேன்.

[டாக்டர் மு. கருணாநிதி] [1973 மார்ச் 7

அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது சிட்கோ, சிப்காட், சுற்றுலா வாரியம், குடிசைமாற்று வாரியம், குடிநீர் வடிகால் வாரியம் ஆகியவை இல்லை. இப்போது இந்த நிறுவனங்களின் சார்பாகவும் விளம்பரங்கள் தரப்படுகின்றன. அது மட்டுமல்ல. 1969-க்குப் பிறகு பத்திரிகைகளின் விளம்பரக் கட்டணங்களை உயர்த்தியிருக்கிறார்கள். திரு. கோபால் அவர்கள் பேச்சை கட்டம் கட்டிப் போட்ட பத்திரிகைகளுக்கேகூட இது நன்றாகத் தெரியும்; பத்திரிகை விளம்பரக் கட்டணங்களை உயர்த்தியிருக்கிறார்கள். அப்படியே இருந்தாலும்கூட, திரு. கோபால் அவர்கள் சொன்னது தவறான கணக்காகும்.

அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்து ஆட்சி புரிந்த இரண்டாண்டு காலத்தில் 2.18 லட்சம் ரூபாய்தான் விளம்பரங்களுக்கு செலவிட்டார்கள் என்பது தவறு. முற்றிலும் தவறு. 1967-68-ல் மாத்திரம் அண்ணா அவர்கள் ஆட்சி புரிந்தபோது 5,20,945 ரூபாய், 1968-69-ல் 8,09,151 ரூபாய் ஆக 13 லட்சத்திற்கு மேல் அந்த இரண்டாண்டு காலத்தில் விளம்பரத்திற்காக அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது தரப்பட்டிருக்கிறது. 1969-70ம் ஆண்டிலே 12 லட்சம் ரூபாய், 1970-71-ம் ஆண்டில் 20,43,000 ரூபாய், 1971-72-ல் 24,83,000 ரூபாய். இந்த மூன்று, நான்கு ஆண்டு காலத்தில் விளம்பரத்திற்காக மொத்தம் செலவிட்ட தொகை 57 லட்சம் ரூபாய். இதிலே அவர்கள் குறிப்பிட்டார்கள்—1½ லட்சம் ரூபாய்க்கோ, 2 லட்சம் ரூபாய்க்கோ முரசொலிக்கு விளம்பரம் தந்துவிட்டார்கள் என்று. உண்மை. 57 லட்சம் ரூபாயில் 1½ அல்லது 2 லட்சம் ரூபாய் முரசொலிக்கு விளம்பரம் தந்ததுபோக மிச்சம் உள்ள 55 லட்சம் ரூபாய் மற்ற பத்திரிகைகளுக்கு விளம்பரத்திற்காகத் தரப்பட்டிருக்கிறது. ஆகவே, ஒரு பெரிய தவறு நடந்துவிட்டதாக யாரும் சொல்லமுடியாது.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** முரசொலிக்கு விளம்பரம் கொடுத்ததற்காக நாங்கள் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் சர்க்குலேஷன் எந்த அளவுக்கு இருக்கிறதோ அந்த அளவுக்குக் கொடுக்க வேண்டும் என்று கோபால் அவர்கள் இங்கே சொன்னார்கள். நானும் அதைத்தான் சொல்கிறேன்.

What is the basis on which the advertisement is given? What is the circulation of 'Murosoli' and whether the advertisement is proportionate to its circulation. That is the only question I want to ask and if the Hon. Chief Minister gives the figures, it would be more useful to the House and also we would be having an objective assessment of the problem.



1973 மார்ச் 7]

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நான் சொல்கிறேன் அதைப்பற்றி. விளம்பரச் செலவு இங்கே மாத்திரம் உயர்ந்திருக்கவில்லை. மத்திய அரசிலே பார்த்தால்கூட 1963-64-ல் 55 லட்சம் ரூபாயாக இருந்தது 1971-72-ல் 115 லட்சம் ரூபாயாக அங்கே உயர்ந்திருக்கிறது. எந்த அடிப்படையிலே தரப்பட வேண்டுமென்று சொன்னார்கள். அன்றைக்கு செய்தித் துறை அமைச்சர்கள் மாநாட்டில் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் எந்த அடிப்படையில் தரவேண்டுமென்ற கருத்தைச் சொன்னார்கள் என்றால், அதைப் படிக்கிறேன்—கேட்டுக் கொள்ளுங்கள்.

"டிசம்பர் மாதம் 8-ந் தேதி புது டில்லியில் செய்தி விளம்பரத் துறை அமைச்சர்கள் மாநாட்டை ஆரம்பித்து வைத்து பேசும்போது "அரசாங்க விளம்பரச் சாதனங்கள் அரசாங்கத்தினுடைய கொள்கைகளைப் பரப்புவதற்குத்தான் பயன்படுத்த முடியுமே தவிர, அரசாங்கத்தின் கொள்கைகளைக் கடுமையாக விமர்சிக்கின்றவர்களுக்காக அல்ல" என்பதை இந்தியப் பிரதமர் தெரிவித்தார்.

இன்னும் சொன்னார், "மக்கள் ஒரு அரசாங்கத்தை அவர்களுடைய கொள்கைகளை அமுல் நடத்துவதற்காகத் தேர்ந்தெடுத்து இருக்கும்போது, அந்த மக்களுடைய வரிப் பணத்திலிருந்து செலவு செய்யக்கூடிய இந்த விளம்பரம், அந்தக் கொள்கைகளை ஏற்றுக்கொள்கின்ற முறையில் இருக்க வேண்டும் என்றும் பிரதமர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனாலும்கூட, இந்தியப் பிரதமர் அவர்கள் தெரிவித்த அதே கொள்கையிலேதான் இங்கே விளம்பரங்கள் தரவேண்டுமென்று நான் வைதீக முறையில் இல்லாமல் கொள்கை வேறுபாடு இருந்தாலும், அவதூறாக—பொய்யாக இந்த அரசாங்கத்தை இழித்தும் பழித்தும் வேண்டுமென்றே செய்திகளை வெளியிடுகிற பத்திரிகைகளை ஒதுக்கிவிட்டு, மற்றப் பத்திரிகைகளுக்கு விளம்பரம் தருகிறோம். இந்திரா காந்தி அவர்கள் சொன்ன அந்த கொள்கை வேறுபாடு என்கிற அந்த அடிப்படைகூட இல்லாமல் எல்லா பத்திரிகைகளுக்கும் இந்த அரசாங்கம் விளம்பரம் தந்துகொண்டிருக்கிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** அப்படியென்றால் நியூட்ரல் பேப்பர்ஸ் எத்தனையோ இருக்கின்றன. அவைகளுக்குக் கொடுத்திருக்கலாம். தனிப்பட்ட பத்திரிகைகளுக்கு மட்டும் என்றில்லாமல் மக்கள் மத்தியிலே 'நியூஸ் வால்யூ' இருக்கின்ற பத்திரிகைகளும் இருக்கின்றன. அவைகளுக்குக் கொடுக்கலாம், உங்கள் கட்சிப் பத்திரிகைகளுக்கு மட்டும் கொடுக்கிறீர்கள் என்றால் இது நியாயமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நான் ஏற்கெனவே சொன்னேன். 57 லட்சம் ரூபாயில் 55 லட்சம் ரூபாய் மற்ற பத்திரிகைகளுக்கு கொடுக்கப்படுகின்றது. 1½ அல்லது 2 லட்சம் ரூபாய் முரசொலிக்குத் தரப்படுகிறது என்று திரு. கோபால் அவர்கள் சொன்னார்கள். அது முரசொலிக்குத் தரப்படுகிறது. அதிலே தவறு எதுவுமில்லை. அது தொடர்ந்து நடத்தப்படும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE: What is the circulation of ' Murasoli ' and what is the amount given towards advertisement charges and whether it is proportionate to its circulation? Of course, the Hon. Chief Minister says that he is not going to give advertisement to newspapers which criticise him harshly. That is a different matter which I do not want to go into now. Also what is the circulation of newspapers like ' Dinamani ', ' The Hindu ' and ' The Indian Express ' which the Government consider as neutral papers and what is the amount given to them towards advertisement charges? I am asking a specific question and I want a specific answer. In this connection, I want to point out that so far as the circulation of ' Murasoli ' is concerned, it is about 15,000. If it is more than 15,000 it has to pay 2 paise extra as tax to the Central Government and that is a different matter. So, I request the Hon. Chief Minister to clarify whether the amount of advertisement charges is commensurate with its circulation.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இந்தக் கேள்விக்கு இந்த அவையிலே அமைச்சராக இருந்த திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். விளம்பரம் பத்திரிகைகளின் எண்ணிக்கையைப் பார்த்துக் கொடுப்பது இல்லை என்றும் பத்திரிகையின் 'டோன் அண்டு கன்டென்ட்' ஆகியவைகளைப் பொறுத்துத்தான் கொடுக்கப்படும் என்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். (டாக்டர் எச். வி. ஹாண்டே: நான் சர்க்குலேஷனைப்பற்றிக் கேட்டேன்). இந்த அவையில் அன்றைய சர்க்குலேஷன் பற்றி ஏற்கெனவே டில்லிக்குப் கொடுக்கப்பட்ட பதிலில்—நீங்கள் டில்லியிலே கொண்டுபோய்க் கொடுத்த புகார் பட்டியலுக்கு அளிக்கப்பட்ட பதில் புத்தகத்தில் இருக்கிறது. திரு. ஹாண்டே அவர்கள் அதை ஓய்வாகப் படித்துத் தெரிந்துகொள்ளலாம்.

அடுத்து, மிக முக்கியமான விலைவாசி உயர்வு குறித்து இந்த மாமன்றத்திலே எல்லா உறுப்பினர்களும் எடுத்துக் காட்டினார்கள். அதற்கு இந்த அரசு கவலைப்படவில்லை; கொஞ்சம்கூட சிந்தித்துப் பார்க்கவில்லை என்று



திரு. பொன்னப்ப நாடார் அவர்களும், ஹாண்டே அவர்களும் வேறு சில உறுப்பினர்களும் சுட்டிக் காட்டினார்கள். நம்முடைய கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் பெரியவர் மணலி அவர்களும் நேற்றையதினம் சொன்னார்கள். 'இதற்கெல்லாம் நீங்கள் யாரும் கவலைப்படவில்லை' என்று சொன்னார்கள். கவலை எடுத்துக்கொள்ளவில்லை என்று திரு. ஹாண்டே அவர்கள் சொன்னதை அவர்களே மறந்திருக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். மத்திய அரசும் மாநில அரசும் மட்டுமே இந்தப் பிரச்சினையில் கவலைப்படவேண்டுமே அல்லாது பாமர மக்கள் கவலைப்பட வேண்டியதல்ல என்று குறிப்பிட்டார்கள். அதோடு வாக்கியத்தை நிறுத்திவிடக் கூடாது. பாமர மக்கள் கவலைப்பட மாட்டார்கள். ஆனால் நாமே இந்த மன்றத்திலே விவாதித்து இதற்கு யார் பொறுப்பு என்பதை அக்கறை செலுத்தியாக வேண்டும். அதை மக்கள் இடத்தில் எடுத்துச் சொல்லியாக வேண்டும்.

திரு. மணலி அவர்கள்கூட சொன்னார்கள். பழையகால மித்திரன் பத்திரிகையில் இருந்து ஒரு பாட்டை எடுத்துக்காட்டி, இந்தப் பாட்டை ஆளுங் கட்சி உறுப்பினர்கள் எல்லோரும் பாடுங்கள் என்றுகூடச் சொன்னார்கள். தமிழிலும் பாடலாம். மலையாளத்திலும் அதை மொழி பெயர்த்து கேரளத்திலும் போய் பாடலாம். அகில இந்தியாவில் எல்லா மாநிலங்களிலுமே பாடவேண்டிய பாட்டாகத்தான் அந்த பாட்டு இருக்கிறது. இதைக் கேலியாகச் சொல்லவில்லை. அவர்கள் சொன்ன இலக்கிய நயத்தோடு பதிலளிக்க வேண்டுமென்று விரும்புகிறேன். இது ஒரு மாநிலத்தின் பிரச்சினையாக இல்லாமல் இந்தியாவிலே இருக்கிற எல்லா மாநிலங்கள் பிரச்சினையாகவும் இருக்கிறது. அந்த முறையிலே இந்தப் பயங்கரமான பிரச்சினையை அணுகி ஆகவேண்டும். இதற்கு நாம் மத்திய அரசு பொறுப்பு என்று சொல்கிற நேரத்தில் மக்களிடத்திலிருந்து எப்படியாவது தப்பித்துக் கொள்ளவேண்டும் என்பதற்குச் சொல்லவில்லை. ஒரு உண்மையைச் சொல்கிறோம்.

அதற்கு விளக்கம் அளிக்கிறோம். அந்த விளக்கம் ஏற்கனவே இருந்த பழைய அரசுகளால் அளிக்கப்படவில்லை. அப்போது எப்படி விளக்கம் அளிக்கப்பட்டதென்றால், விலைவாசி உயர்ந்துவிட்டால், அப்போது தரப்பட்ட பதிலெல்லாம், அப்படித்தான் விலைவாசி உயரும், என்பதுதான். விலைவாசி உயர்ந்துவிட்டது என்று நாங்கள் கிளர்ச்சியில் ஈடுபடுகிறோம் என்றால், அது கேலி புரியப்பட்டது. அரிசிக்காக கியூ நிற்கிறார்களே என்று சொன்னால், சினிமாவிற்கு கியூ நிற்கவில்லையா என்கின்ற கேள்வியின் மூலம் பதிலளிக்கப்பட்டது. இன்று இங்கே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்களும், மாண்புமிகு

உறுப்பினர்களும் எதிரொலித்த அதே கருத்துக்களை இந்த அவைகம் எதிரொலிக்கக் கடமைப்பட்டிருக்கின்றது. நாங்கள் பொறுப்பிலேயிருந்து தட்டிக் கழித்துவிட என்றைக்கும் நினைத்ததில்லை. நினைக்க விரும்பியதுமில்லை. ஆனால் உண்மை நிலைமைகளை மக்களுக்கு உணர்த்த நாம் அனைவரும் கடமைப் பட்டிருக்கின்றோம்.

ஒவ்வொரு நாட்டிலும்; (1) தேசிய வருமான வளர்ச்சி, (2) நாணயப் புழக்கம் Money supply —இந்த இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்தாக வேண்டும். அப்படிப் பார்த்தால், இங்கே கவர்ன்மெண்ட் ஆப் இந்தியா வெளியிட்டிருக்கின்ற "இகானமிக் சர்வே 1972-73"—அந்தப் புத்தகத்தில், மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். 1968-ம் ஆண்டைவிட 1968-69-ல் தேசிய வருமான வளர்ச்சி 7 விகிதம்தான் உயர்கிறது. அதே நேரத்தில் நாணயப் புழக்கம் 8.1 சதவிகிதம் என்று உயர்கிறது. 1969-70-ல், 1968-69-ஐ விட தேசிய வருமான வளர்ச்சி 7.3 சதவிகிதம் என்று உயருகிறது. நாணயப் புழக்கம் 10.8 சதவிகிதம் என்று உயருகிறது. 1970-71-ல் தேசிய வருமான வளர்ச்சி முன் ஆண்டைவிட 4.6 சதவிகிதம் அதிகமாகிறது. அதே சமயத்தில் நாணயப் புழக்கம் முன் ஆண்டைவிட 11.1 சதவிகிதம் அதிகமாகிறது. ஆனால், திடீரென்று பயங்கரமாக 1971-72-ல் தேசிய வருமான வளர்ச்சி 1.5 என்ற வீதத்திலிருந்து இரண்டு புள்ளி என்று இழுபறி நிலைக்குப் போய் நிற்கிறது. அதற்கு மாறாக, நாணயப் புழக்கம் 12.9 சதவீதம் என்று உயர்கிறது. இதே நிலைமை தான் 1972-73-லேயும் ஏறத்தாழ நீடிக்கிறது. ஆகவே, தேசிய வருமான வளர்ச்சிக்கு மேலாக நாணயப் புழக்கத்தை அனுமதித்து விட்டால், அதன் விளைவாக, விலைவாசி பாதிக்கப்படுகிறது. ஆகவே, நாணயப் புழக்கத்தைக் கட்டுப்படுத்துகின்ற உரிமை—அதிகாரம் மாநில அரசுக்கு இருக்கிறதா? அல்லது ரிசர்வ் பாங்கிக்கு மற்ற பாங்குகளைக் கட்டுப்படுத்துகின்ற அதிகாரம் இருக்கிறதா? அந்த கேள்விக்கு பதில் காண்கின்ற நேரத்திலேதான் நாணயப் புழக்கத்தை கட்டுப்படுத்துகின்ற அதிகாரம் மாநில அரசின் பொறுப்பு அல்ல, மத்திய அரசின் பொறுப்பு என்று சொல்கின்றோம். அப்படி பொறுப்போடு சொல்கின்ற நேரத்தில், ஒரு விரலைக் காட்டி, குற்றவாளி என்று சொல்லவில்லை. அந்தப் பொறுப்பு இருக்கிற காரணத்தால், நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்கிறோம். அப்படி எடுத்துக்கொள்கின்ற நேரத்தில் இடைஞ்சல்கள் இருக்கின்றன. திட்டங்கள் போடவேண்டுமானால் அதற்கு பணப்புழக்கம் தேவை. ஆகவே, இப்படி இது ஒரு பெரிய சர்க்கிளாக சுழன்று கொண்டிருக்கிறது. அந்தச் சங்கடம் அவர்களுக்கு இருக்கிறது. ஆகவே, பொறுப்பு மாநில அரசுக்கு அல்ல, மத்திய அரசுக்குத் தான் இருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேனே அல்லாமல் வேறல்ல.



**திருமதி த. ந. அனந்தநாயகி:** தலைவரவர்களே, இவ்வளவு விவரமாக பொறுப்பு மாநில அரசுக்கா, மத்திய அரசுக்கா என்று கனம் முதலமைச்சரவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். தேர்தலிலே அன்றைக்கு நின்றபோதே மத்திய அரசுக்குத்தான் அந்தப் பொறுப்பு என்ற உணர்ச்சியோடு போதாது. "நாங்கள் ஆட்சிக்கு வந்தால் விலைவாசியைக் குறைத்துவிடுவோம், நாங்கள் ஆட்சிக்கு வந்தால் வரியையெல்லாம் குறைப்போம்" என்று சொன்னார்களே, இன்றைக்கு அவர்களுடைய பங்கு என்ன என்பதைத் தெரிந்து கொண்டால் நல்லது. இன்றைக்குத் தப்பித்துக்கொள்கின்ற வகையில் பழியை மத்திய அரசிடம் போடுகிறார்கள். இது எப்படிச் சரியாகும்?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** என்ன செய்வது? உங்களை நம்பித் தான் சொன்னோம். மத்திய அரசு பொறுப்போடு நடைபெறும் என்று நம்பித்தான் சொன்னோம். நம்பிக்கை மோசம் செய்து விட்டீர்கள். (கரவொலி). எங்களுக்கு மாத்திரமா செய்தீர்கள்? அவர்களுக்கும் சேர்த்துத் தான் செய்தீர்கள். (மீண்டும் கரவொலி).

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** தலைவரவர்களே, மதிப்பிற்குரிய முதலமைச்சரவர்கள் பேசுகின்ற நேரத்தில், இந்தப் பண வீக்கத்தைப்பற்றி எல்லாம் சொன்னார்கள். நானும் அதைத்தான் என்னுடைய பேச்சின்போது, எகானமிக் சர்வே ஆப் இண்டியா-வைப்பற்றிச் சொல்ல ஆரம்பித்தேன். உடனே, மாண்புமிகு ப. உ. சண்முகம் அவர்கள், "இது பாராளுமன்றத்தில் பேசவேண்டிய பேச்சு" என்று என்னைத் தடுத்து நிறுத்தினார்கள். ஆனால் அதையே நான் உங்களுக்குச் சொல்லவில்லை. இது நீங்கள் இங்கே பேச வேண்டிய பேச்சுத்தான். இதற்குப் பரிகாரம் என்னவென்றால், "இன்க்ரீஸ்ட் புரொடக்ஷன்". பொருள்கள் உற்பத்தி செய்தால்தான் இதற்குப் பரிகாரம் என்று சொல்ல வந்தேன். அதற்கு என்ன நவடிக்கை எடுத்துக் கொண்டீர்கள் என்று கேட்டேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தலைவரவர்களே, "உங்களை நம்பித்தான் சொன்னேன்" என்று சொன்னார்கள். இன்றைக்கு எங்களை நம்பித்தான் ஆட்சி நடத்துகிறீர்களா, அல்லது அன்றைக்கு எங்களை நம்பித்தான் வெற்றி பெற்றீர்கள் என்பதை ஒப்புக்கொள்கிறீர்களா? என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, திரு. ஹாண்டே அவர்கள் இதே விஷயத்தைத்தான் சொல்ல வேண்டுமென்று கருதியிருந்ததாகச் சொன்னார்கள். அவர் சொன்னால் என்ன, நான் சொன்னால் என்ன?

அவர்கள் கடைசியாகச் சொல்ல வந்ததாக ஒரு கருத்தைக் குறிப்பிட்டார்கள். அது உண்மைதான். உற்பத்தி பெருகினால்தான் இப்படிப்பட்ட பணப் புழக்கம் ஏற்படுகிறது. இப்படி ஏற்படுகிற நேரத்தில் பொருளாதார வளர்ச்சியும் பெருகிட வேண்டும். அந்தப் பெரிய இடைவெளியைத்தான் நான் இங்கே சுட்டிக் காட்டினேன்.

அது மாத்திரமல்ல. இன்னும் சில காரணங்கள் இருக்கின்றன. விலைவாசி உயர்வுக்கு மேலும் ஒரு பெரிய காரணமாக இருப்பவர்கள் வரி ஏய்ப்பவர்கள். நாட்டில் இந்த வரி ஏய்ப்பவர்களிடமிருக்கிற கறுப்புப் பணம்—"அன் அக்கௌண்டட் மணி"—புழக்கத்திற்கு வராமலேயே அடிபட்டு விடுகிற காரணத்தால் விலைவாசி உயர்கிறது. நாட்டு மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். அந்தக் கறுப்புப் பணக்காரர்களை—அன் அகௌண்டட் மணி வைத்திருப்பவர்களை—வெளியே கொண்டுவருகின்ற அந்தப் பொறுப்பும் நமக்கில்லை என்பதும், அது மத்திய அரசிடம்தான் இருக்கிறது என்பதும், அதன் காரணமாக நாட்டில் என்னென்ன மாறுதல்கள் ஏற்படுத்தப்பட்டு விட்டன என்பதும் யாரும் அறியாதவர்கள் அல்ல.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, கறுப்புப் பணம் எப்படி விளையாடுகிறது என்பதை முதலமைச்சரவர்கள் விளக்குவார்களா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அதைப் போலவே உற்பத்தியைப் பற்றிச் சொன்னார்கள். இன்றைக்கு நமது தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில், அரிசியை உற்பத்தி செய்கிறோம். அதே நேரத்தில், அரிசி விலையைக் கட்டுப்படுத்தக்கூடிய அந்தச் சூழ்நிலை நமக்கு இருக்கிறது. வேறு மாநிலங்களுக்குச் செல்லாமல் அப்படிக் கட்டுப்படுத்துகிறோம். மற்ற உணவுப் பண்டங்களில் பெரும்பாலானவை அப்படி அல்ல. நமது மாநிலத்தின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கிற காரணத்தால், உணவுப் பண்டங்களிலே முக்கியமான அரிசியின் விலையை நாம் கட்டுப்படுத்திவைக்க முடிகிறது. அப்படி இல்லாத காரணத்தால் பருப்பு, எண்ணெய் போன்ற பொருள்களுக்கெல்லாம் நாம் வேறு மாநிலங்களை நம்பியிருக்கவேண்டிய காரணத்தால்—இந்தச் சூழ்நிலை இந்தியா முழுமைக்குமாகப் பரவிக் கிடக்கின்ற காரணத்தால்—இப்பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்துகின்ற சூழ்நிலை இல்லாத காரணத்தால், தீர்க்க முடியாத சங்கடத்திற்கு நாம் ஆளாகியிருக்கிறோம்.

இந்தக் காரணங்களால்தான் பருப்பு போன்ற தானிய வகைகளையெல்லாம் தமிழ்நாட்டில் அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டுமென்ற முனைப்போடு, முயற்சியோடு இருக்கிறோம் என்று திட்டநிலை அறிக்கையிலும் கவர்னருடைய



பேருரையிலும் இந்த அரசின் சார்பாக எடுத்துக்காட்டியிருக்கிறோம். மத்திய அரசே பொறுப்பு என்று கூறிவிட்டு மாநில அரசு எந்தப் பொறுப்பும் எடுத்துக் கொள்ளாமலிருந்து விடுமென்று யாரும் கருதத் தேவையில்லை. இயன்ற அளவுக்கு எல்லாப் பொறுப்புக்களையும் எடுத்து விலைவாசியைக் கட்டுப்படுத்துகின்ற வகையில் என்னென்ன வழிவகைகளை கையாள முடியுமோ அத்தனை வழிகளையும் இந்த அரசு கையாளுமென்ற உறுதிமொழியை மிகமிக முக்கியமாக இந்தப் பிரச்சினையில், இந்த மாமன்றத்திற்கு மிகுந்த பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இன்று நமது தமிழ்நாட்டில் பரபரப்பிற்கு ஆளாகியிருப்பது மின் வெட்டு. அதைப்பற்றியும் அனைவரும் இங்கு பேசியிருக்கிறார்கள். தமிழகமே இருளில் மூழ்கிக் கிடக்கிறது என்றெல்லாம் மிகைப்படுத்தப்பட்டுப் பேசப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் அரசியல் கட்சிகள் அவரவர் கட்சிகளின் இயல்புக்கேற்ப இந்தப் பிரச்னையை அணுகுகின்றன. நான் எல்லா அரசியல் கட்சிகளையும் மிகுந்த பணிவன்போடு கேட்டுக்கொள்வது, இது ஒரு பொதுப் பிரச்னை. ஒரு தனிப் பிரச்னை அல்ல. கொள்கைப் பிரச்னை அல்ல. குறிப்பாக, மாணவர்களுக்கு பயிற்றுமொழி ஆங்கிலமா, தமிழா என்ற கேள்வி வருகின்ற நேரத்தில் மாணவர்கள் தங்களுக்குப் பயிற்றுமொழி ஆங்கிலம்தான் என்றும் தமிழ் தேவையில்லை என்றும் சொல்கிற நேரத்தில் இதைத் தமிழ் மக்கள், தமிழ்நாடு என்று பார்க்கிற நேரத்தில், இது பொதுப் பிரச்சினையாக வருகிறது என்றாலும்கூட அதை விட்டுக் கொடுத்து அதிலேகூட அரசியல் காரணம் ஏற்பட்ட நேரத்தில் அதை அரசியலுக்காகச் சிலர் பயன்படுத்திக்கொண்ட நேரத்தில் அரசியல் பிரச்சினையாக அணுகியிருக்கிறோம்.

அப்படி இல்லாமல் இது அனைவரையும் பாதிக்கக்கூடியது என்று—திரு. ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டதைப்போல, திரு. மணலி அவர்கள் எடுத்துக் காட்டியதைப்போல—இது ஓர் போர்க்காலச் சூழ்நிலையைப்போலக் கருதி நாம் ஈடுபட வேண்டிய பெரிய காரியமாகும்.

அதே நேரத்தில் ஒரு அரசு தன்மீது சுமத்தப்படுகிற பழி, சொல்லப்படுகிற குற்றச்சாட்டு ஆகியவற்றுக்குப் பதில் அளிக்க வேண்டியிருக்கிறது. என்றாலும் எப்படி இது ஒரு பொதுப் பிரச்சினை என்று சொல்லி, அரசை ஒரு மூலையில் கொண்டுபோய்த் தள்ளி மற்றவர்கள் குற்றம் சாட்டுவதற்கு விரும்புகிறார்களோ அதைப்போலத்தான், தான் அந்தக் குற்றச்சாட்டுக்கு ஆளாக்கப்பட்ட நிலைமையில் இல்லை, தான் அதற்குப் பொறுப்பு இல்லை என்பதை எடுத்துச் சொல்கிற உரிமையை அரசும் பெற்றிருக்கிறது.

இந்த அரசு வந்த பிறகு மின்சார உற்பத்தியே நடைபெறவில்லை. ஆகவே தான் சங்கடங்கள் ஏற்பட்டன என்று திரு. மணலி அவர்களே சொன்னார்கள். நாம் உஷாராக இருக்கவில்லை என்றும் சொன்னார்கள்.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் நமது மாநிலத்திற்கு 110 மெகாவாட் மின்சாரம் கிடைத்தது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 315 மெகாவாட் மின்சாரம் கிடைத்தது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 510 மெகாவாட் மின்சாரம் கிடைத்தது. ஆக, 51 முதல் 67 வரை ஏறத்தாழ பதினைந்து வருடத்தில் நமது மாநிலத்தில் 935 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் 67 முதல் 72 வரை. இந்த ஐந்தாண்டுக் காலத்தில் மட்டும் 625 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. பதினைந்து ஆண்டுக் காலத்தில் 935 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டது என்றால் இந்த ஐந்தாண்டுக் காலத்தில் மட்டும் 625 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே நாம் உற்பத்தி செய்யவில்லை என்ற குற்றச்சாட்டுக்கு இந்த அரசை ஆளாக்குவது முறை அல்ல என்பதற்கான விளக்கத்தை இதன் மூலம் நான் தர விரும்புகிறேன்

இன்னொன்றையும் மறந்துவிடக்கூடாது. கேரளாவை எடுத்துக் கொண்டால் அங்கே ஒரு நாளைக்குத் தேவையான மின்சாரம் 60 லட்சம் யூனிட்தான். மைசூருக்கு ஒரு நாளைக்குத் தேவையான மின்சாரம் 130 லட்சம் யூனிட். ஆந்திரத்திற்கு ஒரு நாளைக்குத் தேவையான மின்சாரம் 90 லட்சம் யூனிட். ஆகவே இந்த மூன்று மாநிலங்களையும் சேர்த்துக்கொண்டாலும் கேரளா, மைசூர், ஆந்திரா ஆகிய மூன்று மாநிலங்களையும் சேர்த்துக் கொண்டாலும், ஒரு நாளைக்குத் தேவையான மின்சாரம் 280 லட்சம் யூனிட்தான். ஆனால் தமிழ்நாட்டுக்கு மட்டும் தேவையான மின்சாரம் ஒரு நாளைக்கு 225 லட்சம் யூனிட். இங்கே தொழில் வளர்ந்திருக்கிற காரணத்தினால்—இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு 6 லட்சம் பம்பு செட்டுக்கு மின்சார இணைப்புக் கொடுத்திருக்கிற ஒரே மாநிலம் தமிழ்நாடு என்ற காரணத்தினால் (ஆரவாரம்)-கேரளா, மைசூர், ஆந்திரா ஆகிய மூன்று மாநிலங்களுக்கும் சேர்த்து ஒரு நாளைக்கு ஆகிற மின்சார அளவை கிட்டத்தட்டப் போய்த் தொடுகின்ற அளவுக்கு 225 லட்சம் யூனிட் இந்த மாநிலத்திற்குத் தேவைப்படுகிறது.

இப்போது ஏற்பட்டிருக்கிற பிரச்சினைகள் நீர் மின்சார நிலையங்களுக்கு இயற்கையினால் ஏற்பட்டுவிட்ட ஆபத்தே தவிர வேறு அல்ல. இயற்கை திடீரென்று, எதிர்பாராத வகையில் ஏமாற்றிவிட்ட காரணத்தினால் நமக்கு



நீர் மின் நிலையங்களில் இருந்து கிடைக்க வேண்டிய மின்சாரம் கிடைக்கவில்லை.

நாம் திட்டங்களை கேட்கவில்லையா, மத்திய சர்க்காரிடம் இருந்து என்று பார்த்தால் பத்துத் திட்டங்களைக் கேட்டிருக்கிறோம். (1) சேர்வலாறு திட்டம், (2) நெல்லித்துறை திட்டம், (3) சோலாட்டிபுழா திட்டம், (4) மேல் அமராவதி திட்டம், (5) பாலையாறுத் திட்டம், (6) சண்முகா நதித் திட்டம், (7) கூனூர் கல்லாறுத் திட்டம், (8) கீழ் மோயாறுத் திட்டம், (9) தூத்துக்குடி அனல் மின் நிலையம், (10) மேட்டூர் அனல் மின் நிலையம் ஆக இந்த பத்துத் திட்டங்களின் மூலம் 1035 மெகாவாட் கிடைக்கக்கூடிய திட்டங்களை மத்திய கமிஷனின் ஒப்புதலுக்காக அனுப்பியிருக்கிறோம்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : All these ten schemes have been sent to the Centre to be included in the Fifth Plan which starts from 1974 and ends in 1979. Why did you not send the same for inclusion in the Fourth Plan ? That is the point.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : சண்முகா நதித் திட்டமானது நான்காவது திட்டத்தில் உட்படுத்தப்பட்டிருக்கிறதா, அல்லது ஐந்தாவது திட்டத்தில் உட்படுத்தப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்தத் திட்டங்கள் எல்லாம் அனுமதிக்கப்பட்ட பிறகுதான் அது எந்தத் திட்டத்திற்கு உட்படும் என்பது தெரியும்.

இவைகள் அன்னியில் கல்பாக்கம் விரிவுத் திட்டம் நெய்வேலி இரண்டாவது அனல் மின்நிலையம், தூத்துக்குடி இரண்டாவது அணு மின் நிலையம் ஆகிய மத்திய அரசின் திட்டங்களை நாம் தொடர்ந்து வற்புறுத்தி வருகிறோம். இந்த மன்றத்தில் தீர்மானங்கள் போட்டதை எல்லாம் முன்பொரு தடவை விளக்கமாகச் சொல்லியிருக்கிறேன்.

ஆளும் காங்கிரசைச் சேர்ந்த திரு. குமாரசாமி அவர்கள் பேசும்போது ஒன்றைச் சொன்னார்கள். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில்—அம்மையார் அவர்களும் சொன்னார்கள், அதை ஒட்டி வருகிறது—நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒரு மின் நிலையத்தை ஏற்படுத்த மத்திய அரசு ஒத்துக்கொண்டிருக்கிறார்கள் என்றால்—திரு. குமாரசாமி சொன்னார்—பிறகு ஏன் அதில் அவர்கள் குறுக்கிடப் போகிறார்கள்—இது அவர்கள் கேள்வி. நமக்குத் தேவையான திட்டத்தை நாம் போட்டுக்கொண்டு மத்திய அமைச்சர்களிடம் சொல்லிவிட்டு,

நாமே நிறைவேற்றிக்கொள்ள வேண்டியதுதானே, அப்படிச் செய்யத் தவறியதால்தான் இந்த நிலைமை என்று திரு. குமாரசாமி சொன்னார். எனக்கு இருக்கிற பயம் எல்லாம் ஏதோ சொன்னதற்குப் பதில் சொல்ல வேண்டுமென்பது அல்ல. இதே கருத்தைப் பொதுமக்களிடத்தில் சொல்கிற நேரத்தில் பாதிக்கப்பட்டிருக்கிற மக்கள் என்ன கருதிக்கொள்வார்கள்? நான்காவது திட்டத்தில் ஒரு மின்நிலையத்தை ஏற்படுத்த மத்திய அரசு ஒத்துக்கொண்டிருக்கிறார்கள், மத்திய அரசின் அனுமதியைக்கூட பெறாமல் நாம் அதனை நிறைவேற்றிக்கொள்ளலாம் என்று திரு. குமாரசாமி சொல்லிவிட்டார். அமைச்சர்கள் இதை ஏன் செய்யாமல், வீணே பொழுதைக் கழித்தார்கள் என்றுதான் பொதுமக்கள் எண்ணத் தோன்றும்.

ஆனால் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் அந்த மின்நிலையத்தை உடனடியாக ஏற்படுத்திவிடுவது அவ்வளவு சுலபமான காரியம் அல்ல என்பதை ஏற்கனவே ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர்கள் நன்கு உணர்வார்கள் என்று நம்புகிறேன்.

முதலில் திட்டத்திற்கு விரிவான அறிக்கையைத் தயாரித்து அனுப்புகிறோம். அந்த அறிக்கையை மத்திய நீர் மின்குழு ஆராய்ந்து, மத்திய மின்சாரத் துறை அமைச்சரின் ஒப்புதலைப் பெற்றபின், திட்டக் குழுவிற்கு அதை அனுப்பும். திட்டக் குழுவில் தொழில் நுட்ப ஆலோசனைக் குழு மறுபடியும் அதை ஆராய்ந்து, அதற்குப் பிறகு ஒப்புதல் அளிக்கிறது. இந்த சம்பிரதாயங்களின்படி இந்த வழிமுறைகளில் ஒரு திட்டத்தை ஏற்றுக்கொள்ளக் குறைந்தது இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. உதாரணமாக, நெல்லித்துறை, சேர்வலாறு, பரலியாறு ஆகிய திட்டங்கள் 1970-71-ல் அனுப்பப்பட்டன. இன்னும் அந்தத் திட்டங்களுக்கு அனுமதி கிடைக்கவில்லை என்பதை மறந்துவிடக் கூடாது.

திட்டக் குழுவின் அனுமதி இல்லாமல் நாம் ஏன் ஏற்படுத்திவிடக் கூடாது என்று திரு. குமாரசாமி குறிப்பிட்டார். கடற்கரையில் அம்மையாரும் பேசியதாக நான் கேள்விப்பட்டேன். அப்படி மத்திய அரசின் அனுமதியைப் பெறாமல் நாம் செயல்பட முற்பட்டால் அந்த நிலையத்திற்கான சாதனங்கள்—பாய்லர் ஜெனரேடர் ஆகிய கருவிகளை மத்திய அரசின் அனுமதி இல்லாமல் எந்தத் தொழிற்சாலையும் உற்பத்தி செய்து தர முன்வராது. அது மாத்திரம் அல்ல. அந்தக் கருவிகளை இந்தத் தொழிற்சாலைகளில் இருந்து பெற முடியாமல் வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டுமென்றால் மத்திய அரசின் ஒப்புதலைத்தான் நாம் பெற்றாக வேண்டும். ஆக, அவர்களைக்



கேட்காமல் பிறகு ratification வாங்கிக் கொள்ளலாமென்று மாநில அரசிற்குத் திட்டங்களை நிறைவேற்ற எந்த வழியும் இல்லை என்பதை நான் விளக்க விரும்புகிறேன்.

நாம் மின்சாரத்தைச் செம்மையாகவும், சிக்கனமாகவும் செலவழிக்கிறோமா? ஏதோ ஊழல் நடந்திருக்கிறது, நடந்திருக்கிறது என்று சொல்கிறார்கள். உடனேயே அதற்கு ஊழல் விசாரணைக் குழு போடவேண்டும், நீதி விசாரணைக் குழு போடவேண்டும் என்கிறார்கள். இப்படி எதற்கெடுத்தாலும் மத்திய சர்க்காரில் இருந்து வரவேண்டும். தேர்தல் நடக்கிறதா, மத்திய சர்க்காரில் இருந்து தேர்தல் அதிகாரி வரவேண்டும், ஏஜெண்டு போடுகிறார்களா மத்தியில் இருந்து வரவேண்டும், போலிங் பூத்தில் உட்காருகிறார்களா, மத்தியில் இருந்து வரவேண்டும். இன்னும் ‘கொஞ்ச நாட்களில் இங்கே சட்டமன்றம் நடக்கும்போது திருமதி இந்திரா காந்தி அவர்கள் அங்கே பாராளுமன்றத்தை நடத்தாமல் விட்டு இங்கே வந்து முதலமைச்சர் பொறுப்பைப் பத்து நாள் பார்த்துவிட்டு மறுபடியும் டெல்லிக்குப் போக வேண்டுமென்று சொன்னாலும் சொல்வார்கள் என்று கருதுகிறேன். அப்படிச் சொல்லி மத்தியில் இருந்து அமைச்சர்களை வரவழைத்தால் அவர்கள் நிற்க மாட்டார்கள் என்பதை இந்திய வரலாறு சொல்லிக்கொண்டிருக்கிறது. தேர்ந்தெடுக்கப்படுகிற அமைச்சர்கள்தான் வரவேண்டும். நியமிக்கப்படுகிற அமைச்சர்கள் வந்தால் அவர்களின் ஆட்சி நிற்பதாக இந்தியாவின் சரித்திரம் சொல்லவில்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** அப்படி நியமனம் செய்யப்படுகிறவர்கள் அடுத்த 6 மாதத்திற்குள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டே வந்தாகவேண்டும் என்பதை நினைவுகொள்ளவேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நான் ஆறு மாதக் கதையைச் சொல்லவில்லை. அதற்குப் பின் நடந்த கதையைச் சொல்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** ஒரிசாவில் எப்படி மந்திரி சபை கவிழ்ந்ததோ அதுபோல நடக்காதிருக்க ஆயாராம், கயாராம் நம்மிடையே இருக்கக் கூடாது என்பதை நானும் ஒத்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ஆயாராம் கயாராம்களுக்கு முற்றுப் புள்ளி வைத்தாகிவிட்டது என்பது பொன்னப்ப நாடார் அவர்களுக்கும் தெரியும். இப்படி எல்லாம் மின்சார வாரியத்தில் ஊழல், ஊழல், விசாரணை

செய்யவேண்டும் என்று சொல்கிறார்கள். மத்திய அமைச்சராக இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற மதிப்பிற்குரிய திரு. கே. எல். ராவ் அவர்கள் நாடாளு மன்றத்தில் பேசியிருக்கிறார். அது இந்துஸ்தான் டைம்ஸ் பத்திரிகையில் வந்திருக்கிறது. நல்ல வேளையாக அவர்கள் போட்டார்கள், போனால் போகட்டும் என்று. கே. எல். ராவ் அவர்களது பேச்சின் ஒரு பகுதி இது.

He complimented Tamil Nadu for making the best use of power without wastage.

என்று கே. எல். ராவ் அவர்கள் தமிழ்நாட்டைப் பாராட்டி நாடாளுமன்றத்தில் பேசியிருக்கிறார்கள். அது மாத்திரம் அல்ல. பொதுவாக மின்திட்டங்கள் மத்திய அரசு அளவில் சரியாகச் செயல்படவில்லை என்பதை அவரே குறிப்பிட்டிருக்கிறார். திட்டங்கள் எப்படி நிறைவேற்றப்படவேண்டும், மின்சாரத் திட்டங்கள் எப்படி நிறைவேற்றப்படவேண்டும் என்ற கருத்தை ஒரு கருத்தரங்கில் அவர் சொல்கிறார்.

The power planning so far had been totally wrong. It should never have been linked to the general Five Year Plans. Power Planning should be a continuous process.

என்று கே. எல். ராவ் அவர்கள் டெல்லியில் நடைபெற்ற கருத்தரங்கில் 23—2—1972-லே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

நான் இன்னொன்றையும் சொல்கிறேன், உங்கள் தகவலுக்காக. 26—7—72-லே ஐதராபாத்திலே நடைபெற்ற ஸோனல் கவுன்சில், மண்டலக் குழுவிற்கு நானும் கல்வி அமைச்சரும், தொழில் அமைச்சரும் சென்றிருந்தபொழுது அங்கே திரு. கே. எல். ராவ் பேசும்பொழுது ஒன்றைச் சொன்னார்கள். அதாவது ஒரு மாநிலத்திலே இருக்கிற ஆட்சியினுடைய அக்கறையற்ற தன்மையினால் இந்த சங்கடங்களெல்லாம் ஏற்பட்டு விட்டதாகச் சொல்கிறார்களே அதற்காக நான் சொல்கிறேன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் கவனமாகக் கேட்கவேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன்.

The power supply position in the States of Southern Zone was going to be extremely bad because of delay in the construction of 390 MW Idikki project due to labour trouble and delay in the commissioning of the 89 MW Unit at Sharavathi on account of delay in supply of equipment, etc., for the project.

என்று சொன்னார்கள். அப்பொழுது இடிக்கியிலே ஒரு பெரிய வேலை நிறுத்தம் நடைபெற்றது. வேலை நிறுத்தத்தை நடத்தியவர்கள் வேறு கம்யூனிஸ்டுகள். ஆனால் வேலைநிறுத்தம் விரைவிலே முடிவடைந்து இருக்கு



மானால் 390 மெகாவாட் உற்பத்தி அங்கு வந்திருக்குமேயானால், 'சதர்ன் சோன்' தென் மண்டலத்திலே இருக்கிற தமிழ் நாட்டிற்கு நாம் கேரளாவிலிருந்து கொஞ்சம் அதிகமான மின்சாரத்தைப் பெற்றிருக்க முடியும். இப்படிப் பல்வேறு நிலைமைகள் பல இடங்களிலே நடைபெற்றுவிட்ட காரணத்தினாலேதான் இந்த மின்சார வெட்டினால் நாம் பாதிக்கப்பட்டிருக்கிறோம். இதையே சொல்லிக்கொண்டிராமல் ஆகவேண்டிய காரியங்களையும் நாம் பார்க்கவேண்டும்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** கே. எல். ராவ் சொன்ன கருத்தைத்தான் நான் காலையிலே சொன்னேன். இப்பொழுது இருக்கிற குறையெல்லாம் பேசின் பிரிட்ஜ் பவர் ஹவுசிலே 70 மெகாவாட் இருந்த காலத்தில் இன்ஸ்டால்ட் கப்பாசிட்டி, 60 மெகாவாட் உற்பத்தியாகிக் கொண்டிருந்தது. இப்பொழுது 97.5 இருக்கிற நேரத்தில் 35 மெகாவாட்தான் உற்பத்தியாகிக் கொண்டிருக்கிறது. ஆக, நம்முடைய உற்பத்தியிலும் கொஞ்சம் கோளாறு இருக்கிறது என்றுதான் நான் காலையிலே சொன்னேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவர் அவர்களே, பேசின் பிரிட்ஜ் பவர் ஹவுசில் கட் இல்லாத நேரத்தில் சென்ற ஆண்டு 24 லட்சம் யூனிட் தயார் செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு 30 லட்சம் யூனிட் தயார் செய்யப்படுகிறது. குறைந்துவிட்டது என்று சொல்வதற்கு எந்தவிதமான ஆதாரமும் கிடையாது. அதுமட்டுமல்ல, எண்ணூரிலேகூட அப்படித்தான் என்று சொன்னார்கள். பவர் கட் இல்லாதபொழுது முழுமையாக இருந்தது என்று சொல்கிறார்கள். இப்பொழுது நாங்கள் உற்பத்தியைப் பெருக்கவில்லை, எங்களுடைய கவனக் குறைவு என்று சொல்கிறார்கள். அதற்காகச் சொல்கிறேன், எண்ணூரிலேகூட சென்ற ஆண்டு, பவர் கட் இல்லாத நேரத்தில் 40 லட்சம் யூனிட்தான் தயார் செய்யப்பட்டது. ஆனால், இந்த ஆண்டு 73 லட்சம் யூனிட் தயார் செய்து கொண்டிருக்கிறார்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** ஒரே ஒரு இன்பர்மேஷன். பவர் கட் இல்லாதபொழுது நாங்கள் இவ்வளவு உற்பத்தி செய்தோம், இன்றைக்கு எவ்வளவு உற்பத்தி செய்கிறோம் என்பதல்ல. பவர் கட் இல்லாதபொழுது நீர் நிலையத்திலிருந்து உங்களுக்குத் தேவையான மின்சாரம் வந்து கொண்டிருந்ததால் அதிலே சற்று அக்கறை இல்லாமல் இருந்தது. இப்பொழுது பவர் கட் இருக்கிறது, இப்பொழுது அனல் மின்சார உற்பத்தியை புல்லஸ்டு கப்பாசிடிக்கு யுடிலைஸ் செய்கிறீர்களா என்பதுதான் எங்களுடைய கேள்வி.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** அது முழுமையாக ஓடிக் கொண்டிருக்கிறது. மத்திய சர்க்காருடைய அமைச்சர் டாக்டர் கே. எல். ராவ் கூறும் பொழுதுகூட, அது ஓடவில்லையென்று சொல்லவில்லை. தண்ணீர் வாராததற்கு தட்டுப்பாடு இல்லாமல் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்றுதான் சொல்லியிருக்கிறார்களே தவிர, குறை இருப்பதாகச் சொல்லவில்லை. குறையில்லாமல், தமிழ்நாட்டிலே ஜெனரேட்டர்களை திருப்திகரமாக ஓட்டியிருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** நான் சொன்னது வேறு, மெகாவாட் கணக்குத்தான் கேட்கிறேன். அவர் கொடுப்பது லட்சம் கணக்கு. அது உங்களுக்கு ரொம்பச் சாதகமாக இருக்கும். எவ்வளவு லட்சம் என்று இன்பர்மேஷனைக் கொடுக்கிறார்கள். மெகாவாட் கணக்குத்தான் வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின் அனுமதியுடன் பேரவையின் நேரத்தைக் கொஞ்சம் நீடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மின்சார வெட்டால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, அவர்களைப்பற்றிக் கவலையே கொள்ளாமல் இந்த அரசு அலட்சியமாக இருக்கிறது என்ற குற்றச்சாட்டைச் சொன்னார்கள். கடந்த பல தினங்களாக வேறு எந்த வேலையையும்கூடக் கவனிக்காமல் இந்த வேலையை நானும் அமைச்சரவையிலே இருப்பவர்களும், அதிகாரிகளும் கவனித்து வருகின்றோம். குறிப்பாக, கைத்தறியாளர்களுக்காக ஆலை அதிபர்களோடு நேற்றையதினம் பேச்சுவார்த்தை நடத்தி, கணிசமான நூலைப் பெறுவதற்கு முயற்சிகள் முடிவுற்று இருக்கின்றன என்பதை இன்று பத்திரிகைகளிலே மாண்புமிகு உறுப்பினர்கள் பார்த்திருக்கலாம்.

ஆலைகளிலே வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்குக் கூடுமான வரையில் அவர்களுடைய சங்கடங்களைத் தவிர்க்க அரசு, தொழிலாளர்களுடைய பிரதிநிதிகள், தொழில் அதிபர்கள் அடங்கிய முத்தரப்புக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அதனுடைய பணிகளும் வேகமாக நடைபெற்று வருகின்றன.

விவசாயிகளைப் பொறுத்தவரையில் என்னையும், வேறுசில அமைச்சர்களையும் இரண்டு நாட்களுக்கு முன்பு விவசாயிகளுடைய பிரதிநிதிகள் பல்வேறு மாவட்டங்களிலிருந்து வந்து சந்தித்தார்கள். நீண்ட நேரம் 10 மணியிலிருந்து கிட்டத்தட்ட 2 அல்லது 2½ மணிநேரம் எங்களோடு விவாதித்தார்கள். நல்ல பயனுள்ள விவாதமாக இருந்தது. பல சங்கடங்களையெல்லாம் எடுத்துத் தெரிவித்தார்கள். அவர்களுடைய கருத்து இப்பொழுது



4 மணி நேரம் கொடுக்கப்படுவது சரியாகக் கொடுக்கப்பட வேண்டுமென்றும் சில இடங்களிலே கோளாறு ஏற்படுகிறது என்றும் 4 மணி நேரத்தை 6 மணி நேரமாக ஆக்கித்தர வேண்டுமென்றும் சொன்னார்கள். அதை ஆராய்ந்து பார்த்ததில் தற்பொழுது 4 மணி நேரம் தரப்படுகிற மின்சாரத்தை 5 மணி நேரமாக ஆக்குவதற்கு இப்பொழுது நாம் முடிவு செய்திருக்கிறோம். (ஆரவாரம்) அதற்கு பரீட்சார்த்தமாக முதல் கட்டமாக நேற்றையதினம் வேலூர் மின்திட்டத்தில் முதல் பிரிவு காலை 4 மணி முதல் 9 மணி வரை என்றும், இரண்டாவது பிரிவு காலை 8½ மணி முதல் பகல் 1½ மணிவரை என்றும், மூன்றாவது பிரிவு பிற்பகல் 1 மணி முதல் மாலை 6 மணி வரை என்றும் பிரித்து மின்சாரம் வழங்கப்படுகிறது. இது தொடர்ந்து, மற்ற இடங்களிலே வெகு விரைவிலே அதைப் பார்த்துக்கொண்டு அமுலாக்கப்பட இருக்கிறது.

டிரான்ஸ்பார்மர்களில் மின் பளு 'லோட்' அதிகமாகி பழுது ஏற்படுவதை தடுப்பதற்கு முயற்சிகள் எடுக்கவேண்டுமென்று கூறினார்கள். அதற்கு பல புதிய டிரான்ஸ்பார்மர்களுக்கு உடனடியாக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. முதலில் ஆயிரம் டிரான்ஸ்பார்மர்களை அங்கங்கே நிறுவுவதற்கு முடிவெடுக்கப்பட்டு, அந்தப் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டு விட்டன என்றுதான் சொல்ல விரும்புகிறேன்.

மின் வெட்டு நிலைமை சீர்படும் வரையில் மின்சாரத்திற்கான குறைந்தபட்ச கட்டணம் விவசாயிகளுக்கும் தொழிற்சாலைகளுக்கும் தற்காலிகமாக ரத்து செய்யப்படுகிறது என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மின்சார வெட்டால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பருவ மழை தவறும் நேரங்களில் எந்த அடிப்படையில் விவசாயிகளுக்கு சலுகைகள் அளிக்கப்படுகிறதோ, அதே சலுகைகள் இப்போதும் மின் வெட்டால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக விரைந்து அளிக்கப்படும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாரியம் வழங்கும் மின்சாரத்திற்கு மாற்றாக தனியார் ஜெனரேட்டர்கள் வாயிலாக உற்பத்தி செய்யும் மின்சாரத்திற்கு விதிக்கப்படும் வரி இந்த நெருக்கடி தீரும்வரை ரத்து செய்யப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

நகரங்களில் தெரு விளக்குகள் இரவு 7 மணி முதல் 10 மணி வரையில் மட்டுமே எரியலாம். அலங்கார விளக்குகளுக்கு ஜெனரேட்டர்தான் பயன்படுத்தப்பட வேண்டும்.

[டாக்டர் மு. கருணாநிதி] [1973 மார்ச் 7

திரைப்பட அரங்குகளில் மின்சாரத்தை உபயோகித்து ஒரு காட்சி மட்டுமே நடத்தப்பட வேண்டும். இது நம்முடைய திருப்பூர் மொய்தீன் அவர்களுக்கு ஓரளவு மகிழ்ச்சி தரும் என்று கருதுகிறேன். திரைப்பட அரங்குகளில் மின்சாரத்தை உபயோகித்து ஒரு காட்சி மட்டுமே நடத்தப்பட வேண்டும். பிற காட்சிகளை ஜெனரேட்டர் மூலம் நடத்த எந்தத் தடையும் இல்லை என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னையிலுள்ள தெர்மல் நிலையங்களின் நிலக்கரி தேவையைப் பூர்த்தி செய்வதற்கு, ஆறு மாதத்திற்கு அயல்நாட்டுக் கப்பலை பயன்படுத்துவதற்கு ஷிப்பிங் டைரக்டர் ஜெனரலின் அனுமதி கிடைத்துள்ளது. தென்னிந்திய ஷிப்பிங் மேனேஜிங் டைரக்டர் திரு. தஸ்தாருடன் தொடர்பு கொண்டு ஏற்பாடுகளை முடிவு செய்யுமாறு மின்வாரியத் தலைவருக்கு கூறப்பட்டுள்ளது. மாதம் ஒன்றுக்கு 21,000 டன் நிலக்கரி கொண்டு வருவதற்கான இத்திட்டம் நம் தேவையைத் திருப்திகரமாகப் பூர்த்தி செய்யும் என்றும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** கலைக் கண்காட்சிகள் எங்கு பார்த்தாலும் நடத்தப்படுகின்றனவே, அதற்கு மின்சாரம் கொடுக்கப்படுமா, நிறுத்தப்படுமா என்று அரசாங்கம் அறிவிக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தயவுசெய்து எங்கே நடக்கிறது என்று சொன்னால் சரியாக இருக்கும். எங்கே நடக்கிறது?

**திருமதி த. ந. அனந்தநாயகி :** பல இடங்களிலே பார்க்கிறோமே அந்த போர்டை. 36-வது டிவிஷனிலே இன்று நடக்கிறதே.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** 36-வது டிவிஷன் என்று சொன்னார்கள். அதை முதலமைச்சர் விளக்கவேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அவர்களுக்கு ஜெனரேட்டர் கூட அல்ல, லைசென்சே வழங்கப்படவில்லை. அவர்கள் கொட்டகைகளை எல்லாம் போட்டுவிட்டு, நாங்கள் போட்டுவிட்டோம், இருந்தாலும் முதல் அமைச்சர் நீங்கள் இப்படி அறிவித்தீர்கள். எப்படியாவது, நாங்கள் செலவு செய்து விட்ட காரணத்தினாலே கொடுக்கவேண்டுமென்று கேட்டார்கள். முடியவே முடியாது என்று சொல்லியாகிவிட்டது. கொடுக்கப்படவில்லை.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** ஒரு அமைச்சர் போய் துவக்கி வைத்தார்.



1973 மார்ச் 7]

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அமைச்சர்களே போய் திறந்து வைத்தாலும் அதற்கு லைசென்சுகள் வழங்கப்பட மாட்டாது என்பது கண்டிப்பான உத்தரவு.

பிறகு நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் சுப்பையா அவர்கள் தஞ்சை மாவட்டத்திலே வழங்கப்பட்ட குடியிருப்பு மனை பட்டாக்களிலே சில புகார்களைச் சொன்னார்கள். ஏதோ, முதலமைச்சர் ஒரு லட்சத்து 57 ஆயிரம் பேருக்கு வழங்கினார், பல பேருக்கு கிடைக்கவே இல்லை, சில பேருக்குத்தான் கிடைத்தது என்று சொன்னார்கள். அவர்கள் எந்த அடிப்படையிலே சொன்னார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. நான் உடனடியாக அதைப் பற்றி விளக்கங்கள் எல்லாம் சேகரித்தேன்.

27—2—1972-லே திருவையாற்றிலே வழங்கப்பட்ட குடியிருப்பு மனைப் பட்டா 6,764. 15—6—1972-லே திருத்துறைப்பூண்டியில் 26,150. அதிலே திரு. மணலி அவர்களும் திரு. சுப்பையா அவர்களும் கலந்துகொண்டு உரை யாற்றியிருக்கிறார்கள். 14—9—1972 அன்றும், 28—2—1973 அன்றும் கும்பகோணத்தில் 1,15,227. ஆக, பிப்ரவரி 1972 முடிய வழங்கப்பட்ட பட்டாக்களின் எண்ணிக்கை 1,48,000. இதிலே, இந்த 1,48,000 குடியிருப்பு மனைப் பட்டா பெற்றவர்களில் 1,41,000 பேர் அதைப் பெற்றுக்கொண்டதற்கான அக்னாலெட்ஜ் மென்ட்டுகளை அனுப்பி வைத்திருக்கிறார்கள். அவை அதிகாரிகளிடத்தில் இருக்கின்றன. இன்னும் ஏழு ஆயிரம் பேர்களிடமிருந்து அக்னாலெட்ஜ்மென்ட் வந்தாக வேண்டும். பட்டா வழங்கப்பட்ட பிறகு ஆட்சேபனை தெரிவிக்கப் பட்டும், உரிமை மறுப்பு தெரிவிக்கப்பட்டும் விசாரணையில் இருப்பவை 8,700 ஆகும். ஆக இதையும் சேர்த்து மொத்தம் 1 லட்சத்து 57 ஆயிரத்தில் 1 லட்சத்து 41 ஆயிரம் பட்டாக்களுக்கு அதைப் பெற்றுக் கொண்டதற்கு ரசீது கிடைத்துவிட்டது. எட்டு ஆயிரம் பட்டாக்களிலே வழக்கு இருக் கிறது. ஏழாயிரம் பட்டாக்களுக்கு ரசீதுகள் வரவில்லை. ஆக 1 லட்சத்து 57 ஆயிரம் பட்டாக்களுக்கான அந்த விவரத்தை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

குத்தகைதாரர் சட்டம் போன்ற 9 அறிவிப்புகள் இந்த மாமன்றத்திலே அரசின் சார்பிலே அறிவிக்கப்பட்டிருக்கின்றன. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, ஏழை எளியவர்களுக்கு இந்த அரசு எந்த எந்த வகையிலே தன்னுடைய பணிகளை ஆற்றிக்கொண்டிருக்கிறது என்பதற்கு அடையாளமாக, பொதுவுடைமைக் கொள்கையில், சோஷலிஸக் கொள்கையில், இந்த அரசு கொண்டிருக்கின்ற அழுத்தமான நம்பிக்கைக்கு அடையாளமாக

9 அறிவிப்புகள் செய்யப்பட்டிருக்கின்றன. நீ என்ன 9 அறிவிப்புகள் தந்தாய், நான் 10 அறிவிப்புகள் தருகிறேன் என்று நண்பர் ஹாண்டே அவர்கள் காலையிலே பேசும்பொழுது பத்து பாயிண்டுகளை வைத்துக்கொண்டு, இவைகளுக்கு எல்லாம் என்ன பதில் என்று கேட்டார்கள். நான் அந்த பத்து பாயிண்டுகளுக்கும் என்னுடைய முன்னுரையில் பதில் அளித்திருப்பதாகக் கருதுகிறேன். இந்த 9 அறிவிப்புகள் மாத்திரம் போதாது தமிழ்நாட்டை முன்னேற்றிவிடுவதற்கு என்பதை நான் உணராமல் இல்லை.

குத்தகைதாரர்கள் சட்டம் பற்றியெல்லாம் இங்கே எடுத்துச் சொல்லப்பட்டது. அதிலே அடிக்கடி மாண்புமிகு மணலி அவர்களும், கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும் மற்ற உறுப்பினர்களும் கேரள நிலச் சீர்திருத்தச் சட்டத்தைப் பாருங்கள், பாருங்கள் என்று சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள்.

கேரள நில உச்சவரம்புச் சட்டத்தைப் பொறுத்தவரையிலும்—விதிவிலக்குகள் தமிழ்நாட்டிலே எவை எவைக்கு விதிவிலக்கு அளித்திருக்கின்றோம், கேரளத்திலே எவையெவைக்கு விதிவிலக்கு அளித்திருக்கிறார்கள் என்பதை நான் ஆராய்ந்து பார்த்தேன். தமிழ்நாட்டிலே மாநில மத்திய அரசின் நிலங்கள், உள்ளாட்சி நிறுவனங்களின் நிலங்கள் விதிவிலக்கு, கேரளத்திலே மாநில மத்திய அரசின் நிலத்திற்கு விதிவிலக்கு.

தமிழ்நாட்டிலே அரசின் உத்திரவுபெற்ற தொழிற்சாலை, வாணிப நிலை நிறுவனங்கள்—விதிவிலக்கு. கேரளத்திலே தொழிற்சாலைகளும் வாணிப நிறுவனங்களும்—விதிவிலக்கு.

தமிழகத்திலே மலைத் தோட்டம் விதிவிலக்கு. கேரளத்திலே மலைத் தோட்டம் விதிவிலக்கு.

தமிழகத்திலே கோயில், மசூதி, மாதா கோயில், அறநிலையங்களின் நிலங்கள் விதிவிலக்கு. கேரளத்தில் கோயில், மசூதி, மாதாகோயில் நிலங்கள் விதிவிலக்கு.

தமிழ்நாட்டில் நிலங்கள் வைத்திருக்கும் கோயில்கள் 1—3—1972-க்குப் பிறகு மேலும் நிலம் வாங்க முடியாது என்று இருக்கிறது. கேரளத்திலே இருப்பதாகத் தெரியவில்லை.

பழத்தோட்டங்கள், தோப்புகள் 1—7—1959-ல் இருந்த நிலம் மட்டும் தமிழ்நாட்டிலே விதிவிலக்கு. கேரளத்திலே தனியார் காடுகள் விதிவிலக்கு.



பூதான் நிலங்களுக்கு தமிழ்நாட்டிலே விதிவிலக்கு. கேரளத்திலும் விதிவிலக்கு.

தமிழ்நாட்டில் பல்கலைக் கழக நிலங்கள் விதிவிலக்கு. கேரளத்தில் பல்கலைக் கழக நிலங்கள் விதிவிலக்கு. தமிழ்நாட்டில் கல்லூரிக்கு 40 ஸ்டாண்டர்டு ஏக்கர் வைத்துக்கொள்ளலாம், உயர்நிலைப் பள்ளிக்கு 20 ஸ்டாண்டர்டு ஏக்கர் வைத்துக் கொள்ளலாம், ஆரம்ப அல்லது உயர்தர ஆரம்பப் பள்ளிக்கு 10 ஸ்டாண்டர்டு ஏக்கர் வைத்துக் கொள்ளலாம், மாணவர் விடுதிக்கு 25 ஸ்டாண்டர்டு ஏக்கர், தொழிற் பள்ளிக்கு 25 ஸ்டாண்டர்டு ஏக்கர், விவசாயப் பள்ளிக்கு 25 ஸ்டாண்டர்டு ஏக்கர், அனாதை இல்லத்திற்கு 25 ஸ்டாண்டர்டு ஏக்கர், பிற டிரஸ்டுகளுக்கு 5 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று இன்றைக்கு இருக்கிறது. கல்வி நிலையங்கள், டிரஸ்டுகள் கேரளத்தில் விதிவிலக்கு.

ஆகவே உச்சவரம்பைப் பொறுத்தவரையிலே கேரளாவிலிருந்து நாம் மிகவும் பின்தங்கிவிடவில்லையென்பதையும் சில விஷயங்களிலே நாம் கொஞ்சம் முற்போக்காக இருக்கிறோம் என்பதையும் நான் நம்முடைய மணலி அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. சுப்பு:** துணைத் தலைவர் அவர்களே, நாங்கள் சொல்வது எல்லாம் உச்சவரம்புச் சட்டத்தைப்பற்றி அல்ல. அந்தச் சட்டத்திற்குப் பின்னால் கொண்டுவரப்பட்ட லேண்ட் ரிபார்ம் ஆக்ட்ஸ் 1969 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டு, 1970 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் தேதி அமலுக்கு வந்து இருக்கிறது. அந்தச் சட்டத்தின்படி நிலத்தை உழுபவன் அந்த நிலத்திற்கு உரிமையாளனாகிவிடுகிறான். இடைத்தரகர் வர்க்கமே எடுக்கப்பட்டிருக்கிறது. கோயில் நிலமாக இருந்தாலும் அவனுக்குச் சொந்தம் உண்டு. ஆனால் அதிலே அந்த விதிவிலக்குகளில் எல்லாம் விடப்பட்டு போகின்றன. அந்தச் சட்டத்தைப் பற்றித்தான் நாங்கள் சொல்கிறோம். நீங்கள் அதைச் சொல்லவில்லை.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** எல்லாம் சேர்ந்த சட்டத்தைப் பற்றித்தான் குறிப்பிடுகிறேன், இணைப்புச் சட்டம் பற்றி தான் நான் சொல்கிறேன். குத்தகைதாரர்கள் சட்டம்பற்றி விரிவாக விவாதிக்க இருக்கிறோம்.

திரு. சுப்பு அவர்கள் கூடச் சொன்னார்கள், அங்கே குத்தகைதாரர்கள் சட்டத்திலே உரிமையாளர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். நஷ்ட ஈடு அங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. முறைகள், வகைகள் எல்லாம் வேறுபாடாக இருக்கின்றன. குத்தகைதாரர்கள் சட்டம் பற்றி நாம் அதிகமாக விவாதிக்க இருக்கிறோம், அப்பொழுது பேசிக்கொள்ளலாம் என்பதால் இதோடு விட்டுவிட விரும்புகிறேன்.

நம்முடைய மணலி அவர்களுடைய பேச்சில் பெரும்பாலும், திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களுக்கு நிறைந்த அறிவுரைகளை வழங்கினார்கள். அறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய 'குன்றின் மேலிட்ட விளக்கு' என்ற புத்தகத்தை நீங்கள் எல்லோரும் படிக்க வேண்டுமென்று திரு. மணலி அவர்கள் சிபாரிசு செய்தார்கள்.

திரு. மணலி அவர்கள் எப்பொழுது இப்படி மாறினார் என்று எனக்குப் புரியவில்லை. எந்தப் புத்தகமானாலும் ஒரு கட்டுரையானாலும் கடைசியிலே என்ன கருத்தைச் சொல்லி முடிக்கிறார்களோ அதுதான் அந்தப் புத்தகத்தை எழுதிய ஆசிரியர் அல்லது கவிஞர், அல்லது எழுத்தாளர் அல்லது கட்டுரையாளரின் நோக்கத்தைப் பிரதிபலிப்பதாக இருக்கும். 'குன்றின் மேலிட்ட விளக்கு' என்ற புத்தகத்தில் கடைசிப் பக்கத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் "திருப்பரங்குன்றம் மாநாடு கண்டவர்கள், அங்ஙனம் கூறத் துணியார். திராவிட நாட்டை திராவிடர் காக்கும் திருப்படையொன்று உண்டு, என்பதை திருப்பரங்குன்றம் மாநாடு காட்டிற்று. எங்கிருந்து கிடைத்தது இந்த எழுச்சி நிலை! தம்பி! எல்லாம் உன் வீரத்தின் விளைவு! எழுச்சியின் பலன்! உழைப்பினில் விளைந்த உயர்வு! வாழ்த்துகிறேன் உன்னை! வளர் நின் ஆர்வம்! வெல்க திராவிடம்! அண்ணன், அண்ணாதுரை" என்று எழுதி முடிக்கிறார். இதை இப்பொழுது திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எல்லாம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று திரு. மணலி அவர்கள் சொல்வது எனக்கு புதிராக இருக்கிறது. இதை மீண்டும் படியுங்கள், இதன்படி நடவுங்கள் என்று திரு. மணலி அவர்கள் ஏன் சொன்னார்கள் என்று எனக்குப் புரியவில்லை.

**திரு. மணலி சி. கந்தசாமி:** மாண்புமிகு கலைஞர் அவர்கள் ரொம்ப லாவகமாக எனக்கு ஒரு கேள்வி போட்டிருக்கிறார்கள். நான் குறிப்பிட்டது எல்லாம் அந்தப் புத்தகத்திலே பொதுவாழ்வில் எப்படியிருக்கவேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிற நியதிகளையெல்லாம் தி.மு.க. உறுப்பினர்கள் படித்துப் பார்க்கவேண்டும் என்பதுதானே தவிர, நான் அந்தப் புத்தகம் பூராவையும் ஒப்புக்கொண்டதாக நான் கூறவில்லை. இன்றைக்கு உங்களுடைய நிலைமையும் மாறியிருக்கிறது. நீங்கள் திராவிட நாடு திராவிடர்க்கே என்று சொன்ன நிலையிலே எல்லாம் இன்றைக்கு மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. பொது வாழ்விலே அதிலே குறிப்பிட்ட நியதிகள் ஒழுக்கம் இவைகளையெல்லாம் நீங்கள் மீண்டும் ஒரு முறை படித்துப் பாருங்கள் என்றுதான் சொன்னேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** பொதுவாழ்விலே இருக்கிறவர்கள் அந்தக் கட்சியிலிருந்து பிரிந்து, அந்தக் கட்சியையே அழிப்பதற்கு முனையக்



கூடாது என்ற கருத்தையும் 'குன்றின் மேலிட்ட விளக்கு' என்ற புத்தகத்திலே அறிஞர் அண்ணா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் இன்றைக்கு உங்களோடு உறவு வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அ.தி.மு.க. உறுப்பினர் திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் நான் ஏ.டி.எம்.கே. யில் சேர்ந்த பிறகு அண்ணா அவர்களின் கட்டுரைகளைப் படிக்க ஆரம்பித்தேன் என்று சொன்னார்கள். நான் உள்ளபடியே ரொம்ப வருத்தப் படுகிறேன், படித்துப் பார்த்துவிட்டு அதனால் கவரப்பட்டு ஒரு கட்சிக்குச் செல்வதுதான் முறையே தவிர ஒரு கட்சியிலே சேர்ந்துவிட்டு, பிறகு அந்தக் கட்சியினுடைய கொள்கை புனிதமானது என்று சொல்வது வேடிக்கையாக இருக்கிறது. அவர் எல்லாப் புத்தகங்களையும் படித்து இருப்பார் என்று கருது கிறேன். அறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய ஒரு புத்தகத்தில்—அவர் அதைப் படித்திருப்பாரோ என்னவோ எனக்குத் தெரியாது—அதிலே,

பேராசைப் பெருந்தகையே போற்றி!
பேச நா இரண்டுடையாய் போற்றி!
தந்திர மூர்த்தி போற்றி!
தாசர்தம் தலைவா போற்றி!
வஞ்சக வேந்தே போற்றி!
வன்கண நாதா போற்றி!
கொடுமைக் குணாளா போற்றி!
கோழையே போற்றி, போற்றி!
பயங்கொள்ளி பரமா போற்றி!
படுமோசம் புரிவாய் போற்றி!
சிண்டு முடிந்திடுவோய் போற்றி!
சிரித்திடு நரியே போற்றி!
ஒட்டுவித்தை கற்றோய் போற்றி!
உயர் அநீதி உணர்வோய் போற்றி!
எம் இனம் கெடுத்தோய் போற்றி!
ஈடில்லாக் கேடே போற்றி!
இறைவா, போற்றி, போற்றி!
ஏத்தினேன் போற்றி, போற்றி!

என்று எழுதியிருக்கிறார்கள் 'ஆரிய மாயை' என்ற புத்தகத்தில். அதை அவர்கள் படிக்கவில்லை என்று கருதுகிறேன், நல்ல பொருத்தமான அட்டையெல்லாம் போடப்பட்டு இருக்கிறது இந்தப்புத்தகம்.

திரு. க. உரொ. எட்மண்ட்: முன்பொரு நாள் உங்கள் கட்சியிலே இருந்துவிட்டு—இப்பொழுது உங்கள் கட்சிதான், எங்கள் கட்சியல்ல—பிறகு அந்தக் கட்சியிலிருந்து இரண்டு கட்சிகளுக்குத் தாவி வேறு ஒரு கட்சியிலே இருந்த காலத்திலே பேரறிஞர் அண்ணா அவர்களைப்பற்றி மிகக் கேவலமாகப் பேசியவர்கள் எல்லாம் இன்றையதினம் உங்கள் பக்கம் சேர்ந்து இருக்கிறார்கள் என்பதை நான் நினைவுறுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: உங்கள் பக்கம் யார் யார் இருக்கிறார்கள் என்பதை உலகம் அறியும்.

திரு. க. உரொ. எட்மண்ட்: எங்கள் பக்கம் நல்லவர்கள் இருக்கிறார்கள். பேரறிஞர் அண்ணாவைக் கேவலமாகப் பேசியவர்கள் உங்கள் கட்சியிலே இருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நல்லவர்களுக்கு இலக்கணமே நாட்டிலே மாறிவிட்ட காலத்தில் நல்லவர்களைப்பற்றி நண்பர் பேசுவது எனக்கு வியப்பாக இருக்கிறது. நல்லவர்கள் யார், நல்லவர்கள் அல்லாதவர்கள் யார் என்பதை நாடு நன்றாக உணர்ந்து வைத்திருக்கிறது. திருவாளர் அண்ணாதுரை என்று பேசியவர்கள் இன்று பக்கம் பக்கமாக அவர்கள் பத்திரிகையிலே இடம் பெற்றிருக்கிறார்கள் என்பதை நாடு நன்றாக உணர்ந்திருக்கிறது.

திரு. க. உரொ. எட்மண்ட்: அண்ணாதுரை என்று எழுதியவர்களுக்கு இன்றைக்கு உங்கள் அமைச்சரவையில் இடம் கொடுத்திருக்கிறீர்கள் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இந்த நிதிநிலை அறிக்கையில் தம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சியின் தலைவர்களும், அனைத்துக்கட்சிகளின் உறுப்பினர்களும் எடுத்து வைத்த பல அரிய கருத்துக்களைப் பற்றியெல்லாம் நான் இங்கே நீண்ட நேரம் என்னுடைய விளக்கங்களை அளித்திருக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக அரசு, தமிழ்நாட்டில் எவ்வளவு பெரிய நெருக்கடிகள் வந்தாலும் அந்த நெருக்கடிகளையெல்லாம் சமாளிக்கின்ற அளவிற்கும், தமிழ்நாட்டுப் பெருமக்களுடைய ஒத்துழைப்பைப் பெறுகின்ற அளவிற்கும், நெருக்கடிகளை அலட்சியப்படுத்தாமல், அவைகள் கூர்ந்து





கவனிக்கப்பட வேண்டியவை என்று உணர்ந்து செயல்படும் அளவிற்கும் எல்லா விதமான முயற்சிகளையும் எடுத்திருக்கிறது என்பதையும் இந்தப் பதிலுரையில் நான் தேவையான அளவிற்குச் சுட்டிக்காட்டியிருக்கிறேன். அந்த வகையிலே தங்களுடைய கருத்துக்களைச் சொன்னதன் மூலமாக இந்த நிதிநிலை அறிக்கையை நிறைவு செய்த எல்லாக் கட்சிகளின் தலைவர்களுக்கும், மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் நான் என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொண்டு, இந்த அளவில் நான் அமைகின்றேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிகின்றன. பேரவை மீண்டும் நாளைக் காலை 9 மணி அளவில் கூடும், வணக்கம்.

பின்னர் பேரவை பிற்கல் 1-52 மணிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

## (4) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

71. Notification issued with Memo. No. 140066-J-2/72-5, Revenue, dated the 23rd January 1973, in regard to an amendment to the Revenue Department *Notification II-1 No. 1613 of 1965*, dated the 9th April 1965, published at pages 669–672 of Part II—Section 1 of the *Tamil Nadu Government Gazette*, dated the 14th April, 1965. [Laid on the Table of the House under section 73 (5) of the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Tamil Nadu Act 26 of 1963).]

72. Notification issued with G.O. Ms. No. 191, Rural Development and Local Administration, dated the 1st February 1973, in regard to extension of term of office of the members of the Tamil Nadu Khadi and Village Industries Board, for a further period of one month from 3rd February, 1973. [Laid on the Table of the House under section 29 (3) of the Tamil Nadu Khadi and Village Industries Board Act, 1959 (Tamil Nadu Act 18 of 1959).]

73. Statement of guarantees given by the Government of Tamil Nadu to the State Housing Board. [Laid on the Table of the House under section 92 of the Tamil Nadu State Housing Board Act, 1961 (Tamil Nadu Act 17 of 1961).]

### B. *Reports Notifications and other Papers.*

**Nil.**

## HOW TO USE THE INDEX.

The Index is arranged alphabetically. The Main Headings are printed from the margin and the Sub-headings are indented from the Main Headings.

Under every Main Heading including various names, entries pertaining to proceedings other than Questions are indicated by printing immediately after the subject-matter within brackets, e.g., (M.) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question, except in the case of Bills and Financial Business, the entry in which cases will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the Main Headings ' Bill(s) '.

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc., are consolidated under the said Main Headings, i.e., ' Committee(s) ', ' Council(s) ', ' Corporation(s) ', etc.

Various subjects like Schools, Colleges, Conferences, Ports, Temples and similar other broad subjects are shown in alphabetical order under these very Main Headings.

All the Papers laid on the Table of the House are indexed only under the Main Heading " Papers Laid on the Table ".

Rulings and Observations from the Chair are indexed under the Main Heading " Chair ".

**A list of abbreviations used in the Index is given below :—**

| | | |
|---|---|---|
| A.M./Ad. Motion | .. | Adjournment Motion. |
| Ann. | .. | Announcement. |
| B.O.H. | .. | Business of the House. |
| C.A. | .. | Calling Attention to a Matter o Urgent Public Importance. |
| C.A.St. | .. | Calling Attention Statement. |

| | |
|---|---|
| Consid. | .. Consideration stage of a Bill. This stage includes :— (i) Motion to refer to Select/Joint Select Committee. (ii) Amendment to refer to Select/Joint Select Committee. (iii) Amendment to circulate. (iv) Motion to consider as reported by Select/Joint Select Committee. (v) Amendment to recommit to Select/Joint Select Committee, etc. |
| Consid. Cl. | .. Consideration of Clauses of a Bill. |
| D. E. E. | .. Demands for Excess Expenditure. |
| Dis. S. D. or D.S D. | .. Discussion for Short Duration on an Urgent Matter of Administration. |
| D. S. G. | .. Demands for Supplementary Grants. |
| G. A. | .. Governor's Address. |
| G. D. | .. General Discussion. |
| H.A.H. Dis./H.H.D. | .. Half-hour Discussion. |
| Int. | .. Introduction stage of a Bill. |
| L. A. | .. Legislative Assembly. |
| L. C. | .. Legislative Council. |
| M. | .. Motion. |
| P. M. | .. Privilege Motion. |
| R/Res. | .. Resolution. |
| St. | .. Statement. |

# Index to Tamil Nadu Legislative Assembly Debates.

SEVENTH SESSION OF THE FIFTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

*3rd, 5th, 6th and 7th March* 1973.

VOLUME XXXIII (Nos 1 to 4.)

## A.


PAGES

ABUSALI, THIRU M. A.—
Budget, 1973-74, G.D. ... ... ... ... 106–108

ACCIDENTS—
Adyar Bridge Workspot ... ... ... ... 410

ADITHANAR, THIRU SI. PA.—
Budget, 1973-74, G.D. ... ... ... ... 316, 439, 468

AGRICULTURE—
Banana (Cavendish variety), production ... ... 410–415
Kharif Crop, release of water from Manimuthar Reservoir ... ... ... ... ... ... 142–143
Seminars at Taluk level ... ... ... ... 415–419

ALAGAMUTHU, THIRU T. P.—
Leave of absence to Thiru M. Palanisamy, M.L.A. (M.) ... ... ... ... ... ... ... 146

ALAGARSWAMY, THIRU S.—
Scarcity of yarn to Handloom Weavers and consequent agitation at Salem (A.M.) ... ... ... 34–35, 41

A—*cont.*


| | PAGES |
|---|---|
| ALDA M. FOWLER, THIRUMATHI— | |
| Budget, 1973-74, G.D. ... ... ... ... | 329-331 |
| ANANDANAYAKI, THIRUMATHI T. N.— | |
| Budget, 1973-74, G.D. ... ... ... ... | 203-220 314, 339 343, 345 346, 448 480 488, 493 495-499 503, 505 510 |
| ANBAZHAGAN, THIRU, K.— | |
| Budget, 1973-74, G.D. ... ... ... ... | 385, 387 |
| Procession by Graduate Teachers, arrests and consequent restlessness (A.M.) ... ... ... ... | 424 |
| Strike by Nursing Assistants consequent on dismissal of some trainees at Coimbatore Medical College Hospital and its consequences (A.M.) ... ... | 293-295 |
| ARUMUGAM, THIRU S.— | |
| Budget, 1973-74, G.D. ... ... ... ... | 223-228 |
| ARUNA, THIRU ALADI— | |
| Budget, 1973-74, G.D. ... ... ... ... | 356-361 |


B.


| | |
|---|---|
| BALARAMAN, THIRU N. S.— | |
| Budget, 1973-74, G.D. ... ... ... ... | 92-97 |
| BAULIAH, THIRU A.— | |
| Budget, 1973-74, G.D. ... ... ... ... | 108-112 |




B—*cont.*


| | PAGES |
|---|---|
| BRIDGES— | |
| Over-bridge, Palakarai ... ... ... ... | 409 |
| BUILDINGS— | |
| Public Works Department ... ... ... ... | 409 |


C.


| | |
|---|---|
| CALLING ATTENTION— | |
| Agitation and hunger strike by Polytechnic students. | 300-330 |
| Hardships experienced by unemployed Weavers consequent on rise in price of yarn due to power cut ... ... ... ... ... ... ... | 48-51 |
| Irrigation, use of Papanasam and Manimuthar Dam waters in excess for advance Kar Irrigation ... | 295-300 |
| CHAIR— | |
| *Announcements*— | |
| Removal of Demand No. XLIII—Capital Outlay on Public Health from the list ... ... ... | 145-146 |
| B.O.H., change in order (Ann.) ... ... ... | 79 |
| Rulings and Observations— | |
| *Adjournment Motions*— | |
| *Procession by Graduate Teachers, arrests and consequent restlessness*— | |
| Consent was withheld as there was no need for the motion in view of the detailed statement given by the Minister ... | 435 |
| *Scope*— | |
| At the time of seeking consent, Members need not go into details of the subject-matter and accuse the Minister ... ... ... | 423, 424 |

PAGES

C—*cont.*

CHAIR—*cont.*—

Rulings and Observations—*cont.*

*Adjournment Motions*—cont.—

*Shortage of yarn and consequent hardship to Weavers*—

Consent was withheld on the ground that there was no need for the same in the light of the explanation given by the Minister ... ... ... ... ... 33–48

*Strike by Nursing Assistants consequent on dismissal of some trainees at Coimbatore Medical College Hospital and its consequences*—

Consent was withheld as there was no need for the motion in view of the explanation given by the Minister ... ... ... 295

*Allegations*—

Members should be prepared to prove the allegations that they make against others ... ... 86

*Calling Attention*—

Members should put questions for clarification and not make speeches after the Minister's statement ... ... ... ... ... 300

*Debate*—

Persons not in the House should not be accused, as they have no opportunity to defend themselves ... ... ... ... 86, 482

*Decorum*—

It was not in order for Members to speak aloud all at a time and that too sitting in their seats. They have to rise up from their seats and speak through the mike in front of them ... ... 452

It was not in order to gesticulate against the Chair ... ... ... ... ... ... 31



PAGES

C—*cont.*

CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

*Demand for Grants*—

On 3rd March 1973, a Member rose on a Point of Order and stated that in the 'Notice of Demands' circulated to Members the amount sought for 'Demand No. 48—Capital Outlay on Public Health' has not been printed and hence, they were much handicapped in giving Notice of Cut Motions to that Demand and requested the Chair to rectify the omission. The Chair promised to look into the matter. On 5th March 1973, the Chair announced that he was informed by the Finance Department, which was contacted in the matter, that the amount previously allotted under 'Demand No. 48—Capital Outlay on Public Health' has since been transferred to the Tamil Nadu Water and Drainage Board and hence 'Demand No. 48' would be removed from the list of Demands to be voted by the House. 145–146

*Expunction*—

A Member has got the right to request the Chair to expunge some words ... ... ... 447

*Point of Information*—

Members must seek information about the Adjournment Motions or Privilege Matters given Notice of by them only in the Speaker's Chamber and not in the House ... ... 307

***Questions and Answers*—**

***Supplementary Questions*—**

Should be direct and not circuitous ... ... 291

Should be direct and not descriptive ... ... 404

C—*cont.*

PAGES

CHAIR—*cont.*—

Rulings and Observations—*cont.*

*Questions and Answers*—cont.—

*Supplementary Questions*—cont.—

Should relate to the main question ... ... 285, 288, 291, 401

Should relate to the main question. Questions, which did not relate to the main question, were disallowed by the Chair ... 14–15, 16, 17, 21, 25

CHELLADURAI, THIRU V.—

Budget, 1973–74, G.D. ... ... ... ... 58–61

CHELLIAH, THIRU KUZHA—

Budget, 1973–74, G.D. ... ... ... ... 82–88

CHEZHIYAN, THIRU KOVAI—

Budget, 1973–74, G.D. ... ... ... ... 347

COLLEGES—

Medical College for Kanyakumari district ... ... 17–19

Wakf Board College at Madurai, particulars ... 143–145

COMMISSION—

Administrative Reforms Commission, Interim Report 253–256

CO-OPERATION—

Co-operative Marketing Federation, Thanjavur, Audit of Accounts ... ... ... ... ... 281–285

Orchard Society in Co-operative Sector, proposal ... 278–280



PAGES

D.

CO-OPERATIVES—

Deputy Registrar for Cheyyar ... ... ... 25

CORPORATION (MADRAS)—

Divisions, increase ... ... ... ... ... 2–4

DENNIS, THIRU N.—

Accident at Adyar Bridge Workspot ... ... 410

Administrative Reforms Commission, Interim Report 253–256

Agitation and hunger strike by Polytechnic students (C.A.) ... ... ... ... ... ... 300

Buildings for Public Works Department ... ... 409

Corporation of Madras, increase of Divisions .. ... 2–4

Kilpauk Mental Hospital, diet system ... ... 12–13

Medical College for Kanyakumari district ... ... 17–19

Plantation workers, bonus ... ... ... ... 117–119

S.I.E.T. College, training in swimming for girls ... 261–263

DISTRICT ADMINISTRATION—

Ponneri taluk, inclusion in Madras district ... 124–125

DURAI MURUGAN, THIRU—

Budget, 1973–74, G.D. ... ... ... ... 195–200

E.

EDMUND, THIRU G. R.—

Budget, 1973–74, G.D. ... ... ... ... 516

EDUCATION—

B.O.L. Degree Course, revival .. .. ... 406

E—*cont.*



EMPLOYEES—

Government servants who die while in service, transport facilities ... ... ... ... 140–141

EYE CAMP—

Fund, collection ... ... ... ... ... 399–400

F.

FAMILY PLANNING—

Sterilisation, facilities ... ... ... ... 400–402

FINANCIAL BUSINESS—

Budget, 1973-74, G.D. ... ... ... ... 50–73
81–112
147–155
160–220
223–249
309–392
435–517

FISHERIES—

Deep-sea fishing, training ... ... ... ... 406

Fish Processing Plant ... ... ... ... 407

G.

GANAPATHY, Thiru N.—

Budget, 1973–74, G.D. ... ... .. ... 481–482

GANESAN, Thiru L.—

Budget, 1973–74, G.D. ... ... ... ... 309–314

GOPAL, Thiru K. P.—

Budget, 1973–74, G.D. ... ... ... ... 54–58



G—*cont.*

GOVINDARAJAN, Thiru DURAI—

Budget, 1973–74, G.D. ... ... ... ... 239-245

Request to Government of India to supply immediately yarn needed for the looms of Tamil Nadu (R.) ... ... ... ... ... ... 77

GURUSWAMI, Thiru N. V.—

Blood Bank for Periakulam Hospital ... ... 402

Budget, 1973–74, G.D. ... ... ... ... 228–233

GURUSWAMI, Thiru N. V.—*cont.*—

Harijan Welfare School at Kunnoor, laying of foundation stone ... ... ... ... ... 126

Vaigai Dam area, Zoo for ... ... ... 126–128

H.

HANDE, Dr. H. V.—

Administrative Reforms Commission, Interim Report ... ... ... ... ... ... 253–256

Budget, 1973-74, G.D. ... ... ... ... 335–336
338, 339
340, 344
345, 346
347
435–451
480, 493
496, 499
507, 508
510

Co-operative Marketing Federation, Thanjavur, Audit of Accounts ... ... ... ... 281–285

Procession by Graduate Teachers, arrests and consequent restlessness (A.M.) ... ... ... 423–425
434

Request to Government of India to supply immediately yarn needed for the looms of Tamil Nadu (R.) ... ... ... ... ... ... 74–75

HARIJAN WELFARE—

Depressed classes people in Nandankottai and Mettumahadanapuram villages in Kulithalai taluk, laying of link road ... ... ... ... 274–275

Harijan Hostel at Perambalur ... ... ... 21-22

Harijan Hostels at Thammampatti, Gangavalli and Aragamoor, construction of buildings ... 275–276

Harijans in certain villages in Erode taluk, provision of House-sites ... ... ... ... ... 271–274

HOSPITALS AND DISPENSARIES—

Blood Bank for Periakulam Hospital ... ... 402

Kilpauk Mental Hospital, diet system ... ... 12–13

Kilpauk Mental Hospital, expansion ... ... 4–12

Tambaram Tuberculosis Hospital, bed strength ... 13–17

HOUSING—

Medical staff in rural areas ... ... ... ... 402–403

## I.

ILANCHEZHIYAN, THIRU V. S.—

Budget, 1973–74, G.D. ... ... ... ... 167–169

IRRIGATION—

Bund for Sambarapallam construction ... ... 277

Irrigation Development Schemes of Cauvery, amount allotted by Central Government ... ... ... 276–277

Ryots of Parambikulam-Aliyar and Lower Bhavani Projects, concessions (St.) ... ... ... 155–160

Use of Papanasam and Manimuthar Dam water in excess for advance Kar Irrigation (C.A.) ... 295–300



## J.

JAMES, THIRU J.—

Request to Government of India to supply immediately yarn needed for the looms of Tamil Nadu (R.) ... ... ... ... ... ... ... 76

Scarcity of yarn to Handloom Weavers and consequent agitation at Salem (A.M.) ... ... ... 32, 46, 47

JAYARAMAN, THIRU K.—

Hardships experienced by unemployed Weavers consequent on rise in price of yarn due to power cut (C.A.) ... ... ... ... ... 48-49

JOTHI VENCATACHELLUM, THIRUMATHI—

Budget, 1973-74, G.D. ... ... ... ... 175–175 182

## K.

KANDAPPAN, THIRU S.—

Budget, 1973-74, G.D. ... ... ... ... 389–390 477

KANDASAMI, THIRU K.—

Procession by Graduate Teachers, arrests and consequent restlessness (A.M.) ... ... ... ... 421

KANDASAMI, THIRU MANALI, C.—

Budget, 1973-74, G.D. ... ... ... ... 362–379 514

M.


PAGES

MADHAVAN, THIRU S.—

Budget, 1973-74, G.D. ... ... ... ... 147, 148

Hardships experienced by unemployed Weavers consequent on rise in price of yarn due to power cut (C.A.) (St.) ... ... ... ... ... ... 49-50

Request to Government of India to supply immediately yarn needed for the looms of Tamil Nadu (R.) ... ... ... ... ... ... 74

Scarcity of yarn and consequent agitation by Handloom Weavers at Salem (A.M.) ... ... ... 32, 37-44, 45-46, 47-48

MALAIKKANNAN, THIRU V.—

Budget, 1973-74, G.D. ... ... ... ... 184-188

MANIAN, THIRU P. S.—

Agricultural Seminars ... ... ... ... 415-419

B.O.L. Degree Course, revival ... ... ... 406

MARIMUTHU, THIRU A. R.—

Budget, 1973-74, G.D. ... ... ... ... 380-392

Request to Government of India to supply immediately yarn needed for the looms of Tamil Nadu (R.) ... ... ... ... ... ... ... 74

MARIMUTHU, THIRU M.—

Boarding Schools for students of Scheduled Tribes at Odakkattupudur, buildings for ... ... ... 125-126

Harijan Hostels at Thammampatti, Gangavalli and Aragamoor, construction of buildings ... ... 275-276




M—*cont.*


PAGES

MARUDACHALAM, THIRU N.—

Strike by Nursing Assistants consequent on dismissal of some trainees at Coimbatore Medical College Hospital and its consequences (A.M.) ... ... 293

MOHIDEEN, THIRU THIRUPPUR A. M.—

Budget, 1973-74, G.D. ... ... ... ... 331-343, 347-350

Request to Government of India to supply immediately yarn needed for the looms of Tamil Nadu (R.) ... ... ... ... ... ... ... 75-76

MOTIONS—

*Ad. Motion*—

Procession by Graduate Teachers, arrests and consequent restlessness ... ... ... ... ... 420-435

Scarcity of yarn and consequent agitation by Handloom Weavers at Salem ... ... ... ... 32-48

Strike by Nursing Assistants consequent on dismissal of some trainees at Coimbatore Medical College Hospital and its consequences 293-295

B.O.H., change in order ... ... ... ... 73

Leave of absence to Thiru M. Palanisamy, M.L.A. 146

MUTHIAH, THIRU M.—

Budget, 1973-74, G.D. ... ... ... ... 175-179

Request to Government of India to supply immediately yarn needed for the looms of Tamil Nadu (R.) ... ... ... ... ... ... ... 77

MUTHU, THIRU V.—

Budget, 1973-74, G.D. ... ... ... ... 81-82

## K—*cont.*

PAGES


KARUNANIDHI, DR. M.—

Budget, 1973-74, G.D. ... ... ... ... 207, 208, 209, 210, 213–214, 229, 338, 343, 344, 345, 346, 375, 470, 472–473, 482, 484–517

Eviction of encroachments in Gudalur taluk (St.) 112–114

Procession by Graduate Teachers, arrests and consequent restlessness (A.M.) ... ... ... ... 434–435

Request to Government of India to supply immediately yarn needed for the looms of Tamil Nadu (R.) ... ... ... ... ... ... ... 77–79

Situation in Gudalur, discussion between the Chief Minister and Kerala Revenue Minister (St.) ... 221–222

KARUPPIAH, THIRU A.—

Budget 1973-74, G.D. ... ... ... ... ... ... 61–63

KATHIRAVAN, THIRU K. M.—

Budget, 1973-74, G.D. ... ... ... ... 200–203

KITTAPPA, THIRU N.—

Corporation of Madras, increase of Divisions ... 2–4

Deep-sea fishing, training ... ... ... ... 406

Eye Camp Fund ... ... ... ... ... 399–400

Irrigation Development Schemes of Cauvery, amount allotted by Central Government ... ... ... 276–277

Mini-Super-Markets for villages ... ... ... 26–31

Sea-erosion in Vilavancode area ... ... ... 22–25




PAGES

## K—*cont.*


KOTHANDARAMIAH, THIRU K. S.—

Budget, 1973-74, G.D. ... ... ... ... 354;356

Chennasandiram Inam village, taking over ... ... 122–124

Panchayat Union Teachers, construction of quarters 264–269

KRISHNAMOORTHY, THIRU V.—

Budget, 1973–74, G.D. ... ... ... ... 472, 475, 480

KUMARASWAMY, THIRU K. N.—

Budget, 1973-74, G.D. ... ... ... ... 63–70


## L.


LABOUR—

Hair dressers, minimum wages for ... ... ... 119–122

Plantation workers, bonus ... ... ... ... 117–119

LANDS—

Chennasandiram Inam village, taking over ... ... 122–124

Eviction of encroachments in Gudalur taluk ... 112–114

Land assignments in Kanyakumari district for cultivation (St.) ... ... ... ... ... ... 308–309

Situation in Gudalur, discussion between the Chief Minister and Kerala Revenue Minister (St.) ... 221–222

LATHEEF, THIRU M. A.—

Budget, 1973-74, G.D. ... ... ... ... 188–195, 346, 447, 448, 451, 481

LOANS AND ADVANCES—

Loans granted under Gold Control Order and Cyclone Relief Scheme, write off ... ... ... ... 256–261

PAGES

N.

NACHIAPPAN, THIRU A. M. T.—
Budget, 1973-74, G.D. ... ... ... ... 163-167

NATARAJAN, Thiru N. V.—
Budget, 1973-74, G.D. ... ... ... ... 450

NATARAJAN, THIRU S.—
Budget, 1973-74, G.D. ... ... ... ... 88-92

NEDUNCHEZHIYAN, DR. V. R.—
Agitation and hunger strike by Polytechnic students (C.A.) (St.) ... ... ... ... ... 301-308
B.O.H., change in order (M.) ... ... ... 73
Procession by Graduate Teachers, arrests and consequent restlessness (A.M.) ... ... ... ... 425-434
Regularisation, etc., of Graduate Teachers (St.) ... 80

O.

OFFICIAL LANGUAGE—
Tamil in Government Offices ... ... ... 403-405

P.

PALANISAMY, PULAVAR C.—
Kural couplets in City buses ... ... ... ... 130-136

PALANISAMY, THIRU N. K.—
Budget, 1973-74, G.D. ... ... ... ... 147-155
Harijans in certain villages in Erode taluk, provision of House-sites ... ... ... ... ... 271-274
Procession by Graduate Teachers, arrests and consequent restlessness (A.M.) ... ... ... 421-424
Request to Government of India to supply immediately yarn needed for the looms of Tamil Nadu (R.) ... ... ... ... ... ... ... 77



PAGES

P—*cont.*

PALANISAMY, THIRU N. K.—*cont.*
Sea-side resorts, proposal to make Tranquebar and Vedaranyam ... ... ... ... ... 289
Sugar, quantity released for the State after new policy ... ... ... ... ... ... 285-289

PAPERS LAID ON THE TABLE—
Agricultural Income-Tax Act, 1955, notifications ... 250
Agricultural Labourer Fair Wages Act, 1969, notification ... ... ... ... ... ... 250
Agricultural Lands Record of Tenancy Rights Act, 1969, notification ... ... ... ... ... 392
Collection of Statistics Act, 1953, notification ... 251
Entertainments Tax Act, 1939, notifications ... 114-115, 392, 393
Excise Act, 1971, notification ... ... ... 251
Factories Rules, 1950, notification re-amendment to 393
Housing Board Act, 1961, statement of guarantees ... 517
Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963, notification ... ... ... 517
Indian Stamp Act, 1899, notification ... ... 115
Khadi and Village Industries Board Act, 1959, notification ... ... ... ... ... 114, 517
Local Authorities Finance Act, 1961, notifications 392-393
Panchayats Act, 1958, Notification ... ... ... 250
Plantations Labour Rules, 1955, notification ... 115
Resume of work transacted by Legislative Assembly on 13th November 1972 and from 2nd to 15th December 1972 (Fifth Assembly, Fifth Session—Second Meeting, Sixth Session) ... ... ... 393

P—*cont.*

| | PAGES |
|---|---|
| PERUMAL, THIRU A. R.— | |
| Budget, 1973-74, G.D. ... ... ... ... | 452–459 |
| PONCHOKKALINGAM, THIRU P.— | |
| Budget, 1973-74, G.D. ... ... ... ... | 233–239 |
| PONNAPPA NADAR, THIRU R.— | |
| Budget, 1973-74, G.D. ... ... ... ... | 442, 447, 449, 459, 481, 503, 505 |
| Procession by Graduate Teachers, arrests and consequent restlessness (A.M.) ... ... ... ... | 434 |
| Scarcity of yarn and consequent agitation by Handloom Weavers at Salem (A.M.) ... ... ... | 35–37, 45 |
| PROSPERITY BRIGADE— | |
| Grants for Works ... ... ... ... ... | 19–21 |
| **R.** | |
| RAJA, THIRU A. M.— | |
| Loans granted under Gold Control Order and Cyclone Relief Scheme, write off ... ... ... ... | 256–261 |
| RAJAMANICKAM, THIRU A.— | |
| Sikkil-Palakurichi road ... ... ... ... | 22 |
| RAJAH PILLAY, THIRU V. K.— | |
| Budget, 1973-74, G. D. ... ... ... ... | 51–54 |
| RAMACHANDRAN, THIRU S.— | |
| Budget, 1973-74, G.D. ... ... ... ... | 321, 382 |
| RAMAN, THIRU O.P.— | |
| Budget, 1973-74, G.D. ... ... ... ... | 507, 508 |



R—*Cont.*

| | PAGES |
|---|---|
| RANGANATHAN, THIRU K.— | |
| Budget, 1973-74, G.D. ... ... ... ... | 102–106 |
| RESOLUTIONS— | |
| Request to Government of India to supply immediately yarn needed for the looms of Tamil Nadu ... | 74–79 |
| ROADS— | |
| Sikkil-Palakurichi road ... ... ... ... | 22 |
| **S.** | |
| SADIQ PASHA, THIRU S. J.— | |
| Irrigation, use of Papanasam and Manimuthar Dam water in excess for advance Kar Irrigation (C.A.) (St.) ... ... ... ... ... ... ... | 295–300 |
| Ryots of Parambikulam-Aliyar and Lower Bhavani Projects, concession (St.) ... ... ... ... | 155–160 |
| SANGUMUTHU THEVAR, THIRU S.— | |
| Family Planning Programme, facilities for sterilisation ... ... ... ... ... ... | 400–402 |
| Irrigation, use of Papanasam and Manimuthar Dam water in excess for advance Kar Irrigation (C.A.) | 295, 299, 300 |
| Kharif Crop, release of water from Manimuthar Reservoir ... ... ... ... ... ... | 142–143 |
| Madras-Tirupathy buses, details ... ... ... | 128–130 |
| Over-bridge, Palakarai ... ... ... ... | 409 |
| State Transport Department, appointment of Advocates ... ... ... ... ... ... | 136–140 |
| Wild Life Week Celebrations, details ... ... | 289–290 |
| SATHIYANDRAN, THIRU M. S. K. | |
| Budget, 1973-74, G.D. ... ... ... ... | 245–249 |

S—*cont.* PAGES


SCHEDULED CASTES—

Boarding Schools for students of Scheduled Tribes at Odakkattupudur, buildings for ... ... ... 125–126

Harijan Welfare School at Kunnoor, laying of foundation stone ... ... ... ... ... 126

SEA-EROSION—

Vilavancode area ... ... ... ... ... 22–25

SEMINARS—

Agriculture ... ... ... ... ... ... 415–419

SERVICES—

Women Chief and District Education Officers, number ... ... ... ... ... ... 1–2

SHANMUGHAM, THIRU P. U.—

Budget, 1973-74, G.D. ... ... ... ... ... 161–163, 439, 440, 478, 479

Land assignments in Kanyakumari district for cultivation (St.) ... ... ... ... ... 308–309

SIVAPRAKASAM, THIRU D. S. A.—

Administrative Reforms Commission, Interim Report 253–256

Government servants who die while in service, transport facilities ... ... ... ... 140–141

SOUNDARAPANDIAN, THIRU P.—

Depressed Classes people in Nandankottai and Mettumahadanapuram villages in Kulitalai taluk, laying of link road ... ... ... ... ... ... 274–275

Elementary School Teachers, appointment in High Schools ... ... ... ... ... ... 405–406

Fish Processing Plant ... ... ... ... 407




S—*cont.* PAGES


SOUNDARAPANDIAN THIRU P.—*Cont.*

Harijan Hostel at Perambalur ... ... ... 21–22

Medical staff, housing facilities ... ... ... 402–403

Women Chief and District Education Officers, number ... ... ... ... ... ... 1–2

SPORTS—

S.I.E.T. College, training in swimming for girls ... 261–263

STATE TRANSPORT DEPARTMENT—

Appointment of Advocates as Legal Advisers ... 136–140

STRIKES AND LOCKOUTS—

Agitation and hunger strike by Polytechnic students (C.A.) ... ... ... ... ... ... 300–308

SUBBIAH, THIRU K. V.—

Budget, 1973–74, G.D. ... ... ... ... 323–329

SUBRAMANIAM, THIRU A.—

Agitation and hunger strike by Polytechnic students (C.A.) ... ... ... ... ... ... 300–301, 307

SUBRAMANIAM, THIRU K. M.—

Budget, 1973-74, G.D. ... ... ... ... 452, 453

SUGAR—

Quantity released for the State after new policy ... 285–289

SUNDARA BHARATHI, THIRU SOWDI S.—

Budget, 1973-74, G.D. ... ... ... ... 320

PAGES

V—*Cont.*

VENKATASWAMY, THIRU B.—

Banana (Cavendish variety), production ... ... 410–415

Budget, 1973–74, G.D. ... ... ... ... 361–362

VEZHAVENDAN, THIRU Ka.—

Bus service between Ayanallur in Gummudipoondi Sub-taluk and Madras ... ... ... ... 290–292

Bus service between Kuruvayal and Broadway, Madras, representation ... ... ... ... 292–293

Hair dressers, minimum wages for ... ... ... 119–122

Panchayat Union Teachers, construction of quarters. 264–269

Ponneri taluk, inclusion in Madras district ... ... 124–125

Tamil in Government Offices ... ... ... 403–405

Teaching staff in Gummudipoondi and Ellapuram Panchayat Unions, payment of allowances ... 269–271

VILLAGE OFFICERS—

Dearness allowance ... ... ... ... ... 407–408

W.

WAHAB, THIRU K. A.—

Bus route between Vellore and Melvisharam ... 31

Deputy Registrar for Cheyyar ... ... ... 25

Kilpauk Mental Hospital, expansion ... ... 4–12

Orchard Society in Co-operative Sector, proposal ... 278–280



PAGES

W—*Cont.*

WAHAB, THIRU K. A.—*Cont.*

Prosperity Brigade, grants for works ... ... 19–21

Tambaram Tuberculosis Hospital, bed strength ... 13–17

Village Officers, dearness allowance ... .. 407–408

Wakf Board College at Madurai, particulars ... 143–145

WILD LIFE—

Wild Life Week Celebrations, details ... ... 289–290

Z.

ZOO—

Vaigai Dam area, Zoo for ... ... ... ... 126–128

61598

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

Messrs. Account Test Institute, Egmore, Madras-8.
The City Book Co., Mylapore, Madras-4.
Messrs. Higginbothams (Private) Limited, Madras-2.
Messrs. New Century Book House (Private) Limited, Madras-2.
Messrs. P. Varadachari & Co., Madras-1.
Messrs. C. Subbiah Chetty & Sons., Madras-5.
Sri S. S. Srinivasaraghavan, Royapettah, Madras-14.
The Educational Agencies, Book-sellers, Madras-1.
The Universal Book House, Moore Market, Madras-3.
Messrs. C. Sitaraman & Co., Madras-14.
Messrs. Mohan Pathipagam and Book Depot, Madras-5.

### IN MUFASSAL OF TAMIL NADU.

Sri E. M. Gopalakrishna Kone, Madurai, Madurai district.
Sri A. Venkatasubban, Vellore, North Arcot district.
Messrs. Bharatha Matha Book Depot, Thanjavur, Thanjavur district.
Messrs. P. V. Nathan & Co., Kumbakonam, Thanjavur district.
Messrs. Appar Book Stall, Thanjavur.
Messrs. P. N. Swaminathasivam & Co., Pudukkottai, Tiruchirappalli district.
Messrs. S. Krishnaswami & Co., Tiruchirappalli district.
Messrs. Palaniappa Brothers, Tiruchirappalli distirct.
Sri S. R. Subramania Pillai, Tirunelveli, Tirunelveli district.
Messrs. Nellai Puthaga Nilayam, Book-sellers, 10, Thana Muna Buildings Tirunelveli Junction.
Sri B. Aruldoss, Villupuram Town, South Arcot district.
Sri V. B. Ganesan, Villupuram, South Arcot district.
Messrs. Vasantham Stores, Book-sellers, Cross Cut Road, Coimbatore.
Messrs. Mercury Book Company, 223, Raja Street, Coimbatore.
Sri S. M. Jagannathan, Book-sellers and Publishers, Nagercoil, Kanyakumari.
Messrs. A. K. Chandriah Chettiar and Sons, Salem-1.
Messrs. Meenakshi Pathippagam, Pudukkottai.
Messrs. K. V. Narayana Iyer and Sons, Dindigul, Madurai district.
Messrs. Balaji Book House, Vellore, North Arcot district.
Messrs. Jayakumari Stores, Nagercoil, Kanyakumari district.
Messrs. Baby Stores, Book-sellers, Villupuram, South Arcot district.
Messrs. Dinamani Stores, Coimbatore-18.
Messrs. Bharathi Puthaga Nilayam, Publishers and Book-sellers, 1-B, Town Hall Road, Madurai-1.

### IN OTHER STATES.

Messrs. Jain Book Agencies, New Delhi-1.
Messrs. International Book House, Trivandrum.
Messrs. Firma K. L. Mukhopadhyay, Calcutta-12.
Messrs. Book Links Corporation, Narayanaguda, Hyderabad-29.
Messrs. The Book Syndicate, Hyderabad-1.
Messrs. Labour Law Publications, Hyderabad.

PUBLISHED UNDER RULES 234 AND 237 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.